மகாகவி பாரதியின் பட்டொளி வீசும் படைப்புகளும் அவைகளின் சிறப்பும் உயர்வும் ஆழ்ந்த பொருளும் இன்றைய பொருத்தமும்

1. இந்தப் பணியின் திட்டம்

மகாகவி சுப்பிரமணிய பாரதியின் படைப்புகள், பல தரப்பட்டவை- ஒரு காவியம் அல்லது ஒரு பெருநூல் என்றில்லை. அவருடைய பாடல்கள் தேச பக்திப் பாடல்கள், தெய்வப் பக்திப் பாடல்கள், சுய சரிதம், கண்ணன் பாட்டு, குயில்பாட்டு, பாஞ்சாலி சபதம், பல சான்றோர்களைப் பற்றிய பாடல்கள், தத்துவ ஞானப் பாடல்கள், பிற நாடுகளைப் பற்றிய பாடல்கள், தமிழ்நாடு பற்றிய பாடல்கள், பாப்பா பாட்டு, பெண் விடுதலை, கும்மிபாட்டு இவ்வாறு பல தலைப்புகளில் பலரும் பதிப்பித்து வெளியிட்டுள்ளார்கள்.

பாரதியாரின் கவிதைகள் சிறப்புமிக்கவை. அவைகள் எல்லாம் இப்போது பலரும் பாடி சிறப்பிக்கிறார்கள். அவருடைய பல பாடல்களும் ராகம், தாளம், மெட்டுகள் கொண்டவை. கர்நாடக சங்கீத மெட்டுகள், இந்துஸ்தான் சங்கீத மெட்டுகள், பல்வேறு நாட்டுப்புற பாடல் மெட்டுகள், கிராமியப் பாடல்கள், குடும்பப் பெண்களின் கும்மி, கோலாட்டம், தாலாட்டு மெட்டுகள் கடைசியில் புதிய கோணங்கிப் பாட்டு முதலிய அனைத்து வகை இசை அமைப்புகளையும் வைத்துப் பாடல்கள் பாடி சிறப்பித்துள்ளார்.

எளிய முறையிலான சாதாரண மக்களுடைய கவிஞனாக, புலவனாக இசைஞானியாக, தத்துவஞானியாக வழிகாட்டியாக அவர் நாட்டில் நட பாடிப் புகழ் பெற்றுள்ளார்.

அவர் சிறந்த கவிஞராக மட்டுமல்லாமல், சிறந்த பத்திரிகையாளராகவும், செய்தி தொகுப்பாளராகவும் கடணடுரையாளராகவும் இருந்திருக்கிறார்.

அவருடைய கட்டுரைத் தொகுப்புகள் கருத்துச் செறிவுமிக்கதாகவும் நாட்டு நடப்பு அனைத்தையும் தழுவியாதாக அமைந்திருக்கின்றன. அவருடைய கட்டுரைகளில் அரசியல் தத்துவஞானம், பொருளாதாரம், கல்வி இசை, பல்வேறு சமுதாயப் பிரச்சினைகள் பெண்ணுரிமை, இந்திய முன்னேற்றம், நாட்டின் அரசியல் பொருளாதார சமுதாயப் புனரமைப்பு முதலியவை பற்றியெல்லாம் சிறந்த கருத்துக்களும் வழிகாட்டுதலும் அமைந்தவைகளாக இருக்கின்றன.

பாரதியாருடைய கதைகளை பலவும் சிறப்பாக வெளிவந்துள்ளன. அவருடைய கதைகள் விடுதலை இயக்கம், சமுதாயப் பிரச்சினைகள் தழுவியதாக அமைந்திருக்கின்றன. அவருடைய மிகச் சிறந்த படைப்புகளில் ஒன்று அவருடைய பகவத்கீதை தமிழாக்கமும் அந்தத் தமிழாகத்திற்கு அவர்

எழுதியுள்ள முன்னுரையுமாகும்.

2. பாரதியாருடைய படைப்புகளின் சிறப்புகள், அவைகளின் தற்கால மற்றும் நீண்டகாலப் பொருத்தங்கள் நாட்டு வளர்ச்சிக்கு மிகவும் தேவையான கருத்துக்கள் நிறைந்தனவாகும்.

3. பாரதியாரின் படைப்புகள் மிகப் பெரும்பாலும் தமிழில் வெளியிடப்பட்டிருக்கின்றன. அவைகள் இதர இந்திய மொழிகள் அனைத்திலும் மொழியாக்கம் செய்து வெளியிடப்பட வேண்டியதும் அவசியமானதாகும். அவை மிகவும் பயனுள்ளதாக இருக்கும்.

4. இந்த ஆய்வு நூல் பாரதியாரின் படைப்புகளின் சிறப்புகளையும், கருத்துக்களையும் வெளிப்படுத்தியும், அவை நாடு முழுவதிலும் பரப்ப வேண்டிய அவசியத்தையும் வலியுறுத்திக் கூறுவதுமாகும்.

2. இந்த நூலின் முக்கிய அம்சங்கள்:

2-1 'தேசிய கீதங்கள்' என்னும் தலைப்பில் வெளியிடப்பட்டுள்ள பாரதியாரின் பாடல்கள் மிகவும் பிரச்சித்தி பெற்றவை. இருபதாம் நூற்றாண்டின் இருபது, முப்பதாம் ஆண்டுகளில் விடுதலைப் போராட்டம் தீவிரப்பட்டுக் கொண்டிருந்த காலத்தில் பாரதியாரின் தேசியப் பாடல் கருத்தும் துடிப்பும், வேகமும் ஆவேசமும் நிறைந்த பாடல்களாக விளங்கின. அப்போது பாரதியாரின் பாடல்கள் விடுதலைப் போராட்ட வீரர்களின் போர்க்குரலாக விளங்கியது. இளைஞர்கள், பாலர்களின் வாயசைவுகளாக விளங்கின.

2-2 'வந்தே மாதரன்' என்னும் தேச பக்திச் சொற்களைத் தனது பாடல்கள் மூலம் பாரதி தமிழகத்தில் அறிமுகப்படுத்தினார். தமிழகம் முழுவதிலும் 'வந்தே மாதரம்' என்னும் வீரச் சொற்கள் எதிரெக்க பாரதி பாடல்கள் காரணமாக விளங்கின.

எடுத்த எடுப்பிலேயே ''வந்தே மாதரம்'' என்போம்- எங்கள் மாநிலத் தாயை வணங்குவதும் என்போம் என்று தொடங்குகிறார்.

''வந்தே மாதரம்'' என்னும் தலைப்பிலான பாடலில்,

''ஜாதி மதங்களைப் பாரோம்'' என்றும், ''ஆயிரம் உண்டிங்கு ஜாதி- எனில் அன்னியர் வந்து புகல் என்ன நீதி'' என்று குறிப்பிட்டு, ஜாதிப் பிரச்சனை என்பது எங்களுக்குள் உள்ள உள்நாட்டுப்பிரச்சனை எங்களுக்கு அந்த பிரச்சனையைத் தீர்த்துக் கொள்வோம். அதில் அன்னியர்கள் வந்து எங்களுக்கு நீதி புகட்டச் தேவையில்லை என்று அந்நிய ஆட்சியைச் சாடுகிறார்.

ஜாதிப் பாகுபாடுகளையும் ஜாதி வேற்றுமைகளையும் நீக்கி பாரதத்தின் அனைத்து மக்களும் ஒன்றுபடவேண்டும் என்று,

''ஒன்றுபட்டால் உண்டு வாழ்வே- நம்மில்
ஒற்றுமை நீங்கில் அனைவர்க்கும் தாழ்வே''

என்றும்,

''முப்பது கோடியும் வாழ்வோம்- வீழில்
முப்பது கோடி முழுமையும் வீழ்வோம்''

என்று ஒற்றுமையின் அவசியத்தை ஆணியடித்துக் கூறுகிறார்.

2-3 ''நாட்டு வணக்கம்'' என்னும் தலைப்பில்,

''எந்தையும் தாயும் மகிழ்ந்து குலாவி
இருந்ததும் இந்நாடே'' என்று தொடங்கி

''இன்னுயிர் தந்தெமை ஈன்று
வளர்த்து அரு
ஈந்தது இந்நாடே''

''மங்கையராயவர் இல்லறம் நன்கு
வளர்த்தது இந்நாடே''

இதை
வந்தே மாதரம் வந்தே மாதரம்

என்று வணங்கேனோ?

என்னும் அற்புதமான கருத்துச் செறிவான உள்ளத்தை உருக்கும் பாடலைப் பாடுகிறார்.

2-4 ''பாரத தேசம் என்னும் பாரத நாட்டின் பெருமைகளை குறிப்பிட்டு பாரதி பாடுகிறார். அதில் பாரத நாட்டின் தேசியம் குறித்து அவருடைய புதிய கருத்தோட்டம் வெளிப்படுவதைக் காண்கிறோம்.

இந்திய தேசியம் என்பது வெறும் அந்நிய ஆங்கிலேயர் ஆட்சியை அகற்றி விட்டு நமது ஆட்சியை நிறுவது மட்டுமல்ல, பெருமைமிக்க பாரத தேசம் ''பாருக்குள்ளே நல்ல நாடு'' என்று தொடங்கி,

''ஞானத்திலே பரமோனத்திலே

ஈனற்றிலே படை வீரத்திலே

நன்மையிலே உடல் வன்மையிலே

.ஆக்கத்திலே தொழில் ஊக்கத்திலே

யாகத்திலே தவ வேகத்திலே'' என்று சிறந்த நாடு

இன்னும்

''வெள்ளிப் பனி மலையின் மீது லாவுவோம்; அடி

மேலைக்கடல் முழுதும் கப்பல் விடுவோம்; என்றும்

வங்கத்தில் ஓடி வரும் நீரின் மிகையால்

மையத்து நாடுகளில் பயிர் செய்குவோம்'' என்றும்

இன்னும்

''காவியம் செய்வோம் நல்ல

காடு வளர்ப்போம்

கலை வளர்ப்போம் கொல்லர்

உலை வளர்ப்போம்

ஓவியம் செய்வோம் நல்ல

ஊசிகள் செய்வோம்

உலகத் தொழில் அனைத்தும்

உவந்து செய்வோம்''

என்று பாரத நாட்டின் பாரத மக்களின் முழுவடிவத்தைத் தனது தேசிய சிந்தனையில் விவரித்துப் பாடுகிறார்.

இவ்வாறு

''பாருக்குள்ளே நல்ல நாடு,

பாரத தேசமென்று பெயர் சொல்லுவர்

மன்னும் இமயமலையெங்கள் நாடே

என்னும் தொடங்கும் பாடல்

பாரத மாதா என்று பாடல்

என்னும் பாடல்கள் பாரத நாட்டின் பெரு வடிவத்தைக் காட்டி, அதன் பாரம்பரியத்தையும் வரலாற்றுச்சிறப்பையும் பண்பாட்டுச் சிறப்பை எடுத்துக்காட்டி புதியதொரு பாரதப் பண்பாட்டு தேசியத்தை எடுத்துக் கூறி நம்மைப் பெருமைப்படுத்துகிறார்.

''முப்பது கோடி முக முடையாள்- உயிர்

மொய்ம்புற வொன்று டையாள்- இவள்

செப்பு மொழி பதினெட்டுடையாள் எனிற்

சிந்தை ஒன்றுடையாள்''

என்று பாரத நாட்டின் ஒரு புதிய தேசிய சிந்தனையை பண்பாட்டை ஒற்றுமையை ஒருமைப்பாட்டை எடுத்துக்காட்டுகிறார்.

அதே பாடலில்,

''நல்லறம் நாடிய மன்னரை வாழ்த்தி

நயம் புரிவாள் எங்கள் தாய்- அவர்

அல்லவராயின் அவரை விழுங்கிப்பின்

ஆனந்தக் கூத்திடுவாள்''

என்று ஒரு அற்புதமான கருத்துச் செர்வு மிக்க பாடல் வரிகளைக் கூறுகிறார்.

ஆழ்வார் திருப்பள்ளியெழுச்சிப் பாடல் பாடினார். அரங்கனைத்தட்டி எழுப்பினார். பள்ளி கொண்ட பிரனென உலகில் உள்ள அனைவரையும் அழைத்து துயிலெடுப்ப ''கதிரவன் குணதிசை சிகரம் வந்தடைந்தான்'' என்று பாடலைத் தொடர்ந்தார். அந்த வழியில் பாரதியார்,

தூங்குகின்ற பாரத நாட்டு மக்களை துயிலெழுப்ப

பொழுது புலர்ந்ததுயாம் செய்த தவத்தால்

என்று தொடங்கும் அற்புதமான பாடல்களைப் பாடுகிறார். இந்தப் பாடல் வரிசையில்,

''விதமுறு நின் மொழி பதினெட்டும் கூறி

வேண்டியவாறு உனைப்பாடுதும் காணாய்''

என்று குறிப்பிடுவது சிறப்பாகும்.

பாரத மாத நவரத்தின மாலை என்னும் அற்புதமான கவிதையில் அறப்போரின் தனிச்சிறப்பு பற்றிக் குறிப்பிடுகிறார்.

''அன்னையே அந்நாளில் அவனிக்கெல்லாம்

ஆணி முத்துப் போன்ற மணி மொழிகளாலே

பன்னிநீ வேதங்கள், உபநிடதங்கள்,

பாவு புகழ் புராணங்கள்

இதிகாசங்கள்''

இன்னும் பல நூல்களிலே இசைத்த ஞானம் என்னென்று புகழ்ந்துரைப்போம் அதனை இந்நாள்?

மின்னுகின்ற பேரொளி காண்!

காலம் கொன்ற

விருந்து காண்! கடவுளுக்கோர் வெற்றி காணே!

இத்தகைய அற்புதமான பாடலுக்கு ஈடாக உலகில் எங்கும் கவிதையில்லை இன்னும்,

''சுடுதலும், குளிரும் உயிர்க்கில்லை. சோர்வு வீழ்ச்சிகள் தொண்டருக்கில்லை எடுமினோ அறப்போரினை'' என்றான்.

எங்கோமேதகம் ஏந்திய காந்திய என்று மகாத்மா காந்தியின் சுதந்திர போராட்ட வழி முறையைப் போற்றிப் புகழ்ந்து அப்பாடலி குறிப்பிடுகிறார்.

''பூரணமா ஞானப் புகழ் விளக்கை நாட்டுவித்த

பாரதமா தேவியெனப்பாடு'' என்று

பாரதி அப்பாடலை முடிக்கிறார்.

இங்கு பாரதி பாரத தேசிய சிந்தனைக்கு அனைத்தளாவிய புதிய தொரு விளக்கம் தருவதைக் காண்கிறோம்.

அவர் காலத்தில் பாரதம் அடிமைப்பட்டுக் கிடந்தது. அதைக் கண்டு ''நெஞ்சு பொறுக்கில்லையே...'' என்று பாடுகிறார்.

''நண்ணிய பெருங்கலைகள் - பத்து

நாலாயிரம் கோடி நயந்து நின்ற

புண்ணிய நாட்டினிலே- இவர்
பொறியற்ற விலங்குகள் போல்
வாழ்வார்''
என்று கவலையுடன் முடிக்கிறார்.

''போகின்ற பாரதம்
வருகின்ற பாரதம்''

என்று பாரதி பாடியுள்ள பாடல் நம்மை விழிப்படையச் செய்கிறது.

வருங்கால பாரத சமுதாயத்தை தனது கற்பனையில் கண்டு பாடுகிறார்.

''தமிழ்நாடு பற்றி''

''தமிழ்நாடு பற்றிய'' பாரதியின் பாடல்கள் செவிக்கு இனிமையானது. கருத்துச் செறிவுமிக்கது. மெய்த்தன்மை மிக்கது. அனைவரும் அறிய வேண்டிய உண்மைகள் நிறைந்தது.

தமிழ்நாடு என்னும் தலைப்பில் பாரதி தமிழ்நாட்டின் தனித்தன்மைகளை சிறப்பித்துப் பாடுகிறார்.

''வேதம் நிறைந்த தமிழ்நாடு
வீரம் செறிந்த தமிழ்நாடு
செல்வம் எத்தனையுண்டு புவி மீதே
அவை யாவும் படைத்த தமிழ்நாடு.
- கல்வி சிறந்த தமிழ்நாடு
கம்பன் பிறந்த தமிழ்நாடு
வள்ளுவன் தன்னை உலகுக்கு அளித்து வான் புகழ் கொண்ட தமிழ்நாடு.
-நெஞ்சம் அன்றும் சிலப்பதிகாரம் என்று ஒரு மணியாரம் பூண்ட தமிழ்நாடு.
- சீனம்மிசிரம்யவனரகம் இன்னும் தேசம் பலவும் புகழ் வீசும் கலைஞானம் படைத்தொழில் வாணிபமும்- மிக நன்று வளர்த்த தமிழ்நாடு.

என்று புகழ்ந்து, நெகிழ்ந்து நின்று உணர்ச்சி பிழம்பாய் உண்மையை தெரித்துபாடுகிறார். இந்த உண்மை உலகமெல்லாம் பரவ வேண்டும்.

தமிழ்த்தாய் என்னும் பாடலில்

சென்றிடுவீர் எட்டுத்திக்கும்

-கலைச்

செல்வங்கள் யாவும் கொணர்

ந்திங்கு சேர்ப்பீர்''

என்று பாரதி, நமக்கு ஆணையிடுகிறார்.

இன்னும்,

யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழி போல் இனிதாவது எங்கும் காணோம்'' என்று பெருமையுடன் கூறி

தேமதுரத்தமிழோசை உலகமெல்லாம்

பாவும் வகை செய்தல் வேண்டும்''

என்று பாடுகிறார் இன்னும்

யாமறிந்த புலவரிலேயே கம்பனைப் போல

வள்ளுவர் போல் இளங்கோவைப் போல்

பூமியிலே யாங்கணுமே பிறந்ததில்லை,

உண்மை வெறும் புகழ்ச்சியில்லை''

என்று பெருமையுடன் பாடுகிறார்.

கடசியில்,

''வாழிய செந்தமிழ் வாழ்க நற்றமிழர்

வாழிய பாரத மணித்திரு நாடு.

வந்தே மாதரம் வந்தே மாதரம்

என்பது பாரதியின் கொள்கை.

4. சுதந்திரம் என்பது பற்றி

சுதந்திரத்தின் பெருமை

சுதந்திரப் பயிர்

சுதந்திர தாகம்

சுதந்திரப் பள்ளு-

விடுதலை''

என்றும் தலைப்புகளில் உணர்சி மிக்க பல பாடல்களையும் பாடியுள்ளார்.

தண்ணீர் விட் டோ வளர்த்தோம்

சர்வேசா இப்பயி ரைக்

கண்ணீரால் காத்தோம் கருகத்திரு வுளமோ

-தர்மமே வெல்லும் எனும் சான்றோர்

சொல் பொய்யாமோ

கர்ம விளைவுகள் யாம்

கண்டதெல்லாம் போதாதோ!

என்று பாடுகிறார்? இத்தொகுதியின் பாடல்கள் உணர்ச்சி மிக்கன நமது உள்ளத்தை உருக்குகின்றன.

என்று தணியும் இந்த சுதந்திர தாகும்

என்று மடியுமெங்கள் அடிமையின் மோகம்?

என்றெமெ தன்னையின் விலங்குகள் போகும்

என்றெமெ தன்னையின் விலங்குகள் போகும்

என்று உள்ள உருகிப் பாடுகிறார்.

இந்த உணர்ச்சிமிக்க பாடல்களுக்கு ஈடு இணையில்லை.

சுதந்திர தேவியை வணங்குகிறார்?

இதன் தருமனையின் நீங்கி

இடர்மிகு சிறைப்பட்டாலும்

பதந்திரு அரண்டும் மாறிப்

பழி மிகுந்திழ்வுற்றாலும்

விதந்தரு கோடி இன்னல்

விளைந்தெனை அழித்திட்டாலும்

சுதந்திரதேவி! நின்னைத்

தொழுதிடல் மறக்கிலேனே

என்று பாடுகிறார்

இந்தப் பாடல்களுக்கு ஈடு இணை உலகில் எங்குமில்லை.

இங்கு பாரதியின் சுதந்திர தாகம், உலகின் உச்சத்திற்குச் செல்கிறது.

விடுதலை என்னும் தலைப்பில் பாரதி ஒரு அற்புதமான பாடலைப் பாடுகிறார் இங்கு!

விடுதலை, விடுதலை, விடுதலை என்று மும்முறை குறிப்பிடுகிறார்.

பிலஹரி ராகத்தில் இப்பாடலைப் பாடுகிறார்.

இப்பாடலில் அன்னிய ஆட்சியிலிருந்து நாடு அரசியல் விடுதலை பெற வேண்டும் என்று மட்டுமல்லாமல்ல அனைத்து மக்களும் விடுதலை பெற வேண்டும். பரிபூரண சுதந்திரம் வேண்டும் என்று விடுதலைக்குப் புதிய இலக்கணம் வகுத்துக் கூறுகிறார்.

பறையருக்கும் இங்கு தீயர்

புலையருக்கும் விடுதலை

பரவரோடு குறவருக்கும்

மறவருக்கும் விடுதலை

விடுதலை மட்டுமல்ல

திறமை கொண்ட தீமையற்ற

தொழில் புரிந்த யாவரும்

தேர்ந்த கல்வி ஞான மெய்தி

வாழ்வம் இந்த நாட்டிலே

என்று அனைவரும் விடுதலை பெற்று தொழிலும் கல்வியும் பெற்று உயர்ந்த நிலையடைய வேண்டும் என்பது பாரதியின் விடுதலை தத்துவம் என்பதாகும்.

இன்னும்,

மாதர் தம்மை இழிவு செய்யும்

மடமையைக் கொளுத்துவோம்.

வைய வாழ்வு தன்னில் எந்த

வகையிலும் நமக்குள்ளே

தாதர் என்ற நிலைமை மாறி

ஆண்களோடு பெண்களும்

சரி நிகர்சமானமாக

வாழ்வம் இந்த நாட்டிலே

என்று தனது விடுதலைக் கருத்தில் ஆண், பெண் சமுத்துவத்தையும் இணைத்து பாடும் அரும்புலவன் பாரதியாகும்.

சுதந்திரப் பள்ளு

நமது நாடு 1947 ஆகஸ்டில் சுதந்திரம் பெற்றது அதற்குப் பல ஆண்டுகளுக்கு முன்பே, சுதந்திர அடைந்து விட்டதாக கற்பித்து,

''ஆடுவோமே, பள்ளுப் பாடுவோமே,

ஆனந்த சுதந்திரம் அடைந்து விட்டோமென்று''

என்று பாடுகிறார்.

சுதந்திரத்தை ஆனந்த சுதந்திரம் என்று குறிப்பிடுகிறார். இப்பாடலில்

''எல்லோரும் ஒன்றெனும் காலம் வந்ததே

என்றும்

உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்''

என்றும்,

''நாமிருக்கு நாடு நமது என்பதறிந்தோம்

-இது

நமக்கே உரிமையாம் என்பதறிந்தோம்

-இந்தப்

பூமியில் எவர்க்கும் இனி அடிமை

செய்யோம்- பரி

பூரணனுக்கேயடிமை செய்து வாழ்வோம்''

என்று நாம் சுதந்திரம் பெறுவதற்கு முப்பது ஆண்டுக்களுக்கு முன்னாலேயே பாடிய பெருமை மகாகவி பாரதிக்கு உண்டு என்பதை

நினைவில் கொள்வோமாக.

5. பாரதி தனது தேசிய இயக்கப் பாடல்களில்,

சத்திரபதி சிவாஜி தனது சைன்யத்திற்குக் கூறியதாகப் பாடிய பாடலும் குருகோவிந்தர் பற்றிய பாடலும் அற்புதமானவை. அவை நாம என்னென்றும் நினைவுறுத்திப்பாட வேண்டியவையாகும்.

சத்ரபதி சிவாஜி பற்றிய பாடலில் பாரத பூமி பழம் பெரும்பூமி

நீரதன் புதல்வர்

இந்நினைவ கற்றாதீர் என்றும்

பாரத நாடு பார்க்கெல்லாம் திலகம்

நீரதன் புதல்வர், இந்நினைவதற்றாதீர் என்று குறிப்பிடுகிறார்.

6. வெள்ளைக்கார விஞ்சு துரை தேச பக்தரை மிரட்டுவதாகவும், தேச பக்தர் விஞ்சுதுரைக்குச் சரியான பதில் கூறுவதாகவும் உள்ள பாடல் உள்ளத்தை உலுக்குவதாகும்.

நாட்டிலெங்கும் ஸ்வதந்திர வாஞ்சையை

நாட்டினால்- கனல் மூட்டினாய்

வாட்டியுன்னை மடக்கி சிறைக்குள்ளே

மாட்டுவேன் வலி காட்டுவேன்''

என்று வெள்ளைக்கார ஆட்சியாளர் கூறுவதாகத் தொடங்கு பாடல் வரிகள் அற்புதமானது.

அதற்குப் பதில் அளித்த தேச பக்தன் கூறுகிறான்,

''சொந்த நாட்டில் பரர்க்கடிமை செய்தே

துஞ்சிடோம் இனி அஞ்சிடோம்

எந்த நாட்டிலும் இந்த அநீதிகள்

ஏற்குமோ தெய்வம் பார்க்குமோ'' என் றும்

''வந்தே மாதரம் என்றுயிர்போம் வரை

வாழ்த்துவோம் முடி தாழ்த்துவோம்

எந்த மாருயிர் அன்னையைப் போற்றுதல்

எனமோ- அவமானமோ'' .என்றும்

''பொழுதெல்லாம் எங்கள் செல்வம்
கொள்ளை கொண்டுபோகவோ
நாங்கள் சாகவோ'' என்றும்
''சதையைத் துண்டு துண்டாக்கினும்
உன் எண்ணம் சாயுமா? - ஜீவன் ஓயுமோ?
இதயத்துள்ளே இலக்கு மகாபக்தி
ஓடுமோ- நெஞ்சம் வேகுமோ?

என்று பாரதி பாரதி பாடுவது நெஞ்சை உலுக்குவதாகும்.

ஒத்துழையாமை இயக்கங்கள், சட்ட மறுப்பு போராட்டங்களும் நடைபெற்ற காலத்தில், தேச பக்தர்கள் விடுதலைப் போராட்ட வீரர்கள் இப்பாடல்களை வீரத்துடன் பாடி மகிழ்ந்தனர்.

இத்துடன் நடிப்புச் சுதேசிகளைப் பற்றியும் வேடிக்கையாகப் பாடுகிறார்.

''நெஞ்சில் உரமுமின்றி நேர்மைத்
திறமும் இன்றி
வஞ்சனை சொல்வாரடி - கிளிளே
வாய்ச் சொல்லில் வீரரடி''
என்பது அப்பாடலின் தொடக்கமாகும்.

லோகமான்ய பால கங்காதாரத்திலகர்
பாஞ்சால சிங்கம் லாலாலஜபதிராய்
மகாத்மா காந்தி, விவேகானந்தர்
தாதாபாய் நெளரோஜி சிதம்பரம்
ஆகியோருடைய வீரத்தையும் தியாகத்தையும்
உயர்த்திப் பாராட் டிப் பாடுகிறார்.

6. சுதந்திரத்திற்காக வேறு எந்த நாட்டு மக்கள் போராடினாலும் பாரதி அவர்களைப் பாராட்டிப் பாடினான்.

இத்தாலி நாட்டு மாவீரன் மாஜினியைப் பாராட்டி பாரதி பாடுகிறார்,

''அறத்தினால் வீழ்ந்து விட்டாய்

வன்மை யால் வீழ்ந்து விட்டாய்

மானத்தால் வீழ்ந்து விட்டாய்

துணிவினால் வீழ்ந்து விட்டாய்''

என்றெல்லாம் பெல்ஜியத்தைப் பாராட்டி பாடுகிறார்.

★ புதிய ருஷ்யாவைப் பற்றி ஒரு அருமையான பாடலைப் பாடுகிறார். அப்பாடல் நமது நாட்டில் மிகவும் பிரபலமாகப் பேசப்படுகிறது. அப்பாடலில்,

''மகாளி பராசக்தி ருஷ்சிய நாட்டில்

கடைக்கண் வைத்தற்- அங்கே

ஆகாவென்றெழுந்தது பாத யுகப் புரட்சி

கொடுங்கோலன் அவர் வீழ்ந்தான்

என்று தொடங்கி மிக அருமையான

உணர்ச்சி மிக்க பாடலைப் பாடுகிறார்.

அப்பாடலை

இடிபட்ட சுவர் போல கலி வீழ்ந்தான்

கிருதயுகம் எழுகமாதோ'' என்று முடிக்கிறார்.

தெய்வத்தின் பாடல்கள்

2-1 மகாகவி பாரதி தனது தேச பக்திப் பாடல்களில் தெய்வத்தை இணைத்துப் பாடுகிறார். அவருடைய தெய்வ பக்திப் பர்டல்களில் தேசத்தை இணைக்கிறார். தேச விடுதலை தேச நலன், மக்களின் நல்வாழ்வு ஆகியவற்றை இணைக்கிறார்.

2-2 பாரதியார் தனது கடவுள் வாழ்த்துப் பாடல்களை விநாயகக் நான் மணிப் பாடல்களுடன் தொடங்குகிறார்.

''செய்யும் தொழில் உன் தொழிலே காண்

சீர் பெற்றிட நீ அருள் செய்வாய்''

என்று தொடங்குகிறார்.

''கணபதியை வாழ்த்தி வணங்கும் போது,

அச்சம் தீரும் அமுதம் விளையும்

வித்தை வளரும் வேள்வியோங்கும்

அமரத்தன்மை எய்தவும்

இங்கு நாம் பெறலாம்'' என்று பாடுகிறார்.

2-3 இப்பாடலில் மகாகவி தனது தத்துவ ஞானக் கருத்தை தெளிவுபட எடுத்துக் கூறுகிறார். அதுவே பாரத நாட்டின் பொது தத்துவஞானக் கருத்தின் அடிப்படையாகும்.

''கடமையாவன

தன்னைக்கட்டுதல்

பிறர்துயர் தீர்த்தல்,

பிறர் நலன் வேண்டுதல் வநாயக மதவனாய

உலகெலாம் காக்கும் ஒருவனைப் போற்றுதல்

இந்நான்கேயிப் பூமியில் எவர்க்கும்

கடமை யெனப்படும்.

பயனிதில் நான்தாம்.

அறம்பொருள் இன்பம் வீடெனும் முறையே

தன்னை யாரும் சமர்த்தெனக்கருள் வாய்

என்று பாரதி குறிப்பிடுகிறார்.

இப்பாடல் தொகுப்பில் பாரதி

நமக்குத் தொழில் கவிதை

நாட்டிற்குழைத்தல்

இமைப் பொழுதும் சோராதிருத்தல்

-உமைக்கினிய

மைந்தன் கணநாதன்

நங்குடியை வாழ்விப்பான்

சிந்தையே இம்மூன்றும் செய்-

இம்மூன்றையுமே பாரதி விநாயகரிடம் வேண்டுகிறார்.

''அகண்டவெளிக்கண் அன்பினையே

சூழ்க துயர்கள் தொலைந்திடுக.

தொலையா இன்பம் விளைந்திடுக

வீழ்க கலியின் வலியெலாம்

கிருதயுகத்தினை மேவுகவே''

என்று தொடங்குகிறார்.

இதே பாடல் தொகுப்பில்,

'''மொய்க்கும் கவலைப்பகை போக்கி

முன்னோன் அருளைத் துணையாக்கி

எய்க்கும் நெஞ்சை வலியுறுத்தி

உடலை இரும்புக் கிணையாக்கிப்

பொய்க்கும் கலியை நான் கொன்று

பூலோகத்தார் கண்முன்னே

மெய்க்கும் கிருதயுக்தினையே

கொணர்வேன் தெய்வ விதியிஃதே''

என்று பாரதியார் இந்தப் பாடலில் விநாயகர் வழிபாடாகத்தனது தத்துவ ஞானக் கருத்தை வெளியிடுகிறார்.

அடுத்து வரும் முருகன் பாட்டில் முருகா! முருகா!! முருகா!!! என்று மும்முறை கூவியழைத்து தருவாய் தொழிலும் பயனும் அமரர் சமராதிபனே, சரணம்! சரணம்!! என்றும் வேலன்பாட்டில்:

''பல்லினைக்காட்டி வெண் முத்தைப்

பழித்திடும் வள்ளியை- ஒரு

பார்ப்பனக் கோலம் தரித்துக்

காந்தொட்ட வேலவா என்று குறிப்பிடுகிறார்.

இங்கு முருகன் பார்ப்பனக் கோலத்தில் வள்ளியைப் பிடிப்பதை ஜாதி சமத்துவத்தை பாரதி வெளியிடுகிறார்.

சிவசக்தி என்னும் தலைப்பில்

நின்னருள் வேண்டுகின்றோம்

-எங்கள்

நீதியும் தர்மமும் நிலைப்பதற்கே''

என்று கூறி நமது நலன்கள் அனைத்தையும் காத்திட சிவ சக்தியை வேண்டுகிறார்.

காணி நிலம் வேண்டும் என்றும் பாடலில்,

''என்றன் பாட்டுத்திறத்தாலே

இவ்வையத்தை

பாவித்திட வேண்டும்'' என்று வேண்டுகிறார்.

நல்லதோர் வீணை- பாரதி

நல்லதோர் வீணை செய்தே- அதை

நலங்கெடப் புழுதியில்

எறிவதுண்டோ

சொல்லடி சிவசக்தி- எனைச்

சுடர்மிகும் அறிவுடன் படைத்து

விட்டால் என்றும்,

வல்லமை தாராயோ- இந்த

மாநிலம் பயனுற வாழ்வதற்கே

சொல்லடி சிவசக்தி- நிலச்

சுமையென வாழ்ந்திடப் புரிகுவையோ?

அன்னையை வேண்டுதல்

எண்ணிய முடிதல் வேண்டும்

நல்லவையே எண்ணல் வேண்டும்.

திண்ணிய நெஞ்சம் வேண்டும்

தெளிந்த நல்லறிவு வேண்டும்.

பண்ணிய பாவமெல்லாம்

பரிதி முன் பணி போலவே

நண்ணிய நின் முன் இங்கு

நசித்திட வேண்டும் அன்னாய்!

இன்னும் மகாசக்தி வெண்பா, ஓம்சக்தி, பராசக்தி, சக்திக்கூத்து சக்தி, வைய முழுதும், சக்தி விளக்கம் சக்திக்கு ஆத்ம சமர்ப்பணம், சக்தி திருப்புகழ், சிவசக்தி புகழ், பேதை நெஞ்சே, மகாசக்தி, நலகாத்திரிப்பாட்டு, காளிப் பாட்டு, காளி ஸ்தோத்திரம், மகாசக்தி பஞ்சகம், மகாகாளியின் புகழ், முத்து மாதிரி, தேச முத்துமாரி, கோவிந்தன் பாட்டு என்னும் தலைப்புகளிலும் கருத்து மிக்க பல பாடல்களை மகாகவி பாரதி பாடுகிறார்.

கண்ணனை வேண்டுதல் என்னும் பாடலில் வேத வானில் விளக்கி,

''அறஞ்செய்மில் சாதல் நேரினும் சத்தியம் பூணுமின் தீதகற்றுமின்'' என்றும்.

''ஒப்பில்லாத உயர்வோடு கல்வியும்

எய்ப்பில் வீரமும், இப்புவியாட்சியும்

தப்பிலாத தருமமும் கொண்டு யாம்

அப்பனே நின் அடிபணிந்துய்வமமால்''

என்று தெய்வ பக்தியையும், தேச் பக்தியையும் இணைத்து அருமையாகப்படுகிறார்.

திருவேட்கை என்னும் தலைப்பிலான பாடலில்,

''செல்வம் எட்டுப் மெய்தி- நின்னால்

செம்மையேறி வாழ்வேன்

இல்லை என்ற கொடுமை- உலகில்

இல்லையாக வைப்பேன்''

என்று தெய்வ பக்தியின் சிறப்பான மனித வாழ்வையும் இணைத்து சிறப்பாகப் பாடுகிறார்.

திருமகள் துதி, திருமகளைச் சரண் புகுதல் என்னும் தலைப்புகளிலும், இன்னும் கலைமகளை வேண்டுதல், வெள்ளைத் தாமரை, என்னும் தலைப்பின் கல்வியின் பெருமையை மகாகவி மிகவும் சிறப்பாக உயர்த்திப் பாடுகிறார்.

''வீடு தோவம் கலையின் விளக்கம்
வீதி தோறும் இரண்டொரு பள்ளி
நாடு முற்றிலும் உள்ளன்வூர்கள்
நகர்களெங்கும் பலபல பள்ளி
என்றும்,
''இன்னறுக்கனிச் சோலைகள் செய்தல்
இனி நீர்த்துண் சுனைகள் இயற்றல்
அன்ன சத்திரம் ஆயிரம் வைத்தல்
ஆலயம் பதினாயிரம் நாட்டல்
பின்னருள்ள தருமங்கள் யாரும்
பெயர் விளங்கி யொளிர நிறுத்தல்
அன்னயாவினும் புண்ணியம் கோவி
ஆங்கோர் ஏழைக்கெழுத்தறிவித்தல்
என்று பாடுகிறார்.

ஞானப் பாடல்கள் என்னும் தொகுப்பில் அச்சமில்லை என்னும் தலைப்பில் மிக அருமையான ஈடுஇணையற்ற ஒரு பாடலை பாரதி பாடுகிறார்.

''உச்ச மீது வானிடிந்து வீடுகின்ற போதிலும்
அச்சமில்லை, அச்சமில்லை அச்சமென்ப
தில்லையே''
என்று படி முடிக்கிறார்.

எல்லாத்தீமைகளுக்கும் அச்சமே காரணம். அச்சம் நீங்கினால், அனைத்து துன்பங்களும் நீங்கி விடும் என்னும் உயர்ந்த தத்துவத்தை உறுதிபடக் கூறுகிறார்.

அடுத்து ஜயபேரிகை என்னும் பாடலில்,
பயமெனும் பேய் தனையடித்தோம் என்று தொடங்கி,
''காக்கை குருவி எங்கள் ஜாதி- நீள்
கடலும் மலையும் எங்கள் கூட்டம்'' என்றும்,

விடுதலை என்னும் தலைப்பில் வேண்டுமடி எப்போதும் விடுதலை அம்மா என்று பாடுகிறார்.

மனதில் உறுதி வேண்டும் என்னும் தலைப்பில்,

''மனதில் உறுதி வேண்டும்
வாக்கினிலே இனிமை வேண்டும்
நினைவு நல்ல வேண்டும்
நெருங்கின பொருள் கைப்பட வேண்டும்'' என்று பாடுகிறார்.

''கண் திறந்திட வேண்டும்
காரியத்தில் உறுதி வேண்டும்
பெண் விடுதலை வேண்டும்
பெரிய கடவுள் காக்க வேண்டும்
உண்மை வென்றிட வேண்டும்
ஓம்! ஓம்!!'' என்று பாடுகிறார்.

''பக்தி'' என்னும் தலைப்பில்

''ஆசையைக் கொல்வோம்
சோர்வுகள் போகும்
கல்வி வளரும்
சோம்பல் அழியும்
சந்ததி வாழும்''

என்று தத்துவ ஞானம் கூறிப்பாடுகிறார்.

''பகைவனுக்கருள்வாய்'' என்னும் தலைப்பில் மிகவும் அருமையான தத்துவ ஞானம் நிரம்பிய பாடலைப் பாடுகிறார்.

பலவகைப் பாடல்கள்

1. புதிய ஆத்திச்சூடி

புதிய ஆத்திச்சூடி என்னும் பெயரில் அச்சம் தவிர் என்று தொடங்கி

வேதம் புதுமை செய்,

வையத்தலைமை கொள்

வெளவுதல் நீக்கு என்று முடித்து 110 பாக்கள் பாரதி எழுதியுள்ளார். இந்த

110 குறள் பாட்டுகளுக்கும் விளக்கம் எழுதி இந்தக் கட்டுரை ஆசிரியர் அ. சீனிவாசன் தனி நூல் வெளியிட்டுள்ளார். அந்த நூல் விரிவாகப் பள்ளிகளுக்குச் சென்றிருக்கிறது.

பாப்பாப்பாட்டு

குழந்தைகளுக்காக என்று புதிய ஆத்திகூடி தொடங்கி பாப்பாப்பாட்டு பாடுகிறார். பாப்பாப்பாட்டில் குழந்தைகளுக்கு சில நல்ல கருத்துக்களைப் பாலூட்டுகிறார். ஓடி விளையாடு பாப்பா என்று தொடங்கி,

''வடக்கில் இமயமலை பாப்பா- தெற்கில்
வாழும் குமரி முனை பாப்பா
கிடக்கும் பெரிய கடல் கண்டாய்- இதன்
கிழக்கிலும் மேற்கிலும் பாப்பா,
வேதமுடைய திந்த நாடு- நல்ல
வீரர் பிறந்த திந்த நாடு
சேதமில்லாத இந்துஸ்தானம்- இதைத்
தெய்வமென்று கும்பிடடி பாப்பா'' என்றும்,

''சாதிகள் இல்லையடி பாப்பா- குலத்
தாழ்ச்சி உயர்ச்சி சொல்லல் பாவம்
நீதி, உயர்ந்த மதி, கல்வி- அன்பு
நிறைய உடையவர்கள் மேலோர்.
முரசு என்னும் தலைப்பில்
''வெற்றி எட்டுத்திக்கும் எட்டக்
கொட்டு முரசே'' என்று தொடங்கி
சாதிக் கொடுமைகள் வேண்டாம்
அன்பு தன்னில் செழித்திடும் வையம்
ஆதரவுற்றிற்கு வாழ்வோம்- தொழில்
ஆயிரம்மாண் புரச் செய்வோம்'' என்றும்,

''அன்பென்று கொட்டு முரசே

அறிவை வளர்த்திட வேண்டும்

வயிற்றுக்குச் சோறிட வேண்டும் - இங்கு

வாழும் மனிதருக்கெல்லாம்

பயிற்றிப் பல கல்வி தந்து - இந்தப்

பாரை உயர்த்திட வேண்டும்''

என்றெல்லாம் எளிய சொற்களில் குழந்தைகளுக்கு எடுத்துக் கூறுகிறார்.

புதுமைப் பெண்

புதுமைப் பெண், பெண்மை வாழ்க, பெண்கள் விடுதலைக் கும்மி, பெண் விடுதலை என்னும் தலைப்பு பெண்கள் சமத்துவம், பெண் விடுதலை என்னும் கருத்துக்களை மிகவும் சிறப்பாக எடுத்துக் கூறுகிறார்.

பெண் விடுதலைப் பற்றி இத்தனை தெளிவாக சென்ற நூற்றாண்டின் இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்திலேயே கருத்துக்களை தனது கவிதைகளை எடுத்துக் கூறிய புலவன் பாரதியைத் தவிர வேறு யாருமில்லை என்று கூறலாம்.

''புதிய கோணங்கி'' என்னும் தலைப்பில் பாரதி கருத்து நிறைந்த சிறந்ததொரு பாடலைப் பாடியுள்ளார். அதில் வீரம் வருகுது, மேன்மை கிடைக்குது தர்மம் பெருகுது என்று குறிப்பிடுகிறார்.

நாட்டுப் பெரியோர்களைப் பற்றி தாயுமானவர், நிவேத்தா, அபேதானந்தா ஓவியர் மணி இரவி வர்மா சுப்பராம தீட்சிதர், மகோமகோ பாத்தியாயர் வெ. சாமிநாத சர்மா, இந்து மதாபிமான சங்கத்தார் என்று சான்றோரைப் பற்றி பாரதி சிறப்பாகப் பாடியுள்ளார்.

சுயசரிதை

பாரதியார் எழுதியுள்ள சுயசரிதைப் பாடல் ஒரு தனி இலக்கியமாகும். அத்துடன் பாரதி அறுபத்தாறு என்னும் தலைப்பில் எழுதியுள்ள பாடலும் சேரும்.

சுயசரிதையில் சில சிறந்த புதிய கருத்துக்களை முன் வைக்கிறார். அதில் ஒன்று ஆங்கிலக் கல்வி பற்றியது. இன்னும் மகாகவி பாரதி தனது கட்டுரைகளில் கல்வியை அதிக முக்கியத்துவம் கொடுத்து தேசியக் கல்வி பற்றி விரிவாகப் பேசுகிறார். அக்கட்டுரைகளில் அவர் கல்வி பற்றிக் கூறியுள்ள கருத்துக்கள் இன்றும் பொருத்தமானதும் ஆய்வுக்குரியதுமாகும். அதைப்பின்னர் பார்ப்போம்.

சுயசரிதை என்னும் கவிதைத் தொகுப்பில் ஆங்கிலப் பயிற்சி பற்றி எழுதுகிறார்,

''நெல்லையூர் சென்று அவ்வூணர் கலைத்திறன்
கலைத்திறன்
''நேரு மாறெனை எந்தை பணித்தனன்
புல்லையுண்கென வாளரிச் சேயினைப்
போக்கல் போலவும், ஊன் விலை வாணிகம்,
நல்லதொரு பார்ப்பனப்பிள்ளையை
நாடுவிப்பது போலவும் எந்தைதான்
அல்லல் மிக்க தோர் மண்படு கல்வி யை
ஆரியர்க்கிங் கருவருப்பாவதை

★ நரியுயிர்ச்சிறு சேவகர், தாதர்கள்
நாயெனத்திரியொற்றர், உணவினைப்
பெரிதெனக் கொடு தம்முயிர் விற்றிடும்
பேயியர் பிறர்க்கிச்சகம் பேசுவார்.
கலை பயில கென என்னை விடுத்தனன்
அருமைமிக்க மயிலைப் பிரிந்து மிவ்
அற்பர் கல்வியில் நெஞ்சு பொருந்துமோ?

★ கணிதம் பன்னிரண்டு ஆண்டு பயில்வர் பின்
கார்கொள்வானிலோர் மீனிலை
தேர்ந்திலார்
அணிசெய் காவியம் ஆயிரம் கற்கினும்
ஆழ்ந்திருக்கும் கவியுளம் காண்கியார்
வணிகமும் பொருள் நூலும் பிதற்றுவார்
வாழும் நாட்டில் பொருள் கெடல்
கேட்டிலார்
துணியும் ஆயிரம் சாத்திர நாமங்கள்

[illegible]

[illegible]

★ கம்பன் என்றொரு மானிடம் வாழ்ந்தது
காளிதாசன் கவிதை புனைந்ததும்
உம்பர் வானத்துக் கோளையும் மீனையும்
ஓர்ந்தளந்ததோர் பாஸ்கரன்
மாட்சியும்
நம்பருந்திறலொடு பாணினி
ஞாலபீதில் இலக்கணங்கண்டது
இம்பர் வாழ்வின் இறுதி கண்டு உண்மையின்
இயல்புணர்த்திய சங்கரன் ஏற்றமும்.

★ சேரன் தம்பி சிலம்மை இசைத்ததும்
தெய்வ வள்ளுவன் வான்மறை
செய்ததும்
பாரில் நல்லிசைப் பாண்டிய சோழர்கள்
பாரளித்துத் தர்மம் வளர்த்ததும்
பேரருட்சுடர் வாள் கொண்ட சோக னார்
பிழைபடாது புவித்தலங்கரித்ததும்
வீரர் வாழ்த்த மிலேச்சர்தம் தீய கோல்
வீழ்த்தி வென்ற சிவாஜியின் வெற்றியும்.

★ அன்ன யாவும் அறிந்திலர் பாரதத்
தாங்கிலம் பயில் பள்ளியும் போகுனர்
முன்னர் நாடு திகழ்ந்த பெருமையும்
மூண்டிருக்கும் இந்நாளின் இகழ்ச்சியும்

மெங்களர் நாயகற் பெற்றியர் பேர்கிலார்
சேயர் கல்வி பயின்றுழல் பித்தர்கள்
என்று கூறி மற்றெங்கண் உணர்த்துவேன்
இங்கிவர்க் கென துள்ளம் எரிவதே!

ஐயரென்றும் துரை யென்றும்
மற்றெனக்
காங்கிலக் கலை யென்றொன்று
உணர்த்திய
பொய்யருக்கிது கூறுவன் கேட்பிரேல்
பொழுதெலாமுங்கள் பாடத்தில்
போக்கி நான்
மெய்யயர்ந்து விழி குழி வெய்திட
வீறிழந்தென துள்ளம் நொய்தாகிட
ஐயம் விஞ்சிச் சுதந்திரம் நீங்கி யென்
அறிவு வாரித்து ருமென்ற வைந்ததால்

★ செலவு தந்தைக் கோதாயிரஞ்சென்றது
தீதெனக்குப் பல்லாயிரம் சேர்ந்தன
நலமொ ரெட்டுணையுங்கண்டி லேனிதை
நாற்பதாயிரங் கோயிலிற் சொல்லுவேன்
என்று பாரதி மனமுருகப் பாடுகிறார்.

இன்னும் ஆங்கிலக் கல்வி பற்றியும் தேசியக் கல்வியின் அவசியம் பற்றியும் மகாகவி சிறந்த கட்டுரைகளும் எழுதியுள்ளார். ஆங்கிலக் கல்வி பற்றியும், தேசியக் கல்வியின் அவசியம் பற்றியும் மகாகவி பாரதி கூறியுள்ள கருத்துக்கள் ஆய்வுக்குரியன, ஆழ்ந்த பரிசீலனைக்குரியன். நமது நாட்டின் இன்றைய கல்வித்திட்டத்திலும் செயல்படுத்தத்தக்கன.

அச்சுயசரிதை பாடல் முடிவில்.

★ அறிவிலே தெளிவு

நெஞ்சிலே உறுதி

அகத்திலே அன்பினோர் வெள்ளம்,

பொறிகளின் மீது தனியரசாணை

பொழுதெலாம் நினது பேரருளின்

நெறியிலே நாட்டம், கரும யோகத்தில்

நிலைத்திடல் என்றிவையருளாய்

குறி குணமேதும் இல்லதாய் அனைத்தாயக் குலவிடு தனிப்பரம் பொருளே

என்று முடிக்கிறார்.

இப்பாடலில் வரும் ஒவ்வொரு சொல்லும் ஆய்வுக்குரியன.

பாரதி அறுபத்தாறு என்னும் தலைப்பிலான பாடலில்,

''எனக்கு முன்னே சித்தர் பலர் இருந்தாரப்பா

யானும் வந்தேன் ஒரு சித்தன் இந்த நாட்டில்

என்று தொடங்கித்தன்னை சித்தன் என்று வரித்துக் கொள்கிறார்.

புதுச்சேரியில் மகாகவி பாரதியார் இருந்த காலத்தில் பாடிய இந்தப் பாடல் கருத்துச் செரிவு மிக்கது. அந்த வாழ்க்கை அனுபவங்களைப் பிரதி பலிப்பதுமாகும்.

இப்பாடலில் பெண்ணின் பெருமை பற்றியும் பேசுகிறார்.

பெண் விடுதலை = தாய் மாண்பு பற்றிப் பாடுகிறார்.

''பெண்ணுக்கு விடுதலை என்றி

ங்கோர் நீதி

பிறப்பித்தேன் அதற்குரிய பெற்றி

கேளீர்'' என்றும்,

தாய்க்கு மேல் இங்கேயோர் தெய்வ

முண்டோ? என்றும்

பெண் விடுதலையைப் பற்றிப் பேசும் பாரதி ஐரோப்பாவில் உள்ள விடுதலைக்காதல் முறையை ஏற்கவில்லை. அதை

வீரமிலா மனிதர் சொல்லும் வார்த்தை

கண்டீர

விடுதலையாம் காதலெனிற் பொய்மைக்

காதல் என்றும்

கற்பு என்பது இருபாலருக்கும் பொது வானது

என்றும் பாரதி கூறுகிறார்.

மூப்பெரும் பாடல்கள்

1. கண்ணன் பாட்டு,

2. பாஞ்சாலி சபதம்,

3. குயில் பாட்டு

ஆகியவை அற்புதமான பாடல்களாகும். அவைகளுக்கு ஈடு இணையேயில்லை. அவையெல்லாம் தனியான ஆய்வுக்கும் செயல்பாட்டுக்கும் சரியன.

கண்ணன் பாட்டுத் தொகுப்பில்

''கண்ணன் என் தோழன்

கண்ணன் என் தாய்

கண்ணன் என் தந்தை

கண்ணன் என் சேவகன்

கண்ணன் என் அரசன்

கண்ணன் என் சீடன்

கண்ணன் என் சத்குரு'' என்னும் தலைப்புகளில் பாடுகிறார். இன்னும்,

கண்ணம்மா- என் குழந்தை

கண்ணம்மா - என் விளையாட்டுப் பிள்ளை

கண்ணம்மா- என் காதலி

கண்ணன் என் ஆண்டான்

கண்ணம்மா எனது குல தெய்வம்

என்னும் தலைப்பிலான பாடல்கள் அற்புதமானவை

பாரதியின் கண்ணன் பாட்டு ஒரு தனியான சிறப்பு இலக்கியமாகும்.

தெய்வ பக்தியும், தேச பக்தியும், அரசியலும், காதலும், சமூக நெறியும் கல்வியும் பற்றிய கருத்துக்களைக் கொண்ட எளிய தமிழில் வெளிப்பட்டுள்ள அற்புதமான இலக்கியமாகும்.

கண்ணன் பாட்டுத் தொகுப்பே சிறந்த ஆய்வுக்குரியன.

கண்ணன் என் தாய் என்னும் பாடலில்

சாத்திரம் கோடி வைத்தான் - அவை

தம்மினும் உயர்ந்த தோர் ஞானம் வைத்தாள்

மீத்திடும் பொழு திணிலே- நான்

வேடிக்கை யுறக்கண்டு நகைப்பதற்கே

கோத்த பொய் வேதங்களும்- மதகி

கொலைகளும் அரசர் தம் கூத்துக்களும்

மூத்தவர் பொய் நடையும்- இள

மூடர் தம் கவலையும் அவள் புனைந்தாராம்.

கண்ணன் என் தந்தை என்னும் பாடலில்

''நாலு குலங்கள் அமைத்தான் - அதை

நாசமுறப் புரிந்தனர் மூட மனிதர்

சீலம் அறிவு தர்மம்- இவை

சிறந்தவர் குலத்தினில் சிறந்தவராம்

மேலவர் கீழவர் என்றே- வெறும்

வேடத்தில் பிறப்பினில் விதிப்பனவாம்.

போலிச் சுவடியை யெல்லாம்- இன்று

பொருக்கிலிட்டாலும் வைக்கும்

நன்மையுண்டாம்''

என்று மிகவும் அற்புதமான கருத்துச் செல்வங்களை தனது பாடல்கள் மூலம் பாரதி பேசுகிறார்.

கண்ணன் எனது சற்குரு என்னும் கவிதையில்

'சாத்திரங்கள் பல தேடி சீலம் - அங்குச்

சங்கையில்லாதன சங்கையாம் - பழங்

கோத்திரங்கள் சொல்லு மூடர்தம் - பொய்மைக்

கூடையில் உண்மை கிடைக்குமோ? என்று தெளிகிறார்.

கண்ணம்மா - என் குழந்தை என்னும் தலைப்பில்

சின்னஞ்சிறு கிளியே - கண்ணம்மா?

செல்வக்களஞ்சியமோ!

என்னைக்கலி தீர்த்தே - உலகில்

ஏற்றம் புரிய வந்தாய்

என்று பாடத் தொடங்குகிறார்.

இன்னும் கண்ணன் - என் விளையாட்டுப் பிள்ளை, கண்ணன் என் காதலன் என்னும் பாடல்களில்

''திக்குத் தெரியாத காட்டில் - உனைத்

தேடித் தேடி இளைத்தேனே'' என்றும்,

''கண்ணன் மன நிலையைத் தங்கமே

தங்கம் அடி தங்கமே தங்க'' என்றும்,

''ஆசை முகம் மறந்து போச்சே - இதை

ஆரிடம் சொல்வேனடி தோழி'' என்றும்,

கண்ணம்மா - என் காதலி

''சுட்டும் விழிச்சுடர்தான் - கண்ணம்மா!

சூரிய சந்திரரோ'' என்றும்,

''நெரித்த திரைக்கடலில்

நின்முகம் கண்டேன்

நீலவி அம்பின்மை நின் முகங்கண்டேன்

திரித்த நுரையின்மை நின்முகம் கண்டேன் -

சின்னக் குமிழிகளில் நின் முகங் கண்டேன்

★ கண்ணம்மா - என் காதலி என்னும் பாடல்களில்

''பாயுமொளி நீ யெனக்கு

பார்க்கும் விழி நானுனக்கு

தோயும் மது நீ யெனக்குத்

தும்பியடி நானுனக்கு

வீணையடி நீ எனக்கு

மேவு விரல் நானுனக்கு

வானமழை நீ எனக்கு

வண்ணமயில் நானுனக்கு

நல்லவுயிர் நீ எனக்கு

நாடியடி நானுனக்கு

வீரமடி நீ எனக்கு

வெற்றியடி நானுக்கு''

என்றெல்லாம் அற்புதமாக பாரதி பாடுகிறார்.

இத்தகைய பக்தி சுவை, இன்னப் சுவை நிறைந்த பாடல்கள் உலகில் எங்குமில்லை.

★ கண்ணன் என் ஆண்டான் என்னும் தலைப்பில் பாரதி ஒரு அற்புதமான பாடலைப் பாடுகிறார்.

''இன்பமும் நோயும் மிடிமையுள் தீர்த்துக்

சுகமருளல் வேண்டும்

அன்புடன் நின்புகழ் பாடிக் குறித்து நின்

ஆணைவழி நடிப்பேன்'' என்றும்

ஒரு அருமையான அர்த்தமுள்ள பாடலைப் பாடுகிறர்.

★ கண்ணம்மா- எனது குல தெய்வம் என்னும் தலைப்பில்,

''நின்னைச் சரண டைந்தேனை- கண்ணம்மா!

நினைச் சரணடைந்தேன்.

நல்லது தீயது நாமறியோம்

அன்னை நல்லது நாட்டுக

தீமையை ஒட்டுக''

என்று அதி அற்புதமாக சரணாகதி தத்துவம் நிறைந்த பாடலை பாடி முடிக்கிறார்.

பஞ்சாலி சபதம்

பாஞ்சாலி சபதம் ஒரு அற்புதமான காவியம், மகாபாரதப் பெருங்கதையில் ஒரு முக்கியமான, திருப்புமுவையான நிகழ்ச்சி. மய்யமான நிகழ்ச்சி சூதாட்டம். அதையொட்டி நடைபெற்ற கொடுமையான நிகழ்ச்சி பாஞ்சாலியை பணயமாக வைத்து துலிலுரிதால் நிகழ்ச்சி. இந்தக் கொடுமையான நிகழ்ச்சி, மகாபாரதக் கதையில் வரும். ஒரு மய்யமான நிகழ்ச்சி யாகும். சகோதாரச் சண்டையில் நடுவான நிகழ்ச்சி.

பெருமைக்கி பாஞ்சாலி நாட்டின் திருமகள். வீரமிக்க ஐவரின்மனைவிய பாசாலி, மன்னர்சபையில் மானபங்கப்படுத்தப்படுகிறாள். உலகைக் காக்கும் காத்தல் கடவுள் கண்ணபிரான் பாஞ்சாலியின் மானத்தைக் காப்பாற்றுகிறான். பாஞ்சாலி சபதம் செய்கிறாள். அச்சபதம் போர்ககளத்தில் நிறைவேற்றப்படுகிற. பாஞ்சாலி சபத மேற்குமு் இந்த நிகழ்ச்சியை மையமாகக் கருவாக வைத்து இந்த மகாகவியின் எழுதப்பட்டிருக்கிறது.

பாரதி தனது காவியத்திற்கு எழுதியுள்ள முகவுரையில் எளிய மதங்கள், எளிய நடை, எளிதில், அறிந்து கொள்ளக்கூடிய சந்தம் பொது ஜனங்கள் விரும்பும் மெட்டு இவற்றினையுடைய காவிய மொன்று தறி காலத்திலே செய்து தருவேன் நமது தாய் மொழிக்குப் புரிய உயிர் தருவோனோகிறான். ஓரிரண்டு வருஷத்து நூற்பழக்க முள்ள தமிழ் மக்கள் எல்லோருக்கும் நன்கு

[illegible]

[illegible]

தமிழ் ஜாதிக்குப் புதிய வாழ்வு தர வேண்டுமென்று கங்கணங்கட்டி நிற்கும் பராசக்தியே என்னை இந்தத் தொழிலே தூண்டினாலாதயின் இதன் நடை நம்பவர்க்குப் பிரியந் தருவதாகும் என்றே நம்புகிறேன். ஓம் வந்தே மாதரம்.

சுப்ரமணிய பாரதி பற்றி பாரதி குறிப்பிடுகிறார்.

''பாயச்சூதினுக்கே- ஐயன்

மனமிணங்கி விட்டான்

தாய முருட்டலானார்- அங்கே

சகுனி ஆர்ப்பரித்தான்

நேய முற்ற விதுரன்- போல

நெறியுளோர்களெல்லாம்

வாயை மூடிவிட்டார் தங்கள்

மதிமயங்கி விட்டார்

என்று கூறுகிறார்.

பாஞ்சாலி சபதம்- இரண்டாம் பாகம்

அடிமைச்சருக்கத்தில்

சரஸ்வதி வணக்கமாக பாரதி பாடல்...

''இடையின்றி அணுக்களெலாம் சுழலுமென

இயல்நூலார் இசைத்தல் கேட்டோம்

இடையின்றி கதிர்களெலாஞ் சுழலுமென

வாதநூலார் இயம்புகின்றார்.

இடையின்றித் தொழில் புரிந்து உலகினையே

பொருள் கொல்லாம் இயற்கையாயினும்

இடையின்றிக் கலைபலகோள் நிலைதருமினும்

எனதுள்ளம் இயற் கொணாதோ

[illegible]

[illegible]

''[illegible]

கொண்டு விற்றல் [illegible]

வாயில் காத்து நிற்போன் - வீட்டை

வைத்திழத்தல் போலும்

ஆயிரங்களான - நீதி

யவை உணர்ந்தரும்

தேசம் வைத்திழந்தான் - சிச்சி

சிறியர் செய்கை செய்தான்''

என்று அற்புதமான உவமைகளுடன் தருமன் நாட்டை பணயமாக வைத்து சூதாட்டத்தில் இழந்தது குறித்துக் குறிப்பிடுகிறார். தொடர்ந்து,

''நாட்டு மாந்தரெல்லாம் - தம் போல்

நரர்களென்று கருதார்

.ஆட்டு மந்தையாமென் - நுலகை

.அரசரெண்ணிவிட்டார்.

காட்டும் உண்மை நூல்கள்- பல

தாய்காட்டினார்களேனும்

நாட்டு மாழி நீதி- மனிதர்

நம்பு செய்யவில்லை'' என்றும்,

''ழரந்செய்திட மாமே - தருமதி

நூறி கொன்றிட மாமே - பிறரைத்

தூயரின் வீழ்த்திட மாமே

மனைய யாவர்ப் பிறரை- உலகில்

ஏய் றுந்தாயில்லை

சாரமற்ற வார்த்தை - மேலே

சரிதை சொல்லுகின்றோம்''

என்று மகாகவி பாடுகிறார்.

மிகவும் உயர்வான உலகிற்குப் பொருத்தமான உண்மை நிறைந்த கருத்துக்களை மகாகவி வலுவாகக் குறிப்பிடுவதைக் காண்கிறோம். மகாகவி பாரதியின் அரசில் கருத்துக்களை மிகவும் தெளிவாக இந்தப் பாடல் வரிகள் தெரிவிக்கின்றன.

ஐவர் தங்களையும் பணயமாக வைத்து இழந்த பின் பாஞ்சாலியைப் பணயமாக வைத்து இழந்தது பற்றி, கவிஞர்,

''செருப்புக்குத் தோல் வேண்டியே

-இங்குக் கொல்வரோ

செல்வக் குழந்தையினை?

விருப்புற்ற சூதினுக்கேன ஒத்த பந்தயம்

மெய்த்தவப்பாஞ்சாபியோ?

ஒருப்பட்டுப் போனவுடன்- கெட்ட மாமனும்

சன்னியத்தாயம் கொண்டே

இருபகடை பேடென்றான்-

பொய்மைக் காய்களும்

இருபகடை போட்டவே''

என்று மகாகவி தனது பாடலில் குறிப்பிடுகிறார். அற்புதமான கருத்து மிக்க கவிதையாகும்.

சூதில் பாஞ்சாலி பணயமாகி தோல்வியுற்ற பின்னர், பாஞ்சாலியை அரச சபைக்கு அழைத்து வரும்படி துரியோதனன் ஆணையிடுகிறான். அப்போது உலகில் தர்மக் குழப்பம் ஏற்படுவதாக மகாகவி பாரதி ஒரு அருமையான அற்புதமான காட்சியை நமக்குக் காட்டுகிறார்.

இதுபோன்ற காட்சியை உலகில் எந்தக் கவிஞனும் காட்டவில்லை. இது பாரதிக்கேயான தனிச்சிறப்பாகும்.

''தருமம் அழிவெய்திச் சத்தியமும் பொய்யாகிப்

பெருமைத் தவங்கள் பெயர் கெட்டு மண்ணாக

வானத்துத் தேவர் வயிற்றிலே தீப்பாய

போன முன்வர் முறை கெட்டுத் தாமயங்க
வேதம் பொருளின்றி வெற்றுரையேயாகிவிட
''நாதம் குலைந்து நடுமையின்றிப் பாழாக
கந்தருவரெல்லாம் கலை விளக்கச் சித்தர் முதல்
அந்தாத்து வாழ்வோர்னைவோரும் பித்துறவே
நான்முகனார் நாவடைக்க நாமகட்குப் புத்தி கெட
வான் முகிலைப் போன்ற தொரு வண்ணத்
திருமாலும்
அறிதுயில் போய் மாற்றாங்கே அழிதுயில்
எய்திவிட
செறி தரு நற்சீறழுகம் செல்வமெலாந்
தானாகும்
சீதேவி தன் வதனம் செம்மை போய்கி
காரனடைய
மாதேவன் யோகம் மதிமயக்கமாகவிட
வாலை உமாதேவி, மாகாளி, வீறுடையாள்

மூலமா சக்தி, ஒரு மூவிலை வேல் கை
யேற்றாள்

மாயை தொலைக்கும் மகாமயை தானாவாள்
பேயைக் கொலையைப் பிணக்குவை
யைக் கண்டுவப்பாள்.
சிங்கத்திலேறிச் சிரித் தெவையும்
காத்திடுவாள்

நோவும் கொலையும் நுவலொணாப்
பீடைகளும்

சாவும் சலிப்பு மெனத்தான் பல் கணமுடையாள்
ஜடா வெருமை ஏறும் கரு நிலத்துக் காலனார்
இடாது பணி செய்ய இலக்கு மகாராணி
மங்களம் செல்வம் வளர் வாழ்நாள்
நற்கீர்த்தி

''துங்கமுறு கல்வியெனச் சூழும் பல கணத்தாள்
ஆக்கந்தானாவா, அழிவு நிலையாவாள்
போக்கு வர வெய்தும் புதுமை யெலாந்
தானாவாள்
மாறி மாறிப் பின்னும் மாறி மாறிப் பின்னும்
மாறி மாறிப் போம் வழக்கமே தானாவாள்.

ஆதிபாராசக்தி, அவள் நெஞ்சம் வன்மையுறச்
சோதிக்கதிர் விடுக்கும் சூரியனாம் தெய்வத்தின்
முகத்தே இருள்படர

என்று மகாகவி பாடுகிறார்.

இவ்வாறு மகாகவி கூறுகிறார். இத்தகையதொரு அற்புதமான காட்சியை நமக்கு மகாகவி பாரதி காட்டுகிறார். இதற்கு ஈடு இணையே இல்லை.

இந்த வார்த்தைகளில் மகாகவி பாரதி உலகின் உச்சிக்கு உயர்ந்து விட்டான். பாஞ்சாலி சபதத்தை மட்டுமல்ல, சூதாட்டப் பணயத்தை மட்டுமல்ல, தமிழ்க் கவிதையை உச்சத்திற்குக் கொண்டு சென்று விட்டார்.

துச்சாதனன், பாஞ்சாலியின் குழல் பிடித்து இழுத்துச் செல்லும் காட்சியை, பாரதி ஆவேசத்துடன் குறிப்பிடுகிறார்.

ஒரு வீதியில் ஒரு ஊரில், ஒரு நாட்டில், ஒரு அக்கிரம அநியாயம் நடந்தால் அதை மற்றவர் தட்டிக் கேட்க வேண்டாமா?

துச்சாதனன், பக்கத்திலே வந்து பாஞ்சாலி கூந்தலினைக்

''கையினாற்பற்றிக் கரகரெனத் தானிழுத்தான்
ஐயகோ வென்றே யலறியுணர்வற்றும்

பாண்டவர் தந்தேவியவள் பாதியுயிர் கொண்டு வர

நீண்ட கருங்குழலை நீசன் கரம் பற்றி

முன்னிருத்துச் சென்றான வழி நெடுக

மொய்த்தவராய்''

''என்ன கொடுமையிது வென்று பார்த்திருந்தார். ஊரவர்தம் கீழ்மை உரைக்கும் தரமாமோ? வீரமிலா நாய்க, விலங்காம் இளவரசன்

தன்தன மிதித்துத் தாரதலத்தில்

போக்கியே

பொன்னையவள் அந்தப் புரத்தினி லே

சேர்க்காமல்

''நெட்டை மரங்களென நின்று புலம்பினார்,

பெட்டைப் புலம்பல் பிறர்க்குத்துணையாமோ?

பேரழகு கொண்ட பெருந்தவத்து நாயகியைச்

சீரழியக் கூந்தல் சிதையைக் கவர்ந்து போய்க்

கேடுற்ற மன்னர் அறங்கெட்ட சபை தனிலே

கூடுதலும் அங்கே போய்க் ''கோ'' வென்று

அலறினாள்''

என்று கவிஞர் குறிப்பிடுகிறார்.

மகாகவி, அநியாயத்தைக் கண்டு சீறியெழும் குணமுடையவர் அதை அவருடைய கவிதைச் சொற்களில் காண்கிறோம்.

★ பாஞ்சாலியின் ஆவேசக் குரலைக்கேட்டு மன்னர் சபையில் ஒரு சலசலப்பு ஏற்படுகிறது. சிலர் பேசுகிறார்கள்.

இந்தக் காட்சியை மகாகவி மிக அற்புதமாகக் காட்டுகிறார்.

சபையில் இவ்வாறு திரௌபதி நீதி கேட்டுப் பேசிய காட்சி, பாரத நாட்டின் சீரிய வரலாற்றில் ஒரு முக்கிய, ஒரு மிக முக்கிய நிகழ்ச்சியாக மகாகவி பாரதி நமக்குக் காட்டுகிறார்.

★ மன்னர் சபையில்

திரௌபதி நீதி கேட்டு அழுகிறாள்.

உலக மக்கள் சபையில் பாரத தேவி நீதி கேட்டு அழுவதைப் போல்

நமக்குக் காட்சி தென்படுகிறது.

''விதியோர் கணவரே
அம்மி மிதித்தே அருந்ததியைக் காட்டி
யெனை
வேகச் சுடர்த் தீ முன்வேண்டி
மணஞ் செய்து
பாதகர் முன் இந்நாள் பரிசழிதல்
காண் வீரோ...?''
'' என்றாள், விஜயனுடன் ஏறுதிறல்
வீமனுமே
குன்றாமணித் தோள் குறிப்புடனே
நோக்கினாள்.
''தருமனும் மற்றங்கே தலை குனிந்
நின்றிட்டான்.
பொருமியவள் பின்னும் பலம்புவாள்
- வான்சபையில்
கேள்வி பலவுடையோர்,
கேடிலா நல்லிசையோர்
''வேள்வித் தவங்கள் மிகப்புரிந்த
வேதியர்கள்
மேலோர் இருக்கின்றீர்
வெஞ்சினமேன் கொள்கிரரோ?

★ வேலோரெனை யுடைய வேந்தர்
பிணிப்புண்டார்
இங்கிவர் மேல் குற்றம் இயம்ப
வழியில்லை

மங்கிய தோர் புன்மதி யாய்...!

மன்னர்சபை தனிலே

''என்னைப் பிடித்திழுத்தே ஏச்சுக்கள்

சொல்லுகிறாய்

நின்னை யெவரும் ''நிறுத்தடா'' என்பதிலர்

''என் செய்கேன்'' என்றே

இரைத்தழுதாம், பாண்டவரை

மின் செய்தி கதிர் விழியால்

வெள்நோக்கு நோக்கினாள்.

மற்றவர்தாம் முன் போல் வாயிழந்து

சீர்குன்ப்

பற்றைகள் போல் நிற்பதைப் பார்த்து

வெறிகொண்டு

''தாதியடி தாதி யெனத்துச் சாதனன்

அவளைத்

தீதுரைகள் கூறினாள்

கர்ணன் சிரித்திட்டான்

சகுனி புகழ்ந்தான் சபையோர் வீற்றிருந்தார்''

என்று மகாவி குறிப்பிடுகிறார்.

★ 'அப்போது வீட்டுமன் பேசுகிறார்

இங்கு வீட்டுமனுக்கும் 'பாஞ்சாலிக்கும் ஒரு வாக்கு வாதம் நடைபெறுகிறது. இங்கு வீட்டுமனும், பாஞ்சாலியும் பேசுகிறார்கள். ஆவேசம் கொண்ட வீமன் பேசுகிறான். அர்ஜுனன் பேசுகிறான்.

அதைக் கேட்டு நீதியின் பக்கமாக நின்று நூற்வரில் ஒருவனான கர்ணன் பேசுகிறான்.

★துச்சாதனன் எழுந்தே - அன்னை

துகிலினை மன்றிடை யுரிதலுற்றான்.

''அன்னை

உலகத்தை மறந்தாள்

ஒருமையுற்றாள்

உட்சோதியிற் கலந்தாள்

'ஹரி ஹரி ஹரி' கண்ணா

என்று கண்ணனுக்கு அபயமானாள் பாஞ்சாலியும் பீமனும் பார்த்தனும் சபர்மேற்கின்றனர்.

இந்தச் சபதங்கள் போர்க்களத்தில் நிறைவேறுகின்றன.

★ பாஞ்சாலி அரச சபையில் நீதி கேட்கு கேள்விக்கணைகளை வீசிய போது, வீட்டுமன் கூறுகிறான்.

★ ''சூதாடி நின்னையுதிட்டி ரனே

தோற்று விட்டான்.

வாதாடி நீயவன் தன் செய்கை

மறுக்கின்றாய்

சூதிலே வல்லான் சகுனி தொழில் வலியால்

மாதரசே நின்னுடைய மன்னவனை

வீழ்த்திவிட்டான்.

மற்றிதனில் உன்னையொரு பந்தயபாய்

வைத்ததே

குற்றமென்று சொல்லுகிறாய்

கோமகளே, பண்டையுக

வேத முனிவர் விதிப்பாடி நீ சொல்லுவது

நீதமெனக்கூடும், நெடுங்காலச் செய்தியது

ஆணொரு பெண் முற்றும் நிகரென வே

அந்நாளில்

பேணிவந்தார் பின்னாளில் இஃது

பெயர்ந்து போய்

இப்பொருதை நூல்களினை யெண்ணுங்

கால் ஆடவருக்
கொப்பில்லை மாதர், ஒருவர் தன் தாரத்தை
''விற்றிடலாம், தானமென வேற்று
வாக்குத் தந்திடலாம்
முற்றும் விலங்கு முறைமையன்றி
வேறில்லை
தன்னையடிமையென விற்ற பின்னும்
தருமன்
நின்னை யெனக் கொள்வதற்கு நீதியுண்டு
செல்லு நெறியறியார் செய்கை யிங்குப்
பார்த்தடியோ
கல்லும் நடுங்கும் விலங்குகளும்
கண் புதைக்கும்
செய்கை அநீதி என்று நேர்ந்தாலும்
சாத்திரந்தான்
வைகும் நெறியும் வழக்கமும் நீ கேட்பதனால்
ஆங்கவையும் நின் சார்பிலாகா வகை
யுரைத்தேன்
தீங்கு தடுக்கும் நிறமிலேன்'' என்றந்த
மேலோன் தலை கவிழ்ந்தான்
மெல்லியலாலும் சொல்லுகிறாள்

துரௌபதி பதில் பேசுகிறாள்:
''சால நன்கு கூறினீர்' ஐயா தருமநெறி
'பண்டோர் இராவணனும் சீதை தன்னைப் பாதகத்தால்
கொண்டோர் வனத்திடையே வைத்து பின் கூட்டமுற
மந்திரிகள் சாத்திரிமார் தம்மை வரவழைத்தே

செந்திடுலைப் பற்றி வந்த செய்தி உணர்த்திடுங்கால்
தக்கது நீர் செய்தீர் தருமத்துக்கிச் செய்கை
ஏக்கும் என்று கூறி உகந்தனராம் சாத்திரிமார்!

''பேயரசு செய்தால் பிணம் தின்னும் சாத்திரங்கள்
மாயமுணராத மன்னவனை சூதாட
வற்புறுத்திக் கேட்டதுதான்
வஞ்சனையோ? நேர்மையோ?
முற்பட வே சூழ்ந்து முடித்ததொரு செய்கையன்றோ?
மண்டபம் நீர் கட்டியது மாநிலத்தைக் கொள்ளவன்றோ?
பெண்டிர் தமையுடையயீர் பெண்களுடன் பிறந்தீர்
பெண் பாவமன்றோ? பெரிய வசை கொள்வீரோ?
கண் பார்க்க வேண்டும்!'' என்று
கையடுத்துக் கும்பிட்டாள்''

என்று பாஞ்சாலியின் வேண்டுகோளை பாரதி குறிப்பிடுகிறார்.

★ பாஞ்சாலியின் கூந்தலைப் பற்றியிழுத்து பாவி துச்சாதனன் துக்கலுறிந்த கொடுமையான காட்சியை மகாகவி குறிப்பிடுகிறார்.

''ஆடை குலைவுற்று நிற்கிறாள்!- அவள்
ஆவென்றழுது துடிக்கிறாள்- வெறும்
மாடு நிகர்த்ததுச் சாதனை- அவள்
கைக்குழல் பற்றியிழுக்கிறான்- இந்தப்
பீடையை நோக்கினான் வீமனும்- கரை
மீறி எழுந்தது வெஞ்சினம்- துயர
கூடித்தருமனை நோக்கியே- அவன்
கூறிய வார்த்தைகள் கேட்டீரோ?

★ வீமன் கூறிய வார்த்தைகள்

(இவை மகாகவி பாரதிக்கே உரியனவாகும்)

''சூதர் மனைகளிலே- அண்ணே!
தொண்டு மகளிருண்டு
சூதில் பணயமென்றே- அங்கோரி
தொண்டச்சி போவதில்லை.
''ஏது கருதி வைத்தாய்? அண்ணே
யாரைப் பணயம் வைத்தாய்...?'
மாதர் குலவிளக்கை- அன்பே
வாய்ந்த வடிவழகை
''யூமியரசரெல்லாம் - கண்டே
போற்ற விளங்குகிறாள்
சாமி புகழினுக்கே வெம் போர்ச்
சண்டனப் பாஞ்சாலன்

''அவன் சுடர் மகளை- அண்ணே
ஆடியிழந்து விட்டாய்
தவறு செய்து விட்டாய்- அண்ணே
தருமங்கொன்று விட்டாய்

''சோரதிற்கொண்டதில்லை- அண்ணே
சூதிற்படைத்த தில்லை
வீரத்தினாற் படைத்தோம்- வெப்போர் வெற்ற
வெற்றயினாற் படைத்தோம்

''சக்கரவர்த்தி யென்றே- மேலோந்

தன்மை படைத்திருந்தோம்

பொக்கென் ஓர்கணத்தே - எல்லாம்

போகத் தொலைந்து விட்டாய்

''நாட்டையெல்லாம் தொலைத்தாய் -

அண்மேண

நாங்கள் பொருத்திருந்தோம்

மீட்கும் எமையடிமை செய்தாய்

மேலும் பொருத்திருந்தோம்.

''துருபதன் மகளைத் திட்டத்

துய்மன் உடற்பிறப்பை

இரு பகடையென்றாய் - ஐயோ

இவர்க்கடமை யென்றால்

''இது பொறுப்பதில்லை - தம்பி

எரிதழல் கொண்டுவா .

கதிரை வைத்திழந்தான் - அண்ணன்

கையை எரித்திடுவோம்

என்று வீமன் கூறுவதாக மகாகவி பாரதி குறிப்பிடுகிறார்.

மகாகவி பாரதியின் இந்தக் கருத்து வேறு எங்கும் காணப்படாததாகும். பாரதிக்கே சிறப்பான உயர்ந்த புதிய கருத்தாகும்.

வீமனது இந்த வார்த்தைகளைக் கேட்டு அர்ஜூனன் திடுக்கிட்டான். சபை நடுவிலே தர்மத்தின் தேவதையே கண்டனம் செய்த சொற்கள் பார்த்தனுடைய உள்ளத்தை உலுக்கி விட்டது.

அர்ஜூனன் பேசுகிறான்

''என வீமன் சகதேவனிடத்தே சொன்னான்

இதைக்கேட்டு வில் விஜயன்

எதிர்த்துக் கொல்லுவான்.

மனமாரச் சொன்னாயோ? வீமா?

என்ன வார்த்தை

சொன்னாய்? எங்கு சொன்னாய்?

யாவர் முன்னே?

கனமாறும் குடும்பத்தினர் மகளைச் சூது

கனியினிலே இழந்திடுதல் குறு்றமென் றாய்!

சினிமா நீ அறிவைப் புகைத்தலாலே

திரிலோக நாயகனைச்

சினந்து சொன்னாய்!

★ தருமத்தின் வாழ்வதனைச் சூது

கவ்வும்

தருமம் மறுபடி வெல்லும்''

எனுமியற்கை

மருமத்தை நம்மாலே உலகங்கற்கும்

வழிதேடி விதி, இந்தச் செய்கை செய்தான்.

தருமத்தை மேன் மேலும் காண்போம்

இன்று

கட்டுண்டோம் பொறுத்திருப்போம்

காலம் மாறும்

தருமத்தை அப்போது வெல்லக் காண்போம்

தனுவுண்டு காண்டீலம் அதின் பேர் என்றான்.

இவ்வாறு அர்ஜுனன் கூறியதாக மகாகவி கூறுகிறார். இவை பொருள் மிக்க சொற்களாகும் வில் விஜயனுடைய இந்த வீரச் சொற்களைக் கேட்டு உலகம் நடுங்கியது. சபையில் கூடியிருந்த மன்னரெல்லாம் நெஞ்சம் கலங்கினர். அவர்களுக்கிடையில் சலசலப்பு ஏற்பட்டது.

வி. கர்ணன் பேசினான்

நூற்றுவரில் ஒருவன் கர்ணன் அவன் நீதியறிந்தவன். தனது அண்ணன் துரியோதன் செய்வது துர்மத்திற்கு எதிரானது என்று உணர்ந்து அத்தீய செய்கைகளை எதிர்ப்பவன். அவன் பேசுகிறான்.

அப்போது வி. கர்ணன் எழுந்து அனை முன் சொல்வான்/

''பெண்ணரசி கேள்விக்குப் பாட்டான் சொன்ன
பேச்சுதனை நான் கொள்ளேன் பெண்டிர் தம்மை
எண்ண பதில் விலங்கெனவே கணவரெண்ணி
ஏதேனினும் செய்திடலாம் என்று பாட்டன்,
வண்ண முயர் வேதநெறி மாறி பின்னாள்
வழங்குவதின் நெறி என்றான்
வழுவே சொன்னான்

எந்தையர் தம் மனைவியரை விற்பதுண்டோ?
இது காணும் அரசியரைச் சூதில் தோற்ற
விந்தையை நீர் கேட்டதுண்டோ?
விலை மாதர்க்கு
விதித்ததையே பிற்கால நீதிக்காரர்
சொந்தமென சாத்திகத்தின் புகுத்தி விட்டார்.

''சொல்லளவே ஏதானாலும், வழக்கந்தன்னில்
இந்த விதம் செய்வதில்லை. சூதர் வீட்டில்
எவற்பெண் பணயமில்லை என்றும் கேட்டோம்.

தன்னையிவன் இழந்தடிமையான
பின்னர் தி
தாரமேது? வீசேது தாதனான
பின்னையுமோர் உடமையுண்டோ?''

என்றுறும்பைப்
பெண்ணரசு கேட்கின்றார்
பெண்மைவாயால்
மன்னர்களே! களிப்பது தான் சூது
என்றாலும்,
மனுநீதி துறந்திங்கே வலிய பாவந்
தன்னை இருவிழி பார்க்க வாய்
பேசீரோ?
தாத்தனே நீதி இது தகுதியோ?
என்றான்

★ ''இவ்வாறு விகர்ணனும் உரைத்தல் கேட்டார்
எழுந்திட்டார் சில வேந்தர்
இரைச்சலிட்டார்
ஒவ்வாது சகுதி செய்யும் கொடுமை'' என்பார்.
ஒரு நாளும் உலகதினை மறக்காதென்பா?
எவ்வாறு புகைந்தாலும் புகைந்து போவீர்
ஏந்திழையை அவைக்கனத்தே
இகழ்தல் வேண்டா

''செவ்வானம் படர்ந்தாற் போல்
இரத்தம் பாயச்
செருக்களத்தே தீருமடா பழி
யிஃதென்பார்''
இவ்வாறு விகர்ணன் பேசினான்.
சபையில் சலசலப்பு ஏற்பட்டது.

★ திரௌபதி கண்ணனுக்குச் செய்யும் பிரார்த்தனை

பாரதி கதையைத் தொடர்கிறார்,

''துச்சாதனன் எழுந்தே - அன்னை

துகிலினை மன்றிடையுரிதலுற்றான்

''அச்சோ, தேவர்களே! - என்று

அலறி அவ்வதரணும் தலை சாய்ந்தான்!

பிச்சேறிய வனைப் போல் - அந்தப்

பேயனும் துகிலினை உரிகையிலே

உட்சோதியில் கலந்தாள் - அன்னை

உலகத்தை மறந்தாள் ஒருமையுற்றாள்.

இவ்வாறு துகிலுரிதல் கொடுமை தொடங்குகிறது.

பாஞ்சாலி (அன்னை) உலகை மறந்தாள். ஒருமையுற்றாள் இங்கு கண்ணன் பாஞ்சாலியின் மானம் காத்த காட்சியை பாரதி நமக்கு காட்டுகிறார். நமது உடல் புல்லரிக்கிறது.

★ ''ஹரி ஹரி ஹரி என்றாள்''- கண்ணா

அபயம் அபயமுனக்கபயம் என்றாள்

கரியினுக் கருள் புரிந்தே- அன்று

கயத்திடை முதலையினை

உயிர் மடித்தாய்

கரிய நன்னறிமுடையாய்- அன்று

காளிங்கன் தலைமிசை

நடம்புரிந்தாய்

பெரிய தோர்பொருளாவாய்- 'கண்ணா'!

பேசரும் பழமறைப் பொருளாவாய்

★ சக்கர மேந்தி நின்றாய்! - கண்ணா

சார்ங்க மென்றொரு வில்லைக்

காத்துடையாய்
அச்சரப் பொருளாவாய்- கண்ணா!
அக்கார அழுதுண்ணும் பசுங்குழந்தாய்!
துக்கங்கள் அழித்திடுவாய்- கண்ணா!
தொண்டர் கண்ணீர்களைத்
துடைத்திடுவாய்.
தக்கவர் தமைக்காப்பாய்- அந்தச்
சதுர்முக வேதனைன் படைத்துவிட்டாய்

★ வானத்து வானாவாய்- தீ
மண், நீர், காற்றினில் அன்வயாவாய்
போனத்துள் வீழ்ந்திருப்பார்- தவ
முனிவர்தம் அகத்தினில் ஒளிர்தருவாய்
கானத்துப் பொய்கையிலே- தனிக்
கமலமென் பூமிசை வீற்றிருப்பாள்
தானது ஸ்ரீ தேவி- அவள்
தாளிணைகைக் கொண்டு மகிழ்ந்திருப்பாய்

★ ஆதியிலாதியப்பா!- கண்ணா
அறிவினைக் கடந்த விண்
அகப் பொருளே!
சோதிக்கும் சோழியப்பா- என்றன்
சொல்லினைக்கேட்டருள் செய்திடுவாய்
மாதிக்கு வெளியினிலே- நடு
வானத்திற் பறந்திடம் கருடன் மீசை
சோதிக்குள் ஊர்ந்திடுவாய்- கண்ணா
சுடர்பொருளே பேரடற் பொருளே!

★ கம்பத்தில் உள்ளானோ? அடா
காட்டுன்றன் கடவுளைத் தூணிடத்தே
வம்புரை செய்மூடா''- என்று
மகன் மிசையுறுமி அத்தூணுடைத்தான்
செம்பவிர் குழலுடையான்- அந்தத்
தீயவல்லிரணியனுடல் பிறந்தாய்
நம்பி நின்னடி தொழுதேன்- என்னை
நாணழியாதிங்குக் காத்தருள் வாய்.

★ வாக்கினுக்கீசனையும்- நின்றன
வாக்கினி வசைத்திடும்
வலிமையினால்
ஆக்கினை காத்துடையாய்- என்றன்
அன்புடை எந்தை! என்னருட்கடலே!
நோக்கினிற் கதிருடையாய்- இங்கு
தூற்றுவர் கொடுமையைத் தவிர்த்
தருள்வாய்
தேக்கு நல்வானமுதே! இங்குச்
சிற்றிடை பாய்ச்சிலில் வெண்ணெ
யுண்டாய்

★ வையகம் காத்திடுவாய்- கண்ணா
மணிவண்ணா, என்றன் மனச்
சுடரே!
ஐயநின் பதமலலே சரண்
ஹரி, ஹரி, ஹரி, ஹரி, ஹரி என்றாள்

பொய்யர் தம் துயரினைப் போல்- நல்ல
புண்ணிய வாளர்தம் புகழினைப் போல்
தையலர் கருணையைப் போல்- கடல்
சலசலத்தெறிந்திடும் அலைகளைப் போல்,

★ பெண்ணொளி வாழ்த்திடுவார்- அந்தப்
பெருமக்கள் செல்வத்திற்
பெருகுதல் போல்
கண்ணபிரான் அருளால் - தம்பி
கழற்றிடக் கழற்றிடத் துணி புதிதாய்
வண்ணப் பொற் சேலைகளாம்- அவை
வளர்ந்தன, வளர்ந்தன, வளர்ந்தனவே!
எண்ணத்திலடங்காவே- அவை
எத்தனை எத்தனை நிறத்தனவோ!

★ பொன்னிழை பட்டிழையும் - பல
புதுப்புது புதுப்புது புதுமைகளாய்ச்
சென்னியிற்கை குவித்தாள்- அவள்
செவ்விய மேனியைச் சார்ந்து நின்றே
முன்னிய ஹரி நாமம்- தன்னில்
மூளுநற்பயன் உலகறிந்திடவே
துன்னிய துகிற்கூட்டம்- கண்டு
தொழும்பத்துச்சாதனன் வீழ்ந்து விட்டான்

★ தேவர்கள் பூச்சொரிந்தார்- ஓம்
ஜெய ஜெய பாரத சக்தி என்றே
ஆவலோடு எழுந்து நின்று- முன்னே

சாவடி மறவரெல்லாம்- ஓம்

சக்தி சக்தி என்று கரங் குவித்தார்

காவலின் நெற்பிழைத்தான் -கொடி

கடியரவுடையவன் தலை கவிந்தான்

என்று மகாகவி பாரதி அனைவரும் வியக்கத்தக்க வகையில், அனைவருக்கும் வியப்பூட்டும் வரையில் பாடி முடிக்கிறார்.

துகிலுறிதல் கொடுமையின் நிகழ்வு முடிந்த போது, வீமனும், பார்த்தனும், பாஞ்சாலியும், சபதமேற்றனர். போர்க்களத்தில் போரின் முடிவில் சபதங்கள் நிறைவேற்றப்படுகின்றன.

குயில்பாட்டு

மகாகவியின் குயில்பாட்டு புகழ் பெற்ற பாடல் தொகுதியாகும்.

இந்த குயில் பாட்டில் தான் மகாகவி பாரதியின் புகழ் பெற்ற

''காதல், காதல், காதல்

காதல் போயிற் காதல் போயிற்

காதல் காதல் காதல்'' என்று அற்புதவரிகள் வருகின்றன.

பாரதியார் கட்டுரைகள்

மகாகவி பாரதியாரை மகாகவியென்றும் தேசிய மகாகவி என்றும் தான் அதிகமாக உலகரியும். அவருடைய தேசிய கவிதைகள் கருத்துமிக்கன. கருத்தாழம் மிக்கன. துடிப்பு மிக்கன. மக்களுடைய தேச பக்த உணர்வைத் தட்டி எழுப்புவன.

''எந்தையும் தாயும் மகிழ்ந்து குலாவி

இருந்ததும் இந்நாடே - அதன்

முந்தையர் ஆயிரம் ஆண்டுகள் வாழ்ந்து

முடிந்ததும் இந்நாடே''

என்று கூறும் சொற்களிலே தான் எத்தனை அர்த்தமும் பொருளும் ஆழ்ந்த கருத்துக்களும், கருத்தாழமும் நிறைந்திருக்கின்றன. இத்தகைய கருத்தாழமும் சிறப்புச் செய்திகளும் மிக்க கவிதைச் சொற்களும் அவருடைய

கவிதைகளில் காண்கிறோம்.

இவ்வாறு மகாகவியின் சிறப்புப்பெயர்களினால் அவரை தமிழ் மக்கள் மகாகவி என்று அறிந்தார்கள். உலகமும் அறியத் தொடங்கியது. ஆனால் மகாகவி பாரதியார் வெறும் மகாகவி மட்டுமல்ல சிறந்த பத்திரிகையாளர், பத்திரிகையாசிரியர், சிந்தனையாளர், தீர்க்கதரிசி சிறந்த எழுத்தாளர், கட்டுரையாளர், செய்தியாசிரியர், கதாசிரியர், மிகச் சிறந்த எழுத்தாளர் தமிழ் மொழியின் இன்றைய உரை நடைக்கு மகாகவி பாரதியே மூலகர்த்தா. எளிய நடை, இனிய சொற்கள் பாமரரும் சுலமாகப் புரிந்து கொள்ளும் தமிழ் எழுத்து நடை-

மகாகவி பாரதி, சுதேச மித்திரன் தினசரி பத்திரிகை துணையாசிரியராகப் பணியாற்றினார். பாரதி அப்பத்திரிகையின் செய்தியாசிரியராக, தலையங்கம் எழுதுபவராக, செய்தித் தொகுப்பாளராக, மொழி பெயர்ப்பாளராக, செய்தி விமர்சகராக, செய்தியாசிரியராக இன்னும் ஒரு பத்திரிகைக்குத் தேவையான எல்லாப் பணிகளையும் செய்து நிறைவேற்றுபவராக பல்துறைப் பணியாளராக பணியாற்றியுள்ளார்.

சுதேசமித்திரனின் துணையாசிரியராகப் பணியாற்றியது மட்டுமல்ல, இந்தியா போன்ற சில பத்திரிகைகளையும் நடத்தினார். பல பத்திரிகைகளுக்குக் கட்டுரைகளும் கதைகளும் எழுதினார்.

மகாகவி பாரதியாருடைய சிறந்த கட்டுரைகள் தொகுத்து நூலாக வெளியிட்டுள்ளன. அவரைப் பற்றிய பல செய்திகளும் அவருடைய நூறாவது பிறந்தநாளின் போது வெளிவந்தன.

பாரதியாருடைய எழுத்துக்கள் கட்டுரைகள், கதைகள் அனைத்தும் தொகுத்து வெளியிடப்படுவதற்கும் தொடர்ந்துப ல முயற்சிகள் நடை பெற்று வருகின்றன. அவருடைய எழுத்துக்கள் அனைத்தையும் தொகுப்பு நூல்களாக வெளியிடவும் முயற்சிகள் நடைபெற்று வருகின்றன.

மேலும் மேலும் அதிகமாக பாரதியைப் பற்றியும், அவருடைய கட்டுரைகள் கருத்துக்கள் பற்றியெல்லாம் நமக்கு அதிகமான விவரங்கள் கிடைக்கும். அவைகளின் தொகுப்புகளும் கிடைக்கும். பாரதி புதையலைத் தோண்டி வெளிக் கொணர்வதற்காக பல தேச பக்தர்களும் பாரதி அன்பர்களும் பல முயற்சிகளும் செய்து வருகிறார்கள். இவ்வரும் பணிகளில் சினி விஸ்வநாதன் போன்ற பாரதி பக்தர்களும், அறிஞர்களும் பல முயற்சிகளும் மேற்கொண்டு வருகிறார்கள். அவர்களுடைய முயற்சிக்கு பராசக்தி அருள் புரிவாளாக! வந்தே மாதரம்!

மகாகவி பாரதியாரின் எழுத்துக்களை வெளிக் கொணர்வது மட்டுமல்ல. அவருடை எழுத்துக்களின் படைப்புகளின் கருத்துக்களையும் ஆணைகளையும் செயல்படுத்த வேண்டும் பாரத நாட்டின் சிறப்புகள்

அனைத்தையும் வெளிக் கொணர வேண்டும். மகாகவி பாரதியின் கவிதைகள், கட்டுரைகள், கதைகள் முதலியன பாரத நாட்டின் இதர மொழிகளில் மொழியாக்கம் செய்யப்பட வேண்டும். உலகின் இதர மொழிகளில் மொழியாக்கம் செய்யப்பட வேண்டும்.

அவருடைய உணர்வுப்பூர்வமான கவிதைகளும், கதைகளும், கட்டுரைகளும், கருத்துக்களும், உலகமெங்கும் வர வேண்டும்.

பாரதத்தை உலகம் நன்கு அறிய வேண்டுமானால் உலகம் பாரதியை நன்கு படிக்க வேண்டும்.

★ தியானம் என்னும் தலைப்பில் பாரத தேசத்தில் ஒவ்வொருவனும் செய்வதற்குரிய தியானம்

தியானத்தின் சக்தியை எளிதாக நினைக்க வேண்டாம். மனிதன் தான் விரும்புகிறபடியே ஆகிறான்.

நமது உள்ளத்திலே நீரத்தன்மை, அமைதி, பலம், தேஜஸ், சக்தி, அருள், பக்தி, சிரத்தை இந்த எண்ணங்களையே நிரப்ப வேண்டும். இவற்றையெல்லாம் நான் எனது உடமையாக்கிக் கொள்வேன். இவற்றிற்கு எதிர்மறையான சிந்தனைகள் எனது அறிவினுள்ளே நுழைய இடம் கொடுக்க மாட்டேன்'' என்று ஒவ்வொருவறும் உறுதி செய்து கொள்ள வேண்டும்.

இக்கட்டுரையில் பாரதி மேலும் கூறுகிறார்.

''பரிபூரணி விருப்பத்துடன் தியானம் செய்- சோர்வும் அதைரியமும் விளைவிக்கத்தக்க எண்ணங்களுக்கு இடம் கொடாதே.... ஊற்றிலிருந்து நீர் பெருகுவது போல உனக்குள் இருந்து தெளிந்த அறிவும், தீர்த்தன்மையும், சக்தியும் மேன்மேலும் பொங்கி வரும். உனது இஷ்ட சித்திகளெல்லாம் நிறைவேறும். இது சத்தியம் அனுபவத்திலே பார்'' என்று உறுதிமிக்க சொற்களில் பாரதி தனது கட்டுரையில் குறிப்பிடுகிறார்.

★ சக்தி தர்மம் என்னும் தலைப்பில்

ஆத்மா உணர்வு, சக்தி செய்கை

உலகம் முழுதும் செய்கை மயமாக நிற்கிறது. விரும்புதல், அறிதல், நடத்துதல் என்ற மூவகையான சக்தி இவ்வுலகத்தை ஆளுகிறது. இதைப் பூர்வ சாஸ்திரங்கள் இச்சா சக்தி, ஞான சக்தி, கிரியா சக்தி என்று சொல்லும்.

பாரதியார், வே மதங்களைப் பற்றி தனது கட்டுரை ஒன்றில் விவரித்துக் கூறுகிறார். அது ஒரு சிறந்த கட்டுரையாகும். ஆதிசங்கரர் இந்த வேத மதங்கள்

அனைத்தையும் ஒன்று படுத்துகிறார். அது ஆதிசங்கரின் சிறப்பாகும். அதுவே இந்து தர்மம். (சநாதன தர்மம்) என்னும் சிறப்புமிக்க தர்மமாகும். இதுபற்றி மகாகவி பாரதி மிகவும் தெளிவான சில கருத்துக்களை தனது கட்டுரையில் குறிப்பிடுகிறார்.

ஜீவன் முக்தி: அதுவே சிதம்பரம்

ஜீவன் முக்தி என்பது ஒரு அருமையான சொற்றொடராகும். மனிதர் அனைவரும் ஜீவன் முக்தி ராகப் பக்குவப்பட வேண்டும். அதற்கு ஒவ்வொரு மனிதனும் முயற்சியை மேற்கொள்ள வேண்டும் என்பது பாரதியின் கருத்தாகும்.

(1) எப்போதும் வானத்திலே சுற்றும் பருந்து போல், போக விஷயங்களினால் கட்டுப்படாமல் பரமாத்மாவின் ஞானக்கதிரை விழித்து நோக்குதலே விடுதலை. அதுதான் சிதம்பரம் மகனே! சிதம்பரத்துக்குப் போ...

(2) சிதம்பரத்தில் நடராஜர் சிவகாமி சக்தி பக்தருக்கு வரதானம் கொடுக்கிறார் போய் வரம் வாங்கு.

(3) சிதம்பரமே ஸ்ரீரங்கம் அதுவே பழனிமலை. எல்லா புண்ணிய கேஷத்திரங்களும் ஜீவன் முக்திச் சின்னங்கள் என்று தெரிந்து கொள். உனக்கு, ''கேஷமமும் நீண்ட வயதும், ஜீவன் முக்தியும் விளைக'' என்று குறிப்பிடுகிறார்.

★ மகாகவி பாரதி ''நவராத்திரி'' பற்றி சிறந்ததொரு கட்டுரை எழுதியுள்ளார். அதில் அவர் கூறியுள்ள கருத்துக்கள் எல்லோருக்கும் எந்நாளும் பொருந்தும் குறிப்பாக பாரதத்தில் உள்ள அனைத்து மக்களுக்கும் பொருந்தும்.

''நவராத்திரி'' என்பது ஒன்பதிகவு பராசக்தியை பூஜை செய்கிறோம். லக்ஷ்மி யென்றும், சரஸ்வதி என்றும், பார்வதி என்றும் மூன்று மூர்த்தியாக நிற்பது பராசக்தி. இவ்வுலகத்தை ஆக்கல், அழித்தல், காத்தல் என்று மூன்று தொழில் நடத்துவது.

''ஹிமாசம் தொடங்கி குமரி முனை வரை வேதத்தை நம்பும் சட்டத்தார் எல்லாம் இந்தப்பூஜை செய்கிறோம்'' என்று குறிப்பிடுகிறார்.

★ சக்தி: நல்லலெல்லெழுத்து முத்துச் சேர்ந்த மொழி. விக்கிரமாதித்தனும் காளிதாசனும் வணங்கிய தெய்வம், ''உலகத்தார் இந்த பராசக்தியை நல்ல மழையருள் புரியும் சாத்காலத்தின் முதல் ஒன்பதிரவும் வணங்கி பூஜைகள் செய்ய வேண்டும்'' என்பது பூர்வீகர் ஏற்பாடு மிகப் பயனுடைய காரியம். மேலான வழி இவ்வாறு மகாகவி பாரதி நவராத்திரி பூஜையைப் பற்றிச் சிறப்பாகக் கூறுகிறார்.

நவராத்திரி ஒன்பது நாள் விழா இதை பாரதி சிறப்பாக நினைவுப்படுத்துகிறார்.

ஒன்பது நாளும் தியானம், கல்வி, தவம், இவற்றிலே செலவித்திறமை, இல்லாதோர் கடைசி ஒன்பதாம் நாள் மாத்திரமேனும் விரதம் காக்க வேண்டும். இந்த பூஜையின் பொருள் மிகவும் தெளிந்தது.

''சக்தியால் உலகம் வாழ்கிறத

நாம் வாழ்வை விரும்புகிறோம்

ஆதலால் நாம் சக்தியை வேண்டுகிறோம்'' என்று பாரதியார் குறிப்பிடுகிறார்.

★ ஒவ்வொருவருக்கும் மூன்று வித சக்தி வேண்டும். 1) அறிவு, 2) செல்வம், 3) தைரியம். இந்த மூன்றும் நமக்கு இகலோகத்தில் கிடைக்கும் படியாகவும், இதனால் பரலோக இன்பங்களும் சாத்யமாகும் படியாகவும் நாம் தெய்வத்தை வழி படுகிறோம்.

பக்திக்கு மாத்திரமே தெய்வத்தை நம்புவது சிலருடைய வழி. இகலோக இன்பங்கம் வேண்டுமென்று தெய்வத்திடம் கேட்டு வாங்கிக் கொள்வது மற்றொரு வழி.

★ விக்கிரமாத்தியன் வணங்கிய தெய்வம், காளிதாசனுக்குக் கவிதை காட்டிய தெய்வம். பாரிநாட்டு மகாஜனங்களின் இன்னும் தலைமையாகக் கொண்டாடும் தெய்வம்.

ஸ்ரீமந்நாராயணன் மூர்த்தியின் சக்தியாக விளங்கும் லக்ஷ்மி தேவதை; சிவ பிரானுடைய வலிமையாகத் திகழும் பார்வதி, பிரமதேவன் தலைவியாகிய சரஸ்வதி மூன்று மூர்த்திகள் மூன்று வடிவங்கள் பொருள் ஒன்று. அதன் சக்தி ஒன்று, பொருளும் அதன் சக்தியும் ஒன்றே. இங்ஙனம் ஒன்றாக விளங்கும் சக்தியென்ற தெய்வத்தை ஹிந்துக்கள் உபாசனை செய்வதற்கு விசேஷ பருவமாக இந்த நவராத்திரியின் காலத்தை வைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

முடிவாக பாரதி:

எல்லா மதங்களும் உண்மைதான். ஒரு மதமும் முழு உண்மையன்று. ஆதலால் மதப்பிரிவுகளைக் கருதி மனிதர் பிரிந்து விடக்கூடாது. எல்லா மதத்தினரும் பிரிந்து விடக்கூடாது. எல்லா மதத்தினரும் ஒரே தெய்வத்தைத்தான் வணங்குகிறார்கள். வெளக்க விஷயங்களைப் போலவே மத விஷயங்களிலும் ஒப்பு, உடன் பிறப்பு, விடுதலை மூன்றும் பாராட்டப்பட வேண்டும்.

★ நம்பிக்கை என்னும் தலைப்பிலான ஒரு கட்டுரையில் மகாகவி பாரதி.

''ஆழ்வார்களுடைய குலம் நானாவிதம். அப்படியிருந்தும் அவர்களைக்

கோயில் வைத்துப் பூஜை செய்யலாமென்று ராமானுஜர் நியமித்தார். மூற்காலத்தில் பிராமணர் இதர ஜாதியினரை இழிவாக வைத்துக் கொடுத்தார் காளன்றும், ஞானத்திற்கு தகாதவரென்று சொல்லி அடிமைப்படுத்தினார்களென்றும் பொய்க்கதைகள் சொல்லி ஹிந்து தர்மத்தை அழிக்க விரும்புகிற கிறிஸ்தவம் பாதிரிகளும் அவ்விடத்து சிஷ்யர்களும், ராமானுஜாசாரியார் பிராமணர் என்பதை அறிய மாட்டார் போலும் சூத்திரராகிய திருக்கச்சி நம்பியை ராமானுஜர் குருவாகக் கொண்டு அவருடைய உச்சிஷ்டத்தை உண்ண திருவுளம் கொண்டார். திருநாராயணபுரத்தில் பறையர் ஒரு சமயம் கோயிலுக்குள் வரலாமென்று ஸ்ரீ ராமனுஜர் நியமித்தருளிய முன்பு இன்றைக்கு நடந்து வருகிறது'' என்று குறிப்பிடுகிறார்.

★ பாரதி ''தைரியம்'' என்னும் தலைப்பில் ஒரு அருமையான கட்டுரை எழுதியிருக்கிறார். அக்கட்டுரையில் அச்சமே மடைமை, அச்சமில்லாமையே அறிவு விபத்துக்கள் வரும் போது நடுங்குபவன் மூடன். அவன் எத்தனை சாஸ்திரம் படத்திருந்தாலும் மூடன்தான். விபத்துக்கள் வரும் போது எவன் உள்ளம் நடுங்காமல் துணிவுடன் அவற்றையெல்லாம் முயற்சி செய்கிறானோ அவன் ஞானி.

''ஹரி ஓம்'' என்று எழுதத் தெரியாத போதிலும் அவன் ஞானிதான். சிவாஜி மகாராஜா தனது சொந்தப் பிரயத்தனத்தினாலும், துணிவாலும் புத்தி கூர்மையாலும் அவுரங்கசிப்பின் கொடுமையை அழித்து மகாராஷ்டிரம் ஏற்படுத்தித் தர்ம ஸ்தாபனம் செய்தார்.

பாரத வாசதிகளாகிய நாம் இப்போது புனருத்தாரணம் பெறுவதற்காகக் கல்வி வேண்டும் என்று சிலர் சொல்லுகிறார்கள். நாம் துணிவு வேண்டும் என்கிறோம். துணிவே தாய். அதிலிருந்து தான் கல்வி முதலிய மற்றெல்லா நன்மைகளும் பிறக்கின்றன என்று அக்கட்டுரையில் எழுதுகிறார்.

பாரதியார்

★ ''உயிரின் ஒளி'' என்னும் அருமையானதொரு கட்டுரை எழுதியுள்ளார். அது இந்திய நாட்டின் அண்மைக் காலத்தின் மிகப்பெரிய மகான்களில் ஒருவரான உலகத்தார்களால் அங்கீகரிக்கப்பட்ட இந்திய விஞ்ஞானியாவார். அவனைப் பற்றிய கட்டுரையில், ''மேற்படி ஜகதீஸ் சந்திரவஸு நம்முடைய ஹிந்து மதத்தில் ஆழ்ந்த பக்தியுடையவர் என்பது சொல்லாமலே விளங்கும் ஹிந்துக்களின் மேன்மையைப் பற்றி அவர் வார்த்தை சொல்லும் போது அந்த வார்த்தைகளிலே மிகச்சிறந்ததொரு ஜீவநாதம் உண்டாகிறது. அந்த வார்த்தைகளைப் படிக்கும் போதே படிப்போரின் ஜீவசக்தி மிகுதிப்படுகிறது என்று பாரதி குறிப்பிடுகிறார். மேலும் பாரதி குறிப்பிடுகிறார்.

இப்போது நமது கண்முன்னே இரண்டு விதமான தர்மங்கள்

காணப்படுகின்றன.

முதலாவது (ஐரோப்பியரைப் போல் நாடும்) படிப்பின் பரவுதலாலும் நகரத்தானுக்குரிய கடமைகளையும் பொறுப்புகளையும் நிறைவேற்றுவதாலும் கைத்தொழில் வியாபாரம் சம்மந்தமான பலவித முயற்சிகளாலும் பாரத நாட்டை வலிமையுடைய நாடாகச் செய்ய வேண்டும். இவையெல்லாம் தேசக் கடமையின் முக்கிய அம்சங்கள் இவற்றைப் புறக்கணித்தால் நமது ஜீவனுக்கே ஆபத்து நேரிடும் வாழ்க்கையிலே ஜயமும் அவனவன் தன் தன் அவாவைத் திருப்தி செய்து கொள்ளும் வழியும் வேண்டிப் பாடுபட்டால் அதிலிருந்தே மேற்கூறிய .... தர்மத்திற்குத் தூண்டுதல் உண்டாகும். இரண்டாவது ஆத்ம தர்மம் க்ஷணமாயிருக்கும் இன்பங்களை மாத்திரம் கருதாமல் மனுஷ்ய வாழ்க்கையின் அதியுன்னதமான நோக்கத்தை நாடி உழைத்தவர்கள் நமது நாட்டில் எக்காலத்திலும் மாறாமல் இருந்து வருகிறார்கள்.

''வந்தே மாதரம்''- இதுவே உயிரின் ஒலி. ஹிந்துஸ்தானத்தை வணங்குகிறேன். ஹிந்து தர்மத்தைப் போற்றுகிறேன். லோக நன்மைக்காக என்னை மறந்து என்னை இரை கொடுப்பேன்.

இதுதான் ஜீவசக்தியின் சாந்தி வசனம். இந்த தர்மமம் ஐரோப்பியருக்குத் தெரியாது. அதை நாம் ஐரோப்பியருக்குக் கற்றுக் கொடுக்க வேண்டும். அவர்களுடைய முயற்சிகளை நாம் கற்றுக் கொண்டு பிறகுதான் அவர்களுக்கு நாம் உபாத்யாயராகலாம்'' என்று எழுதுகிறார்.

★ ஆரிய ஸ்ம்பத்து பாரதி எழுதுகிறார்.

ஸம்பத்து என்பது சம்ஸ்கிருதச் சொல் இதன் பொருள் செல்வம். ஆனால் இங்கு செல்வம் என்பது திரவயத்தையும் பூஸ்திதியை ஆடு, மாடுகளையும் மாத்திரமே குறிப்பிடுவதன்று, 1) அறிவுச் செல்வம், 2) ஒழுக்கச் செல்வம், 3) பொருட்செல்வம் ஆகிய மூன்றையும் குறிப்பிடும். ''ஆரிய சம்பத்து'' என்பது ஹிந்துக்களினுடைய அறிவு வளர்ச்சி.

''நமது வேதம், நமது சாஸ்திரம், நமது ஜனக்கட்டு நமது பாஷைகள், நமது கவிதை, நமது சிம்பரம், நமது சங்கீதம், நமது நாட்டியம், நமது தொழில் முறைகள், நமது கோபுரங்கள், நமது மண்டபங்கள், நமது குடிசைகள், இவையனைத்துக்கும் பொதுப் பெயர் ஆர்ய சம்பத்து. காளிதாசன் செய்த சாகுந்தல நாடகம்- ஹிந்தி பாஷையிலே துளசி தாஸர் செய்திருக்கும் ராமாயணம், கம்ப ராமாயணன், சிலப்பதிகாரம், திருக்குறள், ஆண்டாள் திருமொழி. இவையனைத்திற்கும் பொதுப் பெயர் ஆர்ய சம்பத்து. தஞ்சாவூர் கோயில், திருமலை நாயக்கர் மஹால், தியாகய்யர் கீர்த்தனங்கள், எல்லோராவிலுள்ள குகைக் கோவில் ஆக்ராவிலுள்ள தாஜ்மஹால் சரபசாஸ்திரியாரின் புல்லாங்குழல் இவையனைத்திற்கும் பொதுப் பெயர்

ஆர்யசம்பத்து.

எனவே ஆர்யசம்பத்தாவது, ''ஹிந்துஸ்தானத்தின் நாகரிகம். இந்த சம்பத்தைப் பாதுகாக்கும் வரையில் இந்த ஜாதிக்கு உயிருண்டு. இந்த சம்பத்திலே துருப்பிடிக்க இடம் கொடுத்தால் இந்த ஜாதியை செல் அரித்துவிடும். இந்த ஆர்யசம்பத்தை உலகம் உள்ளவரை சமாகூஷணம் செய்து மேன் மேலும் ஒளியும் சிறப்பும் உண்டாகும்படி செய்யும் கடமை தேவர்களால் பாரத ஜாதிக்கு ஏற்படுத்தப்பட்ட கடமையாகும்.

இடையில் நமக்கு நேர்ந்த கேடு

இந்த ஆர்யசம்பத்தை நாம் பல பல நூற்றுக்களாக ஆதரித்துக் கொண்டு வந்தோம். சென்ற சில நூற்றாண்டுகளாக இதில் துருப்பிடிக்க இடம் கொடுத்து விட்டோம். தேவர்கள் நமக்குக் கொடுத்த கடமையை கர்வத்தாலும், சோம்பலாலும் சிறுமையாலும் உல்லங்கனம் செய்யத் தொடங்கிறோம். தேவர்கள் ''இந்தப் பாரத ஜாதியைக் கொஞ்சம் செல் அரிக்கக்கடவது என்று ஆசீர்வாதம் பண்ணினார்கள்'' என்று அந்தக் கட்டுரையைப் பாரதியார் தொடங்குகிறார்.

இங்கு இந்த ஆர்ய சமபத்தை நாம் பல நூற்றாண்டுகளாக ஆதரித்துக் கொண்டு வந்தோம் அன்று பாரதியார் குறிப்பிட்டிருப்பது கவனிக்கதாகும். அதாவது பாரத தேசத்து நாகரிகம் பல பல நூற்றாண்டுகள் தொன்மையானது. நமது கவிதைகள், சிற்பம் சங்கீதம் முதலியவை பல பல நூற்றாண்டுகள் தொன்மையானது. இவைகளைச் சரியாகப் பராமரித்து வருவதிலே இடைக்காலத்திலே நமக்கு கவனக்குறைவு ஏற்பட்டு நமது பாரத சமுதாயம் பலவீனப்பட்டு விட்டது. அதையே பாரதி செல் அரித்து விட்டது என்று குறிப்பிடுகிறார்.

★ ''சவியுறத் தெரிந்து தண்ணென் றொருக்கமும்

தழுவிச் சான்றோர்

- கவியெனக் கிடந்த கோதவரியினை

வீரர் கண்டார்''

என்றும் கம்பன் பாடியிருக்கிறான்.

''சவி'' என்பது ஒளி. இது வட சொல். கம்பன் காலத்தில் அதிக வழக்கத்திலிருந்தது போலும், ''ஒளி பொருந்தும்படி தெளிவு கொண்டதாகித் தண்ணெள (குளிர்ந்து) நடையுடையதாகி மேலோர் கவிதையைப் போலக் கிடந்தது கோதாவரி நதி'' என்று கம்பன் வர்ணனை செய்கிறார். எனவே கவிதையில் ஒளி, தெளிவு, குளிர்ந்த நடை மூன்றும் இருக்க வேண்டும் என்பது கம்பனுடைய மதமாகும். இதுவே நியாயமான கொள்கை.

இடைக்காலத்து சங்கீதம்

பாரத தேசத்து சங்கீதம் பூமியிலுள்ள எல்லாத் தேசத்து சங்கீதத்தைக் காட்டிலும் மேலானது. கவிதையைப் போலவே சங்கீதத்திலும் நவரசங்களின் தொழில் இருக்க வேணடும் நவரசங்களைப் பற்றி இந்தப் பத்திரிகையிலே தனியாக ஒரு வியாசம் பின்னர் எழுதப்படும். இன்ன இன்ன ராகங்களிலே இன்ன இன்ன சமயங்களில் இன்ன ரஸங்கள் தோன்றப்பட வேண்வுமென்ற விதிகள் எல்லாம் பூர்வகாலத்து நூல்களிலே காணப்படுகின்றன. கீர்த்தனத்திலுள்ள சொற்களின் அர்த்தமும் ராகத்தின் ஒலியும் ரஸத்திலே ஒன்றுப்பட்டிருக்க வேண்டும். தியாகையர் காலம் வரை நமது தேசத்து சங்கீதம் ஒளியுடனிருந்தது. பிறகு இதிலும் இருள் சேரத் தொடங்கி விட்டது. பாட்டிலே ரஸச் சேர்க்கை கிடையாது. அப்படியே சேர்த்தாலும் ''சோக ரஸம்'' (கருணா ரஸம்) தான் சேர்ப்பார்கள் மற்றவை மடிந்து போயின. பாட்டுக்கிசைந்தபடி தானம் என்பது மாறிப் போய் தானத்துக் கிடைந்தபடி பாட்டாகி விட்டது. ''இன்பத்தை காட்டிலும் கணக்கே பிரதானம்'' என்று முடிவு செய்து கொண்டார்கள். இன்பமும் கணக்கும் சேர்ந்திருக்க வேண்டும். இன்பம் இல்லாமல் கணக்கு மாத்திரம் இருந்தால் அது பாட்டாகாது.

மறு பிறப்பு

இடைக்காலத்தே நமக்குச் சேர்ந்த கேட்டிற்கு சங்கீதத்தையும் கவிதையையும் திருஷ்டாந்தம் காட்டினோம். ஆனால் இந்தக் கேடு அவை இரண்டையும் மாத்திரமே தொட்டு நிற்கவில்லை. நமது சித்திரத் தொழில், நமது சிற்பம், நமது ஜனக்கட்டு, ஜன நீதி, நமது சாஸ்திரம், தலை, கால் எல்லாவற்றிலும் இந்தக் கேடு பாய்ந்து விட்டது. நோய் முறுற்றிப் போயிருந்தது. பராசக்தி நல்ல வேளையில் நமக்குள் உயர்ந்த வைத்தியர் பலரை அனுப்பினாள். அவளுக்கு நம்மீது கிருபை வந்து விட்டது. எனவே பிழைத்தோம். ஆனாலும் ''இம்முறை பிழைத்தது புனர்ஜன்மம்''.

இந்த புனர்ஜன்மத்தின் குறிகளை எல்லாவற்றிலம் காண்கிறோம். பாரத ஜாதி புதிதாய் விட்டது. தற்காலத்திலே பூமண்டலத்து மகாகவிகளில் நமது ரவீந்திரநாதர் ஒருவர் என்று உலகம் ஒப்புக் கொள்கிறது. இதுவரை ஐரோப்பிய பண்டிதர்கள் 'இயற்கை நூல் (ப்ரகிருதி சாஸ்திரம்) தமது விசேஷ உடைமை என்று கருதி வந்தார்கள். இப்போது நமது ஜகதீச சந்திரவஸு. இந்த வழியில் நிகரற்ற திறமை பெற்றவர் என்பதை மேல் நாட்டு வித்வான்களில் ஒப்புக் கொள்ளாதவர் யாருமில்லை. தமிழ் நாட்டிலே புதிய கவிதையும் சாஸ்திர ஒளியும் விரைவிலே தோன்றும் உலகம் பார்த்து வியப்படையும்.

செத்துப் பிழைத்தோம். ஆனால் உறுதியாக நல்ல உயிரம் போல பிழைத்து விட்டோம். புதிய ஜன்மம் நமக்கு மிகவும் அழகான ஜன்மமாக்கும்படி

தேவர்கள் அருள் புரிந்திருக்கிறார்கள். அதன் பொருட்டு அவர்களை இடைவிடாமல் வாழ்த்துகிறோம்'' என்று மகாகவி எழுதுகிறார்.

மகாகவி பாரதி யாருடைய உரை நடைக்கட்டுரைகளிலே இந்தக் கட்டுரை மிகவும் சிறந்த மிகவும் சிறப்பான கட்டுரைகளில் ஒன்றாகும்.

மகாகவி பாரதியார், ''பாரத தேசத்தின் விடுதலையைப் பற்றி சுதந்திரத்தைப் பற்றி சிந்திக்கும் போது அன்னிய ஆட்சியை அகற்றுவது பற்றி மட்டும் சிந்திக்கவில்லை. ஆயிரம் ஆண்டு கால அன்னிய ஆட்சி அன்னிய ஆதிக்கம் கொடுமைகள் காரணமாக பாரத நாட்டின் சுதந்திரம் மட்டும் பாதிக்கப்படவில்லை. அதன் பொருளாதாரம், வாணிபம், கலாச்சாரம், சுயாட்சி மட்டுமல்ல, நமது அறிவுச் செல்வம், நமது ஒழுக்கச் செல்வம், பொருட் செல்வம், நாகரிகம், பண்பாடு, கவிதை, சங்கீதம், நமது சிற்பம், கட்டிடக்கலை, ஜனக்கட்டு, ஜனநீதி நமது சாஸ்திரங்கள், நமது கல்வி முறை, நமது சிறந்த பழக்க வழக்கங்கள் வீரம், தீரம், அனைத்தும் பாதிக்கப்பட்டு நமது சமுதாயம் பலவகையான கொடிய நோய்களுக்கிரையாக்கி, நோஞ்சான நிற்கும் நிலை அனைத்தும் நீங்கி, ஒரு சக்தி மிக்க வல்லமைமிக்க ஆரோக்கியமும் அறிவாற்றல் மிக்க நாடாக வெளிப்பட வேண்டும். வளர்ச்சி பெற வேண்டும்'' என்று விரும்பினார்.

இதுவே மகாகவி பாரதியின் பரிபூரண சுதந்திரத்தின் மகா வடிவமாகும்.

பாரததேசத்தின் மகா வடிவத்தைப் பற்றிய மகாகவியின் சிந்தனையும் கருத்துக்களும் ஆயிரம் மகாலத்திற்கு மேல் பாரதத்திலும் உலகிலும் நிலைத்து நிற்கும். தழைத்து, ஓங்கும் பாரத சமுதாயத்துடன் சேர்ந்து மனித சமுதாயம் முழுவதும் உயிர்ப்பொருள்கள் அனைத்தும் நிடூழி வாழ்வதற்கான சிந்தனையாக மகாகவி பாரதியின் சிந்தனை நிலைத்து நிற்கும். இதற்கு பாரதம் லோக குருவாக அமையும் என்பது பாரதியின் சிந்தனையாகும்.

லோக குரு:

சென்ற ஜூன் மாதம் பன்னிரண்டாம் தேதி ஜப்பான் ராஜதானியான டோக்கியே நகரத்தில் ஸாம்ராஜ்ய சர்வகலாசாவை சங்கத்தாரின் முன்பு ரவீந்திரநாதன் செய்த பிரசங்கம் பூமண்டலத்தின் சரித்திரத்திலே ஒரு புதிய நெறியைக் காட்டுவது விவேகானந்தர் செய்து விட்டுப் போன தொழிலை வளர்ப்போரில் ரவீந்திரன் ஒருவர்.

விவேகானந்தர் ஆத்மாவின் பயிற்சியை மாத்திரம் நாட்டினார். ரவீந்திரர், ''உலக வாழ்க்கையும் உண்மையான கவிதையும் ஆத்ம ஞானமும் ஒே தர்மத்தில் நிற்பன என்பதை வெளிநாடுகளுக்குச் செல்லும் பொருட்டாக பாரத மாதாவினால் அனுப்பப்பட்டிருக்கிறார்.

★ பாரத தேசமே லோக குரு என்ற செய்தி ஏற்கனவே பல ஜப்பானிய

பண்டிதருக்குத் தெரியும். எனினும் நம்மவர் ஒருவர் நேரே போய் அந்தஸ்தானத்தை நிலை நிறுத்துவதற்கு இதுவரை அவகாசப் படாமலிருந்தது. வங்காளத்து மகாகவியாகிய ரவீந்திரநாத் தாகூர் போய் அந்தக் குறையைத் தீர்த்து வைத்தார். இந்தத் தொழிலுக்கு அவர் மிகவும் தகுதியுடையவர். அவருடைய கவிதையின் கீழ் பூமண்டலம் முழுவதும் ஏற்கனவே பரவியிருக்கிறது. உலகத்து மகாகவிகளின் தொகையில் அவரைச் சேர்த்தாய் விட்டது.

★ கீதாஞ்சலி முதலாக அவர் இங்கிலிஷ் பாஷையில் வழி மொழி பெயர்த்து வெளியிட்டி இருக்கும் நூல்கள் மிகவும் சிறியன. பார கவியங்களல்ல. பெரிய நாடகங்களல்ல. தனிப் பாடல்கள் சில காண்பித்தார். உலகம் வியப்படைந்தது. நல்வயிரமணிகள் பத்துப் பன்னிரண்டு விற்றால் லக்ஷக்கணக்கான பணம் சேர்ந்து விடாதோ? தெய்வீகக் கவிதையிலே பத்துப் பக்கம் காட்டினால் உலகத்துப் புலவரெல்லாம் வசப்பட மாட்டாரோ?'' என்று பாரதி குறிப்பிடுகிறார்.

★ பாரத பூமி உலகத்தாருக்கு எவ்விதமான ஞானத்தைக் கொடுத்துப் புகழைக் கொள்ளுமென்பதை விளக்குவதற்கு முன்பாக சாஸ்திரி (ஸயின்ஸ்) வார்த்தை ஓரிராண்டு சொல்லி முடித்து விடுகிறேன். செடியின் நாடி மண்டலம் மனிதனுடைய நாடி மண்டலத்தை போலவே உணர்ச்சித் தொழில் செய்கிறதென்பதை உலகத்தில் சாஸ்திரி நிரூபணத்தால் ஸ்தாபனம் செய்வதர் நமது ஜகதீச சந்திரவஸு உலோகங்களிலும் இவர் பல புதிய சோதனைகள் செய்திருக்கிறார். ஒளி நூலில் மகாவித்வான் தந்தி இல்லாத தூர பாஷைக்கருவியை மார்க்கோஜி பண்டிதர் உலகத்துக்கு வழக்கப்படுத்து முன்பே ஜகதீச சந்திரர் அந்த விஷயத்தைப் பற்றித் துல்லியமான ஆராய்ச்சிகள் செய்து முடித்திருக்கிறார்: ''செடிகளுடைய பிராணளில் நாடி உணர்ச்சி எங்ஙனமெல்லாம் தொழில் செய்கிறது என்பதைக் கண்டு பிடித்ததே இவர் மனித சாஸ்திரத்திற்கு இதுவரை செய்திருக்கும் உபகாரங்களில் பெரிது. இப்போது சில வருஷ்களாக ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் உள்ள பண்டிதக் கூடத்தார் ஜகதீச வஸுவிடம் மிகுந்த மதிப்புப் பாராட்டி வருகின்றனர். நல்ல புகழச்சி கூறுகின்றனர். நவீன சாஸ்திர ஆராய்ச்சிக்கு மிகவும் நுட்பமான கருவிகள் வேண்டும். ஜகதீச வஸுவின் ஆராய்ச்சிக்கருவிகள் கல்கத்தாவில் நமது தேசத்துத் தொழிலாளிகளாலே செய்யப்படுவன. ஐரோப்பிய ராஜதானிகளிலே இத்தனை நேர்த்தியாக அந்தக் கருவிகளைச் செய்யத்தக்க தொழிலாளிகள் இல்லை. ஆகையால் அங்குள்ள பண்டிதர்கள் புதிய வழியில் செடி ஆராய்ச்சிக்கு வேண்டிய கருவிகளையெல்லாம் கல்கத்தாவிலிருந்து வரவழைத்துக் கொள்ளுகிறார்கள்.

''சாஸ்திரம் பெரிது, சாஸ்திரம் வலியது. அஷ்டமகா சித்திகளும் சாஸ்திரத்தினால் ஒரு வேளை மனிதனுக்கு வசப்படலாம். பூர்வ காலத்தில்

பலவகை கணித சாஸ்திரங்களும் இயற்கை நூல்களும் பாரத நாட்டிலேதான் பிறந்து பின்னர் உலகத்தில் பரவியிருப்பதாகச் சரித்திர ஆராய்ச்சியிலே தெரிகிறது. இப்போது ஸயின்ஸ் பயிற்சியில் இவ்வளவு தீவிரமார்க மேன்மை பெற்று வருகிறோம். காலக்கிரமத்தில் தலைமை பெறுவோம்.

இனி மேல் கதையைச் சுருக்கிவிட வேண்டும். வருங்காலத்தில் உலகத்துக்குப் பாரதம் என்ன பாடம் கற்பிக்கும்? எதனால் இந்நாடு லோக குரு ஆகும்? உலகத்திற்கு நாம் கற்றுக் கொடுக்கப் போவது கர்ம யோகம். கடமையைச் செய்வது, தவறாத படி செய்து இன்பத்தோடு இருக்கும் வழி எப்படி? யோகமே வழி யோகமாவது செய்கை, திறமை'' என்று பகவான் கீதையிலே சொல்லுகிறார். பூமண்டலத்துக்கு யோகம் நாட்டுவோம்.

ஜனங்களே! ''உடனே சுயராஜ்ய ஸ்தாபன சபை கூட்டும்படி இரைச்சல் போடுங்கள் அழுத பிள்ளை பால் குடிக்கும்'' என்று கூறி முடிக்கிறார் மகாகவி.

பெண் விடுதலை

பெண் விடுதலை, பெண் கல்வி, பெண் சமத்துவம் பற்றியெல்லாம் மகாகவி பாரதியார் பல சிறந்த கவிதைகளை வெளியிட்டுள்ளது போலவே சிறந்த பல நல்ல கட்டுரைகளும் எழுதியுள்ளார்.

அவைகளைப் படித்தால் வேறு பல சிறந்த பல உண்மைகளும் செய்திகளும் கிடைக்கும்.

''இருபது முப்பது வருஷங்களுக்கு முன்பு பெண் கல்வி ஏற்பட்டால் மாதர் ஒழுக்கத்தில் தவறி விடுவார்கள் என்று தமிழ்நாட்டில் பலர் கூறினர். இப்போதே பெண் கல்வி தமிழ்நாட்டில் சாதாரணமாகப் பரவியிருக்கிறது. அண்டச்சுவர்கள் இன்னும் இடிந்து போகவில்லை. இதுவரை கூடிய மட்டும் பத்திரமாகவே இருந்து வருகின்றன. ஆனால் இப்பொழுது பெண்களுக்கு விடுதலை கொடுத்தால் ஏழு லோகமும் கட்டாயம் இடிந்து பூமியின் மேல் விழும் என்றும் வால் நட்சத்திர வகையறாக்களெல்லாம் நடுவிலே அகப்பட்டுத் துவையலாய்விடும் என்று பலர் நடுங்குகிறார்கள்.

''மதராஸ் மெயில்'' போன்ற ஆங்கிலேயப் பத்ராதிபரிடம் போய் இந்தியாவிற்கு சுய ராஜ்யம் கொடுத்தால் என்ன நடக்கும் என்று கேளுங்கள், ''ஓ ஹோ, ஹோ, ஹோ, இந்தியாவிற்கு சுதந்திரம் கொடுத்தால் பஞ்சாபிகள் ராஜபுத்திரரைக் கொல்வார்கள். பிறகு ராஜபுத்திரர்கள் மகாராஷ்டிரர்களின் கூட்டத்தையெல்லாம் விழுங்கிப் போடுவார்கள். அப்பால் மகாராஷ்டிரர் தெலுங்கரையும், கன்னடரையும், மலையாளிகளையும் தின்று விடுவார்கள். பிறகு மலையாளிகள் தமிழ்ப் பார்ப்பாரையும், தமிழ்ப் பார்ப்பார் திராவிடரையும் சூர்ணயமாக்கிவிடுவார்கள். சூர்ணித்த திராவிடர் வங்களிகளின் எலும்புகளை மாலையாகப் புனைவர் என்று சொல்லி

பெருமூச்சு விடுவர். அதே கேள்வியை நீதிபதி மணி அய்யர், கேசவப் பிள்ளை சிதம்பரப் பிள்ளை முதலியவர்களைப் போய்க் கேளுங்கள், ''அப்படிப் பெரிய அபாயம் ஒன்று உண்டாகாது- ஸ்வராஜ்யம் கிடைத்தால் கஷ்டம் குறையும். பஞ்சம் வந்தால் அதைப் பொறுக்கத்திறன் உண்டாகும். அகாலமானம் நீங்கும், அவ்வளவு தான்'' என்று சொல்லுவார்கள்.

அது போல் பெண்களுக்கு விடுதலை கொடுத்ததனால் ஜனசமூக குழம்பிப் போய்விடும் என்று சொல்லுவோர் பிறர் தமது கண்முன் சுயேச்சையுடன் வாழ்வதைத் தாம் பார்க்கக் கூடாதென்று அசூயையால் சொல்லுகிறார்களே ஒழிய வேறொன்றுமில்லை'' என்று எழுதுகிறார்.

இத்துடன் பெண் விடுதலை சில திட்டங்களையே பாரதி முன் வைக்கிறார்.

1) பெண்களை ருதுவாகு முன்பு விவாகம் செய்து கொடுக்கக்கூடாது.

2) அவர்களுக்கு இஷ்டமில்லாத புருஷனை விவாகம் செய்து கொள்ளும்படி வற்புறுத்தல் கூடாது.

3) விவாகம் செய்து கொண்ட பிறகு விருப்பமில்லாவிட்டால் அவள் புருஷனை விட்டு நீங்க இடம் கொடுக்கவேண்டும். அதன் பொருட்டு அவளை அவமானப்படுத்தக் கூடாது.

4) பிதுரார்ஜியத்தில் பெண் குணந்தைகளுக்கு ஸமபாகம் கொடுக்க வேண்டும்.

5) புருஷன் இறந்த பிறகு ஸ்திரி மறுபடி விவாகம் செய்து கொள்வதைத் தடுக்கக் கூடாது.

6) விவாகமே இல்லாமல் தனியாக இருந்து வியாபாரம் கைத் தொழில் முதலியவற்றால் கௌரவமாக ஜீவிக்க விரும்பும் ஸ்திரிகளை யதேச்சையான தொழில் செய்து ஜீவிக்க இடம் கொடுக்க வேண்டும்.

7) பெண்கள் கணவனைத் தவிர வேறு புருஷருடன் பேசக் கூடாதென்றும் பழகக் கூடாதென்றும் பயத்தாலும் பொறாமையாலும் ஏற்படுத்தப்பட்ட நிபந்தனையை ஒழித்துவிட வேண்டும்.

8) பெண்களுக்கும் ஆண்களைப் போலவே உயர்தரக் கல்வியின் எல்லாக் கிளைகளிலும் பழக்கம் ஏற்படுத்த வேண்டும்.

9) தகுதியுடன் அவர்கள் அரசாட்சியில் எவ்வித உத்தியோகம் பெற விரும்பினாலும் அதைச் சட்டம் தடுக்கக்கூடாது.

10) நமிழ்நாட்டில் ஆண் மக்களுக்கே ராஜரிக சுதந்திரம் இல்லாமல் இருக்கையிலே அது பெண்களுக்கு வேண்டுமென்று கூறுதல் பயனில்லை.

எனினும் சீக்கிரத்தில் தமிழுக்கு சுயராஜ்யம் கிடைத்தால் அப்போது பெண்களுக்கும் ராஜாங்க உரிமைகளிலே அவசியம் பங்கு கொடுக்க வேண்டும்.

பாரதியின் சிந்தனை இதில் மிகவும் தெளிவாகவும் துல்லியமாகவும் இருப்பதைக் காண்கிறோம். இன்றைக்கு நூறாண்டுவுகளுக்கு முன்னர் பாரதி கூறியுள்ள கருத்துக்கள் இன்று பெரும்பாலும் நிறைவேற்றிக் கொண்டிருப்பதைக் காண்கிறோம்.

அரசியலில் பாரதம் பெண் பிரதமரையும் மாநில முதல் அமைச்சர்கள் பலரையும் கண்டிருக்கிறது.

★ தமிழ்நாட்டு மாதருக்கு

தமிழ்நாட்டு மாதருக்கு என்று தலைப்பிட்டு பாரத நாட்டின் மாதர் குலத்திற்கென மகாகவி பாரதி எழுதுகிறார்.

இந்தியா தேசத்துஸ்திரிகள் இங்குள்ள ஆண் மக்களால் நன்கு மதிக்கப்படுவதற்குள்ள பல உபாயங்களில் வெளிநாட்டாரின் மதிப்பைப் பெற முயல்வதும் ஒரு உபாயமாகும். திருஷ்டாந்தமாக சில வருஷங்களுக்கு முன்பு ஐரோப்பாவிலும், அமெரிக்காவிலும், ''இந்தியா நாகரிகக் குறைவான தேசம் என்ற எண்ணம் வெகு சாதாரணமாகப் பரவியிருந்தது.

குறிப்பாகச் சில மூடப் பாதிரிமார்களும் கொள்ளை வியாபார நோக்கங்கொண்டு, நமது நாட்டைச் சுரண்டிக் கொள்ளையடிக்கும் கொள்ளைக்காரர்களும் அவ்வாறு பிரசாரம் செய்து தங்களுடைய கொள்ளையை நியாயப்படுத்திக் கொள்வதற்காக அவ்வாறு பிரசாரம் செய்த காரணத்தால் சாதாரண மக்கள் உண்மை புரிந்து கொள்ளாமல் இருந்தார்கள்.

''மேற்றிசையோர்களுக்குள்ளே சில விசேஷ பண்டிதர்கள் மட்டும் நம்முடைய வேதங்கள், உபநிடதங்கள், ஸாங்கியம் யோகம், முதலிய தர்சனங்கள் (அதாவது ஞான சாஸ்திரங்கள்) காளிதாசன் முதலிய மகாகவிகளின் காவியங்கள், ராமாயணம், பாரதம், பஞ்ச தந்திரம் முதலிய நீதி நூல்கள்- இவற்றை மூலத்திலும், மொழி பெயர்ப்புக்களின் வழியாகவும் கற்றுணர்ந்தோராய் அதலிருந்து ஹிந்துக்கள் பரம்பரையாகவே நிகரற்ற ஞானத் தெளிவும் நாகரிகமும் உடைய ஜனங்கள் என்பதை அறிந்திருந்தனர். இங்ஙனம் மேற்கு தேசங்களின் பதினைந்தாயிரம் அல்லது லட்சத்தில் ஒருவர் மாத்திரம் ஒருவாறு நமது மேன்மையை அங்கீகாரம் செய்தனர். எனினும் அந்நாடுகளிலே பொது ஜனங்களின் மனதில் ''இந்தியா தேசத்தார் ஏறக்குறைய அரை காட்டு மனிதரின் நிலையிலுள்ளோர்'' என்ற பொய்க் கொள்கையே குடி கொண்டிருந்தது.

அப்பால் சுவாமி விவேகானந்தரும் பின்னிட்டு ரவீந்திரநாத் தாகூர், ஜகதீச

சந்திர வஸு முதலிய மகான்களும் மேற்றிசையில் விஸ்தாரமான யாத்திரைகள் செய்து தம்முடைய அபார சக்திகளைக் காண்பித்த பின்னரே மேற்றிசை வாசிகளில் பலர் ''அடா'' இந்த ஹிந்துக்கள் நாகரிகத்திலம் அறிவிலும் இவ்வளவு மேம்பட்டவர்களா என்று வியப்பெய்தினர்.

தவிரவும், மேற்கத்தியார் நம்மைக் குறைவாக நினைக்கிறார்கள் என்பதை அவ்விடத்துப் பத்திரிகைகள் மூலமாகவும் புஸ்தகங்களின் மூலமாகவும் தெரிந்து கொண்டவர்களால் நமது தேசத்துக்கல்வி பெருமையால் இந்தியாவின் உண்மையான ....சியை அறியாது நின்ற இங்கிலிஷ் படிப்பாளிகளாகிய நம்மவரில் பலரும் வெளிநாட்டாரின் எண்ணத்தையே உண்மையெனக் கருதி மயங்கிவிட்டனர். காலச்சக்கரத்தின் மாறுதலால் இந்நாட்டில் அறிவுத்துறைகள் பல வற்றிலும் மேற்படி இங்கிலிஷ் படிப்பாளிகளே தலைமை வகிக்கும்படி நேர்ந்துவிட்டதினின்றும் இந்தியா தனது மாண்பை முற்றிலும் மறந்து போய் அதோ கதியில் விழுந்து விடுமோ என்று அஞ்சக்கூடிய நிலைமை அநேக மாய் ஏற்படலாயிற்று.

இப்படிப்பட்ட பயங்கரமான சமயத்தில் சுவாமி விவேகானந்தர் முதலாயினோர் தம்முடைய ஞான பராக்கிராமத்தால் மேற்றிசை நாகடுகளில் திக் விஜயம் பண்ணி மீண்டனர். இதினின்றும் இங்குள்ள இங்கிலீஷ் படித்த சுதேச தூஷணக்காரர் தமது மடமை நீங்கி ஹிந்து நாகரிகத்தில் நம்பிக்கை செலுத்துவாராயினர்.

மேற்றிசையோர் எது சொன்னாலும் அதை வேதமாகக் கருதிவிடும் இயல்பு வாய்ந்த நம்மவர் முன்பு இந்தியாவை அந்த அந்நியர் பழித்துக் கொண்டிருந்த போது தாமும் பழித்தவாறே இந்தியாவை அவர்கள் புகழத் தொடங்கிய போது தாமும் சுதேசப் புகழ்ச்சி கூறலாயினர். விவேகானந்தர் முதலானவர்கள் ஐரோப்பியர் அமெரிக்கார்களால் போற்றப்படுவதன் முன்பு அம்மஹான்களை நம்மவர் கவனிக்கவேயில்லை. அப்பெரியோர் மேற்றிசையில் வெற்றி பெற்று மீண்ட மாத்திரத்தில் வர்களை நம்மவர் தெய்வத்துக் கொப்பாக எண்ணி வந்தனை வழிபாடுகள் செய்யத்தலைப்பட்டனர். இந்த விஷயத்தை நம்முடைய மாதர்கள் நன்றாக கவனித்தறிந்து கொள்ளுதல் நன்று.

அறிவின் வலிமையே வலிமை. அறிவினால் உயர்ந்தோர்களை மற்றோர் இழிவாக நினைப்பதும் அடிமைகளாக நடத்துவதும் ஸாத்தியப்பட மாட்டா. அறிவின்மேன்மையால் வெளித்தேசங்களிலே உயர்ந்த கீர்த்தி மடைத்து மீள்வோரை அதன் பிறகு இந்த தேசத்தார் கட்டாயம் போற்றுவார்கள். சில ஹிந்து ஸ்திரீகள் வெளிநாடுகளுக்குச் சென்று உயர்ந்த கீர்த்தி சம்பாதித்துக் கொண்டு வருவார்களாயின் அதினின்றும் இங்குள்ள ஸ்திரிகளுக்கெல்லாம் மதிப்பு உயர்ந்துவிடும். இந்த விஷயத்தை ஏற்கனவே நம்முடைய மாதர் சிலர் அறிந்து வேலை செய்து வருகிறார்கள்.

வங்காளத்து பிராமண குலத்தில் பிறந்து ஐதராபாத் நாயுடு ஒருவரை மணம் புரிந்து வாழும் ஸ்ரீமத் சரோஜினி நாயுடு என்ற ஸ்திரி, இங்கிலிஷ் பாஷையில் உயர்ந்த தேர்ச்சி கொண்டு ஆங்கிலேய அறிஞர்கள் மிகவும் புகழ்ந்து போற்றும்படியாக இங்கிலிஷ் கவிதை எழுதுகிறார். இவருடைய காவியங்கள் பல இங்கிலாந்தில் அச்சிடப்பட்டு அங்குள்ளோரால் மிகவும் உயர்வாகப் பாராட்டப்படுகின்றன. மேலும் இந்த ஸ்திரி இங்கிலாந்தில் பல இடங்களிலே நமது தேசத்தின் முன்னோற்றத்தையொட்டி அற்புதமான பிரசங்கள் செய்து சிறந்த கீர்த்தி படைத்திருக்கிறார்.

இங்ஙனம் தமிழ் மாதர்களிலும் பலர் மேல்நாடுகளுக்குச் சென்று புகழ் பெற்று மீள்வாராயின் அத்னின்றும் இங்கே நம்முடைய ஸ்திரிகளுக்குள்ள மதிப்பு மிகுதிப்படும் என்பதில் சிறிதேனும் ஐயமில்லை. எவ்வாறு நோக்கிய போதிலும் தமிழ்நாட்டு மாதர் சம்பூர்ணமான விடுதலை வேண்டுவாராயின் அதற்குக் கல்வித் தோணியே கொஞ்சம் பொருந்துணையாம். எனவே கொஞ்சம் கொஞ்சம் பல துறைகளில் பயிற்சி வாய்ந்திருக்கும் தமிழ்ச் சோழர்கள் இரவு- பகலாகப் பாடுபட்டு அவ்வத்துறைகளில் நிகரற்ற தேர்ச்சி பெற முயல வேண்டும். இடைவிடாத பழக்கத்தால் தமிழ் மாதர் தமக்குள்ள இயற்கையறிவை மிகவும் உன்னத நிலைக்குக் கொணர்ந்து விடுதல் சாலவும் எளிதாம்.

ஔவையார் பிறந்து வாழ்ந்த தமிழ் நாட்டு மாதருக்கு அறிவுப் பயிற்சி கஷ்டமாகுமா? சற்றே ஊன்றிப் பாடுபடுவார்களாயின் தமிழ் மாதர் அறிவுப் பயிற்சிகளிலே நிகரற்ற சக்தி படைத்து விடுவார்கள். அறிவுத்திறத்தால் பிறகு விடுதலைக் கோட்டையைக் கைப்பற்றுதல் அதிசுலபமாய் விடும். எனவே பலவித சாஸ்திரங்கள் படித்து தேறுங்கள். தமிழ் சகோதரர்களே! அங்ஙனம் தேறியவர்களில் சிலரேனும் வெளிநாடுகளுக்குப் போய்க் கீர்த்திஸம் பாதித்துக் கொண்டு வாருங்கள். விடுதலைத் தெய்வம் உங்களைத் தழுவும் பொருட்டு இரண்டு கைகளையும் விரித்துக் கொண்டு காத்து நிற்கிறது. தமிழ் மாதர்களே! மனம் சோர்ந்து விடாதீர்கள். உங்களுக்கு நல்ல காலம் வருகிறது. வந்து விட்டது. நீங்கள் விடுதலை பெறுவீர்கள். உங்களால் உலகம் மேன்மையுறும்.

சகோதரிகளே!

தமிழ்நாட்டின் நாகரிகம் மிகவும் புராதனமானது ஒரு தேசத்தின் நாகரிகம் அல்லது அறிவு முதிர்ச்சி இன்னதன்மையுடையதென்று கண்டுபிடிக்க வேண்டுமாயின், அதைக் கண்ணாடி போல் விளக்கிக் காட்டுவது அந்த நாட்டில் வழங்கும் பாஷையிலுள்ள இலக்கியம் அல்லது காவியம் முதலிய நூல்களேயாகும். இங்கிலாந்து தேசத்தின் தற்கால இலக்கிய நூல்களை வாசித்துப் பார்த்தோமாயின் அதன் தற்கால நாகரிகத்தை ஒருவாறு அளவிடக்கூடும். எனனே தமிழ்நாட்டின் புராதன நாகரிகத்தை

அளவிட்டறிவதற்குத் தமிழ் நூல்களே தக்க அளவு கோலாகின்றன. இந்தியாவில் பெரும்பான்மையான பாஷைகள் சம்ஸ்கிருதத்தின் திரிபுளேயன்றி வேறல்ல. அங்ஙனம் திரிபுகளல்லாதனவும் சம்ஸ்கிருத கலப்புக்கு பிந்தியே மேன்மை பெற்றனவாம்.

தமிழ் பாஷைக்கோ இலக்கணம் முதல் முதலாக அகஸ்தியராலும் அவருடைய சிஷ்யராகிய கிரணதூமாக்கி (தொல்காப்பியர்) என்ற ஆரிய முனிவராலுமே சமைத்துக் கொடுக்கப்பட்ட தென்பது மெய்யே. அதனின்றும் தமிழ் இலக்கணம் பெரும்பாலும் சம்ஸ்கிருத இலக்கணத்தை அனுசரித்தே சமைக்கப்பட்டிருக்கிறதென்பதும் மெய்யே, எனினும் வட மொழி கலப்புக்கு முந்தித் தமிழுக்கு வேறு வகையான இலக்கணமிருந்து ஒரு வேளை பின்னிட்டு மறைந்திருக்கக்கூடு மென்று நினைப்பதற்கு பல ஹேதுக்களிருக்கின்றன. இஃது எவ்வாறாயினும் சம்ஸ்கிருத பாஷையின் கலப்புக்கு முன்னதாகவே தமிழ்நாட்டில் மிகவும் உயர்ந்த நாகரிகமொன்று நிலவி வந்ததென்பதற்கு அடையாளமாக தமிழில் மிக உயர்ந்த தரமுடைய பல பழைய இலக்கிய நூல்கள் காணப்படுகின்றன'' என்று மகாகவி குறிப்பிடுகிறார்.

இங்கு நாம் தமிழ் இலக்கணத்தைப் பற்றிப் பேசும் போது, ஒரு விவரத்தைக் கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டும். தமிழ் இலக்கணத்தில், 1) எழுத்து, 2) சொல், 3) பொருள், 4) யாப்பு, 5) அணி ஆகிய ஐந்து இலக்கணம் அமைந்திருக்கிறது. இது தமிழ் மொழிக்குரிய தனிச் சிறப்பாகும். வடமொழி இலக்கணத்தில் எழுது சொல், யாப்பு அணி ஆகிய நான்கு மட்டுமே உள்ளது.

இங்கு தமிழ் இலக்கணத்தின் தனித்தன்மை தெளிவாக வெளிப்படுகிறது. பொருள் இலக்கணம் தமிழ் மொழிக்குரிய தனித்தன்மையான தாகும் ஒரு மொழியின் இலக்கணம் என்பது அம்மொழியின் வளர்ச்சியை அதன் செழுமையை எடுத்துக் காட்டுகிறது. எனவே தமிழ்மொழியின் இலக்கணம் வளர்ச்சியும் செழுமையும்மிக்கது.

உழக்கும் மறை நாலினும் உயர்ந்து

உலகம் ஒதும்

வழக்கினும் மதிக்கவியினும்

மரபின் நாடி

நிழல் பொலி கணைச்சி மணி நெற்றி

உமிழ் செங்கண்

சுழல்புரை சுடர்க்கடவுள் தந்த

தமிழ் தந்தான்

என்று கம்பன் தனது இராமாவதாரக் காவியத்தில் அகத்தியரைப் பற்றிக் குறிப்பிடுகிறார்.

தமிழுக்குத் தொடக்கத்தில் அகத்தியன் இலக்கணமும் வகுத்தான் என்னும் செய்தியைக் கம்பன் இங்கு குறிப்பிடுகிறார்.

மகாகவி பாரதி மேலும் எழுதுகிறார்.

ஐரோப்பாவிலும் ஆசியாவிலும் பல இடங்களிலும் காணப்படும் நாகரிகங்களுக்கெல்லாம் முந்தியதும் பெரும்பான்மையான மூலாதாரமாக நிற்பது ஆரிய நாகரிகம் அதாவது பழைய சம்ஸ்கிருத நூல்களில் சித்திரிக்கப்பட்டு விளங்குவது- இந்த ஆரிய நாகரிகத்திற்கு சமமான பழமை கொண்டது தமிழருடைய நாகரிகம் என்று கருதுவதற்குப் பலவிதமான ஸாக்ஷியங்கள் இருக்கின்றன. ''ஆதியில் பரமசிவனால் படைப்புற்ற மூல பாஷைகள் வடமொழியென்று சொல்லப்படும் சம்ஸ்கிருதமும் தமிழுமேயாகும்'' என்று படைத் தமிழர் சொல்லியிருக்கும் வார்த்தை வெறுமே புராணக் கற்பனை அன்று ''தக்க சரித்திர ஆதாரங்களுடையது. தமிழரும் ஆரியருமல்லாத ஜனங்களைக் கடவுள் பேச்சில்லாமலே வைத்திருந்தார்'' என்று கேட்பீர்களாயின் மற்றச் சொற்களும் பல இருக்கத்தான் செய்தன. ஆனால் மனித நாகரிகத்தில் முதல் முதலாக இவ்விரண்டு பாஷைகளிலே தான் உயர்ந்த கவிதையும் இலக்கியங்களும் சாஸ்திரங்களும் ஏற்பட்டன. மற்ற பாஷைகளின் இலக்கிய நெறிகள் இவற்றுக்குப் பின்னே சமைந்தன. பல இடங்களில் இவை இயற்றின் நடையையே முன் மாதிரியாகக் கொண்டன. அதாவது ஆரியரும் தமிழருமே உலகத்தில் முதல் முதலாக உயர்ந்த நாகரிக பதவி பெற்ற இவ்விரண்டு வகுப்பினரும் மிகப் பழைய நாட்களிலேயே ஹிந்து மதம் என்ற கயிற்றால் கட்டுண்டு ஒரே கூட்டதாராகிய செய்தி பூ மண்டலத்தின் சரித்திரத்திலேயே மிக விசேஷமும் நலமும் பொருந்திய செய்திகளின் ஒன்றாக கவனத்திற்குரியது என்று பாரதி குறிப்பிடுகிறார்.

பாரதி மேலும் எழுதுகிறார்,

தமிழ்நாட்டு மாதராகிய என் அன்புக்குரிய, சகோதரிகளே! இத்தனை பழைமையும் மேன்மையும் சான்ற இரண்டு பகுதிகளின் மேன்மையும் சான்ற இரண்டு பகுதிகளின் கலப்பாகுந்தன்மையால் பாரத தேசத்திலேயே மற்ற பிற தேசங்களிலுள்ள நாகரிகத்தைக் காட்டிலும் கூட ஒருவாறு சிறப்புடையதாகக் கருதுதற்குரிய ஆர்ய திராவிட நாகரிகம் உங்களுடைய பாதுகாப்பிலிருக்கிறது.

★ இதனை மேன்மேலும் போஷித்து வளர்க்கும் கடமை உங்களைச் சேர்ந்தது. எங்ஙனம் எனில் பொதுப்படையாக நோக்குமிடத்தே மனித

நாகரிகங்கள் ஆண் மக்களின் உதவி கொண்டு பிறப்பிக்கப்படுகின்றன. அப்பால் பெரும்பாலும் பெண்களாலேயே காக்கப்படுகின்றன.

இடைக்காலத்தில் மகமதிய நாகரிகம் வந்து ஹிந்து தர்மத்தைத் தாக்கியது. ஆனால் ஹிந்து தர்மம் அதிலுள்ள முக்கிய அம்சங்களைத் தனதாக்கிக் கொண்டு அந்தத் தாக்குதலால் அழி வெய்காமல் முன்னைக்காட்டிலும் அதிக சக்தியுடன் மிஞ்சி நின்றது.

சமீப காலத்தில் ஐரோப்பிய நாகரிகம் இந்தியாவுக்கு வந்து சேர்ந்திருக்கிறது. இதுவும் நமது நாட்டு நாகரிகத்துடன் நன்றாய் கலந்து விட்டது. இனி இதன் விளைவுகளை நம் நாட்டாரின் அறிவினின்றும் நடைகளினின்றும் முற்றிலும் பிரித்துக்களைதல் சாத்தியப்படாது. இது நம்முடைய தேச ஞானத்தின் மர்மங்களுக்குள்ளே கலந்து பெரும்பாலும் நமதாய்விட்டது.

எனினும் நம்மவரிலே பல பண்டிதர்கள் பல வருஷங்களாக ''இந்த ஐரோப்பிய நாகரிகத்தை நாம் முற்றிலும் உதரித்தள்ளி விடுதல் நன்றா? அல்லது அதனை நாம் முழுமையாகவே தழுவிக் கொள்ளலாமா? அல்லது இதிலுள் நல்ல அம்சங்களை மாத்திரம் எடுத்துக் கொண்டு தீயவற்றைக் களைந்து விடலாமா? என்ற விஷங்களைக் குறித்து நீண்ட ஆலோசனைகளும் விசாரணைகளும் ஆராய்ச்சிகளும் நடத்தி வருகிறார்கள். ஆனால் இந்த ஐரோப்பிய நாகரிகமென்பது ஒரு ஸ்தூலவஸ்துவன்று- ஸ்தூலவஸ்துவாக இருந்தால் அதை நம் இஷ்டப்படி துண்டு துண்டாக வகுக்கவும் வேண்டிய அம்சங்களை எடுத்துக் கொள்ளவும் பிறவற்றை விலக்கவும் சௌகரியப்படும். மனிதர்களின் பயிற்சி இத்தகைய பொளுன்று அஃது ஸூக்ஷ்மப் பொருள் என்று பாரதியார் எழுதுகிறார்.

''சகோதரிகளே! நீங்கள் ஐரோப்பிய நாகரிகத்தின் சேர்க்கையைக் குறித்து சிறிதேனும் வருத்தப்பட வேண்டாம். அது நமது தேசத்துப் பயிற்சியை அழிக்கும் வலிமையுடையதன்று. அது நமக்குத் தணை அது நாம் அஞ்சுவதற்குரிய பிசாசன்று- வெவ்வேறு வகைப்பட்ட இரண்டு நாகரிகங்கள் வந்து கூடும் போது அவற்றுள் ஒன்று மிகவும் வலியதாகவும் இருக்குமாயின் வலியது வலிமையற்றதை இருந்த இடம் தெரியாமல் விழுங்கிவிடும். வலிமையற்ற நாகரிகத்திற்குரிய பாவையும் மகமும் முக்கியத்தன்மையற்ற புற ஆசாரங்கள் மாத்திரமேயன்றி விவாக முறை முதலிய முக்கிய ஆசாரங்களும் அழிந்து மறைகின்றன. அந்த நாகரிகத்தைக் காத்து வந்த ஜனங்கள் பலமுடைய நாகரிகஸ்தரின் பாஷை மதம் முதலியவற்றைக்கைக் கொள்கிறார்கள்.

★ பிலிப்பரோ தீவில் அமெரிக்க நாகரிகம் இவ்வகை வெற்றியடைந்திருக்கிறது. ஆனால் நம்முடைய ஹிந்து நாகரிகம் இங்ஙனம் சக்தியற்ற வஸ்துவன்று பிற நாகரிகங்களுடன் கலப்பதனால் இதற்குச் சேதம்

நேருமென்று நாம் சிறிதேனும் கவலைப்பட வேண்டிய அவசியம் இல்லை. உலகத்திலுள்ள நாகரிகங்கள் எல்லாவற்றிலும் நம்முடைய நாகரிகம் அதிக சக்தியுடையது. இது மற்றெந்த நாகரிகத்தையும் விழுங்கி ஜீரணித்துக் கொள்ளும் திறன் வாய்ந்தது. ஆதலால் ஐரோப்பிய நாகரிகத்தின் கலப்பிலிருந்து ஹிந்து தர்மம் தன் உண்மையியல்பு மாறாதிருப்பது மட்டுமேயன்றி முன்னைனைக் காட்டிலும் அதிக சக்தியும் ஒளியும் பெற்ற விளங்குகிறது. இந்த விஷயத்தை நம்முடைய மாதர்கள் நன்றாக உணர்ந்து கொண்டாவன்றி இவர்களுடைய ஸ்வதர்ம ரக்ஷணம் நன்கு நடைபெறாது.

தமிழ்நாட்டு சகோரதரிகளே!

உங்களிடம் எத்தனையோ அரிய திறமைகளும் தந்திரங்களும் உயர்ந்து இருந்த போதிலும், கல்வியின் பாவுதல் அதிகமில்லாத படியால் அவ்வப்போது வெளியுலத்தில் நிகழும் செய்திகளையும் மாறுதல்களையும் நீங்கள் அறிந்து கொண்டு அதற்குத் தக்கப்படி நடக்க இடமில்லாமல் போகிறது. ஸ்வதர்மத்தைக் காப்பாற்றுவதில் இறந்து விட்டாலும் பெரிதில்லை என்று ஸ்ரீ கிருஷ்ண பகவான் பகவத் கீதையில் சொல்லுகிறார். ஆனால் இங்ஙனம் உயிரினும் அருமையாகப் போற்றுவதற்குரிய கடமைகளும் அல்லது தர்மங்களும் அர்த்தமற்றனவும் ஸத்தில்லாதனவுமாகிய வெற்று வழக்கங்களுக்கும் பேதமில்லாமல் நீங்கள் மருட்சி கொண்டு விணே துயரம் படலாகாது'' என்று விவரித்து பல அனுபவங்களையும் எடுத்துக் காட்டிப் பேசுகிறார்.

ஔவையார் பற்றி

உலகத்திலுள்ள மாதர்களுக்கெல்லம் நீதி ஆண் மக்களாலேயே விதிக்கப்பட்டது. தமிழ்நாட்டு மாதரும் ராஜ நீதி சம்பந்தப்பட்ட சிறிதளவிலே போதுமான ஆண் சட்டத்துக்குக் கீழ் பட்டிருந்தனரேயாயினும் ஜன சமூக நீதிகளின் விஷயத்தில் தமிழ்நாட்டில் எப்போதும் பிரமாணமாக இயன்று வருவநது ஔவையின் நீதி வாக்கியங்களும் நீதி நூல்களுமேயாம். ஆண் மக்களிலே கூட உயர்ந்த கல்வி பயின்றோர் மாத்திரமே ஜன சமூக விநாயகங்களில் வள்ளுவர் குறள் நாலடியார் முதலியவற்றை பிரமாணமாகக் கூறுவர். அதிகப்படிப்பில்லாதவர்களும் படிப்பே தெரியாதவர்களுமாகிய ஜனங்கள்.ஆண், பெண் அனைவருக்கும் ஔவையாரின் நீதியே வழிகாட்டி தமிழ் ஜனங்களில் பெரும்பான்மையோருக்குச் சுமார் இரண்டாயிரம் வருஷங்களாக ஔவையாரின் நீதியே பிரமாணமாக நடைபெற்று வருகிறது.

★ சாமான்ய ஜனங்கள் ஔவை நீதியைக் கொண்டாடி வருகிறார்களெனில் கற்றோரும் அரசரும் அதைப் புறக்கணித்து வந்தார்களென்று கருதுதல் வேண்டா. கற்றோருக்கும் அரசர்க்கும் தமிழ் மக்கள் எல்லோருக்கும் குறள் நாலடியார் முதலிய நூல்களைக் காட்டிலும் ஔவையின் நூல்களில் அதிகப்பற்றுதலும் அபிமானமும் இருந்து வருகின்றன. ஆனால் இந்த நீதி

நூல்கள் இரண்டாயிரம் வருஷங்களுக்கு முன்னேயிருந்த முதல் ஔவையார் இயற்றப்பட்டன. அல்ல வென்றும் சுமார் ஆயிரம் வருஷங்களுக்கு முன்னேயிருந்த இரண்டாம் ஔவையால் செய்யப்பட்டன என்றும் ஒரு கட்சியார் சொல்லுகிறார்கள்.

ஔவையார் வெறுமே நூலாசிரியர் மட்டுமல்லர். அவர் காலத்திலேயே அவர் ராஜ நீதியில் மிகவுளம் வல்லவரென்று தமிழ் நாட்டு மன்னர்களால் நன்கு மதிக்கப் பெற்று ராஜாங்க தூரில் நியமனம் பெற்றிருக்கிறார். மேலும் அவர் சிறந்த ஆத்மஞானி யோக சித்தியால் உடம்மை, முதுமை, நோவு, சாவுகளுக்கிரையாகாமல் நெடுங்காலம் காப்பாற்றி வந்தார்.

''மதாசற்ற கொள்கை மனத்து

அமைந்தக்கால்

ஈசனைக்காட்டு முடம்பு''

அதாவது இருதயத்தில் சுத்தமான பயமற்ற, கபடமற்ற, குற்றமற்ற, பகைமையற்ற எண்ணங்களை நிறுத்திக் கொண்டால் உடம்பின் தெய்வத்தன்மை. அதாவது சாகாத்தன்மை (அமரத்தன்மை) விளங்கும் என்றும் பொருள்படுவது இந்தக் குறள் பாடியவர் ஔவையார். இவர் தாமே நெடுந்தூரம் இக்கொள்கைப்படி ஒடுகியரென்பது இவருடைய சரித்திரத்தில் விளங்குகிறது.

ஒரு தேசத்தின் நாகரிகத்துக்கு அந்த தேசத்தின் இலக்கியமே மேலான அடையாளமென்று முந்திய வியாசத்தில் சொன்னேன். திருஷ்டாந்தமாக ஆங்கிலேய நாகரிகத்திற்கு 'ஷேக்ஷ்பியர்' முதலிய மகாகவிகளின் நூல்களே அளவுக்கருவியாகக் கருதப்படுகின்றன. ''நாங்கள் இந்தியா தேசத்து ராஜ்யாதி காரத்தை இழக்க ஒருப்பட்டாலும் ஒருப்படுமோ மேலன்றி ஷேக்ஸ்பியரை இழக்க ஒரு நாளும் ஒருபட மாட்டோம்'' என்று நாம் மறுமொழி சொல்வோமென்று ''மெக்காலே'' என்றும் ஆங்கிலேய ஆசிரியர் சொல்லுகிறார்.

இந்த மாதிரியாகப் பெருமைப்படுத்தி நம்மவர் கம்பனைச் சொல்லலாம். திருவள்ளுவரைச் சொல்லலாம். சிலப்பதிகாரம் இயற்றிய இளங்கோவடிகளைக் கூறலாம். இன்னும் பல புலவர்களைக் காட்டலாம். எனினும் கம்பர், திருவள்ளுவர் முதலிய பெரும்புலவராலேயே தம்மனைவரிலும் மிகச் சிறந்தவராகக் கருதப்பட ஔவைப்பிராட்டியையே மிகவும் விசேஷமாக எடுத்துச் செல்லக்கூடும். தமிழ்நாட்டின் மற்றச் செல்ங்களையெல்லாம் இழந்து விடப் பிரியமா? என்று நம்மிடம் யாரேனும் கேட்பார்களாயின், ''மற்றச் செல்வங்களையெல்லாம் பறிகொடுக்க நேர்ந்தாலும் பெரிதில்லை. அவற்றைத் தமிழ்நாடு மீட்டும் சமைத்துக் கொள்ளவல்லது, ஔவைப்பிராட்டியின் நூல்களை இழக்க ஒரு போதும்

சம்பந்தப்பட மாட்டோம். அது மீண்டும் எனைத்தும் கொள்ள முடியாத தனிப்பெருஞ்செல்வம்'' என்று நாம் மறுபடியும் உலகுக்குக் கடமைப்பட்டிருக்கிறோம். தமிழ்நாட்டு நாகரிகத்திற்கு இந்தனை பெரும் செல்வமாகவும் இத்தனை ஒளி சான்ற வாழ்வு விளக்கமாகவும் தனிப்போடையாளமாகவும் தமிழ் மாதெளாருத்தியின் நூல்கள் விளங்குவதை நமது நாட்டு ஸ்திரிகளுக்குப் பெரு மகிழ்ச்சி தருந்தக்கதொரு செய்தியன்றோ? இஃது தமிழ் ஸ்திரிகளுக்கு வெறுமே புகழ்விளைவிப்பது மாத்திரமன்று அவர்களுக்கு கிரமமான காவலுமாகும் ஔவையாற் பிறந்த நாட்டு மாதரை ஔவையார் இனது மாதரை ஆண் மக்களைக் காட்டிலும் அறிவில் சிலசமயங்களில் கூட்டத்தாரென்று வாய்கூசாமல் எவனும் சொல்ல மாட்டான் என்று தமிழ்நாட்டு மாதரைப் பெருமைப்படுத்தி பாரதியார் பேசுகிறார்.

★ மகாகவி பாரதியார், தெய்வப் புலவர் ஔவைப்பிராட்டியாரைப் பற்றி மேலும் விரிவாகப் பெருமையாகப் பேசுகிறார்.

மகிமை பெருந்திய ஆத்ம ஞானியாகிய ஔவையார் இயற்றியிருக்கும் ''ஔவைக்குறள்'' என்ற ஞான நூல் தமிழ்நாட்டு யோகிகளாலும் சித்தர்களாலும் உப நிஷத்துக்களுக்கு மச்சமானமாகப் போற்றப்பட்டு வந்திருக்கிறது. யோக சாஸ்திரத்துக்கும் மோக்ஷ சாஸ்திரத்துக்கும் இந்நூல் முக்கிய பாடங்களில் ஒன்றாகக் கருதத்தக்கது. மேலும் யோகானுபூதி சம்மந்தமாகப் பிறர் எழுதுமிடத்தே மிகவும் கடினமும் அசாதாரணமாகிய சொற்களையும் வாக்கியங்களையும் வழங்குதல் இன்றியமையாதென்ற கருத்துடன் வேலை செய்கிறார்கள். ஔவையின் நூலோ மிகத் தெளிந்த மிக எளிய தமிழ்நடையில் எல்லா ஜனங்களுக்கும் பொருளுள் விளங்கும்படியாக எழுதப்பட்டிருக்கிறது. ''சுருங்கச் சொல்லி விளங்க வைத்தல்'' என்பது கவிதைத் தொழிலில் மிகவும் உயர்ந்த தொழில் இதில் ஔவை ஒப்பற்றவள் இத்துடன் மிகவும் அருமையான நுட்பமான விஷயங்களை யாவருக்கும் அர்த்தமாகும்படி மிகவும் எளிய நடையில் சொல்வதாகிய அற்புத்த தொழிலை உயர்ந்த கவியரசர்களே தெய்வீகத் தொழில் என்றும் தெய்வ சக்தி பெறாத சாதாரணக் கவிகளுக்கு சாத்யப்படாத தொழில் என்றும் கருதுகிறார்கள். அந்த அற்புதத் தொழிலிலும் ஔவை நிகரற்ற திறமை வாய்ந்தவள்.

மகாகவி மேலும் எழுதுகிறார்,

''புரஷார்த்தங்கள், அதாவது மாநில ஜன்மம் எடுத்ததனின்றும் ஒருவன் அடையக்கூடிய மிக உயர்ந்த பயன்களாகிய அறம், பொருள், இன்பம், வீடு என்ற நான்கில் வீடு என்று சொல்லப்படும் முக்தி வாக்குக்கும் மனத்துக்கும் எட்டாத தாகையால், அதனை விரித்துக்கூற முயலாமல் அதற்கு சாதாரணமாகிய தெய்வ பக்தியை மாத்திரம் முதல் அத்தியாயத்தில் கூறி நிறுத்திவிட்டு மற்ற மூன்று புருஷார்த்தங்களையும் விளக்கிக் திருவள்ளுவ

நாயனார் ''முப்பால்'' (மூன்று பகுதிகளுடையது) என்ற பெயருடைய திருக்குறள் செய்தருளினார். ஆயிரத்து முன்னூற்று முப்பது சிறிய குறட்பாக்களில் நாயனார் அரம், பொருள், இன்பம் என்ற முப்பாவையும் அடக்கிப்பாடுவது மிகவும் அபூர்வமான செய்கை என்று கருதப்பட்டது. இது கண்ட ஔவைப்பிராட்டி வீட்டுப் பாடலையும் கூட்டி நான்கு வெண்பாவுக்குள் அடக்கிப்பாடினார். இந்த ஆச்சரியமான கவண்பா பின் வருமாறு:

''ஈதலறம் தீவினை விட்டீட்டல் டொருள், - எஞ்ஞான்றும்

காதலிருவர் சுகத்தொழு மிகி - தாதரவு

பட்டதோ இன்பம், பானை நினைந்திடும் மூன்றும்

விட்டதே பேரின்ப வீடு''.

இவ்வெண்பாவின் கருத்து யாதொழில் ஈதலாவது ''அருள் செய்தல் அல்லது கொடுத்தல் என்று பொருள் படும். அதாவது உலகத்தாருக்கு பயன்படும் வண்ணமாக நம் உடல் பொருள் ஆவி மூன்றையும் தத்தம் பண்ணிவிடுதல்; நமது பொருளாலும் வாக்காலும்'' மனத்தாலும் உடற் செய்கையாலும் பிறருடைய கஷ்டங்களை நீக்கி அவர்களுக்கினியன செய்தல், பொருள் கொடுப்பது மாத்திரமே ஈகையென்று பலர் தவறாகப் பொருள் கொள்ளுகறிர்கள். பிறர் பொருட்டாக நம் உயிரைக் கொடுத்தல் கொடையன்றோ? வைத்தியம் முதலிய சிகிச்சைகளால் பிறருக்குப் பிராண தானம் செய்தல் ஈகையன்றோ? பொருள் முதலிய நலங்களை யெல்லாம் ஒருவன் தனக்குத் தானே சேகரித்துக் கொள்ளக்கூடிய திறமை அவனுக்கு ஏற்படும்படி அவனுக்கு கல்வி பயிற்றுதல் தானமாகாதோ''.

எனவே கைம்மாறு கருதாமல் பிறருக்கு எவ்விதத்திலேனும் செய்யப்படும் பிறருக்கு எவ்விதத்திலேனும் செய்யப்படும் கஷ்ட நிவாரணங்களும் அனுகூலச் செய்கைகளும் ஈகை எனப்படும். இதுவே மனிதனுக்கு இவ்வுலகத்தில் அறம் அல்லது தர்மம் அல்லது கடமையாம். இனித்தீய செயல்கள் செய்யாதபடி எவ்வகைப்பட்ட அறிவு பயிற்சியாலேனும் சரிர முயற்சியாலேனும் சேகரிக்கப்படும் உணவு துணி, முதலிய அவசியப் பண்டங்களும் குதிரை வண்டிகள், ஆபரணங்கள், வாத்தியங்கள் பதுமைகள் முதலிய சௌக்ய வஸ்துக்களும், இவைகளை அனுபவிப்பதற்குச் சாதனங்களாகிய வீடு, தோட்டம் முதலியனவும் இப்பண்டங்களுக்கெல்லாம் பொதுக்குறியீடும் பிரதியுமாக மனிதரால் ஏற்படுத்திக் கொள்ளப்பட்டிருக்கும் பொற்காசு, வெள்ளிக்காசு, காயிதப்பணம் முதலியனவும் செல்வம் அல்லது அர்த்தம் எனப்படும். நற்செயல்களாலே சேர்க்கப்படம் பொருளே இன்பத்தைத் தருவதாகையாலும், தீச் செயல்கள் செய்து சேர்க்கும் பொருளு் பலவிதத்

துன்பங்களுக்கு ஹேது வாய்விடுமாகையாலும் தீ வினைகள் விட்டுச் சேர்ப்பதே பொருள் என்னும் பெயருக்குரிய தென்று ம் தீவினைகளாலே சேர்ப்பது துன்பக்களஞ்சியமே ஆகுமென்றும் ஔவையார் குறிப்பிட்டுள்ளார் என்று மகாகவி விவரித்துக் கூறுகிறார்.

இனி இன்பத்துக்கு ஔவையார் கூறும் இலக்கணமோ நிகரற்ற பண்புடையது. காதல் இன்பத்தையே முன்னோர் இன்பமென்று சிறப்பித்துக் கணக்கிட்டனர். பொருளை சேர்ப்பதிலும் அறிக்கை செய்வதிலும் தனித்தனியே பல வகையான சிறிய சிறிய இன்பங்கள் தோன்றும். ஆயினும் இவை காதல் இன்பத்துக்குத் துணைக் கருவிகளாவது பற்றியே ஒருவாறு இன்பங்களென்று கூறித்தக்கனவாம். உலகத்தில் மனிதர் ருசியான பதார்த்தங்களை உண்டல், நல்ல பாட்டுக்கேட்டல் நல்ல மலர்களை முகர்தல் முதலில் இந்திரிய இன்பங்களை விரும்பி அவற்றினை அடையும் பொருட்டு மிகவும் பாடுபடுகிறார்கள். அதிகார இன்பம் புகழின்பம் முதலில் எண்ண நிற வேறு பல இன்பங்களுக்காகவும் உழைக்கிறார்கள்.

ஆனால் இவையெல்லாம் அற்பமான இனங்களென்று கருதி முன்னோர் இவற்றை இன்பப்பாலிலே சேர்க்க வில்லை. புகழதிகாரம் முதலியவற்றை அறத்துப்பாலிலும் பொருட்பாலிலும் சார்ந்தனவாகக் கணிக்கிறார்கள். இந்திரிய இன்பங்களுக்குள்ளே இனிய பக்ஷணங்களையும் கனிகளையும் உண்டல், மலர்களை முகர்தல் முதலியன மிகவும் எளிதிலே தெவிட்டக்கூடியனவும் வெறுமே சரீர சுகமாத்திரமின்றி ஆத்ம சுகத்துக்கு அதிக உபகாரமில்லாதனவுமாதல் பற்றி அவற்றையும் இன்பப் பாலிலே சேர்க்கவில்லை.

''கண்டு கேட்டு உண்டு உயிர்த்துற்றறியும்

இவ்வைந்தும் ஒண்டோடிக் கண்ணே உள'' என்று

''கண்டல், கேட்டல், உண்டல், மோப்பு, தீண்டுதல் என்ற ஐவகை இந்திரியங்களையும் ஒருங்கே இன்புறுத்தும் இயல்பு ஒளி பொருந்திய வளையணிந்த இப்பெண்ணிடத்தே தானுள்ளது'' என்பது அக்குறளின் பொருள். இதனுடன் உயிருக்கும் மனத்துக்கும் ஆத்மாவுக்கும் சேர இன்ப மனிப்பதனால் காதலின்பம் இவ்வுலக இன்பங்களனைத்திலும் தலைமைப்பட்டதாயிற்று. ஆதலால் நான்கு புருஷார்த்தங்கள்- அதாவது மனிதப்பிறவி எடுத்ததனால் ஒருவன் எய்தக்கூடிய பெரும்பயன்களைக் கணக்கிடப் புகுந்தவிடத்து நம் முன்னோர் காதலன் பத்தையே இன்பமென்னும் பொதுப் பெயரால் சொல்லியிருக்கிறார்கள். இங்ஙனம் இன்பமென்ற பொதுப் பெயரால் சிறப்பித்துக் கூறத்தக்க பெருஞ்சுவைத் தனியின்பம் மனிதனுக்குக் காதலின்பமே யாகுமென்பதையும் அவ்வின்பத்தை தவறு தலின்றி நுகர்தற்குரிய வழியின்னதென்பதையும் ஔவைப் பிராட்டியார் சால இனிய தமிழ்ச் சொற்களிலே காட்டி அருள்

புரிந்திருக்கிறார்.

ஒருவன் ஒருத்தியிடத்திலும் ஒருத்தி ஒருவனிடத்திலும் மனத்தாலும் வாக்காலும் செய்கையாலும் கற்பு நெறி தவறாமல் நித்தியப் பற்றுதலுடையோராய் மன ஒருமையெய்தித் தம்முள் ஆதரவுற்றுத்துய்க்கும் இன்பமே இன்பமெனத்தகும் என்று ஔவையார் கூறுகிறார்.

இனி முக்தியாவது யாதெனில், கடவுளை உள்ளத்திலிருத்தி தானென்ற கொள்கையை மாற்றி ஈசபோதத்தை எய்தி மேற்கூறிய மூன்று புருஷார்த்தங்களிலும் பொறுப்பு இங்கியிருப்பதே முக்தி. இந்த முக்தி பெறுவதனால் ஒருவன் மற்ற மூன்று புருஷார்த்தங்களிலும் எவ்விதமான சம்மந்தமும் இல்லாமலே செய்கையற்று மடிந்து கிடப்பனனென்றெண்ணுதல் பெருந்தவறு. உயிருள்ள வரை ஒருவன் தொழில் செய்யாதிருக்கக் கடவுளுடைய இயற்கை இடங்கொடாது ''யாவனாயினும் (மனத்தாலேனும், வாக்கா லேனும் உடம்பாலேனும்) யாதேனுமொருவிதமான செய்கை செய்து கொண்டிராமல் சும்மாயிருத்தல் ஒரு க்ஷணம்கூட சாத்தியப்படாது. இயற்கையிலேயே பிறக்கும் குணங்களால் ஒவ்வொருவனும் தன் வசமின்றியே எப்போதும் தொழில் செய்து கொண்டிருக்கும்படி வற்புறுத்தப்படுகிறான் என்று கண்ணபிரான் பகவத் கீதையில் திருவாய் மலர்ந்தருளியிருக்கிறார்.

இன்னும் ஔவைப்பிராட்டியின் நூல்களிலுள்ள வசனங்களை உதாரணம் காட்டி அவருடைய மகிமைகளையெல்லாம் விளக்கிக் கூற வேண்டுமாயின் அதற்கு எத்தனையோ சுவடிகள் எழுதியாக வேண்டும். நமது வியாசமோ ஏற்கனவே மிகவும் நெடிதாய் விட்டது. ஆதலால் இந்தக் கவியாசியைக் குறித்து தற்காலத்தினர் தெரிந்து கொள்ள வேண்டிய அம்சங்களில் மிகவும் முக்கியமாக எனக்குத் தோன்றுவனவற்றை மற்றொரு வியாசத்தில் சுருக்கமாகச் சொல்ல உத்தேசம் கொண்டிருக்கிறேன் என்று மகாகவி குறிப்பிடுகிறார்.

★ தமிழ்நாட்டு மாதராகிய என் அன்புக்கும் வணக்கத்துக்குரிய சகோதரர்களே இத்தனை பெருமை வாய்ந்த தமிழ் நாகரிகத்தின் எதிர்கால வாழ்வு உங்களுடைய பயிற்சிகளையும் முயற்சிகளையும் பொருத்திருக்கிறது. பூமண்டலத்தில் நிகரில்லாத அருஞ்செல்வமுடைய பாரதநாடு ஒன்றுக்குக் கடவுள் உங்களை காவலாக நியமித்திருக்கிறான். மனித சமூகமோ இந்த நேரத்தில் பிரம்மாண்டமான சண்ட மாருதங்களைப் போன்ற பொறாமைகளாலும் கிளர்ச்சிகளாலும் புரட்சிகளாலும் கொந்தளிப்புள்ள கடலிலை பட்ட தொரு சிறுதோணி போல அலைப்புண்டும் புள்ளுண்டும் பாறையுண்டும் எற்றுண்டும் சுழற்றுண்டும் தத்தளிக்கிறது. இந்த மகாபிரளய காலத்தில் தமிழ் நாகரிகம் சிதறிப் போகாதிருக்கும்படி கடவுள் அருள் புரியவேண்டுக. அஃது அங்ஙனம் சிதறாமலிருக்குமாறு தகுந்த கல்விப்

பெருமையாலும் ஒழுக்க மேன்மையாலும் விடுதலையின் சக்தியினாலும் அதைக் காப்பாற்றக்கூடிய திறமையை உங்களுக்குப் பரப்பிரம்மம் அருள் செய்க'' என்று மகாகவி எழுதி முடிக்கிறார்.

இந்த வார்த்தைகளிலிருந்து ஔவைப்பிராட்டியின் பெருமைகளையும் பெண்ணினத்தின் பெருமைகளையும் மகாகவி பாரதி எவ்வளவு உயர்த்தி பேசுகிறார் என்பதைக் காண முடிகிறது. மகாகவி பாரதி, பெண்ணினத்தைப் பற்றிப் பல இடங்களிலும் பெருமைப்படுத்திப் பேசுவதைக் காண்கிறோம்.

கதைகள்

★ மகாகவி பாரதியாரின் உரைநடையில் கதைகளும் ஒரு பகுதியாகும். அவருடைய கதைகளும் கற்பனைகளும் வர்ணனைகளும் அற்புதமானவைகளாகும் சிந்திக்கத்தக்கனவாகும்.

ரெயில்வே ஸ்தானம் என்னும் ஒரு கதை பாரதி எழுதியிருக்கிறார். அதன் வர்ணனை அற்புதமாக உள்ளது. அத்துடன் அக்கதையில் ஒரு முக்கியமான கருத்தை முன்வைத்திருக்கிறார். அது மிகவும் சிந்திக்கத்தக்கதாகும். இன்றைய நிலைமைக்கு அக்கருத்து மிகவும் பொருத்தமானதும் சிந்திக்கத்க்கதுமாகும்.

கதையின் ஆரம்பம் அதன் வர்ணனை

வஸந்த காலம் காலை நேரம். தென்காசி ஸ்டேஷன் இது பிரிட்டிஷ் இந்தியாவைச் சேர்ந்தது. இதற்கு மேற்கேயுள்ள அடுத்த ஸ்டேஷன் செங்கோட்டை. அது திருவாங்கூர் சமஸ்தானத்தைச் சேர்ந்தது. தெற்கே இரண்டு மைல் தூரத்தில் மிகக் கீர்த்தி பெற்ற குற்றத்தருவி வருகிறது பக்கமெல்லாம் மலையகரி சாரல் கொஞ்சம் மேற்கே போனால் செங்கோட்டை ஸ்டேஷன் முதல் திருவனந்தபுரம் வரை பாதையிலே பத்து ஸ்டேஷன் மட்டும் இரண்டு பக்கங்களிலும் செங்குத்தான மலைகளும் ஆழமான பள்ளங்களும் மலையை உடைத்து ரயில் வண்டி ஊடுருவிச் செல்லும் பொருட்டாக ஏற்படுத்தப்பட்ட நீண்ட மலைப் புழைகளும் இருபாரிசத்திலும் இயற்கையாய் பச்சை உடுத்து, சால மிகப் பெருஞ்செழிப்புடனே களி கொண்டு நிற்கும் பலவகைப்பட்ட வனக்காக்ஷிகளும் ஒரு முறை பார்த்தால் பிறகு எக்காலத்திலும் மறக்க முடியாதன.

இது மகாகவி பாரதி இயற்கையைப் பற்றிக் கூறும் அற்புதமான வர்ணனையாகும். மேலும் எழுதுகிறார்,

''இந்தத் தென்காசி ஸ்டேஷன் வெளி முற்றத்தில் காலை நேரத்திலே திருநெல்வேலிப் பக்கம் கிழக்கே போகும் ரயில் வரப் போகிற சமயத்தில் சுமார் நூறு பிரயாணிகள் வந்து கூடியிருக்கிறார்கள்.

இவர்களிலே சிலர் பிராமண நவதீகர் நீர்க்காவி அழுக்கு நிறமாக ஏறிப்

போன மிகப் பழைய வெள்ளைத் துணி உடுத்து உடல் வேர்க்க உட்கார்ந்து கொண்டு, இன்ன ஊரில் இன்ன தேதி, இன்னாருக்கு சீமந்தம் என்ற விஷயங்களைப் பற்றிச் சம்பாஷணை செய்து கொண்டிருக்கிறார்கள்.

பிராமண விதவைகள் பலர் ஒரு புறத்திலேயிருந்து கொண்டு தமக்குள் ஏதோ பேசிக் கொண்டிருக்கிறாரகள். சுமங்கலிப் பிராமணத்திகள் ஒரு பக்கத்தில் தலை குனிந்து நின்று கொண்டு போவோர் வருவோரை கடைக்கண்ணால் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். வேறு சில உத்தயோகஸ்தர் தலைப்பாதை, கோட்டு, கொடியரச் சங்கிலி சகிதமாக உலாவுகிறார்கள். சில போலீஸ்காரர்கள் சக்கரவர்த்திகளைப் போலத்தலை நிமிர்ந்து நடக்கிறார்கள். சில முகமதிய ஸ்திரீகள் முட்டாக்கு போட்டுத்தலையையும் முகத்தையும் மூடிக் கொண்டு திசைக் கொருத்தியாகப் பார்த்து உட்கார்ந்து கொண்டிருக்கிறார்கள்.

வெற்றிலை, பாக்கு, புகையிலை, சுருட்டு, பீடி, பொடிப்பட்டை, முறுக்கு, தேங்குழல், சுசியன், காப்பி முதலியன வியாபாரம் செய்யும் ஓரிரண்டு பிராமணர்களும் சூத்திதரும் பகற்கொள்ளை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். அதாவது காசு பெறாத சாமானர்களுக்கு மும்மடங்கு நான்மடங்கு விலை வைத்த விற்றுக் கொண்டிருக்கிறார்கள்'' என்று வேடிக்கையும் உண்மையும் கலந்த ஒரு இயற்கைக் காட்சியை சமூகக் காட்சியை, ஒரு அரசியல் காட்சியை, ரயில் நிலையத்தின் சிறு வியாபாரக் காட்சியை ஒரு முகமதியப் பெண்கள் காட்சியை மிக அற்புதமாக சிறிய சொற்களில் எளிய தமிழ் வழக்கில் எடுத்துக்கூறுகிறார்.

இனி ஒரு முகமதிய கனவாறுடைய சிறிய வரலாறு தொடங்குகிறது. அவருடைய சிறிய வரலாற்றை மகாகவி பாரதியார் மிக அற்புதமாக எடுத்துக் கூறுகிறார்.

இக்கதைத் தொடரில் மகாகவி பாரதியார், பெண்களின் சம உரிமைப் பிரச்சினையை மனதிற் கொண்டே பல கருத்துக்களையும் வெளிப்படுத்து கிறார் என்று தெரிகிறது.

''மத விஷயங்களை அதாவது அல்லாவிடம் செலுத்த வேண்டிய பக்தி முதலில் விஷயங்களைத்தவி, விவாகம் ஸ்திரிகளை நடத்த வேண்டிய மாதிரி. முதலிய ஜன சமூகத்தின் ஆசார நியமங்களில் காலத்திற்குத் தக்கப்படி புதிய மாறுதல்கள் செய்து கொள்ளலாம் என்பது மகாகவியின் கருத்தாகத் தெரிகிறது.

பல முஸ்லிம் நண்பர்களிடமும் ஆசார விவரங்களைக் காலதேச வர்த்தமானங்களுக்குப் பொந்தும்படி மாற்றலாம். மாற்றிக் கொள்ளலாம் என்னும் கருத்தை பலரும் ஏற்றுக் கொள்ளலாம் என்பதே மகாகவி பாரதியாரின் கருத்தாகத் தெரிகிறது.

மேலும் மகாகவி பாரதியார் எழுதுகிறார். ''ப்பால் நான் என் முஸ்லிம் நண்பரை நோக்கி ''தென் ஜில்லாக்களிலே தமிழ் பேசும் முஸ்லிம் (ராவுத்தர்)களுக்குள்ளே கோஷா வழக்கம் காணப்படவில்லையே அதன் காரணம் யாது'' என்று கேட்டன். இங்கும் சிலர் அந்த வழக்கத்தைப் பரிபாலிக்கத்தான் செய்கிறார்கள்'' என்று என் முஸ்லிம் நண்பர் சொன்னார்.

''எனினும், பலர் அதைப் பரிபாலிக்க வில்லையே, அதன் முகாந்திரம் யாது?'' என்று கேட்டேன்.

வேத சாஸ்திரவிதிகளில் அவர் செலுத்தக்கடமைப்பட்ட அளவு பயபக்தி செலுத்தாமலிருப்பதே அதற்கு முகாந்திரம் என்று என் முஸ்லிம் நண்பர் தெரிவித்தார்.

''அப்படியிருந்தும் தென் ஜில்லாக்களிலுள்ள இந்த முஸ்லிம்கள் மற்றப் பக்கத்து முஸ்லிம்களைக் காட்டிலும் அல்லாவின் பக்தியிலும் மதப்பற்றுதலிலும் சிறதேனும் குறைந்தவர்களில்லை என்பது பிரத்யக்ஷ மன்றோ'' அங்ஙனமாக இவர்கள் கொரான் விதிகளில் போதிய அளவு பயபக்தி செலுத்தாமல் இருக்கிறார்கள் என்று சொல்லுதல் நியாயமன்று இந்த கோஷா விஷயத்தில் பாத்திரம் இந்தத் தேச சம்பிரதாயங்களைத் தழுவி நடகிகறார்கள். இவர்களுடைய கூட்டத்தில் எத்தனை ஞானிகளும் பக்தி மான்களும் அவதாரம் செய்திருக்கிறாரகள். அவர்கள் இந்த கோஷா விஷயத்தைஇக்கூட்டத்தின் மீது வற்புறுத்தாமல் தான் இருந்திருக்கிறார். ஆதலால் மத பக்தி முதலிய விஷயங்கள் மாறுதல் கூடாதேயொழிய ஆசாரங்களில் காலத்துக்குத் தகுந்த இடத்துக்குத் தகுந்தமாறுதல்கள் செய்து கொள்ள இஸ்லாம் சாஸ்திரங்களே அனுமதி தரக்கூடுமென்று நினைக்கிறேன்' என்ற நான் சொன்னேன்.

இது கேட்டு அதை முஸ்லிம் நண்பர் மீளவும் ''நான் நன்றாகக் குரான் ஓதியவர்களை விசாரித்து இந்த விஷயத்தில் முடிவு சொய்கிறேன்'' என்றார். இடைகாலத்து சாஸ்திரங்கள் இந்த விஷயத்தில் அதிக முரண் செலுத்தக் கூடும். ஆதலால் சாட்சாதி குரான் வேதத்தையே நன்றாகப் படித்து உணர்ந்தவர்களிடம் விசாரணை செய்யுங்கள் என்றேன்.

''சரி அங்ஙனமே செய்கிறேன் என்று என் முஸ்லிம் நண்பர் சொன்னார்.

பிறகு துருக்கி தேசத்தில் ஸ்திரிகளுக்குள்ளே பிரமாண்டமான விடுதலை கிளர்ச்சி நடந்து வருவதைப் பற்றியும் அங்குப் பல மாதர்கள் கோஷா வழக்கத்தை முற்றிலும் ஒழித்து விட்டு கல்வி கேள்விகளில் உயர்ந்த தேர்ச்சியுடையோராய் தங்களுக்குள்ளே சபைகள் சேர்த்தும் தாங்களே உபந்நியாசங்கள் முதலியன நடத்தியும் உலகத்து மற்ற மாதங்களைப் போல் துருக்கியுள்ள மாதரும் கல்வி, விடுதலை, ஆண்களுடன் சமத்தும் இவற்றை எய்தி மேன்படுமாறு அதி தீவிரமான முயற்சிகள் செய்து வருவதைப்

பற்றியும் நான்கு வகை வாய்ப்பாடுகள் பயன்படுமென்'' என்று மகாகவி பாரதி தனது கட்டுரையில் குறிப்பிடுகிறார்.

★ மகாகவி பாரதியார், பெண்கள் விடுதலை, ஆண், பெண், சமத்துவம் என்னும் கொள்கைகளில் மிக உறுதியாக இருந்தார். இதில் மத சம்பிரதாயங்கள் மத ஆசாரங்கள் குறுக்கே நிற்க வேண்டிய அவசியமில்லை என்பதை மகாகவி மிகவும் சிறப்பாகவும் நுட்பமாகவும் எடுத்துக் கூறுவதைக் காண்கிறோம். இதில் மகாகவி பாரதி தென் இந்தியாவையும் துருக்கியையும் உதாரணம் காட்டியிருப்பது சிறப்பாகும்.

விவாகக்கட்டு

நவீன ருஷ்யாவில் விவாக விதிகள் என்னும் தலைப்பில் அந்த விவாக விதிகளைப் பொதுவாக வரவேற்கிறார். அதே சமயத்தில் அவர்கள் காட்டும் நெறிகளை முற்றிலும் கைப்பற்றிக் கொள்ளுதல் அவசியமில்லை. திருஷ்டாந்தமாக நாம் குழந்தைகளைக் குடும்ப சம்ரக்ஷணையினினும் பிரித்து ராஜாங்க ஸம்ரக்ஷணையில் விட வேண்டியதில்லை. பெண்கள் 14 வயதுக்குள்ளும் ஆண்கள் 18 வயதுக்குள்ளும் விவாகம் பண்ணித்தீர வேண்டுமென்று நிர்ப்பந்தம் படுத்தவேண்டிய அவசியமில்லை. விவாகரத்தை ரத்து செய்யும் விஷயத்தில் அவசரப்பட வேண்டியதில்லை. பொறுமையை உபயோகப்படுத்தி விவாகக் கட்டை நிரந்தரமாகப் பாதுகாப்பதே மனித நாகரிகத்தின் சிறப்பாதலால் நாம் அதற்குரிய ஏற்பாடு செய்வோம்'' என்றும் மகாகவி குறிப்பிடுகிறார்.

பாரத நாட்டின் நாகரிகத்தில் குடும்பமும் குடும்ப அமைப்பும் புனிதமானது. அதன் வரலாறும் கூட்டமைப்பும் தனித்தன்மையான தாகும். .அதை பாரதி பல இடங்களிலும் எடுத்துக்கூறுகிறார். அதைத்தனியாக பார்ப்போம்.

கலைகள்

மகாகவி பாரதி கிருதயுகத்தை அழைத்து எழுதுகிறார்.

இன்று தேவர்களை அழைக்கிறோம்.

இந்த மண்ணுலகத்திலே மீளவும் கிருத யுகத்தைக் காட்டும் பொருட்டாக .அறிவின்மை, அசுத்தம், சிறுமை, நோய் வறுமை கொடுமை பிரிவு அந்தி பயம் என்ற ராக்ஷஸக் கூட்டங்களை பழித்து மனித ஜாதிக்கு விடுதலை தரும் பொருட்டாக கல்வி, அறிவு, தூய்மை, பொருமை, இன்பம், செல்வம், தேர்ச்சி, ஒற்றுமை, நீதி, உண்மை என்ற ஒளிகளெல்லாம் வெற்றியடையும் பொருட்டாக!

இன்று தேவர்களை அழைக்கிறோம். எம்மை ரிஷிகளாகச் செய்து தரும் பொருட்டு, பழைய குற்றங்களையெல்லாம் நீக்கிக் கோணல்களை நிமிர்த்தி

எமது அமர இன்பத்தைத் தரும் பொருட்டு, இன்று தேவர்களை அழைக்கிறோம். காற்றேவா! இங்கேயே இரு, எப்போதும் திருப்பியே போகாதே. நீ உயிர். உன்னை வரிக்கிறோம். அசுவினி தேவர்கள் உயிர்ப்பரிகளிலே ஏறி வருகின்றனர். அவர் நோய்களைத் தீர்ப்பர் அவரை எம்முள்ளே பதியும்படி செய்கின்றோம் என்று எழுதுகிறார்.

பாரதியார் பாரதத்தின் ஒரு மகாகவி. ரிஷிகளுடனும், சித்தர்களுடனும், மகாஞானிகளுடனும் தொடர்புடையவர். தேவர்களை, நமது அறிவை நமது அன்பை, இன்பத்தை அழைக்கிறார். மருத்துக்களை அழைத்துப் பேசுகிறார். இது மகாகவி பாரதியின் தனி பாணியாகும்.

★ மகாகவி பாரதியார் தமிழருக்கு என்று தலைப்பிட்டு ஒரு மிகச் சிறந்த கட்டுரையை எழுதுகிறார். அக்கட்டுரை தமிழ் மக்களை மட்டுமல்ல பாரத புத்திரர் அனைவரையும் உணர்ச்சியூட்டித் தட்டி எழுப்புவதாகும்.

தமிழருக்கு

தமிழா தெய்வத்தை நம்பு! பயப்படாதே உனக்கு நல்ல காலம் வருகின்றது.

உனது ஜாதியிலே உயர்ந்த அறிஞர் பிறந்திருக்கிறார்கள். தெய்வங்கண்ட கவிகள், அற்புதமான சங்கீத வித்வான்கள், கைதேர்ந்த சிற்பர், பல நூல் வல்லார் பல தொழில் வல்லார், பல மணிகள் தோன்றுகிறார்கள். அச்சமில்லாத தர்மிஷ்டர் பெருகுகின்றனர். உனது ஜாதியிலே தேவர்கள் மனிதராக அவதரித்திருக்கிறார்கள். கண்ணை நன்றாகத் துடைத்துவிட்டு நான்கு பக்கங்களிலும் பார், ஒரு நிலைக் கண்ணாடியிலே போய்ப் பார். நமது நாட்டு ஸ்திரிகளிலே பலர் சக்தி கணங்களின் அவதாரமாக ஜனித்திருக்கிறார். ஒளி சக்தி, வலிமை, வீர்யம், கவிதை, அழகு, மகிழ்ச்சி நலங்களெல்லாம் உன்னைச் சார்கின்றனர்.

தமிழா! பயப்படாதே! ஊர் தோறும் தமிழ்ப் பள்ளிக்கூடங்கள் போட்டு ஐரோப்பிய சாஸ்திரங்களையெல்லாம் தமிழில் கற்றுக் கொடுக்க ஏற்பாடு செய்.

ஜாதி வேற்றுமைகளை வளர்க்காதே! ஜாதியிரண்டொழியே வேறில்லை'' என்ற பழந்தமிழ் வாக்கியத்தை வேதமாகக் கொள்.

பெண்ணை அடிமை என்று கருதாதே. முற்காலத்துத் தமிழர் மனை விலை ''வாழ்க்கைத்துணை'' என்றார். ஆத்மாவும் சக்தியும் ஒன்று. ஆணும் பெண்ணும் சமம்.

வேதங்களை நம்பு. அவற்றின் பொருளைத் தெரிந்து கொண்டு பின் நம்பு புராணங்களைக் கேட்டுப் பயன் அடைந்து கொள். புராணங்களை வேதங்களாக நினைத்து மடமைகள் பேசி, விதலங்குகள் போல் நடந்து கொள்ளதே!

தமிழா! உன் வேலைகள் அனைத்திலும் பொய்க் கதைகள் மிதமிஞ்சி விட்டன. உனது மதக் கொள்கைகள், லௌகீதுக் கொள்கைகள் வைதீக நடை எல்லாவற்றிலுமே பொய்கள் புகுந்து தலை தூக்கி ஆட இடம் கொடுத்து விட்டாய். இவற்றை நீக்கிவிடு. வீட்டிலும் வெளியிலும் தனிமையிலும் கூட்டத்திலம் எதிலும் எப்போதும் நேர்மையிருக்ணக வேண்டும்; உண்மையிருக்க வேண்டும் நீயும் பிறரை வஞ்சிக்கலாகாது பிறகும் உன்னை வஞ்சிக்கலாது. பிறர் பிறரை வஞ்சிப்பதையும் நீ இயன்ற வரை தடுக்க வேண்டும். எல்லாப் பேறுகளைக் காட்டிலும் உண்மைப் பேறுதான் பெருமை கொண்டது.

உண்மை தவங்களுக்கெல்லாம் உயிர் உண்மை சாஸ்திரங்கலெல்லாம் வேர் உண்மை இன்பத்திற்கு நல்லுறுதி. உண்மை பரமாத்மாவின் கண்ணாடி ஆதலால் தமிழா, எல்லாச் செய்திகளிலும் உண்மை நிலவும் படி செய்.

தமிழா! எழுதிப் படிப்பதெல்லாம் மெய்யுமில்லை. எதிர் நின்று கேட்பதெல்லாம் பொய்யுமில்லை. முந்திய சாஸ்திரம் தான் மெய். பிந்திய சாஸ்திரம் பொய்'' என்று தீர்மானம் செய்து கொள்ளாதே! காலத்துக்கும் உண்மைக்கும் எதிரடையாக ஒரு கணக்கு ஏறு'பட்டிருக்கிறதா. தகப்பன் வெட்டிய கிணறு என்று சொல்லி, மூடர்கள் உப்பு நீரைக் குடிக்கிறார்கள்'' என்று பஞ்ச தந்திரம் நகைக்கிறது.

இவ்வுலகில் நான்கு புருஷார்த்தங்கள் என்று பெரியோர்கள் காட்டியிருக்கிறார்கள். அவை அறம், பொருள், இன்பம், வீடு என்பன.

இவற்றுள் அறமாவது கடமை. அது உனக்கும் உனது சுற்றுப்புறத்தாருக்கும், பிறர்க்கும் நீ செலுத்த வேண்டிய கடமை. பிறர் என்பதனுள் வையகம் முழுவதும் அடங்கும். கடமையில் தவறலாகாது. தொழில்களெல்லாம் நற்பயன் தருமிடத்து அறங்களாகும்.

பொரும் என்பது செல்வம். நிலமும் பொன்னும் கலையும், புகழும் நிறைந்திருத்தல். நல்ல மக்களைப் பெறுதல் இனப் பெருமை சேருதல். இவையெல்லம் செல்வம் இச்செல்வத்தைச் சேர்த்தல் மனித உயிருக்கு ஈசன் இட்டிருக்கும் இரண்டாம் கட்டளை.

இன்பம் என்பது இனிய பொருள்களுடன் உயிர் கலந்து நிற்பது. பெண் பாட்டு கூத்து முதலிய ரஸ வஸ்துக்களை அனுபவிப்பது. இவ்விண்பங்கள் எல்லாம், தமிழா, உனக்கு நன்றாக அமையும்படி பராசக்தி அருள் புரிக. உன்னுடைய நோய்கள் எல்லாம் தீர்க. உனது வறுமை எதாலைக. உனக்கு இனிமையும் அழகு முடைய வஸ்துக்களெல்லாம் வசப்படுக. பஞ்ச பூதங்களும் உனக்கு வசப்படுக. நீ எப்பொழுதும் இன்பம் எய்துக!

வீடாவது பரமாத்மாவுடன் அறிவு கலந்து நிற்பது 'வீடு' என்ற சொல்லுக்கு விடுதலை என்பது பொருள். மேற்கூறப்பட்ட மூன்று

புருஷார்த்தங்களும் ஈடேறிய பெரியோருக்கு ஈசன் தானாகவே வீட்டு நிலையருள் செய்வான் தமிழா உனது புருஷார்த்தங்கள் கை கூடுக'' என்று மகாகவி எழுதுகிறார்.

இந்தக் கட்டுரை ஒரு அற்புதமான கட்டுரையாகும். இதை விரித்தால் பல பக்கங்கள்எழுத வேண்டியதிருக்கும். முதலாவதாக தமிழருக்காக சில அறிவுரைகள் கூறுகிறார். அந்த அறிவுரைகள் தமிழருக்கு என்று குறிப்பிட்டிருந்தாலும் அது அனைத்து மனிதருக்கும் பொருந்தும், குறிப்பாக அனைத்து பாரத மக்களுக்கும் தேவைப்படுவதாகும்.

இக்கட்டுரையில் நான்கு புருஷார்த்தங்களைப் பற்றி பாரதியார் கூறுகிறார். அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்கு புருஷார்த்தங்களையும் குறிப்பிட்டு அவைகளுக்கு விளக்கம் கொடுக்கிறார்.

வடமொழியில் இந்த நான்கு புருஷார்த்தங்களையும் தர்மம், அர்த்தம், காம், மோட்சம் என்று குறிப்பிடுகிறோம். இந்த நான்கு புருஷார்த்தங்களும் பாரதம் முழுமைக்கும் பொதுவானதாகும். பாரத நாட்டில் அனைத்து மொழி பேசும் அனைத்து மக்களுக்கும் பொதுவானது.

இதில் தர்மம் என்னும் சொல்லும் அர்த்தம் காமம் மோட்சம் என்னும் சொற்கள் வடமொழியிலும் பாரத நாட்டின் இதர மொழிகளிலும் பொதுவாகக் கூறப்படுகின்றன. தமிழில் அவைகளை அறம், பொருள், இன்பம், வீடு என்று குறிப்பிடுகிறோம். இந்த சொற்களுக்கு ஈடாக முழு அர்த்தத்தைத் கொடுக்கக்கூடிய சொற்கள் உலகில் வேறு எந்த மொழியிலும் இல்லை. இது பாரத நாட்டு மொழிகளுக்குள்ள தனித்தன்மையாகும். தனிச்சிறப்புமாகும்.

இந்த புருஷார்த்தங்களில் முதலாவதாக வருவது தர்மம். .அறம் இதன் விரிவு என்ன? மகாகவி பாரதியார் குறிப்பிடுவது இவற்றுள் அறமாவது (தர்மம் என்பது) கடமை அது உனக்கும், உனது சுற்றுத்தாருக்கும் பிறர்க்கும் நீ செலுத்த வேண்டிய கடமை பிறர் என்பதனுள் வையகம் முழுதும் அடங்கும் என்று மகாவியே குறிப்பிடுகிறார்.

மனிதன் பிறபெருக்கும் போது அவன் இவ்வுலகில் வாழும் போது ஒவ்வொருவருக்கும் கடமை ஏற்படுகிறது.

மனிதனுக்கு ஆணாயினும் பெண்ணாயினும் பருவங்கள் நான்கு. பிரம்மாச்சரியம் இல்லறம், வானப்பிரஸ்தம் சந்நியாசம் இந்த நான்கு பருவங்களுக்கும் உரிய கடமைகள் மனிதனுக்கு ஏற்படுகின்றன. தன் பால், தன் குடும்பத்தின் பால், பெற்றோர் பால், குழந்தைகளின் பால் உடன் பிறந்தோர் பால், சுற்றத்தார் பால், ஊரின் பால், சமுதாயத்தின் பால் நாட்டின் பால் உள்ள .... ஏற்படுகின்றன. அவைகளை நிறைவேற்ற வேண்டும். இவை மிக விரிவான முறையில் அமைந்துள்ளன.

இது போலவே பொருள் இன்பம், வீடு என்னும் சொற்களுக்கும் விரிவான பொருள் அமைந்திருக்கிறது. இவை இந்து தர்மத்தின் சிறப்பாகும். இவைகளை விரிவுப்பட விளக்க வேண்டும்.

மகாகவி பாரதி மிகவும் சுருக்கமாகவும் ஆழ்ந்த கருத்துடனும் இவைகளை விளக்குகிறார்.

★ இந்துக்களின் சிறப்பு

இத்தலைப்பில் மகாகவி பாரதியார் எழுதுகிறார்.

லக்ஷ்மி தேவி எந்த இடத்திலம் ஒரே நிலையாக நிற்பது வழக்கமில்லை. செல்வமும் அதனால் உண்டான பெருமையும் ஒரு கூட்டதாரிடையே குறைவு படும் போது உட்பொறாமையும் மாற்சரியமும் வெளிப்பட்டு தலை தூக்கி ஆடுகின்றன. உலக சரித்திரத்தை அறிவுடன் படித்த புத்திமான்கள் இதனை நன்றாக அறிவார்கள்.

இந்துக்களின் சிறப்பு

ஆனால் இவ்விஷயத்தில் கூட மற்ற தேசத்தாரைக் காட்டிலும் ஹிந்துக்கள் மேலென்று எனது விசாரணையில் தென்படுகிறது. ஏனென்றால் ஹிந்துக்களிடம் தெய்வ பக்தி என்ற சிறந்த குணம் மற்றெல்லா தேசத்தாரைக்காட்டிலம் அதிகமென்பதை மேற்குப்பக்கத்துப் பண்டிதரிலே கூட பக்ஷபாத மற்ற பல லோக்கியர் கண்டுபிடித்துச் சொல்லியிருக்கிறார்கள். தெய்வ பக்தியினால் ஜீவதயை உண்டாகிறது.

''எல்லாரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே

யல்லாமல் வேறொன்றியேன் பராபரமே''

என்று தாயுமானவர் தமது தெய்வ பக்தியின் உண்மையை விளக்கினார் என்று பாரதியார் விளக்கிக் கூறுகிறார்.

மகாகவி மேலும் எழுதுகிறார். சென்ற கார்த்திகை மாதம் புயற்காற்று அடிப்பதைப் பற்றி தென்னாற்காடு ஜில்லாவைச் சோதனை செய்த சர்க்கார் அதிகாரியான ஓர் ஆங்கிலேயர் தம்முடைய அறிக்கையில் ஹிந்து ஜனங்களுடைய விசேஷ ஜீவதயை, அதிதி ஸ்திகாரம் என்ற குணங்களை மிகவும் புகழ்ந்து பேசியிருக்கிறார். காற்றடித்து இரவில் சில வைதீ பிராமணர் தமது வீட்டிற்குள் பறையர் வந்திருக்க இடம் கொடுத்ததாகப் பத்திரிகைகள் கூறின. ஏழைகளாக நம்மை சூழ்ந்திருப்போர் சிவனுடைய ணங்கள், நாராயணனுடைய மக்கள், முருகனுக்குத் தோழர், சக்தியின் அவதார ரூபம். பரமசிவன் சண்டாள ரூபத்துடன் சங்கராச்சாரியாருக்கு சமத்துவ குணத்தை ஊட்டினார். ஸ்ரீரங்கத்தில் எம்பெருமான் கடைக்குலத்தவராகிய திருப்பாணாழ்வாரை பரிசாரக வேதியகின் முதுகிலே சுமந்து கொண்டு வந்து

தனது கர்நோயைத் தீர்த்துக் கொள்ளும்படி கட்டளையிட்டருளினார்.

சந்திகளில் ஒரு களங்கம்

ஆனால் தீர்க்கக்கூடியது

சந்திரனுக்குள் ஒரு களங்கம் இருப்பது போல் இப்போது நம்முடைய கூட்டத்தில் ஒரு களங்கமிருக்கிறது. ஆனால் பூத சந்திரனில் உள்ள களங்கத்தை அது தானே மாற்றிக் கொள்ளாது. ஞான சூரியராகிய ஹிந்துக்கள் தமக்குள்ள குறையை விரைவாக நீக்கி வருகிறார்கள். அந்தக் களங்கமாவது நமது ஜாதிக்கட்டிலுள்ள சில வழக்கங்கள். மறுபடி தெய்வத்தை நம்பி எல்லோரும் இன்புற வேண்டி குண கர்மங்களால் வர்ண நிச்சயம் செய்து கொண்டு பூமண்டலத்துக்கு ஞானோபதேசம் செய்யும் பொருட்டாகப் பாரத தேவி தனது பத்மாசனத்தில் வீற்றிருக்கிறாள். காலம் ஹிந்துக்களின் சார்பில் வேலை செய்கிறது. தேவர்களெல்லோரும் ஹிந்துக்களைக் கைதூக்கி விடப் புறப்பட்டிருக்கிறார்கள். பரமாத்மா ஒன்று அவனுக்குரிஷிகள் பல பெயர் சொல்லிப் போற்றுகிறார்கள் என்று வேதம் சொல்லுகிறது.

''பேரானந்தம் பேசி மறையனந்தஞ் சொலும் பெரிய மௌனத்தின் வைப்பு

என்று தாயுமானவர் காட்டினார்.

ராமகிருஷ்ணர் இதையே சொன்னார். இந்த உண்மை ஹிந்துக்களுடைய புத்தியில் வேரூன்றி விட்டது. எனவே கவி நீங்கிவிட்டது'' என்று மகாகவி குறிப்பிடுகிறார். மேலும் கூறுகிறார், இந்த தேசம் ஒரு தேவலோகத்துப் பலாப்பழகம் போலாகி விட்டது. இனியென்றும் அழியாத பலாப்பழம். ஒவ்வொரு ஆர்யனும் அதில் முளைத்தவன் நாம் எல்லோரும் சேர்ந்து அந்தப் பலாப்பழத்தின் மேல் தோல். உள்ளே ஞானச்சுளை நமக்கு அழிவில்லை. நமக்குள்ளே பிரிவில்லை. நாம் ஒன்று. நாம் எப்போதும் தெய்வத்தை நம்புகிறோம். தெய்வத்தை நம்பி நாம் அறத்தைச் செய்தால் நம்முடைய யோக க்ஷேமங்களைத் தெய்வம் ஆதரிக்குமென்று பகவத்கீதை சொல்லுகிறது என்று மகாகவி பாரதி எழுதுகிறார்.

தூற்றல்:

ஓயாமல் தூற்றல் போட்டால் அது மழையாக மாட்டாது. சிணுங்கல் மழையினால் செடுதல்தான் உண்டாகும். தூற்றலாகத் தொடங்கியது மழையாக விரைவிலே பெய்த முடித்துவிட வேண்டும். ஒரு நல்ல காரியம் செய்யத் தொடங்குவோன் அதை ஒரே நீட்டாக வருஷக்கணக்கில் நீட்டி மற்றவர்களுக்கு அதுவே ஒரு தீராத தொல்லையாகும்படி செய்யலாகாது ''சுபஞ்ச சீக்கிரம்'' நன்மையைத் துரிதப்படுத்த வேண்டும்.

தமிழ் வசன நடை:

நாடிப் பார்த்து நடை இப்போது தான் பிறந்தது. பல வருஷமாகவில்லை. தொட்டிற் பழக்கம் சுடுகாடு மட்டும். ஆதலால் இப்போதே நமது வசனம் உலகத்தில் எந்த பாஷையைக் காட்டிலும் தெளிவாக இருக்கும்படி முயற்சிகள் செய்ய வேண்டும் கூடியவரை பேசுவது போலவே எழுதுவதுதான் உத்தமம் எழுதினாலும் சரி. ஒரு கதை. அல்லது ஒரு தர்க்கம், ஒரு சாஸ்திரம், ஒரு பத்திரிகை விஷயம் எதை எழுதினாலும் வார்த்தை சொல்லுகிற மாதிரியாகவே அமைந்து விட்டால் நல்லது'' என்று மகாகவி குறிப்பிடுகிறார்.

''வசன நடை என்பது கம்பர் கவிதைக்குச் சொல்லியது போலவே, தெளிவு ஒளி, தன்மை, ஒழுக்கம் இவை நான்கும் உடையதாக இருக்க வேண்டும். இவற்றுள் ஒழுக்கமாவது தட்டுத்தடையில்லாமல் நேரே பாய்ந்து செல்லும் தன்மை. நமது தற்கால வசன நடையில் சரியான ஓட்டமில்லை. தள்ளாட்டம் அதிகமாகக் காணப்படுகிறது. உள்ளத்திலே தமிழ்ச் சக்தியை நிலை நிறுத்திக் கொண்டால் கை நேரான தமிழ் நடை எழுதும் என்றும் மகாகவி குறிப்பிடுகிறார்.

தமிழ்நாட்டிலே புஸ்தகப் பிரசுரம்

தமிழ்நாட்டில் புஸ்தகம் எழுதுவோரின் நிலைமை இன்னும் சீராக வில்லை பிரசுரத் தொழிலை ஒரு வியாபாரமாக நடத்தும் முதலாளிகள் வெளிப்படவில்லை யாதலால் சங்கடம் நீங்காமலிருக்கிறது புதிய புஸ்தங்களைப் படித்துப் படித்து ''பயன்படுமா படாதா'' வென்று தீர்மானம் செய்ய வேண்டும் '''நன்றாக விலையாகுமா? விலையாகாதா? என்பதை ஊகித்தறிய வேண்டும். ஆச்சர்யரிடமிருந்து புஸ்தகத்தை முன் விலையாகவே, வேறுவித உடன்பாடாகவோ வாங்கிக் கொண்டு தாம் கைம்முதல் போட்டு அச்சிட்டு லாபம் பெற வேண்டும். இந்த வியாபாரத்தை நமது தேச முதலாளிகள் தக்கபடி கவனியாமலிருப்பது வியப்பை உண்டாக்குகிறது. புஸ்தகங்கள் வெளிவரத்தான் செய்கின்றன. பெருந்தொகையான ஜனங்கள் வாங்கிப்படிக்கத்தான் செய்கிறார்கள். ஒரு ஒழுங்கான பிரசுர வியாபாரம் நடந்தால் ஜனங்களுக்கு நல்ல புஸ்தகங்கள் கிடைக்கும். இப்போது அச்சிடப் பணமுள்ளவர்கள் எழுதும் புஸ்தகங்களே பொது ஜனங்களுக்குக் கிடைக்கின்றன பெரும்பாலும் பழைய புஸ்தகங்களிலே ஆச்சர்யமானவை பல எழுதப்பட்ட காலத்தில் ஆசிரியர் தன வந்தவராக இருந்ததில்லை. மேன்மேலும் ஊக்கத்துடன் நடத்தினால் பிரசுர வியாபாரத்தில் நிறைய லாபம் உண்டாகுமென்பதில் சந்தேகமில்லை'' என்று அக்காலத்தில் தமிழ் நாட்டில் நிலவிய புஸ்தக பிரசுக நிலைமை பற்றி தனது சொந்த அனுபவத்தை வைத்தும் மகாகவி பாரதியார் எழுதுகிறார். கடந்த ஒரு நூற்றாண்டில் இந்தத்துறையில் குறிப்பிடத்தக்க வளர்ச்சி ஏற்பட்டுள்ள போதிலும் இத்துறையில் தமிழ்நாட்டில் இன்னும் அதிக முன்னேற்றம் ஏற்பட வேண்டியதிருக்கிறது.

போத்தண்ணா என்ற தெலுங்குக் கவிராயர்

சென்னை பட்டணத்திலிருந்து பம்பாய்க்கு போகும் (மதராஸ் தென் மராட்டிய) ரெயில் பாதையில், ''வொண்டி பிட்ட'' என்றொரு ஸ்டேஷன் இருக்கிறது. அதற்குப் பக்கத்திலுள்ள வொண்டி மிட்ட என்னும் ஊர் மிகவும் அழகுடையது. ''வொண்டி மிட்ட'' என்றால் ''ஒற்றை மலை'' என்று அர்த்தம் ஒற்றைக் குன்று. அதனடியிலே பெரிய ஏரி. மேலே இராமலிங்கேசர் ஆலயம் தெலுங்கு பாஷையில் மிகச் சிறந்த காவியமாக ஸ்ரீபாகவதத்தை எழுதிய ''போத்தன்னா என்ற மகாகவி அந்த ஊரிலே பிறந்தவர். இவருடைய பாகவதம் நம்முடைய இராமாயணத்தைப் போல சம்ஸ்க்ருத நூலைத் தழுவி எழுதப்பட்ட வழி நூல். ஆயினும் படிப்பவருக்கு முதனூலைத்தனை பெருமை தோன்றும்படி அமைந்திருக்கிறது. நாம் கம்பராமாயணத்தைக் கொண்டாடுவது பாகவதத்தைக் கொண்டாடுகிறார்கள். சில தினங்களின் முன்பு ஹிந்து பத்திரிகையில் மேற்படி போத்தன்னாவைப் பற்றி கும்பகோணம் இங்கிலிஷ் ஸ்ரீ வெங்கடேசய்யர், என்பவர் ஒரு கடிதம் எழுதியிருக்கிறார். ''போத்தன்னா''வின் ஜன்ம நக்ஷத்திரத்தைக் கண்டுபிடித்து அதனை ''வொண்டி மிட்டா''வில் வருந்தோறும் கொண்டாட வேண்டு மென்றும் அதற்குத் தெலுங்கு தேசத்திலும் வெளிப்பக்கத்திலுமுள்ள ஆந்ரிய பாஷாபிமானிகள் எல்லோரும் வந்து கூட வேண்டுமென்றும் ஸ்ரீ வெங்கடேசய்யர் செல்லுகிறார். அவருடைய ஜன்ம நக்ஷத்திரம் நிச்சயமாகத் தெரியாத பட்சத்தில் ஸ்ரீகிருஷ்ண ஜயந்தியன்று அவர் ஞாபகத்தைக் கொண்டாடலாமென்கிறார். இது சரியான வார்த்தை.

கம்பர், திருவள்ளுவர் இளங்கோ

ஆனால் தமிழ்நாட்டில் இது போன்ற விஷயங்களைக் கவனிப்பவர் இல்லை. தமிழ்நாட்டு வீரருக்கும், கவிகளுக்கும் லோகோபகாரிகளுக்கும் இதுவரை எவ்விதமான திருவிழாவையும் காணவில்லை. பூர்வீக மகான்களின் ஞாபகத்தைத் தீவிரமான பக்தியுடன் வளர்க்காத நாட்டில் புதிய மகான்கள் பிறக்க வழியில்லை. தப்பித்தவர் ஒரிருவர் தோன்றினாலும் அவர்களுக்கு தக்க மதிப்பிராது. பண்டைய காலத்துக்கு சக்தியான்களை வியப்பதும் அவர்களுடைய தொழிற்பெருமையை உலகுக்கு புழுக்குவதும் கூடிய வரைபின் பற்ற முயல்வது மாகிய பழக்கமே இல்லாத ஜனங்கள் புதிய சாமான்களை என்ன வகையிலே கவனிப்பார்கள்.

''எதை விரும்புகிறோமோ அது தோன்றுகிறது. எதை ஆதரிக்கிறோமோ அது வளர்ச்சி பெறுகிறது. பேணாத பண்டம் அழிந்து போகும். பழக்கத்தில் இல்லாத திறமை இழந்து விடப்படும். அறிவுள்ள பேரரையும் லோகோபகாரிகளையும் வீரரையும் கொண்டாடாத தேசத்தில் அறிவும் லோகோபகாரமும் வீரமும் மங்கிப் போகும். தமிழ்நாட்டில் இப்போது ''புதிய உயிர்'' தோன்றியிருப்பதால் நாம் இவ்விஷயத்தில் தாமோ குணஞ்

செலுத்தாமல் கம்பன், இளங்கோ, திருவள்ளுவர் முதலிய மகாகவிகளுக்கு ஞாபகச் சிலைகளும் வருஷோத்ஸவங்களும் ஏற்பாடு செய்ய வேண்டும். திருவள்ளுவர், மயிலாப்பூரிலே பிறந்தவர். அங்கே திருவள்ளுவர் கோயில் இப்போது இருக்கிறது. ஜன்ம தினம் நிச்சயமாகத் தெரியவில்லை. ஒரு வேளை அந்தக் கோயிற் பூசாரிக்குத் தெரியக்கூடும்.

ஐந்து மகாகாவியங்களிலே சிறந்த தாய் சிலப்பதிகாரம் செய்த இளங்கோ முனிவர். வஞ்சி நகரத்தில் பிறந்தவர். இந்த வஞ்சி நகரம் இப்போது திருச்சிராப்பள்ளிக்கு அருகேயுள்ள கரூர் என்று பண்டிதமு ராகவய்யங்கார் தீர்மானம் செய்கிறார். இந்த ஆசியரது ஜன்ம தினத்தையும் நிச்சயமாகச் சொல்வதற்கு வழியில்லை. மயிலாப்பூர், திருவள்ளுவர் கோயிலைச் செம்மையாகக் கட்ட வேண்டும். இப்போது மிகவும் ஏழை நிலைமையில் இருக்கிறது. திருவெழுந்தூரிலும், கரூரிலும் ஞாபச் சின்னச் சின்னங்கள் ஏற்படுத்த வேண்டும். ஜன்ம தினங்கள் நிச்சயப்பட்ட வழியில்லை. ஆதலால் சரஸ்வதி பூஜைக்கு முன்பு அல்லது பின்பு குறிப்பிட்டாதாரு தினத்தில் இந்த மகான்களின் ஞாபகத்தைக் கொண்டாடுதல் பொருத்தமுடைய செய்கையாகும். நவராத்திரி உத்ஸவங்கள் நமக்குள் வழக்கமாக உள்ளதால் அந்த சமயத்தையொட்டி நமது மகாகவிகளுக்குத் திருவிழா கொண்டாடுதல் சுலபமாக இருக்கும்.

பண்டித சபைகளையும் பொது ஜன ஆர்வாரங்களையும் கோலாலமாக நடத்தி எல்லா வர்ணத்தாரும் எல்லா மதஸ்தரும் சேர்ந்தால் சந்தோஷமும் அறிவுப்பயனும் உள்ள மாண்பும் பெற இட முண்டா குழு பதபோதங்கள் பாராட்ட இடமில்லாத திருவிழாக்கள் தமிழ்நாட்டில் எவ்வளவு அவசியம் என்பதை ஒவ்வொரு அறிவாளியும் அளிதாக ஊகித்துக் கொள்ளலாம்'' என்ற மகாகவி பாரதியார் எழுதுகிறார்.

மகாகவியாரின் இந்தக் கருத்து தமிழகத்தில் மிகுந்த பலனளித்திருக்கிறது. தமிழ் நாடெங்கும் இன்னும் பாரத நாட்டின் முக்கிய நகரங்களிலும், திருவள்ளுவர், கம்பர் இளங்கோ, பாரதி, பாரதிதாசன் மற்றும் பல தமிழ்ப்புலவர்களுக்கு சபைகளும் சங்கங்களும் அமைந்து விழாக்கள் நடை பெறுகின்றன. அவை மேலும் விரிவடைந்து வருகின்றன. இந்த விழிப்புணர்வு மேலும் விரிவுபடும் என்பதில் ஐயமில்லை. தமிழ் உணர்வு மேலும் அதிகரித்து வருகிறது மகிழ்ச்சி .

தமிழ் வளர்ச்சிக்காக:

''நமது ஜனத்தலைவர்கள் இங்கிலிஷில் யோசிப்பதையும் பேசுவதையும் நிறுத்திவிட்டு ஒழிப்பது நமது பாஷை , பேன்மைப்பட்ட இடமில்லை என்று மகாகவி பாரதியார் குறிப்பிடுகிறார். மேலும், சபைகள், வங்கங்கள், பத்திரிகைகள், வருஷோத்தஸவங்கள், பழஞ்சுவடிகள், சேர்த்து வைத்தல், அவற்றை அச்சிடல் இவையெல்லாம் பாவை வளர்ச்சிக்கு நல்ல

கருவிகள் என்பதில் சந்தேகமில்லை.

ஆனால் தமிழ் மக்கள் தமிழ் மொழியை [illegible] விரும்பினால் அதற்கு முதலாவது செய்ய வேண்டிய காரியம் [illegible] அதாவது கால விசேஷத்தால் நமது [illegible] வெளிகேகஞானமும் அதனைப் பிறருக்கு உபயோகப்படுத்தும்படி [illegible] வேண்டிய அவகாசம் பதவி முதலிய [illegible] படைத்திருப்பவராகிய இங்கிலிஷ் படித்த வக்கீல்களும் [illegible] இங்கிலிஷ் பள்ளிக் கூடத்து வாத்தியார்களும் தமது நீதி ஸ்தலங்களையும் பள்ளிக்கூடங்களையும் விட்டு வெளியேறிவுடனேயே இங்கிலிஷ் [illegible] விட்டுத்தாம் தமிழரென்பதை அறிந்து நடக்க வேண்டும். பந்தாடும் போது சீட்டாடும் போதும் ஆச்சாரத்திருந்த சபைகளிலும் வர்ணா [illegible] சபைகளிலும் எங்கும் எப்போதும் இந்தப் பண்டிதர்கள் இங்கிலிஷ் [illegible] வழிக்கத்தை நிறுத்தினால் உடனே தேசம் மாதலடையும் கூடிய [illegible] இவரகள் தமிழ் எழுதக்கற்றுக் கொள்ள வேண்டும். இவர்கள் அந்தனை பேரும் தமிழ் பத்திரிகைகளில் விகிதங்களாகவும், இவர்கள் எழுதுகிற கதை காவியம் விளையாட்டு வார்த்தை வினை வார்த்தை சாஸ்திர விசாரணை [illegible] நீதி எல்லாவற்றையும் தமிழில் எழுத வேண்டும்.

''அந்தந்த ஊரில் நடக்கும் பொதுக்காரியங்களையும் அவரர் மனதில் படும் புது யோசனைகளையும் அனுப்புதல் மிகவும் சுலபமான காரியம். ஜனத்தலைவர்களால் இக்காரியம் செய்ய முடியாத பக்ஷத்தில் பிறருக்குச் சம்பளம் கொடுத்தாவது செய்யவிக்க வேண்டும்.''

எனவே இங்கிலிஷ் படித்த தமிழ் மக்கள் முக்கியமாக வக்கீல் களும் பள்ளிக்கூடத்து வாத்தியார்களும் தமது வாக்கிலும் மனதிலும் தமிழரசியை கொலு விருக்கும்படி செய்து வணங்க வேண்டுமென்றும் அதுவே இப்போதுள்ள ஸ்திதி தமிழ் வளர்ப்புக்கு மூலஸ்தானமாகும் என்று மகாகவி எழுதுகிறார்.

ராமலிங்க சுவாமிகளும் ''சுதேச மித்திரன்'' சுப்பிரமணிய அய்யரும் இவர்களைப் போன்ற வேறு சில மகான்களும் தமிழ்நாட்டின் புதிய விழிப்புக்கு அதிகர்த்தக்களாக விளங்கினர். ஹிந்து தர்மத்தின் புதுக்கிளர்ச்சிக்கு விவேகானந்தர் ஆரம்பம் செய்தார். அவரைத் தமிழ்நாடு முதலாவது அங்கீகாரம் செய்து கொண்ட பிறகுதான் வங்கம், மகாராஷ்டிரம் முதலிய ஹிந்து தேசத்து மாகாணங்கள் அவருடைய பெருமையை உணர்ந்தன.

பூ மண்டலம் முழுவதிலும் பெரிய விழிப்பொன்று வரப் போகிறது. அதற்காதாரமாக ஹிந்துஸ்தானம் கண் விழித்து இருபதாண்டுகளாயின. ஹிந்து ஸ்தானத்துக்குள் தமிழ் நாடு முழுவாவது கண் விழித்தது. ஆனால் இன்னும் புத்தி சரியாகத் தெளியாமல் கண்ணை விழிப்பதும், கொட்டாவி

விடுவதுமாக இருக்கிறது.

ஒரு தேசத்தின் பொது புத்தியை அளந்து பார்க்க வேண்டுமானால் அதற்கு எத்தனையோ அறிகுறிகள் உண்டு. அந்த தேசத்து ராஜாங்க நிலை, தர்மஸ்தாபனங்களின் நிலை, கோயில்களின் நிலை முதலிய எத்தனையோ அடையாளங்களால் ஒரு தேசத்தாரின் பொது ஞானத்தை அளவிடலாம். இவற்றுள்ளே சமாச்சாரப் பத்திரிகைகளையும் ஓரடையாளமாகக் கருதத்தகும். ஆனால் ஐரோப்பா, அமெரிக்கக் கண்டங்களில் நடக்கும் பத்திரிகைகளுடன் தமிழ் நாட்டுப் பத்திரிகையை ஒறப்பிட்டுப் பார்த்து இவற்றின் பரிதாபகரமான நிலைமையைக் கண்டு 'ஆகா! இப்படிப்பட்ட தமிழ்நாடு எங்கே பிழைக்கப் போகிறது'' என்று எணிணப் பாடும் நெஞ்சு உடைந்து போக வேண்டாம். ஏனென்றால் வர்த்தமானப் பத்திரிகை நாமாக உண்டாக்கிய கருவியன்று. பிறரிடமிருந்து கற்றுக் கொண்ட தந்திரம் சென்ற முப்பது வருஷங்களாகத் தான் தெரிந்து கொண்டிருக்கிறோம். இன்னும் சரியாக முதிர்ச்சியடைய வில்லை. தவிரவும், தமிழ்ப் பத்திரிகைகளுக்கு ராஜாங்கத்தார் உதவி கிடையாது. பத்திரிகைகளுக்கு ராஜாங்கத்தார் எத்தனை கெத்தனை மதிப்பு கொடுக்கிறார்களோ, அத்தனைக்கத்தனை நாட்டில் மதிப்பேறி அதனால் பத்திரிகைகளுக்குத் தகுந்தலாப முண்டாய் அதிலிருந்து சரியான வித்வான்களின் கூட்டம் யதேஷ்டமாய்ச் சேர்ந்து அந்தத் தொழில் மேன்மையடைய இடமுண்டாகும்.

தமிழ்நாட்டில் இப்போது நடைபெறும் ராஜாங்கம் தமிழ் பாஷையில் தேர்ச்சியுடையதன்று. தமிழ் பாஷையை முதலாக மதிப்பதன்று. ''தமிழ் முழு நாகரிகமுடையதா இல்லையா'' என்பதைப் பற்றிச் சந்தேகங்களுடையது. ஆதாலால், தமிழ் படிப்பில்லாமலும் தமிழ் மணமில்லாமலும் ஸ்தோஷம் அடைந்திருக்கும் இயல்புடையது.

இங்கிலாந்தில் வர்த்தமானப் பத்திரிகைகள் பிரான்ஸ் தேசத்து மந்திரிகளுடைய உபநியாசங்களையும், பெரிய சாஸ்திரியார், பெரிய கைத் தொழில் நிபுணர், திரவிய சாஸ்திர நிபுணர், ஜனத்திருத்தத்தலைவர் முதலியவர்களின் உபந்நியாசங்களையும் பலபிரஞ்சு ராஜாங்க சம்பந்தமான விவகாரங்களையும் பிரபஞ்சு பத்திரிகைகளிலிருந்து மொழி பெயர்த்துப் போடுகின்றன. அப்படியே பிரான்ஸ் தேசத்து பத்திரிகைகள் ஜெர்மன் பாஷையிலிருந்து பல விஷயங்களை மொழி பெயர்த்து எழுதுகின்றன. ஆனால் அந்த மொழி பெயர்ப்புகளில் ஸ்வபாஷையின் வழக்கங்களையும் பிரயோகங்களையும் கைவிட்டு அன்னிய பாஷையின் வசன நடையைப் பின் பற்றும் வழக்கம் கிடையாது.

ஆனால் தமிழ்நாட்டிலோ முழுவதும் தமிழ்நடையை விட்டு இங்கிலிஷ் நடையில் தமிழை மொழுதும் விநோதமான பழக்கம் நமது பத்திராதிபர்களிடம் காணப்படுகிறது. முதலாவது, நீ எழுதப் போகிற விஷயத்தை இங்கிலிஷ்

தெரியாத ஒரு தமிழனிடம் வாயினால் சொல்லிக்காட்டு, அவனுக்கு நன்றாக அர்த்தம் விளங்குகிறதா என்று பார்த்துக் கொண்டு பிறகு எழுது. அப்போதுதான் நீ எழுதுகிற எழுத்து தமிழ்நாட்டிற்குப் பயன்படும். உனக்கு இஹபாஷேமங்களுக்கு இட முண்டாகும். இல்லாது போனால் நீயும் சிரமப்பட்டு மற்றவர்களுக்கும் பயனில்லாமல் கேபாகிறது. சில சமயங்களில் சில பத்திரிகைகளை வாசித்துவிட்டு நான் ''ஐயோ, இவ்வளவு காயிதத்தில் எத்தனையோ உண்மைகளும், எத்தனையோ ஆச்சரியங்களும், எத்தனையோ சந்தோஷங்களும் எழுதலாமே?'' என்று எண்ணி வருத்தப்படுவதுண்டு.

தமிழில் சாஸ்திர பரிபாஷை

தமிழ் மொழியில் அறிவியல் துறைகள் பற்றிய நூல்கள் வெளிவர வேண்டும். இன்றும் கூட சட்டம், வைத்தியம், மருந்தியல், பொறியியல் மற்றும் பல அறிவியல் துறை நூல்கள் ஆங்கிலத்திலேயே உள்ளன. அவை ஆங்கிலத்திலேயே பயிற்றுவிக்கப்படுகின்றன.

ஆட்சி மொழி, பயிற்சி மொழி, நீதிமன்ற மொழி ஆகிய துறைகள் மற்றும் அனைத்து துறைகளிலும் தமிழ் மொழியைக் கொண்டு வர வேண்டும் என்று 1957 ஆம் ஆண்டிலேயே தமிழ் ஆட்சி மொழிச் சட்டம் என்னும் ஒரு சட்டம் நிறை வேற்றப்பட்டது. ஆயினும் தமிழ்மொழியை தமிழ்நாட்டில் அனைத்துத்துறைகளிலும் செயல்படுத்துவது என்பது நடைபெறவில்லை. இதற்கு ஆட்சியாளர்கள் தான் முதல் காரணம்.

தமிழில் சாஸ்திர பரிபாஷை என்னும் தலைப்பில் மகாகவி பாரதி நூற்றாண்டுகளுக்கு முன்பே கீழ்க்கண்டவாறு எழுதியுள்ளார்.

''பஞ்ச பூதங்களின் இயற்கையைப் பற்றின ஆராய்ச்சிகளிலே, நம்மைக் காட்டிலும் ஐரோப்பியர் முன்னே நிற்பது தெரிந்த விஷயம். ஆதலால் ஐரோப்பாவில் வழங்கும் லௌகீத சாஸ்திரங்களைத் தமிழில் எழுத வேண்டுமென்று பல பண்டிதர் மிகவும் ஆவலோடிருக்கிறார்கள். ஏற்கனவே சில பகுதிகளின் ஆரம்பம் தமிழில் மொழி பெயர்த்திருக்கிறது. இந்த முயற்சி மேன் மேலும் வளரும் வளர்ந்து தீர வேண்டும். அந்த சாஸ்திரங்களை யெல்லாம் ஏககாலத்தில் தமிழில் எழுதி முடிப்பதற்காக ஒரு பண்டித சங்கம் ஏற்படக்கூடும். நமது ராஜாக்களுக்கும், ஜமீன்தாரர்களுக்கும் செட்டிகளுக் கும் (செல்வந்தர்களுக்கும் நல்ல புத்தியுண்டாகித் தமிழில் நவீன சாஸ்திரம் சேர்ப்பதாகிய காரியத்தை அவர்கள் தக்க பண்டிதர்களின் உதவி கொண்டு, விரைவில் நிறைவேற்றி மேன்மை பெறக்கூடும்.

இதுபற்றி அரசாங்க அளவில் சில நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக் கின்றன. அவை முழுமை பெறவில்லை. போதுமான முயற்சிகள் மேற்கொள்ளப்படவில்லை. தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை.

நமது நாட்டு மொழிகள் நன்கு வளர்ச்சி பெற்றவை. சம்ஸ்க்ருதமும் தமிழும் செம்மொழிகள் என அங்கீகரிக்கப்பட்டுள்ளன. இரு மொழிகளும் பழமைமிக்கவை சிறந்த இலக்கணம் கொண்டவை சிறந்து பண்டைய பேரிலக்கியங்களும் நவீன இலக்கியங்களும் கொண்டவை. இவை தவிர, தெலுங்கு, கன்னடம், மலையாளம், மராத்தி, குஜராத்தி, ராஜஸ்தானி, பஞ்சாபி, காஷ்மீர், இந்தி, உருது, ஒரியா, வங்காளி, அஸ்சாமி, மணிப்பூர் முதலிய பதினெட்டு மொழிகள் வளர்ச்சியடைந்த மொழிகளாக மக்களிடம் அந்தந்தப் பகுதிகளில் ஆட்சி மொழிகளாகவும், பயிற்சி மொழிகளாகவும் நீதிமன்ற மொழிகளாகவும் நிலை பெற்றிருக்கின்றன. மேலும் அம்மொழிகளும் சிறந்த இலக்கண இலக்கியங்கள் நிறைந்த வளர்ச்சியடைந்த மொழிகளாக நிலை பெற்று வருகின்றன.

இந்திய மொழிகளுக்கு இடையில் இன்னும் அதிகமாக நெருக்கமும் தொடர்பும் இணைப்பும் ஏற்படுமானால் அம்மொழிகள் மேலும் வளர்ச்சியடையும், செழிப்படையும்.

பாரத இசை

இந்திய இசையில் கர்நாடக சங்கீதமும் இந்துஸ்தானி இசையும் மிகவும் பிரபலமானது. விஞ்ஞான பூர்வமாவது. இன்று உலகில் மிகச்சிறந்த இசைகளில் ஒன்றாக இசையுலகில் நிலை பெற்றிருக்கிறது. இந்திய நாடு அடிமைப்பட்ட போது இங்கு அந்நிய ஆட்சி ஏற்பட்ட போது நமது கல்வி, கலாச்சாரம் இசை முதலிய அனைத்தும் மங்கிப் போயிருந்தது. நமது இசையும் முழுமையாக விடுதலை பெற்று ஒளி வீசிச் சிறக்க வேணடும் என்பதைப் பற்றி மகாகவி பாரதி பேசுகிறார்.

மகாகவி பாரதி ஒரு சிறந்த கவிஞர் மட்டுமல்ல. சிறந்த தமிழ்ப்புலவர். நல்ல இசைஞானி. நல்ல குரல் வளம் கொண்டவர் மெட்டிசைத்து நன்கு பாடவல்லவர். கர்நாடக இசையில் கைதேர்ந்தவர்.

மகாகவி பாரதியார் பாடியுள்ள பாடல்கள் பலவற்றிற்கும் ராகம் தாளம் அமைத்துக் கொடுத்துள்ளார். அப்பாடல்கள் எல்லாம் நன்கு இசையமைத்து இராகம் தாளத்துடன் பாட வல்லது.

மகாகவி ''சங்கீத விஷயம்'' என்னும் தலைப்பில் மிகச்சிறந்த கட்டுரை ஒன்று எழுதியுள்ளார். அந்தக் கட்டுரை அவருடைய இசை ஞானத்திற்கும் தமிழ் வசன நடைக்கும் ஒரு சிறந்த எடுத்துக்காட்டாக அமைந்திருக்கிறது.

அந்தக் கட்டுரை மூலம் மகாகவி பாரதி பேசுகிறார்.

''இங்குள்ள ஜந்துக்களிலே மனிதருக்கும் பறவைகளுக்கும் தான் பாடத் தெரியும் மற்ற மிருகங்களுக்கு பாட்டு வராது. பறவைகள் வானத்திலே பறக்குமு் வழக்கமிருப்பதால் அவற்றின் மனநிலை சங்கீதத்திற்கு

இசைகின்றது போலும், மனிதன் உடம்பினாலே பறக்காவிட்டாலும் உள்ளத்தைத் திசை வெளியிலே பறக்கும்படி செய்கிறான். அப்போது இயற்கையிலேயே பாட்டுத் தோன்றுகிறது.

ரஸங்கம் ஒன்பது (நவரஸங்கள்)

1. வீரம்

2. ரௌத்திரம் (கோபம்)

3. அத்புதம் (வியப்பு)

4. சாந்தம் (நடுவு நிலை)

5. பயாநகம் (அச்சம்)

6. பீபத்ஸம் (வெறுப்பு)

7. ஹாஸ்யம் (நகை)

8. கருணை, சோகம் (துயரம்)

இதை அவலம் என்பது பழைய தமிழ் வழக்கு.

9. சிருங்காரம் (காமம்)

வெளிப்பொருள்களைக் காணும் போது அல்லது நினைக்கும் போது மனிதனுடைய உள்ளத்திலே இந்த ஒன்பது சுவைகளிலே ஏதேனும் ஒன்று தோன்றும் இரண்டு மூன்று கலந்தும் தோன்றக்கூடும். ரஸ உணர்ச்சியிலே உள்ளத்தை முழுவதும் ஈடுபடுத்தக்கூடிய சிலர் கவிதை பாட்டு சித்திரம் முதலிய தெய்வக் கலைகளிலே சிறப்படைகிறார்கள். ரஸ உணர்ச்சி இல்லாவிடில் இக்கலைகள் நசித்துப் போகும்.

பிறர்துன்பத்தைக் காணும் போது தனது துன்பம் போல் எண்ணி வருந்தும் இயல்புடைய ஒருவனும் பிறர் துன்பத்தைக் கருதாத ஒருவனும் யாப்பிலக்கணம் படித்துக் கவிதை செய்யப்பழகு வாராயின், முந்தியவன் உண்மையான கவிதை எழுதுவான். பிந்தியவன் பதங்களைப் பின்னுவான். இவனுடைய தொழிலிலே கவிதை இராது. இப்படியோ தான் ஒவ்வொன்றிலும்,

ரஸஞானமில்லாதபடி பல்லவிகளும் கீர்த்தனங்களும் பாடுவோர் ஸங்கீதத்தின் உயிரை நீக்கிவிட்டு வெற்றுடலைக் (அதாவது பிணத்தைக்) காட்டுகிறாரகள். இக்காலத்து சங்கீத வித்வான்களிலே பலர் ஸங்கீதத்திற்கு நவரசங்களே உயிர் என்பதை அறியாதவர்.

முத்துசாமி கீக்ஷிதர், தியாகையர், பட்டணம் சுப்ரமணிய அய்யர் முதலியவர்களின் கீர்த்தனங்களிலே சிலவற்றை அதிக ஸங்கதிகளுடன்

பாடுவோரே ''முதல் தர வித்துவான்''. இந்தக் கீர்த்தனங்களெல்லாம் சமஸ்க்ருதம் அல்லது தெலுங்கு பாஷையில் இருக்கின்றன. ஆகவே முக்காலே மும்மாகாணி ''வித்வான்களுக்கு இந்தக் கீர்த்தனங்களின் அர்த்தம் தெரியாது. எழுத்துக்களையும் பதங்களையும் கொலை செய்தும் விழுங்கியும் பாடுகிறார்கள். அர்த்தமே தெரியாதவனுக்கு ''ரஸம்'' தெரிய நியாயம் இல்லை.

புதிய புதிய கீர்த்தனங்களை வெளியே கொண்டு வர வேண்டும். இப்போது சங்கீத வித்வான்களிலே தலைமைப்பட்டிருப்போர் தமிழிலே புதிய மெட்டுக்களில் கீர்த்தனங்கள் செய்ய முயல வேண்டும். நவரசங்களின் தன்மைகளையும் இன்னின்ன ரஸங்கள் உண்டாகும் என்பதையும் கற்றுத் தெரிந்து கொள்ளுதல் அவசியம்.

''பூர்வ காலத்து மஹான்களுக்குத் தெய்வப் பிரஸாத மிருந்தது. எங்களுக்கில்லையே என்ன செய்வோம்? என்று புதிய வித்வான்கள் புதிய கீர்த்தனங்கள் அமைப்பதிலே பின் வாங்கக்கூடாது. தெய்வங்கள் இறந்து போகவில்லை. இப்போதும் அவற்றை உபாசனை செய்து அவற்றின் அருள் பெறலாம். தெய்வப்பிரசாதத்தை ஒருவன் பக்தியாலும், ஜீவ தயையாலும், நேர்மையாலும், உண்மையாலும் இடைவிடாத உழைப்பினாலும் சம்பாதிக்க முடியும்'' என்று மகாகவி எழுதுகிறார்.

மகாகவி மேலும் எழுதுகிறார், முத்துசாமி திக்ஷிதர், தியாகய்யர், பட்டணம் சுப்ரமணிய அய்யர். இந்த மூன்று பெயருடைய கீர்த்தனங்களைத் தான் வழக்கத்தில் அதிகமாய்ப்படுகிறார்கள். இவற்றுள்ளே தீக்ஷிதரின் கீர்த்தனைகள் ப்ச்சை ஸம்ஸ் கிருத பாஷையில் எழுதப்பட்டவை. இவை கங்கா நதியைப் போல கம்பீர நடையும் பெருந்தன்மையும் உடையன. வேறு பல நல்ல லக்ஷணங்களும் இருந்த போதிலும் சம்ஸ்க்ருத பாஷையிலே எழுதப்பட்டிருப்பதால் இவை நமது நாட்டு பொது ஜனங்கள் ரஸானு பாவத்துடன் பாடுவதற்குப் பயன்பட மாட்டா.

தியாகராய்யர் தெய்வ வரம் பெற்றவர். தியாகய்யர் ரஸக் கடல். கர்நாடக சங்கீதம் இப்போது உயிர் தரித்திருப்பதற்கு அவரே காரணம். பூர்வ காலத்து ஞானிகளைப் போல இவர் இஷ்ட தேவதைக்கு ஆத்ம யக்ஞம் செய்துதான் கற்று வித்தை வடிவாகி விளங்கினார். இவருடைய பாட்டுக்களை இக்காலத்துப் பாடகர் அதிக சங்கதிகளாலும், ரஸ நாசத்தாலும், சொற்களைத் திரித்தல், விழுங்குதல் முதலிய செய்கைகளாலும் இயன்றவரை ஆபாசமாகி விட்ட போதிலும் இன்னும் அவற்றிலே பழைய ஒளி நிற்கத் தான் செய்கிறது. குப்பையிலே கிடந்து மாசேரி ஒளி மங்கிப் போயிருந்த போதிலும், மாணிக்கத்தின் குணம் ரத்ன பரீட்சைக்காரனுக்குத் தெரியாதா? அது போலவே ரஸ உண்மை தெரிந்தோர் இத்தனை குழப்பத்துக்கிடையே தியாகய்யருடைய தொழிலின் ஸ்வரூபத்தை நன்கு கண்டு பிடித்துக் கொள்ள

முடியும். கீர்த்தனத்தில் ராக தாளங்களை இசைக்கிற மாதிரியிலேயே அர்த்தம் தொனிக்க வேண்டும். அதைத்தான் ரஸச்சேர்க்கை என்று சொல்லுகிறோம். இதிலே தியாகய்யர் மிகவும் சிறப்புக் கொண்டவர் என்று மகாகவி பாரதி தன் காலத்திய கர்நாடக சங்கீதத்தைப்பற்று எழுதுகிறார்.

ஆயினும் கடந்த நூற்றாண்டு காலத்தில் கர்நாடக சங்கீதத்தையும் சங்கீதப் பயிற்சியையும் முன்னுக்குக் கொண்டு வருவதில் பெரும் முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது. புதிய பல இளம் வித்வான்கள் ஏராளமாகத் தோன்றி முன்னுக்கு வந்திருக்கிறார்கள். தமிழில் கீர்த்தனைகள் ஏராளமாக வந்து பழக்கத்திற்கு வந்திருக்கிறது. சபாக்கள் அதிகமாக உருவாக்கப்பட்டு கர்நாடக சங்கீதம் அதிகமாக விரிவுபட்டு வருகிறது. தமிழ் இசைக்கு மதிப்பும் மரியதையும் அதிகரித்து வருகிறது. இசைப்பயிற்சி, பள்ளிகள் கல்லூரிகள் இசையை வளர்க்க முன் வந்துள்ள பல்கலைக்கழகங்களும் இந்தத் துறையில் அதிகமுனைப்புக்காட்டி வருகின்றன. சினிமாவின் வளர்ச்சியும் இசையின் வளர்ச்சிக்கு தனது பங்கை ஆற்றி வருகிறது.

கர்நாடக சங்கீதம் தவிர இதர பாட்டு வகைகளும் தமிழகத்தில் பரவியிருந்தது. இதுபற்றியும் மகாகவி பாரதி தனது கட்டுரையில் குறிப்பிடுகிறார்.

கும்பிப்பாட்டு, பல்லிப்பாட்டு, கிளிப்பாட்டு, நலங்குப்பாட்டு, பள்ளியறைப்பாட்டு, அம்மானைப்பாட்டு, தாலாட்டுப் பாட்டு முதலிய பெண்களுடைய பாட்டெல்லாம் மிகவும் இன்பமான வர்ண மெட்டு, தமிழர்களின் தாய், அக்காள், தங்கை, காதலி முதலிய இவர்கள் பாடும் பாட்டு மறக்கக்கூடிய இன்பமா? ஞாபம் இல்லையா?

தமிழ்ப் பெண்களின் பாட்டைக் கையெடுத்துக் வணங்குகிறோம். ஆனால் அதில் ஏற்படுத்தவேண்டிய சீர்த்திருத்தங்கள் இருக்கினறன.

பெண்களின் பாட்டு

தமிழ் நாட்டுப் பெண்கள் பாடும் பாட்டு வகைகளைப் பற்றி மகாகவி குறிப்பிடுகிறார். அவையெல்லாம் இன்று நாம் கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டியவை.

இரு பாலருக்கும் பொதுவான சந்தங்கள் இருப்பதுடன் பெண்களுக்கு மாத்திரம் சிறப்பான பாட்டுகளும் சந்தங்களும் இருக்கின்றன. பண்டைத் தமிழ் நாட்டு மாதர் பாடிக் கொண்டிருந்த பல பாட்டு வகைகள் இப்போது வழக்கின்றி இறந்து போய்விட்டன.

ஆனால் ஜீவன் பெண் என்றும் பரமாத்மா ஆணென்றும் பாவனை செய்து பழைய பக்தர் பாடியிருக்கும் பாட்டுக்களில் பெண்களுக்குரிய சில பாட்டு வகைகள் காணப்படுகின்றன.

திருஷ்டாந்தமாக திருவாசகத்திலே பின் வரும் வகைள் காணலாம்.

1. எம்பாவை (பெண்கள் நீராடப் போவது)

2. அம்மானைப் பாட்டு

3. தும்பி, குயில், கிளி முதலிய தூதுப் பாட்டுகள்

4. தெள்ளேணம் (நடுவே ஒரு பெரிய முரசை வைத்துக் கொண்டு பெண்கள் சுற்றியிருந்து இரண்டு கைகளிலும் கோல் கொண்டு கொட்டி அந்தத் தாளத்திற்கு இசையைப் பாடுதல்.

5. சுண்ணம் இடித்தல். (சுணணம் என்பது கந்தப்பொடி)

6. சாழல்

7. உந்தி

இவ்விரண்டும் பெண்களுடைய விளையாட்டு என்று தெளிவாகிறது. ஆனால் விளையாட்டின் விவரங்கள் தெரியவில்லை.

8. பூவல்லி (பெண்கள் பூக் கொய்யும் போது பாடுவது)

9. தோணோக்கம் (பெண்கள் தோள் கோர்த்துப் பாடிக்குதிப்பது)

10. ஊசல் (இசை இக்காலத்தில் ஊஞ்சற்பாட்டு என்கிறோம்)

11. காலைத்துயில் எழுப்பும் பாட்டு.

இங்ஙனம் தாலாட்டு, அம்புலி, செங்கீதை, சப்பாணி முதலிய வேறு பல வகைகளும் இருக்கின்றன. பிள்ளைத்தமிழ் என்னும் நூல் வகுப்பைக் கொள்க. இவற்றிலே தாலாட்டு, ஊஞ்சல், அம்மானை, பள்ளியெழுச்சி என்ற நான்கு வகையும் வெவ்வேறு சந்தங்களுடன் இக்காலத்தில் நமது பெண்களுக்குள் வழங்கி வருதல் காண்கிறோம். பழைய காலத்து வகைகளை நாம் விஸ்தாரமாகக் கவனிப்பதற்கு வேண்டிய சௌகர்யங்கள் இல்லை. ஆதலால் பெயர் மாத்திரமே குறிப்பிட்டிருக்கிறோம்.

குடும்பத்துப் பெண்களிலே சாஸ்திரப்படி சங்கீதம் கற்றுக் கொள்வோரின் தொகை மிகவும் குறைவு நகரப்பழக்கமும் சுக ஜீவனமும் உடைய குடும்பங்களில் மாத்திரமே பெண்களுக்கு வாத்தியார் வைத்துப்பாட்டு கற்றுக் கொடுக்கிறார்கள். ஆயினம் வாத்தியார் இல்லாமல் சாஸ்திர வழிகளில் வாசனை ஏற்பட்டவர் பலர் உண்டு.

இவர்களையல்லாது பொதுப்படையாகப் பார்க்கும்மிடத்து நமது மாதர் பாட்டுக்களின் இன்பம் பின்வருமாறு:

1. கல்யாணப்பாட்டு, நலங்கு, பத்யம், ஊஞ்சல், ஓடம் முதலியன.

2. கும்மிப்பாட்டு குதித்துப் பாடுகின்ற பாட்டுக்கள் இவ்வகுப்பில் கிளிப்பாட்டு, பல்லிப் பாட்டு முதலியனவும் அடங்கும்.

3. அம்மானை, தூது, மாலை, சோபனம் முதலிய நீண்ட கதைப்பாட்டுக்கள்.

4. பொதுத்தாலாட்டு, விளையாட்டுப் பாட்டுக்கள், ஜவாளிகள், கீர்த்தனை முதலியன.

மேலும் பண்ணைகளில் வேலை செய்யும் பெண்கள், நெல்குத்துவோர், சுண்ணாம்பு, இடிப்போர், குறி கார், தொம்பாச்சி, முதலிய வகுப்பினர் தமக்கென்று தனியாக மெட்டுக்கள் வைத்து கொண்டிருக்கிறார்கள். மேற்கூறப்பட்ட பாட்டுக்களில் மிகவும் இன்பமான சந்தங்கள் பல இருக்கின்றன. இவை கால வென்றத்தில் மறைந்து போகு முன்பாக சங்கீத வித்வான்கள் பொறுக்கி எடுத்து ஸ்வர நிச்சயம் செய்து வித்தைப் பழக்கத்திலே சேர்த்து விட வேண்டும்.

பெண்களுக்குக் கல்விப் பயிற்சி ஏற்பட்டால் இப்போதுள்ள கொச்சை மொழிகளும் பிழைகளும் நலக்குறைவும் பொருந்திய பாட்டுக்களை மறந்து விடுவார்கள். ஆனால் அத்துடன், பழைய சங்கீதக் கட்டுகளை மறந்து போகாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். பழைய வழிகளை முற்றிலும் மறந்து போய் நமது பெண்கள் நாடக மெட்டுக்கள் முதலியவற்றையே பாடத் தொடங்கிவிட்டால் தமிழ் நாட்டில் சங்கீத உணர்ச்சி நாசமாகிவிட ஹேது உண்டாகும்'' என்றும்,

''கொச்சை மொழிகளும் ரஸக் குறைவும் மலிந்த பாட்டுக்கள் என்று சொன்னோம். ஆனாலும் ஒரு கூவைட பதரில் ஒரு ஆழக்கு அரிசி, அகப்படும். அதை நாம் இழந்து விடக்கூடாது. கவிதைத் தேட்டமுடையோர் நமது பெண்களின் பாடப்டைத் தேடிப்பார்த்தால் சிற்சில இடங்களில் நல்ல கவிதை கிடைக்கும். பாட்டி ராமாயணத்தில் குசலவரின் கதையை ஒரு களப்பாட்டாகச் சொல்லுவாள். அதில் சிதையின் கஷ்டங்களைக் கேட்கும் போது குழந்தைகள் எல்லாம் கண்ணீர் விட்டமும் ராமனை குசலவர் வெல்லும் இடத்து வரும் போது மனதிலே ஆத்திரம் பொங்கும் ராமனுக்கு வேணும் நன்றாக வேணும் என்று தோன்றும். நலங்குப் பாட்டு, கும்மி முதலியவற்றிலே கூடச்சில இடங்களிலே முத்துப் போல வார்த்தைகள் அகப்படும். தொழிற் பெண்களின் பாட்டு மிகவும் ரஸமானது. சந்தமும் இன்பம் ஒன்றுக்குப் பாதி நல்ல கவிதை.

பெண்களின் பாட்டில் செய்ய வேண்டிய சீர்திருத்தங்களில் பெரும்பகுதி ஏற்கனவே குறிப்பிட்டிருக்கிறேன். இதன் சம்பந்தமாக இங்கே இன்னும் சில வார்தைகள் சேர்க்க விரும்புகிறேன். வீட்டிலே பந்துக்களின் முன்பும் விவாக சந்தர்ப்பங்களிலும் பாடும் போது கூச்சத்தினாலே பாட்டை விடக்கூடாது.

வித்தை விஷயத்தில் கூச்சங்காட்ட நியாயமில்லை. வித்தைப் பயிருக்கு விடுதலை நீர் பாய்ச்ச வேண்டும். மேலும் பெண்களுக்குள்ளே பொதுக்கல்வியை நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்க்க வேண்டும். கல்வியறிவில்லாத மூடர் எந்தத் தொழிலிலும் நேரே செய்ய மாட்டார்கள் . தவிரவும் பாரிஸ் மெட்டிலே ஆர்த்தி எடுப்பது இங்கிலிஷ் நலங்கு முதலிய கோரமான விகாரங்களுக்குத் துணை செய்யக்கூடாது. நமது நாடக காலைக்குள்ளே கல்வியறிவும், சாஸ்திரப் பழக்கமும் நாகரிகமும் நுழையும் காலம் வரை நமது பெண்கள் நாடகப்பாட்டுக்களை கவனியாமல் இருப்பது நன்று. வேதாந்தக் கொடுமையையும் கொஞ்சம் குறைத்துவிட்டால் பெரிய உபகாரம்.

அபிநயம்

கூத்திலே அபிநயமே பிரதானம்

தாள விஸ்தாரங்களைக் கூத்தன் தனது உடம்பிலே தோற்றுவிப்பதே கூத்தின் உடல் அபிநயமே கூத்தின் உயிர். தாளந்தவறாமல் ஆடிவிட்டால் அது கூத்தாகாது.

பாகவதர் ஒருவர் வேதபுரத்தில் நந்தனார் சரித்திரம் நடத்தினார். நந்தன் அடிமை ஐயர் ஆண்டை ஐயருக்கு முன்னே நந்தன் போய் நிற்கிறான். ''நைச்ய'' பாவம் என்றது நைச்யத் தோற்றம். நைச்யம் என்பது நீசன் என்ற சொல்லடியாகத் தோன்றி நீசத்தன்மை என்று பொருள்படும் குணப் பெயர். இங்கு நீசன் என்பது அடிமை. எனவே நைச்ய பாவமென்றால் அடிமைத் தோற்றம். இதை அந்தப் பாகவதர் அபிநயங்களால் காட்டினார். நிரம்ப நேர்த்தியான வேலை செய்தார். புருவத்தை அசைக்கிற மாதிரிகளும் கடைக்கண் காட்டுகிற மாதிரிகளும் தோளையும் வயிற்றையும் குலுக்குகிற மாதிரிகளும் மெல்ல மெல்ல பாகவதருடைய அபிநயங்கள் பக்தி ரஸத்திலிருந்து சிருங்கார ரஸத்தின் தோரணைகளுக்கு வந்து சேர்ந்தன. மேற்படி சிருங்காரத்தின் அபிநயங்களிலேயும் மேற்படி பாகவதர் குற்றமில்லை. புருவமும் கடைக்கண் முதலியவற்றை மிகத் திறமையுடன் வெட்டுகிறார். சிருங்கார ரஸத்திற்கு ''பாவம் ரதி, சந்திரன் சந்தனம் முதலிய உத்தீபனங்கள் அல்லது தூண்டுதல்கள் என்றும் சாஸ்திரம் சொல்லுகிறது. மேற்படி பாகவதர் சந்திரன் முதலியவற்றைக் கண்ணாலே குறிப்பிடுகிறார்.

ஆனால் இவர் புருஷராக இருந்தும் புருஷாபிநயங்கள் குறைவாகவும் நாயிகாபிநயங்கள் அதிகமாகவும் கற்றிருக்கிற விந்தை குறிப்பிடத்தக்கது.

மேற்படி நைச்யபாஸத்திலே அதாவது அடிமைத் தோற்றம் காட்டுவதிலே கூட இவர் இந்தப் பெண்மையைக் கலப்பதனால் அதிக சிரமம் ஏற்படுகிறது. ஆண்டையின் முன்னே வந்து நிற்கும் நந்தன் பறை பாதியும் தாஸி, பாதியுமாகக் காட்டுகிறார்.

இருந்தாலும் பாகவதருடைய முகத்தில் காட்டும் அபிநயங்களைப் புகழ்ந்து சொல்லுதல் நம்முடைய கடமை. ஊடலை மாத்திரம் முகத்தில் தொண்ணூற்றொன்பது அபிநயங்களில் காட்டுகிறார். இப்படி மற்ற வகுப்புகளையும் சேர்த்தால் எத்தனைவித அபிநயங்களாகும்? நிறைய ஆகும் அல்லவா? கருணைரசத்தின் பாவம் சோகம் என்று சொல்லப்படும் இதைக் காட்டுவதில் மேற்படி பாகவதருக்குத் தோடா பண்ணிப் போடத்தகும். இன்னும் ஒன்று கடைசி. அதிலே தான் அந்தப் பாகவதர் முதல் தரமான வேலை செய்கிறார். அதாவதுபயாரக ரஸத்தைப் பதினாயிரம் அபிநயங்களில் காட்டுகிறார். இந்த ரஸத்திற்கு பாவம் பயம். மானுக்கும் முயலுக்கும் சில மனுஷ்யருக்கும் இயற்கையாகவுள்ள பயத்தை இவர் அபிநயத்தில் பூதக் கண்ணாடி போலக் காட்டுகிறார். இந்த பாவதர் சில தினங்களுக்கு முன்பு என்னைப் பார்க்க வந்தார்.

''ஹாஸ்யரஸம், ரௌத்ரஸம், வீர ரஸம், அற்புதம், சாந்தம் என்ற ஐந்து ரஸங்களையும் நீங்கள் தீண்டவேயில்லை. அதென்ன காரணம் என்று கேட்டேன். அந்தப் பாகவதர் செகல்லுகிறார், ''நான் என்ன செய்வேன்? நான் நாட்டில் சாஸ்திரம் படித்தது கிடையாது. ஊரிலே கண்ட அபிநயங்களை நான் நடித்துக்காட்டுகிறேன். ஹிந்துக்களிலே அடிமைத்தனம் அதிகம். ஆதலால் எனக்கு ''நைசிய பாவம்'' என்ற அடிமைத் தோற்றம் காட்டுதல் மிகவும் சுலபமாக வருகிறது. வீரரஸம் காட்டச் சொன்னால் எப்படிக் காட்டுவேன்? நான் பிறந்தது முதலாக இன்று வரை சஞ்சாரம் செய்து வந்திருக்கிற ஏழெட்டு ஜில்லாக்களில் ஒரு வீரனைக் கூட பார்த்ததில்லை. வீர ரஸத்திற்கு நான் எங்கே போவேன்'' என்று சொன்னார். அப்போது நான் ''ரஸ பண்டாரம்'' என்று சம்ஸ்க்ருத சாஸ்திரத்திலிருந்து பின்வரும் பொருளுடையை சுலோகங்களை அவருக்குப் படித்துக் காட்டினேன். அந்த நூல் சொல்லுகிறது.

''லோக நடையினாலே சாஸ்திரம் பிறக்கிறது. அந்த சாஸ்திரத்தைப் பயிற்சியினாலே விஸ்தாரப்படுத்துகிறார்கள்.''

ரஸ திருஷ்டி ஏற்படுவதற்கு இயற்கையே மூலம், ரஸவான்களுடைய பழக்கத்தாலும் பக்தி வழிகளை அனுசரிப்பதனாலும் ஒருவன் ரஸக்காட்சியை வருவித்துக் கொள்ளலாம்.

''ராகத்துவேஷங்களை ஜயிப்பதனால் ஒருவன் சித்த சமாதியடைகிறான். அப்போது ஞான திருஷ்டியுண்டாகிறது. அந்த ஞான திருஷ்டியுடையவர்கள் புறப்பயிற்சியில்லாமலே சாஸ்திரங்களுக்குக் கண்ணாடி போல் விளங்குவார்கள்.

''சிங்கார ரஸத்தை ஒரு கூத்தன் காண்பிக்கும் அபிநயங்களில் கூத்துப் பெண்ணுடைய அபிநயங்கள் கலக்கலாகாது. ஆண் மகனே பெண்ணுருக் கொண்டு கூத்தாடுவானாயின் அப்போது பெண்ணை அபிநயங்கள் காண்பிக்கத்தகும். ஆண் மகன் உருமாறால் கூத்தாடும் போது பெண்மை

தோன்றலாகாது.

வீரரஸத்தில் ஒருவன் தேர்ச்சியடை விரும்புவானாயின்; ராமன் முதலிய அவதார புருஷர்களுடைய வடிவை அவன் தியானம் செய்யக்கடவான். நாராயண உபாசனையே கூத்தனுக்கு வீராசத்தில் தேர்ச்சி கொடுக்கும்.

பயாநகரஸத்தை சபையிலே கூத்தன் அதிகமாக விவரிக்கலாகாது. எந்த நாட்டில் கூத்தர் பயநகத்தையும் சோகத்தையும் அதிகமாகக் காட்டுகிறார்களே அந்த நாட்டில் பயமும் துயரும் அதிகப்படும்.

நைசியபாவம் அதிகமாகத் தோன்றும் கூத்தினாலே ஒரு நாட்டார் அடிமை இயற்கை மிகுதியாக உடையவர்கள் என்பதைத் தெரிந்து கொள்ளலாம். ஆதலால் கூத்தர் கூத்துக்களில் அடிமைத் தோற்றத்தை மிக மிங்சிக் காட்டாதபடி நாட்டார் கவனித்துக் கொள்ள வேண்டும்.

நாட்டில் சாஸ்திரத்தை உண்மையாகப் பயின்றால் அதிலிருந்து ஆண்களுக்கு ஆண்மையும் பெண்களுக்குப் பெண்மையும் உண்டாகும். அதை நெறி தவறிப் பயிற்சி செய்தால் அதிலிருந்து ஆணுக்குப் பெண்மையும் பெண்ணுக்கு ஆண்மையும் விகாரமாகத் தோன்றும்.

நாட்டிய சாஸ்திரத்தை ஆதியில் பரமசிவன் நந்திக்குக் கற்றுக் கொடுத்தார். அப்போது பகவான் நந்தியை நோக்கி ''கேளாய் நந்தி! அபிநயம் தவறுவதாலே ஜனங்கள் நரகத்தை அடைகிறார்கள். தர்மிஷ்டனாகிய கூத்தன் அபிநய உண்மைகளை ஆச்சார்யனிடமிருந்து நியமங்களுடனே கற்றுக் கொள்ள வேண்டும். அடிமைகள் கூத்துப் பழகினால் அபிநய தர்மங்களைச் சிறிதேனும் தெரிந்து கொள்ளாமல் எப்போதும் அடிமைக் கூத்தொன்றே ஆடிக் கொண்டிருப்பார்கள். அங்ஙனம் அடிமைகள் சாஸ்திரி விரோதமாக நைச்யம் ஒன்றையே காட்டி நடத்தும் கூத்தைப் பார்ப்போர் நரகத்தை அடைகிறார்கள் என்று சொல்லி மேலும் சொல்லுகிறார்.

தர்மிஷ்டனாகிய சிஷ்யன் நெறிப்படி ஆசார்யனிடமிருந்து கற்றுக் கொண்ட நாட்டியத்தில் நவரஸங்களும் சமரசப்பட்டுக் காண்போருக்கு ஆனந்தத்தையும் லட்சுமி கடாக்ஷத்தையும் ஏற்படுத்தும். நல்ல ஆசார்யன் இல்லாமல் இந்த நாட்டிய சாஸ்திரத்தைப் பழகுவோன் உண்மையான பக்தியுடையவனாக இருக்க வேண்டும். தெய்வ பக்தியினாலே சகல வித்தைகளும் வசப்படும்.

இங்ஙனம் மேற்படி ரஸ பண்டாரமென்ற நூலிலிருந்து நான் பல சுலோகங்களை அவருக்குப் படித்துக் காட்டினேன். இதையெல்லாம் கேட்டவுடன் அந்த பாகவதர் மிகவும் சந்தோஷமடைந்தவராய் ''இந்த சாஸ்திரத்தை என்னிடம் கொடுங்கள் நான் எழுதிக் கொண்டு இந்தப் பிரதியைக் கொடுத்து விடுகிறேன்'' என்றார். ''அப்படியே செய்யுங்கள்'' என்ற சொல்ல அந்த சுவடியை அவரிடம் கொடுத்தேன்.

அந்த சாஸ்திரத்தில் ''ரஸ ஞானத்திற்கு உபாசனையே முக்கிய ஸ்தானம்'' என்பது மிகவும் அழுத்திச் சொல்லப்படுகிறது. அதன் பேரில் தாம் சில தினங்களுக்கு முன்பு வேத நாயகர் கோயிலைப் பிரதக்ஷணம் செய்து கொண்டிருந்ததாகவும் அப்போது இந்த ஊர்க்குள்ளச்சாமி என்ற பரதேசி தம்மை இடையே நிறுத்தி ''ஓம் சக்தி'' என்ற மகாசக்தி மந்திரத்தை நமக்கு உபதேசம் செய்து விட்டுப் போனதாகவும் அதிலிருந்து தாம் பராசக்தி உபாசனை செய்து வருவதாகவும் சொன்னார்.

''நான் மிகவும் சந்தோஷத்துடன் அவரை வண்டியேற்றி வழியனுப்பி விட்டு வந்தேன். அவர் இன்னும் நம்முடைய புஸ்கத்தை திரும்பக் கொடுத்தனுப்பவில்லை'' என்று மகாகவி எழுதுகிறார்.

சங்கீத விஷயத்தைப் பற்றியும் கூத்து (நாட்டியம்) பற்றியும் மகாகவி பாரதியார் அற்புதமாக இந்தக் கட்டுரையை சிறந்த கருத்துச் செறிவுகளுடன் எழுதியுள்ளதைக் காண்கிறோம்.

மகாகவி பாரதியார் சிறந்த கவி ஒருடன் நல்ல குரல் வளம் மிக்க பாடகரும் கூட அவர் தன்னுடைய கவிதைகள் அனைத்திற்கும் ராகம், தாளம், வர்ணமெட்டு முதலியவற்றை அமைத்து இயற்றியுள்ளது.

மகாகவி பாரதியார் நல்ல சங்கீத ஞானமுள்ளவர் பாட்டுக்களில் நவரஸங்களும் வெளிப்பட வேண்டுமென்பது அவர் விருப்பம், பாரதியார் கர்நாடக இசையில் நல்ல ஞானமும் அனுபவமும் உள்ளவர். இந்துஸ்தானி இசை பற்றியும் அறிந்தவர்.

இசை பற்றி பாரதம் சிறந்த பாரம்பரியத்தையும் அனுபவத்தையும் கொண்டது. இசையை தெய்வீகத் தன்மையுடன் இணைத்து பாரதம் மிகவும் உயர்ந்த நிலைக்கு உயர்த்தியுள்ளது. அதைப் போலவே சிறந்த நல்ல எளிமையான சிறந்த இசைக்கருவி கருவிகளையும் படைத்துள்ளது. நல் இசையுடன் தாளஞானத்தையும் பாரதி சிறப்பாகக் குறிப்பிடுகிறார். நமது நாட்டின் சிறந்த இசைக்கருவிகளான தம்பூர், வினை (யாழ்) ஆகியவற்றின் சிறப்புகளைப் பற்றிக் கூறுகிறார்.

பெண்களின் தனிப்பாடல்கள், கூட்டாகப் பெண்கள் சேர்ந்து பாடும் பாடல்கள் மற்றும் சாதாரண மக்கள் பாடும் பாடல் வகைகள் பற்றி மிகவும் சிறப்பாகப் பேசுகிறார்.

தமிழின் சிறந்த இலக்கியங்களான முக்தி இலக்கியங்கள் தோவாரம், திருவாசகம், சைவத்திரு முறைகள் நாலாயிரத்தில் யப்பிரபந்தம் ஆகியவை சிறந்த பக்தி நிறைந்த இசை, நூல்கள் சிறந்த பாடல்கள். அவைகளை மகாகவி பாரதி போற்றுகிறார்.

மகாகவி பாரதி நாட்டில் (அபிநயம் பற்றி) மிகச்சிறந்து கருத்துக்களை

வெளியிட்டிருக்கிறார்.

மகாகவி பாரதியின் கருத்துக்கள் ஆயிரமாயிரம் ஆண்டுகள் தமிழ் மக்களிடம் நிலைத்து நிற்கும்.

வாழ்க பாரதி நாமம்.

★★★

அரசியல்

சுதேசிய முயற்சியும் மக்கள் எழுச்சியும்

இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் சுதேசி இயக்கம் மேலும் வளர்ச்சி பெற்றது. நாடெங்கும் பரவியது. தீவிரவாத இயக்கம் வலுப்பெற்றது. சுதந்திரம் எனது படிப்புரிமை என்று திலகர் அறை கூவல் விடுத்தார். இந்திய தேசிய காங்கிரஸ் மகாசபை ஆண்டு தோறும் கூடி இந்திய மக்களுடைய பல்வேறு அரசியல் உரிமை கோரிக்கைகள் பற்றிப் பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. இளைஞர்களிடம் வேகமாக சுதந்திர உணர்வும் வேகமும் அதிகரித்தது. மகாகவி பாரதி தனது கட்டுரையில் எழுதுகிறார்.

''சுதேச முயற்சி பாட்டிலே தோன்றிய பிறகு பல விஷயங்களில் குணம் கண்டிருக்கிறோம். கைத் தொழில் அபிவிருத்தி தேசிய வர்த்தகம் ஜன ஐக்கியம். சுய பாஷைகளிவ் டவளர்ச்சி முதலிய பல அம்சங்களிலே கை கண்ட பலன் பார்த்திருக்கிறோம். இதை நாம் இன்னும் எத்ததனக் கெத்தனை ஆவலுடன் பரிபாலித்து வருகிறோமோ அத்தனைக்கத்தனை நாடு பலவிதங்களிலேயும் க்ஷேமப்பட்டு வரும்'' என்று மகாகவி பாரதி எழுதுகிறார்.

மகாகவி மேலும் எழுதுகிறார், ''ஆனால் சென்ற சில வருடங்களாக ஆங்கிலேய அதிகாரிகளிலே சில சில்லரை உத்யோகஸ்தர்கள் நம்மவர்களாகிய ஆங்கிலேய வார்த்கர்களுக்கு இதனால் நஷ்டமும் தமர்கே சில அசௌகர்யங்களும் உண்டாவது கருதி இசைச் சிலர் தப்பான வியாஜ்யங்களைச் சொல்லி அடக்கி விடப் பார்க்கிறார்கள். ஆட்டுக்குட்டியைத் தின்ன விரும்பிய ஓநாய், ''ஏ ஆட்டுக்குட்டியே நீ என்னைத் திட்டினாயாமே'' என்று கேட்ட கதை போல, இந்த ஆங்கிலேய உத்தியோகஸ்தர்கள் நம்மை இராஜத் துரோகிகளென்று பொய்க் குற்றஞ் சார்த்தித் தண்டனைகள் செய்து நமது காரியத்தைக் கொடுத்து விடப் பார்க்கிறார்கள்.

இங்ஙனம் ஆங்கில அதிகாரிகளிலே பலர் பொய்யான கோட நடிப்பு நடித்துக் கொண்டு நம்மவர்களிலே சில முதல்வர்களுக்கு மிருகத்தனமான தண்டனைகள் விதித்து விட்ட தினின்றும், கிராமந்திரங்களிலே சாமான்ய ஜனங்கள் சில சுதேசியம் என்று சொன்னாலே ராஜாங்கத்தாருக்கு விரோதமாகலாம் என்றெண்ணி நடு நடுங்கி தமது மனிதிற்குள்ளே நமது தர்மத்தில் அபிமானம் கொண்டவர்களாக இருந்தாலும் அச்சத்தினால் வெளிக்கு ஆசிரத்தை காண்பிக்கிறார்.

இது நிஷ்காரணமான பலம். அவசியமற்ற மூடத்தனம். ''வந்தே மாதரம்'' (தாயை வணங்குகிறேன்) என்பது எந்த சட்டத்திற்கு விரோதம் உள்நாட்டு சாமான்களையே கிரயத்துக்கு வாங்குவேன் என்ற விரதம் செய்து கொண்டால் என்னுடைய சட்டத்திற்கு விரோதம் என் பணம். அதைக் கொடுத்து எனக்கு இஷ்டமான சாமான் வாங்கிக் கொள்கிறேன். இதில் ராஜாங்கத்தார் என் தலையிட வேண்டும்.

கள், சாராயம் நாட்டிலே பரவாமல் தடுப்பதற்கு ஆங்கிலேயர் ராஜாங்கத்தார் யாதொரு உதவியும் செய்யாமல் தீர்வை லாபத்தைக் கருதி மது பானத்தைப் பரவச் செய்து கொண்டு வருகிறார்கள். எத்தனையோ சீர்திருத்த சங்கத்தார்கள் (சுதேசிகள் மட்டுமல்ல, மாக்னிக்கல், சாமுவெல் ஸ்மித் முதலிய பல ஆங்கிலேயர்களும் கூட) இது கூடாதென்று முட்டி முட்டிப் பார்த்தும் ஆங்கிலேய கவர்ன்மென்டார் சிறிதேனும் கவனிக்காம லருக்கிறார்கள்.

இப்படியிருக்க, என் தேசத்து கைக்கோளர்கள் செய்த துணிகளை நான் எனது நாட்டிலே பரவச் செய்வேன் என்றால் இது ராஜாங்காத்தாருக்கு பெரிய விரோதமாகவா போய்விடும்? எனது குழந்தைகள் எனது முதாதையர்களைப் பற்றியும் எனது தேச சரித்திரத்தைப் பற்றியும் ஒன்றுமே தெரியாமல் நான் நம்பும் வேதங்கள் சாஸ்திரங்கள் முதலியவற்றின் பெருமையை அறியாமல், ஜீவனத்திற்கு வேண்டிய கைத்தொழில்களைப் பற்றி எதுவே கற்றுக் கொள்ளாமல் மனிதர்களை ''போன கிராப்'' பெட்டிகளாகச் செய்யும் நாசகரமான கல்வி கற்கும்படி செய்து அவர்களைக் கொடுக்க மாட்டேன். ஜாதியப்பாட சாலைகளுக்கு , அனுப்பி ஐரோப்பியக் கல்வியிலே பிரயோஜனகரமான அம்சத்தை மட்டும் கற்றுக் கொள்ளும்படி செய்து எனது தேசத்து ஞானமும் என் குழந்தைகளுக்கு ஏற்படும் படி செய்வேன். இதில் சட்டத்திற்கு என்ன கஷ்டம் சம்பவித்து விட்டது?

இனிப் பணச் செலவு மிகுதியாவதை உத்தேசித்து எங்கள் வியாஜ்ஜியங்களைப் பஞ்சாயத்துக்கள் மூலமாகத் தீர்த்துக் கொண்டால் எந்த சட்டத்திற்கு விரோதம்?

எனது தகப்பன் காலத்தில் எங்களவர்களுக்கிருந்த தேக பலமும் சௌகர்யமும் தீர்காயுரும் இந்தத் தலைமுறையிலே ஏன் இல்லை? நாளுக்கு

நாள் எனது தேசத்தார்கள் குறுகி, மெலிந்து, துப்பலமடைந்து கூழணித்து அற்பாயுஸாக ஏன் மடிகிறார்கள். இதை நீக்கும் பொருட்டு ஊருக்கு ஊர் சரீர பலத்திற்குரிய கர்லா, சிலம்ஞ கஸரத் இவை பழகும் பயிற்சிக் கூடங்கள் ஏற்படுத்துவேன்.

நான் இப்படிச் செய்வதினால் எந்த சட்டம் முறிந்து போகிறது? இங்கிலிஷ் பாட சாலைகளிலே கூட நமது பிள்ளைகளுக்கு ஒரு விதமான சரீரப் பயிற்சி கொடுக்கவில்லையா? இங்கிலிஷ் பள்ளிக் கூடங்களிலே போய் படிக்கத் தகுந்த சொத்தில்லாத பிள்ளைகள் எங்கள் தேசத்தில் கோடிக்கணக்காக இருக்கிறாரகள். இவர்களுடைய சரீரம் பல மடையக்கூடாதென்று எங்கேனும் சஸ்திரமேனும் சட்ட மேனும் உண்டா? அதற்குரிய முயற்சிகளை நான் செய்தால் அதனின்று சட்டத்திற்குத் தலை நோவு கண்டுவிடுமா? சீச்சி, சுதேசியம் சட்ட விரோதம் என்று சொல்லுகிறவர்கள் பொய் சொல்லுகிறார்கள்.

அவர்கள் நம்மைக் கெடுக்க வேண்டும் என்ற எண்ணத்துடன் பேசுகிறார்கள். அவர்கள் பேச்சைக் கேட்டு மயங்குபவர்கள் தேசநலம் அறியாதகளிமண் அறிவு கொண்ட மூடர்கள்.

அந்நிய வஸ்துவர்ஜனம், ஜாதீயக் கல்வி, பஞ்சாயத்து, சரீரப் பயிற்சி இந்த நான்குமே சுதேசியம் என்ற புண்ணிய பலத்தைத் தாங்குகின்ற நான்கு தூண்களாகும். இவற்றை ஆதரிப்பது நமது கடமை. இதில் சட்டத்திற்கு எவ்விதமான விரோதமும் கிடையாது. இவற்றை ஆதரிக்காமலிருப்பவர்கள் தேசத்துரோகிகள் ஆவார்கள் என்று மகாகவி பாரதியார் எழுதுகிறார். இந்த வரிகளை நாம் கருத்தூன்றிப் படிக்க வேண்டும். இந்தக் கட்டுரை வரிகளை மகாகவி பாரதியார் எழுதிய காலம் இருபதாம் நூற்றாண்டின் தொடக்கம். பாரத நாட்டில் ஆங்கிலே அன்னியர் ஆட்சி வலுவாகப் படிந்து அவர்கள் ஆதிக்கம் செலுத்திக் கொண்டிருந்த காலம்.

ஆங்கிலேயர் ஆட்சி காலத்தை இந்தியாவில் வரலாறு பூர்வமாக இரண்டு கட்டமாகப் பிரிக்கலாம். 1757 ஆம் ஆண்டில் வங்காளத்தில் நடைபெற்ற பிளாசி யுத்தத்தில் ஆங்கிலேயர் வியாபாரக் கம்பெனியின் ராணுவ படைகள் வெற்றி பெற்று அப்பகுதியின் ஆட்சியை வரிவசூல் அதிகாரத்தை நிர்வாகத்தைக் கைப்பற்றினார்கள். அது முதலாக இந்திய மண்ணில் பிரிட்டிஷ் ஆட்சி தொடங்கியது என்று கூறிலாம். அது முதல் பிரிட்டிஷ் கிழக்கிந்திய கம்பெனியார் இந்தியாவில் வியாபாரம் மட்டும் செய்யவில்லை. பிரிட்டிஷ் கம்பெனியாரின் ராணுவம் படைகளும், இந்திய நாட்டைப் படிப்படியாக, போர்கள் நடத்தி அங்காங்கிருந்த அரசர்களை எதிர்த்துப் போர் நடத்தி, ஆட்சிகளைக் கைப்பற்றி அரசியல் நிர்வாகத்தைக் தங்கள் கையில் எடுத்துக் கொண்டு ஆட்சியாளர்களாக மாறினார்கள்.

பிரிட்டிஷ் கிழக்கிந்திய கம்பெனி, தனது வியாபாரக் கம்பெனியுடன்,

இராணுவத்தையும் வைத்துக் கொண்டு, சாத்தியப்பட்ட இடங்களில் எல்லாம் ஆட்சியைக் கைப்பற்றி ஆட்சி நிர்வாகத்தையும் நடத்தத் தொடங்கினார்கள். இந்திய நாட்டில் பிரிட்டிஷ் வியாபாரக் கம்பெனியின் ஆட்சியும் பிரிட்டிஷ் கிழக்கிந்திய கம்பெனி என்னும் பெயரிலான வியாபாரக் கம்பெனியின் நிர்வாகத்தின் பகுதியாக மாறியது.

இந்தியாவில் ஒரு ஒன்றிணைந்த ஆட்சி நிர்வாகம் அரசியல் நிர்வாகம் இல்லை. சட்டம் அமைதி என்று எதுவும் இல்லை. ஏறத்தாழ அராஜகமே நிலவியிருந்தது. தடியெடுத்தவன் தண்டல்காரன் ஆனார். அரசின் பணியாக வரி வசூல் மட்டுமே நடைபெற்றது. அந்த வரி வசூலை பிரிட்டிஷ் வியாபாரக் கம்பெனியார் தங்கள் ராணுவ பலத்தின் மூலம் தங்கள் ஆதிக்கத்தில் உள்ள பகுதிகளில் நடத்தினார்கள்.

தங்கள் வியாபாரக் கம்பெனியின் நிர்வாகம் பகுதியாக, வரி வசூல் பகுதியும் அதன் வரவு- செலவுப் பகுதியும் நடைபெற்றது. பிரிட்டிஷ் வியாபாரக் கம்பெனியின் படைகள் ஆங்காங்கிருந்த அரசுகளைப் போர்கள் மூலம் கைப்பற்றி தங்கள் அரசியல் நிர்வாகத்தை படிப்படியாக விரிவுப்படுத்திக் கொண்டார்கள். அதற்காக, பிரிட்டிஷ் கிழக்கிந்திய வியாபாரக் கம்பெனியின் படைகளும், தங்களுக்கு ஆதரவாக இருந்த இந்திய சிற்றரசுப் படைகளும் கணக்கற்ற சிறிய சிறிய நடுத்தரப் போர்களை நடத்தினார்கள்.

இந்த பிரிட்டிஷ் கம்பெனி படைகள் இந்தப் போர்களை நடத்திய போது, அவர்கள் சென்ற இடங்களில் எல்லாம் தங்கம், வெள்ளி, நகைகள், பண்ட பாத்திரங்கள், தானியங்கள், மரங்கள், மரச் சாமான்கள் மற்றும் பல வகைப் பொருள்களைக் கொள்ளையடித்துக் கையகப்படுத்திக் கொண்டார்கள்.

வீடுகளைக் கொள்ளையடித்தார்கள். கோயில்களைக் கொள்ளையடித்தார்கள். காடுகளைக் கொள்ளையடித்தார்கள். அரண்மனைகளைக் கொள்ளையடித்தார்கள். ஆடு, மாடுகளை அடித்து கொன்று தின்றார்கள். நமது நாட்டில் விளைந்த தானியங்கள் குறிப்பாக நெல், கோதுமை, பருத்தி, சணல், அவுரி, மற்ற பொருள்களையெல்லாம் குறைந்த விலை கொடுத்தும் வரிக் கொள்ளை, வட்டிக் கொள்ளையாகவும் சுருட்டிக் கொண்டு போனார்கள்.

உதாரணமாக வடக்கு தமிழ்நாட்டுப் பகுதிகளில் வந்தவாசி போர்களிலும் மைசூர் போர்களிலும், பிரிட்டிஷ் படைகளும் பிரஞ்சு படைகளும் நவாப் படைகளும் மாறி மாறிச் சென்று ஊர்களையே நாசமாக்கினார்கள். வழி நெடுகிலும் கிராமங்களிலும் ஊர்களிலும் இருந்த ஆடு, மாடுவுகளையெல்லாம் அடித்து தின்றார்கள். ஊர்களை சூரையாடினார்கள். நாட்டில் ஆடு, மாடு இனங்களே அழிந்து போய், சாகுபடித் தொழில் நின்று போய் நெசவுத் தொழில் நின்று போய், பல லட்சக்கணக்காண மக்கள்

பட்டினியாலும் படைகளின் தாக்குதல்களாலும் செத்து மடிந்தார்கள்.

இப்படிப்பட்ட கொள்கைகளினால் பிரிட்டிஷ் கிழக்கிந்திய கம்பெனியின் சாதாரண குமாஸ்தாக்கள், பணியாட்கள், கூட கோடீஸ்வரர்கள் ஆகி இங்கிலாந்தில் பெரிய பிரபுக்கள் ஆனார்கள். பிரிட்டிஷ் அரசு, இந்தியாவில் பிரிட்டிஷ் கிழக்கிந்திய கம்பெனி நடத்திய கொள்ளை கொலைகள், போர்கள் பற்றி பல விசாரணைக் கமிஷன் அமைத்து விசாரணை நடத்தி அறிக்கைகள் தயாரித்தார்கள். அந்த அறிக்கைகள் வெளியிடப்படவில்லை. அதிலிருந்து வெளியான சிலதகவல்களே கூட உலகை திடுக்கிட வைத்தன. பிரிட்டன் ஆட்சியில் இருந்த தோடுங்காலர்களையும் கூட திடுக்கிட வைத்தன.

இதனையே பாரதி தனது பாடல்களில்,

''பொழுதெல்லாம் எங்கள் செல்வம்

கொள்ளை கொண்டு போகவோ நாங்கள்

சாகவோ, அழுது கொண்டிருப்போமோ?

நாங்கள் ஆண் பிள்ளைகள் அல்லவோ?''

என்று பாடினார்.

இத்தனை கொடுமைகளுக்கிடையிலும், பிரிட்டிஷ் வியாபாரக் கம்பெனியின் படைகள் அவ்வளவு சுலபமாக இந்திய நாட்டைக் கைப்பற்றி விடவில்லை. பல இடங்களில் பிரிட்டிஷ் படைகளுக்குக் உள்நாட்டு படைகள் மக்கள் கடுமையான எதிர்ப்புகள் இருந்தன. பிரிட்டிஷ் படைகள் கடுமையான பல போர்கள் நடத்த வேண்டியதிருந்தது.

இந்தப் போர்களில் ஏராளமான இந்தியப் படைகளும் பிரிட்டிஷ் கம்பெனி படைகளும் மாண்டன. பல இடங்களிலும் பிரிட்டிஷ் படைகளுக்குக் கடுமையான எதிர்ப்புகள் இருந்தன. ஆங்காங்கிருந்த சிறு நில, குறு நில மன்னர்களும் பிரிட்டிஷ் கம்பெனியின் படைகளை எதிர்த்துக் கடுமையான பல போர்களை நடத்தினார்க். ஆங்கிலேயக் கம்பெனிப் படைகளுக்கு பல இடங்களில் மக்களும் எதிர்ப்பு தெரிவித்தனர். போரிட்டனர். அடித்து விரட்டினார்கள். மக்களும் சுசகமாக அடிபணிந்து விடவில்லை.

ஆங்கிலேய கம்பெனிப் படைகளும் அவர்களுக்கு ஆதரவாகச் சென்ற கிறிஸ்தவப் பாதிரிகளுக்கும் பல இடங்களில் கடும் எதிர்ப்பு இருந்தது.

நூறாண்டுகள்:

இவ்வாறு ஏற்பட்ட எதிர்ப்புகளையும் ஆயுத பலத்தாலும் வன்முறைகளாலும் பிரிட்டிஷ் படைகளும் கம்பெனி நிர்வாகமும் பாரத

தேசம் முழுவதையும் படிப்படியாக தங்கள் ஆளுகையின் கீழ் கொண்டு வருவதற்கு ஒரு நூறு ஆண்டுகள் ஆயின.

பிரிட்டிஷ் கிழக்கிந்திய கம்பெனியின் ஆட்சியைப் பற்றி வள்ளலார், கருணையில்லாத ஆட்சி கருதி ஒழிக என்று பேசினார். பட்டினியால் தவிக்கும் மக்களின் பசியைப் போக்க வேண்டும் என்று கூறி அன்ன சாலைகளை ஏற்படுத்தினார். அன்னிய ஆட்சியார்களின் படைகள், நமது ஆடு, மாடு இனங்களை அடித்துக் கொன்று தின்ற பொழுது, கொலையை நிறுத்துங்கள் ஆடு, மாடு மற்றும் உயிரினங்களைக் காப்பாற்றுங்கள் என்று குரல் கொடுத்தார். தமிழகத்தின் வட பகுதி முழுவதிலும், வள்ளலாரின் தனிப்பெரும் கருணைப் பேரியக்கம் பரவியது.

ஒரு நூறு ஆண்டுகளுக்கு மேல் பிரிட்டிஷ் கிழக்கிந்திய கம்பெனியும் அதன் படைகளும் பாரத நாட்டில் நடத்திய கொடுமைகளுக்கு அளவேயில்லை. அதைக் கண்டு பல அதிகார வெறியும் ஆதிக்க வெறியும், கொண்ட பல ஆங்கிலே அதிகாரிகளுக்கும் கூட பொருக்க முடியாமல் பேசியிருக்கிறார்கள்.

எப்படியாயினும் ஒரு நூறு ஆண்டுகள் பிரிட்டிஷ் கிழக்கிந்திய கம்பெனி நிர்வாகிகளும் அதிகாரிகளும் படைகளும் இந்திய நாட்டில் நடத்திய கொள்ளை, சூரையாடல், படுகொலைகள், அவர்கள் ஏற்படுத்திய சேதங்கள், நாசவேலைகள் வரலாற்றில் எவ்வளவு தான் மூடி மறைக்கப்பட்டாலும், வெளிப்பட்டிருக்கின்றன. அவைகளை முழுமையாகத் தெரிந்து கொள்ள வேண்டியது அவசியமாகும். பழிவாங்கும் நோக்கம் பாரத மக்களுக்கு இல்லை. ஆயினும் நடந்த கொடுமைகளும் கொள்ளை கொலைகளும் வரலாற்றில் பதிவு செய்ய வேண்டியது அவசியமாகும்.

பாரத நாட்டின் நாகரிகம் பழம் பெரும் நாகரிமாகும். பல்லாண்டு காலப் பாரம்பரிய கொண்ட பாரத நாட்டின் நாகரிகம், தன் சாகுபடிமுறை, நெசவுத் தொழில், கட்டிடத் தொழில், கலைத் தொழில், கப்பல் தொழில், வியாபாரம், கைத் தொழில்கள், அற்புதமான கோவில்கள், சிற்பங்கள், வழிபாட்டு முறைகள், பாரத நாட்டின் இசைபாட்டு, நாட்டியம் முதலிய அதன் விரிவான திண்ணைப் பள்ளிகள், பாட சாலைகள், பயிற்சி சாலைகள், பல்கலைக்கழகங்கள், அற்புதமான கலை அமைப்புகள் எல்லாம் வரலாறு பூர்வமானவை.

ஐரோப்பாவில் ஒரு காலத்தில் ரோமானிய, கிரேக்க நாகரிகம் கல்வி முறை, மிகச் சிறப்பாக வளர்ச்சி பெற்றிருந்ததாக வரலாற்றுச் செய்திகள் குறிப்பிடுகின்றனர். ஆனால், போதுமான வளர்ச்சியின்றி காட்டு மிரட்டி நிலையில் இருந்த ஜெர்மானியப் படைகள் ஆல்ப்ஸ் மலையைத் தாண்டி ரோம் நாட்டிற்கு வந்து அவர்கள் நடத்திய கொலை கொள்ளை காரணமாக ரோம நாகரிகம் அழிந்ததாக ஐரோப்பிய வரலாற்று ஆசிரியர்கள்

குறிப்பிடுகிறார்கள்.

ஐரோப்பிய கடல் கொள்ளைக்காரர்கள், காலனிக் கொள்ளையர்கள், ஆக்கிரமிப்பாளர் பதினோடு, பதினெட்டாம், பத்தொன்பதாம் நூற்றாண்டுகளில் நடத்திய காலனிக் கொள்ளைகளும் உலக வரலாற்றில் கரை படிந்த அத்தியாயங்கள். அதில் பாரத நாட்டில் பிரிட்டின் கிழக்கிந்திய கம்பெனியின் கொள்ளைக்காரர் நடத்திய கொடுமைகள் உலக வரலாற்றில் கரை படிந்த நிகழ்ச்சிகளாகும்.

பாரத நாட்டில் பிரிட்டிஷ் கிழக்கிந்திய கம்பெனிப் படைகள் மூலம், வாணிபம் மூலம் தொழில்கள் குறிப்பாக நெசவுத் தொழில், கப்பல் கட்டும் தொழில், போக்குவரத்துத் தொழில், இந்திய மக்களின் வாணிபம், தொழில்கள் அழிக்கப்பட்டது. பாரம்பரியமான விவசாய உற்பத்தி முறை, விதைகள், பயிர் வகை சாகுபடி முறை அழிக்கப்பட்டது. நீர்ப்பாசன முறை குறிப்பாகக் கால்வாய், கண்மாய் ஏரி, குளம், பாசன முறை சீரழிந்தது போதுமான பராமரிப்பு இன்றி சிதைந்தது.

கிழக்கிந்திய கம்பெனியின் நிர்வாகத்தின் மூலம், கல்வி நிலையங்கள், திண்ணைப் பள்ளிகள், குருகுலங்கள், பல்கலைக்கழகங்கள், சிதைந்தன. படிப்படியாக மறைந்தன.

கோயில்கள் சிதைந்தன. பூசைகள் மறைந்தன, குறைந்தன. பராமரிப்புகள் குறைந்து பல கோயில்கள் அழிந்தன, சிதைந்தன.

பாரத நாட்டின் பாரம்பரியமான கலைகள் சிற்பம், இசை, நாட்டியம், முதலியவைகள் எல்லாம் களை இழந்தன. கவனிப்பாரற்றுக் குற்றுயிராயின.

கிராமப் பஞ்சாயத்து, நிர்வாகங்கள் சிதைந்தன. சரீரப் பயிற்சிகள் மக்களிடத்தில் குறைவுபட்டு, மக்கள் பல மிழந்து நலிவுற்றனர்.

இவ்வாறு நூற்றாண்டுக்காலம் பாரத நாடு கொள்ளைகளுக்கும் போர்களுக்கும், நாசங்களுக்கு ஆளாகி களையிழந்து நின்றது. ஆங்கிலேய கிழக்கிந்திய கம்பெனியின் இந்தக் கொடுமைகளுக்கு எதிராக இந்த நூறு ஆண்டுகளில் மக்களும் பல கலவரங்களும் ஆட்சேபணைகளும் தொடர்ச்சியாகச் செய்து வந்துள்ளார்கள். அக்கலவரங்களில் ஒட்டு மொத்தமான தேசிய அளவிலான கிளர்ச்சி வடிவமாக 1857 ஆம் ஆண்டில் நாடு தழுவிய மிகப் பெரிய கலவரமாக, பிரிட்டிஷ் கம்பெனி ஆட்சிக்கெதிராக நாடு முழுவதிலும் வெடித்தது. இதில் பிரிட்டிஷ் கம்பெனியின் ஆட்சியே ஆட்டம் கண்டது.

இந்திய நாட்டில் ஏற்பட்ட நிகழ்ச்சிகளை கூர்ந்து கவனித்துக் கொண்டிருந்த பிரிட்டிஷ் பார்லிமெண்டும், அந்த நாட்டின் ஆட்சியாளர்களும், தலையிட்டு கம்பெனி ஆட்சியை நீக்கிவிட்டு, பிரிட்டிஷ் பாராளுமன்றத்தின் நேரடி

ஆட்சியை 1958 ஆம் ஆண்டில் ஏற்படுத்தினார்கள். அது முதல் இந்திய நிர்வாகம் பிரிட்டிஷ் பார்லிமெண்டின் நேரடி ஆட்சியின் கீழ் கொண்டு வரப்பட்டது. இந்திய நாட்டில் இருந்த பல சுதேசி சமஸ்தானங்கள் அங்கீகரிக்கப்பட்டன. அவைகள் எல்லாம் பிரிட்டிஷ் அரசின் கீழ் சிற்றரசுகள் ஆயின. பிரிட்டிஷ் ராணி, இந்தியாவின் சக்கரவர்த்தினி ஆனார்.

இந்திய நாட்டில் பல நிர்வாக சீர்திருத்தங்கள் செயல்படுத்தப்பட்டன. நிர்வாக சீர்திருத்தங்கள் என்றால் நாம் ஆச்சரியப்பட வேண்டாம். ஒரு காலனி ஆட்சி நிர்வாகம் உருவாக்கப்பட்டது.

பிரிட்டிஷ் ஆட்சியின் தலைநகர், கல்கத்தாவிலிருந்து டில்லிக்கு மாற்றப்பட்டது. புது டில்லி கட்டப்பட்டது. இந்தியாவிற்கு பிரிட்டிஷ் அதிபராக வைஸ்ராம் அல்லது கவர்னர் ஜெனரலாக பிரிட்டிஷ் பாராளுமன்றத்தால் நியமிக்கப்பட்டார். நாடு முழுவதும் பல மாகாணங்களாகப் பிரிக்கப்பட்டது. அந்த மாகாணங்களுக்குத் தலைமை நிர்வாகியாக கவர்னர்கள் நியமிக்கப்பட்டனர்.

பிரிட்டிஷ் இந்திய அரசின் முதல் வேலை சட்டம் அமைதியைப் பாதுகாத்தல், இந்திய மக்களை சட்டத்தின் கீழ் உறுதிப்படுத்துவது அந்த அரசினுடைய முதல் வேலை அதற்காக ஒரு போலீஸ் அரசு- ஆட்சி நிறுவப்பட்டது என்று கூறலாம்.

இந்திய தண்டனைச்சட்டம், இந்திய குற்றவியல் சட்டம், நாடு முழுவதும் போலீஸ் சட்டம், போலீஸ் அமைப்பு, போலீஸ் நிர்வாகம், நீதிமன்றங்கள் - மாகாண கவர்னரின் கீழ் மாவட்ட கலெக்டர்கள், கலெக்டர்களின் கீழ் தாசில்தார், நெவினிய இன்ஸ்பெக்டர், கிராம சிப்பந்திகள், ஆகியவை எல்லாம் வரி வசூல் அதிகாரிகள்தான். நிலவரி வசூல் செய்வதுதான் அரசின் முக்கிய வேலை. இந்த வரி வசூல் பணத்தை வைத்து நிர்வாகத்தை முக்கியமாக போலீஸ் நிர்வாகத்தை நடத்துவது. போலீஸின் முதல் வேலை இந்திய மக்களை பிரிட்டிஷ் ஆட்சியின் கீழ் அடக்கி வைப்பது. சிறு குற்றங்கள் நடந்தால் அவர்களைப் பிடித்து விசாரணை நடத்தி, தண்டனை கொடுத்து சிறையில் அடைப்பது.

இவ்வாறாக, வரி வசூல், நிர்வாகம், போலீஸ், நீதிமன்றம், தண்டனை, சிறைச்சாலை ஆகியவைதான் பிரிட்டிஷ் அரசின் முக்கிய அம்சங்கள். எனவே இந்தியாவில் பிரிட்டிஷ் அரசு என்பது பிரிட்டிஷ் நலன்களைப் பாதுகாக்கூடிய ஒரு சட்டப்பூர்வமான வன்முறைக் கருவியாக பிரிட்டிஷ் ஆட்சி செயல்ப்பட்டது. அத்துடன் அரசின் அங்கமாக சில ஆட்சித்துறைகளும் உருவாக்கப்பட்டு அவை நிர்வகிக்கப்பட்டன.

கவர்னகள், கலெக்டர்கள், நீதிபதிகள், மாநில அளவிலான அதிகாரிகள் அனைவரும் நல்ல சம்பளத்தில் எல்லா வசதிகளுடன் ஆங்கிலேயர்களே

வந்தார்கள்.

ஆங்கிலேய அதிகாரிகள், சுதேசி மன்னர்கள், பல பெரிய ஜமீன்தார்கள், ஆங்கிலேயர்களுக்கு உதவியாக இருந்த தாரகர்கள் ஆகியோருடைய ஆடம்பரங்களுக்கும் அளவே இல்லை.

இந்திய நாடு முழுவதும், பிரிட்டிஷ் மூலதனத்தின் நிலைகளனாகவும், அவர்களுடைய தொழில்களுக்கான மூலப் பொருள் பண்ணையாகவும் அவர்களின் உற்பத்திப் பொருள்களுக்கான சந்தையாகவும் படிப்படியாக ஆக்கப்பட்டது.

இந்திய நாட்டில் அடித்த கொள்ளையில் ஆங்கிலேயர் பல உலகப் பெரும் தனவந்தர்கள் ஆனார்கள்.

பாரத நாட்டின் விவசாயம் சீரழிந்தது. பாரம்பரியமான நீர்ப்பாசன நிலைகள், நீர்ப்பாசன முறைகள் நிலை குலைந்தன. நமது பாரம்பரியமான கோயில்கள், கலாச்சார செல்வங்கள் சிதைந்து போயின. பல்லாயிரக் கணக்கான பாரம்பரியமிக்க இந்தியத் தொழில்கள் நசிந்து போயின். நமது நாட்டின் பழைய போக்குவரத்து முறை நசிந்து போயிற்று. வியாபாரம் சீரழிந்தது. நமது பாரம்பரியமான சிறப்புமிக்க கல்வி முறை அழிந்தது. அந்நிய ஆட்சியாளர்களுக்கு தேவையான ஆங்கிலக் கல்வி முறையைப் புகுத்தினார்கள்.

நமது எளிமையான பஞ்சாயத் நீதிமுறைகள் அழிந்தன. போலீஸ் ஆட்சி ஏற்பட்டது. இந்திய மக்கள் போதுமான அன்ன ஆகாரமின்றி இறந்து போனார்கள். பல லட்சக்சகணக்கான ஏழை எளிய மக்கள் பஞ்சத்தால் செத்து மடிந்தார்கள்.

இப்படிப்பட்ட அவல நிலை பாரத நாட்டில் முன் எக்காலத்திலும் ஏற்பட்டதில்லை. எனவே நமது நாட்டின் சுதந்திரம் பாதிக்கப்பட்டது மல்ல, நாடு அன்னியருக்கு அடிமைப்பட்டது மட்டுமல்ல. பாரத நாட்டின் சமுதாய வாழ்வே சீரழிந்து நிலை குலைந்து போயிருந்தது.

இதற்கிடையில், பிரிட்டிஷ் ஆட்சியாளர்கள் தங்கள் தொழில் வர்த்தக நலன்களை உயர்த்திக் கொள்ளவும், பாதுகாத்துக் கொள்ளவும், புதிய வகையிலான போக்குவரத்து அமைப்புகள், தபால் தந்தி அமைப்புகள், சென்னை, பம்பாய், கல்கத்தா ஆகிய மூன்று துறைமுகங்கள், அதை ஒட்டிய போக்குவரத்து அமைப்புகள், ரயில் பாதை, சிறு சிறு பழுதுபார்க்கும் நவீன தொழில் பட்டரைகள் முதலியனவற்றை உருவாக்கினார்கள்.

மனித சிந்தனை அளவில் புதிய வகை ஆங்கிலக் கல்வியைப் புகுத்திப் பரப்பினார்கள். நாட்டை நிர்வாக அளவில் அடிமைப்படுத்தியது மட்டுமல்ல, சிந்தனை அளவிலும் அமைப்படுத்த முயன்றார்கள். பாரத

மக்கள் இதை சுலபமாக ஏற்கவில்லை. எல்லா வகையிலும் பிரிட்டிஷ் அந்நிய ஆட்சிக்கு எதிராக மக்களுடைய உணர்வு நிலை வளர்ந்தது.

பாரத தேசிம் ஒரு சிறிய நாடல்ல. நீண்ட வரலாறும், நாகரிகமும், கலாச்சாரமும், பண்பாட்டு வளர்ச்சியும், பாரம்பரியமும் கொண்ட நாடு. எனவே பாரத நாட்டை அமைப்படுத்துவது அவ்வளவு சுலபமாக இருக்கவில்லை.

எனவே நாட்டு மக்களுடைய சுதந்திர கோரிக்கை என்பது வெறும் தன்னாட்சி சுயாட்சி கோரிக்கையாக மட்டுமில்லை. அரசியல், பொருளாதாரம், சமுதாய வாழ்க்கை, கல்வி, வாழ்க்கை நெறி முறைகள், கலாச்சாரம் அனைத்திலும் சுதந்திரம் மலர்ச்சி பெற வேண்டும் என்பது நாட்டு மக்களின் தேவையாக இருந்தது.

நாட்டு அரசியல் நிர்வாகத்தில் மட்டுமல்ல, நாட்டின் சமுதாய வாழ்வின் சகல துறைகளிலும் சுதந்திரமான வளர்ச்சி என்பது பாரத மக்களின் அபிலாட்சையாக இருந்தது.

வேதங்கள், உபநிடழங்கள், புராணங்கள், இதிகாசங்கள், பல்வேறு துறைகளிலான அறிவு வளர்ச்சி, விஞ்ஞான வளர்ச்சி, கலாச்சார வளர்ச்சி, இன்றும் தமிழகத்தில், சங்க இலக்கியங்கள், ஐம்பெறும் காப்பியங்கள் அந்நூல்கள், ஆழ்வார்கள் நாயன்மார்கள் வளர்ந்த அருந்தமிழ் பக்தி இலக்கியங்கள் முதலியன வெல்லாம் மக்களுடைய உள்ளத்தில் ஊறிப் போயிருக்கின்றன. அந்த உறுதிமிக்சக உள்ளத்தில் அந்நிய ஆட்சியின் பேடிக்கல்வி எங்கே புகும்?

எனவே நமது தொழில், நமது கல்வி, நமது பஞ்சாயத் நிர்வாகம், சரீரப் பயிற்சி இவற்றைப் பாதுகாப்பதும் வளர்ப்பதும் நமது தேசிய இயக்கத்தின் பிரிக்க முடியாத பகுதியாக வளர்ச்சி பெற்றது.

எனவே நமது சுதந்திரம் என்பதுடன் சுதேசியமும் சேர்ந்து கருத்து உருவாக்கி வளர்ச்சி பெற்றது.

நமது நாடு 1947 ஆகஸ்ட் 14, 15ந் தேதிகளில் சுதந்திரம் பெற்று விட்டது. இந்தியா- பாகிஸ்தான் ஆகிய இரு நாடுகளாக சுதந்திரம் பெற்றது. இவைகளில் இந்திய யூனியன் அதற்குரிய அரசியல் அமைப்புச் சட்டத்தை உருவாக்கிக் கொண்டு பாராளுமன்ற ஜனநாயக நாடாக கடந்த 50 ஆண்டுகளுக்கும் மேலாகச் செயல்பட்டு உலகில் ஒரு முக்கிய நாடாக நிலை பெற்றிருக்கிறது.

இந்திய நாட்டில் அதன் வரலாற்றில் முன் எப்போதும் இல்லாதபடி, ஜாதி மத இன, மொழி, பால் வேறுபாடின்றி மதலில் 21 வயதிற்கும், அதன் பின்னர் வயது அளவு திருத்தப்பட்டு 18 வயதிற்கும் மேற்பட்ட அனைவருக்கும்

வாக்குரிமை அளிக்கப்பட்டு மத்திய பாராளுமன்றத்திற்கும், மாநில சட்ட மன்றங்களுக்கும் ஐந்தாண்டுகளுக்கு ஒரு முறை என்னும் அடிப்படையில் தேர்தல் நடைபெற்று மத்திய பாராளுமன்றமும் மாநில சட்டமன்றங்களும் செயல்பட்டு வருகின்றன. நகரமன்றங்கள் மாநகர மன்ங்களும் தேர்ந்தெடுக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன. கிராம நகர் பஞ்சாயத்துகள், ஒன்றிய பஞ்சாயத்துக்கள், மாவட்ட பஞ்சாயத்துகளும் உருவாக்கப்பட்டு செயல்படத் தொடங்கியுள்ளன. அவைகளின் செயல்பாடுகளில் நிதி வரவு-செலவு நிர்வாகங்களில் இன்னும் பெரும் அளவில் அபிவிருத்தி காண வேண்டியதிருக்கிறது. அதில் முன்னேற்றம் ஏற்படும்.

இந்திய நாட்டில், மத்திய பாராளுமன்றம், மாநில சட்டமன்றங்கள், மாநகர மன்றங்கள், நகர மன்றங்கள், மாவட்ட ஒன்றிய, நகர, கிராமப் பஞ்சாயத்துக்கள் ஆகிய அமைப்புகள் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு, செயல்படும் ஜன நாயக முறை நிலை பெற்று விட்டது எனக் கூறலாம். ஆயினும் பாரத நாட்டிவ் சீரிய மரபுகளுக்கு ஏற்றவாறு இன்னும் இந்தத் துறையில் பெரும் அபிவிருத்திகளையும் மேம்பாடுகளையும், முன்னேற்றங்களையும் காண வேண்டியதிருக்கிறது.

சட்டப்பூர்வமான இந்த அரசியல் அமைப்புகளையும் நிர்வாக அமைப்புகளையும் வழி நடத்துவதற்கு பல நாடுகளிலும் அரசியல் கட்சிகள் உருவாகி வளர்ச்சி பெற்றிருக்கின்றன. பாரத நாட்டிலும் பல அரசியல் கட்சிகள் உருவாகியுள்ளன. ஆரம்பத்தில் ஆங்கிலேயர்கள் ஆட்சி காலத்தில் நிர்வாகத்தில் பங்கு கொள்ளவும், வேறு பல அரசியல் மற்றும் சமுதாய முன்னேற்ற நோக்கங்களுக்காக அரசியல் கட்சிகள் உருவாயின.

இவ்வாறு 19 ஆம் நூற்றாண்டின் இறுதியில் அரசியல் சீர்திருத்த நோக்கத்துடன் இந்திய தேசிய காங்கிரஸ் அமைப்பு உருவாயிற்று. பின்னர் இந்த அமைப்பு, இந்திய நாட்டின் சுதந்திரத்திற்காகப் போராடும் மக்களுக்குத் தலைமை காட்டும் பெரிய மக்களமைப்பாக வளர்ச்சியடைந்தது.

அத்துடன் பல்வேறு அரசியல் மற்றும் சமுதாய நோக்குடன் வேறு சில அரசியல் கட்சிகளும் தோன்றின.

இந்திய நாடு சுதந்திரம் பெற்றபின்னர், 1950 ஆம் ஆண்டு அரசியல் சட்டம் உருவாக்கப்பட்டு அறிவிக்கப்பட்டது. அதன்படி 1952 ஆம் ஆண்டில் முதலாவது பொதுத் தேர்தல் நடைபெற்றது. அப்போது முதல் அரசியல் சட்டப்படி மாநிலங்களுக்கும், மத்திய பாராளுமன்றத்திற்கு தேர்தல்கள் நடைபெற்று வருகின்றன. முறையாகப் பொதுத் தேர்தலும், பல்வேறு சட்டமன்றங்களுக்கும் தேர்தல்கள் நடைபெறுவதையொட்டி மக்களுடைய அரசியல் நடவடிக்கைகளும் அதிகரித்து வருகின்றன.

ஏராளமான பல அரசியல் கட்சிகளும் உருவாகி செயல்பட்டு வருகின்றன. அதன் மூலம் அவ்வரசியல் கட்சிகளின் உறுப்பினர்களும் பிரதிநிதிகளும் தேர்தல்களில் போட்டியிட்டு வெற்றி பெற்று ஆட்சி பொறுப்பை ஏற்று அரசியல் நடத்தி வருகிறார்கள்.

இந்திய நாட்டு அரசியல் கட்சிகளில் அனைத்திந்திய அரசியல் கட்சிகளும், மாநிலக் கட்சிகளும், பிராந்தியக் கட்சிகளும் உள்ளன. நாடு விடுதலை பெற்ற ஆரம் ஆண்டுகளில் மத்திய ஆட்சியிலும் மாநில ஆட்சிகளிலும் சுதந்திரப் போராட்டத்தில் தலைமையாக இருந்த இந்திய தேசிய காங்கிரஸ் கட்சி தான் தேர்தல்களில் வெற்றி பெற்று ஆட்சிப் பொறுப்பிற்கு வந்தது.

1967 ஆம் ஆண்டிற்கு பின்னர், வேறு பல அரசியல் கட்சிகளும் மத்தியிலும் மாநில்களிலும் ஆட்சிப் பொறுப்பிற்கு வந்துள்ளன என கூட்டணிகளும் ஆட்சிப் பொறுப்பை ஏறுற்று நடத்தி வருகின்றன.

இந்திய ஜனநாயகத்தில் நாட்டின் அரசியல் கட்சிகள் முக்கிய பங்கு வகிக்கின்றன. அநேகமாக நாட்டில் உள்ள அனைத்துக் கட்சிகளும் ஆளும் கட்சிகளாகவும் எதிர்க்கட்சசிகளாகவும் செயல்பட்டு அனுபவம் பெற்றிருக்கின்றன.

தமிழ்நாட்டில் மாநில அரசியல் 1967 முதலே அகில இந்திய காங்கிரஸ் கட்சி ஆட்சிப் பொறுப்பில் இல்லை. திராவிடக் கட்சிகள் என்று பெயர் பெற்றுள்ள திராவிட முன்னேற்றக் கழகம், அனைந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆகிய கட்சிகளே மாறி மாறி ஆட்சிப் பொறுப்பில் உள்ளன. இரு கட்சிகளுமே கூட்டணி பலத்தில்தான் தேர்தல்களில் வெற்றி பெற்று வந்திருக்கின்றன.

இந்திய ஜனநாயகத்தில் நாம் இன்னும் வெகு தொலைவு முன்னோ வேண்டியதிருக்கிறது. இந்தியப் பாராளுமன்ற ஜனநாயகத்தில், பிரிட்டன், அமெரிக்க, ஐக்கிய நாடுகள் மற்றும் சில மேல்நாடுகளைப் போல் ஆளும் கட்சி எதிர்க்கட்சி என்னும் நிலைமட்டுமே இல்லை. இந்திய ஜனநாயகம், இந்திய விடுதலைப் போராட்ட பாரம்பரியத்திலிருந்தும் இந்திய மரபு வழிக் கலாச்சாரத்திலிருந்து எழுந்ததாகும். இதைத்தான் கடந்த ஐம்பது ஆண்டு கால நமது அனுபவம் எடுத்துக் காட்டுகிறது.

. இந்திய ஜனநாயகத்தில் மிகவும் தெளிவாக ஏற்பட்டுள்ள வளர்ச்சி, பன்மொழிக் கலாசாரமும், பலவிதமான சிக்கலான சூழ்நிலைக்களுக் கிடையிலும், மத்திய - மாநில தேர்தல்கள், தேர்ந்தெடுக்கப்பட்ட அரசுகள் அவைகளின் செயல்பாடுகள், இந்திய நாட்டின் அரசியல் கட்சிகள் அவைகளின் செயல்பாடுகள், இந்திய நாட்டின் அரசியல் கட்சிகள், அவைகளின் செயல்பாடுகள், வேற்றுமையின் ஒற்றுமை, முப்பதுக்கும்

மேற்பட்ட அரசியல் கட்சிகளின் கூட்டணி அரசு வெற்றிகரமாக ஐந்தாண்டு காலம் ஆட்சி நடத்திய விந்தை, இவைகளைக் காண முடிகிறது.

மக்தியிலும், மாநில மாநிலங்களிலும் கூட்டாட்சிகளின் தொடர்ச்சி, இந்த வேறுபட்ட சூழ்நிலைகளிலும் ஆட்சிகளின் தொடர்ச்சி, இந்திய மக்களின் பொறுமையான அடக்கமான ஜனநாயக மரபு, அதன் கூட்டுச் கலாச்சாரம், இந்திய அரசு கடந்த ஐம்பது ஆண்டுகளாக நிறைவுற்றியுள்ள அரசியல் சாதனைகள், எல்லைப் போர்களில் கண்ட வெற்றி வல்லமைமிக்க ஒன்று பட்ட ராணுவம், நமது விஞ்ஞான வளர்ச்சி, நமது விஞ்ஞானிகளின் அற்புதமான சாதனை. பலவகை ஆத்திர மூட்டல்களும் இடையில் மதவேறுபாடுகளின் புயல்களுக்கு மிடையில் நமது மக்களின் ஒற்றுமை, சில வல்லரசுகளின் ஒரு தலைப்பட்சமான பாகுபாடுகள் ஆகியவைகளை தாண்டி பாரதத்தின் ஜனநாயக முன்னேற்றம், பாரதம் ஒரு வல்லரசாக அங்கீகரிக்கப்படும் நிலை, பல துறைகளிலும் பாரதம் உலகிற்கு வழி காட்டும் நிலை, வையத் தலைமையாக பாரதம் வளர்வதற்கான வாய்ப்புகள் அதிகரித்து வருவது முதலிய பல சாதனைகளையும் பெற்று வருகிறது.

இவையெல்லாம் நமது சுதந்திரமான அரசியலின் சாதனைகளாகும்.

பாரத நாட்டின் இன்றைய உள்நாட்டுக் களங்கம்

பாரத நாட்டின் இன்றைய பொது வாழ்வின் மிக முக்கியமான களங்கம் லஞ்சமும் ஊழலுமாகும். லஞ்சமும் ஊழலும் பாரத நாட்டின் பரம்பரைச் சொத்தல்ல. நமது நாட்டின் பாரம்பரியமான சொத்து சத்தியமும் நேர்மையுமாகும்.

சத்தியமேலஜயதே- வாய்மையே வெல்லும் என்பது நமது தாரக மந்திரமாகும். கடந்த ஆயிரம் ஆண்டுகளாக நமது நாட்டில் நிலவிய கொடுங்கோலாட்சிகளும், கடைசியாக இருநூறு ஆண்டுகளாக பிரிட்டிஷ் அந்நிய ஆட்சி நடத்திய கொடுங்கோலாட்சியும் விட்டு வைத்துள்ள களங்கமாகும்.

பிரிட்டிஷ் ஆட்சியினர் இந்திய நாட்டில் உருவாக்கிய அரசு, அரசாங்க நிர்வாகம் முழுக்க முழுக்க லஞ்சமும் ஊழலும் நிறைந்ததாக இருந்தது. காவல்துறை, வருவாய்த்துறை அனைத்தும் முழுமையாக ஊழல் மயமாக இருந்தது.

போலீஸ் இலாக்காவின் லஞ்ச ஊழலுக்கு இரண்டு கதைகளை உதாரணமாகச் சொல்லலாம்.

வேதம் புத்தூர் என்னும் ஒருவர் அங்கு ஊரில் ஒரு போலீஸ் ஸ்டேஷன் இருந்தது. அந்த ஊரைச் சுற்றிலும் சுமார் 30 கிராமங்கள் இருந்தன. அந்த 30 கிராம கிராமங்களுக்கும் தலைமையான ஊர் வேதம்புத்தூர். அந்த வேதம்

புத்தூர் மிகவும் செழிப்பான கிராமம். அதைச் சுற்றியுள்ள உள்ள 30 ஊர்களிலும் சுமார் 30க்கும் மேற்பட்ட கண்மாய்க்கள் இருந்தன. அந்த கிராமங்கள் நிறைந்து பள்ளத்தாக்கின் தலைமையான ஊர் வேதம் புத்தூர் மலைத் தொடரில் ஒரு பலமான மழை பெய்தால் அந்த பூமியில் உள்ள கண்மாய்கள் நிரம்பிவிடும். ஒன்று அல்லது இரண்டு சாகுபடிக்கு உத்திரவாம். நெல், கரும்பு, பருத்தி, வேர்க்கடலை, பயிறு வகைகள் நன்கு விளையும் புண்ணிய பூமி. தென்னாடு ஆங்கிலேயர் ஆட்சியின் கீழ் வந்த போது இருந்த வேத பூமியும் ஆங்கிலேயர் ஆட்சியின் கீழ் வந்து விட்டது. வேதம் புத்தூரில் ஒரு போலீஸ் ஸ்டேஷன். அந்த போலீஸ் ஸ்டேஷனில் உள்ள உடுப்பணிந்த போலீஸ் 20 பேரின் பலத்தில் அந்தப் பள்ளத்தாக்கு முழுவதையும் ஆங்கிலேயர் ஆண்டு வந்தனர். அந்த போலீஸ் ஸ்டேஷனின் மேல் அதிகாரி ஒரு சப்- இன்ஸ்பெக்டர். அவருடைய அதிகாரத்தின் கீழ் இரண்டு ஏட்டும், 20 போலீசும்.

அந்த சப்- இன்ஸ்பெக்டரின் பெயர் கோபாலகிருஷ்ண நாயுடு மிகவும் நல்ல நாணயமான மனிதர். அவர் உடுப்பணிந்து கொண்டு ஊருக்குள் வந்து விட்டால், தெருவில் உள்ள அனைவரும் எழுந்து நின்று மரியாதை செய்வார்கள். அவருடைய அதிகாரத்தின் உள்ள அந்த போலீஸ் ஸடேஷனின் ஏதாவது வழக்குகள் வந்தால் அவர் பெரும்பாலும் ரிக்கார்டுக்காக ஒன்றிரண்டு கேஸ்கள் தவிர மற்றவைகளைத் தானே முடித்துவிடுவார். பெரும்பாலும் ராசி செய்து விடுவார். ஆனால் பணம் கொடுக்காமல் சமரசம் செய்யமாட்டார்.

பெரிய அடிதடி, ஊர்ச் சண்டை இன்னும் கொலை கேசைக் கூட ராசி பண்ணிவிடுவார். அவருடைய தர்பாரில், ஏதாவது ஒரு கேஸ் வந்து விட்டால் இரு தரப்பாரையும் தனித்தனியாக அழைத்துப் பேசுவார். உங்கள் கேஸ் கோர்ட்டிற்குப் போனால் வக்கீல் பீஸ், கோர்ட் பீஸ் என்று ஆளுக்கு ஐநூறு, ஆயிரம் என்று செலவாகும். ஆளுக்கு நூறு ரூபாய் கொடுங்கள் ராசி பண்ணி விடுகிறேன். எதுக்கு கோர்ட்டும் கேசும் என்பார். ரூபாய் 100 என்பது அக்காலத்தில் பெரிய பணம், எனவே பார்ட்டி ரூ.100 என்றால் கஷ்டம் என்று கூறி சப்- இன்ஸ்பெக்டர் காலில் விழுந்தால், ரூ.100 என்பது ரூ.50 ஆக குறையும், அதிலிருந்து ரூ.20 ஆககுறையும். ஒவ்வொரு தடவையும் பார்ட்டி, சப்- இன்ஸ்பெக்டர்காலில் விழ விழ ரூபாய் குறையும். பின்னர் ரூபாய் போய் ஆளுக்கு ஒரு முட்டைக் கோழி கொடுத்துவிட்டு ராசி பண்ணிட்டு போங்க என்பார். அதுவும் முடியலை என்றால் கடைசியில் ஒரு கட்டு சொக்கலால் பீடியும் தீப்பெட்டியும் கொடுத்துவிட்டு சமரசம் செய்து கொண்டு போங்க என்று கூறுவார்.

அவருடைய நண்பர்கள் என்ன சார் ரூ.100லிருந்து ஒரு பீடிக்கட்டுக்கும் தீப்பெட்டிக்கும் வந்து விட்டீர்கள் என்று கேட்டால், அதெப்படி சார் ஒரு

பீடிக்கட்டு தீப்பெட்டி கூட இல்லாமல் கேஸை ராசி பண்ணி வைக்கிறது என்று சொல்லுவார். என்ன சண்டை, வழக்கு என்று போனாலும், கொஞ்சம் பணத்தோடு போனால் இந்த சப்- இன்ஸ்பெக்டரிடம் கேஸ் இல்லாமல் செய்து கொள்ளலாம் என்று மக்களிடம் ஒரு நம்பிக்கை உண்டு. இவ்வாறு போலீஸ் ஸ்டேஷன் என்றால் பணம் இருந்தால் எதுவும் நடக்கும் என்று அந்தக் காலப் பழக்கம்.

அது போல், வருவாய்த்துறை அலுவலகம், நீதிமன்ற சிப்பந்திகள், வரிவசூல் அதிகாரிகள், அலுவலகம் எங்கு சென்றாலும் வரி பாதி, வசூல் பாதி அதெல்லாம் மேல் வரும்படி.

இவ்வாறு பிரிட்டிஷ் ஆட்சி காலத்தில் லஞ்சம் இல்லாமல் எந்த வேலையும் நடக்காது. ஆஸ்பத்திரிகளில் கூட சம்திங் இல்லாமல் வேலை நடக்காது. எங்கள் ஊரில் ஒரு படித்தபையன் கலெக்டர் ஆஸபிஸ் குமாஸ்தாவாக வேலை பார்த்துக் கொண்டிருந்தால் அந்த குமாஸ்தாவிடம் அந்தப் பெரியவர், தம்பி உனக்கு எவ்வளவு சம்பளம் என்று கேட்பார். மாதம் ரூ.110/ என்று சென்னால் மேல் வரும்படி என்ன கிடைக்கும் என்று கேட்பார். இவையெல்லாம் சகஜமான சம்பாஷணை.

எனவே நாடு முழுதும், அரசாங்க அலுவலகங்கள் முழுவதும் எல்லா இடங்களிலும் லஞ்சம் ஊழல் இல்லாத இடம் இல்லை. அப்படி ஒரு ஆட்சி ஆங்கிலேயர் அமைந்திருந்தது. அதன் தொடர்ச்சி நடைபெறுகிறது.

சமுதாயம் முழுவதையும் கல்விப் பிடித்திருக்கும். இந்தத் தொத்து நோயைக் கடுமையான முயற்சியின் மூலம்தான் சற்று குறைக்க முடியும். ஆனால் அதை செய்தே ஆக வேண்டும்.

இந்தத் தொத்து நோய் சில அரசியல் கட்சிகளுக்கிடையிலும் பலமாக பரவியிருக்கிறது. எனவே லஞ்ச ஊழலைக் குறைக்க ஒரு சமுதாய இயக்கமே நடைபெற வேண்டும். இது நமது நாட்டு அரசியலில் ஒறரு முக்கியமான அங்கமாக, கடமையாக இப்போது உள்ளது.

நாட்டின் நிர்வாகத்தில் எல்லாத் துறைகளிலும் லஞ்சம் ஊழல் நிரம்பியிருக்கிறது. நாட்டில் உள்ள எல்லா அரசியல் கட்சிகளிலும் லஞ்ச ஊழல் பரவியிருக்கிறது. தேர்தல் பணிகள் அனைத்திலும் லஞ்சம் பரவியிருக்கிறது. இந்த நிலை நாட்டில் உள்ள அனைவரும் அறிந்த விஷயம். இதுபற்றி விவரித்துக் கூற வேண்டிய அவசியமில்லை. ஆனால் இந்த லஞ்ச ஊழல் குறைப்பு ஒழிப்பு வேலைகளை எங்கிருந்து தொடங்குவது. இதை மேல்மட்டத்திலிருந்து தொடங்க வேண்டும். கட்சிகள், அரசாங்க நிர்வாக அமைப்புகள் ஆகியவைகளின் மேல் மட்டங்களிலிருந்து துவங்க வேண்டியதிருக்கிறது.

நகர அமைப்புகள்: பாரத நாட்டின் நகர அமைப்புகள் பாரம்பரியம்

மிக்கது. நமது நாட்டின் நகரங்கள் என்பது பெருமை மிக்கது. ராஜதானிகள் அதாவது அரசருடைய தலைமை நகரங்கள் அவைகளை நாட்டின் தலைநகரங்கள் என்று கூறலாம். அங்கு அரசரும் அவருடைய பரிவாரங்களும் நிர்வாக அம்மைப்புகளின் அலுவலகங்களும் இருக்சகும். அதில் அமைச்சர்கள், படைத் தளபதிகள் மற்றும் பரிவாரங்கள் நிறைந்திருக்கும்.

கோவில் நகரங்கள்: பெரிய கோவில்கள் அமைந்திருக்கும் கோவில் ஊழியர்கள் திருவிழா தொடர்பானவர்கள். உதாரணமாக திருவரங்கம், சிதம்பரம் முதலிய வணிக நகரங்கள் நாடெங்கும் இருக்கும் பல்வேறு பொருள்கள், கிராமங்களிலிருந்து வரும் பொருள்களை, கைவினைப் பொருள்கள், ஆடை ஆபரணங்கள் விற்பனைக்கும் வேறு பல இடங்களுக்கு அனுப்பவும் குவிந்திருக்கும் நகரங்கள், அதில் தொடர்பான மக்கள் வாழும் இடங்கள்.

துறைமுக நகரங்கள், பட்டினங்கள்:

சரக்குகள் ஏற்றுமதி, இறக்குமதி செய்யும், சேமிப்பு நிறைந்த நகரங்கள். இந்த நகரங்கள் எப்போதும் சுறுசுறுப்பாகவே இருக்கும். துறைமுகங்களின் அருகில் ஏற்றுமதி, இறக்குமதிப் பொருள்கள் நிறைந்த அமைப்புகளும் இருக்கும்.

உள்நாட்டு வியாபார நகரங்கள்:

கிராமப் புறங்களிலிருந்தும் இதர பகுதிகளிலிருந்தும் வந்து குவியும் இடங்கள், வாணிப சந்தைகள் நிறைந்த பகுதிகள் நிறைந்திருக்கும்.

தொழில் நகரங்கள்: நெசவுத் தொழில் சந்தைகள் பல்வேறு கைத் தொழில்கள், நிறைந்த ஊர்கள்.

நகரங்களில் வாழ்ந்த மக்களுக்கு விரிவான வேலைப்பிரிவினைகளும் தொழிற் கூட்டங்களும் பயிற்சிக் கூடங்கள் அமைந்திருந்தன. அனைத்துறைகளிலும் பயிற்சி என்பது, பொதுக்கல்வி முடிந்த பின் ஒவ்வொருவரும் பயற்சி எடுத்துக் கொள்வதாகும்.

கல்வி: கல்வி என்பது பாரத நாட்டில் குமாஸ்தா கல்வியல்ல.

ஆரம்பக் கல்வி: திண்ணைப் பள்ளிக் கூடங்கள், குரு குலங்கள், தனி கல்வி, நிலையங்கள், பல்கலைக்கழகங்கள் எல்லா பகுதிகளநலம் நிறைந்திருந்தன. அத்துடன் அந்தந்த தொழிலுக்குரிய பயிற்சி நிலையங்களும் நிரம்பியிருந்தன.

நமது கல்வி முறை அந்நிய ஆட்சியாளர்களால் பெரும்பகுதி அழிக்கப்பட்டு விட்டது. அதற்குப் பதிலாக ஒரு நூறு ஆண்டு காலமாக, ஆங்கிலக் கல்வி நிறுவனங்களை உருவாகி அவை செயல்பாட்டிற்கு

வந்திருக்கின்றன.

நமது நாட்டுப் பொறியியல், வைத்தியம் மருந்தியல், கட்டிடக் கலை, சிற்பக் கலை, தத்துவம் மற்றும் பல்வேறு தொழில் நுட்பங்கள் எல்லாம் ஆங்கிலேய ஆட்சியாளர்கள் அழிக்கப்பட்டு விட்டன. பலவற்றில் ஐரோப்பிய முறைகள் புகுத்தப்பட்டிருக்கின்றன. மேல் நாட்டுக் கல்வி முறையில் நல்லவற்றை பயனுள்ள வற்றை எடுத்துக் கொண்டு, அல்லனவற்றை நீக்கி புதிய கல்வி முறையை உருவாக்க வேண்டும்.

நமது கல்வி முறையில் நமது வேதங்கள் உபநிடதங்கள், புராணங்கள், தர்ம நூல்கள், தத்துவ ஞானம், அர்த்த சாஸ்திரங்கள், கட்டிடக் கலை, சிற்பக் கலை, சாகுபடி முறை, வைத்தியம், மருத்தியல், எந்திரவி யல், வேதியியல், இயற்பியல், வானவியல் முதலியவை பலவற்றையும் புதுப்பித்து நவீனப்படுத்தவேண்டும்.

நமது நாட்டிற்குத் தேவையான அவசியமான தேசியக்கல்வி முறையையும் பயிற்சி முறையையும் புதுப்பித்து நமது தேசியக் கல்வியை உருவாக்கி வளர்க்க வேண்டும்.

தேசியக் கல்வி பற்றி தனி நூல் எழுதலாம். தேசியக் கல்விபற்றி நாம் விரிவாக சிந்திக்க வேண்டும். நமது கல்வி பாடத்திட்டம், கல்வி நிறுவனங்கள், போதானா முறை, ஆராய்ச்சி, பயன்படுத்தல், முதலியவற்றை இந்திய மயமாக்க வேண்டும். உலக சிந்தனையோடு இணைக்க வேண்டும்.

பாரதி சுதேசியம் என்ற புண்ணிய பலத்தைத் தாங்குகின்ற நான்கு தூண்களில் ஒன்றாக தேசியக் கல்வியைக் குறிப்பிடுகிறார்.

அடிப்படைத் தொழிலும் உற்பத்தி முறையும்

எந்த ஒரு நாட்டிற்கும் அடிப்படை உற்பத்தி என்பது அந்த நாட்டில் முதல் நிலை உற்பத்திப் பொருக்கத்திற்கான வாய்ப்புகளாகும். அதாவது நிலம், நீர் ஆதாரம், இயற்கை வளம், மலை, காடு, சுரங்கம், மனித ஆற்றல் முதலியவைகளாகும். அவையே அந்த நாட்டின் ஆதார செல்வங்களாகும்.

கம்பனுடைய முக்கியமான ஒரு கருத்தை இங்கு மீண்டும் நினைவு கூறுவோம்.

''கலம் சுரக்கும் நிதியம் கணக்கு இலா

நிலம் சுரக்கும் நிறைவளம் நல் மணி

பிலம் சுரக்கும் பெறுவதற்கு அரிய தம்

குலம் சுரக்கும் ஒழுக்கம் குடிக்கு எலாம்''

இதில் நிலவளம், நீர்வளம், மலை வளம், கடல் வளம், மனித வளம் ஆகியவை குறிக்கப்படுகிறது. பாரத தேசத்தில் இத்தனை வளங்களும் ஏராளமாக உள்ளன. இதையே முதல் நிலை உற்பத்தி வளம் என்று கூறுகிறோம்.

பாரத தேசத்தில் ஆங்கிலேயர் ஆட்சியினால் ஏற்பட்ட கொள்ளை, சேதம், சீரழிவு நாசம், படுநாசம் அழிவு ஆகியவைகளைக் குறிப்பிடும் போது ஒரு ஐரோப்பிய அறிஞர் பேசுகிறார். ஆங்கிலேயர் இந்திய நாட்டில் நடத்திய சேதங்களும் கொள்ளையும் வேறு எந்த ஒரு நாட்டில் செய்திருந்தால் அந்த நாடே அழிந்திருக்கும். அதன் வளம் எத்தனை சேதம் ஏற்பட்டாலும் ஒரு மறை பெய்து விட்டால், பூமி செழித்து தேவையான செல்வங்களையும், வளத்தையும், உணவையும் இதர பொருள்களையும் அந்த பூமி கொடுத்துவிடும். அதனால் அந்த பூமி இத்தனை அழிவுகளையும் நாசங்களையும், கொடுமைகளையும் கொள்ளைகளையும் தாங்கி நின்றிருக்கிறது'' என்று குறிப்பிடுகிறார்.

எனவே பாரதத்தில் இயற்கை வளமும் மனித வளமும், மனிதனுடைய அறிவு வளமும் அதிகம்.

பாரதத்தின் முதல் நிலை உற்பத்திச் செல்வம் அதற்கான வாய்ப்புகளும் ஏராளமாக உள்ளது. அதனால் சாகுபடி, கால்நடை வளர்ச்சி பெருக்கம், நமது நாட்டில் தட்டில்லாத செல்வத்தை மட்டில்லாத செல்வத்தைக் கொடுத்து வந்திருக்கிறது.

ஆங்கிலேயர் ஆட்சி காலத்தில் போதுமான உணவு இல்லாமல் பல கோடிக்கணக்கான மக்கள் செத்து மடிந்தார்கள். நாடு சுதந்திரம் பெற்ற போது உணவுப் பற்றாக்குறை இருந்தது. ஆனால் 50 ஆண்டுகளில், உணவுப் பொருள் தானியம், காய்கறி, பழங்கள், முட்டை, பால் முதலியவற்றில் முதலிடம் வகிக்கும் இவை ஏற்படுத்தியுள்ளோம்.

நமது நிலம், நீர்வளம், கடல் வளம், மலை வளம், வனவளம், மனித வளம் ஆகியவற்றை முறையாக நமது நாட்டின் பாரம்பரியம், பண்பாடு ஆகியவற்றுடன் இணைத்து சீராகப் பயன்படுத்துவோமானால், நமது நாட்டைப் போல் 10 நாடுகளுக்கு உணவு கொடுக்க முடியும். நீர்மின் நிலையங்களைப் பெருக்கி இந்தியாவைப் போல் 10 இந்தியாக்களுக்கு மின் விநியோகம் செய்ய முடியும் என்று நமது நிபுணர்கள் குறிப்பிடுகிறார்கள்.

வற்றாத வளம்

நமது நிலவளம், நீர்வளம், கடல் வளம், மலை வளம், நமது மனித வளத்திற் அடுத்தபடியாக உலகிலேயே முதன்மையாக உள்ளது நமது கால்நடைவளம். மாடு, ஆடு, கோழி, குதிரை, கழுதை, ஒட்டகம், பன்றி முதலிய கால்நடை வளம் மிகவும் உயர்வானது. அபரிமிதமானது. சிறப்பு

மிக்கது. வற்றாத வளம் நிறைந்தது. கடந்த ஆயிரம் ஆண்டுகளாக அன்னியர் ஆட்சி காலத்தில், ஆங்கிலேயர் ஆட்சி காலத்தில் நமது கால்நடைச் செல்வத்திற்கு ஏற்பட்ட சேதம், நஷ்டம் ஆகியவை சொல்லொணாதது. ஆயினும் இன்று நமது நாடு கால்நடை செல்வத்தில் உலகிலேயே முதலிடம் பெற்றுள்ளது. நாம் நமது முட்டை, பால், பால் பொருள் ஆகியவற்றை நமக்குப் போக உபரியாக உள்ளவற்றை ஏற்றுமதி செய்கிறோம். மேலும் அந்த செல்வத்தைப் பெருக்குவதற்கு ஏராளமான வாய்ப்புகளும் உள்ளன. கண்ணாபிரான் அருளும், ஆசீர்வாதமும் நமக்கு உண்டு. அதுள்ள வரை நமது கால்நடைச் செல்வத்திற்கு குறைவேயில்லை. நமது தட்ப வெப்பநிலையும் அதற்குச் சாதகமானது.

நமது சாகுபடித் தொழிலும், கால்நடை வளர்ச்சியும் இருக்கும் வரை நமது நாட்டை வெல்வதற்கு யாரும் இல்லை. ஆனானப்பட்ட ஆங்கிலேய அரக்கர்களளும் 200 ஆண்டுகள் நடத்திய அழிவு வேலைகளையும் சமாளித்து இன்று நமது உலகில் முக்கிய இடத்தைப் பிடித்து வருகிறது.

நமது தொழிலும் தொழில் பாதுகாப்பும்

நமது தொழிலுக்கும், தொழில் வளர்ச்சிக்கும், தொழில் பாதுகாப்புக்கும் அந்நிய ஆட்சியாளர்களால் ஏற்பட்ட பாதிப்புக்கும் படு நாசத்திற்கும் அளவே இல்லை.

நமது விவசாயத்தையும், கடல் சார்ந்த தொழில்களையும், கால்நடைகள் சார்ந்த தொழில்களையும் பாதுகாப்பதும், மேம்படுத்துவதும் மிகவும் முக்கியமானதுமாகும். அதேவே நமது சுதேசி இயக்கத்தின் அடிப்படையாகும். இந்த நமது பாரம்பரியமான தொழில்களைப் பாதுகாப்பது மிகவும் அவசியமாகும். இவைகளை மேம்படுத்தலாம். அது தேவையும் கூட சமுதாய வளர்ச்சியை ஒட்டிச் சமுதாயத்தின் தேவைகளை ஒட்டி, தொழில் நுட்ப முறைகளில் அபிவிருத்தி கண்டு, தொழிலையும், தொழில் முறைகளையும் உற்பத்திக் கருவிகளையும் உற்பத்தி சாதானங்களையும் மேம்படுத்துவதும், அபிவிருத்தி செய்வதும் அவசியமாகும். நாம் அதைச் செய்து கொண்டு வந்திருக்கிறோம். உற்பத்தி முறைகளில் அபிவிருத்தி காண்டிருக்கிறோம்.

ஆங்கிலேயர்கள் முதலில் வாணிபத்திற்காக இந்தியவிற்கு வந்தார்கள் என்பது அனைவரும் அறிந்த ஒன்றே! இந்தியாவிலுள்ள நேர்த்தியான பல உற்பத்திப் பொருள்களை குறைந்த விலைக்கு, வாங்கிக் கொண்டு போய் ஐரோப்பாவில் அதிக விலைக்கு விற்று லாபம் சம்பாதித்தார்கள். இந்தியாவின் உள்நாட்டுச் சந்தைகளிலும் கிராமங்களிலும், உள்நாட்டுத் தரகர் மூலமும் சில நேரங்களில் அடிதண்டாவுடனும் பின்னர் ஆயுத பலத்துடனும் நமது சரக்குகளைக் குறைந்து விலைக்கு வாங்கினார்கள்.

ஆங்கிலேயர்களுக்கு இந்திய தளம் அமைந்து விட்டதால், ஐரோப்பிய வியாபாரத்தில் அவர்கள் முதலிடத்தைக் கைப்பற்றிவிட்டார்கள். அத்துடன் செல்வப் பெருக்கம் காணுவப் பெருக்கம், போர்களில் வெற்றி, அரசியல் ஆதிக்கம் அதிகாரம், செல்வாக்கு முதலிய சாதக சூழ்நிலைகளை வைத்து ஆங்கிலேயர்களுடைய ஆதிக்கம் பெருகிற்று.

நீராவி சக்தி கண்டு பிடிக்கப்பட்டது. ரயில், கப்பல், எந்திரங்கள், நீராவி சகதி கொண்டு ஓட்டப்பட்டது. பிரிட்டனில் உற்பத்திக் கருவிகளில் பெரிய மாற்றமும் அபிவிருத்தியும் ஏற்பட்டது. பிரிட்டனும் . ஐரோப்பிய நாடுகளிலும் தொழில் புரட்சி ஏற்பட்டது. காலனிகள் மூலம் கிடைத்த செல்வம் தொழில் புரட்சியை வேகப்படுத்த உதவியது. உற்பத்திக் கருவிகளில் மாற்றமும், உற்பத்தி முறையில் அபிவிருத்தியும் ஏற்பட்டது.

இந்திய நாடு படிப்படியாக உற்பத்தி செய்து உபரியாக இருந்த நிலையிலிருந்து மாற்றம் பெற்ற, மூலப் பொருள் பண்ணை நாடாகவும், பிரிட்டிஷ் சரக்குகளை விற்பனைக்கான சந்தையாகவம் தாழ்ச்சியுற்று மாறியது. பிரிட்டன் தனது அரசியல் ஆட்சி பலத்தாலும், ஆயுத பலத்தாலும், பலவிதமானவன் முறைத் தலையீடுகள் மூலமும் இந்திய நாட்டைத் தனது சந்தையாகவும், மூலப் பொருளுள் பண்ணையாகவும் மாற்றியது. அதில் முக்கியமான இந்திய நாட்டில் இருந்த தொழில்களை நசுக்குவதற்கு அந்நிய அரசு எடுத்துக் கொண்ட முயற்சி கொடுமையானது.

முதலாவதாக நெசவுத் தொழிலை எடுத்துக் கொள்ளுங்கள். துணி என்பது மக்களுடைய முக்கிய தேவையில் இரண்டாவது இடத்தை பெற்றுள்ளது. அதிலும் இந்திய போன்ற உஷ்ணப் பிரதேச நாடுகளைக் காட்டிலும் குளிர்ப்பிரதேசங்களான ஐரோப்பிய நாடுகளில் துணி தேவை அதிகம்.

இந்திய நாடு

18 ஆம் ஆண்டிற்கு முன்பு, துணி உற்பத்தியில், அதன் தரத்தில் அளவில் நேர்த்தியில் ஏற்றுமதியில் உலகிலேயே முதலிடம் பெற்றிருந்தது. உலகப் புகழ் பெற்ற மஸ்லன் துணி உற்பத்தியில் பாரதம் பெரும் புகழ் பெற்றிருந்தது. துணி உற்பத்தி இந்தியாவில் அபரிமிதமாக இருந்தது. இந்திய விவசாயிகள் மிகவும் நேர்த்தியான பருத்தி, உற்பத்தி செய்தார்கள்.

தாங்கள் உற்பத்தி செய்த பருத்தியைத் தாங்களே வீட்டிற்கு கொண்டு வந்து அதை உலர்த்தி சுத்தம் செய்து, கை மணைகளிலே கொட்டை நீக்கி பஞ்சாக்கு வார்கள். அந்தப் பஞ்சை சுத்தம் செய்து அதை வில் கருவி மூலம் வெட்டிஎடுத்து மிகவும் நேர்த்தியான நூல் நூற்கத்தக்க கைப்பஞ் சாக்குவார்கள். அப்போது கிராமங்களில் பெரும்பாலான வீடுகளில் நூல் நூற்கும் கைராட்டினங்கள் இருக்கும். கிராமத்துப் பெண்கள் ஓய்வான நேரத்தில் நூற் நூற்பதை வேலையாகக் கொள்வார்கள். நாடு முழுவதிலும்

மக்கள் அனைவரும் ஓய்வு நேரங்களில் சில சமயம் முழு நேரமும் கை ராட்டினங்களில் நூல் நூற்றால் எவ்வளவு நூல் உற்பத்தியாகும். அவ்வாறு அளவு கடந்த நூல் உற்பத்தியாயிற்று.

இவ்வாறு கிராமங்களில் உற்பத்தியாகும் பருத்தி நூல், பட்டு நூல், கம்பளி நூல் ஆகியவைகளை நெசவாளர்கள் வாங்கிச் சென்று நூல்களைத் தரம் பிரித்து தேவைப்படும் அளவுக்கு முறுக்கேற்றியும் பசை ஏற்றியும் பதப்படுத்தி நெசவு செய்வார்கள். அந்தத் துணி மடிமடியாக நாடெங்கும் உலகெங்கும் செல்லும்.

மதுரை கடை வீதியில் மடிமடியாகத்துணி மூட்டைகள் விற்பனைக் வந்து குவிந்திருக்கும் என்று இளங்கோவடிகள் குறிப்பிடுகிறார். கடலின் அலைகளின் நுரையைப் போல மெல்லிய அழகான துணி ஆடைகளை அணிவித்து இராவணன் தனது தம்பி கும்ப கருணனைப் போர்க்களத்திற்கு அனுப்பினான் என்று கம்பர் குறிப்பிடுகிறார். இவ்வாறு தமது நாட்டு நெசவுத் தொழில் காப்பியப் புகழ் பெற்றது, காவியப் புகழ் பெற்றது.

இத்தகைய சிறப்பு மிக்க நமது நாட்டு நெசவுத் தொழிலை ஆங்கிலேய ஆட்சியினர் திட்டமிட்டு அழித்தார்கள். நல்ல பருத்திக்கு அதிகமானவர்களைப் போட்டு சன்னரகப் பருத்திக்குத் தடை விதித்தார்கள். பருத்தி விளையும் நிலத்திற்கு அதிக வரியைப் போட்டார்கள். பருத்தி உற்பத்திக்கும் விலையில் சரி பாதி வரியாகப் போட்டார்கள். பருத்தி உற்பத்திக்கு மட்டுமல்ல, பருத்தி விற்பனைக்கு, பருத்தி கொண்டு செல்லும் வண்டிகளுக்கும், வண்டி மாடுகளுக்கும் வரி போட்டார்கள். நூலுக்கு துணிக்கும் வரி போட்டார்கள். நெசவாளர்களை அடித்துக் கொன்றார்கள். அவர்கள் நெசவு செய்யும் விரல்களை வெட்டினார்கள். இந்தியத் துணிகளுக்கு பிரிட்டனில் அதிகமான வரியைப் போட்டார்கள்.

இவ்வாறெல்லாம் பல கொடுமையான முறைகளைக் கையாண்டு இந்திய நாட்டு நெசவுத் தொழிலை அழித்தார்கள். இத்தனை கொடுமைகளையும் தாங்கி தாண்டி இந்திய கைத்தறி துணியும் பட்டுத் துணியும் இன்னும் நீடிக்கிறது.

அடுத்ததாக ஆங்கிலேய ஆட்சியினர் செய்த அழிவு வேலை நம்முடைய துறைமுகங்களை அழித்ததாகும். நமது நாட்டு மூன்று பக்கம் கடலால் சூழப்பட்டது. நமது கிழக்குக் கடற்கரையிலும் மேற்கு கடற்கரையிலும் ஏராளமான பல துறைமுகர்கள் இருந்தன. கப்பல் போக்குவரத்திலும் கடல் வாணிபத்திலும் இந்திய நாடு வரலாற்றுப் புகழ் பெற்றது. ஆங்கிலேயர்கள் இந்த நாட்டிற்கு வந்த போது கல்கத்தாவில் மிகப் பெரிய துறைமுகமாக இருந்தது. அங்கு மிகப் பெரிய கப்பல் கட்டுமானத் தொழில் மிகவும் பெரிய அளவில் நடந்து கொண்டிருந்தது. அதைக் கப்லத் துறையை ஆங்கிலேயர்கள் திட்டமிட்டே அழித்தார்கள். இவ்வாறு இந்திய நாட்டின் பல

தொழில்களையும் அழித்து தங்கள் சரக்குகளைத் திணித்து நமது நாட்டுப் பொருளாதாரத்தை தொழில்களை அந்நிய ஆட்சியாளர்கள் அழித்தார்கள். அவர்களுடைய பொருள்களை இந்தியாவின் சந்தைகளில் குவித்து இந்த நாட்டின் உற்பத்தியை நாசம் செய்து தங்கள் வியாபாரத்தைப் பெருக்கினார்க். இவை பற்றி ஏராளமான செய்திகள் உள்ளன. அவைகளை விரிவாக எடுத்துக் கூற இந்த நூலில் இடமில்லை. தனி நூல் எழுதலாம்.

அந்நிய வஸ்து வர்ஜனம்

இந்தியப் பொருளாதாரத்தில், அந்நியப் பொருள்களை வாங்காமையும் உள்நாட்டுப் பொருள்களையே வாங்க வேண்டும் என்றும் ஒரு தேச பக்தி இயக்கமாகவே, சுதந்திரப் போராட்டத்தின் பகுதியாகவே நடத்தினோம். அன்று, அன்னியர்கள் குறிப்பாக ஆங்கிலேயர்களும் இதர ஐரோப்பியர்களும் நமது நாட்டு சந்தையை அரசியல் அதிகாரத்தைப் பயன்படுத்திக் கொண்டும் பிடித்துக் கொண்டார்கள். அதனால் நமது நாட்டுச் செல்வமு் கொள்ளை போயிற்று. அத்துடன் நமது நாட்டுப் பொருள்களும் விற்பனையாகாமல் நமது தொழில்கள் பாதிக்கப்பட்டது. மேலும் நமது நாட்டு உற்பத்திப் பொருள்களும் அந்நிய ஆட்சியாளர்கள் அதிகமான வரிகளைப் போட்டும் நமது வியாபாரத்தை முடக்கினார்கள். அதனால் அன்னிய வர்த்தகப் பொருள்களுடவ் போட்டி போட முடியாமல் நமது கைத்தறி முதலிய நமது உள்நாட்டுத் தொழில்களும் பாதிக்கப்பட்டு அழிவை நோக்கிச் சென்றது.

உள்நாட்டுத் தொழில்களைப் பாதுகாத்துக் கொள்ளவும், வியாபாரத்தைப் பாதுகாத்துக் கொள்ளவும், சுத்ந்திரப் போராட்டத்தின் பகுதியாக சுதேசி இயக்கத்தையும் முன் வைத்தோம். இன்று நாடு சுதந்திரம் அடைந்த பின்னரும் சுதேசி இயக்கம் மிகவும் அதிகமான அளவில் அவசியப்பட்டிருக்கிறது.

இன்று உலகில் வியாபாரப் போட்டியும் சந்தைப் போட்டியும் அதிகரித்து வருகிறது. ஏற்கனவே ஐரோப்பிய நாடுகளுக்கிடையில் வியாபாரப் போட்டி, சந்தைப் போட்டி காலனிப் போட்டிகாரணமாகத்தான் இரு உலகப் போர்கள் ஏற்பட்டு, பெரும் உயிர் நாசமும் பொருள் நாசமும் ஏற்பட்டிருக்கின்றன. அதனால் போர் என்றால் உலகம் அச்சமடைந்திருக்கிறது. உலகப் போர் நடத்தும் சக்தியை வல்லரசுகள் இழந்திருக்கின்றன. ஆயினும் வியாபாரப் போட்டியும் தொழில் போட்டியும் சந்தைப் போட்டியும் தொடர்கிறது. உலகில் ஏழு நாடுகள் குறிப்பாக ஐக்கிய அமெரிக்க நாடுகள், பிரிட்டன், பிரான்ஸ், ஜெர்மனி, இத்தாலி, ஜப்பான், கனடா ஆகிய 7 நாடுகள் உலக வியாபாரத்திலும் சந்தைப் பிடிப்பிலும் ஆதிக்கம் செலுத்தி வருகின்றன. எட்டாவது நாடாக ரஷ்யா முண்டிக் கொண்டிருக்கிறது. மேலே குறிப்பிட்ட 7 நாடுகளுக்கிடையிலும், 1. அமெரிக்க ஐக்கிய நாடுகள், 2. ஜப்பான், 3. ஐரோப்பிய நாடுகள் ஆகியவை 3 மைல்களாக ஆதிக்கப் போட்டியில்

முனைப்புக் காட்டி வருகின்றன.

இவைகளில் ஜெர்மனியும் ஜப்பானும் இரண்டாம் உலகப் போரைத் தொடங்கி நடத்தி தோல்வி கண்டு பெரும் நஷ்டத்திற்காளானவர்கள் யுத்தத்தில் ஏற்பட்ட தோல்வியால் பல நிபந்தனைகளுக்குட்பட்டு அடந்தியிருந்தவர்கள். கடந்த 50 ஆண்டுகளில் பல கட்டுப்பாடுகளையும் சமாளித்து இன்று உலகப் பொருளாதாரத்தில் முன்னிலையில் உள்ள 7 நாடுகளின் ஒன்றாக வெளிப்பட்டு விட்டன. அவர்களுடைய நாணயங்கள், மார்க் (ஜெர்மனி), யென் (ஜப்பான்) வலுவாக உலகச் சந்தையில் நிலவுகின்றன. மேலும் பலப்பட்டு வருகினறன. உலக நாணயச் சந்தையில் அதிக மரியாதை பெற்று வருகின்றன.

ஐரோப்பிய நாடுகள், உலகச் சந்தையின் போட்டியின் தங்களை நிலை நிறுத்திக் கொள்ள ஐரோப்பிய கூட்டமைப்பை உண்டாக்கிக் கொண்டு, யூரோ என்னும் பெயரில் புதிய நாணயத்தை உருவாக்கி கொண்டு உலகச் சந்தையில் தன்னை நிலை நிறுத்திக் கொள்ள முயலுகிறது. ஜப்பான் தனது ஆசிய முகத்தைக் காட்டிக் கொண்டு தென் கிழக்கு ஆகிய நாடுகளுடன் அதிக நெருக்கம் வைத்துக் கொண்டு அமைதியாக அமெரிக்காவிற்கே சவால் விடுகிறது.

இவ்வாறு உலகின் மொத்த உற்பத்தியிலும் சந்தைப் பங்கிலும் சுமார் எழுபது சதவீதம் வரையிலும் தனது செல்வாக்கைச் செலுத்திக் கொண்டிருக்கும் ஏழு பெரிய பொருளாதார வல்லரசுகளும் மூன்று பிரிவாக இருந்து ஒன்றையொன்று உலக ஆதிக்கத்திற்காக மோதிக் கொண்டிருக்கின்றன. ஆனால் அந்நாடுகள் தங்களை ஆதிக்கத்தை பலப்படுத்திக் கொள்வதற்காக பலச் சலுகைகளையும் உலக நாடுகளுக்குக் காட்டி வருகின்றன.

உலக வர்த்தக சபை என்பது ஐக்கிய நாடுகள் சபையைப் போல் அல்லாமல், பெரிய நாடு, சிறிய நாடு என்றில்லாமல் ஒரு நாட்டிற்கு ஒருவாக்கு (ஓட்டு) என்னும் அடிப்படையில் அமைதிருக்கிறது. எனவே எந்த ஒரு நாடும் அங்கு தனது ஆதிக்கத்தைச் செலுத்துவது சற்று கடினம். ஐ.நா. சபையைப் போல், பாதுகாப்பு கவுன்சில், ... அதிகாரம் கொண்ட வல்லரசு நாடுகள் என்ற நிலைமை உலக வர்த்தக சபை அமைப்பில் இல்லை. எனவே இச்சபையில் இந்தியா போன்ற பெரிய நாடுகள் தங்கள் அரசியல் செல்வாக்கைப் பயன்படுத்தி, இதர ஏழை நாடுகளின் பொருளாதார நலன்களுக்குச் சாதகமாகக் குரல் கொடுக்க முடியும்.

இதற்கிடையில், உலக வர்த்தகச்சபை உலகமயமாக்கல் தாராளமயமாக்கல் கொள்கைகளை செயல்படுத்துவதில் வல்லரசு நாடுகளின் செயல்பாடுகளின் அனுபவத்தில், உலக நாடுகளில் புதிய பல சேர்மானங்களும் உருவாகி வருகின்றன. சார்க் நாடுகள், தென் கிழக்கு ஆசிய

நாடுகள், ஆப்பிரிக்க நாடுகள், லத்தின் அமெரிக்க நாடுகள் என்னும் கூட்டமைப்புகளும் பொருளாதார மையங்களும் உருவாகி வருகினறன. சீனா, இந்தியா போன்ற மக்கள் தொகையில் பெரிய நாடுகளாக உள்ள வளர்முக நாடுகளும், பொருளாதாரத் துறையில் வலுவான நாடுகளாக வளர்ந்து வருகின்றன.

தென் கிழக்கு ஆசியப் பகுதியில் அங்கீகரிக்கப்படாமல் இருந்த வியட்நாம், அமெரிக்காவின் ஆக்கிரமிப்புப் போரினால் அவதிப்பட்ட நிலையிலிருந்து எழுந்து நிற்கத் தொடங்கியிருக்கிறது. அதன் விவசாய உற்பத்திப் பொருளாதாரம் நிலைபெற்று வருகிறது. அமெரிக்காவின் இடையூறுகள் பல இருந்த போதிலும், அதன் உற்பத்தி வளர்ச்சி, ஆண்டிற்கு 5 (ஐந்து) சதவீதத்திற்கு மேல் பெருகி வருகிறது. அதனால் இதுவரை அமெரிக்காவிற்கு பயந்து கொண்டிருந்த சில நாடுகளும் பொருளாதாரத் துறையில் வியட்நாமை அங்கீகரிக்கத் தொடங்கியுள்ளன. இந்தியாவிற்கும் வியாட்நாமிற்கும் நல்லுறவு பொருளாதார உறவு அபிவிருத்தி அடைந்து வருகிறது.

வியட்நாமில் விவசாய உற்பத்திப் பொருட்கள் அனைத்தும் ஆங்காங்கே கிராமப் பகுதிகளிலேயே மறு உற்பத்தி செய்யப்பட்டு உற்பத்திச் செலவு முறையில் விநியோகம் நடைபெறுவதால் விலை வாசிகள் ஸ்திரமடைந்து மக்கள் வாழ்க்கை நிலை அபிவிருத்தி அடைந்து வருகிறது. இதனால் தொழில் உற்பத்தியின் செலவும் குறைந்து வருகிறது.

அதனால் வியட்நாமின் வெளிநாட்டு வர்த்தகம், அபிவிருத்தி அடைவதற்கு குறிப்பாக அண்டை நாடுகளுடன் பொருளாதார நல்லுறவை வளர்த்துக் கொள்ள வாய்ப்புகளை அதிகரிக்கச் செய்கிறது. அதனால் தென் கிழக்கு ஆசிய நாடுகளின் உலக செல்வாக்கு அதிகரிக்கும் வாய்ப்பு அதிகரித்து வருகிறது.

இதனால் உலக வர்த்தக சபை போன்ற அமைப்புகளில் பெரிய வல்லரசு நாடுகளின் ஆதிக்கத்திற்கு எதிரான போராட்டம் வலுப்பெற்று வருகிறது. அத்தகைய முயற்சிகளுக்கு சுதந்திரம் ஜனநாயகம் பாரம்பரியமிக்க இந்தியா போன்ற நாடுகள் முன்னணியில் நிற்க வேண்டும்.

உலக வர்த்தக அமைப்பு

19ம் நூற்றாண்டில் நவீன தொழில்களிலும் வர்த்தகத்திலும் சுதந்திர வர்த்தகம் என்றும் முறையில் பிரிட்டன் முன்னணியில் நின்று ஆதிக்கம் செலுத்தியது. இந்தியா, பிரிட்டிஷ் கலானி ஆதிக்க ஆட்சியின் கீழ் இருந்தும் இந்தியாவின் செல்வ பலமும் சந்தை பலமும் இதர கொள்கையும் பிரிட்டிஷ் ஆதிக்கத்தின் கீழ் இருந்தும் பிரிட்டனுக்கு உலக வர்த்தக அரங்கில் தலைமை நிலை கொண்டிருந்ததற்குக் காரணமாக இருந்தது.

பிரிட்டன் தனது முழு பலத்துடன் இந்திய நாட்டின் செல்வங்களைக் கொள்ளையடித்துக் கொண்டிருந்தது. பிரிட்டனின் வர்த்தகக் கொள்கையினால் இந்தியாவின் தொழில் வர்த்தகம் நலிவுற்றிருந்தது.

இந்தச் சூழ்நிலையில் இந்திய தேசிய இயக்கம், இந்தியத் தொழில்களைப் பாதுகாக்கும் நோக்கத்தில் அந்நிய வஸ்து வர்ஜனம் என்னும் சுதேசி லட்சியத்தை முன் வைத்தது. அதனால் நல்ல பலன்களும் கிடைத்தது. குறிப்பாக இருபதாம் நூற்றாண்டில் இரண்டு உலகப் பெரும் போர்கள் நடந்ததும், அதில் பிரிட்டன் ஈடுபட்டு வெற்றி பெற்றாலும் ஆட்சேதம் பொருட் சேதம் காரணமாக பலவீன மடைந்திருந்தது. அந்தக் காலங்களில் இந்தியத் தொழில்கள் முன்னுக்கு வந்து ஓரளவிற்கு பலம் பெற்றது.

நாடு சுதந்திரம் பெற்ற பின்னர் 1952 ஆம் ஆண்டிற்குப் பின்னர், ஐந்தாண்டு திட்டங்கள் மூலம் திட்டமிடப்பட்டு நமது பெரிய தொழில்களும் வளர்ச்சி பெற்றன. பல தடைகளையும் மீறி பலமடைந்தும் வருகின்றன. ஆயினும் உலக அளவில் பாரதம் வளர்முக நாடுகளின் வரிசையில்தான் இருக்கிறது.

இருப்பினும், இந்தியாவில் ஒரு வலுவான விவசாய தளம் மக்கள் தொகை மிக்க பெரிய சந்தை, மனித வளம் ஆகியவை இருப்பதால் எண்பதாம் ஆண்டுகளிலிருந்து தொழில் துறையிலும் பொதுவான பொருள் உற்பத்தித் துறையிலும் சற்று அதிகமான முன்னேற்றத்தை அடைந்து வருகிறது. குறிப்பாக தகவல் தொழில் நுட்பத் துறையில் தனி உற்பத்தியிலும் வர்த்தகத்தில் நல்ல முன்னேற்றம் காணத் தொடங்கியிருக்கிறது. உலக நாடுகளில் கிழக்கு நாடான ஜப்பானுடன் அதிகமான தொழில் தொடர்பு ஏறுபட்டு வருகிறது. தென் கிழக்கு ஆசிய நாடுகளுடன் அதிகமான தொடர்பு ஏற்பட்டு வருகிறது. எனவே உலக நாடுகளின் அமைப்புகளில் இந்தியாவின் செல்வாக்குப் மரியாதையும் அதிகரித்து வருகிறது. அதே சமயத்தில் அமெரிக்க பிரிட்டிஷ் ஆதிக்க முயற்சிகளின் காரணமாக இந்தியாவின் முன்னேற்றம் செல்வாக்கு பல வகைகளிலும் தடைப்படத்தான் செய்கிறது.

ஆயினும் இந்திய நாட்டின் அரசியல் செல்வாக்கும் பொது செல்வாக்கும் ஆசிய ஆப்பிரிக்க நாடுகளுக்கிடையில் அதிகரித்து வரத்தான் செய்கிறது. நம்மிடம் ஆதிக்க உணர்வோ, பெரியண்மை மனோபாவமோ கிடையாது.

இந்த சூழ்நிலையில் நமது சுதேசியத்தைப் பலப்படுத்த வேண்டும். நமது விவசாய தளத்தை பலப்படுத்த வேண்டும். நமது விவசாய உற்பத்தியை உற்பத்தித் திறனையும் பலப்படுத்த வேண்டும். நமது பொருளாதாரத்தின் அடிப்படை பலம் நமது விவ்சாய உற்பத்தியும் சிறு தொழில்களுமாகும். இன்று இந்திய நாட்டில் ஒர கோடிக்கும் மேற்பட்ட சிறு தொழில்கள் உள்ளன. அவை மேலும் எண்ணிக்கையிலும் உற்பத்தி அளவிலும் உயர்ந்து கொண்டு வருகிறது. இதை படிப்படியாக மேலும் அதிகமாக சுதேசி மயமாக்க வேண்டும். தொழில் நுட்பத்திலும் புதிய உத்திகளுடன்

முன்னேற்றம் காண வேண்டும்.

அந்நிய உதவியுவன் ஆன பெரிய தொழில்களிலும் அனைத்து துறைகளிலும் நமது பங்கை அதிகரிக்க வேண்டும். உதிரி பாகங்களின் உற்பத்தியை சிறு தொழில்கள் மூலம் அதிகரிக்க வேண்டும். அதன் மூலம் நமது தொழில்களின் சுதேசித் தன்மையை அதிகரிக்கச் செய்ய வேண்டும்.

சுதேசிக் கல்வி தொழில் துறையிலும், தொழில் நுட்பத் துறையிலும் சுதேசித் தன்மையை அதிகரிக்கச் செய்யும். சிறு தொழில் துறையில் சுதேசித் தன்மையை அதிகரிக்க வாய்ப்புகள் அதிகம்.

நமது ஜவுளித் தொழில், ரயில்வே, கப்பல் கட்டும் தொழில், விமானம் கட்டும் தொழில், ஆட்டோ மொபைல் சாதனங்கள் உற்பத்தி, ஆயுத உற்பத்தி, இரும்பு உருக்குத் தொழில் முதல் பல தொழில்களிலும் சிறு தொழில்களும் துணைத் தொழில்களும் நமது நாட்டில் இயல்பாகவே வளர்ச்சி பெற்றிருக்கின்றன. அவைகளை மேலும் மேலும் அதிகமாக அபிவிருத்தி செய்ய வேண்டும். இவையணைத்திலும் சுதேசியத்தை வளர்க்க வேண்டும்.

அப்போது அமெரிக்க ஐரோப்பிய போட்டிகளை சமாளிக்க முடியும். சிறிய நாடுகளுக்கு உதவி செய்ய முடியும். ஆசிய ஆப்பிரிக்க நாடுகளுடன் நல்லுறவுகளை வளர்த்துக் கொள்ள வேண்டும்.

4. நான்காவதாக சுதேசி இயக்கத்தின் ஒரு பகுதியாக சரீரப் பயிற்சியை பாரதி குறிப்பிடுகிறார்.

சரீரப் பயிற்சி என்பது உடல் ஆரோக்கியத்தை வளர்ப்பதற்கு மிகவும் அவசியம் என்பதை அனைவரும் அறிவர். அதில் நமது பலவீனம் நடிக்கிறது.

உலக விளையாட்டுப் போட்டிகளில் இந்திய நாடு மிகவும் பின் தங்கியிருக்கிறது. அந்த நிலை பாரதி காலத்திலிருந்து இன்னும் நீடிக்கிறது. இந்தத் துறையில் பள்ளிகள், கல்லூரிகள், கல்வி நிலையங்கள் மட்டுமல்ல. தனியான பல்கலைக்கழகங்கள் நிறுவி தனி கவனம் செலுத்த வேண்டும்.

ஊர் தவறாமல், கிராமம் தவறாமல், நகரங்களில் வார்டு தவறாமல் பல வகையான உடற் பயிற்சி மையங்களும் விளையாட்டு போட்டி மையங்களும் உருவாகத் தனிப்பயிற்சிகள் ஏற்பாடு செய்ய வேண்டும். இதில் மாநில அரசுகள் முனைப்பு காட்டவே தமிழ்நாட்டில் விளையாட்டு பல்கலைக்கழகம் அமைந்திருப்பது வரவேற்கத்தக்கது. சாதிச் சண்டை மதச்சண்டைகளை நிறுத்தி விளையாட்டு போட்டிகளை அதிகரிக்கப்படுத்தலாமே.

இதில் மாநில அரசுகளும் உள் ஆட்சி அமைப்புகளும் தனியார் அமைப்புகளும் கவனம் செலுத்த வேண்டும். பாரதியின் ஆத்மா மகிழ்ச்சியடைய வேண்டும்.

தேசியக் கல்வி:

சுதேசியம் என்பதில் தேசியக் கல்வி என்பது முக்கிய இடம் பெறுகிறது. மகாகவி பாரதியார் கல்விக்கு அதிகமான முக்கியத்துவம் கொடுத்துப் பாடல்கள் பாடியுள்ளார். கவிதைகள் கட்டுரைகள் எழுதியுள்ளார் என்பதைத் ஏற்கனவே குறிப்பிட்டுள்ளோம்.

''தேசம் என்பது குடிகளின் தொகுதி இது கொண்டே நமது முன்னோர் குடிக்காட்டுகளினின்று விலகி நிற்போரைப் பரதேசிகள் என்றனர் போலும்'' என்று பாரதி குறிப்பிடுகிறார்.

''தேசக் கல்விக்கு குடும்பக் கல்வியே வேர்'' என்று பாரதி கூறுகிறார்.

தேசக் கல்வி பற்றி மகாகவி பாரதி கூறியுள்ள கருத்துக்கள் பற்றி மிகவும் விரிவாக ஆராய வேண்டும். அது பற்றி புதிய திட்டங்களை வகுத்துச் செயல்படுத்த வேண்டும். அப்போது தான் பாரதம் உலகில் முதலிடம் பெற முடியும்.

தேசியக் கல்வி பற்றி மகாகவி பாரதி, தனது கவிதைகளிலும் கட்டுரைகளிலும் கதைகளிலும் மிகவும் விரிவாகப் பேசியுள்ளார். அவைகளை இன்றையக் கல்வியுடன் இணைத்து விரிவாகப் பேசுவது அவசியம். எனவே, அதுபற்றி தனியாக ஆய்வு செய்யலாம். தனி நூலே எழுதலாம். இதன் தொடர்ச்சியாக மகாகவி பாரதியும் தேசியக் கவியும் என்னும் தலைப்பில் தனி நூல் வெளிவர விடுக்கிறது.

தேசியக் கல்வி என்னும் தலைப்பில் ''தேசக் கல்விக்கு குடும்பக் கல்வியே வேர்'' என்று மகாகவி குறிப்பிட்டுள்ளது பற்றி ஏற்கனவே குறிப்பிட்டுள்ளோம்.

''வீட்டுப் பழக்கம் தான் நாட்டிலுஈம் தோன்றும் வீட்டில் யோக்கியன் நாட்டிலும் யோக்கியன் வீட்டில் பொறுமையுடையவன் மனைவியின் பொருளைத் திருட மனம் துணிந்தோன். கோயிற்பணத்தைக் கையாடக் கூசமாட்டான். தான் பெற்ற குழந்தைகளுக்கிடையே பக்ஷபாதம் செய்பவன், ஊரில் நியாயாதிபதியாக நியமனம் பெறத்தக்கவன் ஆகமாட்டான். குடும்பம் நாகரிக மடையாவிட்டால் தேசம் நாகரிகமடையாது. குடும்பத்தில் விடுதலை இராவிடில் தேசதில் விடுதலை இராது.

ஒரு குடும்ப்ததார் கூடித்துன்மில்லாமல் வாழ்வதைக் காட்டு மிருகங்களும் பிற மனிதரும் தடுக்காத வண்ணமாக ஆதியில் மனிதர் காட்டை அழித்து வீடு கட்டினார்கள். பல வீடுகள் கூடி ஊர் ஆயிற்று.

''வீடு என்ற சொல்லுக்கு விடுதலை எவ்பது பொருள் வெளியில் எத்தனையோ அச்சங்களுக்கு ஹேதுக்கள் உள. அவ்விதமான அச்சங்கள் இல்லாமல் விடுதலைப்பட்டு வாழத்தகுந்த இடத்துக்கு வீடு என்று பெயர்

கொடுத்தனர் போலும்''

குழந்தைகள் வீட்டையே அரசனாகக் கருதுகிறார்கள் ஸ்திரிகளும் அப்படியே செய்கிறார்கள். குடும்ப வாழ்க்கையே மற்றெல்லா வாழ்க்கைகளிலும் சிறந்தது. இதனால் அன்றோ திருவள்ளுவரும்,

''இல் வாழ்வான் என்பான் இயல்புடைய மூவர்க்கும்

நல்லாற்றின் நின்ற துணை'' என்றார்.

''தேசக் கல்விக்கு குடும்பக்

கல்வியே வேர்'' என்று ஏற்கனவே குறிப்பிட்டோம்.

பாரத தேசத்தில் குடும்ப அமைப்பு புனிதமானது. இங்கு தான் ஏகபத்தினி விரதம் என்பதும் கற்பு நிலை என்பதும் நமது கலாச்சாரமாக நிலை நிறுத்தப்பட்டுள்ளது.

சில நாடுகளில் விடுதலைக் காதல் கொள்கையைக் கடைப் பிடித்துக் கொள்கிறார்கள். நமது நாட்டுக் கலாச்சாரத்தில் விடுதலைக் காதல் கொள்கை என்பது பொதுவாக ஏறுற்றுக் கொள்ளப்படுவதல்ல.

திருமணம், ஆண், பெண், கூட்டு வாழ்க்கை, குடும்ப அமைப்பு, கூட்டு சிந்தனை என்பது நமது நாட்டுக் கலாச்சாரத்தின் அடிப்படையாகும். விருப்பத்திற்கு ஏற்றவாறு கூடி வாழ்வதும் பின்னர் பிரிவதும் என்பது காட்டு மிராண்டி நிலையாகும். மிருக நிலையாகும். விலங்குகள், பறவைகளில் கூட ஒருவகை கூட்டு வாழ்க்கையும் இனவிருத்தி முறையையும் காண்கிறோம். அதிலிருந்து அனுபவங்கள் பெற்றுத்தான் மனிதன் கூட்டு வாழ்க்கையை ஏற்படுத்திக் கொண்டான். பாரதப் பண்பாட்டில் குடும்ப அமைப்பை உருவாக்கி அதை ஒரு உயர்ந்த பண்பாட்டு நிலைக்குக் கொண்டு சென்றிருக்கிறோம்.

குடும்ப அமைப்பு என்பது குழந்தைகளின் பராமரிப்பிற்கும், குழந்தைகளின் கல்வி வளர்ச்சிக்கும் மிகவும் அவசியமானதும் ஆதரவானதுமாகும்.

தேசியக் கல்வியைக் குறித்து ஆராய்ச்சி செய்கிற நாம் மேற்படி காடுதலைக் காதற் கொள்கையை அங்கீகாரம் செய்தல் ஸாத்யமில்லை. ஏனென்றால், தேசமாவது குடும்பங்களின் தொகுதியென முன்னோர் காட்டியுள்ளோம். குடும்பங்களில்லாவிட்டால் தேசம் இல்லை. தேசம் இல்லாவிடிலோ தேசியக் கல்வியைப் பற்றிப் பேச இடமில்லை. விடுதலைக் காதலாகிய கொள்கைக்கும் மனை வாழ்க்கைக்கும் பொருந்தாது. மனை வாழ்க்கை ஒருவனும் ஒருத்தியும் நீடித்து என்றாக வாழாவிட்டால் தகர்ந்து போய் விடும். இன்று வேறு மனைவி நாளை வேறு மனைவி என்றால் குழந்தைகளின் நிலை

என்னாகும். குழந்தைகளை நாம் எப்படி ஸம்ரக்ஷணை செய்ய முடியும்? ஆதலால் குழந்தைகளுடைய ஸம்ரக்ஷணையே நாடி ஏகபத்தினி விரதம் சரியான அனுஷ்டானம் என்று முன்னோரால் ஸ்தாபிக்கப்பட்டது.

தமிழ்நாட்டில் தேசியக் கல்வியென்பதாக ஒன்று தொடங்கி அதில் தமிழ் பாஷையை பிரதானமாக நாட்டாமல் பெரும்பான்மைக் கல்வி இங்கிலிஷ் மூலமாகவும், தமிழ் ஒருவித உபாஷையாகவும் ஏற்படுத்தினால் அது தேசியம் என்ற பதத்தின் பொருளுக்கு முழுதும் விரோதமாக முடியும் என்பதில் ஐயமில்லை தேச பாஷையே பிரதானம் என்பது தேசியக் கல்வியின் ஆதாரக் கொள்கை இதை மறந்து விடக்கூடாது.

தேச பாஷையை விருத்தி செய்யும் நோக்கத்துடன் தொடங்கப்படுகிற இந்த முயற்சிக்கு நாம் தமிழ்நாட்டிலிருந்து பரிபூர்ண ஸஹாயத்தை எதிர் பார்க்க வேண்டுமானால் இந்த முயற்சிக்குத் தமிழ் பாஷையே முதற்கருவியாக ஏற்படுத்தப்படும் என்பதைத்தம் பட்டம் அறைவிக்க வேண்டும். இங்ஙனம் தமிழ் பிரதானம் என்று நாம் சொல்லுவதால், டாக்டர் நாயரைத் தலைமையாகக் கொண்ட திராவிடம் கக்ஷியார் என்ற போலிப் பெயர் புனைந்த தேச விரோதிகளுக்கு நான் சார்பாகி ஆர்ய பாஷை விரோதம் பூண்டு பேசுகிறேன் என்று நினைத்து விடலாகாது. தமிழ் நாட்டிலே தமிழ் சிறந்திடுக. பாரத தேசம் முழுதிலும் எப்போதும் போலவே வட மொழி வாழ்க. இன்னும் நாம் பாரத தேசத்தின் ஐக்கியத்தைப் பரிபூரணமாகச் செயயுமாறு நாடு முழுவதிலும் வட மொழிப் பயிற்சி மேன் மேலும் ஓங்குக. எனினும் தமிழ்நாட்டில் தமிழ் மொழி தலைமை பெற்றுத் தழைத்திடுக'' என்று மகாகவி மிகவும் தெளிவாக தமிழ் மொழி முதன்மை பெறவேண்டும் என்பதையும் தாய் மொழிக் கல்வியின் அவசியத்தையும் வலியுறுத்திக் கூறுகிறார்.

இன்னும் தேசியக்கல்வி என்னும் தலைப்பில் மகாகவி ''ஆரம்பப் பள்ளிக் கூடங்கள் அதன் பாடத்திட்டங்கள், எழுத்து, படிதப்பு, கணக்கு, சரித்திரப் பாடங்கள், பூமி சாஸ்திரம், மதப்படிப்பு, ராஜ்ய சாஸ்திரம், (அரசியல்) பொருள் நூல் லயன்ஸ் அல்லது பௌதீக சாஸ்திரம் கைத் தொழில் விவசாயம் தோட்டப் பயிற்சி, வியாபாரம் சரீரப் பயிற்சி யாத்திரை முதலியவைகளைப் பாடத் திட்டங்களில் சேர்த்து சொல்லிக் கொடுக்க வேண்டுமென்று குறிப்பிடுகிறார்.

தேசியக் கல்வியில் முகமதியார்களையும் இணைக்க வேண்டும். கல்வியில் மத பேதங்களைக் காட்டக்கூடாது.

மேலும் இந்தியாவில் உள்ள முஸல்மான்களில் பலர் ஹிந்து சந்ததி யார் அவர்களுடைய நெஞ்சில் ஹிந்து ரத்தம் புடைக்கிறது. இங்ஙனமில்லாமல் வெறும் பட்டாணிய அராபிய, பாரஸீக, மொகலாய ஸந்ததியாக இருப்போரும் இந்த தேசத்தில் ஆயிர வருஷங்களுக்கு மேலாக வாழ்வதால்

ஹிந்து ஜாதியராகவே கருதத்தக்கவர் ஆவர். எங்ஙனமெனில் ஜப்பானில் பிறந்தவன் ஜப்பானியன் சீனத்தில் பிறந்தவன் சீனன் ஹிந்து தேசத்தில் பிறந்தவன் ஹிந்து. இதர தேசங்களில் தேச எல்லையே ஜாதி எல்லையாகக் காணப்படுகிறது. இந்த நாட்டிலும் அதே மாதிரி நாம் ஏன் செய்யக்கூடாது?

இந்தியா, இந்து, ஹிந்து, மூன்றும் ஒரே சொல்லின் திரிபகள் இந்தியாவில் பிறந்தவன் இந்திய ஜாதி அல்லது ஹிந்து ஜாதி.

கிறிஸ்தவர்

தேசியக் கல்வி முயற்சிகளில் சேரக் கூடாதென்று ஒரு சில மூடப்பாதிரிகள் சொல்லக்கூடும். அதை ஹிந்து கிறிஸ்தவர் கவனிக்கக்கூடாது. தேசியக் கல்வியில் ரிக்வேதமும், குரானும், பைபிளும் சமானம் தேசியக் கல்வி முயற்சியில் ஜாதி மத வர்ண பேதங்களைக் கவனிக்கக் கூடாது என்று மகாகவி பாரதி வலியுறுத்திக் கூறுகிறார்.

இங்ஙனம் பாரத தேசம் விடுதலை பெற வேண்டுமாயின் அதற்குத் தேசியக் கல்வியே ஆதாரம் என்று மகாகவி பாரதியார் குறிப்பிடுகிறார்.

ஹிந்துக்கள் யார்?

இந்தியா நாடு- பாரத தேசம் என்பது பாரம் பரியமும் தனி பண்பாடும் மிக்க ஒரு தேசம் அதன் வரலாறும் பண்பாடும் பாரம்பரியமும் பத்தாயிரம் ஆண்டுகளுக்கும் அதற்கும் மேலானது நமது பெருமை மிக்க வேதங்கள் அதன் பழைமையைக் கணித்துக் கூற இயலாது. அறிவிற் சிறந்தது வேத நூல்கள் தத்துவங்கள், அரசியல் பொருளியில் இலக்கியங்கள், தத்துவ ஞான நூல்கள், இதிகாசங்கம், புராணங்கள், கதை நூல்கள், வரலாற்று நூல்கள், காப்பியங்கள், அறிவியல் நூல்கள், கணிதம் மற்றும் இதர அறிவியல் சாஸ்திரங்கள் முதலியவையெல்லாம் பெருமையும் பாரம்பரியமும் மிக்கவை. மிகச் செழுமையானவை. மனித வாழ்க்கையோடு இணைந்தவை. உலகில் முதன் முதலில் இதிகாசங்கள் உருவானது இந்திய மொழிகளிலாகும். நீண்ட வரலாற்றில் அவைகளுக்கு எத்தனையோ சோதனைகள் ஏற்பட்டன. அவைகளையெல்லாம் தாண்டி நமது சாஸ்திரங்கள் ஒளி வீசித்திகழ்கின்றன.

ஒரு தடவை தமிழகத்திலுள்ள புகழ்பெற்ற ஸ்தபதி கணபதி ஸ்தபதி அவர்களிடம் பேசியபோது பாரத நாட்டு சிற்பக்கலை என்பது வெறும் கலை மட்டுமல்ல, அது இன்றைய தொழில் நுட்பத்தரத்தில் அறிவியல் தொழில் நுட்பமாகும். நமது நாட்டின் இந்த கட்டிக் கலை பற்றிய அறிவியல் தொழில் நுட்ப நூல்கள் தமிழிலும் சமஸ்க்ருதத்திலும் பத்தாயிரம் ஆண்டுகளுக்க முன்பே இருந்து வந்திருக்கிறது அன்று குறிப்பிடுகிறார்.

இது ராமாயணப் பெருங்கதையில் வரும் அயோத்தி நகரம், கிட் கிந்தை நகரம் இலங்கை நகரம், இலங்கைக்குச் செல்வதற்கு நிர்மாணிக்கப்பட்ட

பாலம், பழைய இலங்கையை அழுமன் நெருப்பை வைத்து எரித்த பின்னர், மண்டோதரியின் தந்தையும் புகழ் பெற்ற சிற்பியுமான மயன் மூலம் புதுப்பிக்கப்பட்ட இலங்கை.

மகாபாரதக் கதையில் வரும் அஸ்தினாபுரமும் இதர நகரங்களும் பாண்டவர்கள் கட்டிய பேரழகுமிக்க இந்திர பிரஸ்தம் ஆகியவையெல்லாம் நமது நாட்டின் பழம் பெருமை மிக்க சிற்பக் கலையில் நகர அமைப்புக்கலையின் கட்டிடக்கலையின் சின்னங்களால்லவா?

நமது பாரம்பரியம் சிறப்பும் பெருமையும் மிக்க நாகரிகரத்தை சற்று மறந்து விட்டோம், தூங்கிவிட்டோம். குடும்ப கருணனும் நமது படைப்பல்லவா? மெத்தனமாக இருந்து விட்டோம்.

நமது பண்டைய பெருமை மிக்க இலக்கியங்கள் அறிவியல் இலக்கியங்கள், சிற்பம், வைத்தியம், மருந்தியல், கடல் இயல் கப்பல் கட்டுதல், பொருளியல் முதலிய எண்ணற்ற பல இலக்கியங்களையும் வெளிக் கொணர வேண்டும்.

கடந்த ஆயிரம் ஆண்டுகளாக நம் நாட்டின் மீது படையெடுத்த பல பாரசீகர்கள், துருக்கியர்கள், மங்கோலியர்கள் இஸ்லாமியப் படைகள், நமது நாட்டின் கலைச் செல்வங்களைக் கொள்ளையடித்தார்கள். அறிவுச் செல்வங்களை அழித்தார்கள். காட்டு மிராண்டித்னமான முறையில் நமது சிறப்புமிக்க கலாச்சாரத்தை அழித்தார்கள். எல்லாவற்றிற்கும் மேலாக ஆங்கிலேயப் படையெடுப்பாளர்கள் நடத்திய கொள்ளை கொடுமைகள் நாசங்கள் சொல்லில் அடங்காது. நமது பழைய அறிவுச் செல்வங்களெல்லாம் சிதைக்கப்பட்டன.

இவைகளையெல்லாம் நமது தேசியக் கல்வித்திட்டத்தில் ஆய்வு செய்தும், புதிய வரலாற்றுச் செய்திகளைக் கண்டு பிடித்தும் வெளிக் கொணர வேண்டும். மறைக்கப்பட்ட உண்மைகளை வெளிப்படுத்த வேண்டும்.

மகாகவி பாரதி கீழ்க்கண்ட செய்தியை எடுத்துக் கூறுகிறார்.

ஹிந்துக்களின் கூட்டம்

இந்தியா முழுவதிலுமுள்ள ஹிந்துக்களின் அனுகூலத்திற்கு பாடுபட்டு வரும் ''அகண்ட பாரத ஹிந்து சபை''யின் காரிய தரிசியான ஸ்ரீ ரத்னசாமு என்பவர் தேராதூன் பட்டணத்திலிருந்து ''ஹிந்து'' பத்திரிகைக்கு எழுதியிருக்கும் விஷயமொன்றில் பின்வருமாறு சொல்லுகிறார்.

''இந்த மாதம் முதல் தேதி, சென்னை தலைமைப் பாதிரி எல்லூரில் ஆணும் பெண்ணும் குழந்தைகளுமாக ஏறக்குறைய முன்னூறு பேரைக் கிறிஸ்து மதத்தில் சேர்த்துக் கொண்டார் என்று தெரிகிறது. இந்த விஷயம் நமது நாட்டில் பல இடங்களில் அடிக்கடி நடந்து வருகிறது. இது ஹிந்து

மதத்தில் அபிமானமுடையவர்களுக்கெல்லாம் மிகுந்த விருத்தத்தை விளைவிக்கத்தக்கது'' என்று எழுதுகிறார்.

''ஆம் ஹிந்துக்கள் வருத்தப்படத்தக்க செய்திதான் அது. ஹிந்துக்களுடைய ஜனத் தொகை நாளுக்கு நாள் குறைவுபட்டு வருகிறது. கவிதையிலுள்ள மலைப்பாம்பு போல, வாலில் நெருப்பு பிடித்தெரியும் போது தூங்கும் வழக்கம் இனி ஹிந்துக்களுக்கு வேண்டாம். விழியுங்கள். ஜனத்தொகை குறையும் போது பார்த்துக் கொண்டே சும்மா இருப்போர் விழித்திருக்கும் போதே தூங்குகிறார்கள். அவர்கள் கண்ணிருந்தும் குருடர்'' என்று மகாகவி எழுதுகிறார்.

பஞ்சமர்களின் விஷயமாக அகண்ட பாரத ஹிந்து சபையின் காரியத்தரிசி ஸ்ரீ ரத்னசாமு என்பவருக்கு ஸ்ரீ காசி ஹிந்து சபையின் தலைவராகிய வைதிகமணி ஸ்ரீமான் பகவான் தாஸர் எழுதியிருக்கும் கடிதத்தில் ஒரு நல்ல யோசனை சொல்லுகிறார். பறையர்களுடைய தீண்டாமையை உடனே நீக்கி விட வேண்டும். கசி நவத்வீபம், பிருந்தாவனம், என்ற ஸ்தலங்களில் உள்ள பண்டிதர்களும் இவ்விஷயமாக உடனே உத்தரவு கொடுக்க வேண்டும்.

பஞ்சமருடன் பந்தி போஜனம் செய்ய வேண்டும் என்றாவது சம்மந்தங்கள் செய்ய வேண்டுமென்றாவது மேற்படி ரத்னசாமு முதலிய தர்மிஷ்டர்கள் விரும்பவில்லை கூறவில்லை. ஹிந்துக்களுக்குள் இதர வகுப்பினர் பந்தி போஜனம் சம்மந்தங்கள் இல்லாதிருக்கும் வரை பஞ்சமரும் அப்படியே இருக்கலாமென்று ஸ்ரீ ரத்னசாமு சொல்லுகிறார். ஆனால் பஞ்சமரின் சேரிகளிலே கிறிஸ்துவப் பாதிரிகள் பள்ளிக் கூடங்கள் முதலியன வைப்பது போல் நமது குருக்கள் ஏன் செய்யவில்லை? அவர்களுக்கு ஹிந்து மதோபதேசம் செய்யும் கடமையாரைச் சேர்ந்தது. அதற்குப் மேற்படி மடாதிபதிகள் ஏன் ஆள் அனுப்பவில்லை.

ஹிந்து தர்மத்தின் மஹிமையை நன்றாக அறிந்தோர் இஹலோக வாழ்க்கையில் எத்தனை கொடூரமான கஷ்ட நிஷ்டூரங்கள் நேரிட்டாலும் இந்து தர்மத்தைக் கைவிட மாட்டார்கள். உலகத்தில் நிகரற்றதாகிய வறுமையானது நமது தேசத்தை வந்து பிடித்துக் கொண்ட கால முதலாக நமது நாட்டார் பசியாலும் அதனால் ஏற்படும் நோய்களாலும் லக்ஷக்கணக்காக அகால மரணத்துக்கிரையாகி வருகிறார்ககள். பசித்துன்பம் எல்லோருக்கும் மெதுவாக இருந்தாலும், ''கீழ்'' வகுப்பினருக்குள் அதிகமாக பாதிக்கிறது. நாட்டில் பஞ்சம் நேரிட்டால் பஞ்சமர் முதலிய தாழ்த்தப்பட்ட வகுப்பினர் அதிகமாக சாகிறார்கள். பறையரும், புலையரும், பள்ளரும், சக்கிலியரும், நம்மைப் போல் ஹிந்துக்களான் பாதையும் விபூதி நாமம் போட்டுக் கொண்டு நமது தெய்வங்களையே வணங்குவோரென்பதையும் மடாதிபதி புரோஹிதர் குருக்கள் முதலியவர்கள் சற்றே மறந்து போய்விட்டதாகத் தோன்றுகிறது.

''அங்கமெல்லாம் குறைந்து அழுகு தொழு

நோயராய்

ஆயுர்த்துத் தின்றுழலும் புலையரேனும்

கங்கை வார் சடைக்கரந்தார்க்

கன்பராயின்

அவர் கண்டீர் யகம் வணங்கும்

கடவுளாரே

என்ற வாக்கைத் தமிழ் வேதமாகக் கொண்டாடுவோம் அதன் பொருளைத் தெரிந்து கொள்ளவோம்.

''ஒக்கத் தொழுகிற்றிராயின் கலியுகம் ஒன்றுமில்லை'' என்ற திருவாய் மொழிக்கருத்தை அநேகர் அறியாதிருக்கிறார்கள். ஹிந்துக்களுள்ளே இன்னும் ஜாதி வகுப்புகள் மிகுதிப்பட்டாலும் பெரிதில்லை. அதனால் நாம் தொல்லைப்படுவோமேயின்றி அழிந்து போய்விட மாட்டோம். ஹிந்துக்களுக்குள் இன்னும் வறுமை மிகுதியபட்டாலும் பெரியதில்லை. அதனால் தர்ம தேவதையின் கண்கள் புண்படும். இருந்தாலும் நமக்கு ஸவர்நாசம் ஏற்படாது. ஹிந்து தர்மத்தைக் கவனிக்காமல் அசிரத்தையாக இருப்போமானால் நமது கூட்டம் நிச்சயமாக அழிந்து போகும். அதில் சந்தேகமில்லை.

ஹிந்து மதம் என்று, சைவம் வைஷ்ணவம் முதலிய ஆறு சமயங்களும் அதன் உட்பிரிவுகள் இதை தேசத்து ஜனங்களில் பெரும்பாலோர் நன்றாக ஞாபகத்தில் வைத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் குருக்கள் மடாதிகாரிகள் முதலிய சிலர் மறந்து போயிருப்பதாகத் தெரிகிறது.

''திரமென்று தந்தம் மதத்தையே தாமதச்

செல்கை கொடுமுறை அறிவரார்?

ஆறு சமயங்கடொறும் வேறும் வேறாகி

விளையாடும் உனையாவரறிவார்''

என்று தாயுமானவர் சொல்லியது பாரத தேசத்து மகாஜனங்களுக்கன்று. மஹா ஜனங்கள் இவ்வுண்மையை நன்றாகத் தெரிந்து நடக்கிறார்கள். பிரம்மக்ஷத்திரிய வைசிய சூத்ர என்ற நான்கு பிரிவிலும் பெரும் பகுதியோர் எல்லாத் தெய்வங்களையும் ஒன்று போலவே வணங்குகிறார்கள், வேதரிஷிகளைப் போல.

ஆனால் சைவ- வைணவ மடங்களிலும் பௌராணிகர் கூட்டத்திலும் பரஸ்பரமாகிய மத கண்டனைகள் கொஞ்சம் நடந்து வருகின்றன. அதை உடனே நிறுத்த வேண்டும்'' என்று மகாகவி பாரதியார் தனது கட்டுரையில்

குறிப்பிடுவதைக் காண்கிறோம்.

ஹிந்துக்கள் யார்?

வேதத்தை நம்புவோர்

ருத்ரன், நாராயணன், குமாரன் முதலிய தேவர்கள் ரிஷிகளால் ஒன்றாகக் கருதி வணங்கப் பெற்றோர். ஒரே தெய்வத்தை இங்ஙனம் பல பெயர் கூறி வணங்கியதாக அந்த ரிஷிகளே சொல்லியிருக்கிறார்கள்.

நல்ல காலம்

ஹிந்து மதம் ஒன்று. ஆகவே வைஷ்ணவ சமயாச்சாரியார் சைவ சமயாச்சாரியார், சங்கரமடத்தார் முதலிய குருக்களெல்லாம் தமது பிரதிநிதிகள் மூலமாக ஒன்று கூடி யோசனை செய்து ஹிந்துக்களுடைய ஜனத் தொகை குறையாமல் பாதுகாப்பதற்கு வழி செய்ய வேண்டும். பிற மதங்களிலிருந்து ஜனங்களை நமது கூட்டத்தில் சேர்த்துக் கொள்ளவதற்கு வழிகளென்ன ஏன்பதைப் பற்றி யோசனை செய்ய வேண்டும். தெய்வம் ஹிந்துக்கள் மீது கடைக்கண் செலுத்தி விட்டது. நாம் கும்மிடும் சிலைகளெல்லாம் வெறும் கல்லும் செம்புமல்ல. மனிதர்களாகவே சீர்படுத்த முடியாதபடி அத்தனை கெட்ட நிலைமையில் ஹிந்துக்கள் வீழ்ந்த சமயத்தில் மேற்படி தெய்வங்கள் காப்பாற்றக் கருத முற்பட்டு நிற்கின்றன. நமக்குள்ளே மஹா ஞானிகளும் சித்த புருஷர்களும் அவதரித்து விளக்குகிறார்கள். ஹிந்துக்களுக்கு நல்ல காலம் பிறந்து விட்டது. இதனை எல்லோரும் தெரிந்து நடக்க வேண்டும்'' என்று மகாகவி மிகவும் நம்பிக்கையுடனும் நாட்டு மக்களுக்கு நம்பிக்கையூட்டும் வகையிலும் தீர்க்க தரிசனத்துடன் எழுதுகிறார்.

நாற்குலம்- சதுர்வர்ணம்

மகாகவி பாரதியார், தனது கண்ணன் பாட்டுகளில், கண்ணன்- என் தந்தை என்னும் தலைப்பில் கீழ்க்கண்டவாறு எழுதுகிறார்.

நாலு குலங்கம் அமைத்தான்- அதை

நாச முறப்புரிந்தனர் மூட மனிதர்.

சிலம் அறிவு தருமம்- இவை

சிறந்தவர் குலத்தினில் சிறந்தவதாம்

மேலவர் கீழவர் என்றே- வெறும்

வேத்திற் பிறப்பினில் விதிப்பனவாம்

போலிச் சுவடியையெல்லாம்- இன்று

பொசுக்கிவிட்டால் வெர்க்கும்

நன்மையுண்டாம்

என்று பாடுகிறார். இத்தகைய மிகச் சிறப்பான கருத்தை இதுவரை யாரும் கூறவில்லை.

சென்ற காங்கிரஸ் ஜனசபை 'லக்நௌ' நகரத்தில் கூடிக் கலைந்த பிறகு ஸ்ரீமான் லோகமான்ய பால கங்காதரத்திலகர் தமது இஷ்டர்களுடன் கான்பூருக்கு வந்தார். அங்கு ராம லீலை நாடக வெளியில் பதினையாயிரம் ஜனங்கள் சேர்ந்த பொதுக்கூட்டம் ஒன்று கூடி அவரை ஸ்வராஜ்ய போதனை செய்யும்படி வேண்டினார்கள். ஸ்வராஜ்ய பேச்சுக்கிடையே அவர் ஜாதிக்கடடை குறித்துச் சொல்லிய சில வார்த்தைகளை இங்கு மொழி பெயர்த்துக் காட்டுகிறேன்.

திலகர் சொன்னார், ''பழங்காலத்து நான்கு வர்ணப்பிரிவுக்கு இப்போதுள்ள ஜாதி வேற்றுமைக்கும் பேதமிருக்கிறது. திருஷ்டாந்தமாக இப்போது ஒரே பந்தியில் இருந்துண்ண விரும்பாதிருத்தல் சாதிப் பிரிவுக்குலக்ஷணம் என்று பலர் நினைக்கிறார்கள். பழைய காலத்து விஷயம் இப்படி இல்லை.

நான்கு வர்ணங்கள் பிறப்பினாலேயல்ல. குணத்தாலும் தொழிலாலும் உண்டாயின'' என்று கீதை சொல்லுகிறது. அதன்படி பார்த்தால் இப்போது நமக்குள் க்ஷத்தியர் எங்கேயிருக்கிறார்கள்? நம்மைக்காப்போர் ஆங்கிலேயர்-ஹிந்துக்களுக்குள் க்ஷத்திரியரைக் காணோம். இந்தக் கான்பூர் பெரிய வியாபார ஸ்தலம். ஆனால் இங்குள்ள வைசியர் பிற தேசத்து வியாபரிகளின் வசத்தில் நிற்கிறார்கள். செல்வத்தலைமை நமக்கில்லை. இப்போதுள்ள பிராமணர் தாமே தேசத்தின் மூளை என்று சொல்லுகிறார்கள். ஆனால் இந்த மூளை மண்ணடைந்து போய், நாம் வெளியிலிருந்து அதிக மூளை இறக்குமதி செய்யும்படி நேரிட்டிருக்கிறது.

''நான்கு வர்ணத்தாருக்குரிய நால்வகைத் தொழில்களும் ஹிந்துக்களல்லாத பிறர் நியமனப்படி நடக்கின்றன. நாமெல்லாரும் தொண்டர் நிலையிலே இருக்கிறோம். தேசம் கெட்ட ஸ்திதியிலே இருக்கிறது. உங்களுடம்பில் பிராமண ரத்தம் ஓடுவதாகவும் க்ஷத்திரிய ரத்தம் ஓடுவதாகவும் நீங்கள் வாயினால் சொல்லலாம். ஆனால் உங்களுடைய வாழ்க்கை அப்படியில்லை.

இவ்வாறு திலகர் சொல்லியதிலிருந்து நமது தேசத்திற்கு மிகுந்த நன்மை உண்டாகக்கூடும். ஏனென்றால் இவர் தேசம் முழுவதிலும் சுதேசீயக்கட்சியாருக்குத் தலைவராக இருப்பது மாத்திரமேயன்றி மஹா ராஷ்டிரத்து வைதீகப் பிராமணர்களின் தலைவராகவும் விளங்குகிறார். வேத சாஸ்திர ஆராய்ச்சியில் உயர்ந்த கீர்த்த பெற்றவர். நெடுங்காலமாக

இடைவிடாது செய்து வரும் ஆராய்ச்சியினாலும் உயர்ந்த மேதையினாலும் நமது பூர்வீகமான ஜாதி தர்மத்தின் உட்கருத்தை நன்றாகத் தெரிந்து கொண்டு நமது தற்காலப்பிரிவுகளைக் கண்டிக்கிறார். புராதன தர்மமே பின்பற்றத் தக்கது. ஹிந்துக்களாகிய நாமெல்லோரும் இவருடைய உபதேசப்படி நடந்தால் நன்மையுண்டாகும். இப்போதுள்ள ஜாதி விரோதங்களும் தாழ்வுகளும் நீங்கி எல்லோருக்கும் மேன்மையுண்டாகும்'' என்று மகாகவி எழுதுகிறார்.

மகாகவி மேலும் எழுதுகிறார்.

ஒருவன் தான் பிராமணனாக வேண்டுமென்று கருதினால் அவன் உண்மை ஆராய்ச்சியே முதற்காரியமாகக் கொண்டு வாழக்கடவான் க்ஷத்திரிய பதவி வேண்டுமானால் தன்னுயிர்க்கிரங்காமல் மன்னுயிரைக் காப்பதே விரதமாகக் கொண்டு வாழக்கட வான். இங்ஙனமே மற்றவையும் கொள்க.

குணத்தாலும் தொழிலாலும் ஏற்படுகிற மேன்மையைக் கண்டு யாரும் பழிகூறி இடமில்லை. குணத்திலும் தொழிலிலும் கடைப்பட்ட ஒருவன் பிறப்பைக் காரணமாக வைத்துக் கொண்டு, ''நான் மற்ற வரைக் காட்டிலும் உயர்ந்தவன்'' என்று சொல்லும் போது மற்றவருக்குக் கோபம் உண்டாகிறது.

செயற்கரிய செய்வார் பெரியர் சிறியர்

செயற்கரிய செய்கலாதார்

என்று, தாம் வள்ளுவர் மரபில் பிறந்தாலும் நமது முன்னோரால் பிரமதேவனுடைய அவதாரமென்று போற்றப்பட்ட திருவள்ளுவநாயனார் சொல்லுகிறார். ஒருவன் குண கர்மங்களால் பிராமணனாக இருப்பானாகில் அவனுக்கு நாட்டில் முதலாவது மதிப்புண்டாதல் பொதுவாக எல்லா தேசங்களிலும் இயற்கையாக நடந்து வரும் நெறி. ஏனென்றால் எல்லாத் தொழில்களுக்கும் சாஸ்திரமே நேத்திரம். சரீர இன்பங்களைத் தேடுவதே முதற்காரியமாகக் கொண்ட மனிதர் மிகுந்து போயிருக்கும் இவ்வுலகத்தில் சிலர் அந்தப் படியைக் கடந்து மேல் ஏறிப் போய் உண்மைனை தேடுவதே முதற்காரியமென்றும் மற்றதெல்லாம் அதற்குப் பிறகுதான் என்று உணர்ந்து நடப்பாராயின் அவதர தலைமக்கள். மற்ற வருணத்து நெறிகளையும் இப்படியே வகுத்தறிந்து கொள்ளுதல் எளிது.

பறையர்: பறையர் என்னும் தலைப்பில் மகாகவி பாரதியார் எழுதுகிறார்.

'பறையர்' என்பது மரியாதை உள்ள பதம் இல்லை என்று கருதி இக்காலத்தில் சிலர் பஞ்சமர் என்ற சொல்லை அதிகமாக வழங்குகிறார்கள். நானும் சில சமயங்களில் பஞ்சமர் என்ற சொல்லை வழங்குவது உண்டு. ஆனால் பறையர் என்பதே மேற்படி ஜாதியாருக்குத் தமிழ்நாட்டில் இயற்கையாக ஏற்பட்ட பெயர். பறை என்பது பேரிகை. பூர்வகாலத்தில் நமது

ராஜாக்கள் போர் செய்யப் போகும் போது ஐயபேரிக்கை கொட்டிச் செல்லும் உத்தமமான தொழில் இந்த ஜாதி. யார் செய்து வந்தபடியால் இவர்களுக்கு இப்பெயர் வழங்குவதாயிற்று. இது குற்றமுற்ற பதமில்லை என்பதற்கு குஜ¯ வேண்டுமானால் மேற்படி கூட்டத்தாரால் சென்னையில் நடத்தப்படும் சபைக்கு பறையர் மஹாசபை என்று பெயர் வைத்திருப்பதைக் காண்க. அவர்களை மிருகங்களைப் போல நடத்துவது குற்றமேயொழிய பறையர் என்று சொல்லுவது குற்றமில்லை'' என்று மகாகவி பாரதியார் எழுதுகிறார்.

பிற்காலத்தில் சென்னையில் மேற்படி பறையர் மகாசபை மிகவும் சிறப்பாகச் செயல்பட்டதாக பல செய்திகள் குறிப்பிடுகின்றன. பிரிட்டிஷ் அரசாங்கத்தார் லண்டனில் இந்திய அரசியல் பிரச்சினைகளைப் பற்றி விவாதிப்பதற்கு வட்ட மேஜை மகாநாடு கூட்டப்பட்ட காலத்தில், அதில் கலந்து கொள்வதற்கு சென்னை பறையர் மகாசபை சார்பாக ரெட்டை மலை சீனிவாசன் கலந்து கொண்டதாகச் செய்திகள் குறிப்பிடுகின்றன.

எனவே பறையர் என்னும் சொல் குற்றமுள்ளதல்ல, குறையுடைதுமல்ல. ஆனால் அவர்களைக் குறைந்த சாதியாராகக் கருதுவதுதான் குற்றம். பறையரை சகல விதத்திலும் மேலுயர்த்த வேண்டும். அப்போதுதான் பாரத சமுதாயமும் மேன்மையடையும். நமது நாட்டுப்பாதையரும் பெண்களும் விடுதலை பெறுவார்களானால் பாரத நாடு பெரும் அளவில் முன்னேற்றம் காணும். உலக நாடுகளில் முதன்மை பெறும். வையத்தலைமை பாரதத்திற்கு ஏற்படம் என்பதில் சந்தேகமில்லை '' என்று மகாகவி எழுதிகிறார்.

மகாகவி பாரதியார் மேலும் எழுதுகிறார்.

என்னடா இது! ஹிந்து தர்மத்தின் பஹிரங்க விரோதிகள் பறையரைக் கொண்டு பிராமணரை அடிக்கும்படி செய்யும் வரை சென்னை பட்டணத்து ஹிந்துக்கள் பார்த்துக் கொண்டிருக்கிறாரகள். அடே! பார்ப்பானைத்தவிர மற்ற ஜாதியாரெல்லாம் கூட பறையனை அவதிப்பாகத் தான் நடத்துகிறார்கள். எல்லோரையும் அடிக்கப் பறையரால் முடியுமா? பறையருக்கு அனுகூலம் மற்ற ஜாதியார் செய்யத் தொடங்கவில்லையா? எதற்கும் ஹிந்து மத விரோதிகளின் பேச்சைக் கேட்டலாமா?

நந்தனாரையும் திருப்பாணாழ்வரையும் மற்ற ஹிந்துக்கள் கும்பிடவில்லையா? பறையருக்கு நியாயம் செலுத்த வேண்டியது நம்முடைய முதற் கடமை. அவர்களுக்கு முதலாவது வேண்டியது சோறு. சென்னைப் பட்டணத்து 'பட்லர்'களைப் பற்றிப் பேச்சிலை. கிராமங்களிலுள்ள பண்ணைப் பறையர்களைப் பற்றிப் பேச்சு. அவர்களையெல்லாம் ஒன்று திரட்டு. உடனே விபூதி நாமத்தைப் பூசு. பள்ளிக்கூடம் வைத்துக் கொடு. கிணறு வெட்டிக் கொடு. இரண்டு வேளை ஸ்நானம் பண்ணச்சொல்லு அவர்களோடு சமத்துவம் கொண்டாடு நான் நெடுங்காலமாகச் சொல்லி வருகிறேன். அவர்களை எல்லாம் உடனே ஒன்று

சேர்த்து ஹிந்து தர்மத்தை நிலைக்கச் செய்யுங்கள். நம்முடைய பலத்தைச் சிதற விடாதேயுங்கள். மடாதி பதிகளே! நாட்டுக் கோட்டைச் செட்டிகளே! இந்த விஷயத்தில் பணத்தை வாரிச் செலவிடுங்கள். இது நல்ல பலன் தரக்கூடிய கைங்கரியம். தெய்வத்தின் கருணைக்கும் பாத்திரமாக்கும் காரியம்.

''பறையரை'' பரை (அதாவது ஆதிசக்தி முத்துமாரி) யின் மக்கள் என்னும் பொருள் சொல்வதுண்டு. நமக்கு மண்ணு முழுது நெல்லறுத்துக் கொடுக்கிறது ஜாதியாரை நாம் நேரே நடத்த வேண்டாமா? அது சரிதான். இனிமேல் பறையன் கை நீட்டாமல் இருப்பதற்கு வழி தேடிக் கொள்ளுங்கள். சென்னைப் பட்டணத்திலே நாலு பட்லர்கள் ஹிந்து மதத்தை உல்லங்கனம் செய்த போதிலும் நாட்டிலுள்ள பறையர் எல்லாரும் உண்மையான ஹிந்துக்கள் என்பதை மறந்து விடக்கூடாது. எனக்கும் ஒரு வள்ளுவப் பையனுக்கும் ஸ்நேகம். அவனுடைய கோயில் அம்மன் மீது நான் பாட்டு கட்டிக் கொடுத்தேன். அவன் அடிக்கடி எங்கள் வீட்டுக்கு வருவதுண்டு. அவன் காத்தவராயசாமி விஷயமாகச் சில பாட்டுக்கள் சொன்னான். காத்தவராயன் என்பது வேகத்திலே சொல்லிய காற்று. வாயுக்கடவுளேயன்றி வேறில்லையென்று அந்தப் பாட்டுக்களினாலேயே தெரிந்து கொண்டேன். முத்துமாரி என்ற பாரசக்தியுடைய பிள்ளைதான் காத்தவராயன். பறையர்களும் நம்மைப் போலவே வைதீக தேவர்களை பூஜிக்கிறார்கள். மற்றொன்று சொல்லுகிறேன்.

''அங்கமெலாங்குறைந்தழுகு தொழு

நோயராய்

ஆவுரித்துத்தின்றுலும் புலையரேனும்

கங்கை வார்சடைக்காந்தார்க்

கன்பராயின்

அவர் கண்பீர் யாம் வணங்கும்

கடவுளாரே''

பறையர் ஹிந்துக்கள் அவர்களைக் கை தூக்கிவிட்டு மேல்நிலைக்கு கொண்டு வருதல் நம்முடைய தொழில் என்ற மகாகவி கூறுகிறார்.

பஞ்சமர்:

பறையருக்கெல்லாம் நல்ல சோறு, நல்ல படிப்பு முதலிய சவுக்கியங்களும் மற்ற மனுஷ்ய உரிமைகளும் ஏறுபாடு செய்து கொடுத்தல் நம்முடைய கடமை. சென்னைப் பட்டணத்தில் நாயர்கஷ்டிக் கூட்டமொன்றில் பறையரை விட்டு இரண்டு மூன்று பார்ப்பாரை அடிக்கும்படி தூண்டியதாகப்

பத்திரிகையில் வாசித்தோம். ராஜாங்க விஷயமான கொள்கைகளில் அபிப்ராய பேதமிருவ்தால் இதை ஜாதி பேதச் சண்டையுடன் முடிச்சுப் போட்டு அடிபிடி வரை கொண்டு வருவோர் இந்த தேசத்தில் இந்து தர்மத்தின் சக்தியை அறியாதவர்கள். இது நிற்க.

அடுத்த நவம்பர் பட்டணத்தில் பறையரை உயர்த்த வேண்டும் மென்கிற நோக்கத்துனை மகா சங்கம் நடத்தப் போவதர்கக் கேள்விப்பட்டு மிகவும் சந்தோஷமடைந்தேன். முற்காலத்தில் நந்தனார் தோன்றியது போலவே, இப்போது மேற்படிபோர் குலத்தில் ஸஹஜாநந்தர் என்ற சந்யாசி ஒருவர் நல்ல பக்தராயும் ஸ்வாமிமானம் உடையவராகவும் தோன்றியிருக்கிறார். அவருடைய முயற்சிகளை முன்னுக்குக் கொண்டு வரும்படி உதவி செய்ய விரும்புவோர் கத்திபில் ஸ்ரீ கேசவப்பிள்ளை திவான் பகதூருக்கு எழுதி விவரங்கள் தெரிந்து கொள்ளலாம். மேற்படி ஸஹஜானந்தர் சிதம்பரத்திற்கு அருகே ஒரு கிராமத்தில் பறைப் பிள்ளைகளுக்காக ஒரு பள்ளிக் கூடப் போட்டிருக்கிறார். அந்தப் பள்ளிக்கூட்டம் மே மாதம் திறக்கப்பட்டது. இப்போதைக்கு மண் கட்டிடம், கூரை வேய்ந்திருக்கிறார்கள். அதில் நானூறு பிள்ளைகள் வரை ஏற்கனவே சென்று படிக்கிறார்கள்.

தியஸாபிக்கல் சங்கத்தார் சில பஞ்சம் பாடசாலைகளை ஏற்படுத்தி அந்த ஜாதியாரை மேன்மைப்படுத்தும் பொருட்டு மிகுந்த சிறத்தையுடன் உழைத்து வருகிறார்கள். ஸ்ரீ மதி அன்னி பெஸண்டுக்கு இந்த விஷயத்தில் ஏற்பட்டிருக்கும் அன்பும் உத்ஸாஹமும் மெச்சத்தகுந்தன.

பகவன் என்ற பிராமணனுக்கும் ஆதி என்ற பறைச்சிக்கும் ஔவை, திருவள்ளுவர், கபிலர், பரணர், உப்பை, உறுவை வள்ளி என்ற குழந்தைகள் பிறந்து உபய குலத்துக்கும் நீங்காத கீர்த்தி ஏற்படுத்தியதை இக்காலத்திலும் பறையர் மறந்து போகவில்லை.

சிறிது காலத்துக்கு முன்பு ஒரு கிழச்சாம்பான் என்னிடம் வந்து, ''முப்போதும் நீரில் மூழ்கிக் குளித்தால் முனிவர்களாவாரோ? எப்போதும் இன்பத்தில் இருப்பவரன்நோ இரு பிறப்பாளராவார்'' என்ற தத்துவராயர் வாக்கைச் சொல்லப்பறையென்பது, ஹிந்து தர்மத்தில் கோயிற் பேரிகையென்றும், அதைக் கொட்டுவோன் பறையன் என்றும், பறையெஜ்பது சக்தியின் பெயரென்றும் அவளே ஆதியென்றும் சிவனே பகவான் என்றும் பிராமண ரூபம் கொண்டு அவருடன் வாழத்தான் என்றும், பறையர் மேம்பட்டால் பார்ப்பார், வேளாளர், முதலியார், செட்டியார் முதலிய இதர ஜாதியாரும் மேன்மையடைவார்கள் என்றும் பலவித நீதிகளைச் சொன்னான். அதே கருதி துடையவராய் ஹிந்துக்களுடைய விடுதலையிலும் மேம்பாட்டிலும் மிகுந்த நாட்டத்துடன் உழைத்து வரும் ஸ்ரீ நீதிபதி மணி அய்யரும், வைத்தியர் நஞ்சுண்ட ராயரும் சுதேச மித்திரன் ரங்கசாமி அய்யங்காரும் பறையர் குலத்தைக் கை தூக்கி விடுவதில் தம்மால்

இயன்றவரை உதவி செய்வதைக் கண்டு நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன்.

''ஊரார் பிள்ளையை ஊட்டி வளர்த்தால்

தன் பிள்ளை தானே வளரும்''

என்று மகாகவி பாரதியார் எழுதுகிறார்.

ஜாதிக் குழப்பம்

இந்தியாவில் விசேஷ கஷ்டங்கள் இரண்டு பணம் இல்லாதது ஒன்று. ஜாதிக் குழப்பம் இரண்டாவது பணக்கஷ்டமாவது வயிற்றுக்குப் போதிய ஆஹாரமில்லாத கொடுமை. இந்தத் துன்பத்துக்கு முக்கியமான நிவர்த்தியாதென்றால் நமது தேசத்தில் விளைந்து உணவுக்குப் பயன்படக் கூடிய தான்யங்கள் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதியாகாமல் தடுத்து விட வேண்டும். இங்கிலாந்து பதவிய தேசங்களில் காலையில் எழுந்தால் மீள்தென் அமெரிக்காவிலிருந்து வரும்படியாக இருக்கும் வெண்ணெய் ஆஸ்திரேலியாவிலிருந்து வரும்படியாக இருக்கும். இந்நாட்டினரின் நிலைமை அப்படியில்லை. இங்கு பூமி நம்முடைய ஜனங்களுக்கு எல்லாம் போதிய ஆஹாரம் கொடுக்கிறது. ஆதலால் ஏற்கனவே போதிய அளவு பணம் குவித்து வைத்திருந்தாலன்றி உணவுக்கு வழி கிடையாது, என்ற நிலைமை நம்முடைய தேசத்திற்கில்லை. உணவுத் தான்யங்களின் ஏற்றுமதியை எந்த நிமிஷத்தில் நிறுத்திவிடுகிறோமோ அந்த நிமிஷம் முதல் நம்முடைய ஜனங்களுக்குத் தட்டில்லாமல் யதேஷ்டமாக ஆஹாரம் கிடைத்துக் கொண்டு வரும். இந்த விஷயத்தில் ஜயமடைய வேண்டினால் நம்முடைய வியாபாரிகள் வெறுமே தம்முடைய வயிறு நிரப்புவது மாத்திரம் குறியாகக் கொள்ளாமல் தமக்குக் லாபம் வரும்படியாகவும் பொது ஜனங்களுக்கும் கஷ்டம் ஏற்படாமலும் செய்வதற்குரிய வியாபார முறைகளைக் கைக் கொள்ளும்படி அவர்களை வற்புறுத்த வேண்டும். இங்ஙனம் நம்முடைய நாட்டிலேயே தான்யங்களை நிறுத்திக் கொண்டு அந்தந்த ஊரில் மிக எளியோராக இருப்பவர்களிடம் தக்க வேலைகள் வாங்கிக் கொண்டு அவர்களுக்கு உணவு வேண்டிய மட்டும் கொடுத்து வர ஏற்பாடு செய்தல் மிகவும் எளிது'' என்று மகாகவி பாரதியார் எழுதுகிறார்.

பூரி (ஜகந்நாதம்) பிரதேசங்களில் மிகவும் கொடிய பஞ்சம் இந்த க்ஷணத்தில் நடைபெற்று வருகிறது. நம் நாட்டில் ராஜாக்களும் சாஸ்திரிகளும் பெரிய மிராசு தார்களும் ஸாஹூகார்களும் வியாபாரிகளும் வக்கீல்களும் பெரிய பெரிய உத்தியோகஸ்தர்களும் வயிறு கொழுக்க, விலாப்புடைக்க அஜீர்ணமுண்டாகும்படி ஆஹாராங்களைத் தம்முள் திணித்துக் கொண்டிருக்கையிலே உலகத்தில் வேறெந்த நாட்டிலும் இல்லாதபடி இந்தியாவில் மட்டும் தீராத மாறாத பஞ்சம் தோன்றி ஜனங்களை அழிக்கிற கொடுமையைத் தீர்க்க வழி தேட வேண்டிய யோசனை

அவர்களுடைய புத்திக்குச் சற்றேனும் புலப்படாதிருப்பதை எண்ணுந்தோறும் எனக்கு மிகுந்த வருத்தமுண்டாகிறது. இத்தனை கஷ்டத்துக்கிடையே ஜாதிக் கொடுமை ஒரு புறத்தே தொல்லைப்படுத்துகிறது'' என்று மகாகவி மிகவும் பன்வருந்தி எழுதுகிறார்.

பெரும்பாலும் தாழ்த்தப்பட்ட ஜாதியார்களே அதி ஏழைகளாக இருக்கிறார்கள் என்பது மறுக்கமுடியாத விஷயம். உழைப்பும் அவர்களுக்குத்தான் அதிகம். அதிக உழைப்பு நடத்தி வரும் வகுப்பினருக்குள்ளே அதிக வலுவு ஏற்படும். அநீதி உலக முழுவதிலுமிருக்கிறது. எனினும் நம்முடைய தேசத்தைப் போல இத்தனை மோசமான நிலைமை வேறு எங்குமில்லை'' என்று மிகவும் மனம் வருந்தி மகாகவி எழுதுகிறார்.

இவ்வாறு நமது நாட்டில் ஊரிப் போயிருக்கும் ஜாதிப்பிரச்சினையைப் பற்றி மகாகவி பாரதி மேலும் எழுதுகிறார்.

இங்ஙனம் ஜாதிக் கொள்கை வேரூன்றிக் கிடக்கும். நாட்டில் மனுஷ்ய சுதந்திரம் ஸமத்வம், ஸகோதரத்வம் என்னுங்கொள்கைளை நிலை நிறுத்து தென்றால் அது ஸாதாரணவேலையா? கொஞ்ச ஜாதியா? அவற்றில் உட்பிரிவுகள் கொஞ்சமா? அவற்றில் உட்பிரிவுகள் கொஞ்சமா? பறை பதினெட்டாம். நுளை நூற்று எட்டாம்? அதாவது பறையர்களுக்குள்ளே 18 பகுதிகளும் நுளையர்களில் 108 பகுதிகளும் இருக்கின்றனவாம். மேலும் பறையன் பள்ளன் சக்கிலீயன் எல்லோரும் வெவ்வேறு ஜாதிகள் ஒன்றுக் கொன்று பந்தி போஜனம் கிடையாது. பெண் கொடுக்கல் வாங்கல் கிடையாது. கேலி, கேலி, பெருங்கேலி.

இங்ஙனம் ஏற்கனவே மலிந்து கிடக்கும் பிரிவுகள் போதாவென்று பல புதிய பிரிவுகள் நாள்தோறும் ஏற்பட்டு வருகினஜ்றன. சீர்திருத்தம் வேண்டுமென்ற நல்ல நோக்கமுடையவர்களிலே சிலர் செய்கை நெறியுணராமல் புதிய வகுப்புகள் ஏற்படுத்திக் கொள்கிறார்கள். கடையத்து வேளாளரில் இங்கிலிஷ் படித்த சிலர் தாங்கள் ''திராவிட பிராமணர்'' என்று பெயர் வைத்துக் கொண்டு பரம்பரையாக வந்த ''பிள்ளை''ப் பட்டத்தை நீக்கி ''ராயர்'' பட்டம் சூட்டிக் கொண்டிருக்கறிார்கள். திருஷ்டாந்தமாக ஒருவருக்கும் ''ஆண்டியாப்பிள்ளை'' என்று பெயர் இருந்தால் அவர் அதை ஸர்க்கார் மூலமாக ''ஆண்டியப்ப ராயர்'' என்று மாற்றி அப்படியே சகல விவகாரங்களும் நடத்துகிறார். இந்தத் திராவிடப் பிராமணரின் பட்டம் எப்படி நேரிட்டது என்பதைக் கண்டுபிடிக்க வழியில்லை. என்று மகாகவி பாரதியார் இக்கதையை வேடிக்கையாகத் தனது கட்டுரையில் குறிப்பிடுகிறார்.

மகாகவி பாரதியார்| மேலும் எழுதுகிறார். ''எல்லா வகுப்பு மக்களுக்கும் சரியான படி படிப்பு சொல்லிக் கொடுத்தால் எல்லோரும் ஸமான

அறிவுடையோராய் விடுவார்கள். மாம்ஸ போஜனம் செய்யும் வகுப்பினர் அதை நிறுத்திவிட வேண்டும். பிறகு ஸ்வாமி விவேகானந்தர் சொல்லியபடி எல்லோரையும் ஒரேயடியாக பிராமணராக்கி விடலாம். கீழ் ஜாதியாரை நல்ல ஸம்ஸ்காரங்களால் பிராமணர்களாக்கி விட முடியும் என்பதற்கு நம்முடைய வேத சாஸ்திரங்களில் தக்க ஆதாரங்கள் இருக்கின்றன. அந்தப்படி இந்தியா முழுவதையும் பிராமண தேசமாகச் செய்து விட்டால் நல்லதென்பது என்னுடைய அபிப்ராயம். எந்த ஜாதியாக இருந்தாலும் சரி அவன் மாம்ஸபக்ஷணத்தை நிறுத்தும்படி செய்து அவனுக்கு ஒரு பூணூல் போட்டு காயத்ரி மந்திரம் கற்பித்துக் கொடுக்கப்பட வேண்டும். 'பிறகு அவன் பிராமணனாகவே கருதப்பட வேண்டும். இதுதான் விவேகானந்தர் சொல்லிய உபகாயம் கூடிய வரை நல்லஉபாயமும் கூட. ஆனால் மேல் வகுப்பினர் தம்முடைய உயர்வை மறந்து கீழ்வகுப்பினருடன் கலத்தல் இதனிலும் சிறந்த உபாயமாகும்'' என்று நகைச்சுவை ததும்ப மகாகவி பாரதியார் எழுதுகிறார். ஜாதி வேறுபாடு காட்டப்படுவதைக் கண்டித்து இவ்வளவு தெளிவாகவும் தீர்க்கமாகவும் மகாகவி பாரதி பேசுவதைப் போல் இதுவரை யாரும் பேசியதில்லை.

''பிராமணரல்லாதார்'' கிளர்ச்சி பற்றி

பிராமணர்- பிராமணரல்லாதார் என்னும் போலியான பொய்யான வேடிக்கையான பெயரில் தமிழகத்தில் ஒரு இயக்கமும் கிளர்ச்சியும் நடந்து வருவதைப் பற்றி அதை நிராகரித்து உண்மை நிலையை விவரித்து மகாகவி பாரதி மிகவும் அருமையான தொரு கட்டுரை எழுதியுள்ளார்.

''இந்தியாவின் மற்றப்பகுதிகளை காட்டிலும் நமது சென்னை மாகாணத்தில் தான் ஜாதி பேதத்தைப் பற்றிய பன ஸ்தாபங்கள் இப்போது அதிகமாக முளைத்திருக்கின்றனவென்பது அந்த மனஸ்தாபனங்கள் ராஜரீக விவகாரங்களிலும் கூடப் புகுந்து தேச விடுதலையாகிய பரம தர்மத்துக்குகே ஓர் இருக்கணாகக் கூடிய நிலைமை இம்மாகாணத்தில் மாத்திரமே காணப்படுவதினின்றும் நன்கு விளங்குமு். ஆயினும் இதுபற்றி சுதேசாபிமானிகள் அதிகமாகப் பயப்பட வேண்டியதில்லை. ஏன்றால், முதலாவது உலக முழுவதிலும் புதிதாகத்தோன்றி, சென்ற சில வருஷங்களாகப் புயற்காற்றைப் போல் தொழில் செய்து வரும் தெய்வீகமான விடுதலைக் கிளர்ச்சியின் சக்தியால் இந்தியாவின் மக்கள் முப்பது கோடிப்பேரும் எங்களுகு்கு ஸ்வராஜ்யம் வேண்டியதில்லையென்று ஹடம் பண்ணிய போதிலும் இந்தியாவுக்குக் கட்டாயமாக ஸ்வராஜ்யம் வந்து தீரவே செய்யும். மனிதர் எண்ணத்தை மீறியும் கால சக்தி வேலை செய்வதுண்டு அப்படிப்பட்ட காலம் இப்போது உலகமெங்கும் தோன்றியிருக்கிறது. மேலும் இந்த சமயத்தில் இந்தியாவிலும் ஜனங்களிற் பெரும் பகுதி ஸ்வராஜ்ய தாக்கத்தில் ஈடுபட்டுத்தான் கிடக்கறிார்கள். எனவே எந்த வகையாய் யோசித்த போதிலும், இந்தச் சென்னை மாகாணத்து ஜாதி

பேதக்கிளர்ச்சியினால் இந்தியாவின் விடுதலைக்குத் தாமஸம் ஏற்படுமென்று நினைக்க ஹேது இல்லை.

தவிரவும், இந்த ''பிராமணரல்லாதார் கிளர்ச்சி'' காலகதியில் தானே மங்கி அழிந்து விடுமென்று நிச்சயிப்பதற்கும் லபோதிய காரணங்கள் இருக்கின்றன. முதலாவது இதில் உண்மையில்லை. உண்மையாகவே இந்தியாவில் ஜாதி பேதங்கள் இல்லாமல் செய்துவிட வேண்டுமென்ற ஐக்கிய புத்தியுடைய யோரில் மிகமிகச் சிலரே இந்தக் கிளர்ச்சியில் தேறியிருக்கிறார்கள்.

பெரும்பாலும் சர்க்கார் அதிகாரங்களையும், ஜில்லா போர்டு முனிசிபாலிடி, சட்டசபை முதலியவற்றில் கௌரவஸ்தானங்களையும் தாமே அடைய வேண்டுமென்ற ஆவலுடையவர்களே இக்கிளர்ச்சியின் தலைவராக வேலை செய்து வருகிறார்கள். திருஷ்டாந்தமாக பிராமணருக்கு அநேகமாக அடுத்தபடி தென் இந்தியாவில் பல இடங்களிலே சைவ வேளாளர் என்ற வகுப்பினருக்கு ஏற்பட்டிருக்கின்றது. இந்த வகுப்புக் கீழே பஞ்சமர் வரை சுமார் இரண்டாயிரம் சாதி வகுப்புகள் இருக்கின்றன. அவர்களுக்கு மேலே பிராமணராகிய ஒரு வகுப்பினரே இருக்கிறார்கள். இந்த நிலையில் நம்முடைய சைவ வேளாளருக்குள்ளே ''அல்லாதார்'' கிளர்ச்சியை பிராமர் பிரிவுக்குணமுடையோரென்றும் மற்ற வகுப்பினருடன் சேர்ந்து உண்டு மணம் புரிந்து வாழ மறுக்கிறாரென்று நிந்திக்கிறார்களே யல்லாது தமக்குக் கீழேயுள்ள இரண்டாயிரத்துச் சில்லரை ஜாதியார்களுடனும் தாம் சேர்ந்துள்ள மணம் புரிந்து வாழுமாறு யாதொரு பிரயத்தணமும் செய்யாதிருக்கிறார்கள்.

''பிராமணரல்லாதார்'' என்றொரு வகுப்பு இந்தியாவில் கிடையவே கிடையாது. ஒன்றோடொன்று சம்பந்தம் பந்தி போஜனம் செய்து கொள்ள வழக்கப்படுத்தாது ஆயிரக்கணக்கான வகுப்புகள் இந்துக்களுக்குள்ளே நெடுங்காலமாக இருந்து வருகின்றன. இவற்றுள் பிராமணர் ஒரு வகுப்பினர். இங்ஙனம் வகுப்புகளாகப் பிரிந்திருத்தல் குற்றமாயின் அக்குற்றம் பிராமணரை மாத்திரமே சார்ந்த தாகாது. எல்லா வகுப்பினரையும் சாரும். பிராமணரும் மற்ற வகுப்பினரைப் போலவே இந்த முறைமையால் பந்தப்பட்டிருக்கிறார்கள். பிராமணருக்குள்ளேயே பரஸ்பரம் சம்பந்தம் சமபந்தி போஜனம் செய்து கொள்ளாதா பல பிரிவுகள் இருக்கின்றன.

''பிராமணரல்லாதார்'' என்ற வகுப்பே கிடையாது. அதுவே பொய். என்வே இந்தக் கிளர்ச்சியின் மூலமே பொய்யாக இருப்பது கண்டு இதனை உண்மையில்லாத கிளர்ச்சி என்றேன். உண்மையாகவே இந்தியாவில் ஜாதி பேதங்களில்லாமல் சமத்துவக் கொள்கை வெற்றியடைய வேண்டுமென்றால், அதற்கு ஸ்வராஜ்யஸ்தாபனமே சரியான உபாயம். ஸ்வராஜ்யம் கிடைத்தால் சட்டசபைகளில் எல்லா ஜாதி மோதாவிகளும் கலந்திருப்பார்களாதலால் அந்தச்சபைகளின் மூலமாக இந்தியாவில்

முதலாவது ராஜரீக வாழ்விலும் அக்கொள்கை தானே பரவி விடும். இதைவிட்டுப் பொய்யும் புலையுமாக திராவிடர்களென்றும் ஆரியரென்று முள்ள பழைய சொற்களுக்குப் புதிய அபாண்டமான அர்த்தங்களைக் கற்பித்துக் கொண்டு வீண் சண்டைகள் வளர்ப்பதனால் ஹிந்து சமூகத்துக்கே கெருதி விளையக்கூடம் எந்த வகுப்புக்கும் அனுகூலம் ஏற்படாது'' என்று மகாகவி பாரதியார் எழுதுகிறார்.

பிராமணன் யார்?

ஓர் உபநிஷத்தின் கருத்து

அஷ்டாதச உபநிஷத்துக்களிலே வஜர ஸூசிகை என்பதொன்று. ''வஜரஸூசி'' என்றால் வைர ஊசி என்பது பொருள். இவ்வுபநிஷதம் ''பிராமணர் யார்'' என்பதை குறித்து மிகவும் நேர்த்தியாக விவரித்திருக்கின்றது.

''நான் பிராமணன், நீ சூத்திரன்'' என்று சண்டை போடும் குணமுடையவர் களுக்கெல்லாம் இவ்வேத நூல் தக்க மருந்தாகும். அன்னிய ராஜாங்கத்தாரிடம் ஒருவன் போலீஸ் வேஷத் தொழில் பார்க்கிறான். அவன் ஒரு பூணுலைப் போட்டுக் கொண்டு ஏதேனும் ஒரு நேரத்தில் கிராம போன் பெட்டி தியாகைய கீர்த்தனைகள் சொல்வது போல பொருள் தெரியாத சில மந்திரங்களைச் சொல்லிவிட்டு ஐயர், ஐயங்கார் அல்லது ராயர் என்று பெயர் வைத்துக் கொண்டு ''நான் பிராமணன். நான் தண்ணீர் குடிப்பதைக் கூட மற்ற வர்ணத்தவன் பார்க்கலாகாது'' என்று கதை பேசுகிறான். மற்றொருவன் தாசில்தார் வேலை பார்க்கிறான். பஞ்சத்தினால் ஜனங்கள் சோறின்றிமடியும் போது அந்தத் தாசில்தார் தனது சம்பளம் அதிகப்படும் பொருட்டு, ''பஞ்சமே கிடையாது, சரியானபடி தீர்வை வசூல் செய்யலாம்'' என்று ரிப்போர்ட் எழுதி விடுகிறான். ஆறிவொரு கடமைக்கு மேல் ராஜங்கத்தார் தீர்வை கேட்பதே குற்றம் பஞ்சநாளில் அது கூடக்கேட்பது பெருங்குற்றம். அங்ஙனம் தீர்வை வாங்கிக் கொடுக்கும் தொழிலிலே இருப்பவன் ஹிந்து தர்மத்திற்கு விரோதி. அதற்குமப்பால் உள்ள பஞ்சத்தை இல்லை என்றெழுதி ஜனத்துரோகம் செய்யும் தாசில்தாருக்கு என்ன பெயர் சொல்வதென்று நமக்குத் தெரியவில்லை. இப்படிப்பட்ட தாசில்தார் தனக்கு சாஸ்திரியாம்? என்று பெயர் வைத்துக் கொண்டு, ''நான் கௌதமரிஷியின் சந்ததியிலே பிறந்தேன்'' என்பதாகப் பெருமை பாராட்டிக் கொள்கிறான். இப்படியே வைசியத் தொழில் சூத்திரத் தொழில் என்ற கௌரவத் தொழில் செய்வோரும் இவற்றிற்குப் புறம்பான புலைத் தொழில்கள் செய்வோருமாகிய பல போலிப் பார்ப்போர் தங்களுக்கு இயற்கையாகவுள்ள பெருமையை மறந்து விட்டுப் பொய்ப் பெருமையைக் கொண்டாடி வருகிறார்கள்.

நாட்டிலே இவ்விஷயமான விவாதங்களும் போராட்டங்களும் அதிகரிக்கின்றன. இத்தருணத்தில் நமது வேதம் இவ்விவகாரத்தைப் பற்றி

என்ன அபிப்ராயம் கொடுக்கிறது என்பது ஆராயத்தக்க பொருளாகும்.

வஜ்ரஸூசி உபரிஷத்து பின்வருமாறு, ஞானமற்றவர்களுக்குத் தூஷ்ணமாகவும் ஞானவக்கண் உடையவருக்கு பூஷணமாகவும் விளங்குவதும் அஞ்ஞானத்தை உடைப்பதுமாகிய ''வஜ்ரஸூசி'' என்ற சாஸ்திரத்தைக் கூறுகிறேன்.

''பிரம்ம, க்ஷத்திரிய, வைசிய சூத்திரர் என்று நான்கு வர்ணங்கள் உண்டு. அவற்றிலே பிராமணன் பிரதானமானவன் என்று வேத வசனத்தைத் தழுவி ஸ்மிருதிகளாலும் சொல்லப்படுகிறது. அதில் பிராமணன் யாரென்பது பரிசோதிக்கத் தக்கதாகும். ஒருவன் தன்னைப் பிராமணன் என்று சொல்லிக் கொள்கிறான். அங்ஙனம் பிராமணன் என்பது அவனுடைய ஜீவனையா? தேகத்தையா? பிறப்பையா? அறிவையா? செய்கையையா? தர்ம குணத்தையா? அவனுடைய ஜீவனே பிராமணன் என்றால் அஃதன்று. முன் இறந்தனவும் இனி வருவனவும், இப்போதுள்ளனவும் ஆகிய உடல்களிலெல்லாம் ஜீவன் ஒரே ரூபமுடையதாகத் தான் இருக்கிறது. ஆகையால் (அவனுடைய) ஜீவன் பிராமணனாக மாட்டாது. ஆயின் (அவனது) தேஹம் பிராமணனெனில் அதுவுமன்று. சண்டாளன் வரையுள்ள எல்லா மனிதர்களுக்கும் பஞ்ச பூதங்களால் ஆக்கப்பட்ட உடலும் ஒரே அமைப்புடையதாகத் தானிருக்கிறது. மூப்பு, மரணம், இயல்புகள், இயல்பின்மைகள், இவையனைத்தும் எல்லா உடல்களிலும் சமமாகக் காணப்படுகின்றன. மேலும் பிராமணன் வெள்ளை நிறமுடையவன், க்ஷத்திரியன் செந்நிற முடையவன், வைசியன் மஞ்சள் நிற முடையவன், சூத்திரன் கருமை நிற முடையவன் என்பதாக ஓர் நியமத்தையும் காணவில்லை. இன்னும் உடல் பார்ப்பானாயினும் தகப்பன் முதலியவர்களை இறந்தபின் கொளுத்தும் மகன் முதலியவர்களுக்கு பிரமஹர்த்தி தோஷம் உண்டாகும். ஆதலால் (அவனுடைய) தேஹம் பிராமணனாக மாட்டாது. ஆயின் பிறப்பு பற்றிப் பிராமணன் என்று கொள்வோமென்றால் அதுவும் அன்று.

மனிதப் பிறவியற்ற ஐந்துக்களிடமிருந்து கூடப் பல ரிஷிகள் பிறந்ததாகக் கதைகள் உண்டு. ரிஷ்ய சிருங்கர் மானியிருந்தும், ஜாம்பூர் நரியிலிருந்தும் வால்மீகர் புற்றிலிருந்தும், கௌதமர் முயல் முதுகிலிருந்தும் பிறந்ததாகக் கதை கேட்டிருக்கிறோம். அது போக வஸிஸஷ்டர் ஊர்வசி வயிற்றில் பிறந்தவர். அகஸ்தியர் கலசத்தில் பிறந்ததாகச் சொல்லுவார்கள். வியாசர் மீன் வலைச்சியின் வயிற்றில் பிறந்தவர் முன்னாளில் ஞானத்தில் பெருமையடைந்தவர்களாகிய பல ரிஷிகளின் பிறவி வகை தெரியாமலேயே இருக்கிறது. ஆகையால் பிராமணத்வம் பிறப்புப் பற்றியதன்று. அறிவினால் பிராமணன் எனக் கொள்வோமென்றால் அதுவுமன்று. க்ஷத்தியர் முதலிய மற்றவர்ணத்தவர்களிற்கூட அநேகர் உண்மை தெரிந்த

அறிவாளிகளாயிருக்கிறார்கள். ஆதலால் அறிவு பற்றி ஒருவன் பிராமணன் ஆகமாட்டான். ஆயின் செய்கை பற்றி ஒருவனைப் பிராமணனாகக் கொள்வோமெனில் அதுவுமன்று. பிராப்தம், சஞ்சிதம் ஆகாமியம் என்ற மூவகைச் செயல்களும் ஒரே விதமான இயற்கையுடையவனாகவே காணப்படுகிறான். முன் செயல்களால் தூண்டப்பட்டு ஜனங்களெல்லோரும் பின் செயல்கள் செய்கிறார்கள்.. ஆதலால் செய்கை பற்றி ஒருவன் பிராமணனாய் விட மாட்டான். பின் தர்மஞ்செய்வோனைப் பிராமணனாகக் கொள்வோ தம் என்றால், க்ஷத்திரியன் முதலிய நான் வர்ணத்தவரும் தருமச் செய்கையைப் பற்றியே பிராமணனாக விடமாட்டான். அப்படியானால் யார்தான் பிராமணன்? எவனொருவன் இரண்டற்றதும் பிறவி, குணம், தொழில் என்பவை இல்லாததும், உள்ளும் புறமும் ஆகாசம் போல கலந்திருப்பதும் அளவிடக்கூடாததும் அனுபவத்தால் உணரத்தக்கதுமாகிய இறுதிப் பொருளை நேருக்கு நேராகத் தெரிந்து காமம் ரோகம் முதலிய குற்றங்களில்லாத வனாய் பாபம், மாற்சர்யம் விருப்பம் ஆதை மோகம் முதலியவை நீங்கினவாய் இடம்பம் அகங்காரம் முதலியவை பொருந்தாத நெஞ்சமுடையவனாய் இருக்கிறானோ- இங்ஙனம் கூறப்பட்ட இலக்கண முடையவனே பிராமணனென்பது கருதி ஸ்மிருதி புராண இதிகா மென்பவற்றின் அபிப்ராயமாகும். மற்றபடி ஒருவனுக்கு பிராமணத்வம் சித்தியாகாது என்பது உபநிஷத்து.

பிராமணராக வேண்டுவோர் மேற்கூறப்பட்ட நிலைமையப் பெற முயற்சி செய்யக்கடவர். க்ஷத்திரியர் வைசியர், சூத்திரர் முதலியமற்ற லௌகீக வர்ணங்களுக்கும், இது போலவே தக்க வாலு லக்ஷணங்கள் அமைத்துக் கொள்க. அவ்வ்வவிலக்கணங்கள் பொருந்தியவர்களே அவ்வவ் வருணத்தினர் என்று மதிக்கத்தக்கவர்கள். அந்த இலக்கணங்கள் இல்லாதவர்கள் அவற்றை அடைய முயற்சி செய்ய வேண்டும். போலீஸ் வேவுத் தெனாழில் செய்பவன் பிராமணன் ஆக மாட்டான். குமாஸ்தா வேலை செய்பவன் க்ஷத்திரியன் ஆக மாட்டான். சோம்பேறியாக முன்னோர் வைத்துவிட்டுப் போன பொருளை அழித்துத் தின்பவன் வைசியன் ஆக மாட்டான். கைத் தொழில்களையெல்லாம் இறக்கக் கொடுத்துவிட்டு சோற்றுக் கஷ்டமடைவோர் சூதிதிரர் ஆக மாட்டார்கள். இவர்களெல்லோரும் மேம்பாருடைய ஆர்வவர்ணங்கள் நான் நிற்கும் புறம்பாகி நீசக் கூடத்தார். நமது தேசம் முன் போலக் கீர்த்திக்கு வர வேண்டுமோனால் உண்மையான வகுப்புகள் ஏற்பட வேண்டும். பொய் வகுப்புகளும் போலிப் பொருமைகளும் நசிக்க வேண்டும். இது நம்முடைய வேத சாஸ்திரங்களின் கருத்து.

நமது தேசத்தில் வறுமை அதிகமாக இருக்கிறது.

முன்னேயிருந்தவர்களின் கோழைத்தன்மை ஒற்றுமைக்குறைவு சாஸ்திர

ஞானமின்மை, பல தேச விவகாரங்கள் தெரியாமை, மூடகர்வங்கள், முதலியவற்றால் லக்ஷ்மியை இழந்தோம். மேற்படி குணங்கள் இன்னும் நம்மை விட்டு நன்றாக நீங்கவில்லை. நாளொன்றுக்கு சராசரியாக நமது நாட்டில் ஒரு மனிதனுக்கு முக்காலணா வரும்படியென்று கணக்காளிகள் சொல்லுகிறார்கள். அதாவது நரகத்துன்பம் உலகத்தில் வேறெந்த நாட்டிலும் இப்படியில்லை.

இந்த நிலையில் நமக்குள்ளே பலர் பலவிதமான இகழ்ந்த காரியங்கள் செய்வது வியப்பில்லை. மிகுந்த செல்வமுடைய நாடுகளிலேகூச மனிதர் பணத்துக்காக எத்தனையோ மானங்கெட்ட காரியங்கள் செய்கிறார்கள். ஏழை தேசத்தாராகிய நாம் இவ்வளவு மானத்துடன் பிழைப்பதே பெரிய காரியம்.

பணம், பொதுக்கல்வி, விடுதலை மூன்று இல்லாவிட்டால் அந்த நாட்டில் மானமேது?

மதிப்பு:

நூறு மனிதர் சேர்ந்து ஒருவனை நாயகன் என்று தீர்மானம் செய்தால் அவனுக்கு மிகுந்த வலிமை ஏற்படுகிறது. அங்ஙனம் தீர்மானிக்கப்பட்ட நாயகர்கள் பத்து பேர் சேர்ந்து தமக்குள்ளே ஒரு தலைவனை நியமித்துக் கெண்டால் அந்தத் தலைவனுடைய சொல்லைத் தேசத்தார் அனைவரும் மதிக்கும்படி நேரிடும்.

கூட்டத்திற்கு வலிமையுண்டு. இது ஹிந்துக்களுக்குக் கூடத் தெரிந்த விஷயம். ஒரு பெரிய கூட்டத்தின் தலைவனுக்கு ஒரு மதிப்புண்டு என்பதை ஹிந்துக்கள் ஒன்றாக அறிந்து இருக்கிறார்கள். என்றாலும் புதிது புதிதாகக் கூட்டம் சேர்க்கும் யுக்தி ஹிந்துக்களுக்கு இன்னும் நன்றாகத் தெரியவில்லை. ஒரு பெரிய கூட்டத்தில் சேர்ந்திருக்கும் ஒவ்வொரு மனிதரும் புதிய வலிமையும் அதனால் புதிய அனுகூலங்களும் பெறுகிறான். பிச்சைக்காரர் கூடத் தனித்தனியே பிச்சையெடுப்பதைக் காட்டிலும் நூறு பேர் கூட்டம் கூடிப் பிச்சைக்குப் போனால் அதற்கு மதிப்பு மிகுதியுண்டு.

ஹிந்துக்களை உலகத்தார் பாமர அநாகரிக முக்கால் காட்டு ஜனங்கள் என்று நினைக்கும் படி நாம் இதுவரை இடங்கொடுத்து விட்டோம்.

இந்தியாவை வெளியுலகத்தார் பாமர தேசம் என்று நினைக்கும்படி செய்த முதற்குற்றம் நம்முடையது புறக்கருவிகள் பல.

முதலாவதாக, கிறிஸ்தவப் பாதிரி. அமெரிக்காவிலும், ஐரோப்பாவிலும் சில கிறிஸ்தவப் பாதிரிகள் தாங்கள் மத விஷயமான பிரச்சாரத்தை உத்தேசித்து நம்மைக்குறித்துப் பெரிய பெரிய பொய்கள் சொல்லி, இப்படித் தாழ்ந்து போய் மகத்தான அநாகரிக நிலையிலிருக்கும் ஜனங்களைக் கிறிஸ்து மதத்திலே சேர்த்து மேன்மைப்படுத்தும் புண்ணியத்தைச் சொல்வதாகச்

சொல்லுகிறார்கள். ஹிந்துக்கள் குழந்தைகளை நதியிலே போடுகிறார்கள் என்றும், ஸ்திரிகளை (முக்கியமாக அநாதைகளாய்ப் புருஷரை இழந்து கதியில்லாமல் இருக்கும் கைம் பெண்களை) நாய்களைப் போல் நடத்துகிறார்கள் என்றும் பலவிதமான அபவாதங்கள் சொல்லுகிறார்கள். நம்முடைய ஜாதிய பிரிவுகளிலே இருக்கும் குற்றங்களையெல்லாம் பூதக்கண்ணாடி வைத்துக் காட்டுகிறார்கள். இந்தக் கிறிஸ்தவம் பாதிரிகளாலே நமக்கு நேர்ந்த அவமானம் அளவில்லை.

இரண்டாவது, அந்நிய தேசப் பண்டிதர் சரித்திரக்காரர் முதலானவர்கள், ஹிந்துக்களை அன்னிய தேசத்தார் போர் செய்யும் தந்திரத்தாலும் வென்று ஹிந்துக்களின் மீது அந்நிய ராஜ்யம் நடைபெற்று வருவதைஒட்டி வெளிதேசத்து சரித்திரக் காரர் நமது நாட்டு வீரம், ஒற்றுமை முதலிய குணங்களையும் நமது பொது அறிவையும் மிகவும் இழந்த நிலையிலே இருப்பதாகக் காட்டுதல் வழக்கமாக நனபாபற்று வந்திருக்கிறது.

நம்மை உலகத்தார் முன்னே சிறுமைப்படுத்தி மதிப்பு இல்லாமல் செய்து விட்ட புறக்கருவிகள் பல. அவற்றை விரிவாக எழுத வேண்டுமானால் தனிப்புத்தகம் போட வேண்டும்.

''போனது போகட்டும் இனி மேலாயினும் புத்தியாய் பிழை மனமே'' என்று ஒரு பண்டாராப் போட்டு உண்டு. அது போல நடந்ததெல்லாம் நடந்து போய்விட்டது. இனி மேலாயினும் ஹிந்துக்கள் தம்மை மதிப்புடையோராகச் செய்து கொள்ள வழி தேட வேண்டும். வெளிதேசங்களில் நமக்கு மதிப்பு உண்டாக வேண்டுமானால் அதற்கு மூலம் இங்கே வலிமை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். இங்ஙனம் வலிமை சேகரிப்பதற்கு கூட்டம் ஒன்றே உபாயம் எஜ்பதை இந்த வியாசத்தின் தொடக்கத்திலே சொன்னோம். நம்முடைய ராஜரீக நிலைமையைச் சீர்திருத்துவதற்கு பல முயற்சிகள் நடந்து வருகின்றன. அந்த முயற்சிகள் மேன் மேலும் வளர்ந்து வெற்றி பெற வேண்டுமானால் அதற்கு கூட்டங்களை அதிகப்படுத்துவது வழி கூட்டங்கள் கூடி யோசனை பண்ணுகிற விஷயம் கைகூடும். ஓயாமல் கூட்டங்கள் சேர்த்துத் திரும்பத் திரும்ப உறுதி செய்யப்படும் தீர்மானம். நிச்சயமாகக் கைகூடும். நமது ராஜாங்கக் கூட்டங்களில் இதுவரை சரியான படி சக்தி ஏற்படாத காரணம் யாதெனில் இந்தக் கூட்டங்களில் உண்மையாகவே தேசத்திற்கு அனுகூலம் செய்ய வேண்டும் என்று கருத்துடையவர்கள் மிகச் சிலராகவே இருந்தனர். தேச பாஷைகளிலே பேசுவது கிடையாது. அதாவது பொய் அதிகபட்டுத் தலை தூக்கி நின்றது.

இப்போது நாட்டில் உண்மையான தேசபிமானிகள் தொகை அதிகப்பட்டிருக்கிறது. தேச பாஷைப் பேச்சு வழக்கப்பட்டு வருகிறது. ராஜ்யவிஷயங்களுக்கு மாத்திரம் நான் பேசவில்லை. நான்

பொதுப்படையாகச் சொல்லுகிறேன். எவ்விதமான வலிமைக்கும் கூட்டம் ஆதாரம் சபை சேர்ந்து பேசினால் மாத்திரம் போதாது. எப்போதுமே எங்கும் தமிழில் ஒவ்வொருவரும் நாம் இன்ன பெருங்கூட்டத்தைச் சேர்ந்திருக்கிறோம் என்பதையும் நமது வாழ்க்கையின் நோக்கம் இன்னவென்பதையும் மறவாதிருக்க வழி தேட வேண்டும்.

இங்கிலாந்து, பிரான்ஸ் முதலிய ஐரோப்பிய தேசங்களில் கோடானு கோடி மனிதரைத் திரட்டிச் சடைபண்க்கு உபயோகப்படுத்துகிறார்கள். ஒரு தேசம் முழுவதும் ஒரு சைன்யம் போல ஆகும்படி செய்ய வேண்டும் என்று அங்குள்ள சில தலைவர்கள் நினைக்கிறார்கள். நான் சண்டைக்காரன் இல்லை. சமாதானக்காரன் இருபது கோடி ஹிந்துக்களையும், ஒரே கூட்டமாகச் செய்து, சண்டைக்கன்று மைதானமாக மனிதம் ஸாதன செய்யக்கூடிய நல்ல பயன்களை நிறைவேற்றும் பொருட்டாக உயோகப்படுத்த வேண்டும் என்பது என்னுடைய நோக்கம்.

இந்த நோக்கத்தை நிறைவேற்றுவதற்கு மற்ற ஹிந்துக்களின் உதவி வேண்டும் தெய்வ பலம் வேண்டும். இவ்விரண்டும் கை கூடும்.

இருபது கோடி ஹிந்துக்களையும் ஒரே குடும்பம் போல செய்துவிட வேண்டும் என்பது என்னுடைய ஆசை. இந்த ஆசையினாலே ஒருவன் கைக் கொள்ளப்பட்டால் அவன் ராஜாங்கம் முதலிய சகல காரியங்களைக் காட்டிலும் இதனை மேலாகக் கருதுவான் என்பது என்னுடைய நம்பிக்கை.

எல்லா தர்மங்களைக் காட்டிலும் வேதத்தை நிலை நிறுத்தும் தர்மம் சிறந்ததென்று நான்கினைக்கிறேன். ஹிந்துக் களைத்திரட்டி ஒற்றைக் கருவியாகச் செய்துவிட வேணடும். இதற்குரிய உபாயங்களைக் சரியான காலத்தில் தெரிவிக்கிறேன்.

வருங்காலம்

உலகம் எவ்வளவு தீவிரமாக மாறிக் கொண்டு வருகின்றதென்பதைத் தமிழ் நாட்டவர் ஆழ்ந்து கவனிக்க வேண்டும். ஒவ்வொருவரும் சிற்சில விவகாரங்களில் மனத்தைப் பதிய வைத்துக் கொண்டுபு வெளியுலகத்தின் மாறுதல்களிலே புத்தி செலுத்தாமல் அற்ப விஷயங்களிலும் அற்பச் செய்கைகளிலும் நாளெல்லாம் கழிய விட்டுக் கிணற்றுத் தவளைகளைப் போல வாழ்வதில் பயனி ல்லை.

வர்த்தகஞ் செய்வோர் கோடிக்சகணக்கான பணப்புழககம் ஏற்படும் படி பெரிய வர்த்தகங்கள் செய்ய வழி தேடவேண்டும். படிப்பவர் அபாரமான சாஸ்திரங்களையும் பல தேசத்துக் கல்விகளையும் கற்றுத்தர வேண்டும். ராஜ்ய விவகாரங்களில் புத்தி செலுத்துவோர் உலக சரித்திரத்தை நன்றாகத் தெரிந்து கொண்டு மற்ற ராஜ தந்திரிகளும் மந்திரிகளும் கண்டு வியக்கும்படியான பெரிய பெரிய யோசனைகள் செய்து நிறைவேற்றிப் புகழ்

பெற வேண்டும். கைத் தொழில்களின் விஷயத்திலே நாம் இப்போது காட்டி வரும் சோர்வும். அசிரத்தையும் மிகவும் அருவருப்புக்கு இடம் தருகின்றன.

திருஷ்டாந்தமாக நேர்த்தியமான சிந்திரங்களும் வர்ணங்களும் சேர்த்துப் பட்டிலும் பஞ்சிலும் அழகான ஆடைகள் செய்யவல்ல தொழிலாளிகள் நமது நாட்டில் இருக்கிறார்கள். இவர்களுக்குப் படிப்பில்லை. வெளியுலக நிலை தெரியாது. கையிலே முதற் பணமுமில்லை. நமக்குள்ளே கல்வியும் செல்வமும் உடையோர் கூடி ஆராய்ச்சிகள் செய்து வெளிநாடுகளில் ஆவலுடன் வாங்கக் கூடிய மாதிரிகள் எவை என்பதைக் கண்டு பிடித்து அவற்றை நமது தொழிலாளிகளைக் கொண்டு செய்வித்தால் மிகுந்த லாபமுண்டாகும்.

இரும்புத் தொழில் உலகத்திலே வலிமையும் செல்வமும் கொடுப்பது எல்லாவிதமான கைத் தொழில்களும் தற்காலத்தில் இரும்பு எந்திரங்களாலே செய்யப்படுகின்றன. ஆதலால் நமது தேசத்துக் கொல்லருக்கு நாம் பல விதங்களிலே அறிவு விருத்தியும் ஜீவன சௌகர்யங்களும் ஏற்பாடு செய்து கொடுத்து இடத்துக்கிடம் இயன்றவரை இரும்புத் தொழில்களை வளர்க்க வேண்டும்.

இனி, வர்ணப்படம், தையல் வேலை, மைத் தொழில் முதலிய சித்திர வேலைகளில் நமது ஜனங்களின் அறிவு மிகவும் சிறந்தது. கொஞ்சம் சிரமப்பட்டால், இந்தத் தொழில்களை மறுபடி உயர்ந்த நிலைமைக்கு கொண்டு வந்து விடலாம். சிறிது காலத்துக்கு முன்பு சீனத்திலிருந்தும் ஜப்பானிலிருந்தும் பல சித்திர வேலைகளைக் கொண்டு போய் அமெரிக்காவில் காட்டிய போது அங்கே அவற்றிற்கு மிகுந்த புகழ்ச்சியும் பிரியமும் ஏற்பட்டதாகத் தெரிகிறது.

இதை நாம் ஏன் செய்யக்கூடாது?

வெளிநாட்டிற்குக் கப்பலேறிப் போங்கள். புறப்படுங்கள், புறப்படுங்கள். தொழிலாளிகளே, வியாபாரிகளே! விதிவான்களே, புத்திமான்களே, எப்படியேனும் யாத்திரைச் செலவுக்குப் பணம் தயார் செய்து கொண்டு, அந்நிய தேசங்களைப் பார்த்து விட்டு வாருங்கள். நமது தொழில்களுக்கும் கலைகளுக்கும் யோசனைகளுக்கும் வெளிநாடுகளில் ஏராளமான உதவி கிடைக்கும். சந்தேகப்பட வேண்டாம்.

பரோடாவிலிருந்து இதாயத் கான் என்ற சங்கீத வித்வான் சில வருஷங்களுக்கு முன்பு தென் ஜில்லாக்களில் யாத்திரை செய்து வைத்து நம்மிலே சிலருக்கு ஞாபக மிருக்கலாம். அங்கே அவர் சாதாரணமாக இருந்தவர். பின்னிட்டு அவர் பல தேசங்களில் ஸஞ்சாரம் செய்து, பிரான்ஸ் தேசத்திலே போய் நல்ல கீர்த்தி அடைந்திருக்கிறார். அங்கே பல பெரிய வித்வான்களும் பிரபுக்களும் அவருடைய தொழிலை அற்புதத்திலும்

அற்புதம் என்று கொண்டாடுகிறார்கள். சங்கீத ஞானமுடைய தமிழ்ப்பிள்ளைகள், முதலாவது கொஞ்சம் இங்கிலீஷ் கற்றுக் கொண்டு பிறகு ஐரோப்பிய சங்கீதத்தின் மூலாதாரங்களைத் தெரிந்து கொள்ள வேண்டும். இது மிகவும் சுலபமான காரியம். தமிழருடைய அறிவுக்கு எந்த வித்தையும் சுலபம். இந்தத் தேர்ச்சி கொஞ்சமிருந்தால், பிறகு நமது சங்கீதத்தை ஐரோப்பியர் அனுபவிக்கும்படி செய்தல் எளிதாகும். அப்பால் ஐரோப்பாவுக்கும் அமெரிக்காவுக்கும் போய் நமது சங்கீதத்தின் உயர்வை அவர்களுக்குக் காட்டினால் மிகுந்த கீர்த்தியும் செல்வமும் பெறலாம்.

எவ்விதமான யோசனை எவ்விதமான தொழில் எவ்விதமான ஆசை எதையும் கொண்டு பிறதேசங்களுக்குப் போக வேண்டும். ஐரோப்பாவுக்கு அமெரிக்காவும் யாத்திரை செய்யப் போதுமான திரவியம் இல்லாதவர்கள் ஜப்பானுக்கும் போகலாம். வெளியுலகம் நம்மை எதிர் பார்த்துக் கொண்டிருக்கிறது. நமது வரவுக்குக் காத்திருகிறது. நமது மேன்மைக்கு வசப்பட ஆவல் கொண்டிருக்கிறது. வெளியுலகத்தில் நாம் சென்று மேம்பாடு பெற்றாலொழிய இங்கே நமக்கு மேன்மை பிறக்க வழியில்லை. ஆதலால் தமிழ்ப்பிள்ளைகளே, வெளிநாடுகளுக்குப் போய் உங்களுடைய அறிவுச் சிறப்பினாலும் மனவுறுதியினாலும் பலவிதமா உயர்வுகள் பெற்று புகழுடனும் செல்வத்துடனும் வீரயத்துடனும் ஒளியுடனும் திரும்ப வாருங்கள் உங்களுக்கு மஹாசக்தி துணை செய்க என்று மிகவும் அருமையான சிறந்த கருத்தை நெடு9ாது நோக்குடன் மகாகவி பாரதி நூறாண்டுகளுக்கு முன்னரேயே எடுத்துக் கூறியுள்ளார்.

இன்று நமது நாட்டினர் அதிலும் சிறப்பாக தமிழ் நாட்டைச் சேர்ந்தவர்கள் பல வேறு தொழில்களிலும் உத்தியோகங்களிலும் இல்லாத நாடுகளில்லை. அமெரிக்க ஐக்கிய நாடுகள், கனடா, லத்தீன் அமெரிக்க நாடுகள், பசிபிக் நாடுகள், ஐரோப்பிய நாடுகள், ரசிய ஆப்பிரிக்க நாடுகள், ஆஸ்திரேலியா, நியூசிலாந்து முதலிய பல நாடுகளிலும் பல்வேறு தொழில்களிலும், வியாபாரத்திலும், கல்வி நிலையங்களிலும், பல்கலைக்கழகங்களிலும், இன்று தொழில் நுட்ப நிபுணர்களாகவும் . பேராசிரியர்களாவும் விஞ்ஞானிகளாகவும், பொறியியல் வல்லுனர்களாகவும், ஆராய்ச்சியாளர்களாகவும், டாக்டர்களாகவும் (வைத்ய நிபுணர்கள்) பணியாற்றுகிறார்கள். அந்தந்த நாடுகளின் நன்மதிப்பைப் பெற்றிருக்கிறார்கள். ஆந்திரா மாநிலத்தைச் சேர்ந்த என்னுடைய நண்பர் ஒருவரின் மகன், ஜெர்மனியில் குடியேறி, அந்த நாட்டின் பிரஜையாக் அவர் குடியிருக்கும் நகரத்தின் மேயராக (நகர சபை தலைவர்) தேர்ந்தெடுக்கப்பட்டு பணிபுரிந்து வருகிறார். இவ்வாறு பலரும் அவர்கள் வாழும் நகரங்களில் மக்கள் தலைவர்களாக இருக்கிறார்கள். சில நாடுகளில் அரசியலில் பங்கு கொண்டு அமைச்சர்களாகவும் இருக்கிறார்கள்.

இந்திய நாட்டு விடுதலை பெற்ற பின்னர், வெளிநாடுகளில் வாழும் இந்தியர்களுக்கு மரியாதை சற்று அதிகரித்திருக்கிறது.

வெளிநாடுகளில் வாழும் இந்திர்களில் இருவகை உள்ளது. ஆங்கிலேய கம்பெனி ஆட்சி காலத்தில் தொலைதூர உஷ்ணப்பிரதேசங்களில் காபி, தேயிலை, ரம்பர், கரும்பு தோட்டங்களிலே வேலை செய்வதற்கு ஒப்பந்தக்கூலிகளாக, இந்திய நாட்டிலிருந்து ஆங்கிலேய தோட்ட உரிமையாளர்களால் கொண்டு செல்லப்பட்டவர்கள், அவர்கள் அந்த நாடுகளிலேயே குடியேறி பின்னர் விடுதலை பெற்ற நாடுகளில் வாழும் இந்திய பாரம்பரையைச் சேர்ந்த மக்கள், தென் ஆப்பிரிக்கா, மொரிஷஸ், பீஜித் தீவுகள், சில தென் அமெரிக்க நாடுகள், ஆப்பிரிக்க நாடுகள் சில தீவு நாடுகளில் வாழும் இந்திய பூர்வக்குடிகள் அவர்கள் இப்போது விடுதலை பெற்று சுதந்திர நாடுகளாகி விட்டன. அங்கு வெள்ளையராட்சி நீங்கி சுதந்திர நாடுகளாகிவிட்டன. அந்த நாடுகளில் அந்த நாட்டுப் பிரச்சினைகளாய் தங்கள் பூர்வீக இந்திய கலாச்சாரத்தைத் தக்க வைத்துக் கொண்டு வாழ்ந்து வருகிறார்கள்.

அவர்கள் தங்களுடைய கடும் உழைப்பினால் அந்த நாடுகளை வளப்படுத்தி அந்த நாடுகளின் விடுதலைப் போராட்டங்களில் பங்கு கொண்டு, அந்த நாடுகளின் அரசியல் பொருளாதார வாழ்வில் பங்கு கொண்டு வாழ்ந்து வருகிறார்கள். அவர்கள் தங்கள் பூர்வீக நாடான இந்திய நாட்டுடன் அரசியல் பொருளாதார கல்வி கலாச்சார உறவுகளை வைத்துக் கொள்ள விரும்புகிறார்கள்.

அண்மைக் காலத்தில் இந்திய அரசும் இந்திய மக்களும், வெளிநாடுகளில் வாழும் இரு வகையான இந்திய மக்கள் இந்திய வம்சாவளி மக்கள் ஆகியவற்களின் அரசியல் பொருளாதார கல்வி கலாச்சார நலன்களை மேலுயர்த்துவதற்கு தங்களால் இயன்ற ஆதரவையும் உதவிகளையும் செய்ய வேண்டும் என்ற கருத்து இங்கு வளர்ந்து வருகிறது. இதை மேலும் உயர்த்துவதற்கு நாம் எடுக்கும் முயற்சி மகாகவி பாரதியின் கனவை நனவாக்குவதாகும். அவருடைய ஆத்மாவை சாந்தியடைச் செய்வதாகும். அதற்கு மகாசக்தி துணை செய்க.

சுதந்திரம் சுதேசி இயக்கம் பற்றி மகாகவி பாரதி பேசும் போது, எழுதும் போது அரசியல் சுதந்திரம், ஜனநாயக வளர்ச்சி, சமுதாய சமத்துவம் சமவாய்ப்புகள் சமூக முன்னேற்றம் பற்றி மகாகவி பாரதி ஆழ்ந்து சிந்தித்தும் நடைமுறை அனுபவத்தை வைத்தும் பல அறிய கருத்துக்களையும் முவ் வைத்திருக்கிறார். அவைகளில், நமது சமுதாயத்தின் உற்பத்தி வளர்ச்சி, தொழில் வளர்ச்சி, கல்வி கலாச்சார வளர்ச்சி, நமது நீதி நிர்வாகம் கிராம நிர்வாகம், இந்திய மக்களின் உடல் வலிமை பற்றியெல்லாம் விரிவாகப் பேசுகிறார்.

இவைகளில் எல்லாம் ஆங்கிலேய படைகள், வியாபாரிகள், அரசாங்க நிர்வாகிகள் ஆகியோர் பெருத்த சேதங்களை உண்டாக்கினார்கள். இத்தோடு சேர்ந்து சில கிறிஸ்தவப் பாதிரிமார் இந்தியாவைப்பற்றி, இந்திய மக்களைப் பற்றி உலக நாடுகளிளெல்லாம் குறிப்பாக ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலம் பல அவதூறுகளைப் பரப்ப நமது மக்களை சிறுமைப்படுத்தப் பேசினார்கள். நம்மை நாகரிகப்படுத்தப் போவதாகப் பேசினார்கள்.

ஆப்பிரிக்காக் கண்டத்தில், ஐரோப்பியப் படைகளும் பாதிரியார்களும் சேர்ந்து கிறிஸ்தவ மதத்தைப் பரப்புவதற்காக பல லக்ஷக்கணக்கான பேரைப்படுகொலை செய்தார்கள். அந்த நாடுகளை நாகரிகப்படுத்தப் போவதாகப் பேசினார்கள்.

ஆனால் இந்தியாவில் அவ்வாறு செய்ய முடியவில்லை. பாரத தேசம், அறிவிற் சிறந்த நாடு, உயர்ந்த நாகரிகமும் உழைத்திறனும் நிறைந்த நாடு வேதங்கள் உபநிடதங்கள் முதல், ஆழ்வார்கள், நாயன்மார்கள், தாயுமாணனவர், இராமலிங்க சுவாமிகள் வரை, உயர்ந்த ஞானம் படைத்த ஞானிகள் பிறந்து வளர்ந்து தர்மத்தை வளர்த்த நாடு.

இந்திய நாட்டில் பிரிட்டிஷ் ஆக்கிரமிப்பு காலத்திலும் ஆட்சிக் காலத்திலும் கிறிஸ்தவப் பாதிரிமார்களும் பலத்த பிரச்சாரங்களும் மதமாற்ற முயற்சிகளும் செய்தார்கள். பள்ளிக் கூடங்களை வைத்து ஆங்கிலக் கல்வியுடன் சேர்த்து மதப்பிரச்சாரத்தையும் மதமாற்றங்களையும் செய்தார்கள். உலகமெல்லாம் பாரத நாட்டைப் பற்றிப் பல அவதூறுகளைச் செய்தார்கள். இவைகளையெல்லாம் பார்த்தும் கேட்டும் மகாகவி பாரதியார் மிகுந்த வேதனைப்பட்டார்.

பொதுவாக மகாகவி பாரதியாருக்கு எந்த மதத்தின் மீதும் வெறுப்போ எதிர்ப்போ கிடையாது. எல்லா மதங்களையும் நம்பிக்கைகளையும் சமமாக பாவித்து அவைகளுக்கு மரியாதை செலுத்தக்கூடியவர்.

ஆயினும் சில மூடப் பாதிரியார்கள் இந்துக்கள் மீது பல அவதூறுகளைப் பேசியதையும் பரப்பியதையும் அவரால் சகிக்க முடியாமல் அதைக் கண்டனம் செய்கிறார். அத்துடன் இந்துக்களிடம் உள்ள ஜாதிப்பாகுபாடுகளையும் வேறுபாடுகளையும் கண்டித்து இந்துக்களை ஒன்றுப்பட வேண்டும் என்று கூறுகிறார்.

இந்திய நாடும் நாட்டு மக்களும் ஒற்றுமைப்புட்டால் தான் சுதந்திரத்தை அடைய முடியும் சுதேசி திட்டங்களை நிறைவேற்ற முடியும். இந்தியாவில் கிறிஸ்தவ சபைகளும் பாதிரிகளும் பிரிட்டிஷ் ஆட்சி காலத்தில் பெரும்பாலும் அன்னிய ஆட்சியாளர்களுக்கு ஆதரவாகத்தான் இருந்தார்கள். இன்றும் கூட அவர்கள் பலருடைய இந்துக்களுக்கு எதிரான அவதூறுப்

பிரச்சாரங்கள் தொடருகின்றன. ஆனால் கிறிஸ்தவத்திற்கு மதம் மாறிய இந்தியர்கள் எல்லாம் இந்து மூதாதையர்களின் வாரிசுகள். இந்து பழக்கம் வழக்கங்களும் கலாச்சாரமும் தான் அவர்களிடம் இன்னும் மேலோங்கியிருக்கிறது.

மதவெறி பிடித்த சில மூடப் பாதிரிமார்களின் முயற்சியில் இந்து அமைப்புகள், தெய்வங்கள், கோயில்கள் ஆகியவற்றிற்கு எதிராக் கணக்கற்ற அவதூறுகள் செய்யப்பட்ட போதிலும் இந்து தர்மம் நிலைத்து நிற்கிறது. பல நாடுகளிலும் அந்த நாடுகளின் பூர்வீக நம்பிக்கைகள் தகர்ந்து போய், இஸ்லாமியமும் கிறிஸ்தவப் பாதிரிகளின் முயற்சிகளும் வெற்றி பெற்றிருக்கின்றன. ஆனால் பாரத நாட்டில் அவ்வாறு இஸ்லாமும், கிறிஸ்தவமும் வெற்றி பெறவில்லை.

அதிகார பலமோ, ஆட்சி ஆதரவோ பண பலமோ, ஆயுத பலமோ இல்லாமல் இந்து தர்மம், இந்திய நாட்டின் பெரும்பான்மை மக்களின் நம்பிக்கையாக நீடித்து வருகிறது.

இந்திய நாடு சுதந்திரம் பெற்ற போது பாகிஸ்தான் பிரிந்த போது அதற்கு முன்னும் பின்னும் பல்லாயிரக்கணக்கான பல லட்சக்கணக்கான இந்துக்கள் படுகொலை செய்யப்பட்டார்கள். மதமாற்றம் செய்யப்பட்டார்கள். கட்டாயத் திருமணங்கள் செய்யப்பட்டார்க். ஆயினும் இந்து தர்மம் நிலைத்து நின்று தனது உள் வலிமையைக் காட்டி வருகிறது.

இன்றும் கூட மதச்சார்பின்மை என்னும் போரால் ஹிந்து தர்மம் பழிக்கப்படுகிறது. பல சுயநலசக்திகள் இதில் முனைப்புக்காட்டுகிறது. இன்றும் கூட நமது நாட்டில் முஸ்லிம் என்றால் சிறுபான்மை, கிறிஸ்துவம் என்றால் சிறுபான்மை, ஹிந்து என்றால் மதவெறி என்று பேசப்படுகிறது. அது ஒரு அறிவற்ற மடத்தனமான பேச்சாகும்.

மதச்சார்பின்மை என்பது நமது நாட்டிற்கு பொருந்தாத அவசியமல்லாத தேவையில்லாத ஒரு வாதமாகும். மதச்சார்பில்லாத அரசு என்பது ஐரோப்பாவில் எழுந்த தத்துவமாகும். ஐரோப்பாவில் 17, 18, 19 ஆம் நூற்றாண்டுகளில் பல நாடுகளிலும், அரசர்கள் மடங்கள், மதஸ்தாபனங்களின் க;ட்டாளிகள் கூட்டாட்சி எதேச் சதிகாரமாக, கொடுங்கோலாட்சி நடைபெற்று வந்தது. அங்கு தொழில் புரட்சியும் நவீன சிந்தனைகளும் தோன்றி போது அதற்கு நிலப்பிரபுத்வ மத, மட அரசுகள் கடும் எதிர்ப்பு தெரிவித்தன. தொழிற்புரட்சியை ஒட்டி புதிய சிந்தனைப் புரட்சியும் ஏற்பட்டது. அது அன்றைய ஐரோப்பிய மதமட மன்னர் ஆட்சிக்கு எதிராக மற்றுமலர்ச்சி இயக்கங்கள், ஜனநாயக ஆட்சி முறைகள் தோன்றின. அப்போது அரசுக்கும் மத மட நிறுவன ஆதிக்கம் நீங்க வேண்டும். அரசு மதசார்பற்றதாக இருக்க வேண்டும் என்று குரல் மேலோங்கி ஐரோப்பிய நாடுகளில் மதச்சார்பற்ற அரசுகள் தோன்றி இட்ம் பெற்றன.

அந்தத் தத்துவங்களில் பயிற்சி பெற் சில இந்திய அரசியல் சிந்தனையாளர்கள் இங்கு மதச்சார்பின்மை என்றும் திருகலான தத்துவத்தை நமது நாட்டிலும் புகுத்தி விட்டார்கள்.

இந்திய சுதந்திரப் போராட்ட உச்ச நிலை அடைந்த போது இந்திய நாட்டில் வகுப்புக் கலவரங்கள், இந்து, முஸ்லிம் கலவரங்களும் ஏறுப்பட்டு பெரும் படுகொலைகள் நிகழ்ந்தன. அப்போது இந்திய நாட்டில் எழுந்த இந்திய யூனியன்- பாகிஸ்தான் என்று இரு அரசுகள் தோன்றின. இரு அரசு மதச்சார்பற்ற அரசுகள் என அறிவித்தன. இந்திய யூனியன் மதச்சார்பின்மை என்றும் தத்துவத்தை தொடர்ந்து கடைப்பிடித்து வருகிறது. ஆனால் பாகிஸ்தானும் பின்னர் அதிலிருந்து பிரிந்த பங்களாதேசும் இஸ்லாமிய நாடுகள் என்று அறிவித்துக் கொண்டன. அந்த நாடுகளில் கோடிக்கணக்கான இந்து- சீக்கியர்கள் எந்தவிதமான மத சுதந்திரமும் வழிபாட்டு சுதந்திரமும் இல்லாமல் இருக்கிறார்கள் என்றும் செய்திகள் வந்து கொண்டிருக்கின்றன. அது ஒரு பக்கம்.

மறுபக்கம் பாரத தேசத்தில் (இந்திய யூனியன்) இன்றைய நிலைமை என்ன முஸ்லிம் என்றால் சிறுபான்மை, கிறிஸ்தவர் என்றால் சிறுபார்வை, ஹிந்து என்றால் மதவெறி பிடித்தவன் சிறுபான்மைக்கு எதிராவன் என்று பட்டம் சூட்டப்படுகிறது என்பதை குறிப்பிட்டோம்.

எனவே, ஹிந்து தர்மத்தின் உயர்வான மேலான தன்மையை நாம் உலகுக்கு எடுத்துக்காட்ட வேண்டியதிருக்கிறது. அதற்கான முயற்சிகளைச் செய்ய வேண்டியதிருக்கிறது. இதற்கு மகாகவி பாரதியை நாம் முன்னுதாரணமாக எடுத்துக் கொள்கிறோம்.

உலகின் நாகரிக வளர்ச்சிக்கு சிந்தனை வளர்ச்சிக்கு அறிவு வளர்ச்சிக்கு ஹிந்து தர்மம் அளித்துள்ள பங்கு மகத்தானது.

வேதங்களைப் போன்ற சிறந்த நூல்கள் உலகில் வேறு எங்கு மில்லை. வேதங்கள் ரிக்யஜுர், சாமம், அதற்வனம் என்னும் நான்கு என்று அறியப்பட்டிருக்கிறது. அதில் ரிக் வேதம் மிகவும் பழைமையானது. அவ்வேதம் தனியான மொழியில் அமைந்திருக்கிறது. அதை வேத மொழி என்று கூறினார். அவைகளை முதலில் மக்கள் மொழியில் கொண்டு வர வேண்டும். அதை வேத விற்பனர்கள் முதலில் செய்து முடிக்க வேண்டும். அந்த ஞானக்களஞ்சியத்தை உலகம் முழுவதும் உணரச் செய்ய வேண்டும்.

நமது நாட்டின் அமுல்படுத்த அறிவுக் களஞ்சியங்களை, உபரிடதங்கள் புராணங்கள், இராமாயணம், மகாபாரதம் என்னும் இரு மகத்தான இதிகாசங்கள், பின்னர் தோன்றிய அறிவியல் கருத்துக்கள், கௌடில்யரின் அர்த்த சாஸ்திரம், வத்ஸாயனரின் காமசூத்திரம், ஆர்யபட்டார், பாஸ்கரன் மற்றும் இன்று வரையிலுமான அறிவியல் மேதைகள், கணித மேதைகள்,

புகழ் பெற்ற இனிய பக்தி இயக்கங்கள் மற்றும் பல நமது அறிய நூல்களின் கருத்துக்கள் தத்துவங்களை உலகரியச் செய்ய வேண்டும்.

வாழ்க்கையை, தர்மம், அர்த்தம், காமம், மோட்சம் என்று பிரித்து படித்த அபூர்வமான தத்துவங்கள், தனிமனித வாழ்க்கையை பிரம்மச்சரியம் இல்லறம் வனப்பிரஸ்தம், சன்னியாசம் என்று பிரித்து அனுபவித்து தத்துவங்கள் மற்றும் பல அறிய அறிவியல் சிந்தனைகளின் தத்துவங்களை உலகெங்கும் பரப்ப வேண்டும். அவை வகளை உலகறியச் செய்ய வேண்டும்.

இங்கிலாந்து, பிரான்ஸ், ஜெர்மனி, இத்தாலி, அமெரிக்கா முதலிய தேசங்களை கோடானக் கோடி மக்களைத் திரட்டி, பல போர்களை நடத்தி, கோடிக்கணக்கான மக்களைக் கொன்று குவித்தும், பல கோடிக்கணக்கான பணம் பெறும் பொருள்களையும் தொழில்களை அழித்தும் உலகத்தின் பாதி நாசமடையக்காரணமாக இருந்தார்கள். அவர்களுக்கெல்லாம் அந்தக் கொலைகளுக்கெல்லாம் அந்தந்த தேசத்துப் பாதிரிகள் ஆசி வழங்கினார்கள்.

வியட்நாம் என்னும் ஆசிய நாட்டில் பிரான்சும் அமெரிக்காவும் முப்பு ஆண்டுகாலம் குண்டுகளைப் பொழிந்து போர் நடத்தி லட்சக்கணக்கான மக்களைக் கொன்று குவித்தார்கள். அந்த நாட்டின் மீது அமெரிக்கா வீசிய குண்டுகளை வரிசையாக அடுக்கி வைத்தால் அந்த நாட்டின் நபிலப்பரப்பு பத்தாது என்று சொல்லும் அளவிற்கு அந்த நாட்டின் மீது குண்டுவீசினார்கள். அத்தனை போர்களையும் குண்டு வீச்சுகளையும் சமாளித்து விடுதலைப் பற்று இரு பகுதிகளையும் ஒரன்றிணைத்து இன்று பொருளாதாரத்துறையில் வேகமாக முன்னேறி வருகிறது.

நூறு கோடி ஹிந்துக்களும் ஒரே குடும்பம் போல் ஒன்றுபட்டு விட்டால் இது கை கூடும். தெய்வம் நமக்குத் துணை நிற்கும்.

''எல்லா தர்மங்களைக் காட்டிலும் வேதத்தை நிலை நிறுத்தும் தர்மம் சிறந்தது என்று நான் நினைக்கிறேன். ஹிந்துக்களைத் திரட்டி ஒற்றைக் கருவியாகச் செய்து விட வேண்டும்'' என்று மகாகவி பாரதி குறிப்பிடுகிறார்.

தொழிலாளர்

தொழிலாளர் என்னும் தலைப்பில் மகாகவி பாரதியார் சிறந்த சில கருத்துக்களாகக் கூறியுள்ளார். தொழிலாளர் என்று சொல்லும் போது பல்வேறு கைத் தொழில்களிலே பணியாற்றும் தொழிலாளர்கள் வகையாகும். கிராமப்புங்களிலே விவசாயத் தொழிலில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்கள் ஒருவகையாகும். நவீன எந்திரத் தொழில்களிலே பணியாற்றும் தொழிலாளர்கள் ஒருவகை.

இந்திய நாட்டில் பிரிட்டிஷ் ஆக்கிரமிப்பும் ஆட்சியும் ஏற்பட்டிருந்த காலத்தில் இந்தியத் தொழில்கள் பலவும் அழிந்து விட்டன. சிதைந்து

விட்டன. கிராமத் தொழில்கள், கைத்தறி நெசவுத் தொழில், கப்பல் படகு கட்டும் தொழில் முதலிய பல்வேறு தொழில்களிலே பணியாற்றும் தொழிலாளர்கள் ஆங்கிலேயர் அடங்குவர்.

பிரிட்டன், பிரான்ஸ், ஜெர்மனி முதலிய ஐரோப்பிய நாடுகளிலே நவீன எந்திரத் தொழில்கள் தோன்றி வளர்ந்ததையொட்டி நவீன எந்திரத் தொழிலாளர்கள் கூட்டம் பெருகியது.

ஆரம்பத்தில் இந்த நவீன எந்திரத் தொழிலாளர்களின் வாழ்க்கை நிலைமை ஊதியம் மற்றும் வேலை நிலைமை மிகவும் மோசமாகவும் பரிதாபமாகவும் இருந்தது. எநந்திரத் தொழில் முதலாளிகளுக்கு சொந்தமான தொழிற்சாலைகளில் கிராமங்களிலிருந்து ஏராளமான ஏழை விவசாயிகளும் தொழிலாளர்களிலும் இந்தப் புதிய நவீனத் தொழில்களில் வேலைக்குச் சேர்ந்தார்கள். அவர்களுக்கு வேலை நிலைமை மிகவம் கடுமையாகவும் கொடுமையாகவும் இருந்தது. இரவும் பகலுமாக பல மணி நேரம் தினசரி வேலை வாங்கப்பட்டார்கள். அவர்களுடைய கூலி நிலைமையும் மோசமாக இருந்தது. அவர்களுடைய குடியிருப்புகள் படுமோசமாக எல்லா வகை சுகாதாரக் கேடுகளும் குவிந்திருந்தது. அந்த கூலிக்காரர்களின் குழந்தைகளின் நிலை இன்னும் மோசமாக இருந்தது.

மன்னராட்சி அரசாங்கமும் இதுபற்றி அக்கரை எடுத்துக் கொள்ளவில்லை. ஆவை முதலாளிகளும் இதுபற்றி கவலை கொள்ளவில்லை. ஆவை முதலாளிகளைப் பொருத்தவரை அவர்களுடைய தொழில் வசதிகள் லாபம், காலனி ஆதிக்கம் மார்க்கட் ஆதிக்கம், வியாபாரப் போக்குவரத்து வசதிகள் பற்றியல்லாமல் வேறு எதிலும் அக்கரை இல்லை. அவைகளை நிறைவேற்றிக் கொள்வதற்காக, முழுமையான சுதந்திரம் ஆட்சி அதிகாரம் சாதகமான சட்ட திட்டங்கள், தொழிலாளர்களைக் கட்டுப்படுத்தி வேலை வாங்குவதற்கான அதிகாரம், அதற்கான அரசியல் சட்ட திட்டங்கள் பற்றியே அதிகம் கவனம் செலுத்தின.

சாதாரண மக்கள், குறிப்பாக உழைக்கும் மக்கள் ஒரு பக்கம் மன்னராட்சியின் கொடுமைகள், மத அமைப்புகள் மடங்களின் ஆதிக்கம் ஆகியவைகளிலிருந்து கடுமையாக பாதிக்கப்பட்டார்கள். இந்த இருண்ட நிலைமைகளை எதிர்த்து மறுபக்கம் அறிவாளிகளின் மறுமலர்ச்சி இயக்கங்களும் தோன்றி வெடித்தன. அவைகள் தொழிலாளர்களின் விழிப்புணர்வுக்கும் எழுச்சிகளுக்கும் காரணமாக இருந்தன.

மன்னராட்சி, மதம், மடாலயம் ஆகிய முப்பெரும் ஆதிக்க சக்திகளுக்கு எதிராக சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் என்னும் விடுதலை கோஷங்கள் மக்களிடம் எழுந்தன அவை எழுச்சி பெற்றன.

மன்னராட்சி முறைகளுக்கு எதிராக, கத்தோலிக்க மதத்தின் மய்ய

ஆதிக்கத்திற்கு எதிராக மடங்களின் ஆதிக்கத்திற்கு எதிராக மதச்சார்பற்ற அரசுகள் அமைய வேண்டும் என்னும் மறுமலர்ச்சி குரல் வலுவாக எழுந்தது.

பிரான்ஸ் நாட்டில் எழுச்சி பெற்ற இந்தப் பேரியக்கம், ஐரோப்பிய நாடுகள் முழுவதிலும், பிரஞ்சுக் காலனிகளிலும் பிரதிபதிபலித்தது. மகாகவி பாரதியார் பிரஞ்சுகாலன் ஆதிக்கத்தின் கீழ் இருந்த பிரஞ்சிந்தியாவின் தலைமையான பாண்டிச்சேரியில் வாழ்ந்து வந்தார். பிரான்ஸ் மற்றும் ஐரோப்பிய விழிப்புணர்வு மகாகவி பாரதியார் உள்ளத்திலும் பிரதிபலித்தது.

மன்னர், மத நிறுவனம், மடநிறுவனம் ஆகியவற்றின் ஆதிக்கத்திற்கெதிரான விழிப்புணர்வு இயக்கம், சுதந்திரம் சமேத்துவம் சகோதரத்துவம் என்னும் சுதந்திர உணர்வும் எழுச்சியும் மிக்க மக்கள் போராட்டங்கள், பலவும் ஐரோப்பிய நாடுகளில் வெடித்தன. அவை பிரான்சில் உச்சிநிலை அடைந்து மக்களுடைய சிந்தனையில் பகுத்தறிவு இயக்கங்கள் வெகுவாகப் பிரதிபலித்தன. பிரான்ஸ், பிரிட்டன், ஜெர்மனி மற்றும் பல ஐரோப்பிய நாடுகளில் பல சிந்தனையாளர் தோன்றி இலக்கியத்துறையிலும் மறுமலர்ச்சி எற்பட்டது. ஜெர்மன் தத்துவஞானக் கருத்துக்களும், பிரிட்டிஷ், பொருளாதார, வியாபாரக் கருத்துக்களும் செயல்பாடுகளும், பிரஞ்சு மனிதாபிமான மறுமலர்ச்சி விழிப்புணர்வுக் கருத்துக்களும் உலகின் பல நடுகளிலும் பரவின. அவை இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்திலும், அதற்கு சற்று முன்பும், பாண்டிச்சேரியில் அரசியல் அகதியாக வாழ்ந்த நமது பாரதியாரின் சுதந்திர உள்ளத்தில் பதிந்தன. மகாகவி பாரதியின் சிந்தனைகளைப் பக்குவ்படுத்துவதில் பிரஞ்சு மறுமலர்ச்சி சிந்தனைகளும் உதவின என்று கூறலாம்.

பிரிட்டிஷ் ஆட்சியின் கடுமையான நிபந்தனைக் கட்டுபாடுகளாலும் ஐரோப்பிய சுதந்திரக் கருத்துக்கள் இந்திய நாட்டிற்குள் பரவுவதும், இந்திய நாட்டைப் பற்றி உண்மையான செய்திகள் ஐரோப்பாவில் பரவுவதும் மிகவும் கடினமாக இருந்தது. அத்துடன் இந்தியாவுக்கு எதிராக பல பொய்யான கருத்துக்களும், பரப்பப்பட்டன. அதனால், ஐரோப்பிய நாடுகளில் இந்தியவைப் பற்றிப்பல தவறான கருத்துக்கள் பரவியிருந்தன.

ஐரோப்பிய நாடுகளில் பத்தொன்பதாம் நூற்றாண்டில் குறிப்பாக அந்த நூற்றாண்டின் பிற்பாதியில் உலகை உலுக்கும் பல நிகழ்ச்சிகள் பிரான்ஸ், பிரிட்டன் மற்றும் பல ஐரோப்பிய நாடுகளில் உலகை அதிர வைத்த பல நிகழ்ச்சிகளும், போராட்டங்களும் புரட்சிகளும் நிகழ்ந்தன.

பிரான்ஸ், பிரிட்டன் மற்றும் மற்றும் இதர மேற்கு ஐரோப்பிய நாடுகளில் புதிய தொழில் புரட்சிகள், மறுமலர்சி இயக்கங்கள், புதிய இலக்கியங்கள், தொழில் வியாபார வளர்ச்சகியைவுட்டி தோன்றி வளர்ந்தன.

தொழிலாளர் இயக்கங்கள் தோன்றி வளர்ந்தன.

பிரிட்டனில் தொழில் வளர்ச்சி வியாபாரம், காலனி ஆதிக்கம் செல்வப் பெருக்கம் வெகுவாக வளர்ச்சி பெற்றது. பிரிட்டிஷ் பார்லிமென்டில் ஆட்சி அதிகாரத்தில் பிரிட்டிஷ் தொழில் அதிபர்களின் ஆதிக்கம் அதிகரித்தது. பிரிட்டிஷ் மன்னரின் அதிகாரம் வெகுவாகக் குறைக்கப்பட்டு வந்தது. பார்லிமென்டின் நெசவாக்கு அதிகரித்தது.

பிரிட்டிஷ் தொழிற்சாலைகள் நவீன எந்திரத் தொழிற்சாலைகள் நவீன எந்திரக் தொழிற்சாலைகள் நூல் துணி ஆலைகள் முதலியவற்றில் பணியாற்றிக் கொண்டிருந்த பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்கள் சேர்ந்து பொருங் கூட்டமாக பார்லிமென்டிற்குச் சென்று தங்களுடைய கோரிக்கை சாசனங்கள் சமர்பித்து அக்கோரிக்கைகளை நிறைவேற்றும்படி கிளர்ச்சிகள் நடத்தினர். அதற்கு சார்ட்டிஸ்ட் இயக்கம் என்று பெயர். அவர்கள் பார்லிமென்டில் சமர்ப்பித்து சார்ட்டரில் அதாவது (கோரிக்கை பட்டியல்) தொழிலாளர்களின் வாழ்க்கையில் அபிவிருந்தி காண்பதற்கான பல கோரிக்கைளும் அடங்கியிருந்தன.

கூலி உயர்வு, வேலை நேர நிர்ணயம், வாராந்திர விடுமுறை, இதர பொது விடுமுறை, பண்டிகை முதலிய சிறப்பு விடுமுறை, தொழிலாளர்கள் வேலை செய்யுமிடங்களில் ஓய்வு எடுக்கும் வசதிகள், சாப்பாட்டு அறைகள், உணவு விடுதி, தண்ணீர் வசதி, தங்குமிடம், பிரயாண வசதிகள், சுகாதார வசதிகள், வீட்டு வசதிகள், பெண்கள் பாதுகாப்பு, பிரசவ கால வசதிகள், குழந்தைகள் பாதுகாப்பு, குழந்தைகள் படிப்பு வசதிகள், சீருடைகள், இவ்வாறு வேலை நிலைமைகள் பற்றிய பல கோரிக்கைளும், இக்கோரிக்ப் பட்டியலில் சேரும் வாழ்க்கை வசதகிள் அதிகரிக்கும் போது, வாழ்க்கைத் தேவைகள் அதிகரிக்கும் போது, தொழிலாளர்களின் கோரிக்கைகளும் அதிகமாகும்.

இவ்வாறு பிரிட்டனில் தொடங்கிய ஆரம்ப கால எந்திரத் தொழிலாளர் (நவீன எந்திரத் தொழிலாளர்) இயக்கம் தீவிரமான இயக்கமாக வளர்ந்தது. ஆரம்பத்தில் சில நேரங்களில் இந்த சார்டிஸ்ட் இயக்கத்திற்கும் அரசாங்கத்திற்கும் மோதல்கள் ஏற்பட்டு, பல வன்முறைகளும் நிகழ்ந்திருக்கின்றன. இந்த சார்டிஸ்ட் பிரிட்டனிலும் வேறு சில நாடுகளிலும் பிரபலமடைந்தன.

பின்னர் தொழிலாளர் இயக்கங்கள் அரசியல் தன்மை பெற்று, பிரிட்டன் போன்ற நாடுகளில் லேபர் கட்சிகள் (தொழிலாளர் கட்சிகள்) தோன்றி ஆட்சி அதிகாரத்திற்கும் வந்திருக்கின்றன. ஆட்சி அதிகாரத்தில் பங்கும் வகித்துள்ளன. இக்காலத்தில் பல நாடுகளிலும் தொழிலாளர் இயக்கங்கள் அரசியல் பலம் பெற்று ஆட்சிப் பொறுப்புகளில் உள்ளன.

பத்தொன்பதாம் நூற்றாண்டில் பிரான்ஸ் தேசத்தில் மன்னராட்சிக்கும் மத - மட ஆதிக்கத்திற்கும் எதிராக மிகவும் பலமான ஆயுதப் போராட்டங்களாக சில நேரங்களில் கோரமான வடிவங்கள் எடுத்தும் நடைபெற்றிருக்கின்றன.

பல மன்னர் பரம்பரையினரும், நிலப்பிரபுக்களும் அவர்களுடைய பதவிகளிலிருந்தும், பொறுப்புகளிலிருந்தும் நீக்கப்பட்டனர். மக்களுடைய ஜனநாயக இயக்கம் பல தடவைகளில் வன்முறை வடிவங்கள் எடுத்தன. அதையொட்டி பல மேற்கு ஐரோப்பிய நாடுகளிலும் மக்களாட்சி இயக்கம் பரவியது.

பிரான்ஸ் நாட்டின் பல நகரங்களிலும் தொழிலாளர்களின் ஆயுதம் தாங்கிய போராட்டங்களும் கலவரங்களும் நடைபெற்றன. இவை பெரும்பாலும்- தொழில் முதலாளிகள், நிலப்பிரபுக்கள், மன்னராட்சியினர், மதம்- மடம் ஆகிய நிறுவனங்களின் ஆதிக்கம் கொடுமைகளுக்கு எதிராக நடைபெற்ற மக்கள் கிளர்ச்சிகளாக இருந்தன.

ஒரு பக்கம் தொழிலாளர்கள் பொது மக்களுடைய ஆயுதம் தாங்கிய போராட்டங்கள், மறுபக்கம் சோஷலிஸம் போன்ற மனிதாபிமானக் கருத்துகளின் வெளிப்பாடுகள் ஆகியவை பிரெஞ்சு நாட்டைச் சூழ்ந்திருந்தன. ஜனநாயகக் கருத்துக்கள் அந்த நாட்டின் மண்ணில் ஆழமாக வேரூன்றியது.

மறுபக்கம் சுத்தோலிக்க மதகுருக்களின் ஆதிக்கமும் மக்களுடைய வாழ்க்கையை பாதித்துக் கொண்டிருந்தது. விக்டர் ஹிகோ போன்ற மனிதாபிமானம் நிறைந்த எழுத்தாளர்களின் கதைகளும் நவீனங்களும் மக்களிடம் ஆழ்ந்த பதிவுகளை உண்டாக்கிக் கொண்டிருந்தன.

இந்த நேரத்தில் நவீன தொழிலாளர் இயக்கங்களும் போராட்டங்களும் பிரஞ்சு நாட்டில் உச்சத்தை அடைந்தன. 1871 ஆம் ஆண்டில் பாரீஸ் நகரில் மிகப்பெரிய தொழிலாளர் கிளர்ச்சி ஏற்பட்டது. பிரெஞ்சு நாட்டின் தலைநகரமான பாரீஸ் நகர தொழிலாளர்கள் ஆர்த்தெழுந்து ஆயுதம் தாங்கி தலைநகரைக் கைப்பற்றி ஒரு புதிய தொழிலாளர் ஆட்சியை அமைத்தார்கள். அந்த ஆட்சி ''பாரீஸ் கம்யூனி'' என்ற பெயர் பெற்றது. அந்த ஆட்சி ஒரு வார காலத்தில் அத்தனை மக்களுக்கும் சம உரிமையும் ஜனநாயக உரிமைகளும் பல தொழிலாளர் நலசட்டங்களும் நிறைவேற்றப்பட்டன. இந்த ஆட்சியைக் கண்ட, பிரெஞ்சு அரசும் பிரெஞ்சு முதலாளிகளும் மத நிறுவனங்களும் குலை நடுங்கியது. இதர நாடுகளின் அரசுகளும் மதத் தலைவர்களும் நடுக்கம் கொண்டனர். பிரெஞ்சு அரசுப் படைகள் பாரீஸ் நகரை நோக்கிப் படையெடுத்தது. பாரீஸ் கம்யூனி கிளர்ச்சி ரத்த வெள்ளத்தில் நசுக்கப்பட்டது. பல்லாயிரக்கணக்கான பாரீஸ் தொழிலாளர்கள் பிரெஞ்சு ராணுவத்தால் படுகொலை செய்யப்பட்டார்கள். சுட்டுப் பொசுக்கப்பட்டார்கள். நாட்டை விட்டு வெளியேற்றப்பட்டார்கள். பாரீஸ் கம்யூன் போராட்டத்தில் கலந்து கொண்ட பிரெஞ்சு தொழிலாளர் நாட்டை விட்டு ஓடி பல நாடுகளிலும் தலைமறைவாகத் தஞ்சம் புகுந்தார்கள்.

பாரிஸ் கம்யூன் தொழிலாளர்களின் இந்தப் போராட்டம் சாதாரண

பிரெஞ்சு மக்களிடம் தொழிலாளர்களிடமும் ஆழ்ந்த பதிவை உண்டாக்கியது. நகரசபைகள், முதலிய மக்களமைப்புகளுக்கெல்லாம் கம்யூன் என்று பின்னர் பெயர் வழங்கலாயிற்று.

பின்னர் நாடு முழுவதிலும் நிர்வாக அமைப்பில் கம்யூன்கள் நிறுவப்பட்டன. பிரெஞ்சு ஆட்சியின் கீழ் இருந்த காலனி நாடுகளிலும் கம்யூன் அமைப்பு என்று பெயரிடப்பட்டன. பிரெஞ்சு ஆட்சியின் கீழ் இருந்த இந்தியப் பகுதிகளான பாண்டிச்சேரி, காரைக்கால், மாஹினம் ஆகிய பகுதிகளிலும் கம்யூன் அமைப்புகள் ஏற்பட்டன. இந்த கம்யூன் அமைப்புகளின் தலைவர் மேயர் அவருக்கு சமுதாயத்தில் மிகுந்த மரியாதையும் மதிப்பும் ஏற்பட்டது.

பாரீஸ் கம்யூன் கிளர்ச்சி, ஐரோப்பிய நாடுகளில் ஆழந்த பதிவுகளை உணடாக்கியது. தொழிலாளர்களிடம் விழிப்புணர்வை அதிகப்படுத்தியது. அவர்களுடைய உரிமைகள் பலவும் அங்கீகரிக்கப்பட்டன. விரிவுபட்டன. கல்லுளி மங்கனாக இருந்த பிரிட்டிஷ் முதலாளிக் கூடகல் நெஞ்சங்கம் இளகி தொழிலாளர்களின் உரிமைகள் பலவற்றை அங்கீகரிக்க வேண்டிய தேற்பட்டது.

ஆயினும் பிரெஞ்சு முதலாளிகள் பலவீனப்பட்டார்கள். ஆங்கிலேய முதலாளிகளின் ஆதிக்கம் உலக அளவில் அதிகரித்து விரிவுபட்டது. இருப்பினும் பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதி வாக்கில் ஐரோப்பிய முதலாளிகளின் வியாபாரப் போட்டி ஆதிக்கப்ப போட்டி, தொழில் போட்டி, காலனிப் போட்டிகள் ஏற்பட்டு அவ்வப்போது பல நாளிலும் ஆயுத மோதல்கள் ஏற்பட்டன.

இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் ஐரோப்பிய முதலாளித்துவ நாடுகளுக்கிடையில் போட்டிகள் கடுமையாகி உலக மோதல்கள் ஏற்படும் அபாயம் ஏற்பட்டது.

இதற்கிடையில் பத்தொன்பதாம் நூற்றாண்டின் பின் பாதியில் தொழிலாளர் இயக்கங்களில் ஒரு புதிய காட்சியும் ஏற்பட்டது. தொழிலாளர்களுக்கு ஆதரவான பல புதிய தத்துவங்கள் தோன்றன. புதிய பல சிந்தனைகள் மேற்கு ஐரோப்பாவில் வெளிப்பட்டன.

1847 ஆம் ஆண்டில் லண்டன் நகரில் ஜெர்மனியைச் சேர்ந்த இரு ஜெர்மானிய அறிஞர்கள் காரல் மார்க்ஸ், பிரடரிக் எங்கல்ஸ் தலைமையதில் பல ஐரோப்பிய நாடுகளையும் சேர்ந்த தொழிலாளர் பலரும் சேர்ந்து கம்யூனிஸ்ட் லீக் என்னும் சர்வதேச தொழிலாளர் அமைப்பை உருவாக்கினார்கள். இந்த அமைப்பை சர்வதேச தொழிலாளர் அமைப்பாக அறிவித்தார்கள். அந்த அமைப்பின் சார்பில் 1848 ஆம் ஆண்டில் கம்யூனிஸ்ட் அறிக்கை என்றும் அறிக்கை வெளியிட்டார்கள். இந்த அறிக்கையின்

மையமான கருத்து தொழிலாளர்கள் அரசியல் கட்சி அமைத்து அதன் மூலம் அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றி தொழிலாளர் ஆட்சியை அமைப்பதாகும்.

கம்யூனிஸ்ட் லீக் அமைப்பும் அதன் கிளைகளும் பல நாடுகளிலும் தோன்றி, ஆயினும் சில ஆண்டுகளிலேயே அவை செயல்படாமல் போயின. பின்னர் முதலாவது அகிலம் என்னும் பெயரில் காரல் மார்க்ஸ் ஏங்கல் தலைமை சர்வதேச தொழிலாளர் ஸ்தாபனம் உருவாயிற்று. அந்த அமைப்பும், பாரிஸ் கம்யூன், அத் பின்னர் ஏற்பட்ட அடக்கு முறைகள் காரணமாக செயல்பட முடியாமல் போயிற்று.

தத்துவ ஞானியான காரல் மார்க்ஸ் முதலாளித்துவப் பொருளாதாரத்தைப் பற்றி ஆழ்ந்த ஆராய்ச்சி நடத்தினார். நவீன எந்திரத் தொழிலாளர்களில் தொழிலாளர்களின் கடும் உழைப்பின் மூலம் உபரி மதிப்பு உண்டாக்கப்படுகிறது. என்றும், அதுவே தொழில்களின் லாபத்தின் அடிப்படையென்றும் அதுவே மனித சமுதாயத்தின் தேவைகளைப் பூர்த்தி செய்து முதலாளிகளுக்குக் கொள்ளை லாபமாகவும் குவிகிறது என்று எழுதினர். உபரி மதிப்பு என்னும் தத்துவத்தையும் விரிவுப்படுத்தினார். இதன் மூலம் காரல் மார்க்ஸ் மூலதனம் என்னும் நூலை மிகுந்த ஆராய்ச்சி செய்து எழுதினார். அது உலகப் புகழ் பெற்றது.

கார்ல் மார்க்ஸின் மூலதனம் என்னும் பெருநூல் உலகப் பெரு நூல்களில் ஒன்று என்று ஐரோப்பாவில் பேசப்படுகிறது. காரல் மார்க்ஸும் பிரடரிக் எங்கல்ஸும் சேர்ந்து உருவாக்கிய தத்துவம் உலகில் மார்க்சியம் என்று பெயர் பெற்று விளங்குகிறது. இந்த தத்துவமும் சிந்தனைகளும் அடிப்படையில் ஐரோப்பிய சிந்தனைகளையும் தத்துவகளையும் அடிப்படையாகக் கொண்டது.

காரல் மார்க்ஸ் காலத்தில் ஜெர்மனி, பிரான்ஸ், பிரிட்டன் ஆகிய நாடுகள் பல்வேறு முற்போக்கான சிந்தனைகளிலும் கருத்துக்களிலும் முன்னணியில் இருந்ததாகக் கூறப்படுகிறது. குறிப்பாக ஜெர்மனி தத்துவரான சிந்தனைகளிலும், பிரிட்டன் பொருளாதாரக் கருத்துக்களின் சிந்தனைகளிலும், பிரான்ஸ்' பல்வேறு மனிதாபிமான சமதர்ம சிந்தனைனக்களிலும் முன்னணியில் இருந்ததாகக் கூறப்படுகிறது.

காரல்மார்க்ஸ் ஜெர்மனியில் மிகவும் தொழில் வளர்ச்சியடைந்த பகுதியில் பிறந்து வளர்ந்தார், படித்தார். பட்டம் பெற்றார். தத்துவ ஞானத்தில் முனைவர் பட்டம் பெற்றார். அக்காலத்தில் மேற்கு ஐரோப்பிய நாடுகளில், ஜெர்மனி தத்துவரான சிந்தனைத்துறையில் மிகவும் பிரபல மடைந்திருந்தது. இயக்கவியல் பொருள் முதல்வாத சிந்தனைகள் கருத்துக்கள் அதிகமாக பேசப்பட்டன. இயக்கவியல் துறையில் ஹெகல் என்னும் ஞானியும், பொருளு' முதல் வாதக் கருத்துக்களில் பியர்பாக் என்னும் தத்துவ ஞானி

பிரபல மடைந்திருந்தனர்.

தத்துவஞானத்துறையில் ஆழ்ந்த சிந்தனையைச் செலுத்திய காரல் மார்க்ஸ், அன்று மேற்கு ஐரோப்பாவில் நிலவியிருந்த பல்வேறு தத்துவ ஞானப்பிரிவுகளை ஆழ்ந்து படித்தார். இயக்கவியல் துறையில் ஹெகல் கருத்துக்களையும் பொருள் முதல்வராத சிந்தனையில் பியர்பாக் கருத்துக்களையும் ஆழ்ந்து படித்தார். விரிவாக ஆராய்ச்சிகள் செய்தார். இந்த இரு பிரிவுகளிலும், ஹெகலையும் பியர்பாக்கையும் தாண்டி பல புதிய கருத்துக்களும் கண்டுபிடிப்புகளும் நிறைந்த தனது தத்துவ ஞானக் கருத்துக்குளையும் வெளியிட்டார். காரல் மார்க்ஸில் தத்துவ ஞானக் கருத்துக்களைத் தொகுத்து பார்த்தால் அது தனியா இயக்கவியல் பொருள் முதல் வாதக்கருத்துத் தொகுப்பாகக் காணப்படுகிறது. அதை மார்க்சிய தத்துவஞான என்று தான் குறிப்பிட வேண்டும்.

காரல் மார்க்ஸின் தத்துவ ஞான சிந்தனையின் தளம் மேற்கு ஐரோப்பிய சிந்தனை தளம் தான். அவருடைய தத்துவஞான சிந்தனையின் மூலம் கிரேக்க தத்துவஞான மூலம் தான். அதிலிருந்து தான் அவர் நவீன ஐரோப்பிய சிந்தனைக்கு வருகிறார்.

பாரத தத்துவஞான சிந்தனை வளத்தையும் சீன தத்துவஞான சிந்தனை வளத்தையும் பற்றி காரல்மார்க்ஸ் அறிந்திருக்கவில்லை. பாரதத்தின் பல்வேறு கருத்துச் செல்வங்களையும், சீனக் கருத்துச் செல்வங்களைப் பற்றியும் காரல் மார்க்சிற்கு கிடைத்த ஞானமெல்லாம் பிரிட்டிஷ் ஆவணங்களிலிருந்தும் லண்டன் அருங்காட்சியத்திலிருந்தும் கிடைத்த தகவல்களேயாகும்.

தத்துவஞானக் கருத்துக்களைப் பொருத்தவரை, பொருள் முதல் வாதக் கருத்துக்களைப் பற்றி இந்திய வேதங்களிலும் உபநிட தங்களிலும் ஏராளமான குறிப்புகள் உள்ளன. காட்சி, பிராமணம் பிரத்யட்சம் என்பது அதன் அடிப்படை தேவகுரு பிரகஸ்பதி அதன் மூலவராகும். ஆனால் பாலில் வெண்ணெயும், நெய்யும் இருப்பதைப் போல, எள்ளில் எண்ணையும் இருப்பதைப் போல கடவுள் என்பது அந்தர்யாமியாக ஒரு சக்தியாக இருப்பதை இந்தியத் தத்துவ ஞானிகள் எடுத்துக் காட்டியிருக்கிறார்கள்.

இயக்கவியலைப் பொருத்தவரை முதன் முதலில் மிகவும் விரிவாக புத்தர் பிரான் விளக்கிக் கூறியுள்ளார். புத்தருடைய இயக்கவியல் கருத்துகள் தான் உலக தத்துவங்களில் முதன் முதலில் தோன்றிய தத்துவக் கருத்துக்களாகும். இந்தத் துறையில் புத்தருடைய காசி ஆசிரமத்தில் பத்தாயிரத்திற்கும் அதிகமான பிராமணர்கள் சீடர்களாக இருந்து அவருடைய தத்துவஞானக் கருத்துக்களைப் பரப்பியதாக புத்தஜாதக ஆவணங்களிலிருந்து தெரிய வருகிறது. புத்தர் பிரான் கூறியருளிய இயக்கவியல் தத்துவஞானக் கருத்துக்களைப்பற்றி சீனக் கம்யூனிஸட் கட்சி பல ஆய்வுகளை நடத்தி

அவைகளை தங்கள் பாடத் திட்டத்தில் கொண்டு வந்திருக்கிறார்கள்.

புத்தருடைய தத்துவங்கள் பற்றிய தகவல்கள் போதுமான அளவில் நமக்குக் கிடைக்க வில்லை. அவை சீனாவுக்குச் சென்று அங்கிருந்து நமக்கு கிடைத்துள்ள தகவல்தான் அதிகம்.

இவைகளைத் தாண்டி இந்திய வேதாந்தக் கருத்துக்கள் மிகவும் விரிவாக உபநிட தங்களில் எடுத்துக் கூறப்பட்டிருக்கின்றன. இவைகளைப்பற்றி யெல்லாம் பாரதத்தில் தத்துவ ஞானிகளிடையில் மிகவும் விரிவாக விவாதிக்கப்பட்டிருக்கின்றன.

இவைகளைப் பற்றி யெல்லாம் விரிவாகப் பேசுவதற்கு இங்கு இடமில்லை. காரல்மார்க்சிற்கு ஜெர்மன் தத்துவஞானக் கருத்துக்கள் குறிப்பாக அக்காலத்து இயக்கவியல் பொருளுள் முதல்வாதக் கருத்துக்கள் கிரேக்க தத்துவஞானக் கருத்துக்களிலிருந்து, வேறுபட்டவை வளர்ச்சி பெற்றவை. கட்டுப்பாடுகளும் தடைகளும் இல்லாமதவை.

கிரேக்க தத்துவஞானக் களஞ்சியத்தில் அதன் வளர்சியில் பல்வேறு கிறிஸ்தவ சிந்தனைகள், குறிப்பாக கத்தோலிக்க சிந்தனைகள் இணைந்தும் கலந்தும் அவைகளை அன்றைய ஆளும்வர்கங்களுக்கு குறிப்பாக மன்னர்களுக்கும் மடாலயங்களுக்கும் எதிராக இருந்தன. அதனால் காரல் மார்க்ஸின் கருத்துக்களுக்கும் அன்று ஆதிக்கத்திலிருந்த கிறிஸ்தவ மதவாதக் கருத்துக்களுக்கும் மோதல் ஏற்பட்டது. அதே சமயத்தில் காரல் மார்க்ஸ் பிரடரிக் ஏங்கல்லிற்கும் அக்காலத்து பகுத்தறிவு வாதிகளுக்கும் பல பிரச்சினைகளில் கருத்தொற்றுமையும் உடன் பாடும் ஏற்பட்டன.

தத்துவஞானக் கருத்து வளர்ச்சியில் காரல் மார்க்ஸின் மிக முக்கியமான பங்களிப்பு, அவருடைய இயக்கவியல் பொருள் முதல் கருத்துக்களையும் கோட்பாடுகளையும் சமுதாய வளர்ச்சிக்குச் செயல் பிரயோகம் செய்து கண்ட விடைகளாகும்.

உயிரினங்களின் பரிணாம வளர்ச்சியைப் பற்றி சார்லஸ் டார்வின் மிக விரிவாக ஆராய்ச்சி செய்து தனது ஆராய்ச்சி முடிவுகளை வெளியிட்டார். அவை விவரியக் கருத்துக்களுக்கு கிறிஸ்தவ மத நம்பிக்கைக் கருத்துக்களுக்கு மாறுபட்டதாகும். வேறு பட்டதாகும்.

சார்லஸ் டார்வின் விட்ட இடத்திலிருந்து ஹென்றிமார்கன் மனித சமுதாய வளர்ச்சியின் தொடக்கத்தைப் பற்றி விவரித்துக் கூறுகிறார். அதைத் தொடர்ந்து மார்க்ஸ்- ஏங்கல்ஸ் குடும்பம், தனிச் சொத்துடைமை அரசு பற்றிய தங்கள் கருத்துக்களை வெளியிடகிறார்கள். அவைகள் ஐரோப்பிய வரலாற்றிற்கு பொருந்துவன. ரனால் பாரத சமுதாயத்திற்கு கொஞ்சமும் பொருந்தாதன வாழும் நமது வரலாற்றில் சில அடையாளங்க் தென்படலாம். ஆனால் பாரத நாகரிகம் பல்லாயிரம் வருடங்களுக்கு முந்தியதாகும்.

நமது நகரங்களும், சிற்பக்கலையும் இசை நாட்டியக் கலைகளும், நாகரிகமும், வைத்திய முறைகளும் சர்ச்சை முறைகளும், நீர்ப்பாசன முறைகளும் கால்நடை வளர்ப்பும், சாலைகளும் கப்பல் கடல் போக்குவரத்தும் மிகவும் பண்டைய காலத்திலிருந்து தோன்றி வளர்ந்து விரிந்தவை. பாரத நாடு பழம் பெரும் நாடு. விரிவான நாடு பரந்த தேசம் அதனால் அதன் முன்னேற்றம் மாற்றங்கள் நிதானமாகவும் சற்று மெதுவாகவும் இருந்திருக்கலாம். பாரத நாட்டின் விஞ்ஞான வளர்ச்சி மிகவும் விரிவுபட்டதாகும்.

ஆங்கிலேயப்படைகளும் ஆட்சியாளர்களும் கடுமையான முயற்சிகளை மேற்கொண்டு ஆயுத பலத்தால் காட்டு மிராண்டித்தனப் போர்க்கால் பாரத நாகரிகத்தை அழிக்க முயன்றார்கள். ஆயினும் இந்திய நாகரிகத்தின் ஒரு ஓரத்தைத்தான் அவர்களால் சேதப்படுத்த முடிந்தது. ஆனால் அந்த சேதம் கடுமையான. அந்தப்புண் மிக ஆழமானது. புற்று போல் ஆகிவிட்டது. அதை விரைவில் நல்ல சிகிச்சை செய்து ஆற்ற வேண்டும். இயற்கையாகவே சில புண்கள் ஆறி வருகின்றன. விரைவில் அவை குணமடையும். நமது புகழ் பரவும் உலகை அங்கீகரிக்கச் செய்யும்.

தத்துவஞானக் கருத்துக்களைப் பெருத்தவரை இஸ்லாமிய - கிறிஸ்தவ, மதக்கருத்துக்களும், தத்துவ ஞானக் கருதுக்களும் பாரதத்தின் நம்பிக்கைகளையும் சமயக் கருத்துக்களையும் தத்துவஞானக்களையும் வெற்றி கொள்ளவில்லை. வெற்றி கொள்ள முடியவில்லை என்றும் கூறலாம். பாரதத்தின் செழுமை மிக்க கருத்துக்கள் புதிய வடிவங்கள் பெற்று துளிர்த்து வருகின்றன. அவை விரைவில் மணம் வீசிப்பரவும்.

கார்ல் மார்க்ஸின் தத்துவான சிந்தவையின் அடுத்த பிரிவு வரலாற்றியல் பொருள் முதல் வாதம் என்பதை ஏற்கனவே குறிப்பிட்டோம். காரல் மார்க்ஸின் வரலாற்றில் பொருள் முதல் வாதக் கருத்துப்படி புராதனப் பொது சமுதாய அமைப்பிலிருந்து, நிலப்பிரபுத்வ சமுதாயத்திற்கும், நிலப்பிரபுத்வ சமுதாயத்திற்கும் அதிலிருந்து முதலாளித்துவ சமுதாயத்திற்கு அங்கிருந்து சோஷலிச கம்யூனிஸ் சமுதாயத்திற்கும் உலகம் மாறும், என்பதாகும். அத்தகைய சமுதாய மாற்றத்திற்கு அடிப்படைக் கருவியாக இருப்பது உற்பத்திக் கருவிகளில் ஏற்படும் மாற்றங்களாகும் என்று குறிப்பிடுகிறார்.

மனித சமுதாயத்தின் நிலை பாட்டிற்கும், உறுதிப்பாட்டிற்கும், அதன் வளர்ச்சிக்கும் மாற்றங்களுக்கும் அடிப்படையானது. அதன் தேவைகளைச் செய்து குறிக்கும் உற்பத்தி சக்திகளுமாகும்.

மனித சமுதாயத்தின் தேவைகள் என்பது அது உயிர் வாழ்வதற்கும் நிலை கொள்வதற்கும், அசைவதற்கும் வளர்ச்சி பெறுவதற்கும் தேவையான உணவு, உடை, உறைவிடம், பொழுது போக்கு, விளையாட்டு வசதிகள் முதலியவைகளாகும். இவை வரலாற்று வளர்ச்சியில் அனைத்துரைகளிலும்

பக்கங்களிலும் வளர்ச்சியடைந்து கொண்டே செல்கிறது. விரிவடைந்து கொண்டே செல்கிறது.

இத்தகைய மனிதனுடைய தேவைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டுமானால் அவை உற்பத்தி செய்யப்பட வேண்டும். தேவைகள் அதிகரித்துக் கொண்டே பெருகிக் கொண்டேயிருக்கும் போது அவைகளின் உற்பத்தியும் இணையாகப் பெருகிக் கொண்டேயிருக்க வேண்டும். வினியோகமும் சீராக அமைய வேண்டும். இதில் குறைகள் ஏற்பட்டால் சமுதாயக் குழப்பங்கள் ஏற்பட எதுவாகும்.

சமுதாயத் தேவைகளை உற்பத்தி செய்வதற்கு சமுதாயத்திற்கு உற்பத்தி சாதனங்கள் அவசியமாகிறது. அதாவது உற்பத்தி சாதனங்களானவன, அடிப்படை உற்பத்தித் சாதனங்களான நிலம், தொழிற்படிட்டரை தொழிற் சாலைகள், கல்வி நிலையங்கள், உற்பத்திக் கருவிகள் உழைப்பு ஆகியவைகளாகும். உற்பத்தி சாதனங்களும் உற்பத்திக் கருவிகளும் உழைப்பு சக்தியும் இணையும் போது உற்பத்திப் பொருள்கள் உண்டாகின்றன. அவை இனி சமுதாயத்தின் தேவைக்கேற்றபடி விநியோகம் செய்யப்படுகின்றன.

இவ்வைகள் உற்பத்தி முறைகளாகும். இவை சீராக இருக்கும் போது சமுதாய சீராகச் செல்கிறது. இதில் குலைவோ சிதைவோ ஏற்படும் போது சமுதாயக் குழப்பங்கள் ஏற்படுகின்றன. அத்தகைய சமுதாயக் கழப்பங்கள் சமுதாய மாற்ற்ததிற்கு வழி கோருகின்றன என்று காரல் மார்க்ஸ் குறிப்பிடுகிறார்.

ஒரு சமுதாயத்தின் அடிப்படை என்பது அதன் உற்பத்தி சாதனம், உற்பத்திக் கருவி, உழைப்பு சக்தி, உற்பத்திப் பொருள் வினியோக முறை ஆகியவை அடங்கிய உற்பத்தி முறையாகும். இந்த உற்பத்தி சக்திகளை அடிப்படையாகக் கொண்டு அதன் மேல் கட்டுமானமாக, அதன் அரசியல் அரசு, கலை, கலாச்சாரம், இலக்கியம் முதலியவை அமைகின்றன. இந்த மேல் கட்டுமானம், அதன் உற்பத்தி முறையை ஆதாரப்பட்டும் அதே சமயத்தில் அதைப் பாதுகாத்தும் நிற்கிறது.

உற்பத்தி முறைகளுக்கு மையமாக இருப்பது உற்பத்திக் கருவிகளும் அவைகளை இயக்கும் உழைப்பு சக்தியுமாகும். இந்த உற்பத்திக் கருவிகளில் ஏற்படம் மாற்றங்களினால் உழைப்பு சக்தியிலும் உற்பத்தி முறையிலும் மாற்றங்களை உண்டாக்குகின்றன.

உற்பத்தி முறை என்றும் சமுதாய அடிப்படையில் ஏற்படும் மாற்றங்கள் சமுதாயத்தின் மேல் கட்டுமானங்களிலும் மாற்றங்கள் ஏற்படுவதற்கு அடிகோருகின்றன. இவ்வாறு சமுதாயம் முழுவதிலும் மாற்றம் ஏற்படுகின்றது. இதையே சமுதாய வரலாறு எடுத்துக் காட்டுகிறது என்று

காரல் மார்க்ஸ் விளக்கிக் கூறுகிறார்.

இவ்வாறு மனித சமுதாயத்தில் புராதன சமுதாயம், நிலப்பிரபு த்வ சமுதாயம், முதலாளித்துவ சமுதாயம் ஆகிய சமுதாய அமைப்புகள் ஏற்பட்டிருக்கின்றன. இனி அதிலிருந்து சோஷிலிஸ சமுதாயம் ஏற்படும். அதற்குரிய வர்க்கப் போராட்டம் நடைபெறுகிறது. அந்த வரலாறு பூர்வமான வர்க்கப் போராட்டத்திற்கு நவீன தொழிலாளி வர்க்கம் தலைமையாக வரலாறு பூர்வமாக அமைகிறது என்று காரல் மார்க்ஸ் தனது வரலாற்றியல் பொருள் முதல் வாத தத்துவ ஞானத்தில் குறிப்பிடுகிறார்.

தொழிலாளி வர்க்கத்தின் இத்தகைய போராட்டங்களுக்கான சமுதாய நீர்ப்பநத்ங்கள் ஏற்படம். அத்தகைய போராட்டங்கள் நிகழும். அதில் தொழிலாளிவர்கம், இதர அனைத்து மக்களையும் ஒன்று திரட்டித் தலைமை தாங்கும். தொழிலாளி வர்க்கம் இறுதியில் வெற்றி பெறும். அப்போது வர்க்கங்களும் வர்க்கப் போராட்டங்களும் மறையும்.

அதிலிருந்து வேறுபாடுகள் இல்லாத ஒரு புதிய சமுதாயம் சோஷலியஸ் - கம்யூனிஸ் சமுதாயம் அமையும் என்று காரல் மார்க்ஸ் குறிப்பிடுகிறார்.

தொழிலாளர் என்னும் சொல்லுக்கு ஒரு புதிய அர்த்தத்தையும் விலக்கத்தையும் கொடுத்து, அந்தத் தொழிலாளர்களை ஒருவர்க்கமாக விளக்கிக் கூறி, அதன் வரலாற்றுக் கடமை எடுத்துக்காட்டி ஒரு புதிய சமுதாய அமைப்பின் தலைமையாக அந்தத் தொழிலாளி வர்க்கத்தை தொகுத்துக் கூறுகிறார் காரல் மார்கஸ்.

காரல் மார்க்ஸ் தனது இந்தத் தத்துவ ஞானக் கருத்துக்களை அதாவது தர்க்கவியல் பொருள் முதல் வாதம் வரலாற்றியல் பொருள் முதல்வாதம் என்னும் தத்துவ ஞானக் கருத்துக்களை ஐரோப்பிய வரலாற்றின் மிகவும் கடுமையான சூழ்நிலைமைகளில் வெளியிட்டார். இவை தொடர்பான பல நூல்களையும் ஐரோப்பிய நாடுகளில் நடைபெற்றுக் கொண்டிருந்த கடுமையான வர்க்கப் போராட்டங்களுக்கு இடையில் கருத்துப் போராட்டங்களுக்கு இடையில் எழுதி வெளியிட்டார். அவர் ஐரோப்பாவில் எந்த ஒரு நாட்டிலம் அமைதியாக வாழ முடியவில்லை. கடைசியில் அவருடைய நெருங்கிய நண்பர் பிரடரிக் ஏங்கல்ஸ் ஆதரவில் அவருடைய பாரமரிப்பில் லண்டனில் குடியேறினார்.

ஏங்கல்ஸின் ஆலோசனையின்படி தங்கள் தத்துவஞான சிந்தனைகளின் அடிப்படையில் பொருளாதாரப் படிப்பில், பொருளாதார ஆராய்ச்சியில் ஈடுபட்டார். நவீனப் பொருளாளதார ஆராய்ச்சிக்கு பிரிட்டனும், அதன் தலை நகரமான லண்டனும் மிகவும் சிறந்த களமாகவும் அண்மந்திருந்தது.

பிரிட்டனில் நவீன எந்திரத் தொழில்கள் சிறப்பாக வளர்ச்சி பெற்றிருந்தது. முதலாளித்துவப் பொருள ாதார சகல துறைகளிலும் சமுதாயத்தில் ஆதிக்கம்

கொண்டிருந்தது. நவீன அரசியல் பொருளாதாரத்துவ சிந்தனையில் குறிப்பான பல அறிஞர்களும் வெளிப்பட்டிருந்தார்கள். ஆடம் ஸ்மித், டேவிட் ரெக்கார்டோ போன்ற நவீன முதலாளித்துவ சிந்தனையில் புகழ் பெற்றிருந்தார்கள். உழைப்பின் மூலம் ஏற்படும் உற்பத்தி மதிப்பு போன்ற தத்துவங்கள் பிரபலமடைந்திருந்தன. இன்னும், உழைப்பு, கூலி, விலை, லாபம் பண்டம், பண்டப் பரிவர்த்தனை பண்ட மதிப்பு, முதலீடு, மூலதனம் முதலிய பல்வேறு பிரச்சனைகளைப் பற்றி நவீன அரசியல் பொருளாதார சிந்தனைகளைப் பற்றி காரல் மார்க்ஸ் ஆழ்ந்து ஆராய்ச்சி செய்து பல உண்மைகளைக் கண்டுபிடித்து அவைப்பற்றி புதிய கருத்துக்களை வெளியிட்டார்.

நவீன எந்திரத் தொழில் பழைய தொழில்கள், தொழில் முறைகளிலிருந்து முற்றிலும் மாறுபட்டதாக அமைந்திருந்தது. அதில் பிரிட்டன் முன்னணியில் இருந்தது.

நவீன எந்திரத் தொழில் அமைப்பு மூலதனத்தின் முதலீடு அடிப்படையில் அமைந்திருந்தது. ஒரு தொழில் தொழிற்சாலை, உற்பத்தி விற்பனை அதற்கான முதலீடுகள் மூலதனம் கீழ்க்கண்ட அடிப்படையில் அமைந்திருந்தது. ஒரு தொழிற்சாலை அமைந்து செயல்படுவதற்கு உற்பத்தி நடைபெறுவதற்கு கீழ்க்கண்ட சாதனங்களும் அவைகளுக்கான முதலீடுகளும் தேவைப்படுகின்றன.

1. தொழிற்சாலை அமைவதற்கான இடம் நிலம், அந்த நிலம் வாங்குவதற்கான முதலீடு.

2. கட்டிடம் கட்டுவதற்கும் கட்டி முடித்து அதில் தொழிற்சாலை அமைப்பதற்கும் எந்திரங்கள் நிறுவுவதற்குமான முதலீடு.

3. எந்திரங்கள் வாங்குவதற்கும் அவைகளை நிர்மானிக்கவுமான அவைகளைப் பராமரிப்பதற்குமான முதலீடு.

4. மூலப் பொருள் வாங்குவதற்கான பணம்- அதற்கான முதலீடு.

5. விசை சக்தி அதற்கான பண ஒதுக்கீடு தொடர்ச்சியான முதலீடு.

6. உழைப்பு சக்தி: தொழிலாளர்களின் உழைப்பு சக்தியை வாங்குவதற்கான முதலீடு, கூலித் தொகை.

7. உற்பத்திப் பண்டம்: அதை சேமிக்க ஏற்பாடு அதற்கான விலை.

ஆகியவை அடங்குகின்றன.

இவைகளில் நிலம், கட்டிடம், எந்திரங்கள், விசை சக்தி, மூலப் பொருள் ஆகியவற்றிற்காக ஒதுக்கப்படும் மூலதனத்தை அசையா மூலதனம் என்று மார்க்ஸ் கூறுகிறார்.

இனி அடுத்தாற் போல குறிப்பிட்ட தொகை வைத்து தொழிலாளர்கள் வேலைக்கு அமர்த்தப்பட்டு அவர்களுடைய உழைப்புச் சக்தி விலைக்கு வாங்கப்படுகிறது. இங்கு உழைப்பு சக்தியே ஒரு பண்டமாகிறது. உழைப்பு சக்தி என்னும் உயர்வான ஒரு அபூர்வமான பண்டம், ஒரு அசையும் மூலதனம், தொழிற்சாலையின் இதர பகுதிகளான அசையா மூலதனத்தின் மீது படும் போது அங்கு உற்பத்திப் பொருள் என்னும் ஒரு புதிய பண்டம் விற்பனைக்குத் தயாராகிகிறது. இப்புதிய பண்டத்திற்கு புதிய மதிப்பாக விலை மதிப்பு கிடைக்கிறது.

தொழிலாளர்களின் உழைப்பு சக்தி என்னும் அபூர்வமான பண்டத்திற்குக் கொடுக்கப்படும் கூலி என்னும் மதிப்பு உற்பத்திப் பண்டத்தின் விலை மதிப்பை மூலப் பொருள் மதிப்பிலிருந்து பல மடங்கு உயர்த்திவிடுகிறது. அது லாபம் என்னும் பெயரில் வெளிப்படுகிறது. தொழிலாளர்களின் உழைப்பு சக்தியின் மூலம் கிடைக்கும் உபரி மதிப்புதான் லாபமும் லாபத்தின் அடிப்படையுமாகும் என்பது மார்க்ஸின் கருத்து கண்டுபிடிப்புமாகும்.

தொழிலாளர்களின் உழைப்பு சக்தியின் உபரி மதிப்பு தான் லாபமும் லாபத்தின் அடிப்படையும் என்று காரல்மார்க்ஸின் அரசியல் பொருளாதார கண்டுபிடிப்பு முதலாளித்துவ அரசியல் பொருளாதார இயக்கத்தில் முக்கிய இடத்தை பிடித்து விட்டது. இதன் காரணமாக தொழில் முதலாளிகளுக்கு ஒருவித நடுக்கம் ஏற்பட்டு விட்டது. காரல் மார்க்ஸின் இந்தப் புதிய கண்டுபிடிப்பு ஐரோப்பிய முதலாளித்துவம் முழுவதையும் பலமாக அச்சுறுத்திவிட்டது.

உலகம் முழுவதிலும் உள்ள இராணுவ பலமும் ஆயுத பலமும் சேர்ந்து வந்து தங்களை எதிர்த்து வந்தாலும் அச்சப்படாத முதலாளித்துவம் காரல்மார்க்ஸின் உபரி மதிப்பு தத்துவத்தைக் கண்டு நடு நடுங்கியது என்று ஏங்கல்ஸ் குறிப்பிட்டார்.

தொழிலாளர்களின் கோரிக்கைகள் கிளர்ச்சிகள் போராட்டங்கள் ஒரு பக்கம் இருந்தாலும் ஐரோப்பிய முதலாளிகளுக்கிடையிலான போட்டியும் பொறாமையும் மோதலும் முட்டாளும் அதிகரித்து இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் ஐரோப்பிய நாடுகளுக்கு இடையிலான உலகப் போராக வெடித்தன. இப்போரில் ஐரோப்பிய நாடுகள் ஈடுபட்டதோடு அவைகளின் காலனி நாடுகளையும் ஈடுபடுத்தியது. அதனால் அப்போர் உலகப் போரின் வடிவத்தை எடுத்தன.

1914 ஆம் ஆண்டில் தொடங்கிய இப்போர் 1918 வரை நீடித்து ஏராளமான உயிர்ச் சேதத்தையும் பொருள் சேதத்தையும் உண்டாக்கியது. இப்போரின் விளைவாக போரில் வெற்றியடைந்த நாடுகளும் தோல்வியடைந்த நாடுகளும் பலவீனமடைந்தன. போரில்பங்கு கொண்ட இரு தரப்பு

உழைக்கும் மக்களும் தங்கள் உயிரை இழந்து பலவீனப்பட்டனர்.

முதலாவது உலகப்போர் 1914-18 ஏற்பட்டதன் முதல் விளைவு, முதல் முறிவு உலகில் நிலப்பரப்பில் பெரிய நாடான ஆறில் ஒரு பகுதியாக இருந்த, ஐரோப்பாவிலும் ஆசியாவிலும் பரவியிருந்த ரஷ்யாவில் ஏற்பட்ட ஆட்சி மாற்றமாகும்.

ரஷ்யாவில் ஜார் மன்னருடைய ஆட்சியிருந்தது. 'ம்' என்றால் சிறைவாசம். 'ஏன்' என்றால் வனவாசம் என்று சொல்லும்படி கொடுங்கோலாட்சி நடைபெற்று வந்த பேயாட்சி முறிந்தது. ரஷ்யாவில் நடைபெற்ற கொடுங்கோலாட்சியின் கொடுமைகளைப் பற்றி மகாகவி பாரதியார் ஒரு தனியான பாடலே பாடியுள்ளார்.

மாகாளி பராசக்தி உருசிய நாட்
டினிற் கடைக்கண் வைத்தாள்
அங்கே,
ஆகாவென்றெழுந்து பார் யுகப்புரட்சி
கொடுங்கோலன் அலறி வீழந்தான்
வாகான தோள் புடைத்தார் வானமரர்
பேய்க ளெல்லாம் வருந்திக்க
ண்ணீர்
போகமற் கண்புகைந்து மந்தனவாம்
வையத்தின் புதுமை காணீர்
என்றும்,

இம்மென்றால் சிறைவாசம்,
ஏனென்றால்
வனவாசம், இவ்வாறங்கே
செம்மையெலாம் பாழாகிக்
கொடுமையே
அறமாகித் தீர்ந்த போதில்

அம்மை மனங்கனிந்திட்டாள், அடிபரவி
உண்மை சொளும் அடியார் தம்மை
மும்பையிலும் காத்திடுதல் விழியாலே
நோக்கினால் முடிந்தான் காலன்

இமயமலை வீழ்ந்தது போல்
வீழ்ந்து விட்டான்
ஐராரசன் இவனைச் சூழ்ந்து
சமயமுன் படிக்கெல்லாம் பொய் கூறி
அறமகொன்று சதிகள் செய்த
சமடர் சடசடவென்று சரிந்திட்டார்
புயற்காற்றுச் சூறை தன்னில
திழுதிமென மரம் விழுந்து காடெல்லாம்
விறகான செய்தி போலே!

குடிமக்கள்ள சொன்ன படி
குடிவாழ்வு
மேன்மையுறக்குடிமை நீதி
கடியொன்றில் எழுந்தது பார்
குடியரசென்று
உலகறியக் கூறிவிட்டார்
அடிமைக்குத் தளையில்லை
யாருமிப்போது
அடிமையில்லை அறிக என்றார்.
இடிபட்ட சுவர் போல கலிவிழுந்தான்
கிருதயுகம் எழுகமாதோ

என்ற தொரு அருமையான கருத்துச் செரிவு மிக்க பொருள் மிகுந்த பாடலை மகாகவி பாரதி பாடினார்.

மகாகவி பாரதியின் இந்தப் பாடலுக்கு ஈடாக உலகில் எந்தக் கவியும் பாடியிருப்பதாகத் தெரியவில்லை.

மகாகவிக்கு இந்தியாவில் கொடுமைமிக்க பிரிட்டிஷ் ஆட்சியின் அனுபவம் இருக்கிறது. மேற்கு ஐரோப்பிய நாடுகளில் நிலப்பிரபுத்வ மன்னராட்சியின் கொடுமைகளைப் பற்றி மத, மட, ஆதிக்கத்தின் கெடுமைகளைப் பற்றிக் கேள்விப்பட்டிருகிறார். அறிந்திருக்கிறார். அந்த உணர்வு நிலையில் மகாகவி பாரதியின் உள்ளத்திலிருந்து குமுறியெழுந்த சொற்களை இந்தப் பாடலில் நாம் காண முடிகிறது.

ரஷ்யாவில் லெனின் தலைமையில் 1917 ஆம் ஆண்டு அக்டோபரில் நடைபெற்ற (அக்டோபர்) புரட்சி வெற்றி பெற்று லெனின் தலைமையிலான சமூக ஜனநாயக தொழிலாளர் கட்சி ஆட்சிக்கு வந்தது. இந்த சமூக ஜனநாயகத் தொழிலாளர் கட்சிக்கு பின்னர் ரஷ்ய கம்யூனிஸ்டு கட்சி என்னும் பெயர் ஏற்பட்டது. ரஷ்யா நிலப்பரப்பில் ஒரு பரந்த பெரிய தேசம். அது ஐரோப்பாவிலும் ஆசியாவிலும் பரவியிருந்தது. 1917 ஆம் ஆண்டு அக்டோபரில் லெனின் தலைமையில் இந்தத் தொழிலாளர் புரட்சி தொடர்ந்து நீடித்து ரஷ்யா முழுவதிலும் அதன் அதிகாரம் பரவி 1922 ஆம் ஆண்டு ரஷ்யக் கம்யூனிஸ்ட் கட்சியின் ஆட்சி நிலை பெற்றது. இந்த ஆண்டுகளில் நடைபெற்ற ஆயுதம் தாங்கிய உள்நாட்டுக் கலவரங்களில் ஏராளமான தொழிலாளர்களும் விவசாயிகளும் ராணுவ வீரர்களும் உயிரிழந்தனர். இறுதியில் லெனின் தலைமையில் ரஷ்யப் புரட்சி வெற்றியடைந்தது. சோவியத் சோஷலிஸ்டுக்கு குடியரசுகளின் யூனியன் என்று பெயர் பெற்று புதிய ஆட்சி அமைந்தது.

புதிய புரட்சி அரசு தனது போரை நிறுத்திக் கொண்டு ஜெர்மனி முதலிய நாடுகளுடன் தனியான போர் நிறுத்தம் சமாதான ஒப்பந்தம் செய்து கொண்டு தனது பக்கத்து போரை நிறுத்திக் கொண்டது. சாகுபடி நிலம் அனைத்தும் விவசாயிகளுக்கு பகிர்ந்து கொடுத்துவிநியோக செய்யப்பட்டது. தொழிற் சாலைகள் அனைத்தும் தேசவுடைமை ஆக்கப்பட்டது. தொழிலாளர்களுக்கு எட்டு மணி நேர வேலை, கூலி நிர்ணயம், விடுமுறை, வேலைப் பாதுகாப்பு, தொழில் பாதுகாப்பு, சட்டங்கள் நிறைவேற்றப்பட்டன. அரசாங்க நிர்வாகம் சோவியத் மயமாக்கப்பட்டது. அனைவருக்கும் கல்வி அடிப்படையில் ஆரம்பக்கல்வி அனைவருக்கும் கட்டாயமாக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டது. மேலும் தொடர் கல்வி உயர் கல்விக்கான வசதிகள் அதிகரிக்கப்பட்டது.

நாட்டின் தொழில் வளர்ச்சி மற்றும் விவசாய மேம்பாடு, உள்நாட்டு உற்பத்தி உள்நாட்டு சந்தை சீரமைப்பு, கல்வி மாதர் நலம், அரசாங்க நிர்வாக

சீரமைப்பு முதலிய பரிதுறைகளிலும் சமசீரான வளர்ச்சிக்காக ஐந்தாண்டு திட்டங்கள் போடப்பட்டு நிறைவேற்றப்பட்டன. ஐந்தாண்டு திட்டங்களும் திட்டமிட்ட பொருளாதார வளர்ச்சிக்கான ஏற்பாடுகளும் சோவியத் யூனியனில் தொடங்கப்பட்டதும் அவை நிறைவேற்றப்பட்டதும், உலக அரசியல் பொருளாதார செயல்பாட்டில் முதல் அனுபவமாகும். அதில் பல குறைகளும் பற்றாக்குறைகளும் இருந்தன. இருப்பினும் மிகவும் பின் தங்கிய நிலையிலிருந்த ரஷ்யாவிலும் ஜார் ஆட்சியின் கீழிருந்த பின் தங்கிய நாடுகளிலும் சோவியத் முயற்சிகள் பெரும் முன்னேற்றத்தைக் கண்டது.

இதற்கிடையில் ரஷ்யாவிலும் ஜார் ஆட்சி இருந்த பழைய ரஷ்யசாம் ராஜ்ய நாடுகளிலும் சேர்ந்து சோவியத் யூனியன் என்னும் பெயரில் ஒரு புதிய தொழிலாளர் ஆட்சி ஏற்பட்டிருப்பதை மேற்கு ஐரோப்பிய முதலாளித்து நாடுகள் சகித்துக் கொள்ளவில்லை. மேற்கு ஐரோப்பிய நாடுகள் பலவும் ஒன்று சேர்ந்து படை திரட்டி புதிதாக அமைந்த சோவியத் நாட்டின் மீது படையெடுத்தன. இந்தத் தலையீடுகளை எதிர்த்து இளம் சோவியத் யூனியன் தற்காப்புப் போரை நடத்தி வெற்றியும் பெற்றது. பின்னர், மேற்கு ஐரோப்பிய முதலாளித்துவ நாடுகளின் தூண்டுதலிலும் உதவியிலும், சோவியத் யூனியனில் இருந்த பழைய முன்னாள் நிலப்பிரபுத்து முதலாளித்துவ சக்திகள் ஆய்தம் தாங்கிய உள்நாட்டுக் கலவரங்களை நடத்தி குழப்பங்களை உண்டாக்கினார்கள். அதையும் இளம் சோவியத் யூனியன் சமாளித்து வெற்றி கண்டது. மறுபக்கம் பொருளாதார வளர்ச்சியில் அதிக கவனம் செலுத்தி ஐந்தாண்டு திட்டங்களை நிறைவேற்றியது.

புரட்சிப்படைகளுக்கு ஏற்பட்ட பிரச்சினைகள், உணவு மற்றும் அத்தியவசியப் பண்டங்களின் பற்றாக்குறைகள் அதனால் மக்களுக்கு ஏற்பட்ட கஷ்டங்கள், யுத்தத்தால் ஏற்பட்டிருந்த பாதிப்புகள், உள்நாட்டுக் குழப்பங்கள், வெளிநாட்டுப் படைகளின் தலையீடுகள், அதனால் ஏற்பட்ட உயிர்ச்சேதம் நாட்டின் ஒட்டு மொத்தமான அரசியல் பொருளாதார பின் தங்கிய நிலை ஆகியவைகளை சமாளித்துத்தான் புதிய சோவியத் அரசு சமாதானம், விவசாய சீர்திருத்தம் தொழிலாளர் நலச்சட்டங்கள், ஐந்தாண்டு திட்டங்கள், பெண்கள் சம உரிமைச் சட்டங்கள் அனைவருக்கும் கல்வி புதிய பொருளாதார வளர்ச்சிக்கான அடித்தளம் அமைத்தல் முதலிய திட்டங்கள் நிறைவேற்றப்பட்டது. புதிய பொருளாதாரக் கொள்கை என்னும் பெயரில் புதிய பொருளாதார வளர்ச்சிக்கான அடித்தளம் அமைக்கப்பட்டு அடுத்த கட்ட வளர்ச்சிக்காக ஐந்தாண்டு திட்டங்கள் உருவாக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

இதற்கான குனிந்த தலை நிமிரவில்லை. அதற்குள், இரண்டாவது உலகப் பெரும் போரைத் தொடங்கிய ஜெர்மனி மற்றும் இதர பாஸ¨சப்படைகள் 1940 ஜ¨ன் மாதத்தில் புதிய இளம் சோவியத் யூனியன் மீது தனது

பெரும்போரை திசை திருப்பியது. நாஜ் படைகள் சோவியத் யூனியன் மீது திரும்பியது.

போர் உக்கிரமாயிற்று. ஜெர்மன் நாஜி படைகள் பல ஆயிரம் வெற்றிகளை அடைந்தது. நாஜி ஜெர்மன் படைகள் சோவியத் பூமியில் முன்னேறி, லெனின் கிராட், மாஸ்கோ ஸ்டாலி கிராட் நகர்களை நெருங்கியது.

சோவியத் யூனியன் யுத்தத்தின் கனமான பறவைத்தாங்கி தேச பக்திப்போரில் ஒரு மனிதன் போல் பங்கு கொண்டது.

உலகில் நடைபெற்ற மிகவும் பயங்கரமான இரண்டாவது உலகப் பெரும் போரில் பாஸிஸ சக்திகளாக ஜெர்மனி, இத்தாலி, கிழக்கில் ஜப்பான் ஆகிய அச்சு நாடுகளுக்கு எதிராக நின்ற நேச நாடுகளின் தலைமையில், பெரிய வல்லரசுகளான அமெரிக்க ஐக்கிய நாடு பிரிட்டன் ஆகியவைகளுக்கு ஈடாக சமமாக சோவியத் யூனியன் நின்றது. நாஜி- பாஸிஸ அச்சு நாடுகள் போரில் தோற்றன. சோவியத் யூனியன் உள்ளிட்ட நேச நாடுகள் வெற்றி பெற்றன. பிரிட்டன், அமெரிக்க, ஐக்கிய நாடுகள், பிரான்ஸ் ஆகிய ஏகாபத்ய நாடுகள் போரில் வெற்றி பெற்றாலும் அரசியல் பொருளாதாரத் துறையில் உலக அளவில் பழைய நிலையிலிருந்து பொருளாதாரத்துறையில் பலவீனப்பட்டு நின்றன. உலகப் அரசியலிலும் பொருளாதார ராணுவத்துறையிலும் சோவியத் யூனியன் உலகின் முன்னணி நாடுகளில் ஒன்றாக, ஒரு வல்லரசாக ஐக்கிய நாடுகளில் ரத்து அதிகாரம் பெற்ற நாடுகளில் ஒன்றாக உயர்ந்தது.

சோவியத் வெற்றியினால், அதன் அண்டை நாடுகளான, போலந்து, செக்கோஸ்லோவேகியா, ஹங்கேரி, பல்கேரியா, ருமேனியா, யுகோஸ்லோவியா முதலிய கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் பழைய நிலப்பிரபுத்வ முதலாளித்துவ ஆட்சி முறைகள் மாறி, சோவியத் யூனியன் சாரமான, தொழிலாளர் கட்சிகளின் புதிய ஆட்சி முறைகள் ஏற்பட்டன.

உலக அரங்கில் சோவியத் யூனியன் மற்றும் அதன் சார்பு நாடுகள் ஒரு பலமான கூட்டு அரசியல் சக்தியாக விளங்கின.

உலக நாடுகளில் அநேகமாக இரு முகாம்கள் ஏற்பட்டன என்று கூறலாம்.

அத்துடன் இதுவரை அமெரிக்கா, பிரிட்டன் மற்றும் மேற்கு ஐரோப்பிய முதலாளித்துவ நாடுகளாக இருந்த காலனி நாடுகள் அனைத்தும் ஒவ்வொரு நாடும் விடுதலை பெற்று சுதந்திரமான நாடுகளாக வெளிப்பட்டு ஐக்கிய நாடுகள் சபையில் அங்கம் பெற்றன.

உலகில் ஏறுப்பட்ட மற்றொரு முக்கியமான மாற்றம், உலகில் மக்கள் தொகையில் பலம் பெற்ற முதன்மை நாடான ஆசிய நாடான சீனாவில் 1949 ஆம் ஆண்டில் கம்யூனிஸ்ட் ஆட்சி ஏற்பட்டதாகும். அதைத் தொடர்ந்து வியட்நாம், பிரெஞ்சு, அமெரிக்க ஏகாதிபத்யங்களின் பயங்கரமான

ராணுவத்தலையீடுகளை எதிர்த்து பல ஆண்டுகள் கடுமையாகப் போராடி, அமெரிக்க ஆக்கிரமிப்புப் படைகளை முறியடித்து முழு விடுதலை பெற்று, வியட்நாம் வடக்கு, தெற்கு ஆகிய இரு பகுதிகளும் ஒன்றிணைந்து வல்லமைமிக்க ஒரே நாடாக ஆசியாவில் வெளிப்பட்டிருப்பதாகும்.

இவ்வாறு உலகில் மூன்றில் ஒரு பாகம் தொழிலாளர் கட்சி ஆட்சி நடத்தும் பகுதிகளாக மாறியிருப்பதாகும்.

இவ்வாறு தொழிலாளர் கட்சிகளின் தலைமையில் உலகில் மூன்றில் ஒரு பகுதி மக்கள் வசிக்கும் நிலைப்பகுதிகளில் புதிய ஆட்சிகள் அமைந்தன. இந்த நாடுகள் எல்லாம் அடிக்கடி கூடியும், ஐக்கிய நாடுகளின் பல்வேறு அமைப்புகளில் பணியாற்றியும் உலக அரங்கில் செயல்பட்டன.

இந்த நாடுகளின் பொருளாதார வளர்ச்சியில் ஆரம்பத்தில் பின் தங்கிய நிலையிலேயே இருந்தன. ஆயினும் கூட்டு முயற்சியில் படிப்படியாக முன்னேறிக் கொண்டு வந்தன.

சீனா ஒரு பெரிய தேசம், மக்கள் தொகையில் உலகில் முதலாவது பெரிய நாடு. நீண்ட உள்நாட்டுப் போர் முடிந்து அந்த நாட்டில் 1949 ஆம் ஆண்டில் புதிய கம்யூனிஸ்ட் ஆட்சி ஏற்பட்டு அந்த நாட்டு அரசியல் உலகில் அசையத் தொடங்கியது.

இரண்டாவது உலகப் போர் 1945 ஆம் ஆண்டில் முடிந்த பின்னர் உலகில் பொதுவாக அமைதி ஏற்பட்டது. என்று கூறலாம். மூன்றில் ஒரு பங்கு உலகம் தொழிலாளர் கட்சிகளின் ஆட்சி ஏற்பட்டு அவைகள் நேரடியாகவும் ஐக்கிய நாட்டு சபைகள் மூலமாகவும் தங்கள் செல்வாக்கைச் செலுத்தி வந்தன.

உலக நாடுகளின் நிலைமையில் மற்றொரு முக்கியமான மாற்றம் இரண்டாவது உலகப் போர் 1945 ஆம் ஆண்டில் முடிந்த பின்னர் படிப்படியாக காலனி நாடுகள் ஒவ்வொன்றாக விடுதலை பெற்று சுதந்திர நாடுகள் ஆயின. ஆயினும் அந்நாடுகள் பொருளாதார வளர்ச்சியின் பின் தங்கிய நிலையிலேயே இருந்தன.

பொருளாதார வளர்ச்சி ஏற்பட்டால் தான் மக்களுடைய வாழ்வு வளம் பெறும். பொருளாதார வளர்ச்சிக்கு நான்கு முக்கிய தேவைகள் உள்ளன. 1. மூலதனம் (முதலீட்டு வசதி), 2. தொழில் நுட்பம், 3. சந்தை வசதி, 4. மக்கள் தொகை (மனித ஆற்றல்) ஆகியவை மிகவும் அவசியமானதாகும். இந்த நான்கு அம்சங்களிலும் வளர்முக நாடுகள் பின் தங்கியே இருந்தன. மற்ற வளர்ச்சியடைந்த நாடுகளைச் சார்ந்தே இருந்தன. அனைத்து நாடுகளும் அரசியல் துறையில் சுதந்திர நாடுகளாக இருந்த போதிலும் பொருளாதாரத் துறையில் பின் தங்கியும் வளர்ச்சியடைந்த நாடுகளைச் சார்ந்தே நிலையே நீடித்தது. இன்னும் நீடித்து வருகிறது. ஆயினும் உலக மயமாக்கலின் மையமாக உள்ள உலக வர்த்தக மையத்தில் வளர்ச்சியடைந்த நாடுகளுக்கும்

வளர்முக நாடுகளுக்கு மிடையில் மோதல் நீடிக்கிறது. தொடர்கிறது.

இன்று உலக மயமாக்கல், உலக வங்கி, சர்வதேச நிதி நிறுவனம், உலகச் சந்தை, உலக வர்த்தக அமைப்பு முதலியவை உருவாகி, அதில் உலகின் எல்லா நாடுகளும் சுதந்திரமாகப் பங்கு கொள்ளும் நிலை ஏற்பட்டு வருகிறது. அதே சமயத்தில் அவைகளில் உலகின் வளர்ச்சியடைந்த பெரிய நாடுகளுக்கும் சிறிய நாடுகளுக்கும் இடையிலான முரண்பாடுகளும் மோதல்களும் நீடித்து வருகின்றன.

உலகில் சீனா ஒரு பெரிய நாடு என்னும் முறையில் அதன் அரசியல் செல்வாக்கும் பொருளாதார செல்வாக்கும் வர்த்தக செல்வாக்கும் உயர்ந்து வருகிறது.

சீனாவின் பொருளாதாரம் தனித்தன்மையோடு வளர்ச்சி பெற்றுக் கொண்டு வந்த போதிலும், உலகப் பொருளாதாரத்தோடும், உலகச் சந்தையோடும் இணைந்தும் தங்கள் நாட்டிலேயே தனிமையங்களை அமைத்துக் கொண்டு உலக அமைப்புகளோடு தொடர்பும் இணைப்பும் அமைத்துக் கொண்டிருக்கிறது.

சோவியத் யூனியன் ஒரு சோஷலிஸ் குடியரசுகளின் கூட்டமைப்பு என்ற முறையில் உடைந்து விட்டது. அது கலைக்கப்பட்டு விட்டது. அதில் அங்கம் வகித்த நாடுகள் இருபதாம் நூற்றாண்டின் இறுதியில் சோஷலிஸ் நாடுகள் என்னும் நிலைமாறி தனித்தனியான சுயேட்சையான அரசியல் பொருளாதார அமைப்புகளைக் கொண்ட நாடுகளாக அமைந்துசெயல்பட்டு வருகின்றன. ஆயினும் அந்த நாடுகளுக்கிடையில் பொருளாதாரக் கூட்டமைப்பும் இணைப்புகளும் தொடர்புகளும் தொடர்ந்து நீடித்து வருகின்றன.

ரஷ்யா குடியரசு ஒரு பெரிய நாடு என்னும் வகையில் நிலப்பரப்பில் உலகின் முதலாவது நாடு என்னும் வகையில் ஒரு வளர்ச்சியடைந்த நாடுகளின் ஒன்றாக உலக அமைப்பில் சேர்ந்து தனது செயல்பாடுகளை நடத்தி வருகிறது. ஏற்கனவே தனக்கு இருந்த தொடர்புகளை நீடித்துக் கொண்டும் பலப்படுத்திக் கொண்டு உலக அரங்கில் முக்கிய இடம் பெற்று செயல்பட்டு வருகிறது.

உலக அளவில் அமெரிக்கா, பிரிட்டன் போன்ற நாடுகள் அரசியல் பொருளாதார வர்த்தகத்துறைகளில் செல்வாக்குள்ள நாடுகளாக இருந்த போதிலும் அவைகளின் பழைய ஆதிக்கம் போய் விட்டது. இரண்டாம் உலகப் போரில் தோல்வியடைந்த ஜெர்மனியும், ஜப்பானும், போரில தோற்று ராணுவத்துறையில் பலவீனப்பட்டிருந்த போதிலும் பொருளாதாரம் வர்த்தகத் துறைகளில் வலுப்பெற்று இன்று உலகில் உலகப் பொருளாதாரத்தில் வலுவான நாடுகளாக இடம் பெற்று சுயேட்சையாக செயல்பட்டு வருகின்றன.

ஐரோப்பிய நாடுகளிலும், உலகின் வேறு பல நாடுகளிலும் தொழிலாளர் சார்பான அரசியல் கட்சிகளும் (பிரிட்டன் உள்பட) சமூக ஜனநாயகக் கட்சிகளும் அரசியல் அதிகாரத்திற்கு வந்து செயல்பட்டு வருகின்றன. இந்தியாவில் கூட, நாடு சுதந்திரம் பெற்ற பின்னர், சில மாநிலங்களில், தொழிலாளர் கட்சிகளும் தொழிலாளர் தொடர்பான கட்சிகளும் தலைவர்களும் அவ்வப்போது மக்கள் செல்வாக்கு பெற்று ஆட்சி பொறுப்புக்கு வந்து போகிறார்கள்.

இவ்வாறு தொழிலாளர் என்பது கூலிக்கு வேலை செய்யும் உழைப்பாளர் என்றும் நிலைமாறி, அவர்களுக்கென பல அமைப்புகள், அவர்களுக்கென தனி சித்தாந்தம், அரசியல் கொள்கை, பொருளாதாரக் கொள்கை, பொருளாதார கலாச்சார சிந்தனை, சோஷலிஸம் என்னும் எதிர்காலத் தத்துவம், பல வகையான தொழிலாளர் கட்சிகள் திட்டங்கள், பத்திரிகைள், அவ்வப்போது ஆட்சி அதிகாரங்கள் இவ்வாறு தற்காலத்தில் தொழிலாளர் என்பது ஒரு வல்லமை மிக்க சமுதாய சக்தியாக வளர்ந்திருக்கிறது.

மார்க்ஸிஸம் என்றால் என்ன?

உலகின் முதன் முதலாக தொழிலாளர்களின் தத்துவம் உழைக்கும் மக்களின் சித்தாந்தம் என்னும் பெயரில் வெளிப்பட்டது. அதை ஜெர்மனிய அறிஞர்களான காரல் மார்க்சும், பிரடரிக் ஏங்கல்சும் உருவாக்கி வெளியிட்டார்கள். பத்தொன்பதாம் நூற்றாண்டில் மார்க்ஸிசம் ஒரு சக்தி மிக்க சித்தாந்தமாக வெளிப்பட்டது. மார்சிசம் என்றாலே அது வன்முறைகளை நடைமுறையாகக் கொண்ட ஒரு தத்துவம் என்று பலரும் அச்சப்பட்டார்கள்.

மார்சிசத்தைத் தனது அடிப்படை சித்தாந்தமாகக் கொண்டு பல அரசியல் அமைப்புகள் பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் ஐரோப்பாவில் தோன்றின.

காரல் மார்க்ஸ் தானே முன்னின்று தோற்றுவித்த தொழிலாளர்கள், அரசியல் அமைப்பு, முதலில் கம்யூனிஸ்ட் லீக், அடுத்து அனைத்து நாட்டு உழைக்கும் மக்களின் அமைப்பு (...) என்பதாகும். இந்த அமைப்பு முதலாவது அகிலம் என்று தொழிலாளர் இயக்க வரலாற்றில் அழைகக்ப்படுகிறது. இந்த அமைப்புகள் மார்க்ஸ் காலத்திலேயே செயல் இழந்து குறைந்து விட்டன.

காரல் மார்க்ஸ் காலத்திற்குப் பின்னர், ஐரோப்பாவில் வேறு பல தொழிலாளர் தலைவர்களும் சேர்ந்து சற்று சமரசமான முறையில் செயல்படும் கட்சிகளைத் தொடங்கினார்கள்.

அவை சமூக ஜனநாயகக் கட்சிகள் என்னும் பெயரில் மேற்கு ஐரோப்பிய நாடுகளில் தோன்றின. அவையெல்லாம் சேர்ந்து மற்றொரு சர்வதேச அமைப்பை உருவாக்கினார்கள். அந்த அமைப்பு இரண்டாவது அகிலம்

என்று பெயர் பெற்றது. இரண்டாவது அகிலத்தைச் சேர்ந்த கட்சிகளும் மேற்கு ஐரோப்பிய நாடுகளில் பிரபலமான செல்வாக்குமிக்க தொழிலாளர் கட்சிகளாக வளர்ந்தன. அக்கட்சிகளின் தலைவர்கள் அரசியலில் மார்க்சியக் கட்சிகளிலிருந்து வேறு சற்று சமரசமான முறையில் செயல்பட்டனர்.

இந்த இரண்டாவது அகிலத்தின் தொடர்பாக ரஷ்யாவில் 'ரஷ்யன் சோஷியல் டெமக்ராட்டிக் லேபர் பார்ட்டி (ரஷ்ய சமூக ஜனநாயகத் தொழிலாளர் கட்சி) எனறு பெயரில் மக்களிடம் பரலவாகச் செல்வாக்கு பெற்றுப் பரவியிருந்தது. இக்கட்சியின் முக்கியமான கொள்கைகளில் ஒன்று மன்னராட்சி முறையை மாற்றுவது அல்லது மன்னர் மற்றும் நிலப்பரப்புகளின் அதிகாரத்தைக் குறைத்து ஜனநாயக முறையில் மக்களாட்சியைக் கொண்டு வருவது என்பதாகும்.

இவ்வாறு ரஷ்யாவில் செயல்பட்டுக் கொண்டிருந்த ரஷ்ய சமூக ஜனநாயகத் தொழிலாளர் கட்சியில் விளாடிமிர் லெனின் தலைமையில் பலரும் தீவிரமான கருத்துக் கொண்டு செயல்பட்டார்கள். ஜார் மன்னராட்சியை நீக்குவது முற்றிலுமான தொழிலாளர் ஆட்சியை நிறுவுவது என்பது அவர்களுடைய கருத்தாக இருந்தது.

ரஷ்யாவில் 1917 அக்டோபரில் விளாடிமிர் லெனின் தலைமையில் புரட்சி வெடித்தது. இந்தப் புரட்சிக் குழுக்களில் ரஷ்யாவின் தொழிலாளர்கள், விவசாயிகள், ராணுவ வீரர்கள், அங்கம் வகித்து சோவியத் என்னும் பெயரின் எல்லா மட்டங்களிலும் ஆட்சி நிறுவனங்களை அமைத்தார்கள்.

ரஷ்ய சமூக ஜனநாயகத் தொழிலாளர் கட்சியில் கருத்து வேறுபாடுகள் ஏற்பட்டு இரண்டாகப் பிளந்தது. அதில் மெஜாரிட்டி குழுவினர், மைனாரிட்டிக் குழுவினர் என்று பிரிந்தனர். இதில் மெஜாரிட்டி கழுவினர்களின் தலைவராக விளாடிமிர் லெனின் இருந்தார். மெஜாரிட்டி என்றால் பெரும்பான்மையினர், அதற்கு ரஷ்ய மொழியில் போல் ஷிவிக் என்று பெயர். போல் ஷிவிக் என்றால் ரஷ்ய மொழியில் பெரும்பான்மை என்று பெயர். அவர்கள் லெனின் தலைமையில் திரண்டனர். சோவியத்துகளில் அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கு லெனின் தலைமையிலான குழுக்களுக்கும், அப்போது பல பகுதிகளிலும் பலமாக இருந்த சோஷியல் ரெவலூஷகிஸ் என்னும் சமூகப் புரட்சியாளர் குழுககள் செயல்பட்டனர்.

லெனின் தலைமையில் இருந்த போல்ஷிவிக்குகள் பின்னர் தனியாக ரஷ்யக்கம்யூனிஸ்ட் கட்சி என்று பெயரிட்டு, காரல் மார்க்சின் புரட்சிகர சோஷலிஸக் கருத்துக்களின்படி ரஷ்யப்புரட்சி நடத்திச் சென்று வெற்றி பெற்றனர். விளாடிமிர் லெனின் தலைமையில் ரஷ்யக்கம்யூனிஸ்டுகளின் தலைமையில் ஒரு தொழிலாளர், விவசாயிகள் புதிய ஆட்சி ரஷ்யாவில் அமைந்தது. லெனின் தலைமையில் ரஷ்யக்கம்யூனிஸ்ட் கட்சி, புதிய

அமைப்பு விதிகளின் படி அமைந்தது. புரட்சிக் கடமைகளை நிறை வேலைத்திட்டத்தை அமைத்துக் கொண்டு புரட்சியை நிறைவேற்றி புதிய ஆட்சியை அமைத்தார்கள்.

இந்தப் புரட்சிகர அரசு தொழிலாளர் விவசாயிகள் அரசு என்று தன்னை அழைத்துக் கொண்டு பல தீவிரமான திட்டங்களை நிறைவேற்றினார். அவைப்பற்றி ஏற்கனவே குறிப்பிட்டுள்ளோம்.

லெனின் தலைமையில் புதிய வேலைத்திட்டம், புதிய அமைப்பு விதிகள் வகுக்கப்பட்டு, ரஷ்ய கம்யூனிஸ்ட் கட்சி ரஷ்யாவில் ஆட்சி அமைத்தது. ஜார் ஆட்சியின் கீழ் இருந்த இதர பகுதிகளிலும் சோவியத் ஆட்சி விஸ்திரிக்கப்பட்டது. இவ்வாறு 1922 ஆம் ஆண்டில் சோவியத் சோஷலிசக் குடியரசுகளின் ஒன்றியம் ..... என்னும் அமைப்பு ஏற்பட்டது. இதை சோவியத் யூனியன் என்று சுருக்கமாக அழைத்தனர்.

ரஷ்யாவில் சோவியத் ஆட்சி நிறுவப்பட்ட பின்னர் லெனின் தலைமையில் ரஷ்யக் கம்யூனிஸ்ட் கட்சி புனரமைக்கப்பட்டது. ரஷ்யக் கம்யூனிஸ்ட் கட்சி மூலம் இதர ஐரோப்பிய நாடுகளில் இருந்த கம்யூனிஸ்ட் மற்றும் தொழிலாளர் கட்சிகளுடன் தொடர்பு கொண்டு அவைகளை இணைத்து மூன்றாவது கம்யூனிஸ்ட் அகிலம் என்னும் பெயரில் புதிய புரட்சிகரமான கம்யூனிஸ்ட் அகிலம் சர்வதேசத் தொழிலாளர் அரசியல் அமைப்பாக உருவாயிற்று. இந்த அகிலம் மூன்றாவது அகிலம் என்று பிரபலமாயிற்று.

மூன்றாவது கம்யூனிஸ்ட் அகிலத்தின் தலைமையில் ஐரோப்பாவில் இருந்த கம்யூனிஸ்ட் கட்சிகள் பலவும் உருவாக்கப்பட்டது. மூன்றாவது அகிலத்தின் வழி காட்டுதலில் ஐரோப்பாவில் பல நாடுகளிலும் கம்யூனிஸ்டு கட்சிகள் புனரமைக்கப்பட்டு நிறுவப்பட்டன. வட அமெரிக்கா மற்றும் தென் அமெரிக்க நாடுகளிலும் கம்யூனிஸ்ட் கட்சிகள் உருவாயின.

ஆசியாவில், சீனா, வியட்நாம், இந்தோனேஷியாவில் கம்யூனிஸ்ட் கட்சிகள் உருவாயின. இந்தியாவில் 1925 ஆம் ஆண்டில் இந்தியக் கம்யூனிஸ்ட் நிறுவப்பட்டு மூன்றாவது அகிலத்துடன் இணைக்கப்பட்டது.

இந்தியாவில் எடுத்த எடுப்பிலேயே இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி அன்னிய ஆங்கிலேய ஆட்சியினரால் தடை செய்யப்பட்டது. இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் அன்றைய ஆரம்ப கர்த்தாக்கள் மீது ஒரு கடுமை சதி வழக்கைத் தொடுத்தது. அந்த சதி வழக்கிற்கு மீரத் சதி வழங்கு என்று பெயர். மீரத் நகரில் இந்த வழக்கு விசாரணை நடத்தப்பட்டதால் மீரத் சதி வழக்கு பெயர் பெற்றது. இந்த சதி வழக்கு பல ஆண்டுகள் நடந்து அதில் சம்பந்தப்பட்டவர்கள் பல ஆண்டுகள் கடுமையான சிறைத் தண்டனை விதிக்கப்பட்டார்கள். இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி பெயரளவில் தான்

இந்தியாவின் சில பகுதிகளில் அமைப்பாக இருந்தது. அத்துடன் இந்தியாவிலிருந்த பிரிட்டிஷ் ஆட்சி பெயரளவில் இருந்த கம்யூனிஸ்ட் கட்சியையும், கம்யூனிஸ்ட் நடவடிக்கைகளையும் தடை செய்தது. ஆகையால் கம்யூனிஸ்ட் இயக்கம் என்பதும், இந்தியாவில் மிகவும் மெதுவாகத்தான் சென்று கொண்டிருந்தது என்று கூறலாம்.

தொழிலாளர் சங்க அமைப்பு என்பது மேற்கத்திய பாணியில் முதன் முதலில் சென்னையில் சென்னை தொழிலாளர் சங்கம் என்னும் பெயரில் அமைந்தது.

1920 ஆம் ஆண்டில் இந்திய நாட்டில் சென்னை, பம்பாய், கொல்கத்தா, கான்பூர் முதலிய இடங்களில் உருவாகியிருந்த தொழிலாளர் சங்கங்கள் இணைக்கப்பட்ட அகில இந்திய தொழிற்சங்க காங்கிரஸ் என்னும் அமைப்பு உருவாயிற்று. இந்த அகில இந்திய தொழிலாளர் சங்க காங்கிரசில் கம்யூனிஸ்டுகள் பலரும் வேலை செய்து செல்வாக்கு பெற்றார்கள்.

1939 ஆம் ஆண்டில் இரண்டாம் உலகப் போர் தொடங்கியது. அந்த யுத்தத்தை ஏகாதிபத்திய யுத்தம் என்று கூறி இந்திய கம்யூனிஸ்டுகள் யுத்த எதிர்ப்பு நிலை எடுத்தார்கள். 1941 ஆம் ஆண்டில் ஜெர்மன் நாஜி படைகள் சோவியத் யூனியன் மீது படையெடுத்தார்கள். சோவியத் யூனியன் அப்போது நேச நாடுகளின் பக்கம் உறுதியாக நின்று, அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ் முதலிய நாடுகளுடன் சேர்ந்து நேச நாடுகள் அமைப்பாகக் கூட்டணி சேர்ந்து இரண்டாவது உலகப் போரில் பாசிசம் நாஜிஸத்திற்கு எதிராக கடுமையாகப் போரில் குதித்தது.

சோவியத் யூனியன் யுத்தத்தில் ஈடுபட்ட போது, போரில் குணமாற்றம் ஏற்பட்டிருக்கிறது என்று கணித்து இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி போரில் பாசிஸத்திற்கு எதிராக நேச நாடுகளுக்கு ஆதரவாக நிலை எடுத்து, இந்தியாவில் பிரிட்டிஷ் அரசின் யுத்த முயற்சிகளுக்கு ஆதரவு கொடுத்தது.

அப்போது இந்திய கம்யூனிஸ்டுகள் பெரும்பாலும் தேசிய காங்கிரசிற்குள் இருந்து பணியாற்றியிருந்தார்கள். 1942 ஆம் ஆண்டில் யுத்தத்தில் நமது அணுகும் முறைபற்றி கம்யூனிஸ்டுகளுக்கும் காங்கிரஸ் தலைவர்களுக்கும் கருத்து வேறுபாடு ஏற்பட்டது.

1942 ஆம் ஆண்டு தொடக்கத்தில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி மீதிருந்த தடை நீக்கப்பட்டது. 1943 ஆம் ஆண்டு இந்திய கம்யூனிஸ்ட் கட்சியில் முதல் மகாநாடு கூடி புதிய தலைமை அமைப்புகளைத் தேர்ந்தெடுத்து வெளிப்படையான அரசியல் கட்சியாக முதல் முதல் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி என்றும் பெயரில் செயல்படத் தொடங்கியது.

1943 ஆம் ஆண்டில் உலகப் போர் கடுமையாயிற்று. மூன்றாவது அகிலம் முறையாகச் செயல்பட முடியாமல் கலைக்கப்பட்டு விட்டது.

1945 ஆம் ஆண்டில் இரண்டாவது உலகப் போரில் நேச நாடுகள் வெற்றி பெற்றன. நாஜி ஜெர்மனி, பாஸிஸ்ட், இத்தாலி மற்றும் ஜப்பான் சேர்ந்த அச்சு நாடுகள் தோல்வியடைந்தன. மிகப் பெரும் அளவில் முன்று கோடி பேருக்கு மேல் பலிதானம் கொடுத்து சோவியத் யூனியன் வெற்றி பெற்றது. ஜெர்மன் தலைநகரான பெர்லின் வரை சென்று சோவியத் படைகள் வெற்றிக் கொடியை நாட்டியது.

போர் முடிவில் நாஜி படைகலை சோவியத் விரட்டிச் சென்ற கிழக்கு ஐரோப்பியநாடுகளில் குறிப்பாக, போலந்து, செக்கோஸ்லோவேகியா, ஹங்கேரி, பல்கேரியா, ருமேனியா, அல்பேனியா, யுகோஸ்லோவியா முதலிய நாடுகளில் புதிய தொழிலாளர் அரசுகள் நிறுவப்பட்டன.

கிழக்கே, ஜப்பான் போரில் தோற்கடிக்கப்பட்ட பின்னர் சீனாவில் கம்யூனிஸ்ட் படைகள் சீன தேசியப் படைகளுக்கு எதிராக வேக போரியமாக முன்னேறி 1949 ஆம் ஆண்டில் சீன கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமையில் ஆட்சி அமைந்தது. வட கொரியாவிலும் வடக்கு வியட்நாமிலும் கம்யூனிஸ்டுகள் தலைமையில் ஆட்சி அமைந்தது.

வியட்நாமில் தெற்கு வியட்நாமில் அமெரிக்கப் படைகள் தலையிட்டு ஆக்கிரமித்து தலையிட்டு போரை நடத்தியது. வீரமிக்க வியட்நாம் தொடர்ந்து தேச பக்தப் போரை நடத்தி 1972 ஆம் ஆண்டில் அமெரிக்க படைகளை விரட்டியடித்து, தெற்கு வியட்நாமை விடுவித்து வியட்நாமை ஒன்றுபடுத்தி வியட்நாம் முழுவதிலம் கம்யூனிஸ்ட் கட்சி தலைமையில் தொழிலாளர் ஆட்சி நடைபெற்று வருகிறது.

1956 ஆம் ஆண்டில் லத்தின் அமெரிக்க நாடுகளில் ஒன்றான கியூபாவில் கம்யூனிஸ்ட்டுகள் தலைமையில் தொழிலாளர் ஆட்சி நடைபெற்று வருகிறது.

1960 ஆண்டுகளில் உலக அளவில் உலகக் கம்யூனிஸ்ட் இயக்கத்தில் பெரும்பிளவு ஏற்பட்டது. சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமையிலும் சீனக் கம்யூனிஸ்ட் கட்சி தலைமையில் இரு கூறாகக் பிரிந்தது.

1960 ஆம் ஆண்டில் உலகிலுள்ள கம்யூனிஸ்ட் கட்சிகள் 81 தேசங்களிலிருந்து குவிந்து ஒன்று கூடி பெரும் மாநாடு 29 நாட்கள் நடைபெற்றது. அந்த மாநாட்டின் அறிக்கையும் தீர்மானங்களும் அவைகளின் மை உலர்வதற்கு முன்பு வேறுபாடுகள் வெளிப்பட்டு விட்டன. சீனக்கம்யூனிஸ்ட் கட்சி நிலையெடுத்து தனி அறிக்கை விட்டு உலக அமைப்பிலிருந்து வெளியேறிவிட்டது.

இப்போது சோவியத் யூனியன் கலைந்த பின்னர், ஐரோப்பிய நாடுகளில் பல நாடுகளிலும் கம்யூனிஸ்டு கட்சிகளின் கலைக்கப்பட்டு வேறு வேறு

பெயர்களில் தொழிலாளர் கட்சிகள் அமைந்துள்ளன.

ஆசிய நாடுகளில் இந்தோனேஷியாவில் ஒரு காலத்தில் வல்லமை மிகுந்த இந்தோனஷிய கம்யூனிஸ்ட் கட்சி மறைந்து விட்டது. அது போல் மலேசியா, சிங்கப்பூர் பர்மா முதலிய நாடுகளிலும் மற்றும் பாகிஸ்தான் நாட்டிலும் கம்யூனிஸ்ட் கட்சி அழிந்துவிட்டது. ஒரு காலத்தில் வல்லமை மிக்க அரசியல் சக்தியாக பங்களாதேஷ் பகுதி இருந்த கம்யூனிஸ்ட் இயக்கம் மறைந்துவிட்டது, அராபிய நாடுகளில் இஸ்லாமிய தத்துவங்களின் முன்பாக கம்யூனிஸ் தத்துவம் மறைந்துவிட்டது.

1960ஆம் ஆண்டுகளில் உலகம் முழுவதிலும் பல நாடுகளிலும் மார்க்சிய சிந்தனை ஒரு வலுவான சிந்தனைப் பிரிவாக ப் பரவியிருந்தது. மார்சியம் ஒரு பாடப் பொருளாகப் பேசாத பல்கலைகழகம் உலகில் எங்குமில்லை. இன்று அது மறைந்துவிட்டது. இந்தியாவில் இன்று கூடசிலர் தான் ஒரு மார்க்சிய சிந்தனைவாதி என்று பெருமைப்பட்டுக் கொள்கிறார்கள். அவர்களிடம் மார்க்சியமும் இல்லை. சிந்தனையும் இல்லை வெறும் வாய்ப்பேச்சும் வீச்சு மட்டும் உள்ளது.

இன்று மார்க்ஸீய சிந்தனை யென்பது மறைந்துவருகிறது. முன்னாள் சேவியத் யூனியன் நாடுகளிலும், கிழக்கு ஐரோப்பிய நாடுகளிலும் மார்க்சீயம் - லெனினியம் ஒருபாடமாக இருந்தது. அது நீக்கப்பட்டுவிட்டது.

மேற்கு ஐரோப்பிய நாடுகளில் கம்யூனிஸ் கட்சி பலவும் கலைக்கப்பட்டுவிட்டன. வெவ்வேறு பெயர்களில் அங்கு தொழிலாளர் கட்சிகள் செயல்பட்டு வருகின்றன. முன்னாள் கம்யூனிஸ்ட்கள் பலவேறு தொழிலாளர் கட்சிகளில் பணியாற்றி வருகிறார்கள். எஞ்சியுள்ளவர்கள் அங்குமிங்குமாக சிதறிக் கிடக்கிறார்கள். பெயரளவில் சில இடங்களில் கம்யூனிஸ்ட் கட்சிகள் உள்ளன.

காரல் மார்க்ஸின் அடிப்படைத் தத்துவங்கள் இன்று படிப்பாதில்லை - இயக்கவியல் பொருள் முதல்வாதம் ஒரு கருத்து வடிவம் என்னும் முறையில் மறைந்துவிட்டது. வரலாற்றியல் பொருள் முதல்வாதம் என்னும் கருத்தும் நடைமுறையில் இல்லை. அந்தந்த நாடுகளில் அம்வைகளின் இயல்புக்கேற்றவாறு மாற்றங்கள் கொண்டு செயல்படுகின்றன. உதாரணமாக அரசுபற்றி: . அரசாங்கம் என்பது ஒரு வர்க்கம் மற்றொருவர்க்கத்தை அடக்கியாளும் வன்முறைக்கருவி என்று கூறுகிறது மார்க்சிஸம் - லெனினிஸம். ஆனால், இன்று அரசுகள் என்பது வேறு வேறு கணங்களைப் பெற்று மக்கள் அதிகமாகத் தலையிடும் அல்லது பங்கேற்கும் அரசு அங்கங்களாக மாறிவருகின்றன.

காரல்மார்க்ஸின் வர்க்கப் போராட்ட தத்துவம் பத்தொன்பதாம் நூற்றாண்டோடு மங்கிவிட்டது. இருபதாம் நூற்றாண்டில் வரலாற்றில்

மூழ்கிவிட்டது.

தொழில் மற்றும் பொருளாதார வளர்ச்சியில் உபரி மதிப்பு என்பது இப்போது இல்லை உற்பத்தி மதிப்பெல்லாம் மொத்தப் புள்ளிவிவரங்களில் மங்கி விட்டது. பொதுத்துறைகள் பலவும் பொதுப் பொளுளாதாரத்தில் கலந்து விட்டது. தனியார் தொழில்களும் அவைகளின் லாபப்பங்கீடுகள் பொதுப் பொருளர்தாரத்திலும் லாபப்பங்கீடுகளிலும் கலந்துவிட்டது. சில மிச்ச சொச்சங்களில் ஆங்காங்கு வேண்டுமானால் வெளிப்படலாம் அவையும் பொதுப்பொருளாதாரத்தில் மூழ்கி மங்கி வருகின்றன.

உலக மயமாக்கல், உலகவர்த்தகம் ஆகிய புதிய வடிவங்கள் தோன்றியிருக்கின்றன. அவைகளில் சில வளர்ச்சியடைந்த நாடுகள் ஆதிக்கம் செலுத்துவதற்கு முயற்சி எடுக்கின்றன. அவைகளைக் கண்டு பயந்து அந்த அமைப்புகளிலிருந்து விலகுவதைக் காட்டிலும் உள்ளிருந்து போராடி ஆதிக்கசக்திகளை முறியடிப்பது என்னும் கருத்தும் வலுப் பெற்று வருகிறது.

உலகப் பொருளாதாரத்தில் இந்தியா, சீனா, ரஷ்யா மற்றும் ஆசிய நாடுகள் அதிகமான அளவில் பங்குகொள்வது அதிகரிக்கத் தொடங்கியிருக்கிறது.

வளர்ச்சியடைந்த நாடுகளுக்கிடையில் ஏற்படும் முரண்பாடுகளைத் தீர்த்துக் கொள்வதற்கு மோதல் கொள்கைகளைக் காட்டிலும் இணக்கமான சமரஸக் கொள்கைகளையே கடைப்பிடிக்க விரும்புகின்றன. கடைப்பிடிக்க விரும்புகின்றன. சமாதானமான முறைகளில் முன்னேறவே பெரும் பாலான நாடுகள் முயலுகின்றன.

அமெரிக்கா, பிரிட்டன் ஆகிய நாடுகளின் ஆதிக்கத்திற்கு எதிராக ஜெர்மனியும் ஜப்பானும் சமநிலைப் படுத்துவதற்கும் முயலுகின்றன. அமெரிக்கா, பிரிட்டனில், பிரிட்டன் பழைய ஆதிக்க நிலை வீழ்ச்சி யடைந்து பலவிஷயங்களிலும் இதர நாடுகளுடன் சமரஸம் செய்து கொள்ள விரும்புகிறது. அமெரிக்கப் பொருளாதாரம் பெரும் சிக்கலில் மாட்டிக் கொண்டிருக்கிறது. அதன் பொருளாதாரம் ஆயுத உற்பத்தி விற்பனையை ஆதாராமாகக் கொண்டிருக்கிறது. இந்த நிலை அதிக நாள் ஓடாது. நுகர் பொருள் சந்தையில் ஜெர்மனி ஜப்பான் ஆதிக்கம் அதிகரித்துவருகிறது. பிரிட்டன் தனது பழமை நிலையிலிருந்து மீள முடியவில்லை.

இந்தியாவும் சீனாவும் உலகப் பொருளாதாரத்தில் தங்கள் பங்கை அதிகரித்துவருகிறது. அந்நாடுகளின் நிலை உலக அளவில் உயர்ந்து வருகிறது. இந்தநாடுகளின் பொருளாதாரத்தை உறுதிப்படுத்துவதில் தொழிலாளர்களின் பங்கு அதிகரித்து வருகிறது தொழிலாளர் நலன்களின் சிந்தனை அதிகரித்து வருகிறது.

இன்றைய உலகப் பொருளாதாரத்தில் விவசாய உற்பத்தி, விவசாய உற்பத்தியையும் உற்பத்தித் திறனையும் அதிகரித்தல், நிலம் நீர்ப்பாசனம்

நிலத்தின் சாரத்தைப் பாதுகாத்தல் அதை உயர்த்துதல், விவசாய உற்பத்திப் பொருள்களின் விலைவர்த்தகம், விவசாயப் பொருளாதாரத்தை சீரமைத்தல், உணவுப் பிரச்சினை, உலகமக்களின் பசியைப் பட்டினியைப் போக்குதல், அதை நிறைவேற்றும் வகையில் விவசாயக் கொள்கையை சீரமைத்தல் ஆகியவை முக்கிய இடம் பெறுகின்றன.

''வயிற்றுக்குச் சோறிட வேண்டும்

இங்குவாழும் மனிதருக்கெல்லா

தனியொருவனுக்கு உணவில்லை

யெனில் ஜகத்தினை அழித்திடுவோம்.''

என்னும் மகாகவிபாரதியின் வாக்குகள் நிறைவேற்றப்பட வேண்டும்

தொழிலாளர்:

தொழிலாளர் என்னும் தலைப்பில் மகாகவிபாரதியார் கூறும் சொற்களைக் காண்போம். அவர் தனது காலத்தில் இருந்த கருத்துக்களை கவனத்திலும் கொண்டு அவர் சிறப்பான பல கருத்துக்களையும் எடுத்துக் கூறியுள்ளார்.

தொழிலுக்கும் செல்வத்துக்கு முள்ள சம்பந்தம்.

கைத்தொழிலாலே செல்வம் விளைகிறது. அறிவுத் தொழிலால் அது சேகரிக்கப்படுகிறது. கைத்தொழில் செல்வத்தை ஏற்படுத்துகிறது. அறிவுத்தொழில் கைத்தொழிலை நடத்துகிறது'' என்று மகாகவிபாரதியார் குறிப்பிடுகிறார். ''புத்தியில்லாத மூடர்கள் சக்கரவர்த்திகளாகவும் ராஜாக்களாகவும் பெரிய நிலஸ்வான்களாகவும் முதலாளிகளாகவும் இருந்து பெருஞ்செல் வங்களைக் கையாளுதல் காண்கிறோம். எனவே, அறிவுத் திறமையாலும் அறிவு முயற்சியாலும் பெருஞ்செல்வம் திரட்டப்படுகிற தென்று சொல்லுதல் எங்ஙனம் பொருந்தும்? என்று கேட்டீர்களாயின் அதற்கு உத்தரம் சொல்லுகிறேன்.'' என்று மகாகவி குறிப்பிடுகிறார்.

''பல இடங்களில் இப்போது மூடர்களிடம் செல்வமிருப்பது காண்கிறோமாயினும் இவர்களுக்கு இந்தச் செல்வம் ஏற்படுத்திக் கொடுக்க இவர்களுடைய முன்னோர்களில் அநேகர் அல்லது ஒரு வராயினும் மிகுந்த புக்திசாலியும் அந்தப் புத்தியைக் கொண்டு சோம்பலின்றி விடாமுயற்சியுடன் உழைப்பவனாகவும் இருந்திருக்க வேண்டும். புத்தி மாத்திரம் இருந்தால் போதாது அதைக் கொண்டு சோம்பல் இல்லாமல் விடாமுயற்சியுடன் உழைக்கவும் வேண்டும். அப்போது தான் செல்வம் சேர இட முண்டாகும். ''வெறுமேயிருக பலத்தால் ராஜாக்கள் ஸைந்யங்களின் மிகுதி காரணமாகப் பிறநாடுகளைக் கொள்ளையிட்டு அளவிறந்த பூமியும் செல்வங்களும் சேர்த்ததாகச் சரித்திரங்களில் படித்திருக்கிறோமே, அப்படியிருக்கையில்

புத்தி நுட்பத்தால் செல்வம் சேர்வதாகச் சொல்லுதல் தகுமோ?'' என்று கேட்டீர்களானால் அதற்கு விடை கூறுகிறேன். யுத்தம் மிருகத் தொழிலாக இருந்த போதிலும் நல்லோர்களால் எவ்வகையாலும் வெறுக்கத்தக்க இழி தொழிலாக இருந்தாலும் அதற்கு மிருகபலம் மாத்திரம் இருந்தால் போதும் என்று நினைப்பது தவறு - யுத்த சாஸ்திரம் என்பது ஒருபெரிய சாஸ்திரம் அதில் மிருகபலம் கருவி; அறிவு கர்த்தா. சாதாரணக் கொள்ளைக் கூட்டங்களிலே கூடத்தலைவனாக இருப்பவன் சிறந்த புத்திநுட்பமுடையவனாக இருத்தல் இன்றியமையாதது. எத்தனையோ விதமான அறிவுப் பயிற்சிகள் ஆதி காலமுதலாகவே யுத்தத்திற்கு அவசியமாக ஏற்பட்டிருக்கின்றன. அதிலும் தற்கால யுத்தங்களோ பலபலதுறைகளில் மிகச் சிறந்த அறிவுத் தேர்ச்சி கொண்ட பண்டிதர்களாலே நடத்தப்படுகின்றன.

வியாபாரம், கைத்தொழில் முதலிய சமாதான நெறிகளில் செல்வம் சேர்ப்பதற்கு மிக உயர்ந்த புத்தி நுட்பம் எக்காலத்திலும் இன்றியமையாததாக நிகழ்ந்து வந்திருக்கிறது. இக்காலத்தில் இவை புத்தித் திறமையில்லாமல் போனால் ஒரு க்ஷணம் கூடத்தரித்து நிற்க மாட்டா.

இந்தச் செய்தியை உணர்ந்தே ஆதிகாலமுதல் அறிவுப் பயிற்சியுடைய வகுப்பினர் கைத்தொழிலாளிகளுக்குக் கல்வி ஏற்படாத படியாக வேலை செய்து கொண்டுவந்திருக்கிறார்கள். ''எழுத்துத் தெரிந்த சூத்திரனை மிகவும் தொலைவில் விளக்கி விட வேண்டும்'' என்ற விநோத விதியொன்று மஜஸ்மிருதியிலே காணப்படுகிறது. நம்முடைய தேசத்தில் மட்டுமேயன்று. உலகம் முழுமையிலும் எல்லா நாடுகளிலும் கைத்தொழிலாளருக்குக் கல்விப் பயிற்சி உண்டாகாத வண்ணமாகவே ஜனக்கட்டுகள் நடை பெற்று வந்திருக்கின்றன.

ஆனால், இந்த சூழ்ச்சியை மீறி எல்லாநாடுகளிலும் முக்கியமாக நமது பாரத தேசத்தில் கைத்தொழில் புரியும் கூட்டங்களைச் சேர்ந்தோரில் பற்பலர் கல்வித் தேர்ச்சியடைந்து வந்திருக்கிறார்கள். ஆனால், இங்ஙனம் கல்விப் பயிற்சி வாய்ந்தோர் பெரும்பாலும் தம்முடைய பரம்பரைத் தொழில்களில் இறங்காமல் சுத்த இலக்கியப் பயிற்சியிலேயே வாழ்நாள் கழிப்பாராயினர்.

எனினும் சென்ற ஓரிரண்டு நூற்றாண்டுக்குள்ளே ஐரோப்பா எல்லா வகுப்பினருக்கும் கல்வி பயிற்றும் முறைமை தொடங்கி வந்திருக்கிறது. இந்த சர்வ ஜனக்கல்வி யென்னும் கொள்கை ஐரோப்பாவிலிருந்து உலகத்தின் பிற பகுதிகளிலும் தாவி விட்டது. இக்கொள்கையை நமது நாட்டில் நறைவேற்றிவிட வேண்டுமென்று பல புண்ணியவான்கள் பெருமுயற்சி செய்து வருகிறார்கள். இங்ஙனம் எல்லா வகுப்புகளையும் சேர்ந்த எல்லா மனிதரிடையேயும் கல்வியும் அதன் விலைவுகளாகிய பலவகைப் பட்ட அறிவுப்பயிற்சிகளும் பரவி விடுமானால் அதனின்றும் கைத்தொழிலாளிகள்

கல்விப் பயனைக் காவியங்கள் இயற்றுவதிலும் படிப்பதிலும் மாத்திரமே செலவிடும் வழக்கம் மாறிப்போய் அவரவர் தத்தம்க் குரிய தொழில்களிலும் கல்வியறிவை பயன்படுத்தத் தொடங்குவார்கள். இதினின்றும் இதுவரை உலகத்தில் கைத் தொழிலாளர்கள் பரம ஏழைகளாக இருந்து வரும் நிலைமை நீங்கி மேன்மேலும், கைத் தொழிலாளருக்குள்ளே செல்வம் வளர்ச்சி பெற்றுவர ஏதுவுண்டாகும்.

இப்போது நமது நாட்டில் அங்கங்கே பல தொழிற்சங்கங்கள் ஸ்தாபனம் செய்யப்பட்டு வருகின்றன. இச்சங்கத்தார்கள் சம்பள ஏற்றத்துக்கும் வேலை நேரத்தைக் குறைப்பதற்கும் வேண்டிய எத்தனங்கள் பல செய்து கொண்டுவருகிறார்கள். இந்தப் பிரயத் தனங்களெல்லாம் முற்றிலும் நியாயமே இதில் ஐயமில்லை.

ஆனால், இச்சங்கத்தார்கள் மேற்கூறிய வழிகளிலே முயற்சி செய்வதுடன் தமது காரியங்களை நிறுத்தி விடாமல் அங்கங்கே பள்ளிக் கூடங்கள் ஆயிரக் கணக்காக ஏற்படுத்தி அவற்றில் நம்முடைய மக்களுக்கு நிறைந்த கல்வியூட்டுவதற்குரிய முயற்சிகள் செய்ய வேண்டும். மேலும், பகற்பள்ளிக் கூடங்கள் மாத்திர மேயன்றி இராப்பள்ளிக்கூடங்களும் ஏற்படுத்தி பிராயத்தினரும் சென்று படிப்பதற்குரிய காரியங்களை நடத்த வேண்டும்.

அறிவே வலிமை, கல்வியே செல்வத்தின் தாய், ஸரஸ்வதியும் லக்ஷ்மியும் மாமியும் மருமகளும் போல்வர் என்னும் கல்வியுள்ள இடத்தில் செல்வமும் செல்வமுள்ள இடத்தில் கல்வியும் ஏற்படுதல் மிகவும் அரிது என்றும் நமது நாட்டில் பரம மூடத்தனமான கொள்கையொன்று பரவிநிற்கிறது.

வெறுமே வர்ணனைகளும் கற்பனைகளும் சமைத்து யாருக்கும் எளிதில் புலப்படாத வலிய நடையில் காவியங்கள் எழுதுவதிலே படித்த படிப்பையெல்லாம் செலவிடுவோருக்கு அதிகச் செல்வம் சேரமார்க்கமில்லை என்பது ப்ரத்யக்ஷம் இந்த அனுபவத்தை ஆதாரமாகக் கொண்டே மேற்படி கொள்கை ஆதிகாலத்தில் உற்பத்தியாயிற்று. ஆனால், அது இக்காலத்துக்குப் பொருந்தாது. காவியங்களைக்கூட எளிய நடையில் எழுதினால் அச்சுத் தொழிலும் பொது ஜனக்கல்வியும் பரவிவரும் இக்காலத்தில் ஆசிரியர்களுக்கும் ஏராளமானலாபம் கிடைக்கும். காவியங்கள் எழுது வதற்கு மாத்திரம் படிக்காமல் பலவகை வியாபாரங்களுக்கும் தொழில்களுக்கும் வேண்டிய படிப்புகள் படித்து அவற்றை ஊக்கத்துடன் கையாளுவோருக்கு மேன் மேலும் செல்வம் பெருகும் ஆதலால் தொழிலாளிகளே கல்விப் பயிற்சி செய்யுங்கள். உங்களுக்கும் உங்கள் மக்களுக்கும் கல்வியறிவு மிகுவதற்குள்ள வழி செய்யுங்கள்.

தொழிலாளருக்கு சில வார்த்தைகள்.

இத்தலைப்பில் மகாகவி பாரதியார் கீழ்க்கண்டவாறு எழுதுகிறார்.

''தொழிலாளர்கள் என் போர் சரீரத்தால் உழைத்து வேலை செய்கிறவர்களே என்று சிலருக்கு எண்ணமிருக்கலாம். அது தப்பு, சரீரத்தாலாகட்டும், புத்தியாலாகட்டும் முதலாளிக்குட்பட்டு வேலை செய்கிறவர்கள் எல்லாருமே தொழிலாளர்கள் என்று அந்த வியாசம் எழுதியவர் சொல்லுகிறார். இது நம்முடைய தேசதிதார் முக்கியமாகக் கவனிக்கவேண்டிய விஷயம். ஏனெனில் நம்மவருடையமனதில் இந்த விஷயம் பதிவுபெறுதல் மிகவும் சிரமம்.

குமாஸ்தாக்கள், உபாத்தியாயர்கள் முதலியவர்களும் தொழிலாளிகளே என்று இந்த வியாசம் எழுதியவர் சொல்லுகிறார். எனவே என்போன்ற நூலாசிரியர்களும் தொழிலாளிகளே முதலாளி கூட இன்றியமித்தல், வேலையை மேற்பார்த்தல், வியாபாரசம்மந்தமானகணக்குகளைகவனித்தல் முதலிய செய்கைகளால் தொழிலாளி ஆகிறான்.

''முதலாளி தொழிலாளி என்னும் இந்தக்கஷி பேதமே நமது நாட்டுக்குப் புதிது. நூலாசிரியரும் வீதி பெருக்குவோரும் ஓரினமாகச் சேர்ந்து வைசியருக்கு விரோதமாகப் போராடுதல் நமது தேசத்தில் நேற்றுவரை நினைக்கொணாதோர் செய்தியாக இருந்தது. இன்று சாத்தியமாகி விட்டது. இது ஐரோப்பிய தொழில் முறைமைகளும் கொள்கைகளும் நம்முடைய தேசத்தில் பரவுவதால் ஏற்படும் இன்றியமையாத விளைவாகும்.

நம்முடைய தேசத்தில் நெடுங்காலமாக நடைபெற்றுவரும் அனுஷ்டானப்படி நூலாசிரியரும் உபாத்தியாயரும் தலைமைவர்ணம். அரசர் அதற்கடுத்தபடி, முதலாளிகள் எனப்படும் வைசியர் மூன்றாம் ஜாதி சரீரபலத்தால் மாத்திரமே செய்வதற்குரிய தொழில்களைச் செய்வோர் நான்காம் வர்ணம் மற்ற தேசங்களில் நமது நாட்டைப் போல இந்த வகுப்புக்குக் குறிப்பிட்ட நாமங்களும் விதிகளும் இல்லை, யெனினும் உலகம் முழுமையிலும் ஒருவாறு இந்த ''சதுர்வர்ணம்'' (அதாவது நான்கு வர்ணங்களென்றவகுப்பு) நெடுங்காலமாக நடைபெற்றுக் கொண்டுவந்திருக்கிறது. சில இடங்களில் மாத்திரம் குருக்களைக் காட்டிலும் அரசர் உயர்ந்த வகுப்பினராகக் கருதப்பட்டனர். சில நாடுகளில் அரசரே குருக்களாகவும் இருந்தனர். மற்றபடி உலகம் முழுமையிலும் குருக்களும் சாஸ்திரிகளும் தலைமைப்பகுதியாகவும் அரசர் வணிகர் கைத்தொழில் செய்வோர் என்பார் முறையே தனித்தபகுதிகளாகவுமே கருதப்பட்டு வந்தனர்.

ஆனால், சென்ற இரண்டு நூற்றாண்டுகளாக ஐரோப்பாவில் ஸகலஜனங்களும் சமானமென்றும் ஆதலால் பிறப்புப்பற்றியேனும் உடைமை பற்றியேனும் தொழில் பற்றி யேனும் மனிதருக்குள்ளே எவ்வித மேன்மை தாழ்வுகளேனும் உணவு உடை முதலிய அவசியப் பொருள்களின்

அனுபவத்தில் வேற்றுமைகளேனும் பாராட்டக் கூடாதென்றும் ஒரு புதிய கொள்கைதலைப்பட்டு நடந்துவருகிறது. சென்ற சிலவருஷங்களாக இக்கொள்கை அந்தக் கண்டத்தில் மிகவும் வலிமையுடையதாகி விட்டது. ஆரம்பமுதலாகவே இக்கொள்கை ஐரோப்பாவில் தொழிலாளருக்குள்ளே அதிகம் செல்வாக்குப் பெற்றுவந்தது.

நூலாசிரியர்களும் உபாத்தியாயர்களும் மாஸம் 1000 (ஆயிரம்) ரூபாய் வாங்கும் குமாஸ்தாக்களும், மாஸம் 2000 ரூபாய் ஸம்பாதிக்கும் பத்திராதிபர்களும் இவர்களைப் போன்ற பிறரும் தொழிலாளிகளுடன் சேர்ந்து கணக்கிடுவதற்குரியவரென்ற கொள்கை ஐரோப்பாவிலேயே ஆரம்பமுதல் கிடையாது. இது சமீபகாலத்திலே நேர்ந்த தொரு புதிய கொள்கை - ஆதியில் தொழிலாளரின் கிளர்ச்சி ஐரோப்பாவில் வேரூன்றியது முக்கியமாக யந்திர சாலைகளின் ஸ்தாபனத்தினாலேயாம் அதற்கு முன்னர் அங்குள்ள தொழிலாளர் பெரும்பாலும் ஜமீன்தாரர்களிடமும் எண்ணற்ற சிறு சிறு தொழிற் கூடங்கள் வைத்து வேலை செய்த தொழிலாளரிடமும் சிறு சிறு முதலாளிகளிடமுமே வேலை செய்து கொண்டிருந்தார்கள். தத்தம் வீட்டிலேயே தறி முதலியன வைத்து தாமே முதலாளிகளாகவும் தொழிலாளியாகவும் வேலை செய்தோர் பலர். இப்படியிருக்கையில் துணி நெய்யவும் இரும்பு தறிக்கவும், மரம் அறுக்கவும் எண்ணெயாட்டவும் பாத்திரங்கள் செய்யவும் முக்கியமான தொழில்களுக்கெல்லாம் யந்திரங்கள் ஏற்பட்டன. அதாவது மனித சக்தியால் செய்து கொண்டு வந்த காரியங்கள் நீராவியின் சக்தியாலும் மின்சார சக்தியாலும் செய்யப்படலாயின. நீராவியும் மின்சாரமுமோ அபார வலிமை கொண்ட பூத சக்திகள் அவற்றின் திறமைக்கு வரம்பே கிடையாது ஆயிரம் மனிதர் சேர்ந்து ஆயிரம் நாட்களிலே செய்வதற்குரிய தொழிலை இந்த இயந்திரங்கள் ஒரு தினத்தில் செய்து முடிக்கத் தொடங்கின. எனவே, பெருஞ்செல்வமுடையோர் தம்முன்னே கூட்டுகள் கூட்டிக் கொண்டுயந்திரங்கள் ஏராளமாகத்தயார் செய்து அவற்றின் மூலமாக நெசவு முதலிய தொழில்களைச் செய்யத்தலைப்பட்டனர். இதனால் ஏக காலத்தில் பதினாயிரம் லக்ஷக்கணக்கானதொழிலாளருக்குத் தொழிலில்லாமற்போய்ப்பட்டினி கிடக்க நேர்ந்தது. இதுதான் ஐரோப்பாவிலே தொழிலாளர் கக்ஷி வேரூன்றிப் பலப்படதி தொடங்கிய தன் காரணமாயிற்று.

அதற்கு முன்பு தனித்தனி ஜமீன்தாரர்களிடத்திலும் சிறு சிறு முதலாளிகளிடத்திலும் வேலை செய்த தொழிலாளிகள் தத்தமக்கு நேரும் குறைகளைத்தத்தம் இடத்துக்கும் ஸ்திதிக்கும் தக்கபடி கெஞ்சியும், முணுமுணுத்தும் சில சமயங்களில் சிறு கலகங்கள் நடத்தியம் தீர்த்துக் கொண்டார்கள். 19ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலே தான். எந்திரங்கள் சக்தியால் தொழில் செய்யும் முறைமை மிகுதியுள்ளது. அப்போதுதான் அங்குள்ள தொழிலாளிகள் முதலாளிகளுக்கெதிராகக் கிளர்ச்சி நடத்தும்

வழக்கத்தைக் கைக்கொள்ளலாயினர். நாட்பட நாட்பட யந்திரங்களில் உற்பத்தி செய்யப்பட்ட துணி முதலிய இதரகண்டத்து ஜனங்களிடையே அதிகமாக விற்கப்படலாயயிடின. இங்கிலாந்து முதலிய தேசத்தார் தம் நாடுகளுக்கு வேண்டிய துணிகள் முதலியன வேயன்றி உலக முழுமையிலும் கொண்டுவிற்க வேண்டுமென்ற நோக்கத்துடனும் தாம் புதிதாய்க் கண்டு பிடித்த பூத சக்திகளாகிய நீராவியையும் மின்சாரத்தையும் கொண்டுவேலை செய்வாராயினர். இதனால் உலகத்துச் செல்வம் மென் மேலும் ஐரோப்பாவிற்குச் செல்ல இடமுண்டாயிற்று. அதனின்றும் ஆரம்பத்திலே பல தொழிலாளிகள் வேலையிழந்து அங்குப் பட்டினி கடக்க நேர்ந்த துன்பத்துக்குத் தக்க நிவாரண முண்டாய் அந்த நிவர்த்தி மேன் மேலும் மிகுதிப்பட்டுவந்தது.

அதற்குமுன் இருந்த ஜன சமூக வரம்புகளும் நியதிகளும் சிதறிப்போய் விட்டனவே யெனினும் பெரும்பாலும் தொழிற்கூட்டத்தாருக்கு வேலை கிடைத்துவிட்டது. ஆசியாவிலும் பிற கண்டங்களிலும் லட்சம் கோடிக் கணக்கான ஜனங்களுக்கு ஐரோப்பிய துணி முதலியன ஏற்றுமதியாகத் தலைப்பட்டதினின்றும் ஐரோப்பிய தொழிற் கூட்டத்தாரிடையே தொழிலற்றவராய் வருந்திய ஜனங்களின் தொகை மென்மேலும், குறையலாயிற்று எனினும் தொழிலாளிகளுக்கும் முதலாளிகளுக்குமிடையே ஏற்பட்ட, கக்ஷி. பேதங்கள் தீரவில்லை. அவை மிகுதிப்பட்டுக்கொண்டேவந்தன. இதற்குக் காரணம் அங்கு தொழிலாளர்களுக்கு குள்ளே சங்கசக்தி அபாரமாக அதிகப்பட்டுவிட்டது. ஒவ்வொரு இலையிலும் பதினாயிரம் லட்சக்கணக்கான தொழிலாளிகள் வேலை செய்தனர் இவர்களுக்குள்ளே பலர் கல்வி கற்றோர் ஆயினர்.

இதனிடையே மேற்கூறப்பட்ட மைத்துவக்கொள்கை அதாவது குற்றங்களுக்குத் தண்டனை விதப்பதில் செல்வருக்கும் எளியோருக்கும், மேல் குலத்தாருக்கும் கீழ்க்குலத்தாருக்கும் சட்டம் சமானமாக வேலை செய்ய வேண்டுமென்றும் உணவு முதலிய சௌகர்யங்களிலும் லௌகீக மரியாதைகளிலும் மானிடருக்குள்ளே எக்காரணம் பற்றியேனும் யாது ஒரு வேற்றுமையும் நடைபெறக்கூடாதென்றும் உலகத்தில் எல்லாமனிதரும் எல்லாவகைகளிலும் சமானமான வரென்றும் பிரான்ஸ்தேசத்தில் பதினெட்டாம் நூற்றாண்டில் எழுச்சிபெற்று நாட்பட நாட்பட ஐரோப்பா முழுவதிலும் வியாபித்துக் கொண்டுவந்ததொருகொள்கை தொழிலாளரிடையே மிகுதியாகப் பரவலாயிற்று. அதன்மேல் இத்தொழிலாளர், ''நாம் பாடுபட்டு உற்பத்திசெய்யும் பொருள்களைவிற்று இந்த முதலாளிகள் இத்தனை பணம் சம்பாதிக்கிறார்கள், நாமோ பெரும்பாலும் குடியிருக்கக் குடிசைகளும் சாக்கடைகளும் தின்பதற்குப் பழைய ரொட்டிகளும் பழைய மீனுமாக வாழ்ந்து வருகிறோம். இவர்கள் மாளிகைகளில் வாழ்ந்து குபேர சமிபத்தை அனுபவிக்கிறார்கள். இது

சமத்துவக் கொள்கைக்கு முற்றிலும் விரோதமானது. இவர்கள் முதல் போட்டார்களேயெனின் நாம் பாடுபட்டோம். எல்லோருக்கும் லாபம் ஸமானமாகவே இருக்க வேண்டும்'' என்று விரும்பலாயினர். எனினும் திடீரென்று சம்பாகம் கட்கத்துணியாமலும் அதனைப்பெறுதல் சாத்தியமில்லை யென்று நிச்சயமாகத் தெரிந்தபடியாலும் சிறிது சிறிதாக்க் கூலி உயர்வுக்குக் கலகம் பண்ணிக் கொண்டுவந்தார்கள்.

வாஸத்திற்கு ஸௌகர்யமான வீடுகள் கட்டிக் கொடுக்க வேண்டுமென்றார்கள். தொழிலாளிகள் கிழவரான இடத்திலும் நோயாளியான இடத்திலும் இனாம் சம்பளம் கொடுக்க வேண்டுமென்றார்கள் தங்களுக்கு தம்முடைய மக்களுக்கும் படிப்பு சொல்லிவைப்பதற்குரிய சாதனங்கள் செய்ய வேண்டும்மென்றார்கள். படிப்படியாக இவ்வேண்டுதல்களை முதலாளிகள் தெரிந்துகொண்டே வந்திருக்கிறார்கள். எனினும் இத்தகைய போராட்டங்களில் இன்று வரை தொழிலாளிகளே வெற்றியடைந்து கொண்டுவருகிறார்கள். இதற்குரிய காரணங்கள் பல, இவற்றைக் குறித்துப் பிந்திய பகுதிகளில் விஸ்தாரமாக எழுதுகிறேன்'' என்று மகாகவி பாரதி எழுதுகிறார்.

தொழிலாளர் பெருமை:

ஐரோப்பிய நாடுகளில் தொழிலாளிகளுக்கும் முதலாளிகளுக்கும் இடையே ஏற்பட்ட வேற்றுமைகள் இப்போது மிகவும் முற்றிப்போய்விட்டன. இந்நிலையில் அவ்விரண்டு கக்ஷியாருக்குமுள்ள மனஸ்தாபங்களை யெல்லாம் தீர்த்து அவர்களில் ஓர் திறத்தாரால் மற்றொரு திறத்தாருக்கு விளையும் பரஸ்பரமான கஷ்ட நஷ்டங்களைப் போக்கி அவர்களுக்குள்ளே சமாதானமும் ஒற்றுமையுணர்வும் ஏற்படுத்துதல் மிகவும் சிரமமான காரியம், இஃது வெறுமே சாதாரண மனித யத்தனத்தால் நிறைவேறக்கூடியதாகத் தோன்றவில்லை. உலகத்தில் இதுவரையில்லாத புதிய தெய்வீக சக்திகள் கொண்ட அவதார புரிஷர்கள் தோன்றினால் அவர்களே ஐரோப்பாவில் முண்டிருக்கும் இந்தப் பெரிய விபத்துக்கு ஸமாதான வழிகளிலே நிவர்த்தி செய்யக்கூடும்.

''சென்ற இரண்டு நூற்றாண்டுகளில் ஐரோப்பியத் தொழிலாளர் சிறிது சிறதாக சம்பாதித்துக் கொண்டு வந்திருக்கும் உரிமைகளுடனே அவர்கள் தருப்தி கொண்டிருக்க வேண்டும். இதுவரை அவர்களுக்குக் கிடைத்திருக்கும் உரிமைகளேமிகவும் அதிகம். இவற்றைக் கூட இன்னும் குறைத்தால் நல்லது. இப்படியிருக்க தொழிலாளர் இன்னும் அதிகமான உரிமைகள் கேட்பதற்கு நாம் கொஞ்சமேனும் உதவி சாய்க்கக் கூடாது.'' என்று பெரும்பாலான முதலாளிகள் நினைக்கிறார்கள். தொழிலாளரோ அங்குராஜாங்க அதிகாரத்தைத் தமது வசமாகச் செய்து கொண்டாலன்றி அதாவது, தங்கள் இஷ்டப்படி சட்டம் போட்டு முதலாளிகளினுடைய பணத்தைத் தங்கள்

இஷ்டப்படி வினியோகிக்கக் கூடிய நிலைமை ஏற்பட்டாலன்றி தங்களுக்கு முதலாளிகளிடமிருந்து நியாயம் கிடைக்க இடமில்லை என்று நினைக்கிறார்கள்.

''எனவே இங்கிலாந்து முதலிய தேசங்களிலுள்ள தொழிலாளிகள் பார்லிமென்ட் சபையில் தாம் ஆதிக்கம் பெற்று அதன் மூலமாக தம்முடைய கட்சியாரே மந்திரிகளாகும் படியான நிலைமையை ஏற்பாடுசெய்து கொண்டு இவ்வழியாலே ராஜயாதி காரதிதையும் தம்முடையவதாகச் செய்து கொள்ளும்படி மும்முரமான முயற்சிகள் செய்துவருகின்றனர். ஆனால், மேற்படி தேசங்களில் ராஜ்யாதிகாரம் இப்போது பெரும்பாலும் முதலாளிகளுக்குச் சார்பாக இருப்பதால் இந்த முதலாளிகள் தம்மால் இயன்ற வழிகளிலெல்லாம் தொழிலாளிகளைத் தலைதூக்க வொட்டாமல் அழுத்திவிட முயற்சி செய்து வருகிறார்கள். இதனால், அவ்விரு திறத்தாருக்குள்ளே சமாதான மும்சிநேகிதத்தின் மையும் ஏற்படுவதற்கு வழியில்லாமல் நாளுக்கு நாள் மனஸ்தாபங்களும் அவ நம்பிக்கையும் வயிற்றெரிச்சல்களும் மிகுதிப்பட்டுக் கொண்டுதான் வருகின்றன.

இந்தியாவில் இந்த விபரீதமான நிலைமை ஏற்பட வேண்டுமென்பது நம்முடைய விருப்பமன்று ஐரோப்பாவில் ஆரம்ப முதலாகவே தொழிலாளரும் முதலாளிகளும் தொழிலின் பெருமையையும் அவசியத்தின் மையையும் நன்கு க்ருதியிருப்பார்களாயின் இப்போது அங்கே இவ்வளவு பயங்கரமான நிலைமை ஏற்பட்டிராது. எனவே இந்தியாவில் முதல் முதலாகத் தொழிலாளர்கிளர்ச்சி தொன்றியிருக்கும் இந்த சமயத்திலே நம்முடைய ஜனத்தலைவர்கள் முதலாளிகள் தொழிலாளிகள் என்று இருதிறத்தாரையும் ஆதாரவுடன் கலந்து போத்தி சொல்லி மனஸ்தாபங்களை ஏறவொட்டாதபடி முளையிலேயே முயற்சி செய்யவேண்டும். தொழிலாளரை முதலாளிகள் இகழ்ச்சியுடன் கருதி நடத்துவதை உடனே நிறுத்துவதற்குரிய உபாயங்கள் செய்ய வேண்டும். தொழிலின் மஹிமையையும் இன்றியமையாத் தன்மையும் எல்லா ஜனங்களையும் அறியுமாறு செய்ய வேண்டும்.

ஆரம்பத்திலேயே நாம் இதற்குத் தகுந்த ஏற்பாடுகள் செய்யாவிடின் நாளடைவில் ருஷ்யாவிலுள்ள குழப்பங்களெல்லாம் இங்குவந்து சேரஹேது உண்டாய்விடும்.

ரூஷ்யாவில் சமீபத்தில் அடுக்கடுக்காக நிகழ்ந்து வரும்பல புரட்சிகளின் காரணத்தால் அவ்விடத்து சைன்யங்களில் பெரும்பகுதியார் தொழிற்கட்சியையும் அபேதக் கொள்கைகளையும் சார்ந்தோராய் விட்டனர். இதினின்றும் அங்கு ராஜ்யாதிகாரம் தொழிற்கட்சிக்கிடைத்துவிட்டது. தேசத்து நிதியனைத்தும் சகல ஜனங்களுக்கும் பொதுவாகச் செய்து எல்லாரும் தொழில் செய்து ஜீவிக்கும் படி விதித்திருக்கிறார்கள். தேசத்துப் பிறந்த

ஸர்வஜனங்களுக்கும் தேசத்துச் செல்வம் பொது என்பது உண்மையாய்விடின் ஏழைகள் செல்வர் என்ற வேற்றுமையினால் உண்டாகும் தீமைகள் இல்லாமற் போகும்படி ஸகலரும் தொழில் செய்துதான் ஜீவிக்க வேண்டும் என்ற விதி வழங்குமானால் தேசத்துத் தொழில் மிகவும் அபிவிருத்தியடைந்து ஜனங்களின் க்ஷேமமும் சுகங்களும் மேன்மேலும் மிகுதியுறும்.

எனவே ருஷ்யாவிலுள்ள அபேதவாதிகளுடைய கொள்கைகள் அவ்வளவு தீங்குடையனவல்ல. ஆனால், அவற்றை வழக்கப்படுத்தும் பொருட்டு அவர்கள் நாட்டில் ஏற்படுத்தியிருக்கும் தீராச்சண்டையும் அல்லலுமே தீங்குதருவனவாம். ருஷ்யக் கொள்கைகளை இப்போது அனுஷ்டிக்கப்படும் ருஷ்ய முறைகளின்படி உலகத்தில் ஸ்தாபனம்பெற்று வெற்றி பெற வேண்டுமானால் அதற்குள்ளே முக்காற்பங்கு ஜனம் கொலையுண்டு மடிந்து போவார்கள் வெளிநாட்டுப் போர் அத்தனை பெரியவிபத்து அன்று. நாட்டுக்குள்ளேயே செல்வர்களும் ஏழைகளும் ஒருவரையொருவர் வெடிகுண்டுகளாலும் துப்பாக்கிகளாலும் கொல்லத் தொடங்குவார்களானால் அது தீராத தொல்லையாய் விடுமன்றோ?'' என்று மகாகவிபாரதி விளக்கிக் கூறிவினா எழுப்புகிறார்.

இந்தியாவில் இதே நிலைமை நேரிடாத வண்ணம், ஜனத்தலைவர்கள் இப்போதே தீவிரமாகவும் பலமாகவும் வேலைசெய்யத் தொடங்க வேண்டும். தொழிலாளரிடம் பொது ஜனங்களும் முதலாளிகளும் மிகுந்த மதிப்புச் செலுத்தும் படி ஏற்பாடு செய்வதே இந்த வேலையில் முதற்படியாம் ''தம்முடைய காரியத்தைச் செய்ய வேண்டியதே தொழிலாளியின் ஆத்மாவுக்கு ஈசனால் விதிக்கப் பட்ட புருஷார்த்தம்'' என்று முதலாளிகளில் பலர் நினைக்கிறார்கள் யந்திரங்களைப் போலவே இவர்கள் மனிதரையும் மதிக்கிறார்கள் பொதுவாக ஏழைகளிடம் செல்வருக்கு உள்ள அவமதிப்பு அளவிடும் தரம் அன்று இவ்விதமான எண்ணம் நம்முடைய தேசத்திலும் செல்வர்களிடமிருந்து மிகுதியாகக் காணப்படுகின்றது. இவ்வெண்ணத்தை உடனே மாற்றித் தொழிலாளர்களையும் மற்ற ஏழைகளையும் நாம் ஸாதாரண மனிதராக நடத்த வேண்டும். அதிலும் தொழிலாளர்களின் விஷயத்தில் நாம் உயர்நீதி மதிப்பு செலுத்த வேண்டும். இவ்வித மதிப்பினால் நாம் தொழிலாளர்களின் விஷயத்தில் என்னென்ன கடமைகள் நேரும் என்பதைப் பின்னொரு வியாசத்தில் பேசுகிறேன், என்று மகாகவி பாரதி பேசுகிறார்.

இந்தக் கட்டுரையில் மகாகவிபாரதியார் ''ருஷ்யாவிலுள்ள அபேதவாதிகளுடைய கொள்கைகள் அவ்வளவு தீங்குடையனவல்ல ஆனால், அவற்றை வழக்கப்படுத்தும் பொருட்டு அவர்கள் நாட்டில் ஏற்படுத்தி இருக்கும் தீராச்சண்டையும் அல்லலுமே தீங்கு வருவனவாம்

என்று குறிப்பிடுகிறார் அத்துடன் ''ருஷ்யக் கொள்கைகளை இப்போது, அனுஷ்டிக்கப்படும் ருஷ்ய முறைகளின்படி உலகத்தில் ஸ்தாபனம் பெற்று வெற்றி பெற வேண்டுமானால் அதற்குள்ளே முக்காற்பங்கு ஜனம் கொலையுண்டு மடிந்து போவார்கள்'' என்று குறிப்பிடுகிறார். இது முழுமையான உண்மையாகும்.

தொழிலாளர்கள் ஆட்சி அதிகாரத்திற்கு ஆயுதம் தாங்கிய போராட்டம் தேவைப்படும் என்று காரல்மார்க்ஸும், விளாடிமிர்லெனினும் தங்களுடைய கொள்கை அறிக்கைகளிலும் வேலைத்திட்டங்களிலும் மிகவும் தெளிவாகவே குறிப்படிட்டுருக்கிறார்கள். இந்தக் கொள்கையையும் வேலைத்திட்டத்தையும் எல்லாநாடுகளிலும் உள்ள கம்யூனிஸ்ட் கட்சிகளும் ஏற்றுக் கொண்டு தங்கள் கருத்துக்களை வெளிப்படுத்தியுள்ளன.

இந்தியாவிலுள்ள கம்யூனிஸ்டுகளும் ஆயுதப் போராட்டத்தின் மூலம் தொழிலாளர்வர்க்கம் அதிகாரத்தைக் கைப்பற்றுதல் கொள்கையைத்தான் வெளிப்படுத்தியுள்ளனர். நீண்ட விவாதங்களுக்குப் பின்னர் ஒருபகுதியினர். அமைதியான வழிகளில் அதிகாரத்தைக்கைப்பற்றும் வாய்ப்புகளையும் பயன்படுத்திக் கொள்வோம் என்று ஒருவாறு ஆலோசனை செய்து கருத்துக் கூறியுள்ளார்கள்.

சுதந்திர இந்தியாவில் 1952 முதல் எல்லாப் பொதுத் தேர்தல்களிலும் பங்கு கொண்ட பின்னரும் கம்யூனிஸ்டுகளில் பெரும் பாலோர் அந்த வன்முறை வழிக்கருத்தைக் கைவிட விடவில்லை.

முகுந்துப்பார்வை

பருந்துப்பார்வை என்றும் தலைப்பில் மகாகவிபாரதியார் சிலகருத்துக்களை மிகவும் வலுவாக உறுதிபடக் கூறிப்பிடுகிறார்.

ஹிந்து மதம் உண்மை.

ஒரு தேசத்தார் ராஜ்யமஹிமை பெற வேண்டுமானால் அவர்கள் ஏகதேவ பக்தி (ஒரே கடவுள் பக்தி)யுடையவர்களாக இருக்க வேண்டும் என்று ''மாடர்ன் ரிவ்யூ'' பத்திரிக்கை சொல்லுகிறது. ''முகம் மதியர், கிறிஸ்தவர், யூதர் முதலியவர்களைப் போல ஒரே கடவுளை நம்பித் தொழவேண்டும் கிறிஸ்தவர்களிலே ரோமன் கத்தோலிக் கிறிஸ்தவர்கள் பலஞானிகளையும் தாயையும் வணங்குகிறார்கள். அப்படியில்லாமல் ப்ரோதஸ் தாந்து கூட்டத் தாரைப் போல ஒற்றைக் கடவுளைத் தொழ வேண்டும் இல்லா விட்டால் இராஜ்ய வலிமை உண்டாகாது என்று அந்தப் பத்திராதிபர் நினைக்கிறார். இது பிழை, இதற்கு மனுஷ்ய சரித்திரத்திலே எவ்விதமான ஆதாரமும் கிடையாது, ஹிந்து மதம் உண்மை - எல்லா மதமும் உண்மைதான். ஹிந்து மதம் ஆழ்ந்த உண்மை. உண்மையாலே தான் எல்லா நன்மையும் உண்டாகும்.'' என்று மகாகவி பாரதியார் குறிப்பிடுகிறார்.

தாய்மொழியில் விஞ்ஞானப்படிப்பு

தக்ஷிணத்துபானஷகளிலே - அதாவது தமிழிலும், தெலுங்கிலும் கன்னடத்திலும் மலையாளத்திலும் - சாஸ்திர (சயின்ஸ்) பாடம் கற்றுக் கொடுப்பதற்கு மேற்படி பாஷைகள் தகுதியில்லை என்று பச்சையப்பன் காலேஜ் தலைமை வாக்கியார் மிஸ்டர் ரோலோ என்பவர் சொல்லுகிறார். அவருக்கு இவ்விடத்து பர்ஷைகள் தெரியாது. ஸங்கதிதெரியாமல் விரிக்கிறார். சாஸ்திரபாஷை நமது பாஷைகளில் மிகவும் எளிதாகச் சேர்த்துவிடலாம். மேலும் இயற்கை நடையிலே இங்கிலிஷைக் காட்டிலும் தமிழ் அதிக நேர்மையுடையது. ஆதலால் சாஸ்திரபிரவசனத்திற்கு மிகுந்த சீருடையது. இந்த ஸங்கதி நம்மவர்களிலே கூடச் சில இங்கிலிஷ் பண்டிதருக்குத் தெரியாது. ஆதலால் மிஸ்டர் ரோலோவை நாம் குற்றம் சொல்வதில் பயனில்லை.

சுதேசி சிற்பங்களில் சர்வகாலசாலைக் கட்டிடங்கள்:-

காசியிலே ஹிந்து ஸர்வகலா சங்கம் கட்டும்போது பல மாளிகைகள் ஹிந்து சிற்பத்தைத்த முலியிருக்க வேண்டும். நவீனபாடசாலைகளுக்குரிய லக்ஷணங்கள் குறையக்கூடாது. ஆனால், சிற்பத்தின் மேனி சுதேசி விஷயமாக இருக்க வேண்டும். பாரத தேசத்து சிற்பிகளிலே தமிழ்நாட்டு ஸ்தபதிகள் ஒருமுக்கியமான அங்கமாவர். வங்காளத்திலே மகாகீர்த்தியுடன் சோபிக்கும் நவீன சாஸ்திரிகளில் நாயகராகிய அவனிந்திர தாகூர் கூட இக்காலத்திலும் தமிழ்நாட்டில் வாழும் ஸ்தபதிகளிடம் உயர்ந்த தொழில் இருப்பதாக மிகவும் புகழ்ந்து பேசியிருக்கிறார். ஆதலால் மேற்படி ஸர்வ கலாசங்கத்தின் கூட்டங்களிலே கூடியவரை நமது தமிழ் ஸ்தபதிகளின் உதவியை நாடிக் கொள்ளும்படி தமிழ்நாட்டிலுள்ள பண்டிதர்களும் ஜனத்தலைவர்களும் மேற்படி சங்கத்திற்குப் பொருள் கொடுத்து உதவுந்தோறு முயற்சி செய்ய வேண்டும்'' என்று மகாகவி பாரதி கூறுகிறார்.

மகாகவிபாரதியார்: ஹிந்து மதம் உண்மை, எல்லாமதமும் உண்மைதான ஹிந்து மதம் ஆழ்ந்த உண்மை. உண்மையாலே தான் எல்லா நன்மையும் உண்டாகும் என்று கூறுகிறார். ஹிந்து மதத்தின் பொருமைகளை, அதன் உண்மைப்பொருளை ஆழ்ந்து படிக்க வேண்டும் என்பதை மகாகவி அடிக்கடி நைனவூட்டி வருகிறார்

''தாய் மொழியிலேதான் கல்விப் பயிற்சி அமையவேண்டும் என்பதை மகாகவி வலியுறுத்திவந்துள்ளார். பொதுக்கல்விமட்டுமல்ல, அனைத்துக்கல்வியும் விஞ்ஞானப்படிப்பும் அனைத்துப்பயிற்சியும் தாய்மொழியிலேயே அமைய வேண்டும். தமிழ் நாட்டில் தமிழ் மொழியே பயிற்சி மொழியாக இருக்க வேண்டும் என்பதும் நமது மொழி சாஸ்திரப்பயிற்சிக்கு ஏற்ற மொழி என்பதையும் மகாகவிபாரதி கூறுகிறார்.

பள்ளிக்கட்டங்கள் மகாகவி பாரதி பள்ளிக் கட்டிடங்களைப் பற்றி ஒரு சிறந்தகருத்தைக் கூறுகிறார். நமது பள்ளிகள் கல்லூரிகள் பல்கலைக்கழகங்கள் அவைகளின் கட்டிடங்கள் இந்திய சிற்பக்கலையின் படி கட்டப்பட வேண்டும் என்பது மகாகவியின் கருத்தாகும். இந்திய சிற்பக்கலையில் தமிழ்நாட்டு ஸ்தபதிகள் மிகவும் சிறந்தவர்கள் நாட்டில் சிறந்த கட்டிடங்களை உருவாக்குவதற்கு தமிழ்நாட்டு ஸ்தபதிகளின் திறமையை ஆற்றலை அவர்களுடைய தொழில் நுட்பத்திறனை நன்கு பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்பது மகாகவியின் கருத்தாகும்.

ஸயின்ஸ் பயிற்சிபற்றி

நமது தேசத்தில் (ஸயின்ஸ்) சாஸ்திரப் படிப்பு வளரும் படிசெய்ய வேண்டும். ஸபின்ஸ் மனித ஜாதியை உயர்த்திவிடும் அது இஹத்துக்குமாத்திரமேயன்றி பரத்துக்கும் ஸாதனமாகும். ஸாஸ்திரப்படிப்பு முக்கியம் அதிலேதான் நன்மையெல்லாம் உண்டாகிறது.

நமது பூர்வீகர் ஸயின்ஸ் தேர்ச்சியிலே நிகரில்லாமல் விளங்கினார்கள் அந்தக் காலத்து லௌகீக சாஸ்திரம் நமக்குத் தெரிந்த மாதிரி வேறு யாருக்கும் தெரியாது. இந்தக் காலத்துஸங்கதிதான் நமக்குக் கொஞ்சம் இழுப்பு'' என்று மகாகவி குறிப்பிடுகிறார்.

மகாகவி கூறுகிறார்

எவனும் உடம்பை உழப்பினாலும் அசைவினாலும் சுறு சுறுப்பாகவைத்துக் கொள்ள வேண்டும். மனதை உத்சாக நிலையில் வைத்துக் கொண்டால் உடம்பிலே தீவிர முண்டாகும். உடம்மை தீவிரமாகச் செய்து கொண்டால் மனது உற்சாகத்துடனிருக்கும். மனத்தளர்ச்சிக்கு இடம் கொடுக்கலாகாது கவலை மனிதனை அரித்துக் கொண்டுறு விடும். பயத்தை உள்ளே வளர்ப்பவன் பாம்பை வளர்க்கிறான்.

இயன்றவரை இந்திரிய இன்பங்கள் கூடாது என்று நான் சொல்ல வில்லை.

அவை பரமாத்மாவினால் நியமிக்கப்பட்டன. இராமன், கிருஷ்ணன் முதலிய அவதார புருஷர்கள் உலக இன்பங்களை நீக்கித் துறவு கொள்ளவில்லை. ஆனால், இந்திரிய சுகங்களுக்கு வசப்பட்டுப் போககாது. அதனால் தேகபலம் அழிந்து மேற்படி இந்திரிய சுகங்களை நீடித்து அனுபவிக்க வழியில்லாமல் போய்விடும். அறிவு தான்ராஜார்; மனமும் இந்திரியங்களும் உடம்பும் அறிவுக்கடங்கி வாழ வேண்டும் இல்லாவிட்டால் அவற்றுக்கே கெடுதியுண்டாகும்.

எனவே மனவுறுதி, ஸந்தோஷம் உலகை நடத்தும் சக்தி, நமக்கு நன்மை செய்யுமென்ற நம்பிக்கை, சரீரவுழைப்பு முதலிய நற்குணங்களைக்கைக் கொண்டு ஜக்கத்தை வழக்கப்படுத்த வேண்டும்.

உம்பிலே நோயில்லாமல் வலிமை யுடன் இங்கே நூறாண்டுவாழலாம் என்று மகாகவி கூறி முடிக்கிறார்.

செல்வம் (1)

செல்வம் (1) - செல்வம் (2) என்னும் தலைப்புகளில் மகாகவி பாரதியார் மிகவும் சிறந்த கட்டுரைகளை எழுதியுள்ளார். அவைகளை மீண்டும் மீண்டும் படித்து அதன் கருத்துக்களைக் கிரகித்துக் கொள்ள வேண்டும் புரிந்து கொள்ள வேண்டும். இக்கருத்துக்கள் மகாகவியின் மனிதாபிமான உணர்விலிருந்தும் நியாய உணர்விலிருந்தும் எழுந்தவையாக உள்ளன. அந்நிய ஆங்கிலேயர் ஆட்சியின் கொடுமைகளால் இந்திய மக்களுக்கு ஏற்பட்டிருந்த துன்ப துயரங்களை மகாகவி நேரில் கண்டும் நேரில் அனுபவித்தும் இருக்கிறார் இத்தனை கொடுமைகளையும் தாங்கி நின்று மக்கள் அமைதியான முறைகளில் கடும் முயற்சி யெடுத்து மாற்றங்களைக் காண வேண்டிய முயற்சிகளை மகாகவி பாரதியார் எடுத்துக் கூறுகிறார்.

அந்நிய ஆங்கிலேயர் ஆட்சி கொடுமை மிக்கது. அந்த ஆட்சியின் கொடுமைகளைப் பற்றி மகாகவி பல பாடல்களிலும் பல இடங்களிலும் நெஞ்சுறுகப்பாடுகிறார். கொடுமையும் கொடுங்கோன்மையும் மிக்க அந்நிய ஆட்சியை எதிர்த்து இந்திய மக்களின் நியாயங்களை நிறுவுவதற்கு வலுவான மனவுறுதி வேண்டும் என்பது மகாகவியின் கருத்து அமைதி வழிகளிலேயே எல்லா நியாகங்களுக்கும் தயராக இருந்து அந்த மகத்தான காரியத்தை சாதிக்க வேண்டுமென்பது மகாகவியின் சீக்கிய கருத்தாகும்.

செல்வம் (1) என்னும் தலைப்பில் மகாகவி ருஷ்யப்புரட்சியைப் பற்றியும் அதன் நிகழ்வுகளைப் பற்றியும் மிகவும் தொலை நோக்குடன் மிகவும் நுட்பமான கருத்துக்களை எடுத்துக் கூறுகிறார்.

ருஷ்யாவில் சோஷலிஸ்ட் கடசியார் ஏறக்குறைய தம்முடைய நோக்கத்தை நிறைவேற்றி விடக் கூடுமென்று தோன்றுகிறது. சோஷலிஸ்ட் கட்சியென்பதை தமிழில் சமத்துவக் கட்சி என்று சொல்லலாம். அது கூட சரியான மொழி பெயர்ப்பாகாது. சொத்து விபாகம் செய்திருப்பதில் இப்போது சிலர் செல்வர் என்றும், பலர் ஏழைகளென்றும் ஏற்பட்டிருப்பதை மாற்றி உலகத்திலுள்ள சொத்தை அதாவது பூமியை உலகத்து ஜனங்களுக்கு சமமாகப் பங்கிட்டுக் கொடுக்க வேண்டும் என்பதும், தொழில் விஷயத்தில் இப்போது போட்டி முறைஇருப்பதை மாற்றி கூறியுழைக்கும் முறையை அனுஷ்டானத்திற்குக் கொண்டுவரவேண்டுமென்பதும் மேற்படி கட்சிஆருடைய முக்கியமான கோட்மபாடு. ஆதலால் இந்தக் கட்சிக்கு ஐக்கியக்கட்சி என்று பெயர் சொல்லுவது பொருந்தும் என்று தோன்றுகிறது. இதை அபேதக் கட்சி என்று சொல்வாருமுளர்.

இந்தக்கட்சி இந்தியாவில் ஏன் இதுவரை ஏற்பட்டு

விருத்தியடையவில்லை என்பது ஆராய்ச்சிக்குரிய விஷயம். முதலாவது காரணம் ஹிந்து ஜன சமூக அமைப்பில் ஐரோப்பாவில் இருப்பது போல அத்தனை தாரதம்மியம் இல்லை. முதலாளி - தொழிலாளி, செல்வன் ஏழை இவர்களுக்கிடையே ஐரோப்பாவில் உள்ள பிரிவு விரோதமும் நம்தேசத்தில் இல்லை. ஏழைகளை அங்குள்ள செல்வர் அவமதிப்பது போல நமது நாட்டுச் செல்வர் அவமதிப்பது கிடையாது. ஏழைகளுக்குத் தானம் கொடுப்பது என்ற வழக்கம் நமது தேசத்தில் இருக்குமளவு அந்தக் கண்டத்தில் கிடையாது லண்டன் நகரத்தில் பிச்சைக்காரனைப் போலீஸ்காரன் பிடித்துக் கொண்டுபோவான். பிச்சைக் குற்றத்திற்காக மாஜிஸ்திரோட தண்டனை விதிப்பார். நமது தேசத்தில் ''தேஹி'' என்று கேட்பவனுக்கு ''நாஸ்தி'' என்று சொல்கிறவனை எல்லோரும் சண்டாளன் என்று தூஷிப்பார்கள்.

''இங்கிலீஷ் நாகரிகம் நமது தேசத்தில் நுழையத் தொடங்கியதிலிருந்து இங்கும் சில மூடர் பிச்சைக்காரரை வேட்டையாடுவது புத்தி கூர்மைக்கு இடையாளமென்று நினைக்கிறார்கள். பிச்சைக்காரன் வந்தால், ''ஏண்டா, தடியன் போலிருக்கிறாயே ! பிச்சை கேட்க ஏன் வந்தாய், உழைத்து ஜீவனம் பண்ணு'' என்று வாயினால் சொல்லிவிடுதல் எளிது. உழைக்கத் தயாராக இருந்தாலும் வேலையகப்படாமல் எத்தனை லட்சம் பேர் கஷ்டப்படுகிறார்கள் என்ற விஷயம் மேற்படி நாகரிக வேட்டை நாய்களுக்குத் தெரியாது.

சோம்பேரியாக இருப்பது குற்றம் தான் பிச்சைக்கு வருவோர்களில் பலர் மிகவும் கெட்ட சோம்பேறிகள் என்பதும் உண்மைதான். இதையெல்லாம் நான் மறுக்கவில்லை, ஆனாலும், பிச்சை என்று கேட்டவனுக்கு ஒருபிடி அரிசி போடுவதேமேன்மை. வைது துரத்துதல் கீழ்மை - இதில் சந்தேகம் இல்லை.

''சோம்பேரி! பிச்சைக்காரன் மாததிரம் தானா சோம்பேறி! பணம்வைத்துக் கொண்டு வயிறு நிறையத்தின்று நின்றுயாதொரு தொழிலும் செய்யாமல் தூங்குவோரை நாம் சீர்திருத்திவிட்டு அதன்பிறகு ஏழைச் சோம்பேறிகளை சீர்திருத்தப் போவது விசேஷம். பொறாமையும் தன் வயிறு நிரப்பிப் பிறவயிற்றைக் கவனியா திருத்தலும் திருட்டும் கொள்ளையும் அதிகாரமுடையவர்களும் பணக்காரர்களும் அதிகமாகச் செய்கிறார்கள். ஏழைகள் செய்யவும் அநியாயம் குறைவு செல்வர் செய்யும் அநியாயம் அதிகம்

ஏழைகளே இல்லாமல் செய்வது. உசிதம். ஒரு வயிற்று ஜீவனத்துக்கு வழியில்லாமல்யாருமே இருக்கலாகாது. அறிவுடையவர்கள் இப்போது பெரும்பாலும் அந்த அறிவை ஏழைகளை நசுக்குவதிலும் கொள்ளையிடுவதிலும் உபயோகப்படுத்துகிறார்கள். ஐரோப்பிய இயந்திரத் தொழிற்சாலைகள் ஏற்பட்டதிலிருந்து ஏழைகளுக்கு முன்னைக் காட்டிலும்

அதிக துன்பம் ஏற்பட்டு இருக்கின்றனவேயன்றி ஏழைகளின் கஷ்டம் குறையவில்லை.

ஏழைகளைக் கவனியாமல் இருப்பது பெரிய ஆபத்தாக முடியும்.

உலகத்துச் செல்வர் ஸகல ஜனங்களுக்கும் பொதுவாகிய பூமியைத் தங்களுக்குள்ளே பங்கிட்டு எடுத்துக் கொண்டு பெரும்பகுதியார் சோறின்றி மாளும்படி விடுகிறார்கள். ஏழைகளைக் காப்பாற்ற வேண்டாமா என்று கேட்டால் ''அவர்களுடைய கர்மத்தினால் அவர்கள் ஏழையாயிருக்கிறார்கள். அதற்கு நாங்களா பொறுப்பு? நாங்களென்ன ஏழைகளுக்குக் காவலாளிகளா? என்று கேட்கிறார்கள். உலகம் மாறுகிறது. ஏழைகளுக்கு நியாயம் செய்ய வேண்டும்.

ஒவ்வொரு கிராமத்திலும் பொருளாளிகள் ஒரு சபை கூடி அந்த கிராமத்திலுள்ள ஏழைகளின் கஷ்டங்களை நிவர்த்தி செய்ய யோசனைகள் பண்ணி நிறைவேற்ற வேண்டும். அன்பினால் உலகத்தின் துயரங்களை எளிதாக மாற்றிவிடலாம். அங்ஙனம் செய்யாமல் அஜாக்கிரதையாக இருந்தால் ஐரோப்பாவைப்போல் இங்கும் ஏழை செல்வர் என்ற பிரிவு பலமடைந்து விரோதம் முன்றி அங்கு ஜனக்கட்டு சிதறும் நிலைமையில் இருப்பது போல் இங்கும் ஜன சமூகம் சிதறி மஹத்தான விபத்துக்கள் நேரிட இடம் உண்டாகும்.

பொருளாளிகள் இடைவிடாத உழைப்பையும் அன்பையும் சமத்துவ நினைப்பையும் கைக் கொண்டால் உலகத்தில் அநியாயமாக உத்பாதங்கள் நேரிட்டு உலகம் அழியாமல் காப்பாற்ற முடியும் பராசக்தி மனுஷ்யஜாதியை அன்பினும் ஸமத்துவத்திலும் சேர்த்து நலம் செய்க...!

செல்வம் (2)

''பணமில்லாதவன் பிணம்'' என்று பழமொழி சொல்களிது. இதன் கருத்துத்தான் திருவள்ளுவர் வேறொருவகையிலே ''பொருளில்லாக்க கிவ்வுகமில்லை'' என்று சொல்லிருக்கிறார்.

இந்த உலகத்திலுள்ள எல்லாத் துன்பங்களைக் காட்டிலும் வறுமைத் துன்பம் கொடியது. இவ்வுலகத்தில் எல்லாச் சிறுமைகளைக்காட்டிலும் ஏழ்மையே அதிகச் சிறுமையானது. ''இன்மையின் இன்னாததில்'' என்றும், ''இல்லானை இல்லாளும் வேண்டாள், மற்றீன்றெடுத்த தாய் வேண்டாள், சொல்லாதவன் வாயிற் சொல்'' என்றும் டுமமுடின்டினனோட்ர் சொல்லியிருக்கிறார்கள்.

இங்ஙனமே, ஏழ்மையின் நிகரற்ற இகழ்ச்சியையும் துன்பத்தையும் விளக்கு வனவாய்ப் பண்டைத் தமிழ் நூல்களிலும் காவியங்கள் முதலியனவற்றிலும் காணப்படும் வசனங்களையும் உதாரணங்களையும்

எடுத்துக் காட்ட முயன்றால் அத்தொகுதி அத்தொகுதி ஆயிரம் சுவடிகளுக்கு மேலாய் விடும். இவ்விஷயமாக இதரபாஷைகளிலுள்ள நூல்களிலும் இவ்வாறே செறிந்து கிடக்கும் வாக்கியங்களும் திருஷ்டாந்தங்களும் கணக்கில்லாதனவாகும்.

எல்லா தேசங்களிலும் எல்லா பாஷைகளிலும் அறிஞரெல்லாம் ஒருங்கே வறுமைதான் எல்லா நரகங்களைக் காட்டிலும் மிகக் கொடியது என்பதை அங்கீகாரம் செய்திருக்கிறார்கள். ஆதலால் இந்த விஷயத்துக்கு நாம் மேற்கோள் ஆதாரங்களை அதிகமாகக் காட்ட வேண்டிய அவசியமில்லை. ஏனென்றால் வறுமை மிக மிகப் பெரிய இகழ்ச்சியும் துன்பமுமாகும், என்பது கற்றோர்க்கு மட்டுமே அல்லாது கல்லாதார்க்கும் நன்கு தெரிந்த விஷயமேயாம்.

எல்லா உயிர்களும் மரணத்துக்கு அஞ்சுகின்றன. ஆனால், வறுமை மரணத்திலும் பெரிய துன்பமென்றுணர்ந்த ஏழைகள் மாதத்திரமே, ''தெய்வமே எனக் கொளுசாவுவராதா'' என்று சில சமயங்களில் வேண்டுவது காண்கிறோம்.

இந்த ஏழ்மை இத்தனை கொடிதாக ஏற்பட்ட காரணந்தான்யாதெனில் சொல்லுகிறேன். உணவுதான் ஜீவைந்துக்களின் அவசரங்களைத்திலும் பெரிய அவசரமானது.

''மானம் குலம கல்வி வண்மை அறிவுடைமை

தானம் தவம் முயற்சி தாளாண்மை தேனின்

கசிவந்த சொல்லியர் மேற்காமுறுதல் - பத்தும்

பசிவந்திரப் பறந்து போம்.''

எனவே இவ்வுலக இன்பங்கள் பெருமைகள் எல்லாவற்றிற்கும் அஸ்திவார பலம் உணவு - உணவு இல்லாத இடத்தில் அவை நிற்க வழியில்லை மேலும், வெறுமே உயிர்தரித்திருப்பதற்குக் கூட ஆகாரம் அவசியமாயிருக்கிறது. சாறில்லாவிட்டால் உயிர் இல்லை. இது கொண்டே பெரும்பான்மையோருக்கு அன்றாடம் உணவு கிடைக்குமென்ற கூறுதியில்லாமலும், பலருக்கு உணவே கிடையாதென்பது உறுதி யில்லாமலும் ஏற்படுத்தி வைக்கும் வறுமையை இத்தனை பெரிய கொடும் பகையாகக் கருதி மனிதர்கள் அஞ்சுகின்றனர்.

முற்காலத்தில் இந்திய செல்வத்துக்கும் கல்விக்கும் வீரத்துக்கும், பராக்கிரமத்துக்கும், சாஸ்திரங்களுக்கும், பல விதமான கைத்தொழில் களுக்கு விசேஷ ஸ்தலமாக விளங்கிவந்தது. இக்காலத்திலே இந்தியா பஞ்சத்துக்கும் பசி மரணத்துக்கும் வறுமைக்கும் தொத்து நோய்களுக்கும் ...வதஸ்தவமாயிருக்கிறது.

இந்திய தேசத்தார் அழிவுறுவது போல் மற்றபடி பூமண்டலமுழுவதிலும் எந்நாட்டிலும், மனிதர் இவ்வாறு வருஷந்தவறாமல் வேறு காரணம் யாதொன்றுமில்லாமல் சுத்தமான பஞ்சம் காரணமாக பதினாயிரம் லட்சக்கணக்கில் மடிந்து போகும் ஆச்சர்யத்தைக் காண முடியாது மனித ஜதியார்களுக்குள்ளேயே இப்படியென்றால் மற்ற மிருகங்கள், பட்சிகள், பூச்சிகள், வருஷந்தவறாமல் கூட்டங் கூட்டமாக வெறுமே சுத்தமான பட்டினியால் மடியும் அநியாயம் கிடையாதென்பது சொல்லாமலே விளங்கும்.

இங்ஙனம் மனித ஜாதிக்கே பொது இகழ்ச்சியாகவும், பொதுக்கஷ்டமாகவும், ஹிந்துக்களுக்கு விசேஷ அவமானமாகவும், விசேஷ கஷ்டமாகவும் மூண்டிருக்கும் இந்தவறுமையாகிய நோய்க்கு ஒரு மருந்து கண்டுபிடித்து அந்த நோயை நீக்கி இந்நிதயாவிலும் பூமண்டலத்திலும் சகல ஜனங்களுக்கும் ஆஹார சம்பந்தமாகப் பயமில்லாதபடி அரை வயிற்றுக் கஞ்சியேனும் நிச்சயமாகக் கைடிப்பதற்கு வழிகள் எவை என்பதைப்பற்றி ஒவ்வொரு புத்திமானும் ஆராய்ச்சி செய்தல் இவ்வுலகத்திலுள்ள எல்லா அவசரங்களைக் காட்டிலும் பெரிய அவசரமென்று நான் கருதுகின்றேன். இந்தக் காரியத்தை நிறைவேற்றுவதற்குரிய ஸாதனங்களாக எனக்குத் தோன்றும் உபாயங்களை எழுதுகின்றேன். இவ்விஷயத்தைக் குறித்துத் தமிழ் நாட்டு மக்களில் வேறுபல தத்தமக்குப் புலப்படும் உபாயங்களை நமது மித்திரனுக்கு (அப்போது மகாகவிபாரதியார் ஆசிரியராகப் பணியாற்றி வெளிவந்து கொண்டிருந்த தினசரிப் பத்திரிகை நாளிதழ் சுதேச மித்திரன்.

பூமண்டலத்தில் அபார நலத்தை ஏற்படுத்துவதற்கு வாய்ந்த முக்கியமான கருவிகளில் ஒன்றாக நிற்கும் பெருமையும் புகழும் ''சுதேச மித்திரனுக்கு ஏய்துக மனித ஜாதி முழுமைக்கும் பேரவசியமான இந்த மஹா மஹோம காரத்தை நடத்துவதற்கு உறுதியான தந்திரங்களைக் காட்டி கொடுப்பதாகிய நிகரற்ற மறிமை தமிழ்நாட்டு மேதாவிகளுக்கு கொய்துக. உலகத்தில் செல்வத்தின் சம்பந்தமான ஏற்றதாழ்வுகளை மாற்ற எல்லாக்காரணங்களில் ஏற்படும் ஏற்றதாழ்வுகளைக் காட்டிலும் மிகக் கொடியனவாக மூண்டிருக்கின்றன.

மனுஷ்ய நாகரிகம் தோன்றிய காலமுதலாக எல்லா ஜனங்களும் ஸமானமாக வாழ வேண்டும் என்ற கருத்து ஞானிகளாலும் பண்டிதர்களாலும் வற்புறுத்தப்பட்டு வந்திருக்கின்றது. ஆனால், ஒருவன் மிகவும் பல சாலியாக இருக்கிறான். அவனை பல மில்லாதவர்கள் மேன்மை உடையோனாகக் கருதுகிறார்கள். அவனும் அதில் மகிழ்ச்சி கொண்டவனாய் பலமில்லாதவர்களை வேறு சிருஷ்டியாக நினைத்து மிக இழிவாக நடத்தத் தொடங்குகிறான்.

இங்ஙனமே அழகுடையவன் அழகில்லாதவர்களைத் தாழ்வாக

நினைக்கிறான். கல்வியுடையோன் கல்லாத மக்களிடம் வைத்திருக்கும் இகழ்ச்சியோ சொல்லும் தாமன்று ''விலங்கொரு மக்களனையர் இலங்கு நூல் கற்றாரோடனையவர்'' அதாவது மனிதர்களுக்கும் மிருகங்களுக்கும் எத்தகைய பேதமிருக்கிறது அத்தனை பேதம் கற்றாருக்கும் கல்லாதாருக்குமிடையே உளது, இந்தக்குறள் கல்விப் பெருமையுடையோர் அஃதில்லாதாரின் விஷயத்தில் கொண்டிருக்கும் எண்ணத்தை நன்கு விளக்குகிறது. இங்ஙனமே பாடத் தெரிந்தவன் அது தெரியாதவரைக் குறைவாக எண்ணி நடத்துகிறான். நெட்டையாக இருப்பவன் குள்ளனைக் குறைந்த ஜாதியாக எண்ணுகிறான். மேற்குலத்தில் பிறந்தவன் தாழ்ந்த குலத்தானை இகழ்ச்சி செய்கிறான். சுருங்கச் சொல்லுமிடத்தேயாதேனுமொருவித. விசேஷ அனுகூலம் படைத்தோர் அஃது படையாதாரை இழ்வாச எண்ணி நடத்துகிறார்கள். இங்ஙனம் கோடிவிதமான காரணங்களை உத்தேசித்து மனிதருக்குள்ளே எண்ணற்ற பேதங்கள் ஏற்பட்டுவிட்டன. இந்த பேதங்களால் ஏற்படும் கஷ்டங்களும் மனஸ்தாபனங்களும் பொறாமைகளும் கர்வங்களும் போராட்டங்களும் எண்ணற்றனவாகின்றன. இதனால் இந்த உலகத்தில் மனித வாழ்க்கை நரக வாழ்க்கை போலத் தீராத் துன்பமாக முடிந்திருக்கிறது.

ஏனென்றால் ஒருவன் எத்தனை விசேஷ அனுகூலங்கள் படைத்திருந்த போதிலும் ஏதேனும் ஒரு விஷயத்தில் அவன் வேறு சிலருக்குக் குறையுள்ளவனாகவே இருக்கும்படி இயற்கையமைப்பு இருக்கிறது.

அளவிறந்த கல்வியுடையவன் கொஞ்சம் குள்ளனாக இருந்தால் போதும். பிடித்தது சனி, நெட்டை மனிதரைக் கண்டு அவன் பொறாமை கொள்வதினின்றும் நெட்டையாட்கள் அவனை இகழ்ச்சி செய்வதனின்றும் அவனுக்குப் பலவிதமான அனர்த்தங்களும் கவலைகளும் ஏற்படுகின்றன. அவன் தான் குள்ளனாகப் பிறந்ததைப்பற்றி ஓயாமல் மனம் நொந்து சாகிறான்.

மிகுந்த செல்வமுடியவன் கொஞ்சம் கரு நிறமுடையவனாக இருந்தால் போதும் வந்தது வினை! செந்நிறம் உடையவர்களாலே அவனுடைய வாழ்க்கை நரகத்தைப் போல் ஆக்கப்படுகிறது.

இங்ஙனம் எத்தனையோ பேதங்களால் மனிதனுக்குப் பல தொல்லைகள் விளைகின்றன. எனினும் நான் தொடக்கத்திலே கூறியபடி செல்வத்தால் ஏற்படும் வேற்றுமைகளே சால மிகக் கொடியன. செல்வமுடையவன் செல்வமில்லாதவரிடத்துக் கொண்டிருக்கும் இகழ்ச்சியும் செல்வமில்லாதவன் செல்வமுடையோரிடத்தே கொண்டிருக்கும் பொறாமையும் மனிதருக்குள்ளே ஏற்படுவதில்லை.

''கண்ணுடையோ ரென்பவர் கற்றோர் முகத்திரண்டு

புண்ணுடையார் கல்லாதவர்.''

என்று வள்ளுவர் சொல்லியபடி படித்தவன் படியாதவனை வெறுமே குருடனாகக் கருதி நடத்துகிறான். பணமுடையவனோ பணமில்லாதவனைப் பிணமாக நினைக்கிறான்.

இதனிடையே மனித ஜாதி நாகரிகத்தின் முற்றும் ஸமத்வம் அவசியம் என்ற கொள்கை ஒரு புறத்தே பரவிக் கொண்டே வருகிறது. எத்தனை வேற்றுமைகள் குணத்தாலும் செய்கையாலும் பிறப்பாலும் மற்ற வீண் நியமங்களாலும் மனிதருக்குள் ஏற்பட்டிருந்த போதிலும் அந்த வேற்றுமைகளை யெல்லாம் புறக்கணித்து விட்டு எல்லாரும் ஈசனுடைய மக்கள் அல்லது அம்சங்கள் என்ற பரமசத்யத்தை மனதில் தரித்து எல்லாரையும் நிகராகப் பாவிக்க வேண்டும் என்ற கருத்து வேதரிஷிகளாலும், கிறிஸ்து புத்தர் முதலிய அவதார புருஷர்களாலும் மனிதருக்கு வற்புறுத்திக் கூறப்பட்டன. அவர்களையொட்டி எண்ணிறந்த ஞானிகளும் பண்டிதர்களும் அக்கொள்கையைப் பல வகையாலே பரவச் செய்து கொண்டு வந்திருக்கிறார்கள்.

இங்ஙனம் பரமார்த்த ஞானமுடையோர் ஆதிகாலம் தொட்டு ஸமத்வக் கொள்கையைப் பரப்பி வருதல் ஒரு புறத்தே நிகழவும் சென்ற சில நூற்றாண்டுகளாக ஐரோப்பாவில் பலவிதவான்கள் தெய்வத்தைப் பற்றி யோசனை செய்யாமல் வெறுமே மானிட வாழ்க்கை ஸுகமாகவும் ஸமாதானமாகவும் நடைபெற வேண்டும் என்கிற லௌகீக காரணத்தைக் கருதி ஸகல ஜனங்களும் சமத்துவமாகவே நடத்தப்பட வேண்டும் என்கிற கருத்தைப் பிரச்சாரம் செய்து கொண்டு வருகிறார்கள். இக்கொள்கை நாட்பட நாட்பட ஐரோப்பாவிலும் அதன் கிளைகளாகிய அமெரிக்கா ஆஸ்திரேலியாக் கண்டங்களிலும் ஐரோப்பிய நாகரிகத்தை அனுசரிக்க விரும்பும் ஜப்பான் இந்தியா முதலிய தேசங்களிலும் மிக விருத்தியடைந்து வருகிறது.

ஒற்றைக் குடும்பத்தில் ஒரு பிள்ளை புத்திமானாகவும் கல்வியுடையவனாகவும் இருக்கிறான். மற்றொரு பிள்ளை கல்வியறிவற்ற மூடனாகவே இருக்கிறான். ஒருவன் சிவப்பாக இருக்கிறான். மற்றொருவன் கருநிறமுடையவனாக இருக்கிறான். ஒருவன் பலசாலியாக இருக்கிறான். மற்றொருவன் பலவீனமாக இருக்கிறான். ஒருவன் தைர்யசாலியாக இருக்கிறான். மற்றொருவன் கோழையாக இருக்கிறான். ஒருவன் நெட்டை மற்றொருவன் குட்ட ஒருவன் அழகுடையவன் மற்றொருவன் முகமெல்லாம் அம்மைத் தழும்புடையவனாய் ஒருகண் பொட்டையாக இருக்கிறான் எனினும் அறிவுடைய தாய் தந்தையர் இந்த மக்களுக்குள்ளே எவ்விஷயத்திலும் வேற்றுமை பாராட்டாமல் இவர்களை சகல விதங்களிலும் ஸமமான அன்புடன் நடத்தி வருகிறார்கள்.

அதுபோலவே மனித ஜாதி முழுவதையும் ஒரே குடும்பமாகக் கருதி மானிடருக்குள்ளே இயற்கையாலும் மானிடர் தாமாகவே ஏற்படுத்திக் கொண்ட அர்த்தமில்லாத கட்டுப்பாடுகளாலும் எத்தனை வேறுபாடுகள் காணப்பட்ட போதிலும் இந்த வேறுபாடுகளைக் கருதிச் சிலருக்கு அதிக சௌகரியங்கலும் பலருக்குக் குறைந்த சௌகரியங்களும், சிலருக்கு மதிப்பும் பலருக்கு அவமதிப்பும் சிலருக்கு லாபங்களும் பலருக்கு நஷ்டங்களும் ஏற்படுத்தியிருப்பது தவறு என்பதும், ஒவ்வொருவரும் சகோதரரைப் போல் பரஸ்பர அன்புடனும் மரியாதையுடனும் வாழ்வதே நியாயம் என்பதும் நவீன ஐரோப்பிய ஸித்தாந்தங்களிலே மிகவும் முக்கியமான சித்தாந்தமாகும். இந்தக் கொள்கைக்கு எல்லாமதங்களும் சார்பாக இருப்பதை உத்தேங்சிடக்குமிடத்தே இது நாளடைவில் ஐரோப்பாவில் மாத்திரமின்றி உலகம் முழுமையிலும் பரிபூரணமாக வெற்றி பெறும் என்பதில் சந்தேகமில்லை.

இந்த சித்தாந்தம் பரிபூரண ஜெயமடைந்து மனிதருக்குள்ளே சகஜதர்மமாக ஏற்பட்ட பிறகு தான் மானிடர் உண்மையான நாகரிகம் உடையோராவர்.

மேலும், மானிடருக்குள்ளே இயற்கையால் ஏற்பட்டிருக்கும் வர்ண வேற்றுமைகள், உயரவேற்றுமைகள் சரீரபல வேற்றுமைகள் முதலியனவே மாற்றமுடியாதவை. செயற்கையால் உண்டாகிய கல்வி வேற்றுமைகள் செல்வ வேற்றுமைகள் ஜாதி பேதங்கள் முதலியன எளிதாக மாற்றிக் கொள்ளக் கூடியன.

ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் பல தேசங்களிலும் ஏற்கனவே பிற் கூறிய வேற்றுமைகளை நீக்குவதற்குப் பலமான முயற்சிகள் நடைபெற்று வந்து நல்ல பயன்களும் ஏற்பட்டுவிட்டன. எல்லோருக்கும் கல்வி கற்பித்துக் கொடுக்க வேண்டும் என்கிற எண்ணம் முக்கியமாக வலிமையடைந்து வருகிறது. தேசத்து மக்கள் அத்தனைபேருக்கும் கட்டாயமாகவும் இனாமாகவும் கல்வி கற்பித்துக் கொடுக்க முயற்சி செய்துவருகிறார்கள். இந்த முயற்சி இன்னும் அதிக பலமடையும். நாளுக்குநாள் இந்த முயற்சியில் சக்தியும் வேகமும் அதிகரித்து வருகின்றன. இதனின்றும் இன்னும் முப்பது அல்லது நாற்பது ஆண்டுகளில் ஐரோப்பா முழுவதும், அந்த முறையைக் கைப்பற்றி நடக்கும். இந்தியா, ஜப்பான் முதலிய தேசங்களிலும் படிப்புத் தெரியாதவர் ஒருவர் கூட இல்லாமற்போய் விடுவார்கள் என்று நிச்சயமாய்ச் சொல்லலாம். ஜாதி பேதங்கள் இந்தியாவிலேயே சிதறுண்டு வருகின்றன. எனில் மற்ற நாடுகளைப் பற்றிப் பேச வேண்டியதில்லை.

இதுபோலவே, செல்வத்தைக் குறித்த வேற்றுமைகளையும் இல்லாமற் பண்ணிவிட வேண்டும் என்ற கொள்கையும் உலகத்தில் மிகத்தீவிரமாகப் பரவிவருகிறது. ஐரோப்பாவிலே தான் இந்த முயற்சி வெகு மும்மரமாக

நடந்து வருகிறது. ஒருதேசத்தில் பிறந்த மக்கள் அனைவருக்கும் அந்த தேசத்தின் இயற்கைச் செல்வம் முழுவதையும் பொதுவுடமையாக்கி விட வேண்டும் என்ற கொள்கைக்கு இங்கிலிஷில் ''சோஷலிஸ்ட்'' கொள்கை யென்று பெயர். அதாவது கூட்டுறவுக் கொள்கை. இந்தக் கூட்டுறவு வாழ்வுக் கொள்கை (சோஷலிஸ்ட்) ஐரோப்பாவில் தோன்றிய போது இதை அங்கு முதலாளிகளும் மற்றபடி பொது ஜனங்களும் மிக ஆத்திரத்துடனும் ஆக்ரஹத்துடனும் எதிர்த்து வந்தார்கள். நாளடைவில் இக்கொள்கையின் நல்லியல்பு இந்தக் கண்டத்தாருக்கு மேன்மேலும் தெளிவு பட்டு வரலாயிற்று. எனவே இதன் மீது ஜனங்கள் கொண்டிருக்கும் விரோதம் குறைவுபட்டுக் கொண்டுவரவே இக்கொள்கை மேன்மேலும் பலமடிந்து வருகிறது. ஏற்கனவே ருஷ்யாவில் ஸ்ரீமான் லெனின், ஸ்ரீமான் மின்த்ரோத்ஸ்கி முதலியவர்களின் அதிகாரத்தின் கீழ் ஏற்பட்டிருக்கும் குடியரசில் தேசத்து விளை நிலமும் பிற செல்வங்களும் தேசத்தில் பிறந்த அத்தனை ஜனங்களுக்கும் பொது உடமைகள் ஆகிவிட்டது. இக்கொள்கை ஜெர்மனியிலும் ஆஸ்திரேலியாவிலும் துருக்கியிலும் அளவற்ற வன்மை கொண்டுவருகிறது. ருஷ்யாவி லிருந்து இது ஆசியாவி லும் தாண்டிவிட்டது. வட ஆசியாவில் பிரம்மாண்டமான பகுதியாக நிற்கும் சைபீரியா தேசம் ருஷ்யாவின் ஆதிக்கத்தைச் சேர்ந்ததாகையால் அங்கும் இந்த முறைமை அனுஷ்டானத்திற்கு வ்ந்து விட்டது. அங்கிருந்து இக்கொள்கை மத்திய ஆசியாவிலும் பரவிவருகிறது. ஐரோப்பாவிலுள்ள பிரான்ஸ் இங்கிலாந்து முதலிய வல்லரசுகள் இந்த முறைமை தம் நாடுகளுக்குள்ளும் பிரவேசித்து வரக்கூடும் என்று பயந்து அதன் பரவுதலைத் தடுக்குமாறு பலவிதங்களில் பிரயத்தனங்கள் புரிந்து வருகிறார்கள்கள்.

ஆனால் இந்த முறைமை போர் கொலை பலாத்காரங்களின் மூலமாக உலகத்தில் பரவிவருவது எனக்கு சம்மதமில்லை. எந்தக்காரணத்தைக் குறித்தும் மனிதருக்குள்ளே சண்டைகளும் கொலைகளும் நடக்கக் கூடாது என்பது என்னுடைய கருத்து அப்படியிருக்க ஸமத்வம் ஸகோதரத்வம் என்ற தெய்வீக தருமங்களைக் கொண்டோர் அவற்றைக் குத்து வெட்டு பீரங்கி துப்பாக்கிகளினால் பரவச் செய்யும் படி முயற்சி செய்தல் மிகவும் பொருந்தாத செய்கை யென்று நான் நினைக்கிறேன். பலாத்கார்மாக முதலாளிகளின் உடமைகளையும் நிலஸ்வான்களின் பூமியையும் பிடுங்கித் தேசத்திற்குப் பொதுவாகச் செய்யவேண்டும் என்ற கொள்கை ருஷ்யாவில் வெற்றி பெற்றதற்குப்பல பூர்வ காரணங்கள் இருக்கின்றன. நெடுங்காலமாகவே ருஷ்யா தேசத்தில் ஆட்சிபுரிவோரின் நிகரற்ற கொடுங்கோன்மையாலும் அநீதங்களாலும் செல்வர்களின் குரூரத்தன்மையாலும் பலராஜாங்கப் புரட்சிகள் நடந்து வந்திருக்கின்றபடியால் இந்த மாறுதல் அங்கு அமைப்பது ஸுலபமாயிற்று மற்ற ஐரோப்பிய தேசங்களில் முதலாளிகளும் செல்வர்களும் இன்னும்

முற்றிலும் பலவீனமடைந்து போகவில்லை பெரும்பாலும் அவர்களிடத்திலேயே எல்லா பலங்களும் சக்திகலும் அமைந்திருக்கின்றன. அங்கெல்லாம் ''சோஷலிஸ்ட்'' கூட்டுறவு வாழ்க்கைக் கட்சி ருஷ்யாவிலுள்ள சக்தியும் பராக்கிரமும் பெற்றுவிடவில்லை. அங்ஙனம் பெறுவதற்குப் பலவருஷங்கள் செல்லும் என்றே தோன்றுகிறது. தவிரவும் அங்ஙனம் சோஷலிஸ்ட் கட்சியார் பலமடைந்த போதிலும் அந்த பலத்தை உபயோகிப்பது நியாயமில்லை என்று நான் சொல்லுகிறேன். ஏனென்றால் பிறர் உடமையைத் தாம் அபகரித்து வாழ வேண்டும் என்கின்ற கெட்ட எண்ண முடியவர்களும் ஸர்வ ஜனங்களும் ஸமான சௌகர்யங்களுடன் வாழ வேண்டும் என்கிற கருத்து இல்லாதபாவிகளும் தம்முடைய கொள்கை விருப்பங்களை நிறைவேற்றும் பொருட்டு வாள் பீரங்கி துப்பாக்கிகளால் அநேகரைக் கொலை செய்து ஊர்களையும் வீடுகளையும் கொளுத்தியும் அநியாயங்கள் செய்வது நமக்கு அர்த்தமாகக் கூடிய விஷயம் அங்ஙனமின்றி எல்லா மனிதரும் உடன் பிறந்த சகோதரரைப் போல் ஆவார்கள் என்றும் ஆதலால் எல்லாரையும் ஸமமாகவும் அன்புடனும் நடத்த வேண்டும் என்றும் கருதுகிற தர்மிஷ்டர்கள் தம்முடைய கருணாதர்மத்தை நிலை நிறுத்த கொலை முதலிய மகாபாதகங்கள் செய்வது நமக்குச் சிறிதேனும் அர்த்தமாகக் கூடாத விஷயம்.

கொலையாலும் கொள்ளையாலும் அன்மையும் சமத்துவத்தையும் ஸ்தாபிக்கப் போகிறோம் என்று சொல்வோர் தம்மைத்தாம் உணராத பரம மூடர்கள் என்று நான் கருதுகிறேன். ''இதற்கு நாம் என்ன செய்வோம் கொலையாளிகளை அழிக்க கொலையைத்தானே கைக் கொள்ளும்படி நேருகிறது. அநியாயம் செய்வோரை அநியாயத்தாலே தான் அடக்கும்படி நேரிடுகிறது. என்று ஸ்ரீமான் லெனின் சொல்லுகிறார். இது முற்றிலும் தவறான கொள்கை.

கொலை கொலையை வளர்க்குமே யொழிய அதை நீக்க வல்லதாகாது. அநியாயம் அநியாயத்தை விருத்தி பண்ணுமே யொழிய குறைக்காது. பாபத்தை புண்ணியத்தாலே தான் வெல்ல வேண்டும். பாபத்தை பாபத்தாலே வெல்லுவோம் என்பது அறியாதவர் கொள்கை, அதர்மத்தைத்தரமத்தால் வெல்ல வேண்டும். தீமையை நன்மையாலேதான் வெல்ல முடியும் கொலையையும் கொள்ளையையும் அன்பினாலும் ஈகையாலும் தான் மாற்ற முடியும். இது தான் கடைசிவரை கைகூடிவரக் கூடிய மருந்து மற்றது போலிமருந்து. சிறிது காலத்திற்கு நோயை அடக்கிவைக்கும் பிறகு அந்நோய் முன்னைக் காட்டிலும் ஆயிரம் மடங்கு அதிக வலிமையுடையதாய் ஓங்கிவிடும். ஒரு கொலையாளிக்கூட்டம் இன்று தன்னிடமுள்ள சேனாபலத்தாலும் ஆயுதபலத்தாலும் மற்றொரு கொலையாளிக் கூட்டத்தை அடக்கி விடக் கூடும். இதனாலே தோற்ற கூட்டம் நாளைக்கு பலம் அதிகப்பட்டு முந்திய கூட்டத்தை வென்றுவிடும். பிறகு இதைப் பழிவாங்க

முயன்று மற்றது பலவித வேலைகள் செய்து பலமடைந்து இந்தக் கூட்டத்தை அழிக்கும். இது மறுபடி தலைதூக்கி அதை அடக்கும் இங்ஙனம் தலைமுறை தலைமுறையாக இவ்விரண்டும் கூட்டங்களும் ஒன்றுக் கொன்று தீமை செய்து கொண்டே வரும். இதற்கு ஒய்வே கிடையாது. தர்மத்தாலும் கருணை யாலும் எய்தப்படும் வெற்றியே நிலைபெற்று நிற்க வல்லதாகும். இதனை அறியாதார உலக சரித்திரத்தையும் இயற்கையின் விதிகளையும் அறியாதார் ஆவர்.

மேலும் ருஷ்யாவிலும் கூட இப்போது ஏற்பட்டிருக்கும் ''சோஷலிஸ்ட்'' ராஜ்யம் எக்காலமும் நீடித்து நிற்கும் இயல்புடைய தென்று கருத வழி'யில்லை. சமீபத்தில் நடந்த மஹா யுத்தத்தில் ஐரோப்பிய வல்லரசுகள் ஆள்பலமும் பணபலமும் ஆயுத பலமும் ஒரே யடையாய்க் குறைந்து போய் மஹா பலஹீனமுள்ள நிலையில் நிற்பதை ஒட்டி, மிஸ்டர் லெனின் முதலியோர் ஏற்படுத்தியிருக்கும். ''கூட்டு வாழ்க்கைக் குடியரசை அழிக்க மனமிருந்தும் வலிமையற்றோராகி நிற்கின்றனர். நாளை இந்த வல்லரசுகள் கொஞ்சும் சக்தி யேறிய மாத்திரத்திலே ருஷ்யாவி ன்மீது பாய்வார்கள் அங்கு உடமையிழந்த முதலாளிகளும் நில ஸ்வான்களும் இந்த அரசு களுக்குத் துணையாக நிற்பர். இதனின்றும் இன்னும் கோரமானயுத்தங்களும் கொலைகளும் கொள்ளைகளும் ரத்தப் பிரவாகங்களும் ஏற்பட இடமுண்டாகும். லெனின் வழி சரியான வழியில்லை. முக்கியமாக நாம் இந்தியாவிலே இருக்கிறோமாதலால் இந்தியாவின் சாத்தியா ஸாத்தியங்களைக் கருதியே நாம் யோசனை செய்ய வேண்டும். முதலாவது இந்தியாவிலுள்ள நிலஸ்வான்களும் முதலாளிகளும் ஐரோப்பிய முதலாளிகள் நிலஸ்வான்களைப் போல ஏழைகளின் விஷயத்தில் அத்தனை அவமதிப்பும் குரூர சித்தமும் பூண்டோரல்லர். இவர்களுடைய உடமைகளைப்பிடுங்க வேண்டுமென்றால் நியாயமாகாது. அதற்கு நமது தேசத்து ஏழைகள் அதிகமாக விரும்பவும் மாட்டார்கள். எனவே கொள்ளைகளும் கொலைகளும் சண்டைகளும் பலாத்காரங்களுமில்லாமல் ஏழைகளுடைய பசி தீர்ப்பதற்குரிய வழியைத் தான் நாம் தேடிப்பிடித்து அனுஷ்டிக்க முயல வேண்டும். செல்வர்களுடைய உடைமைகளைப் பலாத்காரமாகப் பறித்துக் கொள்ளமுயலுதல் இந்நாட்டில் நாள் மேற்கூறியடி பொருந்தாவும் செய்யாது சாத்தியமும் இல்லை.

ஆனால், கோடிக்கணக்கான ஜனங்கள் வயிறு நிறைய உணவுகிடைக்கும் என்ற நிச்சயமில்லாமலும் லட்சக்கணக்கான ஒரு வேளைக் கஞ்சி கிடைக்காமலே சுத்தப்பட்டினியால் கோரமரணமெய்தும் படியாகவும் நேர்ந்திருக்கும் தற்கால நிலைமையை நாம் ஒரு க்ஷணம் கூடச் சகித்திருப்பது நியாயமில்லை என்பது சொல்லாமலே போதரும்.

எனவே, உலகத்துன்பங்கள் அனைத்திலும் கொடிதான இந்த

ஏழ்மைத்துன்பத்தை ஸமாதான நெறியாலும் மாற்றக் கூடிய உபாய மொன்றைநாம் கண்டு பிடித்து நடத்துவோமானால், அதனின்றும் நமது நாடு பயனுறுவது மட்டுமேயன்றி உலகத்தாதெல்லாரும் நம்முடைய வழியை அனுஷ்டித்து நன்மையடைவார்கள்.

பசி பட்டினியைப் போக்க வேண்டும்

மனித உடம்பில்மட்டுமல்ல, எல்லா உயிரினங்களுக்கும் பசி என்பது பொது அனைவருக்கும் பசியைப் போக்க உணவளிக்கவேண்டும். பசிக்கு உணவளிக்கும் போது, வயிறு நிரம்பி பசி நிரம்பியவுடன் மேலும் உணவு வரும்போது போதும் என்று கூறுகிறோம். போதும் என்று வயிற்றுக்கு உணவளிக்கும் போது தான் கூறுகிறோம். வேறு எதையும் போதும் என்று கூறுவதில்லை. பசிக்கு போதிய உணவு இல்லாத போது பட்டினி நிலை ஏற்படுகிறது. பட்டினியைப் போக்குவதற்கு மனிதன் தொடர்ந்து முயற்சிகளைச் செய்து வந்திருக்கிறான்.

பாரதத்தில் அந்நிய ஆட்சி இருந்தபோது பசி பட்டினியால் மக்கள் மிகவும் அதிகமாக அவதிப்பட்டிருக்கிறார்கள் பசிபட்டினியால் அவதிப்பட்ட மக்களுக்கு பட்டினியைப் போக்க வேண்டும் அன்னதானங்கள் செய்ய வேண்டும். அன்னசாலைகள் நிறுவ வேண்டும். அன்ன சத்திரங்கள் கட்ட வேண்டும் வயிற்றுக்கு சோரிட வேண்டும் இங்கு வாழும் மாந்தருக்கெல்லாம் என்று வள்ளலார் இராமலிங்கரும் மகாகவி சுப்ரமணிய பாரதியாரும் மனமுறுகி நெஞ்சுறுகிப் பாடியிருக்கிறார்கள் பேசியிருக்கிறார்கள். அன்னசாலைகள் கட்டி அன்னதானம் செய்வதை ஒரு இயக்கமாகவே வள்ளலார் நடத்தியிருக்கிறார்.

ஆலயங்களில், தர்ம சாலைகளில் பொது இடங்களில், சாலை ஓரங்களில் சந்தை கூடும் இடங்களில் திருவிழாக்களில் அன்ன தானம், குடிநீர் கொடுத்தல் பாரத நாட்டின் பண்பாட்டில் கலாச்சாரத்தின் ஒரு பகுதியாகும் அரசின் கடமைகளின் ஊர் நிர்வாகத்தின் கடமைகளில் முதன்மையானது மக்களுக்கு உணவளித்தலாகும்.

நாட்டில் நாட்டின் பகுதிகளில் இயற்கை விளைவுகளால் பஞ்ச மேற்படும் போது மக்களுக்கு உணவளிப்பது சமுதாயத்தின் முதற்கடமையாக நமது நாட்டின் சமூக நீதி பொது நீதி வகுக்கப்பட்டிருக்கிறது: நாடுகளுக்கிடையில் ராஜாக்களுக்கிடையில் போர்கள் ஏற்படும் கால்ங்களிலும் மக்களுக்கு பசி பட்டினி ஏற்பட்டு நிவாரணங்கள் கொடுக்கப் பட்டிருக்கின்றன. இவையெல்லாம் அவ்வப் போது மக்களுக்கு ஏற்பட்ட கஷ்டங்கள் இக்கஷ்டங்களை மக்கள் தங்கள் சொந்த முயற்சியாலும் அரசு உதவியாலும் தளவந்தர் உதவியாலும் இந்தக் கஷ்டங்கள் தீர்க்கப்பட்டிருக்கின்றன.

பாரத நாட்டில் ஏற்பட்ட பசி பட்டினி இன்னல்கள் பெரும்பாலும்

இயற்கை இன்னல்களால் ஏற்பட்டவைகளே போர்கள் அந்நிய படையெடுப்பு காலங்களிலும் மக்களுக்குத் துன்பதுயரங்களும் பசிபட்டினியும் ஏற்பட்டிருக்கின்றன அவை தற்காலிகமானவை.

பிரிட்டிஷ் படையெடுப்பு, படை பயணம், பிரிட்டிஷ் ஆட்சி காலங்களில் பாரத நாட்டில் ஏற்பட்ட பஞ்சம் பசி, பட்டினிக் கொடுமைகள், பாரத நாட்டின் வரலாற்றில் எக்காலத்திலும் ஏற்பட்டதில்லை. பதினெட்டு பத்தொன்பதாவது நூற்றாண்டுகளில் பிரிட்ஷ் படைகளால், ஆக்கிரமிப்பு போர்களால், பெகொடுங்கோலாட்சியால் நமது விளை நிலங்கள் பலவு பாழாயின. நீர்நிலைகள் நீர்ப்பாசன நிலைகள் சேதப்பட்டன. கோயில்கள் சிதிலமடைந்தன. போக்குவரத்து சாலைகள் நாசமாயின. உள்நாட்டு வாணிபம் சேதமடைந்தது. உள்நாட்டுத் தொழில்கள். கிராமத் தொழில்கள் குடிசைத் தொழில்கள் நலிவுற்றன. நமது கால்நடைகள் பெரும் அளவில் சேதப்பட்டன. அந்நிய ஆட்சியின் வரிக்கொடுமைகள் அளவுக்கு மீறி மக்களை வாட்டி வதைத்து. ஆங்கிலேய கம்பெனியார் அரசாங்க நிர்வாகத்தையும் வரிவசூல் கணக்குகளையும் ஒருவியாபாரக்கம்பெனி போலவே நடத்தினார்கள். அத்தகைய கொடுமைகள் காரணமாக, தமிழ்நாட்டின் வடபகுதி, ஆந்திரா ஒரிஸா, வங்காளம், பீகார் முதலிய பகுதிகளில் உணவிர்லாமல் வெறும்பட்டினியால் மட்டுமே 40-50 லட்சம் மக்கள் செத்து மடிந்தார்கள் என்று அரசாங்கக் கணக்கே கூறுகிறது. இதுவே குறைவான மதிப்பீடுதான்.

இக்காலத்தில் மக்கள் பட்ட துன்பதுயரங்களுக்கு அளவேயில்லை. ஏராளமான பேர், பர்மா, மலேசியா, சிங்கப்பூர், இலங்கை, தென் ஆப்பிரிக்கா, மத்திய ஆப்பிரிக்கா நாடுகள் மொரிஷஸ், பீஜித்தீனகள் குவானா முதலியமத்திய அமெரிக்க நாடுகள் முதலிய பல நாடுகளுக்கும் ஒப்பந்தக் கூலிகளாகச் சென்றனர். அந்தநாடுகளில் தேயிலைரப்பர், கரும்புத் தோட்டங்களிலே கடுமையான உழைப்பாளிகளாகச் சென்று பிழைப்பு நடத்தினார்கள்.

''கரும்புத் தோட்டத்திலே'' என்னும் தலைப்பில் மகாகவிபாரதியாரின் கவிதையில்

''நாட்டை நினைப்பாரோ - எந்த
நாளினிப் போயதைக் காண்பதென்றே அன்னை
வீட்டை நினைப்பாரோ? அவர்
விம்மி விம்மி விம்பி விம்மியழுங்குரல்
கேட்டிருப்பாய் காற்றே! - துன்பக்
கேணியிலே எங்கள் பெண்கள் அழுத சொல்

மீட்டும் உரையாயோ - அவர்

விம்மியழுவுந்திறங்கெட் டுப் போயினர்''

என்று மனம் குமிரிக் கண்கலங்கிப்பாடுகிறார்.

அந்த மக்கள் அனுபவித்த துன்பதுயரங்களைக் கேட்பதற்கு ஆளில்லை. பாரத நாட்டிலோ பல்லாயிரக்கணக்கான மக்கள் ஆண்களும் பெண்களும் குழந்தைகளும் மௌனமாகப் பசிபட்டினியால் செத்து மடிந்தார்கள்.

''நெஞ்சுபொறுக்கு திலையே - இந்த

நிலைகெட்ட மனிதரை நினைந்துவிட்டால்

நெஞ்சுபொறுக்குதிலையே - இதை

நினைந்த நினைந்திடினும் வெறுக்குதிலையே

கஞ்சி குடிப்பதற்கிலார் - அதன்

காரணங்கள் இவை யென்னும் அறிவுமிலார்

பஞ்சமோ பஞ்சம் என்றே -ந்தம்

பரிதவித்தே உயிர்துடிதுடித்துத்

தந்சி மடிகின்றாரோ -இவர்

துயர்களைத் தீர்க்க வோர் வழியிலையே''

என்று மகாகவி நெஞ்சுறுகப்பாடுகிறார்.

''நண்ணிய பெருங்கலைகள் - பத்து

நாலாயிரம் கோடி நயந்து நின்ற

புண்ணிய நாட்டினிலே - இவர்

பொறியற்ற விலங்குகள் போல வாழ்வார்''

என்று மனம் நொந்து அந்தப்பாட லை முடிக்கிறார்

அந்நியர் ஆட்சிகாலத்தில் பாரத மக்கள் பசி பட்டினியால் பல்லாயிரக்கணக்கில் செத்து மடிந்ததைக் கண்டு கேட்டு உள்ளம் உறுகி வள்ளலாரும், மகாகவி பாரதியும் பாடியுள்ளார்கள். அன்னசால்கள் அமைத்து மக்களுடைய படி பட்டினியைப் போக்கும்படி வேண்டினார்கள்.

அந்நிய ஆட்சியாளர்கள் பல்லாயிரக்கணக்கான மக்களை ஒப்பந்தக் கூலிகளாகத் தொலைதூர நாடுகளுக்கு அனுப்பிவைத்தார்கள்.

ஐரோப்பிய நாடுகளில் இக்காலத்தில் குறிப்பாக ப்தினேழு,

பதினெட்டாம் நூற்றாண்டுகளில் மன்னர்கள் நிலப் பிரபுகள், கத்தோலிக்க மதநிறுவனத்தலைவர்கள் மடாலயத்தலைவர்கள் ஆகியோருக்கு எதிராகவும் பட்டினிக் கொடுமைகளுக்கு எதிராகவும் பெரும் கலவரங்கள் ஏற்பட்டன. ஆரம்பத்தில் இக்கலவரங்களுக்கு நவீன எந்தித் தொழில் அதிபர்களும் முதலாளிகளும் நிலப்பரபுக்களின் எதேச்சாதி காரங்களுக்கெதிரான கலவரங்களுக்குத் தலைதாங்கினார்கள். பலநாடுகளில் மன்னராட்சி முறை வழிக்கப்பட்டும் மாற்றப்பட்டும் மக்கள் பிரதி நிதிகளைக் கொண்ட ஆட்சிகள் அமைந்தன. கத்தோலிக்க மத்திய (ரோமாபுரி) தலைமைக்கு எதிராக பல கலவரங்கள் நடைபெற்று அந்தந்த நாடுகளில் சுதந்திரமான திருச்சபைகள் தோன்றி மக்களிடம் நிலை பெற்றன. பிரிட்டனின் புராட்டஸ்டென்ட் சபை ஏற்பட்டது. ஜெர்மெனியில்லுதான் சபைஏற்பட்டது. ரஷ்யாவில் அர்த்த டாக்ஸ் ரஷ்ய திருச்சபை ஏற்பட்டது. வேறுசில ஐரோப்பியநாடுகளிலும் தேசிய அளவிலான திருச்சபைகள் ஏற்பட்டன. இதனால் பலகலவரங்களும் படுகொலைகளும் சிலுவையுத்தங்களும் கூட நடைபெற்றன. ஐரோப்பிய நாடுகளின் அரசியலில், மன்னர்கள் நிலப்பரபுக்கள், மத, மட நிறுவனங்களின் ஆதிக்கம் குறைந்தும் அவை நீக்கப்பட்டும் ஆட்சி மாற்றங்கள் ஏற்பட்டு, புதிய ஆட்சிகள் ஏற்பட்டன.

நவீன எந்திரத் தொழில் முதலாளிகள் ஆதிக்கம் அதிக மாயிற்று புதிய எந்திரத்தொழில்கள் பரவியதால் பழய கைவினைத் தொழில்கள் அழிந்து பல்லாயிரக்கணக்கான பலலட்சக்கணக்கான தொழிலாளர்களும் கிராம்ப்புறமக்களும் வேலையிழந்து தெருவில் தள்ளப்பட்டார்கள். பசி பட்டினியால் அவர்கள் அவதிப்பட நேர்ந்தது. பெரும் அளவில் பட்டினி ஊர்வலங்களும், கிளர்ச்சிகளும், கலவரங்களும், ஏற்பட்டன. பலலட்சக்கணக்கான தொழிலாளர்கள் பிறநாடுகளுக்கு குறிப்பாக தென்ஆப்பரிக்காநாடுகள் ஆஸ்திரேலியா, நியுசிலாந்து, வட அமெரிக்கா, கானடா முதலிய நாடுகளுக்கு அனுப்பப்பட்டார்கள் அங்குள்ள உள்நாட்டு சுதேசி மக்களைக் கொன்று குவித்து இன அழிப்பு செய்து ஐரோப்பியர்கள் குறிப்பாக ஆங்கிலேயர் ஆதிக்கத்தில் குடியேறினார்கள். இதில் ஆஸ்திரேலியா, நியூசிலாந்து, கானடா, வட அமெரிக்காவில் பூர்வீகமக்கள் ஆங்கிலேயர்களின் இன அழிப்புக் கொள்கையால் அழிந்தே போனார்கள் வட அமெரிக்காவில் ஆங்கிலேயர் மட்டு மல்லாமல் இதா ஐரோப்பியர்களும் குடியேறினார்கள். ஆனாலும், ஆங்கிலேயர்களின் ஆதிக்கம் நீடித்தது. வட அமெரிக்காவின் தொற்பகுதிகளில் வெப்பம் அதிகமாக இருந்தபகுதிகளில் ஐரோப்பியர்கள் அதிகமாக ஆங்கிலேயர்கள், தென் ஆப்பிரிக்க நாடுகளில் வாழ்ந்து வந்த கருப்பு இனமக்களை அடித்து அடிமைப்படுத்தி விலங்கிட்டு வட அமெரிக்காவிற்குக் கொண்டு அடிமைகளாக வேலைக்கு அமர்த்தினார்கள்.

மக்கள் குடியிருப்புகளும் பூர்வீகக் குடிகளின் கூட்டமும் அதிகமாக இருந்த தென் ஆப்பிரிக்கப்பகுதிகளில் பூர்வீகமக்களைக் கொன்று குவித்து இன அழிப்பு செய்தும் அந்த நாடுகளிலும் ஆங்கிலேயர் குடியேறினார்கள். ஆயினும் அங்கு ஆங்கிலேயர்களும் இதர ஐரோப்பியரும் சிறுபான்மையராகவே ஆட்சி அதிகாரத்தில் அமர்ந்து கொண்டார்கள்.

ஆஸ்திரேலியா, நியூசிலாந்து நாடுகளில் ஆங்கிலேயர்கள் முழுமையாக ஆக்கிரமித்துக் கொண்டு குடியேறினார்கள் கனடாவில் ஆங்கிலேயரும் பிரஞ்சுக்காரர்களும் குடியேறினார்கள். வட அமெரிக்காவில் ஆங்கிலேயர்கள் பெரும்பகுதியும் இதர ஐரோப்பியரும் குடியேறினார்கள். பல்வேறு துறைகளின் கடின வேலைகள் உடலுழைப்பு வேலைகளுக்காக ஆப்பிரிக்க நாடுகளிலிருந்து மக்களை அடிமைப் படுத்தி விலங்கிட்டு வட அமெரிக்காவிற்குக் கொண்டுவரப்பட்ட கட்டாய வேலை வாங்கப்பட்டார்கள்.

தென் அமெரிக்க ஆநடுகளில் முதலில் குடியேறியவர்கள் ஸபானிஷ் காரர்களும் போர்த்துக்கீசியர்களு மாகும். அத்துடன் இதர ஐரோப்பியர்களும் குடியேறினார்கள். ஆங்கிலேயர்களின் ஆதிக்கத்தில் இருந்தபகுதிகளில் ஆப்பிரிக்கர்கள், இந்தியர்கள் மற்றும் இதர ஆசிய மக்களும் குடியேறினார்கள். தென் அமெரிக்க நாடுகளுக்கு லத்தீன் அமெரிக்க நாடுகள் என்று ஒரு பெயரும் உண்டு. இந்த நாடுகளில் பெரும்பாலும் ஸ்பானிஷ் மொழியும் போர்த்துக் கீசிய மொழியும் பேசுகிறார்கள். இந்த நாடுகளின் பூர்வீக மக்கள் எண்ணிக்கை குறைந்து குடியேறிய மக்களுடன் பெரும்பாலும் கலந்து விட்டார்கள். அடிமைகளாகக் கொண்டுவரப்பட்ட ஆப்பிரிக்கமக்கள் பின்னர் அடிமை நிலை நீக்கப்பட்டு சிறுபான்மை மக்களாக நீடித்து வட அமெரிக்காவிலேயே அமெரிக்க பிரஜைகளாக வாழ்ந்து வருகிறார்கள்.

இந்தியாவிலும் இதர ஆசிய நாடுகளிலும் அராபிய நாடுகளிலும் வட ஆப்பிரிக்களிலும் ஏற்கனவே ஸ்திரமானவளர்ச்சி பெற்ற உள்நாட்டு மக்கள் நிரம்பியிருந்தால் அவர்களை அழித்துவிட்டு ஐரோப்பியர்கள் குடியேற முடியவில்லை. இந்தியா போன்ற பழைய நாகரிகம் மிக்க நாடுகளின் கலாச்சாரம் ஆங்கிலேய கலாச்சாரத்தையும் ஐரோப்பிய கலாச்சாரத்தையும் வென்று விடுதலை பெற்று விட்டது.

ஐரோப்பிய நாடுகளில் நிலப்பரபுத்வ மன்னர், மதம் மடம் ஆகியவற்றின் கூட்டாட்சிக்கு எதிராகக் கலவரங்கள் நடந்து நவீன எந்திரத் தொழில் முதலாளிகளின் ஆட்சி ஏற்பட்ட போது, பல்லாயிரக்கணக்கான பலட்சக் கணக்கான தொழிலாளர்கள் வேலையின்றி பசி பட்டினியால் தவித்த போது அவர்கள் தங்களுக்கு வாழ்வளிக்க வேலை கோரி பெரும் கிளர்ச்சியும் போராட்டங்களும் நடத்தினார்கள். அவர்களின் உரிமைகள் சிலவற்றை, காலனி நாடுகளிலிருந்து கிடைத்த கொள்ளை மூலம் நிறை வேற்றினார்கள்.

ஐரோப்பிய தொழிலாளர்களில் பிரிட்டிஷ் தொழிலாளர்கள் சற்று அதிகமான சலுகைகளை வசதிகளைப் பெற்றார்கள் ஆயினும் ஐரோப்பிய தொழிலாளர்களின் கிளர்ச்சி ஓயவில்லை.

இதற்கிடையில் பிரிட்டன் பிரான்ஸ் அமெரிக்கா ரஷ்யா ஒருபக்கம், ஜெர்மனி இத்தாலி துருக்கி, ஜப்பான் ஆஸ்திரியாஹங்கேரி மறுபக்கம் ஐரோப்பிய நாடுகளுக்கிடையில் தொழில் போட்டி வியாபாரப் போட்டி, காலனி ஆதிக்கப் போட்டி ஆகியவை முற்றி இந்த ஐரோப்பிய நாடுகளுக்கிடையில் 1914-ஆம் ஆண்டு போர் மூண்டது. இந்த நாடுகள் தங்கள் காலனி நாடுகளையும் போரில் ஈடுபடுத்தியது. அதனால் போர் நடவடிக்கைகள் உலகம் முழுவதும் பரவி உலகப் போராக வடிவெடுத்து ஒரு பயங்கரமான உலகப் போராக நடைபெற்றது இது முதலாவது உலக மகாயுத்தம் என்று வரலாற்றில் இடம் பெற்றது. இந்தப் பெரும் போரில் ஈடுபட்ட நாடுகள் தங்கள் ஆள்பலம் ஆயுத பலம் அரசியல் பலம் ராஜதந்திரபலம் அனைத்தையும் ஈடுபடுத்திப் போரில் மூழு மூச்சில் ஈடுபட்டது.

இந்த நேரத்தில் ரஷ்ய சாம்ராஜ்யம் ஜார் ஆட்சியின் கீழ் மிகுந்த அரசியல் பொருளாதார நெருக்கடிக்குள்ளாயிருந்தது.

உலகப் போரில் ஈடுபட்ட போது அந்த கட்சி மேலும் அதிகமான அரசியல் பொருளாதார நெருக்கடியை சந்திக்க வேண்டிய தேற்பட்டது. ரஷ்யாவின் ஐரோப்பிய பகுதியில் தான் தொழில்களெல்லாம் கடுமையான நெருக்கடிக்குள்ளாகியிருந்தன. நிலப்பிரபுக்கள் மற்றும் மத மட நிறுவனங்கள் மக்கள் மீது கொடுமையான ஆதிக்கத்தையும் அதிகாரத்தையும் செலுத்தின.

''இரணியன் போல் அரசாண்டான் கொடுங்கோலன்
ஜாகரனும் பேரிசைந்தபாவி
சாணின்றித் திட்டார் நல்லோரும்
சான்றோரும் தருமந்தன்னைத்
திரணமெனக் கருதிவிட்டான் ஜார் மூடன்
பெய் சூது தீமை யெல்லாம்
அரணியத்திற் பாம்பு போல மலிந்து வளர்ந்
தோங்கினவே அந்த நாட்டில்
உழுது விதைத் தறுப்பாருக் குணவில்லை
பிணிகள் பலவுண்டு; பொய்யைத்

தொழு தடிமை செய்வார்க்குச் செல்வங்க
ளுண்டு உண்மை சொல் வோர்க் கெல்லாம்
எழுதரிய பெருங்கொடுமைச் சிறையுண்டு
தூக்குண்டே யிறப்பதுண்டு
முழுது மொரு பேய்வனமாசி வேரியிலே
கவிகெட முடிவதுண்டு
இம்மென்றால் சிறை வாசம் ஏனென்றால்
வனவாசம் இவ்வாறங்கே
செம்மையெல்லாம் பாழாகிக் கொடுமையே
அறமாகித் தீர்ந்த போதில்
அம்மைமனம் கனிந்திட்டாள் அடிபரவி
உண்மை சொலும் அடியார் தம்மை
மும்மையிலும் காத்திரு நல் வழியாலே
நோக்கினாள் முடிந்தான் காலன்
மகாளி பராசக்தி உருகிய நாஆட்டில்
னிற் கடைக்கண் வைத்தாள் அங்கே.
ஆகாவென்றொழுந்தது பார் யுகப் புரட்சி
கொடுங்கோலன் அலறி வீழ்ந்தான்

இவ்வாறு அங்கே நிலப்பரபுக்களுக்கும் ஜார் ஆட்சிக்கும் ஞ்ளடூததிட்ரராக 1917-ம் ஆண்டு பிப்ரவரிமாதம் பெரும்புரட்சி மக்கள் திரண்டு கலவரம் நடத்தி ஜார் மன்னன் வீழ்ச்சியடைந்து, நிலப்பரபுக்களுக்கும் எதிராக ஒரு ஜனநாயக ஆட்சி கெரென்ஸ்கி என்பவர் தலைமையில் ஏற்பட்டது.

1917-ஆம் ஆண்டு பிப்ரவரி புரட்சிக்குப் பின்னரும், கெரென்ஸி தலைமையிலான முதலாளித்வத்தலைமையிலான புரட்சிக்கு எதிராக லெனின் தலைமையிலான் சமூக ஜனநாயகத் தொழிலாளர் கட்சியின் போல்ஷி விக் பிரிவு தொடர்ந்து தொழிலாளர் விவசாயிகள் = ராணுவ வீரர்களின் புரட்சிப் படைகளுக்குத் தலைமை தாங்கி நாடெங்கும் சோவியத் என்னும் பஞ்சாயத்து நிர்வாக அமைப்புகள் உருவாக்கப்பட்டு சோவியத் அமைப்புகள் நாடுமுழுவதிலும் அனைத்து அரசு நிர்வாகங்களையும் தங்கள் கையில்

எடுத்துக் கொண்டது.

1917 அக்டோபர் மாதம் எல்லா அதிகாரமும் சோவியத்துகளுக்கே என்னும் கோஷத்தினடிப்படையில் லெனின் தலைமையிலான புரட்சிப் படைகள் கெரென்ஸி அரசை வீழ்த்தி விட்டு மத்திய ஆட்சி அதிகாரத்தை எடுத்துக் கொண்டது. இவ்வாறு ரஷ்யசமூக ஜனநாயகத் தொழிலாளர்கட்சியில் லெனின் தலைமையிலான பெரும்பான்மைப் (போல்ஷி விக்) பிரிவு அரசியல் அதிகாரத்திற்கு வந்தது. இவ்வாறு லெனின் தலைமையிலான தொழிலாளர் கட்சியின் பெரும்பான்மைப் பிரிவு ரஷ்யக்கம்யூனிஸ்ட் கட்சி என்று பெற்று லெனின் தலைமையின் கீழ் ரஷ்யாவின் புதிய புரட்சி கர அரசின் தலைமைக்கு வந்தது.

லெனின் தலைமையில் மத்திய சோவியத் தனது முதல் நடவடிக்கையாக நிலப்பரபுக்களின் ஆதிக்கத்தில் இருந்த நிலத்தை விவசாயிகளுக்கு பங்கிட்டுக் கொடுத்தது நாட்டின் தொழிற்சாலைகள் எல்லாம் நாட்டின் பொதுச் சொத்தாகமாற்றப்பட்டது. சகய விதத்திலும் பெண்களுக்கு ஆண்களுடன் சம உரிமை வழங்கப்பட்டது.

அனைவருக்கு எட்டாண்டு ஆரம்பக்கல்வி கட்டாயமாக்கப்பட்டது.

மத்தியில்லெனின் தலைமையில் ரஷ்யக் கம்யூனிஸ்ட் கட்சித் தலைமை ஆட்சியின் அமர்ந்த போதிலும் நாடு முழுவதிலும் அமைந்திருந்த கிராம, நகர, பிராந்திய சோவியத்துகளில் சமூகப் புரட்சிக் கட்சி (சோஷியல் ரெவலுஷனரிஸ்) என்றும் அமைப்பைப் சேர்ந்தவர்கள் தான் நிர்வாகப்பொருப்பில் பெரும்பான்மையினராக இருந்தனர். அதில் கம்யூனிஸ்டுகளுக்கு (போல் ஷிவிக்குகளுக்கும்) சமூகப் புரட்சியாளர் கட்சியினருக்கும் கடுமையான ஆயுத மோதல் ஏற்பட்டுக் கடைசியில் நாடு முழுவதிலும் எல்லா சோவியத் அமைப்புகளிலும் (போல்ஷிவிக்குகள்) கம்யூனிஸ்டுகள் வெற்றி பெற்று ஆட்சி அதிகாரத்தைக் கைப் பற்றினார்கள்.

கொரன்ஸகிதலைமையிலான படைகள் மத்திய சோவியத் ஆட்சிக் கெதிராகப் போர் தொடுத்தது கெரென்ஸ்கி படைகளுக்கு அண்டைநாடுகளின் சில படைகளும் ஆதரவளித்தன. உதுவி செய்தன. இருப்பினும் கெரென்ஸ்கி படைகள் முறியிக்கப் பட்டன. சோவியத் படைகள் வெற்றி பெற்றன. லெனின் தலைமையிலான சோவியத் ஆட்சி மேலும் நிலை பெற்ற கூறுதிப்பட்டது.

1918-ஆம் ஆண்டில் முதலாவது உலகப் பெரும் போரில் ஜெர்மெனி இத்தாலி நாடுகள் தோல்வியடைந்தன. ஆங்கிலோ, அமெரிக்கன் பிரஞ்சு நேசநாடுகள் வெற்றி பெற்றன. அதன்பின்னர் பதினான்கு ஐரோப்பிய நாடுகளைச் சேர்ந்த படைகள் புதியதாக அமைந்திருந்த சோவியத் நாட்டின் தலையிட்டு அதன் மீது படையெடுத்தன. அதை தலையிட்டு யுத்தம் என்று

ரஷ்யவரலாற்றில் குறிப்பிடுவார்கள்.

1922-ஆம் ஆண்டிற்கு ஜார் கட்சியின் கீழ் இருந்த காலனி நாடுகளும் சுயநிர்ணய உரிமை பெற்று ரஷ்ய நாட்டுடன் இணைந்து சோவியத் யூனியன் (Union of soviet socialist republics - சோவியத் சோஷலிஸ்ட் குடியரசுகளில் ஒன்றியம்) என்று பெயர் பெற்றது.

பதினான்கு ஐரோப்பியநாடுகளின் தலையீட்டு யுத்தத்திலும் புதியதாக அமைந்த சோவியத் யூனியன் வெற்றி பெற்றது. மீண்டும், ஐரோப்பிய ஏகாதிபத்யநாடுகளின் உதவி பெற்று, சோவியத் அமைப்பிற்கு எதிரான உள்நாட்டு சக்திகள் உள்நாட்டுக் கலவரத்தைக் கிளப்பின. உள்நாட்டுக் கலவரங்களும் நான்கைந்து ஆண்டுகள் நீடித்தன. அந்த உள்நாட்டுக் கலவரங்களையும் சமாளித்து சோவியத் ஆட்சி நிலைபெற்று உறுதிப்பட்டது.

இருப்பினும் இந்த ஆண்டுகளில் இதரபல ஐரோப்பிய நாடுகள் பெருளாதார பகிஷ்காரம் செய்தது. சோவியத் நாட்டுடன் இதர நாடுகள் பொருளாதாரவர்த்தக உறவுகளைவைத்துக் கொள்ளவில்லை. சோவியத் பொருளாதாரமும் வர்த்தகமும் தனிமைப்பட்டு நின்றது.

இத்தனை இடையூறுகள் தலையீடுகள், பகிஷ்கரிப்பு களுக்கிடையில் 1930-ஆம் ஆண்டுகளில் ஐந்தாண்டு திட்டங்கள் மூலம் வளர்ச்சி பெறத் தொடங்கியது. 1936-38 ஆண்டுகளில் இதர முதலாளித்வ நாடுகளில் ஏற்பட்ட மிகப் பெரிய பொருளாதர நெருக்கடி, சோவியத் பொருளாதாரத்தை அதிகமாக பாதிக்கவில்லை.

ரஷ்யாவில் லெனின் தலைமையில் வன்முறைகள் மூலம் வெற்றி பெற்றதற்கு சில தனி காரணங்கள் உள்ளன என் பதற்கான காரணங்களும் அதற்கான வாய்ப்புகளும் பற்றி பாரதியே கூறுகிறார். ''பலாத்காரமாக முதலாளிகளின் உடைமைகளும் நிலஸ்வான்களின் பூமியையும் பிடுங்கித் தேசத்திற்குப் பொதுவாகச் செய்ய வேண்டும் என்றும் கொள்கை ருஷ்யாவில் வெற்றி பெற்றதற்குப் பல பூர்வ காரணங்கள் இருக்கின்றன. நெடுங்காலமாகவே ருஷ்யா தேசத்தில் ஆட்சி புரிவோரின் நிகரற்ற கொடுங்கோன்மையாலும் அந்தங்களாலும் செல்வர்களின் குரூரத்தன்மையாலும் பல ராஜாங்கப்புரட்சிகள் நடந்து வந்திருக்கின்ற படியால் இந்த மாறுதல் அங்கு அமைப்பது சுலபமாயிற்று'' என்று குறிப்பிடுகிறார்.

1930ஆம் ஆண்டுகளில் சோவியத் பொருளாதாரம் அந்த நாட்டின் விவசாய உற்பத்தி, தொழில் உற்பத்தி, உள்நாட்டு வியாபாரம் ஆகியவை ஐந்தாண்டு திட்டங்கள் மூலம் ஸ்திரமடையத் தொடங்கியது. மற்றபக்கம், ஜெர்மனி, இத்தாலி ஸ்பெயின் முதலிய நாடுகளில் தோன்றி வளர்ச்சி பெற்ற பாஸிஸக் கொள்கைகள் சோவியத் எதிர்ப்பை கம்யூனிஸ்ட் எதிர்ப்பைக் கடுமையாகக்

கக்கின.

மறுபக்கம் இந்த ஆண்டுகளில் மூன்றாவது கம்யூனிஸ்டு அகிலத்தின் கிளைகள், ஐரோப்பா, ஆசியா, லத்தீன் அமெரிக்கநாடுகளில் பரவின. அவையெல்லாம் அவர்கள் நாடுகளில் சோவியத் ஆதரவுக் கொள்கையும், மார்க்சிய லெனினிய தத்துவங்களும் பரவுவதற்குத் துணையாக இருந்தன. மறுபக்கம் கம்யூனிஸ்ட் எதிர்ப்புக் கொள்கைகளும் தொடர்ந்து கடுமையாகப் பிரசாரம் செய்யப் பட்டன. பல நாடுகளில் கம்யூனிஸ்ட் கட்சிகள் தடை செய்யப்பட்டன. இந்தியாவில் கம்யூனிஸ்ட் கட்சி தடை செய்யப்பட்டது கம்யூனிஸ்டுகள் கைது செய்யப்பட்டு சிறையிலடைக்கப்பட்டார்கள். கம்யூனிஸ்ட் அமைப்புகள் மறைமுகமாகவே இருந்து கொண்டேதான் தங்கள் கருத்துக்களை பிரச்சாரம் செய்யவேண்டிய திருந்தது. கம்யூனிஸம் மார்க்சிஸம் லெனினிஸம் பற்றி நூல்கள் இந்தியாவில் கிடைப்பது அரிதாக இருந்தது. பிரிட்டன் மூலமாகச் சில ஆங்கில மொழி நூல்கள் மறைமுகமாக இந்தியாவுக்குள் கொண்டுவரப்பட்டன. இந்திய மொழிகளில் மார்க்சிய நூல்கள் அநேகமாகக் கிடைப்பது அரிதாக் இருந்தது.

ஜெர்மனி, இத்தாலி முதலிய நாடுகளில் கடுமையான சோவியத் எதிர்ப்பு கம்யூனிஸ்ட் எதிர்ப்பு இயக்கம் தோன்றி அது ஐரோப்பாவில் பரவியபோது 1936-37 ஆண்டுகளில் மூன்றாவது கம்யூனிஸ்ட் அகிலத்தின் மூலம் ஐரோப்பில் பாஸிஸ்டு எதிர்ப்பு இயக்கமும் உருவாகி வளர்ந்தது.

ஜெர்மனியில் ஹிட்லர் தலைமையில் ராஜிக் கட்சி என்று பெயரிலும் இத்தாலியில் முஸோலின் தலைமையில் பாஸிஸ்ட் கட்சி என்னும் பெயரிலும் ஆட்சி அதிகாரத்திற்கு வந்தன. அந்தக் கட்சிகளின் நோக்கம் கம்யூனிஸ்ட் எதிர்ப்பு உலக ஆதிக்கம். இந்த இருகட்சிகளை முதலில் ஐரோப்பிய வல்லரசுகள் சோவியத் எதிர்ப்பில் ஊக்க மூட்டின. பின்ன வளர்த்த கெடமார்பில் பாய்ந்ததைப் போல அந்த இரு நாடுகளும் ஜெர்மனியும் இத்தாலியும் ஜப்பானும் சேர்ந்து கொண்டு அச்சு நாடுகள் என்னும் பெயரில் 1939ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் மூன்றாவது உலகப் போரைப் பிரகடனம் செய்தது ஜெர்மனி பிரான்ஸ் பிரிட்டன் மீதும், இத்தாலி வடக்கு ஆப்பிரிக்கா நாடான எதியோப்பியா மீதும் ஜப்பான் கொரியா மீதும் பின்னர் அமெரிக்கா சீனா நாடுகள் போர் தொடுத்தன.

ஜெர்மன் நாஜி படைகள் வெகுவேகமாக முன்னேறி பிரான்ஸ் ஐரோப்பியநாடுகள் முழுவதையும் கைப்பற்றிக் கொண்டது. 1940 ஜூன் மாதம் அச்சு நாடுகள் மூன்றும் சோவியத் யூனியன் மீது போர் தொடுத்தன. சோவியத் யூனியனின் மேற்கு எல்லையில் போர் தொடுத்த ஜெர்மனி விரைவில் கிழக்கு ஐரோப்பிய நாடுகளைக் கைப்பற்றிக் கொண்டு சோவியத் எல்லையில் புகுந்தது.

இரண்டாவது உலகப் பெரும்போர் மிக உக்கிரமாக நடைபெறலாயிற்று.

இருதரப்புகளிலும் கடும் சேதம் ஏற்பட்டது. நாஜி படைகள் சோவியத் யூனியன் எல்லைகுள் வெகு தொலைவு முன்னேறிவிட்டது.

நாஜி படைகள் லெனின் கிராட், மாங்கோ, ஸ்டாலின் கிராரு நகர எல்லைகளை நெருங்கி விட்டது. அந்த எல்லைகளில் நாஜி படைகள் தடுத்து நிறுத்தப் பட்டன. சோவியத்யூனியன் எல்லைக்குள் 40 சதவீத விலை நிலம் 60 சதவீத தொழில் பகுதிகள் நாஜி ஆக்கிரமிப்பின் கீழ் வந்துவிட்டன. நாஜிபடைகள் ஆக்கிரமித்தபகுதிகளைப் பயன்படுத்த முடியவில்லை. மக்களுடைய எதிர்ப்பு கடுமையாக இருந்தது. சோவியத் மக்களின் தேசபக்த உணர்வு உச்சத்திற்குச் சென்றது. நாஜிப்படைகள் தடுத்து நிறுத்தப்பட்டது. அப்படைகளால் முன்னேறமுடியவில்லை. உலக வரலாற்றில் இப்படிப் பட்ட உக்கிரமமான போர், போர்ச் சேதங்கள், போர் அழிவுகள், போர் நாசங்கள் இதுவரை ஏற்பட்டதில்லை.

ஐரோப்பா முழுவதையும் பிரான்ஸ் உட்பட நாஜி ஜெர்மடைகள் கைப்பற்றியிருந்தது. பிரிட்டன் மீது (லண்டன்) குண்டுகள் பேய் மழையாகப் பெய்து கொண்டிருந்தது அந்த மண்ணுக்குள் நாஜி படைகள் செல்ல வில்லை. அமெரிக்க ஐக்கியநாடுகள் தனது மண்ணுக்கு வெளியில் இருந்துதான் நடத்திக் கொண்டிருந்தது ஆயினும் எல்லாநாடுகளுக்கும் அளவு கடந்த பொருட்சேதமும் உயிர்ச் சேதமும் ஏற்பட்டது. கிழக்கில் சீன மண்ணில் ஜப்பான்புகுந்தது. சீனக்கம்யூனிஸ்ட் படைகள் தேசியப் பட்கள் ஜப்பானை எதிர்த்து கடும் போர் நடத்தியது.

1945-ஆம் ஆண்டில் நேச நாடுகள் வெற்றிபெற்றன. அமெரிக்க அதிபர் ரூஸ்வெல்ட், பிரிட்டிஷ் பிரதமர் சர்ச்சில், சோவியத் யூனியன் தலைவர் ஜோஸப் ஸ்டாலின் ஆகிய தலைவர்கள் வெற்றி பெற்ற நாடுகளின் தலைவர்கள் நாஜி ஜெர்மனி, பாஸிஸ்டு இத்தாலி, ஜப்பான் தோல்வியுற்று சரணாகதியடைந்தனர்.

சோவியத் படைகள் ஜெர்மனியின் தலைநகர் பெர்லின்வரை சென்று பெர்லின் நகரைக் கைப்பற்றி ரிச்ஸ்டாக் என்றும் பெயருள்ள ஜெர்மன் பாராளுமன்றத்தின்மீது சோவியத் யூனியன் தனது வெற்றிக் கொடியை நாட்டியது 1945 ஆண்டு ஜூன் மாதம் இரண்டாம் உலகப் போர் ஒரு முடிவுக்குவந்தது.

இரண்டாவது உலகப் பெரும் போர் முடிந்த போது சோவியத் யூனியன் படைகள் நாஜிப் படைகளைதுரத்திக் கொண்டு பெர்லின் வரை சென்றபோது இடைப்பட்ட கிழக்கு ஐரோப்பிய நாடுகளை நாஜிப்படைகளிடமிருந்து விடுவித்துக் கொண்டு சென்ற போது போலந்து, செக்கோஸ்லோ வேகியா, ஹங்கேர், பல்கேரியா, குமேனியா, அல்பேனியா ஆகிய நாடுகளில் தொழிலாளர்கட்சிகளின் ஆட்சி ஏற்பட்டது. லிது வேனியா எஸ் டோனியா லாட்விலா ஆகிய நாடுகள் நாஜி படைகளிடமிருந்து விடுதலை பெற்று

சோவியத் யூனியனுடன் இணைந்த குடியரசு களாயின. யுகோஸ் பாவியா நாடும் விடுதலை பெற்று அங்கும் தொழிலாளர்கட்சி ஆட்சி ஏற்பட்டது. பெர்லின் நகரைத் தலைமையாகக் கொண்ட கிழக்கு ஜெர்மனியிலும் தொழிலாளர்கட்சி ஜெர்மன் சோஷலிஸ்டு ஐக்கியக்கட்சியின் தலைமையில் தொழிலாளர் ஆட்சி ஏற்பட்டது.

பின்னர் 1945-ஆம் ஆண்டில் உலகப்போர் முடிந்தவுடன். உலக நாடுகள் கூடி ஐக்கிய நாடுகள் சபை அமைக்கப்பட்டது. ஐக்கிய நாடுகள் சபை சார்பில் பிரகடன் செய்யப்பட்டு, ஐக்கிய நாட்டு சபை சாஸனம் ஒன்று வெளியிடப்பட்டது. அதன்படி எல்லா நாடுகளும் சுதந்திரம் பெற்று சுதந்திர நாடுகளாக வேண்டும் என்றும் அந்த சுதந்திரநாடுகள் ஐக்கிய நாடுகள் சபையில் அங்கம் பெற வேண்டும் என்றும் தீர்மானம் வெளியிடப்பட்டது.

ஐக்கியநாடுகள் சபையின் வழி காட்டியாக ஒருபாதுகாப்பு கவுன்சில் அமைக்கப்பட்டது. அந்தப்பாதுகாப்புகவுன்சில் அமைப்பில், அமெரிக்கப்பட்டது. அந்தப் பாதுகாப்புகவுன் சில் அமைப்பில், அமெரிக்கா பிரிட்டன், பிரான்ஸ் சோவித்யூனியன் சினா ஆகிய நாடுகள் நிரந்தர உறுப்பினர்களாகவும் ஐநா சபையின் தீர்மானத்தையும் ரத்து செய்யும் அதிகாரம் படைத்த நாடுகளாகவும் அறிவிக்கப் பட்டன. ஐக்கிய நாடுகள் சபை பற்றிய முழுவிவரங்களையும் அதன் வரலாற்றையும் தேவைப்பட்டால் தனியாகப் படித்துக் கொள்க.

ஐக்கிய நாடு சபை அமைந்திருப்பது உலக வரலாற்றில் முக்கியமான மிக முக்கியமான முதல் நிலையான நிகழ்ச்சியாகும். முதலாவது உலக யுத்தம் முடிந்தவுடன் லீக் ஆப் நேஷன்ஸ் என்னும் அமைப்பு ஏற்பட்டு அது பின்னர் வல்லரசுகளின் ஆதிக்கம் பெற்று சக்தியிழந்து போய்விட்டது. ஆனால், இப்போது ஏற்பட்டுள்ள ஐக்கிய நாட்டு சபை செயல்பாடுபற்றி ஆரம்பத்தில் சில சந்தேகங்கங்கள் இழந்த போதிலும் ஐநா சபை ஒரு உல சபையாக நிலைத்து விட்டது. உலகின் பல நாடுகளும் காலனி ஆதிக்கத்திலிருந்து விடு தலை பெற்று சுதந்திர நாடுகளாக ஐநா சபையில் அங்கம் பெற்றன. உலகின் பல பெரிய தலைவர்களெல்லாம் ஐநா பொது சபைக்கூட்டங்களில் பேசினார்கள் பொது சபைக் கூட்டங்களில் சிறந்த பல தீர்மானங்களும் நீறைவேற்றப்பட்டன.

ஐரோப்பியநாடுகள், அராபிய நாடுகள் அனைத்தும் ஐ.நா சபையில் அங்கம் பெற்றன. இந்தேனேஷியா இந்தியா, பிலிம்பைன்ஸ், இலங்கை பர்மா, மலேசியா, சிங்கப்பூர் முதலிய பல ஆசியநாடுகளு ம் ஐ.நா சபையில் அங்கம் பெற்றன. தென் அமெரிக்க நாடுகள் பலவும் விடுதலை பெற்று ஐ.நாசபைய்யில் அங்கம் பெற்றன. ஆப்பிரிக்க ஆநடுகள் பலவும் விடுதலை பெற்று ஐ.நா.வில் அங்கம் பெற்றன. கடைசியாக தென் ஆப்பிரிக்காவுக்கு குடியரசு நிறவெறியிலிருந்து விடுதலை பெற்று சுதந்திர நாடாக ஐ.நா

சபையில் அங்கம் பெற்றது. இவ்வாறு உலக அரங்கில் ஐக்கிய நாட்டு சபை ஒரு செல்வாக்கு மிக்க சபையாக உலக சமாதானத்தை உறுதிப்படுத்தும் சபையாகபடிப்படியாக ஓரளவு செல்வாக்கு பெற்றுவந்தது.

சீனாவில் கம்யூனிஸ்ட் ஆட்சி

சீனாவில் சியாங்காங்சேஷக் தலைமையிலான..... சீனாவுக்கு கம்யூனிஸ்ட் படைகளுக்கும் தொடர்ந்து போர் நடந்து 1949-ஆம் ஆண்டில் கம்யூனிஸ்ட் சீனா வெற்றி பெற்று கம்யூனிஸ்டுகள் தலைமையிலான சீன ஜனநாயகக் குடியரசாக 1949-ஆம் ஆண்டில் பிரகடனம் செய்யப்பட்டது. தேசிய சீனப்படைகள் தோல்வி பார்மோஸா தீவிற்கு ஓடி அங்கு தனியாட்சி அமைத்துக் கொண்டது.

சீனா ஒரு பெரிய தேசம். மக்கள் தொகையில் உலகில் முதன்மையான நாடு. சீனாவில் கம்யூனிஸ்ட் ஆட்சி ஏற்பட்டதானது; உலகின் பலாபலத்தில் ஒரு மாற்றத்தை உண்டாக்கிவிட்டது.

சோவியத் யூனியன் கிழக்கு ஐரோப்பிய நாடுகள், சீனா, வடகொரியா, வடக்கு வியத்னாம் என்று சேர்ந்தாற் போல் உலகின் பெரிய நிலப்பரப்பில் தொழிலாளர் கட்சிகளின் ஆட்சி ஏற்பட்டுவிட்டது. சோஷலிஸ் நாடுகள் என்பது அரசியல் துறையிலும் பொருளாதாரத்துறையிலும் ஒரு உலக அமைப்பாக வளர்ச்சி பெற்றுவிட்டது.

உலகில் சுமார் 80 நாடுகளில் கம்யூனிஸ்டு கட்சிகள் அமைப்பு பூர்வமாக உருவாகி ஒரு உலக சக்தியாக உருவாகியிருந்தது, அது ஒரு பெரிய உலக அரசியல் சக்தியாக உலகில் இடம் பெற்றிருந்தது.

மறுபக்கம் அமெரிக்கா ஒரு வல்லமைமிக்க ஆயுதம் பலம் கொண்ட சக்தியாக வளர்ந்திருந்தது. கம்யூனிஸ்டு நாடுகளின் வளர்ச்சி தங்கள் வளர்ச்சிக்கும் நிலைபாட்டிற்கு அபாயத்தை விளைவிக்கும் என்னும் உலகின் பல நாடுகளுக்கிடையிலும் அச்சத்தை உண்டாக்கிக் கொண்டிருந்தது.

வடட்லாண்டிக் ஒப்பநாடுகள் தென்கிழக்கு ஆசிய ஒப்பந்த நாடுகள் என்று பலவித ராணுவ ஒப்பந்தங்களை தனது தலைமையில் அமைத்துக் கொண்டு அமெரிக்க ஐக்கிய நாடுகள் தங்கள் ராணுவ பலத்தின் மூலம் உலகை அச்சுறுத்திக் கொண்டிருப்பதாக சோவியத் யூனியன் சீன முதலிய நாடுகள் கருதின. அதற்காக வார்ஸா ஒப்பந்த நாடுகள் என்னும் ராணுவக்கூட்டமைப்பு சோவியத் யூனியன் தலைமை உருவாயிற்று.

யூ-எஸ் தலைமையிலான அட்லாண்டிக் ஒப்பந்த நாடுகளும் சோவியத் யூனியன் தலைமையிலான வார்ஸா ஒப்பந்த நாடுகளும் ப்ரஸ்பரம் சந்தேகத்துடன் தங்கள் தங்கள் ஆயுத பலத்தையும் ராணுவ பலத்தையும் பெருக்கிக் கொண்டும் தயார் நிலையில் இருந்து கொண்டுமிருந்தனர்.

இருநாடுகள் கையிலும் அணு ஆயுதங்களும் அணுசக்தி பலமும் இருந்தது.

ஹங்கேரியிலும் செக்கோஸ் லோவேகியாவும் பிரச்சினைகள் ஏற்பட்ட போது சோவியத் ராணவம் தலையிட்டு அங்கு சென்றது. வட கொரியாவுக்கு எதிராகத் தென்கொரியாவிற்கு அமெரிக்க அரசு தொடர்ந்து ராணுவ உதவி செய்துகொண்டிருந்தது. சோவியத் யூனினைச் சுற்றிலும் பல இடங்களிலும் யு-எஸ் தனது ராணுவ முகாம்களை வைத்துக் கொண்டிருந்தது. எல்லாவற்றிற்கும் மேலாக வியத் நாமில் தெற்கு வியாத்நாமிற்கு ராணுவகளவாட ஆயுத உதவி செய்ததுடன் நோஷயாகவே அமெரிக்கவிமானங்கள் வட்க்கு வியத்நாம் மீது குண்டுகளை வீசின. அமெரிக்க ராணுவம் நேரடியாக தெற்குவித்யாம் அரசுக்கு ஆதரவாகப் போர்படைகளையும் ராணுவ விமானங்களை யும் அனுப்பி உதவிசெய்தது சோவியத் யூனியனும் வடக்கு வியத்நாமிற்கு நேரடியாகத்தனது படைகளை அனுப்பவில்லை ஆயினும் எல்லாவிதமான ராணுவ களவாட உதவியையும் அயுத உதவிகளையும் செய்தது வியத்நாம் படை வீரர்களுக்கு சோவியத் பூமிக்கு வரவழைத்து எல்லாவிதராணுவப்பயிற்சியையும் கொடுத்து உதவியது வல்லமைமிக்க ரஷ்ய டாங்குகளை சோவியத் பூரியன் வியத்நாமிற்கு அனுப்பியது.

வியத்நாம் மண்ணில் நடைபெற்ற வரலாற்று முக்கியத்வம் மிக்க போதில் வியத்நாம் விடுதலைப் படைகள் 1972ஆம் ஆண்டில் மகத்தான வெற்றி பெற்றது. அமெரிக்கப் படைகள் கடுமையான சேதங்களை சந்தித்தது அவமானப்பட்டு பின்வாங்கி ஓடியது. உலகம் முழுதும் வியத்நாம் வீரர்களைப் பாராட்டியது அமெரிக்க ஐக்கியநாடுகள் அவமானப்பட்டு உலக நாடுகளுக்கிடையில் மதிப்பையும் மரியாதையையும் இழந்தது. உலக அளவில் அமெரிக்காவின் ராணுவ அந்தஸ்து குறைந்தது.

வியத்நாம் போரில் வியத்நாம் மக்களின் கௌரவமும் அந்தஸ்தும் உயர்ந்தும் உயர்ந்து தென்கிழக்கு ஆசியநாடுகளில் அதன் கௌரவம் உயர்ந்தது இந்திய மக்கள் விரவியத்நாமிற்கு வீர வணக்கம் செலுத்தினர்.

உலக அளவில் சோவியத் யநூனியனுடைய வியத்நாம் ஆதரவுக் கொள்கையும் நன்மதிப்பையும் ஆதரவையும் பெற்றது.

1972-ஆம் ஆண்டில் விடுதலைப் போரில் வியத்நாம் வெற்றிபெற்று வடக்கு -தெற்கு வியத்நாம் பகுதிகள் ஒன்றுபட்டு ஒரே வியத்நாமாக தனது காயங்களை ஆற்றிக் கொண்டு நிலைபெற்று பொருளாதாரத்துறையில் வெகுவேகமாக முன்னேறி வருகிறது கடந்த 25 ஆண்டுகளில் அதனுடைய கிராம்ப் பொருளாதாரம் ஸ்திரப்பட்டிருக்கிறது. உணவு உற்பத்தி அதிகரித்து உணவு பிரச்சினை தீர்க்கப்பட்டிருக்கிறது. தொழில் வளர்ச்சியில் குறிப்பாக சிறு தொழில் நடுத்துரத் தொழில்களில் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தைக் கண்டு வருகிறது. கல்வியுல் நூற்றுக்கு நூறு சதவீதத்தை எட்டிவிட்டது.

அதனுடைய பொருளாதார வளர்ச்சி ஆண்டுக்கு 5 சதவீதத்திற்கு மேல் உயர்ந்து, தென் கிழக்கு ஆசிய நாடுகளில் அதன் அந்தஸ்து பலமாக உயர்ந்திருக்கிறது.

கோஷ்டடி சேராநாடுகள் (நடுநிலை நாடுகள்) இயக்கம்.

ஒருபக்கம் சோவியத் யூனியன் சார்புநாடுகள் மறுபக்கம் அமெரிக்காவின் தலைமையிலான நேட்டோ முதலிய கூட்டு நடுகள் இந்த இருகோஷ்டிகளும் உலக அளவில் தங்கள் ராணுவபலத்தையும் ஆயுதபலத்தையும் பொருளாதார பலத்தையும் பெருக்கிக் கொள்ளவும் தங்கள் செல்வாக்கில் இதர நாடுகளைத் தக்கவதைத்கு கொள்ளவும் கடுமையான முயற்சிகளைச் செய்து கொண்டிருந்தன.

இந்த நிலையில் இந்த இரு கோஷ்டிகளுடனும் சேராமல் சுயேச்சையாக கோஷ்டி சேரா (நடுநிலைநாடு) நாடுகள் இயக்கம் பிறந்து வளர்ந்து இந்தியா இந்தோனேஷியா, யுகோஸ்லாவியா எகிப்து, முதலிய நாடுகள் மற்றும் புதிய ஆப்பிரிக்க நாடுகளின் தலைவர்கள் இந்த நடு நிலை நாடுகளின் இயக்கத்தில் ஊக்கத்துடன் பங்கு கொண்டது. இந்த இயக்கத்தில் இந்திய முக்கிய பங்கு எடுத்துக் கொண்டு முன்னனியில் இருந்தது. இந்தியப் பிரதமர் இந்த ஒரு நிலை நாடுகளின் முன்னனித்தலைவரகளில் ஒருவராக உலகப் புகழ்பெற்று விளங்கினார். நடுநிலை நாடுகள் அமைப்பில் அங்கம் வகித்த நாடுகளில் பெரும்பாலானவை விடுதலைப்போராட்டத்தை நடத்தி அண்மையில் உதந்திரம் பெற்றவை. இயல்பாகவே ஏகாதிபத்ய எதிர்ப்பு குணம் படைத்தவை. ஆயினும் பல்வேறு அரசியல் பொருளாதார கலாச்சாரக் காரணங்களில் தங்கள் பழைய ஆக்கிரமிப்பு நாடுகளுடன் பல்வேறு துறைகளில் நெருக்கமானவை. ஆயினும் தங்கள் சொந்த நாட்டின் வளர்ச்சியை உத்தேசித்து சுயேச்சையான சுதந்திரமான கொள்கைகளைக் கடைப்பிடிக்க விரும்பம் கொண்டவை. தங்கள் நாட்டை ஆட்சி நடத்திய பழைய நாடுகளின் அதிகாரிகளைக் காணும் போது மிகுந்த மரியாதை கொள்பவர்கள். அதே சமயத்தில் சுதந்திரமான உணர்வு கொண்டு தங்கள் சொந்த உணர்வில் தங்கள் நாட்டின் சுதந்திரத்தையும் கவுரவத்தையும் அந்தஸ்தையும் பழைய பாரம்பரியத்தையும் உயர்த்திப் பிட்க்க விருப்பம் கொண்டவர்கள் இவ்வாறு ஆர்வம் கொண்டவர்கள் பலரும் இருந்தார்கள். தங்களை நாட்டு கவுரவத்தை உயர்த்தவிரும்பியவர்களும் இருந்தார்கள்.

ஒரு தடவை ஹிந்து பத்திரிகையின் தலையங்கத்தில் நமது நாட்டு துதர்கள் வெளிநாடுகளுக்குச் சென்று நமது தூதரகங்களை நிர்வகிக்கும் போது அந்த நாட்டில் உள்ள வெளிநாட்டுதூதர்களில் ஐரோப்பிய ஆநட்டினர் என்றால் அவர்களிடம் நெருங்கிப்பழகுகிறார்கள். ஆசிய ஆப்பிரிக்க சிறய நாடுகளின் தூதர்கள் என்றால் அதிக நெருக்கமாகப் பழகுவதில்லை என்று நமது குறையை சுட்டிக் காட்டி எழுதியிருந்தது. அந்தக் குறை இப்போதும் கூட

சிலரிடம் காணப்படுவதைக் காண்கிறோம்.

இதில் ஆசிய ஆப்பிரிக்க தென் அமெரிக்க நாடுகளின் ஒற்றுமையுணர்வையும் பாஸ்பா அனுதாபம் ஆதரவு உணர்வுகளையும் காட்ட வேண்டும். இரு நாடுகளும் அடிமைப்பட்டு துன்பதுயரங்களை அனுபவித்தவர்கள் என்னும் முறையில் பரஸ்பர ஆதரவைக் காட்ட வேண்டும் என்பது ஒரு முக்கியமான உணர்ச்சி பூர்வமான அம்சமாகும்.

இவ்வாறு புதிதாக விடுதலை பெற்றநாடுகளுக்கிடையில் பரஸ்பர ஆதரவு மரியாதை ஒற்றுமை உணர்வு சகோதர உணர்வுகளை வளர்த்துக் கொள்வதற்கு உயர்த்திக் கொள்வதற்கும் இந்த நடுநிலைநாடுகளின் ஒற்றுமை இயக்கம் உதவிற்று கூறலாம்.

ஒருபக்கம் இந்த நாடுகளில் பெரும்பாலானவை ஐரோப்பிய நாடுகளின் ஆட்சியின் கீழ் அடிமைப்பட்டிருந்து அவதிப்பட்டவர்கள், இப்போது தாங்கள் நாடுகளை கல்வி தொழில் விவசாயம் வாணிபம் முதலியவற்றில் முன்னேற்றப்பாதையில் கொண்டு செல்ல விரும்புபவர்கள். தங்கள் ஆண்ட நாடுகளால் இன்னும் புறக்கணிக்கப்படுபவர்கள். அத்துடன் ஆங்கிலோ அமெரிக்க வளர்ச்சியடைந்த நாடுகளாலும் புறக்கணக்கப்படுபவர்கள் ஒதுக்கப்படுபவர்கள், எனவே தங்களுக்குள் எந்த அளவுக்கு பரஸ்பரம் உதவி செய்து கொள்ள முடியும் என்று விரும்பம் கொண்டிருப்பவை. அத்துடன் இந்த நாடுகளுக்கிடையில் பரஸ்பரம் அரசியல் பொருளாதார கலாச்சாரப் பாரிவார்த்தனை வாணிபத் தொடர்புகளை விஸ்தரித்துக் கொள்ளுதல் முதலியவற்றில் நெருக்கத்தை உண்டாக்கிக் கொள்ளுதல் முதலியவற்றிலும் நல்லுறவை வளர்த்துக் கொள்ளுவது முதலியவற்றில் சேர்ந்து பணியாற்றுதல் பாஸ்பரம் ஆதரவு தெரிவித்தல், இன்னும் விடுதலைபெறாத நாடுகளுக்கு ஆதரவு தெரிவித்தல் ஆகியவைகளும் அவர்களுடைய விவாதங்களிலும் தீர்மானங்களிலும் இடம் பெற்றன.

ஒரு நாட்டின் தொழில் மற்றும் பொது வளர்ச்சிக்கு மிகவும் அவசியமான தேவைகள், 1. முதலீட்டு வசதி, 2. தொழில் நுட்ப ஞானம். 3. ஆள்பலம் - மனிதவளம் 4. சந்தை வாய்ப்பு வசதிகள் ஆகியவை முக்கியமானவை. இதில் புதிதாக விடுதலை பெற்ற நாடுகளிடம் முதலீட்டு வசதியும் தொழில் நுட்பவசதியும் குறைவு. இவை களில் மூல நாடுகள் உதவிசெய்ய மறுக்கின்றன அல்லது தாமதப்படுத்துகின்றன. இந்தத்துறைகளில் பரஸ்பரம் உதவி செய்து கொள்வதற்கும் நடுநிலைநாடுகளின் அமைப்பு உதவிகரமாக இருந்தது.

நடுநிலைநாடுகளின் அமைப்பு அண்மையில் விடுதலை பெற்ற நாடுகளின் அமைப்பாக இருந்தால் இயல்பாகவே ஏகாதிபத்திய எதிர்ப்பு குணம் படைத்ததாக இருந்தது. இந்தச் சூழ்நிலையைப் பயன்படுத்திக் கொண்டும் தங்களுக்கும் நடபுறவு நாடு தேவை என்ற சோவியத் யூனியன்

இந்த நாடுகளுடன் அதிகமான நெருக்கத்தையும் நட்புறவையும் வளர்த்துக் கொண்டது. இந்தியா ஒரு பெரிய நாடு ஆசியாவில் ஒருமுக்கியமான கேந்திரமான அரசியல் நாஜ தந்திர முக்கியத்வம் கொண்ட நாடு என்னும் வகையில் இந்தியாவுடன் மிகவும் நெருக்கமான நல்லுறவுகளை வளர்த்துக் கொண்டது.

இந்தியாவின் தொழில் வளர்ச்சிக்கு அவசியமா பலதுறைகளுக்கும் சோவியத் யூனியன் உதவி செய்தது. உதாரணமாக பிலாய் இரும்பு உலுக்குத் தொழிற்சாலை, எண்ணை இயற்கை வாயுத்தொழில், நெய்வேலி பழிபுப் நிலக்கரி தோண்டும் தொழில் மின் உற்பத்தித் தொழில், செரிக்குறைவான யுரேனியம் கனநீர் - தொழில் நுட்பத் தைப்பயன்படுத்தி கல்பாக்கம் அணுமின் நிலையம் தூத்துக்குடி கனநீர் உற்பத்தி, ஆவடிடாங்க் தொழிற்சாலையில் விஜயந்தாடாங்க் உற்பத்தி, மருந்தும் மருந்து உபகரணத் தொழில் முதலிய வற்றில் சோவியத் உதவி இந்தியாவின் வளர்ச்சிக்கு மிகவும் உதவிகரமானதாக இருந்தது இப்போதும், பெட்ரோல் எரிவாயுத்துறை, பழுப்பு நிலக்கரி, அணுமின் துறை பாதுகாப்பு சாதனங்கள் உற்பத்தித்துறை ஆகிய துறைகளில் பிரிட்டிஷ அமெரிக்க நாடுகள் உதவி செய்ய மறுத்த போது, சோவியத்யூனியன். உதவி செய்ய முன்வந்தது.

வளர்முக நாடுகளுக்காக மிகவும் அவசியமான உதவி மக்கள் நட்புறவுப் பல்கலைக்கழகம் ஒன்றை மாஸ்கோவில் அமைத்து ஆயிரக்கணக்கான ஆசிய ஆப்பிரிக்க லத்தீன் அமெரிக்கநாடுகளின் இளைஞர்களுக்கு, பல்வேறு தொழில் நுட்பம், பொறியியல், வைத்தியம் முதலிய துறைகளில் பயிற்சி கொடுத்து தொழில் நுட்பத்துறையில் அவர்களை வல்லுனர்களாக்கியதாகும். இந்த உதவி ஆப்பிரிக்க நாடுகளுக்கு மனித வளத்தை வளர்ப்பதற்கு மிகவும் பயனுள்ளதாக இருந்தது. இவ்வாறு சோவியத் யூனியன் நடுநிலைநாடுகள் பலவற்றுடன் மிகவும் நெருக்கமான தொடர்பு நட்புறவு நல்லுறவுகளை வளர்த்துக் கொண்டது.

நடுநிலை நாடுகளின் இயக்கம் உலக வரலாற்றில் மிகவும் முக்கியமான இயக்கமாகும். உலக நாடுகளின் வளர்ச்சிக்கு குறிப்பாக புதிதாக விடுதலை பெற்ற நாடுகளின் வளர்ச்சிக்கு மிகவும் பயனுள்ளதாக இருந்தது. அந்த இயக்கம் அடிப்படையில் ஏகாதிய எதிர்ப்பு சாராம்சம் கொண்ட இயக்கமாக இருந்தது.

சோஷலிஸ் உலக அமைப்பு

முதலாவது உலகப் போர் முடிந்த போது சோவியத் யூனியன் உருவாகி வடிவெடுத்தது. பயங்கரமான வன்முறைகளையும் படுகொலைகளையும் உயிர்ச் சேதங்களையும் சந்தித்து சோவியத் யூனியன் நிலை பெற்றது. இரண்டாவது உலகப் பெரும் போரில் யுத்தபலுவின் பெரும் சுமையை தாங்கி நின்று சோவியத் யூனியன் வெற்றி பெற்றது இரண்டாவது உலகம்

பெரும் போரில் சோவியத் யூனியனின் உயிரிழப்பு (ஆட் சேதம்) மட்டும் மூன்று கோடிக்கும் அதிகம். ஏற்கனவே 1917 பிப்ரவரி புரட்சியிலும் அக்டோபர் புரட்சியிலும் பின்னர் நடைபெற்ற பதினான்கு நாடுகளின் தலையீட்டு யுத்தத்திலும் உள்ளநாட்டுக் கலவரங்களிலும் ஏற்பட்ட உயிர்ச் சேதங்களைப் ப்ற்றி முன்னர் பார்த்தோம் அத்துடன் விவசாயிகளின் கூட்டுப்பண்ணைகள் அமைக்கப்பட்ட காலத்தில் கூட்டுப்பண்ணைத் தீட்டத்தில் சோமறுத்தவிவசாயிகள் பலரும் கூலிக்குள் என்று கூறி வர்க்கப் போராட்டம் என்று கூறி ஸ்டாலின் நிர்வாகத்தில் விவசாயிகள் பலரும் கொல்லப்பட்ட செய்தியும் மனதை உறுக்குவதாகும். இவ்வாறு ரத்தக்கரை படிந்த வரலாறு மூலம் ரஷ்யப் புரட்சி நடந்து முடிந்து உலகப் போரும் முடிந்து அதன்பின்னர் ரஷ்யமக்கள் சொல்லொணரத்துன்பதுயரங்களை அனுபவித்து ஓரளவு அமைதியான வாழ்வைப் பெற்றார்கள் என்று கூறலாம்.

இரண்டாவது உலகப் போரில் சோவியத் யூனியன் வெற்றிபெற்றதும், கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் தொழிலாளர் கட்சிகளின் ஆட்சி ஏற்பட்டதும், சீனாவின் புரட்சிப் படைகள் வெற்றிபெற்று 1949-ஆம் ஆண்டில் மக்கள் சீனக் குடியரசு என்னும் பெயரில் சீனாவில் கம்யூனிஸ்ட் ஆட்சி அமைந்தது. வட கொரியா வடக்கு வியத்நாம் பகுதிகளிலும் கம்யூனிஸ்ட் ஆட்சிகள் ஏற்பட்டதும் சோவியத் யூனியன் மற்றும் தொழிலாளர் இயக்கங்களின் கவுரவத்தையும் உலக அளவில் உயர்த்தியது.

உலகின் பல நாடுகளிலும் கம்யூனிஸ்டு கட்சிகள் தோன்றின. சுமார் 80 நாடுகளில் கம்யூனிஸ்ட் மற்றும் தொழிலாளர்கட்சிகள் தோன்றிவளர்ந்தன. அவைகள் மார்க்சிஸம், லெனினிஸ தத்துவத்தையும், பாட்டாளி வர்க்க சர்வதேசீயத்தையும் தங்கள் கட்சிகளின் அடிப்படை சித்தாந்தங்களாக அறிவித்தன. கம்யூனிஸ் இயக்கம் உலகப் போரியக்கமாக வளர்ச்சிபெற்று வெளிப்பட்டது. மார்க்சிஸம், லெனினிஸம் உலகின் முக்கியமான தத்துவமாக சித்தாந்தமாக பிரகடனம் செய்யப்பட்டது உலகின் பல நாடுகளின் பல்கலைக் கழகங்களிலும் மார்க்சிஸம் லெனினிஸ தத்துவங்கள் பாடப் பொருளாகவும் கூட எடுத்துக் கொள்ளப்பட்டன.

1956-57-ஆம் ஆண்டுகளில் உலகக் கம்யூனிஸ்ட் இயக்கத்தில் உலகில் எதிர்காலத்தில் உலகப் போரைத் த'விர்த்தல், உலகசமாதானத்தை நிலை நாட்டுதல், அணு ஆயுதங்களைத் தவிர்த்தல், சமூதாயப்புரட்சிக்கு ஆயுதப் போர் இன்றி அமைதி யான வழிகளுக்கான வாய்ப்புகளைக் காணுதல், சோஷலிஸ உலக மார்க் கெட்டை விரிவு படுத்தல், வேறுபட்ட சமுதாய அமைப்புகளைக் கொண்ட நாடுகளுக்கிடையில் சமாதான சக வாழ்வு, சோஷலிஸ நாடுகளுக்கிடையில் ஒத்துழைப்பு, விடுதலைப் போராட்டங்களுக்கு ஆதரவளித்தல் பரஸ்பர நலன்களின் அடிப்படையில் சம அந்தஸ்தின் அடிப்படையில் ஒனைத்து நாடுகளுடனும் ஒத்துழைப்பு,

சோஷலிஸ உலக அமைப்பை பலப் படுத்துவது முதலிய பிரச்சினைகள் பற்றிய விவாதங்கள் நடந்த போது, இவைகளில் கருத்து வேறுபாடுகள் எழுந்தன. குறிப்பாக சீனக் கம்யூனிஸ்ட் கட்சிக்கும், சோவியத் யூனியன் கம்யூனிஸ்டு கட்சிக்கும் இடையில் கருத்து வேறுபாடுகள் எழுத்தன. வேறு சில கட்சிகளும் மாறுபட்ட கருத்துக்களை வெளியிட்டன. அப்போது எல்லாநாடுகளிலும் உள்ள கம்யூனிஸ்ட் மற்றும் தொழிலாளர் கட்சிகளின் பிரதி நிதிகளும் கூடி ஒரு பொது விவாதம் நடத்தி கருத்தொற்றுமை காண்பதற்கு முயற்சிப்பது என்று கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டது.

அதன்படி 1960 ஆம் ஆண்டில் 81 நாடுகளின் கம்யூனிஸ்ட் மற்றும் தொழிலாளர்கட்சிகளின் பிரதிநிதகளைக் கொண்ட ஒரு மிகப்பெரிய மாநாடு நடைபெற்றது. இம்மாநாடு 29 நாட்கள் நடைபெற்றது. இதில் கலந்து கொண்ட ஒவ்வொரு கட்சிக்கும் பெரிய கட்சி சிறய கட்சி என்ற வித்தியாசமில்லாமல் அவர்கள் விருப்பப் படி எவ்வளவு நேரம் வேண்டுமோ அவ்வளவு நேரம் ஒதுக்கப்பட்டது ஒவ்வொரு கட்சிப் பிரதிநிதிகளும் தங்களுக்கு தேவைப்பட்ட நேரம் எடுத்துக் கொண்டு முழுமையாகத் தங்கள் கருத்துக்களைத் தெரிவித்தனர். கடைசியாக ஒரு ஒருமனதான அறிக்கை தயாரிக்கப்பட்டது. அந்த அறிக்கையில் மாநாட்டில் கலந்து கொண்ட அனைத்துக் கட்சியின் பிரதிநிதிகள் கையொப்பமிட்டார்கள். இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி சார்பிலும் ஐந்து பிரதிநிதகள் சென்றிருந்தனர் அவர்கள் ஐவரும் ஒரு மனதாகக் அந்த அறிக்கையில் கையொப்பமிட்டார்கள். அப்போது இந்திக் கம்யூனிஸ்ட் கட்சி ஒன்றுபட்ட ஒரே கட்சியாக இருந்தது.

அந்த அறிக்கையின்படி

1. உலகின் நிரந்தர சமானதானத்திற்காக அனைத்து கம்யூனிஸ்ட் மற்றும் தொழிலாளர் கட்சிகள் பாடுபட வேண்டும்.

2. வேறுபட்ட சமூதாய அமைப்புகளைக் கொண்ட நாடுகளுக்கிடையில் சமாதான சகவாழ்வுக் கொள்கை அனுசரிக்க வேண்டும்.

3. அணு ஆயுதங்களை போர்களில் எந்த நாடும் பயன் படுத்தக்கூடாது.

4. எந்த ஒரு நாடும் அடுத்தநாட்டு உள் நாட்டுப்பிரச்சினைகளில் தலையிடுதல் கூடாது.

5. நாடுகளுக்கிடையில் ஏற்படும் எந்த பிரச்சினைகளையும் தாவாக் களையும் சமாதான மான முறைகளில் பேசித் தீர்த்துக் கொள்ள வேண்டும்.

6. உலகில் இப்போது சம நேரான இரண்டு சந்தைகள் ஏற்பட்டிருக்கின்றன. ஒன்று முதலாளித்வசந்தை, இரண்டாவது சோஷலிஸசத்தை - இரண்டு சந்தைகளுக்குமிடையில் போட்டி உள்ளது. கோஷலிஸ சந்தை உலகப் போட்டியில் முன்னேறிச் செல்வதற்கு சோஷலிஸ

நாடுகளின் கூட்டமைப்பு அமைத்துப் பணியாற்ற வேண்டும். என்று அந்த கூட்டறிக்கைகளில் கருத்துக்கள் எடுத்துக் கூறப்பட்டிருக்கின்றன.

எண்பது நாடுகளின் கம்யூனிஸ்டு மற்றும் தொழிலாளர் கட்சிகளின் மகாநாடும் அவர்களின் கூட்டறிக்கையும், சோஷலிஸநாடுகளின் கூட்டறிக்கையும் சந்தைவவிஸ்தரிப்பும் ஆங்கிலோ அமெரிக்கநாடுகளிடம் பெரிய அச்சத்தை உண்டாக்கியது. அமெரிக்கா தனது ஆதிக்கத்தை நிலைநாட்டிக் கொள்ளவும் உறுதிப்படுத்திக்கொள்ளவும் கடும் முயற்சிகள் மேற்கொண்டது.

அமெரிக்கா தனது ஆயுத தளவாட உறுப்த்தியையும் அணு ஆயுத உறபத்தியையும் அணு ஆயுத சோதனைகளையும் அதிகப் படுத்தியது. அமெரிக்க படைகள் வியத்நாம் மீது தாக்குதல்களை அதிகரித்தது. 1956-ஆம் ஆண்டு அமெரிக்க மண்டலத்தில் உள்ள கியூபாவில் கம்யூனிஸ்ட் ஆட்சி ஏற்பட்டதால் அமெரிக்காவின் கோபமும் எரிச்சலும் அதிகரித்தது.

வியத்நாமில் அமெரிக்கா தனது தாக்குதலை தீவிரப்படுத்தியது. கியூபாவைச் சுற்றிலும் தனது ஆயுதக் கப்பல்களை நிறுத்தியது. சோவியத் யூனியனும் தனது ராணுவக்கப்பல்களை அட்லாண்டிக் கடலில் கொண்டு போய் நிறுத்தியது. இவ்வாறு போர் அச்சுறுத்தல்களும் நடந்து கொண்டிருந்தது. உலகில் பதட்டம் அதிகரித்தது.

இதற்கிடையில் சீனக்கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமையும் வேறு சிலகம்யூனிஸ்ட்கட்சிகளின் தலைமைகளும் 1960-ஆம் ஆண்டில் 81 கம்யூனிஸ்ட் மற்றும் தொழிலாளர் கட்சியின் கூட்டறிக்கையில் வெளியிடப்பட்ட கருத்துக் களின் மீது மாறுபட்ட கருத்துக்களை வெளிப்படையாகப் பேசத் தொடங்கினார்கள். அதனால் உலகக்கம் யூனிஸ்ட் இயக்கத்தில் வேறுபடாகளும் மாற்றுக் கருத்துக்களும் வெளிப்படையாகவே தோன்றி வெளிபடலாற்று இந்தக்கருத்து வேற்றுமைகள் உலகக் கம்யூனிஸ்ட் மற்றும் தொழிலாளர் இயக்கத்தை பெரிய அளவில் பாதித்தது அந்த உலகப் பேரியக்கத்தை இரு கூறாக்கியது.

இந்தக் கருத்துவேறுபாடு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியைப் பெரிய அளவில் பாதித்தது இந்தியக் கம்யூனிஸ்ட்கட்சியும் உடைந்து இருபிரவாகியது. 1964-ஆம் ஆண்டில் இந்தியக்கம்யூனிஸ்ட் கட்சி உடைந்தது. மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி உருவாயிற்று கம்யூனிஸ்ட் இயக்கம் பலமாக இருந்த மேற்கு வங்கத்திலும் கேரளாவிலும் பெரும்பாலான கம்யூனிஸ்டுகளும் பெரிய தலைவர்களும் மார்க்ஸிய கம்யூனிஸ்ட் பிரிவில் சேர்ந்து விட்டனர். இருபிரிவுகளும் ஒருவருக்கொருவர் கடுமையான விமர்சனங்களையும் அவதூறுகளையும் வசவுகளையும் கூட அள்ளி வீசிக் கொண்டனர். இந்த சண்டை கம்யூனிஸ்ட் இயக்கத்தை அதன் கவுரவத்தை செல்வாக்கை நாணயத்தையும் நம்பிக்கையையும் பெரும்

அளவில் பாதித்தது- உலக அளவிலும் கம்யூனிஸ்ட் மற்றும் தொழிலாளர் இயக்கத்தையும் அதை செல்வாக்கை பாதித்தது. அந்தஸ்தைக் குறைத்தது.

கம்யூனிஸ்ட் இயக்கத்தில் ஏற்பட்ட கருத்து வேறுபாடுகளின் முக்கிய அம்சங்கள் வரலாற்றில் கரைந்து கொண்டிருக்கின்றன. இதற்கிடையில் வேறு பல பிரச்சினைகளும் வளர்ச்சி நிலைகளும் வெளிப்பட்டு உலகம் வெகு வேகமர்க மாறிக் கொண்டிருக்கிறது. புதிய பலமாற்றங்கள் ஏற்பட்டுக் கொண்டுவருகின்றன. பழைய மார்க்சீயக் கருத்துக்கள் பின்னுக்குப் போய்விட்டன. புதிய வளர்ச்சிப் போக்குகள் எல்லா பகுதிகளிலும் ஏற்பட்டுக் கொண்டுவருகின்றன.

உலக கம்யூனிஸ்ட் இயக்கத்தில் ஏற்பட்ட கருத்துக்களும் கருத்து வேறுபாடுகளும் உலக வரலாற்றில் பதி வாகியிருக்கிறது. உலக வரலாற்றில் இடம் பெற்று விட்டது.

உலகக் கம்யூனிஸ்ட் இயக்கத்தில் ஏற்பட்ட கருத்துக்களும் கருத்து வேற்றுமைகளும் வேறுபாடுகளும் முரண்பாடுகளும் தொழிலாளர் இயக்கத்தையும் உலக கம்யூனிஸ்ட் இயக்கத்தையும் அதன் வளர்ச்சியையும் பெரிதும்பாதித்தது. அந்தக் கருத்துக்கள் மிகமுக்கியமானவைகளும் வரலாற்று முக்கியத்துவம் கொண்டவைமாகும். ஒவ்வொரு நாட்டிலும் ஒவ்வொரு கட்சியிலும் அதன் கொள்கைகளை உருவாக்குவதிலும் அவைகளை செயல்படுத்துவதிலும் முக்கிய விளைவுகளை உண்டாக்குகின்றன. மக்களுடைய வாழ்க்கையிலும் முக்கிய விளைவுகளையும் உண்டாக்கு கின்றன.

அதனால் உலகக் கம்யூனிஸ்ட் இயக்கத்தில் ஏற்பட்ட கருத்து வேறுபடுகளும் செயல் மாறுபாடுகளும் உலக நிலைமையையும் உலக வளர்ச்சிப் போக்கையும் பாதித்தது. அவைகளை சிறிது பரிசீலனை செய்யலாம்.

1. உலகில் இனியொரு உலகப் போர் ஏற்படாமல் உலக சமாதானம் ஏற்படுவதற்கான வாய்ப்புகள் ஏற்பட்டிருக்கின்றன. என்பது பெரும்பான்மைக் கருத்து. இந்த மதிப்பீடு சரியல்ல என்றும் உலகில் ஏகாதிபத்ய நாடுகள் இருக்கும் வரை உலகப் போர் அபாயம் நீடிக்கும் நாம் அதற்கான தயார் நிலையில் இருக்க வேண்டும் என்பதும் சீனத்தலைவர்கள் கருத்தாகும்.

உலகிலேயே பெரிய ராணுவம் சீன ராணுவம். சீனராணுவத்தின் படைபலம் 50 லட்சம் பேர்களாகும். உலகப்பொருளாதாரத்தில் உலகநாடுகளின் இராணுவபலம் அதற்கான செலவுகள் என்னவிளைவுகளை உண்டாக்கிக் கொண்டிருக்கும் என்பதைப் புரிந்து கொள்ளலாம். எனவே முதல் கருத்தின் மூலம் உலக சமாதான நிரதர சமாதனத்திற்காகப் பாடுபடுவது

முயற்சிப்பது முக்கியத்வம் பெறுகிறது. சிறுபான்மைக் கருத்து உலக நாடுகளுக்கிடையில் குறிப்பாக இரு மூகாம் நாடு களுக்கிடையில் பகை உணர்வை நீடிக்க வைக்கிறது.

2. வேறுபட்ட சமுதாய அமைப்புகளைக் கொண்ட நாடுகளுக்கிடையில் சமாதான சகவாழ்வுக் கொள்கை அனுசரிக்க வேண்டும் என்பது பெரும்பான்மைக்கருத்து அது சாத்தியமில்லை வேறுபட்டவர்க்கங்கள் இருக்கும்வரை வர்க்க முரண்பாடுகளும் வர்க்க மோதல்களும் நீடிக்கும் என்பது சிறுபான்மைக்கருத்து பெரும்பான்மை கருத்தின்படி ஒவ்வொரு நாட்டிலும் மக்களியக்கங்கள் அதன் இயல்பான வளர்ச்சிக்கு இடமளிக்க வேண்டும் என்பதும் உரண்டாவது கருத்தின்படி வர்க்க மோதல்களை தீவிரப்படுத்த வேண்டும் என்பதாகும்.

3. அணு ஆயுதங்களை போர்களில் எந்த நாடும் பயன்படுத்தக்கூடாது இந்தக் கருத்து நியாயமானது, சரியானது தான் என்றாலும் ஏகாதிபத்ய நாடுகளை நம்ப முடியாது. எனவே சீனவாஉம் அணு ஆயுதத்தயாரிப்பில் தயார்நிலையில் இருக்க வேண்டும் என்பது மாற்றுக் கருத்தாகும்.

4. அடுத்தா நாடுகளின்'உள் நாட்டுப் பிரச்சினைகளில் தலையிடக்கூடாது என்பது பொது நியாயம் என்றாலும் ஏகாதிபத்ய நாடுகளை நம்ப முடியாது என்பது மாற்றுக்குத்தாகும்.

5. நாடுகளுக்கிடையில் ஏற்படும் தாவாக்களை பேசித்தீர்த்துக் கொள்ளலாம் என்பதைப் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்டாலும் சீனா, இந்தியா மீதும் வியநாம் மீது எல்லைப்பிரச்சினைகளுக்காக போர் தொடுத்தது, படையெடுத்தது இராணுவத்தலை லீட்டில் ஈடுபட்டது.

6. சோஷலிஸச் சந்தை முதலாளித்வச் சந்தை இரண்டுக்கு மிடையில் சமாதானமான போட்டியை வைத்துக் கொள்ளலாம் என்றாலும் சோவியத் யூனியனின் தொழில் வளர்ச்சியும் உற்பத்தி முறையும் மேற்கத்திய நாடுகளுக்கு இணையிடாக இருக்கிறது. ஆனால் சீனாவின் வளர்ச்சி நிலை அதோடு ஒத்துப் போவது கடினம். சீனாவின் வளர்ச்சி நிலை வளர்ச்சிபெறாத பழைய காலனி அறைக் காலனி நாடுகளுடைய வளர்ச்சிக்கு ஈடாக இருப்பதால், ஏற்ற தாழ்வுகள் அதிகமாக உள்ளது. எனவே சீரான சோஷலிஸப் பொருளாதாரம் என்பது சாத்தியமில்லை அது சோவியத் யூனியனுக்கு சாதகமாக இருக்கலாம் சீனாவுக்கு ஒத்துப் போகாது என்பது சீனக்கருத்தாகும்.

இந்தக் கருத்து வேறுபாடுகள் மோலழுந்தவாரியாகத் தென்பட்டாலும் ஆழ்ந்த விளைவுகளைக் கொண்டதாக இருந்தது.

சோவியத் யூனியன் கருத்துக்கள் நியாயமாகப் பட்டாலும், சீனா வலுவான நாடு, சக்திவாய்ந்த ராணுவம் பலத்தைக் கொண்ட நாடு, பெரிய நாடு, அதிகமான மக்கள் தொகையும் பெரிய சந்தையும் கொண்ட நாடு எனவே

சீனாவின் கருத்துக்களும் உலக அரங்கில் வலுவாக நின்றன.

இந்திய அரசியல் அரங்கத்தில் நியாய அநியாயம், அணுகும் முறை கொள்கை நிலைபாடுகள் எப்படியிருந்தாலும் மேற்கு வங்கம் கேரளா ஆகிய இரு மாநிலங்களில் மார்க்ஸிஸ்டு கம்யூனிஸ்டுகட்சி அதிக வலுவாக இருந்ததால் அதனுடைய கருத்துக்களுக்கு அதிக மரியாதையும் அதன் பால் அச்சமும் இருந்தது.

இதற்கிடையில் சோவியத் யூனியன் மற்றும் அதற்கு ஆதரவானகம்யூனிஸ்ட் மற்றும் தொழிலாளர் கட்சிகளின் முன் முயற்சியில் 1967-ஆம் ஆண்டில் உலக நாடுகளின் கம்யூனிஸ்டு கட்சிகள் மாங்கோவில் இரண்டாவது மாநாடு நடைபெற்றது. இம்மாநாட்டில் முதல் மாநாட்டின் பெரும்பான்மை நிலைபாடு வலியுறுத்திப் பேசப்பட்டது. கியூபா, வியத்நாடுகளின் விடுதலைப் போராட்டங்களுக்கு ஆதரவு தெரிவிக்கப்பட்டது. ஆப்பிரிக்கா தென்அமெரிக்க நாடுகளின் விடுதலைப் போராட்டங்களுக்கு ஆதரவு அளிக்கப்பட்டது. அந்தியாவுக்கு சோவியத் ஒனியனுக்கும் நல்லுறவு விரவுபட்டது, வியத்நாமின் விடுதலைப் போராட்டத்திற்கு ஆதரவு அதிகப்படுத்தப்பட்டது.

உலகக் கம்யூனிஸ இயக்கத்தின் பெரும்பான்மைப்பகுதியிலிருந்து வேறுபட்டு, சீனாதனித்துத் தனது சில சகாக்களுடன் தனிமைப்ப்ட்டு சென்ற போது, அது ஒரு பெரிய நாடு, உலகில் முதல் பெரிய நாடு, உலகிலேயே மிகவும் வல்லமை மிக்க ராணீணனுவ பலத்தையும் மக்கள் தொகை கொண்ட நாடு என்னும் நாடு என்னும் பெரிய அந்தஸ்து இருந்தபோது, அதன் பொருளாதார நிலை மிகவும் பின்தங்கியே இருந்தது சோவியத் யூனியனுடைய உதவியின்றியும் உலகின் இதர பெரிய நாடுகளின் உதவியின்றியும் தனிமைப்பட்டு நின்றது. அத்துடன் சீன அதிபர் மாசேதுஸ் தலைமையின் சீனாவின் வளர்ச்சிக்காக எடுத்த மூன்று முக்கிய திட்டங்கள் வெற்றி பெற வில்லை. ஒன்று கிராம்ப்புறப் பொருளாதார வளர்ச்சிக்காக கிராமக் கம்யூன்திட்டம், இரண்டு நகரப்புறத் தொழில் உற்பத்தியைப் பெருக்குவதற்காக என்று செயல்படுத்திய திடீர் பாய்ச்சல் திட்டம், மூன்று கலாச்சாரப்புரட்சி என்னும் பெயரில் கொண்டு வரப்பட்ட கட்டாய சமத்துவத்திட்டம் ஆகியவை பெருத்த தோல்விகளை சந்தித்தது. இந்தத் தோல்களின் காரணமாக சீனாவின் பொருளாதார வளர்ச்சி நிலை பத்து ஆண்டு காலத்திற்கு மேல் பின்னுக்குத் தள்ளப்பட்டது என்று அக்கட்சியின் பத்தாவது காங்கிரஸில் மதிப்பீடு செய்யப்பட்டது.

மாஸேதுங் மறைவிற்குப் பின்னர் அவருடைய கடைசிமனைவியுடன் சேர்ந்த கான்கு பேர் ஆதிக்கம் சீனாவின் அரசியல் அந்தஸ்தைக்குறைத்தது. பின்னர் சீனக்கம்யூனிஸ்ட் கட்சியின் பத்தாவது காங்கிரஸில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் திட்டங்களின்படி சீனவான் நிர்வாகம் சீரமைக்கப்பட்டு தன்

காலில் நிறுத்தப்பட்டது. ஆயினும் உலகக் கம்யூனிஸ்ட் இயக்கத்திலிருந்து தனியாகவே சீனா போய்க்கொண்டிருந்தது. சோவியத் யூனியனுடன் பகையும் இல்லை நடபும் இல்லை. தனியாகப் போய்க் கொண்டிருந்தது.

வீரவியத்யாம் வெற்றி:

அடுத்த மிக முக்கியமான உலக நிகழ்ச்சி கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமையில் வியத்நாம் வெற்றி பெற்றதும் அந்த நாடு வடக்கும் தெற்கும் இணைக்கப்பட்டு வெற்றிபெற்று ஒரே நாடாக உருவாகி முன்னேறி வருவதாகும்.

வியத்நாம், பிரான்ஸ், ஜப்பான் கடைசியில் அமெரிக்க ஆக்கிரமிப்புகளை எதிர்த்து வெற்றி பெற்ற நாடு இரண்டாம் உலகப் போரில் ஜப்பான் தோல்வியடைந்த பின்னர் பிரஞ்சு ஆட்சியும் நீங்கி வியத்நாம் சுதந்திரம் பெற்றது. வடக்கு வியத்நாம் கம்யூனிஸ்ட் ஆட்சியின் கீழ் வந்தது, அமெரிக்கப் புடைகள் இரங்கி, தெற்கு பகுதியால் ஒருபெர்ம்மை அரசை உருவாக்கி இருவியத்நாமாக வடக்கு தெற்கு என்று பிரிக்கப்பட்டு, அமெரிக்கா தெற்கு வியத்நாமிற்கு ஆதரவாக வடக்குப் பகுதியுடன் போர் தொடுத்தது. அமெரிக்கப்படைகள் தனது குண்டுகள் அனைத்தையும் வியத்யாம் மீது வீசியது. அமெரிக்க விமானப்படை முழுவதும் முழுமூச்சில் வடக்குவியத் நாமைத் தாக்கியது.

அமெரிக்கா - வியத்நாம் போர் மிக உக்கிரமாக நடந்தது. வியத்நாம் மண்ணில் மீது இடைவிடாமல் அமெரிக்க படைகள் குண்டுகளை வீசியது. உலகம் முழுவதும் வியத்நாமிற்கு ஆதரவு தெரிவித்தது. அமெரிக்கத் தலையீட்டிற்குக் கண்டனம் தெரிவித்தது. சோவியத் யூனியன் வியத்நாம் விடுதலைப் படைகளுக்கு ஆதரவு தெரிவித்தது. இப்போரில் வியத்நாம் மகத்தான வெற்றியைப் பெற்றது. வடக்கு தெற்கு வியத்நாம் ஒன்றுபட்டது. ஒரே வியத் நாமாக இணைந்து புதிய வியத்நாம் உருவாகியது.

அமெரிக்கா படுதோல்வியடைந்தது. வியத்நாம் போரில் அமெரிக்காவிற்கு ஏற்பட்ட படுதோல்வி உலக அளவில் அமெரிக்காவின் மதிப்பையும் அந்தஸ்தையும் பாதித்தது: உலகில் அமெரிக்கா தனது முதன்மை ஸ்தானத்தை குறைத்துக் கொண்டாது. தென்கிழக்கு ஆசியாவில் வியத் நாமின் தொழிலாளர் அரசின் அந்தஸ்து உயர்ந்தது. ஒன்றுபட்ட வியத்நாம் அரசின் பொருளாதாரநிலை ஸ்திரப்பட்டு படிப் படியாக அபிவிருத்தியடைந்தது. வியத்நாம் போரில் அமெரிக்காவிற்கு ஏற்பட்ட படுதோல்வி உலக அளவில் அமெரிக்காவின் மதிப்பையும் அந்தஸ்தையும் பாதித்தது. உலகில் அமெரிக்கா தனது முதன்மை ஸ்தானத்தை குறைந்துக் கொண்டது. தென்கிழக்கு ஆசியாவில் வியத் நாமின் தொழிலாளர் அரசின் அந்தஸ்து உயர்ந்தது. ஒன்றுபட்ட வியத்நாம் அரசின் பொருளாதார நாலை ஸ்திரப்பட்டு படிப்படியாக அபிவிருத்தி யடைய்தது. தென்கிழக்கு

ஆசியப்பகுதி வியத் நாம் அரசின் அந்தஸ்து உயர்ந்தது. இப்போது இந்தியாவிற்கும் வியத் நாமிற்கும் இடையில் ராஜ தந்திர உறவு நல்லுறவு வர்த்தக உறவு பொருளாதார உறவு பலப்பட்டுவருகிறது.

1980-ஆம் ஆண்டுகளிலிருந்து உலகில் புதிய பொருளாதார வளர்ச்சிப் போக்குகள் தோன்றத் தொடங்கியிருக்கின்றன. முதலாளித்துவப் பொருளாதார முறையில் அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ், இத்தாலி ஜெர்மனி, ஜப்பான், கானடா ஆகிய ஏழு நாடுகள் உலகில் முதல் நிலையில் ஆதிக்கம் கொண்டு முதல் நிலையில் நின்று கொண்டிருக்கின்றன. இவைகளில் அமெரிக்க ஐக்கிய நாடுகள் உலகத் தலைமையில் தனது ஆதிக்கத்தைக் கொண்டு செலுத்த முயற்சித்துக் கொண்டிருக்கிறது. அது முடியாமலும் திணருகிறது. மேலே குறிப்பிட்ட ஏழு நாடுகளில் அமெரிக்க ஐக்கிய நாடுகளும் கனடாவும் சேர்ந்து ஒரு குழு, ஐரோப்பிய நாடுகளான பிரிட்டன், பிரான்ஸ், இத்தாலி ஜெர்மனி ஒருகுழவாகவும், ஜப்பான் ஒரு தனி குழுவாகவும் தங்கள் ஆதிக்கத்தைச் செலுத்த முயலுகிறார்கள். இவ்வாறு உலகிலுள்ள வளர்ச்சியடைந்த முதலாளித்துவ நாடுகள் மூன்று கோஷ்டிகளாகத்தங்களைத் தாங்களே சுற்றிக் கொண்டும் உலகைச் சுற்றிக் கொண்டு நிற்கின்றன. அமெரிக்கா தனது தலைமை நிலைமையில் டாலர் நாணயத்தைத் தக்க வைத்துக் கொள்ள முயலுகிறது. ஆனால், அதில் திணறுகிறது.

ஜெர்மனியும் ஜப்பானும், இரண்டாவது உலகப்போரில் தோல்வியடைந்து உலகத் தலைமை நிலையிலிருந்து அரசியலில் பின்னுக்குத் தள்ளப்பட்ட போதிலும் பொருளாதாரத் துறையில் முன்னுக்கு வந்து அமெரிக்க டாலரின் உலகத் தலைமை நிலைக்கு சவால் விட்டு தங்கள் ஜெர்மன் மார்க்கையும் ஜப்பானிய யென்னையும் உலக நாணயச் சந்தையில் மிதக்க விட்டிருக்கின்றன.

ஐரோப்பாவில் உள்ள பிரிட்டன், பிரான்ஸ், இத்தாலி, ஜரெமன் ஆகிய நாடுகள் சேர்ந்து இதர நடுத்தர ஐரோப்பிய நாடுகளையும் சேர்த்துக் கொண்டு ஐரோப்பிய யூனியன் என்று அமைத்துக் கொண்டு, யூரோ என்னும் புதிய நாணயத்தை உருவாக்கிக் கொண்டிருக்கிறது. யூரோ நாணயம் உலக நாணயச் சந்தையில் டாலருக்கு ஒருவகைப் போட்டியாக உலவிக் கொண்டிருக்கிறது. ஜப்பான் இரண்டாம் உலகப் போர் தோல்வியால் ஏற்பட்டிருந்த அரசியல் பொருளாதாரக் கட்டுப்பாடுகள் இருந்த போதிலும் நுகர் பொருள் சந்தையில் ஆசிய நாடுகளின் சந்தைபலத்தை வைத்துக் கொண்டு உலக மார்க்கட்டில் தனது ஆதிக்க பலத்தைத் தக்க வைத்துக் கொண்டு யென் நாணயத்தை மிதக்கவிட்டு அதன் உலக அந்தஸ்தை உயர்த்திக் கொள்ள முயற்சிக்கிறது.

இவ்வாறு உலகில் உள்ள வளர்ச்சியடைந்த நாடுகள் மூன்று மையங்களாக தங்களைத்தாங்களே சுழற்றிக் கொண்டும், மூன்று மையங்களுக்குள்

ஒன்றையொன்று மோதிக்கொண்டும், உலகச் சந்தையில் சுதந்திர சந்தைப் பொருளாதாரம் என்னும் பெயரிலும், உலக மயமாக்கல் என்னும் பெயரில் உலகப் பொருளாதாரத்தில் தலையிட்டும் உலக வர்த்தக அமைப்பின் மூலம் வளர்ச்சியடைந்த நாடுகள் உலகப் பொருளாதாரத்தில் ஆதிக்கம் செலுத்த முயலுகின்றன.

உலக வர்த்தக சபையில் உலகின் எல்லாநாடுகளும் அங்கம் வகிக்கின்றன. உலக வர்த்தக சபை, என்பது அங்கம் வகிக்கும் ஒவ்வொரு நாட்டிற்கு ஒருவாக்கு என்னும் அடிப்படையில் அமைந்துள்ளது, ஐக்கிய நாட்டு சபையைப் போல பாதுகாப்பு சபை, ரத்து அதிகாரம் ஆகியவை கிடையாது எனவே ஏழை நடுத்தர நாடுகள் தங்கள் பெம்பான்மை வாக்கு பலத்தை வைத்துக் கொண்டு தங்கள் பொருளாதார நிலையை நலன்களைப் பாதுகாத்துக் கொள்ள வாய்ப்புகள் உள்ளன. இருப்பினும் அது ஒரு கடினமான நிலை - எனவே இந்தியா போன்ற நாடுகள் அரசியல் உறுதியுடன் துணிவான நிலை எடுத்து ஏழை நடுத்தர நாடுகளின் நலன்களுடக்கு ஆதரவான நிலை எடுக்க வேண்டும். குறிப்பாக சிறு தொழில் மூலதன உதவி, தொழில் நுட்ப உதவி, விவசாய உற்பத்தி, விவசாய உற்பத்திப் பொருள்களின் விலைப் பாதுகாப்பு, வனப்பொருள் கடல் பொருள்களின் பாதுகாப்பு பற்றிய பிரச்சினைகளில் சிலகஷ்டங்கள் இருந்த போதிலும் மிகவும் கடினமான சூழ்நிலை ஏழை நடுத்தர நாடுகளுக்கு ஆதரவாக நியாயத்தின் அடிப்படையில் நிற்க வேண்டும்.

உலகி நிலையில் சில எதிர்மறைப் போக்குகள் நிகழ்ந்துள்ளன. இருபதாம் நூற்றாண்டின் இறுதியில் சோவியத் யூனியன் என்னும் முதலாவது தொழிலாளர் அரசியல் பொருளாதார அமைப்பு என்பது மறைந்து போனது. உலைந்துவிட்டது. அதிலிருந்து அதில் அங்கம் வகித்த பதினாறு குடியரசுகளும் தனித்தனியான சுதந்திர நாடுகளாக ஆகிவிட்டன. அதில் ரஷ்யக்குடியரசு உலக அரசியல் பொருளாதார நிலைபாட்டில் தனியான வல்லரசாக வெளிப்பட்டிருக்கிறது. சோஷலிஸ அரசியல், பொருளாதாரம், வர்த்தகம், சந்தை எல்லாம் மறைந்து விட்டது. கலைந்து விட்டது. உலைந்து விட்டது. பழைய தொடர்புகளோடு அவைகள் சுதந்திர நாடுகளாக உலக நாடுகளுடன் உறவு வைத்துக் கொண்டு செயல்பட்டுக் கொண்டு வருகின்றன. உலக அமைப்புகள் அனைத்திலும் அங்கம் வகித்துக் கொண்டு தொடர்பு வைத்துக் கொண்டும் சுயேச்சையாக சுதந்திரமாகச் செயல்பட்டுக் கொண்டுவருகின்றன.

இனி உலகில் இரண்டு சந்தைகள் இல்லை. ஒரே சந்தைதான் ஒரே சந்தைப் பொருளாதாரம் தான். அதில் போட்டி இருக்கும். ஆயினும் ஒரு நாடோ மற்றதோ ஆதிக்கம் செலுத்தவது மிகவும் கடினம். இந்த சந்தையில் அங்கம் வகிக்கும் நாடுகளும் தங்கள் நலன்கள் அடிப்படையில் பல கூட்டுகள்

வைத்துக் கொண்டிருக்கின்றன. பழைய முறையில் ஆதிக்கம் கொள்வது, ஆதிக்கம் செலுத்துவது மையம் கொள்வது சாத்தியமில்லை. உலகில் தொழிலாளி வர்க்கப் பொருளாதாரம் என்பது மறைந்து விட்டது ஒரே மக்கள் பொருளாதாரம் தான் பல உலக மய்யங்கள் இந்தப் பொருளாதாரத்தில் செயல்படுகின்றன.

இன்றுள்ள உலக வர்தக சபையில் வளர்ச்சியடைந்த நாடுகள் குறிப்பாக அமெரிக்க தனது மேலாதிக்கத்தைச் செலுத்த முயலுகிறது. அத்துடன் ஐரோப்பிய யூனியன் நாடுகளும் ஜப்பானும் கடுமையாகப் போட்டியிருகிறது.

இன்றைய உலகச் சந்தையில் சாதாரண மக்கள் முதல் அனைத்து மக்களுக்கும் அன்றாடம் பயன்படக் கூடிய நுகர் பொருள்கள் சந்தையில் வந்து குவிகின்றன. நுகர் பொருள் சந்தையில் போட்டி வலுவாக உள்ளது.

அமெரிக்கப் பொருளாதாரத்தில் ஆயுத தளவாட உற்பத்தி தான் மேலோங்கி நிற்கிறது. உலக நாடுகளின் ஆயுத தளவாட தேவைகள் குறைந்து வருகின்றன. அதனால் அமெரிக்கப் பொருளாதாரத்தில் மந்தமும் நெருக்கடியும் ஏற்பட்டிருக்கிறது. ஜெர்மனி ஜப்பான் போட்டிகளை சமாளிப்பது அமெரிக்க ஐக்கிய நாடுகளுக்குக் கடினமாக இருக்கிறது. முன்னாள் சோவியத் நாடுகள் தங்களுக்கு தாங்கள் உதவிசெய்யும் நாடுகளுக்கும் எந்திரத் தொழில்களில் தான் அதிக கவனம் செலுத்தி வந்திருந்தன. நுகர் பொருள் கலாச்சாரம் உலகில் மேலோங்கி வந்த போது தான் சோவியத் பொருளாதாரத்திற்கு நெருக்கடி ஏற்பட்டு, சோவியத் அமைப்பு சிதைந்தது.

இப்போது பழைய சோவிய நாட்டு மக்களுக்கு நுகர் பொருள் தேவைகளும் அதிகரித்துள்ளன. நுகர் பொருள் உற்பத்தியில் முன்னணியில் உள்ள நாடுகளான ஜெர்மனி ஜப்பான் முதலிய நாடுகள் சந்தைப் போட்டியில் முன்னணியில் உள்ளன. முன்னாள் சோவியத் நாடுகள் நுகர்பொருள் உற்பத்தியில் இப்போது அடி எடுத்து வைக்கத் தொடங்கியுள்ளன தங்கள் தேவைகளைப் பூர்த்தி செய்யும் அளவு தங்கள் நாடுகளின் நுகர் பொருள்களை உற்பத்தி செய்து கொள்ளும் வரை அவை இதர ஐரோப்பிய நாடுகளையும் ஜப்பானையும் தான் எதிர்பார்க்கவேண்டி ய திருக்கிறது. இருப்பினும் உலகச் சந்தை விஷயத்தில் ரஷ்ய காமன் வெல்தி நாடுகள் (முன்னாள் சோவியத்) தெளிவாகவே உள்ளன.

சீனாவின் பொருளாதார நிலையும் பிரச்சினைகளும் தனித்தன்மைகள் கொண்டதாகவே இருக்கிறது. சீனா மக்கள் தொகை அதிகமாகக் கொண்ட ஒரு பெரிய நாடு. அதனுடைய உணவு, உடை, வீட்டு வசதிகள், இதர அடிப்படை தேவைப் பொருள்கள் எல்லாவற்றிலுமே அதிகமான தேவை உள்ளது. பழைய முப்பாய்ச்சல், கிராமக் கம்யூன் அமைப்பு, கலாச்சாரப் புரட்சி

தோவ்வியடைந்ததால் ஏற்பட்ட பின்னடைவுகளை சமாளித்து இப்போது கிராம்ப் பொருளாதாரத்தை சீரமைத்துக் கொண்டிருக்கிறது. ஆயினும் மக்கள் தொகை அதிகமாக உள்ள அந்த நாட்டின் தேவைகள் அதிகமாக உள்ளன. இதர நாடுகளுடன் உள்ள வர்த்தக உறவுகளும் குறைவாக உள்ளன. எந்திர உற்பத்தித் தேவைகள் நவீன எந்திரத்தேவைகளும் அதிகமாக உள்ளன. எனவே உலக வர்த்தக அமைப்புடனும் உலகச் சந்தையுடனும் கட்டாயமாக உறவுகள் வைத்துக் கொள்ள வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. மறுபக்கம் அதனுடைய சோஷலிஸப் பொருளாதார அமைப்புடன் முரண்பாடுகளும் உள்ளன. அதனால் சீன ஒரு யுக்தியைக் கையாளத் தொடங்கியிருக்கிறது.

தங்கள் நாட்டுக்குள்ளேயே சில பொருளாதார, தொழில் திட்டுகள் தீவுகள், வட்டங்கள் மையங்களை அமைத்துக் கொண்டு அவைகள் மூலம் உலகப் பொருளாதாரம், உலகச் சந்தை ஆகியவற்றுடன் தொடர்பு வைத்துக் கொண்டு வேலை செய்து வருகிறது. அவை எவ்வாறு எதிர்காலத்தில் செயல்படப் போகிறது அவைகளின் உறவுகள் தொடர்புகள் எவ்வாறு இருக்கப் போகிறது. அதனுடைய அரசியல் மற்று ராணுவ நிர்வாக அமைப்புகளுடன் எவ்வாறு உறவுகள் இருக்கப் போகின்றன என்பதை பொருத்திருந்து பார்க்க வேண்டும். இதற்கிடையில் அதனுடைய மிகப் பெரிய அளவிலான மக்கள் தொகையின் மற்றும் 50 லட்சம் ராணுவம் உணவு மற்றும் இதர அத்யாவசியத் தேவைகளை எவ்வாறு சந்திக்கப் போகிறது என்பதையும் பொருத்திருந்து பார்க்க வேண்டியதாக இருக்கிறது. குறிப்பாக விவசாயம் விவசாய உற்பத்தி ஆகியவைகளின் வளர்ச்சி நிலைமை வினி யோகநிலை எப்படி அசையப் போகிறது என்பதைப் பொருத்திருந்து பார்க்க வேண்டும்.

இந்தியாவின் தொழில் வளர்ச்சி நிலை குறிப்பாக, சிறு தொழில்கள் நடுத்தரத் தொழில்கள் வளர்ச்சி யடைந்துவருகின்றன. சிலதுறைகளில் குறிப்பாக கணினி, தகவல் தொடர்புதுறைகளில் வேடகடுமாடக முன்னேறி முதன்மை அங்கீகாரம் பெற்று வருகிறது. ஜவுளி, ஆயத் ஆடைகள் முதலியவற்றிலும் வேகமாக முன்னேறி வருகிறது. இதர பல துறைகளிலும் இந்தியத் தொழில்களின் முன்னேற்றம் தொடர்கிறது. குறிப்பாக இந்த நூற்றாண்டின் தொடக்கத்தில் குறிப்பிட்ட முன்னேற்றம் கண்டு, உலகின் வளர்ச்சி யடைந்த நாடுகளின் வரிசைக்கு நெருங்கி வந்து கொண்டிருக்கிறது. பாரத ஆந்டிடன் மனிதளவம், குறிப்பாக என்ஜினியரிங் விஞ்ஞானம் தொழில் நுட்பம், வைத்தியத் துறை கணக்கியல் நிர்வாகம் கல்வி முதலிய பலதுறைகளிலும் நல்ல முன்னேற்றம் கண்டு, உலகின் எல்லா நாடுகளிலும் இந்தியாவின் மனித ஆற்றல் மிகவும் சிறப்பான பெயர் எடுத்துவருகிறது.

நல்ல முன்னேற்றம் கண்டு, உலகின் எல்லா நாடுகளிலும் இந்தியாவின் மனித ஆற்றல் மிகவும் சிறப்பான பெயர் எடுத்து வருகிறது.

இவ்வாறாக உலக நாடுகளின் முன்வரிசையில் உள்ள பத்துநாடுகளில் என்றாக வளர்ந்து வருகிறது அங்கீகாரம் பெற்று வருகிறது. குறிப்பாக ஐரோப்பிய நாடுகளுக்கப்பால் ரஷ்யா, சீனா, ஜப்பான், இந்தியா ஆகிய நாடுகள் உலக அரங்கில் பல துறைகளிலும் முக்கியத்வம் பெற்று வருகின்றன.

இந்தியா தன்னுடன் சார்ந்த நாடுகளை அதாவது இந்தியா பாகிஸ்தான் பங்களா தேஷ், இலங்கை நேபால் பாலத்தீவுகளின் கூட்டமைப்பு, தென் கிழக்கு ஆசிய நாடுகளுடன் இந்தியாவுக்குள்ள நெடுக்கம், வியத் நாம் நாட்டிற்கும் இந்தியாவுக்கும் உள்ள நெருக்கம் இவையெல்லாம் உலக உளவில் இந்தியாவின் அந்தஸ்தை உயர்த்தி வருகிறது.

விவசாயப் பொருளாதாரமும் விவசாயப் பிரச்சினைகளும்.

விவசாயப் பிரச்சினைகளும் விவசாய உற்பத்தியும் இயற்கையோடு இணைந்தது. இயற்கையை ஆதரப்பட்டு நிற்பதுமாகும். விவசாய உற்பத்திக்கருவிகளிலே பெரிய மாற்றங்கள் வளர்ச்சிகள் அபிவிருத்திகள், மேம்பாடுகள் ஏற்பட்டிருக்கின்றன. மேலும் ஏற்பட்டுவந்துள்ளன. மேலும், ஏற்பட்டு வருகின்றன. உழவுகருவிகள். இதர உற்பத்திக் கருவிகள் பெரும் அளவில் மாற்றங்கள் கண்டிருக்கின்றன.

உழவு கருவிகள், நீர் இரைக்கும் கருவிகள், அறுவடைக்கருவிகள் விதைப்பு, களையெடுப்பு, நீர்ப்பாசனம் ஆகியவற்றிற்கான கருவிகள் போக்குவரத்து சாதனங்கள் அபிவிருத்தி மின்சாரம் ஆகியவைகளெல்லாம் விவசாயத்துறையில் பெரும் மாற்றங்களைக் கொண்டுவந்திருக்கின்றன. விவசாய உழைப்பை எளிமைப்படுத்தியிருக்கிறது. சுலபப்படுத்தியிருக்கிறது வேகப்படுத்தியிருக்கிறது.

ஐரோப்பியநாடுகள், அமெரிக்க ஐக்கியநாடுகள், முன்னாள் சோவியத் யூனியன் நாடுகள் முதலிய வற்றில் விவசாயக் கருவிகள் நவீன மயமாக்கப்பட்டிருக்கின்றன. எந்திரமயமாக்கப்பட்டிருக்கின்றன. மின்சார மயமாக்கப்பட்டிருக்கின்றன. இந்தியாவிலும் அன்மைக் காலமாக விவசாயத் துறையிலும் எந்திரமயமாக்கல் மின்சாரம் நவீனமயமாக்கல் அதிகமாக்கப்பட்டு வருகின்றன. இந்திய கிராமங்களில் எங்கு பார்த்தாலும் டிர்ஆக்டர் கள் ஓடுகின்றன. தமிழ் நாட்டில் மட்டும் ஒரு லட்சத்திற்கும் மேற்பட்ட டிராக்டர்கள் ஓடுகின்றன. டிராக்டர் உற்பத்தியும் இந்தியாவல் நடந்து வருகிறது. மேலும் வளர்ந்து வருகிறது. உதிரிபாகங்கள் உற்பத்தி பழுது பார்க்கும் தொழிற் கூடங்கள் எங்கு பாரதத்தாலும் காணமுடிகிறது. உழுவதற்கும், நீ இறைக்கவும், களைஎடுக்கவும், கதி அறுக்கவும் களத்து வேலைகளுக்கும் போக்குவரத்துக்கும் எந்திரங்கள் வந்துவிட்டன. இவை யெல்லாம் விவசாயத்துறை எந்திர மயமாக்கப்பட்டிருப்பதைக் காட்டுகிறது. 1960-ஆம் ஆண்டுகளிலிருந்து ரசாயன உரம் ஏராளமாக தாரளமாகப் பயன்பாட்டிற்கு வந்துவிட்டது. விவசாய உற்பத்தியிலும் இந்தியாவிலும்

கூட ஒரு துள்ளல் ஏற்பட்டது. சீனாவில் கூட கம்யூன் திட்டத்தினால் ஏற்பட்ட தீய விளைவுகள் இருந்த போதிலும் உற்பத்திறன் இருமடங்கு உயர்ந்திருக்கிறது. இருப்பினும் உலக அளவில் சராசர் விவசாயத்துறை உற்பத்தி உயர்வு 2 முதல் 3 சதவீதம் தான் உள்ளது. சேவைத் தொழில் புள்ளிதான் அதிகம் உயர்நீதிருக்கிறது. விவசாயப் பொருள் உற்பத்தி குறைவாகவே உள்ளதற்கும் அந்தக் குறைவு நீடிப்பதற்கு முக்கிய காரணமாயிருப்பது நில வளம் அபிவிருத்தியாகாமல் அதில் தேக்கம் இருப்பது முக்கிய காரணமாக இருக்கிறது. உதாரணமாக நிலத்திற்கு இடம் உரத்தில் இயற்கை உரத்தின் அளவு குறைந்து வருகிறது. குறிப்பாக மனிதக் கழிவு, கால் நடைக்கழிவு, பசுந்தளை, தொழு உரம் ஆகியவைகளால் ஆன உரங்கள் குறைக்கின்றன. அதாவது உயிரணு உரங்கள் குறைகின்றன. ரசாயன உரங்களின் அளவு அதிகமாக்கிக் கொண்டுவருகிறது. அதனால் நிலத்தின் அமிலத்தன்மை அதிகமாகி சாரம் குறைந்து போகிறது அல்லது கெட்டுப் போகிறது. இந்த விளைவுகளை சமாளிக்க இயற்கை மற்றும் உயிரணு உரங்களையும் அவற்றின் அளவையும் அதிகரிக்க வேண்டும். அதிலுள்ள வேலைப்பளு, போக்குவரத்துச் செலவு இதர சில காரணங்கள் கருதி உயிரணு மற்றும் இயற்கை உரத்தின் அளவு குறைகிறது. அல்லது அறவே இல்லாமல் போகிறது. இது ஒருமுக்கியமான குறைபாடாகும் இந்த இடுக்கு வழியை நீக்காமல் விவசாய உற்பத்தியை அதிகரிப்பது சாத்தியமே இல்லை.

விவசாய உற்பத்தியில் என்ன தான் நவீன முறைகளும் எந்திர சாதனங்கள் வந்தாலும் இயற்கையின் சுழல் விவசாய உறப்த்தித் துறையில் மிகவும் அவசியமான ஒன்றாகும். ஐரோப்பிய நாடுகளில் பனியும், உஷ்ண மிகுதி நாடுகளில் மழையும் முக்கிய பிரச்சினைகளாகும். இவைகளால் வரும் இயற்கைக் கேடுகளையும் அழிவுகளையும் சேதக்களையும் முற்றிலும் தடுக்க முடியாவிட்டாலும் குறைக்க முடியுமா என்பது அவனிக்க வேண்டும். இதில் வெள்ளத் தடுப்புகள் மற்றும் வரட்சிகளினால் ஏற்படும் கயர்களை பெரும் அளவில் தடுக்கவும் தணிக்கவும் செய்யலாம். இத்துடன் பழைய காலனி ஆதிக்க நாடுகளில், கரும்புநாடுகள், பனானா நாடுகள், ரப்பர் நாடுகள், தேயிலை நாடுகள், காப்பி நாடுகள் என்று அவைகளை மட்டுமே உற்பத்தி செய்யும் நாடுகளாக்கி, விவசாய உற்பத்தியில் வேலைப் பிரிவினையும் ஏற்பட்டுள்ளது. இந்த நிலையில் உலக மக்கள் அனைவருக்கும் உணவளிக்கும் பிரச்சினை வயிற்றுக்கு சோறிட வேண்டும். உலகில் வாழும் மனிதருக்கெல்லாம் என்றும் பிரச்சினை எழுகிறது.

இன்னும் சில ஆண்டுகளில் உலக வர்த்தகமய்யத்தில் விவசாய உற்பத்திப் பொருள் சந்தை முக்கிய இடம் பெற்றும். இதில் ஐரோப்பியநாடுகளோ, முன்னாள் சோவியத் நாடுகளோ, உலக உணவு ச் சந்தையில் தங்கள் சொந்த தேவைகள் காரணமாக உபரியை சந்தைக்குக் கொண்டு வரும் வாய்ப்புகள் குறைவாக வே இருக்கும். சீனவுக்கு தங்கள் சொந்த ஆநட்டு தான்யத் தேவைகளைப் பூர்த்தி செய்வதிலேதான் அதிக்க வனம் இருக்கும் உபரியாக

தான்யத்தை சந்தைக்குக் கொண்டுவருவது கடினமாக இருக்கும்.

அத்துடன் வசதியுள்ள வளர்ச்சி படையந்த நாடுகள் தங்கள் நாட்டு மக்களின் தேவையைக் கருதி, உணவு தான்யத்தை தேவைக்கு மேல் அதிகமாக கள்ளச் சேமிப்பு செய்து கொள்ளும் நிலைமையும் ஏற்படலாம்.

காபி, தேயிலை, ரப்பர், சர்க்கரை, வாழைப்பழ நாடுகள் தங்கள் பொருள்களை உலகச் சந்தைக்குக் கொண்டுவரும் போது விலை பேரத்தில் பாதிப்பு ஏற்படலாம். தான்யம் மற்றும் இதர உணவுப் பொருள்களுக்கு அதிக விலை கொடுக்க வேண்டியதேற்படலாம். இப்போதே சில ஆப்பிரக்க தென் அமெரிக்க நாடுகளில் உணவு தான்யபற்றாக் குறையின் கடுமை அதிகரித்து வருகிறது. பட்டினி அபாயமும் ஏற்பட்டு வருகிறது. இதைவைத்தே வளர்ச்சியடைந்த நாடுகள் உலக வர்த்தக சபையில், விவசாய உற்பத்திப் பொருள் வாணிபத்தில் தங்கள், ஆதிக்கத்தை பலப்படுத்திக் கொள்ளப் பார்க்கிறது.

உணவு உற்பத்தியை அதிகரித்தில் விவசாயப் பொருள் உற்பத்தியைப் பெருக்குவதில், விவசாயப் பொருளாதாரத்தை அபிவிடுத்தி செய்வதில், விவசாயத்திற்குச் சாதகமாகவும் துணைத் தொழிலாகவும் உள்ள கால் நடைச் செல்வங்களைப் பெருக்குவதில், விவசாய உற்பத்திப் பொருள் சார்ந்த தொழில்களைப் பெருக்குவதில் பாரதத்திற்குள்ள வாய்ப்புகள் அதிகம். இந்த வாய்ப்புகளை முழுமையாகப் பயன்படுத்தினால் உலகத்திற்கு உணவளிக்கும் புண்ணிய காரியத்தை பாரதம் நிறை வேற்ற முடியும்.

முதல் படியாக நீர்ப்பாசம் தென் மாநிலங்களில் குறிப்பாக ஆந்திரப் பிரதேசம், கர்நாடகம் தமிழ்நாடு ஆகிய மாநிலங்களில் ஏற்கனவே சேர சோழ, பாண்டிய, பல்லவ மன்னர்களாலும் கட்டப்பட்டிருக்கும் சிறிய, நடுத்தர, கண்மாய் ஏரிகள், பாசன குளங்கள், சுமார் ஒன்றரை லட்சத்திற்கு மேற்பட்டவை உள்ளன. மழைகாலங்களில் இந்த செயற்கை நீர்நிலைகள் எல்லாம் பல்நோக்கு கொண்டவை இந்த செயற்கை நீர் நிலைகள், நீர்ப்பாசனம், நிலதடி நீர் சுரத்தல், சுற்றுச் சூழல் தட்பவெப்ப நிலைகளைச் சம்ப்படுத்தல், இந்த நீர் நிலைகளின் கரைகள் அனைத்திலும் மரங்களை வைத்து ஆம் மாங்களை வளர்த்துப் பாதுகாக்கவேண்டும். இந்த நீர் நிலைகள் நிரம்பிய பின்னர் மிச்ச நீரை பெரிய அணைகளில் நீர் நிலைகளில் சேமித்து வைக்க வேண்டும். இதை ஒரு தேசீயக் கொள்கையாக உருவாக்க வேண்டும்.

இரண்டாவதாக மகராஷ்டிரம் மத்தியப் பிரதேசம் ஒரிஸ்ஸ மாநிலங்களை எடுத்துக் கொள்ள வேண்டும். நிறைவாக ந்தி நீர் இணைப்பு திட்டத்தை எடுத்து நிறைவேற்ற வேண்டும்.

இவ்வாறு இந்த நீர்ப்பாசன திட்டங்களை நிறைவேற்றினால் பாரதம் நித்யாவைப் போல் பத்து இந்தியாவுக்கு சோறு போட முடியும். பத்து இந்தியாவிற்கு மின்சாரம் கொடுக்க முடியும்.

பாரத நாடு முழுமையிலும் உள்ள பஞ்சாலைகளுக்கு படுத்தி சப்ளை செய்யவும் சர்க்கரை ஆலைகளுக்கு கரும்பு சப்ளை, காகித ஆலைகளுக்கான மூலப் பொருள் சப்ளை செய்ய முடியும். அதன் மூலம் பஞ்சாலை, நூல் நூணி நூணி ஆலைகள், சர்க்கரை ஆலைகள், காகித ஆலைகள் சர்க்கரை ஆலைக்கழிவுகளிலிருந்து பெட்ரோல் எரிபொருள் உற்பத்தியும் பெரிய அளவில் சாத்யப்படும்.

இந்தத் தொழில்கள் எல்லாம் சிறய நடுத்தரத் தொழில்களாக அமைவது நல்லது நமது நாட்டிற்கு உகந்தது.

ஒவ்வொரு கிராமத்திலும் கிராம்ப் பகுதியிலும் உள்ள மூலப் பொருள் மற்றும் விவசாய உற்பத்திக்கு ஏற்றவாறு தொழில்கள் அமைய வேண்டும் பஞ்சு அரவை, நூல் உற்பத்தி, துணி உற்பத்தி ஆயத்த ஆடை உற்பத்தி சர்க்கரை ஆலை எரிபொருள் ஆலை காகித ஆலைகள் அமைய வேண்டும். இதன் மூலம் அப்பொருள்களுக்கான உற்பத்திச் செலவும் போக்குவரத்துச் செலவும் குறையும்.

இரண்டாவதாக போக்குவரத்து மற்றும் தொடர்பு இணைப்புகளை பலப்படுத்த வேண்டும், விரிவு படுத்த வேண்டும். உலகத்தரத்திற்கு உயர்த்த வேண்டும்.

ரயில்வே போக்குவரத்து, உலகிலேயே மிகப்பெரிய ரயில்வேப்போக்குவரத்து இந்திய நாட்டின் ரயில்வேபோக்கு வரத்தாகும். இந்தியரயில்வே முழுவதையும் அகிலப்பாதையாக விரிவுபடுத்தும் பணி நடைபெற்று வருகிறது. அதைத்துரிதப் படுத்த வேண்டும்.

சாலைப்போக்குவரத்து நாட்டிலுள்ள எல்லா நகரங்களையும் இணைக்கும் முறையில் சாலப் போக்குப் பெரிய நகரங்களை இணைக்கும் நான்கு வழிப்பாதை, எல்லா பேரூர்களையும் எல்லா கிராமங்களையும் இணைக்கும் சாலைகள் அமைக்க வேண்டும். ஏற்கனவே நமது நாட்டில் மௌரியர் ஆட்சி அசோகன் ஆட்சி, குப்தர் ஆட்சி, தென்னாட்டு ஆட்சிகள் இருந்த காலத்தில் எல்லாப்பகுதிகளையும் அணைக்கும் சாலைகள் வண்டிப்பாதைகள் நடைபாதை இருந்தன. ஒரு நாத்தின் உள்நாட்டு வளர்ச்சிக்கு விவசாயம், வாணிபம் சந்தை வளர்ச்சிக்கு சாலை வளர்ச்சி அவசியம். நவீன காலத்திற்கேற்பக நவீன சாலைகள் அணைப்பு அமைய வேண்டும்.

விமானத் தொடர்பு இணைப்பு நாட்டின் முக்கிய நகரங்கள் முக்கிய பகுதிகள் அனைத்திற்கும், விமான இணைப்பு கொண்டு வர வேண்டும். உள்நாட்டு, வெளியாட்டு விமானத்தொடர்பிணைப்புகளைத் திட்டமிட்டு விரிவுபடுத்த வேண்டும். கப்பல் போக்குவரத்து இணைப்பு நமது நாட்டிற்கு நீண்ட கடற்கரை உள்ளது. இப்போது பத்து துறைமுகங்கள் பெரிய துறை முகங்கள் உள்ளன. உள்நாட்டு கப்பல் போக்குவரத்து வெளிநாட்டு கப்பல் போக்குவரத்து விரிவு படுத்த வேண்டும். உள் நாட்டுக் கப்பல் போக்கு

வரத்து அண்டை நாட்டுகப்பல் போக்கு வரத்து ஆகியவற்றிற்கு சிறய நடத்தரக்கப்பல்கள் போதுமானது.

இவ்வாறு, ரயில்வே, தரைவழி, கடல்வழி, ஆகய வழிப்போக்குவரத்தை விரிவுப்படுத்துவது நமது தொழில் மற்றும் விவசாய வளர்ச்சிக்கும், வாணப வளர்ச்சிக்கும் மிகவும் அவசியமாகும்.

விவசாய உற்பத்தியில் உணவுதானியங்கள், காய்கறிகள், பழங்கள், மலர்கள் மற்றும் தொழில்களுக்குத் தேவையான மூலப் பொருள்கள் முதலிய அனைத்து வகை உற்பத்திக்கும் இந்தியாவில் வாய்ப்புகள் உள்ளன.

உணவு தானிய உற்பத்தியில், நெல், சோளம், கம்பு, ராகி, கோதுமை முதலிய தானியங்களும், உளுந்து, துவரை, கடலை, பச்சைப்பயறு முதலியன பயறு வகைகளும், வேர்க்கடலை, தேங்காய், கடுகு, முதலிய எண்ணெய் வித்துக்களும், மா, பலா, வாழை, ஆரஞ்சு, திராட்சை, ஆப்பிள் மலர் வகை முதலிய பழ வகைகளும் ஏராளமாக விளையக் கூடிய நிலப்பகுதிகள் பல வேறு மாநிலங்களிலும் உள்ளன. இவைகள் அனைத்தையும் தேவைக்கேற்ற வாறும், கால் நாலைக்கேற்றவாறும் பெரும் அளவில் நமது நாட்டுத் தேவைக்கும் ஏற்றுமதிக்கும் ஏற்றவாறு உற்பத்தி செய்யலாம்.

இப்போது இந்தியா உணவுதானிய உற்பத்தியில் அன்னிய ஆட்சி காலத்தில் பற்றாக்குறை இருந்த நிலைமாறி, இப்போது உபரியான உற்பத்திக்கு கொண்டுவந்திருக்கிறோம். உணவு தான்ய உற்பத்தி பழங்கள் பால், முட்டை, மலர்கள் ஆகியவைகளின் உற்பத்தியில் நமது தேவைக்கும் உபரியில் நமது தேவைக்கும் உபரியாகவும் உற்பத்தி செய்து மதியும் செய்கிறோம்.

கால்நடை பராமரிப்பு பண்டைய காலத்திலிருந்து விவசாயமும் கால் நடைப்பராமரிப்பும் இணைந்து பாரத நாட்டில் பெருகி வளர்ந்திருந்தது. அத்துடன் சேர்ந்து நமது கோயில்களும் மலர்களும் இணைந்தே சென்றிருக்கின்றன.

ஆடு, மாடு, பன்றி முதலிய கால்நடைகளும் கோழி, வாத்து முய பறவை இனங்களும் கிராமமக்களுடனும் அவர்களுடைய வாழ்க்கையுடனும் இணைந்தவைகளாகும். இன்று நாம் பால், மோர், தயிர், வெண்ணெய், நெய், முட்டை, மலர்கள் முதலியவற்றி உபரியாக உற்பத்தி செய்து ஏற்றுமதியும் செய்கிறோம். நமது நாட்டின் சாகுபடியில் மக்களுக்குத் தேவையான உணவு.

சுதேசி இயக்கம்:-

மகாகவிபாரதி வாழ்ந்தகாலம் அன்னிய கட்சியின் கொடுங்கோன்மை கோரதாண்டவம் ஆடிக் கொண்டிருந்த காலம் சுதந்திர வேண்டும் என்று மக்கள் துடித்த எழுந்த கொண்டிருந்த நேரம், சுதந்திரம் எனது பிறப்புரிமை என்று திலகர் பெருமான் குரல் கொடுத்து தமது இளைஞர்களைத் தட்டி

எழுப்பிக் கொண்டிருந்த காலம்.

அன்னிய ஆட்சியின் காரணமாக நமது தொழில்கள் எல்லாம் ஆதரவின்றி நசித்துக் கொண்டிருந்த நேரம் எப்படியும் நமது உள்நாட்டுத் தொழில் களைப்பாதுகாக்க வேண்டும் என்று அன்னிய வஸ்து வர்ஜனம், ஜாதியக் கல்வி, பஞ்சாயத்து சரீரப் பயிற்சி என்றும் சுதேசீயத்தைத் தாங்கும் நான்கு தூண்களாக வகுத்துக் கொண்டு சுதந்திரப் போராட்டத்தோடு சேர்ந்து இணைந்து சுதேசியத்தையும் வளர்ந்தோம்.

இப்போது நாம் சுதந்திரத்தைப் பெற்று விட்டும். ஆயினும் பெற்ற சுதந்திரத்தைப் பேணிக்காக்க வேண்டிய பெரிய கடமை நம்முன் நிற்கிறது.நமது சுதந்திரத்தைப் பேணிக்காக் வேண்டுமானால் நமது பொருளாதாரபலம் பெருக வேண்டும். நமது தொழில் துறையும் விவசாயத்துறையும், உள் நாட்டு வெளிநாட்டு வாணிபமும் பலப் பட வேண்டும்.

நாம் பொருளாதாரத்துறையில் நோஞ்சானாக இருந்தால், விவசாயத் துறையில் பலவீனமாக இருந்தால் வாணிபத்தில் மாளியாக இருந்தால் கண்ட நாய்க்களெல்லாம் நம்மீது பாயும் .

நமது மக்கள், நமது தொழிலாளர்கள், நமது தொழில் நுட்ப நிபுணர்கள் நமது தொழில் நிர்வாகிகள், நமது வாணிபர்கள், நமது சாகுபடியாளர்கள் நமது கிராம்ப்புறமக்கள் லேசானவர்களல்ல இளைத்தவர்களல்ல, நமது நாடும் வளம் மிக்க நாடு.

எனவே நாம் நமது நாட்டை பொருளாதாரத்துறையில் தொழில் துறையில், தொழில் நுட்பத் துறையில், வாணிபத்துறையில் விவசாயத்துறையில் உற்பத்தித் துறையில் பொருளுற்பத்தித் துறையில் வலுவுள்ள நாடாக வளரவேண்டும். இப்போது சலப் பலதுறைகளில் முன்னேறி வருகிறோம். உலகில் வளர்ச்சியடைந்த நாடுகளில் வன்றாக வேகமாக முன்னணிக் குவிந்து கொண்டிருக்கிறோம்.

ஆயினும் உலகமயமாக்கல், தாரளமயமாக்கல், சுதந்திர சந்தை, உலக வர்த்தக சபை, உலக வங்கி, சர்வ தேச நீதி நிறுவனம், ஐக்கிய நாடுகள் சபை, ஆகியவைகளில் , சலவலுவான நாடுகள் ஆதிக்கம் செலுத்து வதற்கு வலுவாக முயற்சிகள் செய்து கொண்டுள்ள நேரத்தில் நமக்கு வாணிபத்துறையில், நாணய மாற்றுத்துறையில் உலகச் சந்தையில் கடுமையான போட்டியிருக்கும். நமது உள்நாட்டுச் சந்தையிலும் எந்த ஒரு வலுவான நாடும் உள்ளே புகுந்து ஆதிக்கம் செலுத்த முயலும்.

இந்த சூழ்நிலையில் நாம் மிகுந்த கவனத்துடனும், கழுகப் பார்வையுடனும், விழிப்புடனும், சிறந்த வியாபார நோக்குடனும் இருக்க வேண்டும். முதலாவதாக நமது உற்பத்திப் பொருள்கள் தரமானதாக, உயர்வானதாக இருக்க வேண்டும்.

நமது வானிபம் எல்லா வற்றிற்கும் மேலாக நாட்டு நலன் மீது அக்கரை கொண்டு அதையே ஆதரமாகக் கொண்டிருக்க வேண்டும். நமது வணிகர்கள் துணிவோடும். நாட்டு நலன் மீது அக்கரை கொண்டும் செயல் பட வேண்டும்.

நமக்கு வேண்டியவர்களையும் வலுவான துணையாக்க் கொள்ள வேண்டும்.

நாமும் ஆதரவோடு நிற்க வேண்டும்

தேசபக்த உணர்வோடு நமது உள்நாட்டு சந்தையை நமது நாட்டு நலனை மட்டுமே ஆதாரமாக்க் கொண்டு செயல்படுத்த வேண்டும்.

நமது நாட்டு மக்களின் சுதேசி உணர்வையும் செயல்பாடுகளையும் பலப்படுத்த வேண்டும்.

ஒரு வலுவான புதிய சுதேசி இயக்கத்தை வளர்க வேண்டும்.

நமது சாக்குகளுக்கான உள்நாட்டுச் சந்தையை பலப்படுத்த வேண்டும், விரிவு படுத்த வேண்டும். வெளிநாட்டுச் சந்தையை

உலக அளவில் ராஜதந்திரத் துறையிலும் வர்த்தகத்துறையிலும் உலக வர்த்தக சபை அளவிலும் நாமும் ஆள் சேர்க்க வேண்டும். அணி சேர்க்க வேண்டும்.

எல்லாவற்றிற்கும் மேலாக நமது நாட்டிற்குள்ளயும் ஒருவலுவான விரிவான சேதேசி இயக்கத்தை உருவாக்க வேண்டும். நமது நாட்டு மக்களுக்கும், நமது சந்தையை நம்பியுள்ள அல்லது நமது சந்தையை எதிர்பார்த்துள்ளவர்களுக்கும் தேவைப்படும் தரமான சரக்குகளை உற்பத்தி செய்து அனுப்பவேண்டும்.

நமது சாக்குகளின் நம்பகத்தன்மையை. உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் உயர்த்த வேண்டும்.

நமது உள்நாட்டு உற்பத்தியை அதிகப் படுத்த வேண்டும். பெருக்க வேண்டும். தரத்தை உயர்த்த வேண்டும்.

நமது விளம்பரம் பிரச்சாரம் ஆகியவற்றை அதிகப்படுத்த வேண்டும். உள்நாட்டு சந்தையை மிகவும் வலுவானசந்தையாக உருவாக்க வேண்டும். உலக அளவில் நமது நண்பர்களை அதிகப்படுத்த வேண்டும்.

நமது விவசாயப் பொருள் உள் நாட்டுச் சந்தையை பலப்படுத்த வேண்டும் விரிவுபடுத்த வேண்டும். தான்யங்கள் மட்டுமல்லாது நமது கால்நடைகளுக்குத் தேவையான போதுமான உணவுப் பொருகளும் சேரும்.

மகாகவி பாரதி எழுதுகிறார் குழு:

''குழு'' என்ற தமிழ்ச் சொல்லுக்குக் கூட்டம் என்று அர்த்தம். இப்போது மகாசபை என்று சொல்வதை பழைய தமிழர் குழு என்றனர். தமிழரசர்

காலத்தில் ஐந்து குழுக்கள் உண்டு. 1.குடிகள் குழு 2.குருக்கள் குழு 3. ஜோதிடர் குழு 4. வைத்தியர் குழு 5. மந்திரிகள் குழு

ராஜா செய்யும் விதிகள் இந்த ஐந்து குழுக்களின் அனுமதி பெற்ற பிறகு தான் உறுதிப்படும். குடிகளின் குழுவிலே ஜனங்களின் பிரதி நிதிகள் இருந்தனர். கருக்கள் சபையிலே மதத்தலைவரும் ஜோதிடர் சபையிலே கணிதக்காரரும் இருந்து அரசியலானது சாஸ்திரக் கருத்தையும் ஜனாச் சாரங்களையும் தழுவி நடக்கும் படி ஆலோசனை சொல்லினர் வைத்தியக் குழு நாட்டிலே நோய்கள் பிரவாத படி அரசன் செய்ய வேண்டிய சுத்தி முறைகளை கவனிப்பது. மந்திரிகளின் குழு அரசியலின் மூல தர்மங்களிலே தவறு நேரிடாமல் ஆரசனை நியாய வழியில் நடத்துவது. இந்த விஷயமெல்லாம் நமது நாட்டுப் பழைய சாஸனங்களை ஆராய்ச்சி செய்யும் புராதன பரிசோதனை பண்டிதர்கள் கண்டுபிடித்துச் சொல்லியிருக்கிறார்கள். மணிமேகலை முதலிய பழைய நூல்களிலும் காணலாம். (ஐம்பெரும் குழுக்களும் எண் பேராயமும் என்று நமது இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன. ஆ.ர்.) இது நிற்க ஜனங்களுடைய ஸம்மதப்படி ஆட்சி செய்ய வேண்டும் என்ற கருத்துடன் ஏற்படும் சபைகள் இங்கிலாந்து முதலிய தேசங்களில் நாளுக்கு நாள் நாகரிகமும் சீர்திருத்தமும் பெற்று மேன்மேலும் அதிக வலிமையுடன் ஏறி வந்திருப்பதாகச் சரித்திரங்களிலே தெரிகிறது. நமது நாட்டில் இவை விருத்தியடைய வில்லை ஏன்? எதனால்'' என்று மகாகவி கேட்கிறார்.

பாரதநாட்டின் அரசியல் நிர்வாகம் என்பது நமது பண்டைய ஞானிகள் வகுத்த தர்மம் அர்த்தம் காமம் என்னும் புருஷார்த்தங்களில் வகுத்தக் கூறியுள்ள நெறிமுறைகளின் படி அதற்குரிய அறிஞர் வகுத்த வழிமுறைகளின் நடைபெற்றது. ஆனால், பின்னர்படையெடுப்பாளர்களும் அதன் பின்னர்வந்த ஆக்கிரமிப்பாளர்களும் அந்த முந்தைய வழிமுறைகளை அழித்தார்கள் பழைய நெறி முறைகளையும் வழி முறைகளையும் வகுத்த ஞானிகளை பைத்தியக் காரர் என்றும் பிச்சைக் காரர் என்று ஏசினார்கள். புதிய கொள்ளை முறைகளையும் மக்களை அடிமைப்படுத்திக் கொள்ளையடிக்கும். சட்டதிட்டங்களையும் நிலை நாட்ட முயன்றதால் பழைய நெறி முறைகளும் வழிமுறைகளும் சிதைந்து போயின.

இப்போது நாடு சுதந்திரம் பெற்ற பின்னர் பழைய வழிமுறைகளையும் நெறிமுறைகளையும், புதிய சூழ்நிலைகளுக்கேற்ப, புதிய சமுதாயவளர்ச்சி நிலைகளுக்கேற்ப, அன்னிய ஆங்கிலேயர் வகுத்த சட்டதிட்டங்களையும் அடிப்படைக் கல்வி முறைகளையும் ஆற்றியமைத்து அரசியல் நிர்வாகத்தை சீரமைக்க வேண்டும். அப்போது மகாகவி பாரதியின் சுதந்திரக் கனவு நிறைவேறும்.

நகரம் என்னும் தலைப்பில் மகாகவி எழுதுகிறார்?

வால்ட் விட்மன் என்பவர் சமீபகாலத்தில் வாழ்ந்த அமெரிக்க

(யுனைட்டட் ஸ்டேட்ஸ்) தேசத்து கவி. இவருடைய பாட்டில் ஒரு புதுமை என்னவென்றால் அது வசன நடைபோலே தானிருக்கும். எதுகை மோனை தளை ஒன்றுமே கிடையாது. எதுகை மோனையில்லாத கவிதை தான் உலகத்திலே பெரிய பாஷைகளில் பெரும் பகுதியாகும். ஆனால், தளையும் சந்தமும் இல்லாத கவிதை வாழக்கமில்லை. வால்ட் லிட் மான், ''கவிதையை பொருளில் காட்ட வேண்டுமேயல்லது சொல்லடுக்கில் காட்டுவது பிரயோஜனமில்லை'' என்றுகருதி ஆழ்ந்த ஓசை மாத்திர்ம உடையதாய் மற்றப்படி வசனமாகவே எழுதிவிட்டார். இவரை ஐரோப்பியர், காளிதாஸன், கம்பன், ஷேக்ஸ்பியர், மில்டன், தாந்தே, கெத்தே முதலிய மகாகவிகளுக்கு ஸமான பதிவியுடையவராக மதிக்கிறார்கள்.

குடியாட்சி, ஜனாதிகாரம் என்ற கொள்கைக்குமந்திர ரிஷகளில் ஒருவராக இந்த வால்லிட்மனை ஐரோப்பிய ஜாதியார் நினைக்கிறார்கள்.

எல்லாமனிதர்களும் ஆணும், பெண்ணும் குழந்தைகளும் எல்லாரும் ஸமானம் என்ற சத்தியத்தை பறையடித்த மஹான்களில் இவர் தலைமையானவர்.

ஸர்வஜகத்தும் ஒரே சக்தியை உயிராக உடையது. ஆதலால் எல்லாம் ஒன்று. ஆதலால் பயத்தை விடு,. பிறருக்குத் தீங்கு செய்யாதே, மற்றப்படி யெல்லாம் உன் சொந்த இஷ்டப்படி நடந்து கொள். எல்லாரும் ஸமானம் யாருக்கும் பயப்படாதே. கடவுள் ஒருவருக்கே பயப்பட வேண்டும் மனிதர் கடவுளைத் தவிர வேறொன்னுக்கும் பயப்படக் கூடாது. இது தான் அவருடைய மதத்தின் மக்கியமான கொள்கை. ''எல்லாரும் பரஸ்பரம் அன்பு செய்யுங்கள். என்ற கிறிஸ்துவின் போதனையை அவர் கவிதையாகப் பலவகைகளில் சொல்லியிருக்கிறார். இந்தமஹான் ஒரு நகரம் கற்பனை பண்ணுகிறார். அந்த நகரத்தில் ஆணும் பெண்ணும் சபதத்தில் தஞ்சார். அங்கே அடிமையில்லை. ஆண்டையுமில்லை. அங்கே, ஸ்தானிகர்களின் முடிவற்ற செருக்கைப் பொது ஜனம் உடனே சினந்து எதிர்க்கிறது. அங்கே நகரத்தான் தலை. நகரத்தான் பிரமாணம் அவனைடைய சம்பளக்காரரே பிரஸிடெண்டு, மேயர், கவர்னர், எல்லாரும். அங்கே குழந்தைகள் தமக்குத் தாமே பதிவு செய்து கொள்ளவும் தம் மைத்தாமே காத்துக் கொள்ளவும் பயிற்சி பெறுகிறார்கள். அங்கே பெண்கள் வீதிகளில் ஆண்களைப் போலவே கூட்டம் கூடி ஊர்வலம் வருகிறார்கள் அங்கே பொதுக்கட்டிடங்களில் பெண்கள் ஆண்களுக்கு நிகரான இடம்பெறுகிறார்கள்.

இவ்வாறு வால்ட்லிட்மன் கற்பனை பண்ணின நகரத்தைக் கண்முன்னே பார்க்க வேண்டும் என்ற நோக்கத்துடன் ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் இப்போது கூடப் பல ராஜ்ய தந்திரிகளும் மந்திரிகளும் சாஸ்திரிகளும் முயற்சி செய்து கொண்டு வருகிறார்கள்.

''பணக்காரன், ஏழை, உத்தியோகஸ்தன், கூலிக்காரன், குடிபடை, ஆண், பெண், மூத்தது இளையது எல்லாரும் ஒருவருக்கொருவர் வஞ்சனை

துரோகம் அநியாயம், கொள்ளை கர்வம் ஹிம்சை அவமதிப்பு கொலை முதலிய தீமைகள் செய்யாமல் பரஸ்பரம் அன்புடனும் மதிப்புடனும் நடந்து எல்லாரும் விடுதலை யும் ஸமத்வமும் உள்ளதாகிய நகரம் கண்முன்னே தோன்றுவதை விரும்பாத மனிதனும் உண்டோ'' என்று மாகாகவி வால்ட்லிட்மன் எழுதியுள்ளதை எடுத்துக் காட்டி தனது விருப்பத்தை வெளிப்படுத்துகிறார்.

பதினெட்டாம் பத்தொன்பதாம் நூற்றாண்டுகளில் ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் ஏற்பட்ட பல கலவரஞநங்ட்டகதூள் போர்கள், மக்கள் பட்ட துன்பதுயரங்கள் ஆகியவைகளைக் கண்டும் கேட்டும் சந்தித்த பல அறிஞர்களும், துன்பதுயரங்களும் போரும் இல்லாத ஒரு சமத்வமான சமாதானமான சமுதாயம் ஏற்பட வேண்டும் என்று சிந்தித்தார்கள். அப்படிப்பட்ட சிறந்த சிந்தனையாளர்களில் ஒருவர் அமெரிக்க ஐக்கிய நாடுகளில் பிறந்து வளர்ந்த ஆங்கிலக் கவிஞர் வால்ட் விட்மன். அவர் நமது தமிழ் நாட்டின் தலை சிறந்த கவிஞர் பாரதியின் உள்ளத்தை ஈர்த்ததில் ஆச்சரியமில்லை. மகாகவி பாரதியின் உணர்வை வெளிப்படுத்தகிறது. இந்தக் கட்டுரையும் குறிப்பும்

அனந்தசக்தி: இந்த்த் தலைப்பில் மகாகவி எழுதுகிறார்.

எறும்பு இறந்து போன புழுவை இழுத்துச் செல்லுகிறது. உதனால்? சக்தியினால் தூமகேது அநேக லட்சம் யோசனை தூரமான தனது வாலை இழுத்துக் கொண்டு திலை வெளியில் மஹா வேகத்தோடு சுழலுகின்றது எதனால்? சக்தி யினால். அந்தத்தூமகேது எழுபத்தைந்து வருஷத்தில் ஒருமண்டலமாகத் தன்னைச் சுற்றிவரும்படி சூரிய கோளம் நியமிக்கிறது எதனால்? சக்தியினால்.

ஒரு கன்னிகை பாடுகிறாள். நெப்போலியன் ஐரோப்பியாக் கண்டம் முழுவதையும் வெல்லுகிறான். இவை இரண்டிற்கும் சக்தியே ஆதாரம். கண்ணுக்குப் புலப்புடுவதும், ஊக்கத்திற்குப் புலப்படுவது மாகி வெளியுலகங்கூட எல்லையற்றதென்று படுவதுமாகிய வெளியுலகம் கூட எல்லையற்ற தொன்று பண்டிதர்கள் கண்டிருக்கிறார்கள். இந்த எல்லையற்ற உலகத்தை இயக்கும் சக்தி தானும் எல்லையற்றதாகும். இந்த அநந்த மானது. அதனினும் பெரிது. இவ்வித சக்தியை மனிதன் பாவனை செய்வதால் பலவிதப் பயன்களுண்டு ''யத்பாவயஸி தத்வவஸி'' எதனைபாவிக்கிறாயோ நீ அதுவாக ஆகின்றாய்.

ஆனால், இங்ஙனம் பாவனை செய்வது யோசான காரியமென்று நினைத்து விடலாகாது. உயிர் தழும்பியதும் கனல்வதுமான சிரத்தையுடன் பவானை செய்ய வேண்டும். பொறி பறக்கும் பக்தியுடன் தியானம் செய்ய வேண்டும். இதனை வீண்கதை யென்று நினைத்துவிட வேண்டாம். விடாமல் அனுஷ்டானம் செய்து பார்த்தால் இதன்பயன் தெரியும்.

ஞானிகளென்றும் யோகிகள் என்னும் சொல்லப்படுவோர் இந்த சக்தியை மனமறிந்து சில முறைகளை அனுஷ்டித்து பெறுகிறார்கள் ஸாமன்யஜனங்கள் விஷயம் தெரியாமல் இயற்கை முறையிலே சிறிது பெற்றவர்களாகின்றனர். சக்தி சிறிதும் இல்லாவிட்டால் ஒருவன் க்ஷண நேரம் கூட மூச்சுவிட்டுக் கொண்டு இவ்வுலகத்தில் இருக்க முடியாது. வெளிக் காற்றிலே உலவி அத்துடன் யோகப் படுவதால் சித்தி உண்டாகிறது. சரீரத்தை உழைப்புக் கு உட்படுத்தவதால் இடைவெளியெங்கும் ததும்பிக்கிடக்கும். அறிவைப்பல விஷயங்களில்ஏ சிரத்தையுடன் செலுத்த உழைப்பதனால் சக்தி உண்டாகிறது. இங்ஙனம் சிறிது சிறிது ஏற்படும் சக்தியினாலேதான் உலகத்தில் மனிதர்கள் ஜீவித்திருக்கிறார்கள்.

தமிழ் ஜனங்களுக்குள் சக்தி மேன்மேலும் பெருகச் செய்ய வேண்டும் மென்பது நமது நோக்கம். இந்த நோக்கத்தை நிறைவேற்றும் பொருட்டாகவே நாம் உயிர் தரிக்கின்றோம். ''மாதா'' இந்த நாட்டு ஜனங்களுக்குச் சக்தியதிகரிக்கும்படி செய்க! அக்காரியத்தை நிறைவேற்றுவதற்குரிய சக்தியை எனக்கருள் புரிக'' என்று நம்மில் ஒவ்வொருவனும் தியானம் புரித்ல் வேண்டும். ஆட்டம் ஆடுதல், கூத்து முதலியவை மற்போர் முதலியவற்றிலே பழகுதல், பாடுதல், தர்க்கம், வாதம், தவம், பிரம்மசரியம், சுத்தம் முதலியவற்றால் ஓர் ஜாதிக்கு சக்தி அதிகப்படுகிறது. மனம் வர்க்கும் செயல் மூன்றும் சுத்தமாக இருக்க வேண்டும். உள்ளும் புறமும் மாசு இல்லாது செய்யப்பழகவேண்டும். பயம் சந்தேகம் சலனம் மூன்றையும் வெறுக்க வேண்டும். இதனால் சக்தி யேற்படும்.

''புராதன சம்பிரதாய மென்பதால் மட்டுமே ஒன்று பொய்யாகி விட மாட்டாது. புதி தென்பதால் மாதிரமே ஒன்றை மெய்யாகக் கொண்டுவிடுதலும் பிழை. ஆராய்ந்து அனுபவத்தால் பார்க்குமிடத்தேதான் ஒரு விஷயத்தின் மெய்ம்மையும் பொய்ம்மையும் விளங்கும். நமது முன்னோர்கள் ''யோகம்'' என்ற தோர் மார்க்கம் ஏற்படுத்தியிருக்கிறார்கள். இஃது ஹட யோகம் ராஜயோகம், பக்தியோகம், ஞான யோகம் என நான்கு வகைப்படும். இவற்றி ஹட யோகந்தான் மிக்க் குறைந்த பயன் தரக்கூடியது. மற்ற மூன்றிலும் அனந்த சக்திகள் பெறலாம். விஷயம் தெரியுமுன்பாகவே ''இதில் பயனென்ன விளையப்போகிறது'' என்று சந்தேகப்படுதல் தெளிந்தோர் செய்யும் காரியமன்று; அவற்றை ஆராய்ச்சி செய்து பார்க்க வேண்டும். அங்ஙனம் சாதனை செய்தவர்களுக்கு பலவித அபூர்வ சக்திகளுண்டாயிருப்பதைக் கண்ணாரக் காண்கிறோம். நமக்கு ஏன் இந்த சக்திகள் ஏற்படக்கூடாது? இந்த மூடத்தமோ குணத்தால் என்ன சுகங்கள் கண்டு விட்டோம்? சோம்பராலும் அற்ப விஷயங்களிலே ஆசை கொண்டு மனதைக் கடலில் அகப்பட்ட துரும்பு போலச் சலிக்க விடுவதாலும் என்ன பேறுகள் பெற்று விட்டோம்?

''துணிவு, உள்ளத்தூய்மை, ஏதாவதொரு மகத்தான லட்சியத்திலே

அறிவை ஆணி கொண்டடித்தது போலப் பற்றுறச் செய்து கொள்ளுதல் லாப நஷ்டங்களிலே சிந்தனையில்லாமமை. இவைதான் யோகத்தின் ரசகிசயம்'' என்று மகாகவி பாரதியார் தமிழ் மக்களுக்கு விடுக்கும் செய்தியாகும். இதில் மகாகவியின் உறுதிப்பாட்டையும் நீட்சண்யத்தையும் காண முடிகிறது.

'வீரத்தாய் மார்கள்' என்னும் தலைப்பில் மகாகவி பாரதியார் எழுதுகிறார்:

தாயைப் போல பிள்ளை- ஓர் தேசத்தார் ஞானமும் செல்வமும் வீரமும் புகழும் கொண்டு உன்னத நிலையிலே இருக்கும் போது, அவர்களுக்குளு ஆண் மக்களிடம் மட்டுமேயல்லாது பெண் பாலரிடத்திலும் கூடத்தர்மாபிமானமும் வீரத்தன்மையும் சிறந்து விளங்கும். ராஜபுத்திரர்கள் உன்னித நிலையிலே இருந்த காலத்தில் ராஜபுத்திர ஸ்திரிகள் காட்டிய வீர குணங்கள் இன்று கூட உலகத் தாரெல்லம் கேட்டு மெய் சிலிர்க்கும்படியாக இருக்கின்றன. யுத்த காலங்களில் ராஜபுத்திரி ஸ்திரிகள் தமது உயிரைப் புல்லினும் சிறியதாக மதித்து மானத்திற்காகவும் செய்திருக்கும் வீரச் செயல்கள் எண்ணி முடியாதன. ''டாட்'' என்ற ஆசிரியர் எழுதியிருக்கும் ராஜஸ்தான் சரித்திரத்தை வாசித்தவர்களுக்கு நமது பாரத நாட்டு க்ஷத்திரிய மாதர்களுக்கு நிகரான வீரத்தாய்மார் உலகத்தில் வேறெங்கு மிகுந்ததில்லை என்பது நன்கு விளங்கும். நிற்க.

நமது தமிழ்நாட்டிலேயும் அத்தகைய பெருங்குடி (மூதில்) மாதர்கள் இருந்திருக்கிறாகள் என்பதைச் 'செந்தமிழ்' பத்திரிகையாசிரியர் இம்மாதம் எழுதியிருக்கும் ஓர்திவ்யமான் உபந்நியாசத்திலே பல அரிய திருஷ்டாந்தங்களால் விளக்கியிருக்கிறார். அவரது உபந்நியாசத்தை சென்ற வாரத்தில் ஒரு பகுதியும் இவ்வாரத்தில் ஒரு பகுதியுமாக நமது பத்திரிகையிலே பிரசுரம் செய்திருக்கிறோம். இன்னும் சிறிது மிஞ்சியிருக்கிறது. அதனை அடுத்த வாரத்தில் பிரசுரம் செய்வோம்.

'தமிழ்நாட்டுத் தாய்மாரைப் பற்றி 'செந்தமிழ்' ஆசிரியர் எழுதியிருக்கும் உபந்நியாசத்தைப் படித்த போது எமக்கு உண்டான பெருமகிழ்ச்சிக்கும் பெருந்துயரத்திற்கும் அளவு இல்லை. 1800 வருஷங்களுக்கு முன்பாகவே இத்தனை பெருங்குணங்கள் வாய்க்கப் பெற்றிருந்த நாகரிக நாட்டிலே இவ்வளவு உயர்வு கொண்டிருந்த பெரியோரின் சந்ததியிலே இவர்கள் நடையிலும் செய்கைகளிலும் நிகரில்லாது கையாண்டுவந்த தமிழ்ப்பாஷையைம் பேசும் பெருங்குடியில் நாம் பிறந்திருக்கிறோம் என்பது அரிய மகிழ்ச்சியுண்டாகிறது.

ஆனால் பிரம்ம சந்ததியிலே இராவணன் பிறந்தது போல இத்தனை பெரிய நாகரிகமும் சிறப்பும் அறவலிமையும் பொருந்திய மேலோரின் சந்ததியிலே குலத்தைக் கொடுக்க வந்த கோடார்காம்பாகத் தோன்றி நாம் இக்காலத்திலே இருக்கும் நிலைமையயெல்லாம் பார்க்கும் போது மனம் புண்ணால்

உலைகின்றது.

அந்நாட்களில் மாதர்கள் காட்டிய வீரத்தன்மையையும் இந்நாளிலே ஆண் மக்கள் காட்டும் பேடித் தன்மையையும் ஒப்பிட்டுப் பார்க்கும் போது, ''நமது உயர்வு கொண்ட பாரத ஜாதி இத்தனை தாழ்ந்த நிலைக்கு வருவதைக் காட்டிலும் ஒரேயடியாக அழிந்து போயிருந்தாலும் சிறப்பாயிருக்குமே'' என்று மனம் குமுறுகிறது.

''நமது பத்திரிகை படிக்கும் நேயர்கள் அனைவரும் நாம் செந்தமிழ் பத்திரிகையிலிருந்து பெயர்த்துப் பதிப்பித்திருக்கும் உபந்நியாசத்தைத் தாம் பலமுறை படிப்பது மட்டுமேயன்றித் தமது சுற்றத்தாருக்கும் மித்தரருக்கும் தமதுவீட்டு மாதர்களுக்கும் திரும்பத் திரும்ப படித்துக் காட்டுதல் நலமென்று கருதுகிறேன்.

''மகனைப் பெற்று விடுதல் எமது கடமை'' அவனைத் தக்கோன் ஆக்குதல், அவன் தந்தையின் கடமை. அவனுக்கு வேல் செய்து கொடுத்தல் இரும்புக் கொல்லனது கடமை. என் மகனது கடமை எனிலோ யுத்தத்திலே சென்று யானையைக் கொன்று மீறுதல் ஆகும்'' என்று ஓர் தமிழ்த்தாய் பாடியிருக்கிறாள்.

''இனி மற்றொரு தாய்'', எனது மகன் யுத்த களத்திலே போர் வீரர் வாளினிலே கழுத்தறுப்புண்டு மடிவானால் அது தான் எனக்கு ''மேலான தர்மம், அதுவே ஹத்கர்மம்'' என்று பாடினாள் பின்னுமொரு பெண் புலவர் தமது சுற்றத்திலுள்ள ஓர் அம்மை தன் மகன் போரிலே யானையை வீழ்த்திக் கொன்று தானும் இறந்தான் என்று கேள்வியற்று, நான் அவனைப் பெற்ற போது அடைந்த மகிழ்ச்சியைக் காட்டிலும் அதிக மகிழ்ச்சியடைந்த சிறப்பைக் கண்டு வியந்து பாடல் சொல்லியிருக்கிறார்.

அப்பால் ஒரு தமிழ்த்தாய் தனது தந்தையும் கணவனும் போலிலே சிறிது காலத்திற்கு முன்பு இறந்து போயிருக்கவும் யுத்தப் போறையின் ஒலி கேட்டவுடனே சந்தோஷம் மிகுந்து தன் மகனுக்கு நல்ல ஆடையுருத்தி அவன் குடுமிக்கு எண்ணெயிட்டுச் சீவி முடித்து அவன் கையிலே வெலெடுத்துக் கொடுத்து தனது ஒரே பிள்ளையைப் போர் களத்திற்குப் போ என்று அனுப்பிய பெருமையை ஓர் பெண் புலவர் வியந்திருக்கிறார். பின்னு மொரு தாய் தன் மகன் யுத்த களத்திலே வலியிழந்து புறங்கொடுத்து ஓடியது உண்மையாயின் ''அவன் பாலுண்டு வளர்ந்ததற்கு காரணமாயிருந்த என் முலைகளை அறுத்திடுவேன்'' என்று வளைக் கையிலே கொண்டு போர் களத்திற்குப் போய் அங்கே வீழ்ந்துகிடக்கும் பிணங்களை வாளினால் புரட்டித் தேடுகையிலே அப்பிணங்களிடையில் தன் மகன் உடலும் இரண்டு துண்டமாகக் கிடப்பதைப் பார்த்து அவனைப் பெற்ற பொழுதைக் காட்டிலும் அதிக மகிழ்ச்சியடைந்தாள் என்று ஓர் பாடல் இருக்கிறது.

இன்னும் அது போல எத்தனையோ ஆச்சர்யமான திருஷ்டாந்தங்கள் காட்டப்பட்டிருக்கின்றன. இடம் போதாமை பற்றி அவற்றை இங்கே எடுத்துக் கூற முடியவில்லை.

''இவ்வளவு மேலான வீரப்பயிற்சி இருந்த நாடு இப்போது என்ன நிலைமைக்கு வந்து விட்டது''. ஆனால் நமக்கு ஒரு ஆறுதல் இருக்கின்றது. அதுவும் வீணான ஆறுதலன்று. உண்மைப்பற்றி ஆறுதல்.

அந்த ஆறுதல் யாதெனில், நமது ஜாதியை இடையே பற்றிய சிறுமை நோய் விரைவிலேயே நீங்கி விடும் என்பதற்கு ஆயிரக்கணக்கான அறிகுறிகள் காணப்படுகின்றன. பரிசுத்தமான நெஞ்சமும் தெய்வ பக்தியும் தன்னலமறுப்பும் உடைய பல மேலோர்கள் இப்போது நாட்டிலே காண்கிறோம். இது வீணாக மாட்டாது. நம்மைப் பற்றியிருந்தபுன்னோய் சீக்கிரத்தில் மாறிப் போய்விடும். வானத்திலே துந்துபிபோல் அதிரக் கேட்கிறோம். மகாபாரதம் ..... பிறந்து விட்டது. வந்தே மாதரம் என்று மகாகவி பாரதியார் அக்கட்டுரையை முடிக்கிறார்.

சங்கம் வைத்து தமிழை வளர்த்தது மதுரை. அம்மாமதுரையில் கடைச்சங்கம் இருந்து புகழ் பெற்றுத் திகழ்ந்தது. அதன் பின்னர் அந்நியப்படையெடுப்பு களாலும் அந்நிய ஆட்சியாலும் தமிழ் சங்கத்தை ஏரிட்டுப் பார்ப்போர் யாருமில்லை. 19ம் நூற்றாண்டில், இராமநாதபுரம் சீமையை ஆண்ட பாண்டித்துரைத்தேவர் தமிழ் ஆர்வமும் தமிழ் பற்றும் மிக்கவர். ஆங்கிலேயர் ஆட்சி காலத்தில் தமிழ் படிப்பும் தமிழ் வளர்ச்சியும் மங்கிக் கிடந்தது. அந்நிய ஆங்கிலேய ஆட்சியாளர்கள் இந்திய மொழிகளின் சிறப்புகளை அறிந்தவர்களல்ல. இந்திய மொழிகள் எல்லாம் நாகரிக இல்லாத அரைக்காட்டு ஜனங்களின் மொழி என்று கருதியிருந்தார்கள். அவர்களில் ஓரிருவர்தான் தமிழ் மொழியின் சிறப்பைப் அறிந்து தமிழைப் படித்து தமிழ் அறிஞர்களாக இருந்தனர்.

அந்நிய ஆட்சியின் காரணத்தால் தமிழ் படிப்பு பின்னுக்குத் தள்ளப்பட்டிருந்தது. அக்காலத்தில் மதுரையில், இராமநாதபுரம் அரசர் பாண்டித்துரைத் தேவர் முன் முயற்சியில் பரிதிமால் கலைஞர் என்று தனது சூரிய நாராயண சாஸ்திரியார் என்னும் இயற்பெயரை தமிழில் மாற்றிக் கொண்ட தமிழ் அறிஞர், திரு. நாராயண அய்யங்கார் என்னும் பெயர் கொண்ட தமிழ் பேரறிஞர் ஆகியோரது முன் முயற்சியால் தமிழ் சங்கம் என்னும் பெயரில் கல்லூரி அமைக்கப்பட்டு, தமிழ் மொழியில் பிரவேச பண்டிதம் பால பாண்டிதம், பண்டிதம், மகா பண்டிதம் என்னும் பட்டப் படிப்புகளை ஏற்பாடு செய்து பலர் அங்கு படித்து தமிழ்ப் பண்டிதர்களானார்கள்.

அந்தக் கல்லூரியை நிறுவ நிதி தேவைப்பட்டது. அதற்காக மதுரை மக்களிடம் நிதி திரட்டுவதற்காக பல அறிஞர்கள் முயற்சித்தனர். அப்போது

மதுரை மாநகரைத் தமிழ் உணர்வில் தட்டியெழுப்ப, பரிதிமால் கலைஞர் (என்றும் சூரிய நாராயண சாஸ்திரி) பாடிய பாடல்: ஆலவாயின் அவிர்சடைக் கடவுளை ஏலவாதித்த இன்றமிழ்க்கீரன் வந்தவதரித்த மதுரையும் நீ கொலோ'' என பாடி மதுரையைத் தட்டி எழுப்பினார். மதுரை தமிழ்ச்சங்கம் என்னும் பெயரில் கல்லூரி அமைந்தது. அந்தக் கல்லூரியின் தலைவராக பாண்டித்துரைத் தேவரும் . முதல்வராக தமிழ் பேரறிஞர் திருநாராயணய்யங்காரும் சிறப்பணியாற்றினர். அப்போது திருநாராயணய்யங்காரை ஆசிரியராக கொண்ட ''செந்தமிழ் என்னும் பத்திரிகை நடத்தப்பட்டது. அந்த இதழில் தமிழ் பற்றி சிறந்த ஆராய்ச்சிக் கட்டுரைகள் வெளிவந்து புகழ் பெற்று தமிழ் வளர்ச்சிக்கும் தமிழ்ப்படிப்பிற்கும் உதவின. துணையாக இருந்தன. அந்த செந்தமிழ் இதழையே மகாகவி பாரதி இங்கு குறிப்பிடுகிறார்.

★★★